வெளியீடு—14—7—1972]
Issued—14—7—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1972 ஏப்ரல் 1
Saturday 1st April 1972

தொகுதி XXII—எண் 1
Volume XXII—No. 1

©
தமிழ் நாடு அரசு
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

61564

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

1ST, 3RD, 4TH, 5TH AND 6TH APRIL 1972.

VOLUME XXII (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS

PAGES

***Saturday, 1st April 1972.***


1. Questions and Answeres .. .. .. .. .. .. 1-41

2. Announcements—
   (a) Election to Committee on Privileges .. .. .. 41-42
   (b) Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 .. .. .. .. .. .. .. .. 43

3. Government Bills—
   Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 .. .. .. .. .. .. .. .. 44

4. Presentation of Reports—
   Estimate Committee's Report on Labour including Factories. 44

5. Non-Official Business—
   (i) Bills—
   (a) Madras University (Amendment) Bill 1971 (L.A. Bill No. 44 of 1971) .. .. .. .. .. .. 44-81
   (b) Christian Succession (Repeal) Bill, 1971 (L.A. Bill No. 46 of 1971) .. .. .. .. .. .. 81-90
   (c) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill. 1972 .. .. .. .. 90
   (d) Tamil Nadu Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill. 1972 .. 90
   (ii) Resolutions—
   Protection of Handloom Sector—*cont.* .. .. .. .. 90-106

6. Papers laid on the Table .. .. .. .. .. 107

*Monday, 3rd April 1972.*


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. .. .. .. | 117–160 |
| 2. Statement by Chief Minister— | |
| Press Statement of Thiru M. Bhaktavatchalam *re.* alleged sale of land by Chief Minister .. .. .. .. .. .. | 161–163 |
| 3. Announcements— | |
| (*a*) Call Attention Notices, non-taking up due to Members' absence .. .. .. .. .. .. .. .. .. | 163 |
| (*b*) Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 .. .. .. .. .. .. .. .. .. | 164 |
| (*c*) Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972 .. .. | 187 |
| 4. Government Bills— | |
| (*a*) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) (Third Amendment) Bill, 1972 .. .. .. .. | 163–164 |
| (*b*) Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 .. .. .. .. .. .. .. .. .. | 164–165 |
| (*c*) Tamil Nadu Debt Relief Bill, 1972 .. .. .. | 165 |
| (*d*) Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 .. .. .. .. .. .. .. .. .. | 165 |
| (*e*) Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972) .. .. .. .. .. .. | 166–186 |
| (*f*) Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972 .. .. | 187–192 |
| (*g*) Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 2 of 1972) .. .. .. .. .. .. .. .. | 192–193 |
| (*h*) Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972) .. .. .. .. .. | 193–194 |
| (*i*) Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 4 of 1972) .. .. .. .. .. .. | 195–200 |
| (*j*) Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972) .. .. .. .. | 200–244 |
| (*k*) Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972) .. .. .. .. .. .. | 246–247 |
| (*l*) Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 (L.A. Bill No. 5 of 1972) .. .. | 247–258 |
| 5 Presentation of Report— | |
| Committee on Estimates—Report (last) on Animal Husbandry Department .. .. .. .. .. .. .. | 166 |
| 6. Government Motion— | |
| Change in order of Business of House .. .. .. .. | 245 |
| 7. Papers laid on the Table .. .. .. .. .. | 258–260 |




*Tuesday, 4th April 1972.*


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. .. .. .. | 263–306 |
| 2. Point of information— | |
| Assembly meeting time .. .. .. .. .. .. | 306 |
| 3. Calling Attention— | |
| Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions .. .. .. .. | 306–315 |
| 4. Presentation of Report— | |
| Committee on Public Accounts—Report on Accounts of Tamil Nadu State, 1968–69 .. .. .. .. .. .. | 315 |
| Announcements— | |
| (*a*) Election to Committee on Public Accounts .. .. | 315 |
| (*b*) Election to Committee on Estimates .. .. .. | 316 |
| (*c*) Message received from the Chairman, Legislative Council .. .. .. .. .. .. .. | 316–317 |
| (*d*) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 15 of 1972) .. | 321–322 |
| (*e*) Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 (L.A. Bill No. 16 of 1972) .. .. .. | 362 |
| (*f*) Tamil Nadu Non-Trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972) .. .. .. .. .. .. | 366 |
| (*g*) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972) .. .. | 318–321 |
| (*h*) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 15 of 1972) .. | 322–358 |
| (*i*) Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 14 of 1972) .. .. | 358–362 |
| (*j*) Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 (L.A. Bill No. 16 of 1972) .. .. .. | 362–366 |
| 7. Government Motion— | |
| Change in order of Business of the House .. .. .. | 321 |
| 8. Papers laid on the Table .. .. .. .. .. .. | 366–369 |


*Wednesday, 5th April 1972.*


| | |
|---|---|
| 1. Obituary Reference— | |
| Thiru Quaid-e-Millat Mohammed Ismail (R) .. .. .. | 381–399 |
| 2. Papers laid on the Table .. .. .. .. .. .. | 399–401 |

*Thursday, 6th April* **1972.**


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. .. .. .. | 403–438 |
| 2. Announcements— | |
| (a) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) .. | 439 |
| (b) Tamil Nadu Non-Trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972) .. .. .. .. .. .. | 468 |
| (c) Statistics regarding the Business of the House during the Budget Session .. .. .. .. .. .. .. | 507–509 |
| 3. Government Bills— | |
| (a) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) .. | 439–468 |
| (b) Tamil Nadu Non-Trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972) .. .. .. .. .. .. | 468–470 |
| (c) Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 8 of 1972) .. .. .. .. .. .. | 470–482 |
| (d) Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) .. .. .. .. .. | 494–498 |
| (e) Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 20 of 1972) .. .. .. .. | 498–506 |
| 4. Government Motion— | |
| Proposal of the State Government to fix the maximum amount of loan that can be held by the Electricity Board at any one time .. .. .. .. .. .. .. | 507 |
| 5. Papers laid on the Table .. .. .. .. .. | 509–510 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்—வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவர் நலம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு .வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.



13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான்—கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)— in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)— in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*)—in charge of Industries, Textiles, Yarn, Handloom) Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்:

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

சட்டப் பேரவைச் செயலாளர்:

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

இணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்கள்:

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரஙகண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனர், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருண, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. .. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம் திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார்கோயில். |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் (செ வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. .. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. .. | ஹளூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. .. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. வ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. ஏ. .. .. .. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. கி. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம். திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. .. | அறுப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னிஸ், திரு. என். .. .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி. திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், திரு. அ. பெ. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 134 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்றம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. வ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன். திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. வ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம் திரு. பா. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி ஏ. கோ. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிப்பாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினுசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |

| தொடர் எண் உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கனுதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

தொடர் எண்ணும், பெயரும்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி | அமைச்சர். |
| 3 திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

*சனிக்கிழமை, 1972 ஏப்ரல் 1.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**1. வினுக்கள்—விடைகள்.**

**வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்.**

### *Cash awards to Police officers*

* 813 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that large number of cash awards have been paid to the Police staff in the State in September 1971;

(b) if so, the details thereof; and

(c) the basis on which these selections have been made?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) முதல் (உ) வரை பேரவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.*

*திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸ், டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் அண்டு ஆண்டி-கரப்ஷன், டைரக்டர் ஆஃப் ஃபையர் சர்வீஸஸ், ரிஜிஸ்ட்ரார் ஆஃப் ஹைகோர்ட், சென்னை, ஆகியோர் கமிட்டியாகச் செயல்பட்டு பரிசுக்குரியர்களைப்பற்றி பரிந்துரை செய்கிறார்களா? அல்லது, ஒவ்வொருவரும் பரிந்துரை செய்து அதன் அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படுகின்றனவா?*

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒவ்வொரு ரேஞ்சிலிருந்தும் இது போன்ற பரிந்துரைகள் அவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் அனைவரும் அமர்ந்து அதிகாரிகளுக்குப் பரிசு வழங்குவது குறித்துப் பரிந்துரையை அரசுக்கு அதற்குப் பிறகு அரசு ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்கிறது.*

*திரு. என். கிட்டப்பா: இம்மாதிரி வீரச் செயல்கள் புரிகின்ற காவல் துறையினருக்கு ரொக்கப் பரிசுகள் வழங்குவதற்குப் பதிலாக ஓரளவு அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதுபற்றி அரசு ஆலோசிக்க முன்வருமா?*

---

108—114ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை.

DR. H. V. HANDE: Sir, during the last three or four years when there were fires in the slum areas, many of the police officers and constables had shown daring bravery in trying to save so many persons. May I know whether any consideration is given to the persons who rescued those persons from the slum fires?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மொத்தமாக அத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் அனைவருடைய கணக்கையும் எடுத்துப் பார்த்து, அதிலிருந்துதான் இவர்களெல்லாம் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இம்மாதிரி ரொக்கப் பரிசுகள் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் என்று மூன்று ரகமாகக் கொடுக்கப்படுகின்றன. இம்மாதிரியாக தொகை நிச்சயம் பண்ணுவது எந்த அடிப்படையில் என்பதையும், இந்த ஃபையர் சர்விசிலே இருப்பவர்களில் யாரும் இந்தப் பட்டியலில் இடம் பெறவில்லையே, அதற்கு என்ன காரணம் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இவர்கள் ஓராண்டில் இடம் பெறவில்லை என்றால் அடுத்த ஆண்டில் இடம் பெறக்கூடும். மேலும், அதுபோன்ற செயலில் அவர்கள் ஈடுபடாதவர்களாக இருந்திருக்கக்கூடும். தீயணைப்பு அதிகாரிகளும் இதிலே இருந்துதான் அந்தப் பரிந்துரையை வழங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எந்தப் பாரபட்சமும் காட்டப்படமாட்டாது. தலைசிறந்த பணிக்காக, காவலர்கள், தலைமைக் காவலர்கள், முன்னணித் தீ அணைப்பவர்கள், இயந்திர பம்பியர்-வலவர்கள், மற்ற இணையான பதவிகளில் உள்ளவர்களுக்கு ஆயிரம் ரூபாய் என்ற அளவிலும், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், நிலைய அதிகாரிகள், கோட்ட தீ அணைப்பு உதவி அதிகாரிகள், அதற்கு இணையான பிற பதவிகளில் உள்ளவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்ற அளவிலும், முதல், இரண்டு, மூன்றும் நிலை டெபுடி சூபரின்டென்ட், முதல், இரண்டாம் நிலை கோட்ட தீயணைப்பு அதிகாரிகள் ஆகியோருக்கு மூவாயிரம் ரூபாய் என்ற அளவிலும், வீரச் செயல் புரிந்து, பதவித்தரம் எதுவாக இருந்தாலும், அவர்களுக்கு மூவாயிரம் ரூபாய் என்ற அளவிலும் விதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** இப்படி திறமைசாலிகளாகத் தென்படுகிற காவலர்கள், காவல் அதிகாரிகள் ஆகியோரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து நல்ல பயிற்சி பெற்றவர்களாக செய்தால், அவர்களுடைய செயல்முறை இன்னும் சிறப்பாக இங்கே பயன்படுவதற்கு ஏதுவாக இருக்குமாதலால் அரசு அத்தகைய முயற்சியில் ஈடுபடுமா?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தப் பரிசு பெறுபவர்களைப் பிரத்தியேகமாக வெளிநாட்டுக்கு அனுப்புகிற திட்டம் எதுவும் இல்லை.

### காவல் நிலையங்களுக்கு தொலைபேசிகள்.

*814 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் நிலையங்கள் அனைத்திலும் டெலிபோன் வசதியளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம்.

**திரு. பி. எஸ். மணியன்:** 15 மைல், 20 மைல் தூரத்திற்கு ஒவ்வொரு காவல் நிலையத்தினுடைய எல்லையும் விரிவாக இருக்கிறது. குற்றங்கள் நடைபெறுகிற நேரத்தில் உடனடியாகத் தொடர்புகொள்ள முடிவதில்லை. ஆகவே, உடனடியாக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் இந்த ஆண்டே தொலைபேசி வசதி செய்ய அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே 816 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் கிட்டத்தட்ட 450-க்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு இந்தத் தொலைபேசி தொடர்பு இருக்கிறது. அவுட்-போஸ்ட் என்ற அளவில்கூட 175 இடங்களில் 15 அவுட்-போஸ்ட்களுக்கு இந்தத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கூறிய இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துத்தான் எல்லா காவல் நிலையங்களுக்குத் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்துவதற்கு அரசு இன்றைய தினம் செயற்குறிப்பை ஆராய்ந்து வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எல்லாக் காவல் நிலையங்களுக்கும் டெலிபோன் பெஸிலிடி செய்து கொடுப்பதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் ஆகும் என்பதை அரசு தெரிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எத்தனை மாதங்கள் ஆகும் என்று குறிப்பாகச் சொல்ல முடியாது. விரைவில் அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. சு. துரைசாமி:** இந்தக் காவல் நிலையங்களில் டெலிபோன் அமைக்கும்போது, நகரங்களிலிருக்கும் காவல் நிலையங்களுக்கு முதலில் அமைக்கப்படுமா? அப்படியானால் திருப்பூரில் அப்படிப்பட்ட இடங்களில் விரைவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மீதமுள்ள எல்லா இடங்களிலும் தொலைபேசி வைப்பதற்கு அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**திரு. என். மருதாசலம்:** காவல் நிலையங்கள் வைப்பதற்கு கோவையிலிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவா? ஏற்கனவே இருந்த காவல் நிலையத்தைக்கூட சில இடங்களிலிருந்து எடுத்துவிட்டார்கள். அதை அங்கேயே வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உறுப்பினருடைய கேள்வியையே ஒரு விண்ணப்பமாக எடுத்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கு. காமாட்சி:** காவல் நிலையங்களுக்கு டெலிபோன் தொடர்பு வைப்பதோடு அந்தந்தக் காவல் நிலையங்களில் பணி புரிகின்ற தலைமைப் போலிஸ் அதிகாரியினுடைய இல்லங்களுக்கு, கூடுமானவரை முக்கியமான சில இடங்களிலாவது, டெலிபோன் தொடர்பு வசதி செய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலில் காவல் நிலையங்களுக்கு நிறைவு செய்யப்பட்டபிறகு அதற்குமேல் இவைகளைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போதே 366 காவல் நிலையங்கள் வரையிலும் டெலிபோன் வசதி இல்லாமலிருக்கின்றன. இந்த நடப்பு ஆண்டில் எத்தனை காவல் நிலையங்களுக்கு டெலிபோன் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 1972-73-ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டப் பணிகள் செயல்படுவதற்கு முதல் படியாக 200 காவல் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று ஐ.ஜி ஆட் போலீஸ் ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறார். அது ஆலோசனையில் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** டெலிபோன் வசதி செய்து கொடுக்கும் போது ஹெவி டிஸ்ட்ரிக்ஸ் என்று சொல்லப்படுகிற, குற்றங்கள் அதிகமாக இருக்கும் சில மாவட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து அங்கே முதலில் டெலிபோன் வசதி செய்துகொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுகூட ஒரு நல்ல யோசனை. செயல்படுத்தலாம்.

**திரு. கே. என். குமாரசாமி:** 800 காவல் நிலையங்களில் டெலிபோன் வசதி இல்லாத காவல் நிலையங்களும் இருப்பதென்றால், அதற்குக் காரணம் பணச் செலவு அதிகமாகும் என்பதா? அதனால்தான் தாமதம் ஏற்படுகிறதா? அல்லது வேறு ஏதாவது காரணத்தின்மூலம் தாமதம் ஏற்படுகிறதா?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நிதி வசதி என்பது ஒன்று. அடுத்தபடியாக அந்தத் தொலைபேசிகளை அமைப்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் தொடர்பு ஏற்படுத்துவதற்கான சில கருவிகள் இவைகளைப்பொறுத்தும், இருக்கிறது. ஏற்கெனவே தொடர்புடைய தொலைபேசிகள் இருக்கும் இடங்களில் வைப்பது சுலபமாக இருக்கிறது. தொலைபேசித் தொடர்பே இல்லாத இடங்களில் வைப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் அனுசரித்துத்தான் படிப்படியாக இந்தக் காரியம் நடைபெற்று வருகிறது.

**திரு. எம். தேவராசன்:** நக்சல்பாரிகளை ஒடுக்குவதற்கு கூடலூர் மாவட்டத்தில் புதிதாக ஆறு காவல் நிலையங்கள் அமைப்பதாக அறிகிறேன். அவை காட்டுப் பகுதியில் இருப்பதால் டெலிபோன் வசதி மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக, அரசு அந்தக் காவல் நிலையங்களுக்கு உடனடியாக டெலிபோன் வசதிகள் ஏற்படுத்தித் தருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நக்சல்பாரிகளை அடக்குவதற்கு மாத்திரமல்ல, பொதுவாக குற்றங்கள் நடைபெறாமலிருப்பதற்கும், நடைபெற்ற குற்றங்களை உடனடியாக அறிந்து கொள்வதற்கும் காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி இருப்பது இன்றியமையாத ஒன்றாகும். அந்த இன்றியமையாமையை இன்றைக்கு நிறைவேற்றுவதற்காக அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதியும் இடம் பெறும்.

## திருப்பூர் நகருக்கு புதைச்சாக்கடைத் திட்டம்

* 815 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கத் தேவையான ஆய்வு செய்ய, ரூபாய் 50,000-க்கான ஒரு ஆய்வு மதிப்பீடு முதனிலை அறிக்கையுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு தலைமைப் பொறியாளர் அனுப்பிவைத்துள்ளார். ஆய்வு வேலைகளை குடிநீர் வடிகால் வாரியம் ஏற்று நடத்துவதற்கும் அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளு

1972 ஏப்ரல் 1]

வதற்குமான நகராட்சியின் தீர்மானம் ஒன்று நகராட்சியிடமிருந்து கோரப் பட்டுள்ளது. தீர்மானம் கிடைக்கப் பெற்றபின் ஆய்வுக்கான மதிப்பீட்டிற் கான ஒப்பளிப்பு வழங்கப்படும்.

**திரு சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, நகராட்சியிடமிருந்து தீர்மானத்தை எதிர்பார்ப்பதாக முதலமைச்சரவர்கள் கூறினார்கள். நகராட்சி தீர்மானத்தை விரைவில் போட்டுக்கொடுத்தால் அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தீர்மானம் நகராட்சியிடமிருந்து வந்ததும் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்த நகராட்சிகளுக்காவது பாதாள சாக்கடை அமைத்துக்கொடுக்க அரசு ஏதாவது துரிதமாக திட்டம் அமைத்து, இப்பொழுது 72-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் எலக்ட்ரிசிட்டி கொடுக்க வேண்டுமென்று இருப்பதைப்போல், எல்லா முனிசிபாலிட்டிகளிலும் பாதாள சாக்கடை அமைக்க வேண்டுமென்ற திட்டம் ஏதாவது இருக்கிறதா? நகராட்சி தீர்மானம் போடுகிறதோ இல்லையோ உடனுக்குடன் பாதாள சாக்கடை அமைக்க அரசாங்கம் அதிகாரமும், பணமும் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதற்காகவேதான் குடிநீர்வாரியம் அமைக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக இந்த முயற்சி முற்றுப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பணி நடைபெறுகிறது. நகராட்சி தீர்மானம் போடுகிறதோ இல்லையோ என்று கூறிவிடுவது நல்லதல்ல. ஏனென்றால் நகராட்சிகளுக்கும் அதில் பொறுப்பு இருக்க வேண்டும். நகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பிலே இருக்கின்றவர்கள் அரசாங்கம் முயற்சியெடுத்துச் செய்யும் நேரத்தில் ஒத்துழைப்பு கொடுத்தால் காரியம் விரைவில் முடிவதற்கு ஏதுவாக இருக்கும்.

### தோவாளை வட்டத்துக்கு குடிநீர்த்திட்டம்

*816 வினா—**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திலுட்பட்ட உலக்கையருவியில் விழும் தண்ணீரை அணைக் கட்டி தேக்கி தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலுக்காக்களுக்கு குடிதண்ணீர் வினியோகம் செய்வதற்காக தோவாளை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஆய்வுக்கட்டணமாக (Investigation Charges ரூ. 26,000 செலுத்தி வெகு நாட்களாகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது உண்மையா?



1972 ஏப்ரல் 1]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தோவாளை ஊராட்சி ஒன்றியம், குடிநீர் திட்டத்திற்கான ஆய்வுத் தொகை ரூபாய் 26,000-ஐ 6——1971 அன்றுதான் செலுத்தியுள்ளது. மேற்கண்ட பஞ்சாயத்துக்கு குடிநீர் வழங்க ஆய்வு வேலைகள் தொடக்க நிலையில் உள்ளன. வாரிய களப்பணி அலுவலர்கள் (Field Officers) உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய ஆயுள் காப்பீட்டுக் கழக குடிநீர் திட்டங்களுக்கான வேலைகளில் முனைந்து ஈடுபட்டுள்ளனர். எனினும் தோவாளை பஞ்சாயத்து குடிநீர் ஆய்வு வேலைகள் இயன்ற அளவு விரைவினில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை:** தலைவரவர்களே, இந்த உலக்கையருவியில் அணைகட்டுவதால் குமரி மாவட்டத்தில் தோவாளை தாலுக்கா முழுவதும், அதுபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைநகரமான நாகர்கோயில் நகரத்திற்கும், இலட்சக்கணக்கான உல்லாசப் பயணிகள் வந்து போகும் கன்னியாகுமரி நகரத்திற்கும் சுசீந்திரம் போன்ற ஊர்கள் இருக்கும் அகஸ் தீஸ்வரம் தாலுக்கா முழுவதற்கும் தடையின்றிக் குடிநீர் விநியோகிக்கப்படுவ தோடுகூட, உலக்கையருவியின் பக்கத்திலுள்ள இடங்களி லெல்லாம் உல்லாசப் பிரயாணிகள் வந்து கண்டு களிக்கின்ற இயற்கை வனப்புகள் அமைந்திருப்ப தால் அந்தத் திட்டத்தின் ஆய்வு எப்பொழுது தொடங்கப்படும். எப்பொழுது முடிவடையும் என்பதையும், அதோடுகூட இந்த வருஷத்திலேயே அந்தத் திட்டத்திற்கு ஏதாவது நிதி ஒதுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏப்ரல் மாதத்திற்குள்ளாக ஆய்வு வேலைகள் தொடங்கப்படும். நான்கைந்து மாதங்களுக்குள் ஆய்வு வேலை முடிவுறும். அது முடிந்த பிறகு அதற்கான தக்க ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் இன்றைக்கு நாகர்கோயிலிலுள்ள தண்ணீர் பஞ்சத்தைத் தவிர்ப்பதற்கு வழிவகை இருக்கிறது என்ற கருத்து நிலவுகிறதே, அதையும் ஆலோசனையில் கொண்டு அதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த ஆய்வு நடைபெறும் நேரத்தில் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும், மாண்புமிகு இராஜாப்பிள்ளை அவர்களும் சொன்ன கருத்துக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்த அளவிலே இதிலே இணைத்துச் செய்ய முடியுமா என்று யோசனை செய்து ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அகனை வமங்கும்.

[1972 ஏப்ரல் 1

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக எஸ்டிமேட் எடுக்கப்பட்டிருக்கிறதா? எஸ்டிமேட் தொகை என்ன என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதன் ஆய்வே ஏப்ரல் மாதம்தான் தொடங்கப் பெறுகிறது என்று கூறியிருக்கிறேன்.

### திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றிய ஆசிரியர்கள் மாற்றம்

*817 வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பரஸ்பர மாற்றத்தின் போது கமிட்டி அங்கத்தினர்களால் மாற்றப்பட்ட ஆசிரியர்கள் யாரேனும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அப்பீல் செய்ததின் பேரில் மீண்டும் மாற்றப்பட்டுள்ளனரா?

(இ) ஆம் எனில், எந்த மாவட்டத்தில்? எந்த ஒன்றியத்தில் இது நடந்தது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி மாவட்டம், கீழ்க்கண்ட வட்டாரங்களிலுள்ள ஆசிரியர்கள் தாங்கள் வேலை இடமாற்றம் செய்யப் பட்டதற்காக முறையீடு செய்துள்ளனர். அந்த வட்டாரங்களாவன—

(1) ஸ்ரீவைகுண்டம்.

(2) புதூர்.

(3) நாங்குனேரி.

(4) சேரன்மகாதேவி.

(5) பாளையங்கோட்டை.

(6) ஆலங்குளம்.

(7) வாசுதேவநல்லூர்.

**திரு. எம். முத்தையா:** தலைவரவர்களே, இந்த மாற்றமானது ஒரு ரெவின்யூ அதிகாரியின் தலைமையில் நடத்தப்படுகிறது. ஆண்டுக்கொரு தடவை நடத்தப்படுகிறது. அப்படியிருந்தும் இதுபற்றிக் கலெக்டரிடத்தில் அப்பீல் செய்தால் அந்த மாற்றத்தை அவர்கள் அலட்சியப்படுத்துவதுமாதிரி தோன்றுகிறது அல்லவா? ஆகவே இப்படி வருஷத்திற்கு ஒரு முறை மாற்றம் செய்தால் மீண்டும் அப்பீல் செய்வதற்கு வகை இல்லை என்ற ஆணையைப் பிறப்பிக்குமா?



1972 ஏப்ரல் 1]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாற்றம் செய்யும் குழுவில் கோட்டாட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஆகிய மூவரும் அடங்குகிறார்கள். அவர்களுக்குத் துணையாக பள்ளித் துணை ஆய்வாளர், பி.டீ.ஓ. ஆணையாளர் அமர்கிறார்கள். அவர்கள் செய்யும் அத்தகைய முடிவிலே அதிருப்தி ஏற்பட்டால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பிக்கலாம் என்று கூறப் பட்டிருக்கிறது. அதன்பேரில் 15 பேர் விண்ணப்பித்தார்கள், அதிலே 8 பேர்களின் முறையீடுகள், அதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் மாறுதல் செய்யும் பொழுது நீண்ட ஆண்டுகள் இருப்பவர்களை மாற்றாமல் குறைந்த ஆண்டுகள் இருப்பவர்களை மாற்ற வேண்டுமென்ற விதி இருக்கும்பொழுது குறைந்த ஆண்டுகளிலே இருப்பவர்களை வைத்து விட்டு நீண்ட ஆண்டுகள் இருந்தவர்களை மாற்றியதால் மறுபடியும் மாற்றுவதில் நியாயம் இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் உணர்ந்து மீண்டும் மாற்றியிருக்கிறார்கள். குழுவின் மேலும் தவறு என்று சொல்ல முடியாது, குழுவிற்கு உரிமையிருக்கிறது. ஆனால் இப்படி ஏதாவது முறையீடு வந்தால் இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, ஆசிரியர்களை மாற்றும் இந்தக் குழு கூடி ஒருமுறை போட்ட பிறகும் ஆண்டு இடையிலே பல ஊராட்சி ஒன்றியங்களில் அவரவர்களின் இஷ்டம்போல மாற்றம் செய்யும் நிலை இருந்து வருகிறது. ஆகவே, இனிமேலாவது அரசாங்கம் ஒருமுறை மாற்றிய தற்குப் பிறகு இடைக்காலத்தில் யாரையும் மாற்றக் கூடாது என்று சுற்றறிக்கை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அப்படிச் சொல்ல முடியாது. ஏனென்றால் ஒருமுறை மாற்றிய பிறகு இப்படிப்பட்ட முறையீடுகள் வரும்பொழுது முறைகேடுகள் ஏதாவது இருந்தால், முறையீட்டில் நியாயமிருந்தால் நியாயத்திற்கு இடம் தர வேண்டும். ஆகவேதான் மேல்முறையீட்டிற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இப்படித் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மாற்றங்களே தேவையில்லை. அந்தந்த ஊர்களிலேயே அவர்கள் வேலை செய்தால் போதும். அவர்களாக விருப்பப்பட்டால் மாற்ற இயலும் என்ற அளவில் செய்யலாம் என்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் மானியத்தில் பதில் அளித்தார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஆசிரியர்களை மாற்ற வேண்டிய அவசியமில்லை, அவர்கள் கேட்டால்தான் மாற்றம் தர வேண்டும் என்ற கொள்கையை ஏற்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்புமா?

[1972 ஏப்ரல் 1

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது பல்வேறு மாற்றங்களுக்கு அடிப்படையாக வந்த ஒன்று என்ற கருத்தில் கல்வி மானியக் கோரிக்கையின்பொழுது சொன்னேன். வேறு எந்த அலுவலாளர்களையும், பணியாளர்களையும் மாற்றுவதற்கு இப்படிப்பட்ட குழு இல்லை. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டும்தான் இப்படிப்பட்ட குழுக்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தில், ஊராட்சி மன்றத்தில் எவ்வளவோ பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களை அதிகாரிகளே மாற்றக்கூடிய பொறுப்பில் இருக்கிறார்கள். இது ஒன்றுக்குத்தான் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு ஆண்டுக்கு ஒருமுறை கூடுகிறது என்று சொல்லும்பொழுது விண்ணப்பங்களை அவர்களிடம் தருகிறார்கள். அவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு மாற்றும்பொழுது ஒரு பாவமும் அறியாதவர்களைத் தாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. கூடுமான வரையில் மாற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள் அந்த ஊரிலேயோ அந்தப் பள்ளியிலேயோ இருப்பதனால் பள்ளிக்கோ அல்லது ஊருக்கோ கேடு ஏற்பட்டால் மாற்ற வேண்டும், அல்லது கணவன் மனைவி பிரிந்திருந்தால் ஒன்று சேர விரும்பினால் மாற்ற வேண்டும், அல்லது ப்ரமோஷன் என்ற வகையிலே மேல் பணிக்கு என்ற வகையிருந்தால் மாற்ற வேண்டும். கூடுமான வரையில் மாற்ற வேண்டாம். இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் கருதி மாற்றல் அதிகாரத்தை ஆணையாளரே வைத்திருக்க வேண்டும், அந்த அதிகாரத்தை ஆணையாளரிடம் ஒப்படைப்பது நல்லது என்று மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டால் அடுத்த ஆண்டிலிருந்து கூடச் செய்வதற்கு நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை இப்போது மாறுதல் செய்யும் நேரத்தில் அட்ஹாக் கமிட்டியின் மூலம் மாறுதல் செய்கிறோம். அதிலும்கூட அந்தக் கமிட்டி கோட்டாட்சித் தலைவரின் தலைமையில் இயங்குகிறது. இதனால் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. மேலும் இடைகாலத்தில் ஒரு ஆசிரியர் தவறு செய்தால் அந்த ஆசிரியரை வேறு இடத்திற்கு நிர்வாக நலன்களை முன்னிட்டு அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவரோ அல்லது அந்தக் குழுவோ மாற்றுவதற்கு இயலவில்லை. ஆகவே, தவறு செய்யும் ஆசிரியர்களை இடைக்காலத்தில் மாற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுமதி வழங்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்பொழுது வேறு பல துறைகளில் கிராம சேவக்குகள் போன்றவர்கள் தவறு செய்யும் பொழுது அவர்களே மாற்றுவதற்கு வழிவகை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் முறைப்படி மாற்றுகிறார். அந்த முறையிலே, தவறு செய்பவர்களை உடனடியாக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படலாம். அப்படிப் பட்ட மாற்றங்கள் செய்வதால் தவறு எதுவுமில்லை.



1972 ஏப்ரல் 1]

ஆனால், ஆண்டுக்காண்டு ஒரு குழு கூடிக் கொண்டு செய்யும்பொழுது, ஏராளமான மாற்றங்கள் செய்யும்பொழுது மாச்சரியங்கள் ஏற்படுகின்றன. ஆகவேதான் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தலாமா என்பதாக அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. தி. பொன்னுமலை :** ஆசிரியர் மாற்றக் குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்களும் மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொல்லும் கருத்துக்களை ஆர்.டி.ஓ. கேட்பதில்லை. சேலம் மாவட்டம் அயோத்தியாப் பட்டணத்தில் ஒரு ஆசிரியரை மாற்ற வேண்டுமென்று நாங்கள் சொல்லி ஆர்.டி.ஓ. மாற்ற முடியாது என்று சொல்லி மினிட் புத்தகத்திலேயே எழுதி வைத்திருக்கிறார். அதனால் சட்டமன்ற உறுப்பினர்கள் பொம்மை போல் இருக்கும் நிலைதான் இருக்கிறது.

ஆகவே, எங்களுடைய கருத்துக்களைக் கேட்கக்கூடிய நிலை இல்லாத நிலையில் எங்களை மெம்பர்களாக அதிலே நியமிக்காமலே இருந்தால் கூட மரியாதையாக இருக்கும். அரசு அந்த வகையில் கொள்கையை மாற்றியமைக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். அதை ஒட்டித்தான் இதிலே ஒரு மாற்றம் செய்யலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டு வருகிறது.

**திரு. கே. எ. வகாப் :** இந்தக் குழுவில் சட்ட மன்ற உறுப்பினர்களும், ஒன்றியத் தலைவர்களும் இருப்பதால் பலவிதமான தொந்தரவுகள் எங்களுக்கும் ஏற்படுகிறது. ஆசிரியர்களுக்கும் ஏற்படுகிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்க இந்தப் பொறுப்பை பி.டி.ஓ. க்களிடம் கொடுக்காமல் கல்வி அதிகாரிகளிடத்தில் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதைக் கல்வி துறை அதிகாரிகளுக்கு விடுவதா என்பதைப் பற்றி யோசித்து முடிவு காணலாம். இப்படிப் பட்ட குழுக்கள் அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்ற நிலையில் அதற்கான மாற்றத்தைச் செய்வது பற்றி யோசித்து முடிவு செய்யலாம்.

**புலவர் சி. பழனிச்சாமி :** ஆசிரியர்களைச் சில சமயங்களில் கல்வி ஆண்டின் இடையில் மாற்றுகிறார்கள். அப்படி இடையில் மாற்றும்போது சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்ளாமல் அவர்களே மாற்றுகிறார்கள். இடையில் மாற்றும்போதும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுமா ?

[1972 ஏப்ரல் 1

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** குறிப்பிட்ட காரணங்கள்
ஏற்பட்டாலொழிய இடையில் மாற்றம் செய்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக் கெல்லாம் இடம் இல்லாத வகையில் இந்
முறையை எப்படி மாற்றியமைப்பது என்பது பற்றி அரசு ஆலோசித்து முடிவு
,செய்யும்.

**திரு. த. சோனையா :** ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் பொது மாறு
தலின்போது அந்தக் கமிட்டி மாறுதல்களைச் செய்கிறது. கணவன் மனைவி
என்று தெரியாமல் சில சமயங்களில் இருவரையும் பிரிக்கின்ற வகையில் தவறு
தலாக மாறுதலைச் செய்து விடுகிறார்கள். அதைப் பிறகு உணர்ந்து அதை
மறுபடியும் மாற்றுவதற்கு அந்தக் கமிட்டிக்கு அதிகாரம் இல்லை. இந்த மாதிரி
நிலையில் கமிட்டிக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா..நெடுஞ்செழியன் :** கமிட்டியையே எடுத்துவிட
லாம் என்று சொல்லுகின்ற நிலையில் இப்படிப்பட்ட குறைபாடுகளுக்கு இடம்
இல்லாமல் போய்விடும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி ஜில்லாவில் ஆசிரியர்களை நியமிப்பது,
மாற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கிறது. அந்த முறையில் மற்ற
மாவட்டங்களிலும் ஆசிரியர்களை நியமிப்பது, மாற்றுவதற்கான பொறுப்பை
கல்வி இலாகாவில் ஏற்று நடத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைப் பற்றித்தான்
முதலிலேயே குறிப்பிட்டேன். அதைப் பற்றி யோசித்து முடிவு எடுக்கலாம்.

**திரு. ப.. முத்துசாமி :** தற்போது ஆசிரியர்களை மாற்றும்போது குறைந்த
காலம் இருக்கும் ஆசிரியர்களை மாற்ற வேண்டும், நீண்ட காலம் இருக்கும்
ஆசிரியர்களை மாற்றக் கூடாது என்ற விதி இருக்கிறது. பல ஊராட்சி ஒன்றி
யங்களில் பணிபுரிகிற நீண்ட நாட்களாக இருக்கக்கூடியவர்கள் அந்த ஊரில்
உள்ள பொதுப் பிரச்சினைகளில் ஈடுபடக்கூடிய நிலை இருப்பதால் மாற்றம்
செய்யும்போது நீண்ட நாள் ஒரே இடத்தில் பணியாற்றி வரக்கூடிய ஆசிரியர்
களை மாற்ற வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் சொன்னபடி
குறிப்பிட்ட குற்றத்தைச் செய்திருந்தால் அவர் ஊரில் இருப்பது ஆகாது
என்று நீண்ட நாளோ, குறைந்த நாளோ என்று பார்க்காமல் மாற்றப்படு
கின்றார்கள். அப்படி இல்லாமல் இருக்கும்போது ஒரே இடத்தில் கணவனும்,
மனைவியும் இருக்க வேண்டுமென்ற அவசியம் எற்படும்போது மனைவி இருக்கும்
இடத்திற்குக் கணவனை மாற்ற வேண்டுமென்றால் அந்த ஊரில் குறைந்த நாள்
இருக்கக்கூடிய ஆசிரியரைத்தான் அங்கிருந்து மாற்ற வேண்டுமென்றுதான்
உத்தரவு இருக்கிறது.



1972 ஏப்ரல் 1]

**திரு. க. நாகராஜன் :** ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்குத்தான் இருக்கிறது. அதே போல் அவர்களை மாற்று உரிமையும் அந்த மக்கள் பிரதிநிதிகளுக்குத்தான் இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை அறிந்து அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த உரிமையையும் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றவர்களும் உண்டு. இப்போது ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களே போதாது என்று சொல்லப்படுகின்ற நிலையில் அதிலே கை வைப்பதாக எண்ணம் இல்லை. இந்த மாற்றங்களைச் செய்யும் அதிகாரம் அவர்களிடம் இருப்பதால் வேறுபல தகராறுகள், மாற்சரியங்களும் ஏற்பட இடம் இருக்கும் காரணத்தால் அந்த முறையை மாற்றலாம் என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. கடைநிலை ஊழியர்கள் அவர்களால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களை மாற்றும் அதிகாரம் அதிகாரிகளுக்குத்தான் இருக்கிறது. அந்த முறையில் நாம் இதையும் கவனிக்க வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** திருமணங்கள் ஆண்டவனால் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. இந்த அதிகாரிகள் இப்படிப்பட்ட திருமணத் தம்பதிகளை இருவேறாகப் பிரித்து பிரிவுத் தாபத்தை உருவாக்குவது நியாயமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படித் திருமணம் செய்து கொண்டவர்கள் பிரிந்து வேறுபல திருமணங்களைச் செய்து கொள்ளுவதையும் பார்க்கிறோம்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** ஊராட்சி ஒன்றிய அளவில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் ஒன்றிய அளவில் மேற்பார்வையில் இருக்கும்போதே சரியான முறையில் அவர்கள் பணி திருப்துகரமாக இல்லையென்று பொதுமக்கள் அபிப்பிராயம் இருக்கிறது. ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்திடம் இருக்கும்போது அவர்களை மாற்றும் உரிமை கல்வி-இலாகாவுக்குக் கொடுத்தால் அது அவ்வளவு முறையானதாக இருக்காது என்பதை அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எல்லா வகையான நிலைமைகளையும் கருத்தில் கொண்டு நடைமுறைக்கு ஏற்ற ஒரு முடிவை அரசு மேற்கொள்ளும்.

[1972 ஏப்ரல் 1

**திரு. வீ. மலைக்கண்ணன் :** ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை மாற்றும் பொறுப்பு ' நான்-அபிஷியல் மெம்பர்சிடம் ' இருக்கக் கூடாது என்று ஆசிரியர் களே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று அரசு செயல்பட முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலில் அதுபற்றிய கருத்தைத் தெரிவித்தார்கள். அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் மாறுதல்களைப் பொறுத்தவரை சங்கடங்கள் ஏற்படாத வகையில் திருத்தி யமைக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

## சென்னையில் தெருக்களின் பெயர்கள்

*** 818 வினு—திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிப் பகுதியில் ஆங்கிலத்திலும், ஆங்கிலேயர் பெயரிலும் உள்ள தெருக்களின் பெயர்களை மாற்றி அமைத்திட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :**

மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை? தோப்பில் நிழலா இல்லை ?' தணிப்பரிதாம் துன்பமிது தமிழகத்தில் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை— என்று பாவேந்தர் பாரதிதாசனும், 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் ' என்று பாரதியாரும் கூறியுள்ளதை எண்ணி, இப்பொழுது சென்னை மாநகரில், இலண்டன் மாநகரில் உள்ளது போல எட்வர்டு எலியட்ஸ் ரோடு, ஆடம்ஸ் ரோடு, கான்ரான்ஸ்மித் ரோடு, போக் ரோடு, கிரின்வேஸ் ரோடு, கிரீம்ஸ் ரோடு, எல்டாம்ஸ் ரோடு, பீட்டர்ஸ் ரோடு என்றெல்லாம் இருப்பதை மாற்றி, நல்ல தமிழ்ப் பெயராகவும் தமிழ்ப் பெரியார்களின் பெயராகவும் சூட்ட அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒரு காலத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில் பல்வேறு பெயர்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. அந்தப் பெயர்கள் மாற்றப்பட வேண்டுமென்ற நோக்கம், கருத்து பலராலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மெல்ல, மெல்ல அவை எல்லாம் மாற்றப்பட வேண்டும். மாற்றுகின்ற பொறுப்பு மாநகராட்சி யைச் சேர்ந்தது. புதிய தெருக்களுக்குப் பெயர் வைக்க மாநகராட்சிக்கே முழு உரிமை இருக்கிறது. பழைய தெருக்களின் பெயர்களை மாற்றியமைக்க அவர்கள் முடிவு செய்து அரசின் ஒப்புதல் பெறவேண்டும்.



1972 ஏப்ரல் 1]

அப்படிப்பட்ட பெயர்களை ஒரே நாளில் மாற்றிவிடுவது என்பது கடினமான ஒன்றாகும். மெல்ல, மெல்ல பழம்பெரும் தலைவர்களுடைய, மக்களால் மதிக்கப் படுகின்றவர்களுடைய பெயர்களை அவற்றுக்கு வைக்கலாம். மாநகராட்சி மன்றம் அதற்கான செயற்குறிப்பை வைத்து நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பினால் அரசாங்கம் அதுபற்றிக் கவனிக்கும். அந்த வகையில் சிலபல தெருக்களின் பெயர்கள் கூட மாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் மாற்றப்பட வேண்டிய பெயர்கள் பல இருந்து வருகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அமெரிக்கா நாட்டில் அந்த நாட்டிலுள்ள 9-30
பிற மாகாணங்களின் பெயர்களை எல்லாம் ரோடுகளுக்கு வைக்கிறார்கள். முற்பகல்
தங்களுடைய நாட்டிலே எவ்வளவு மாகாணங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளட்டும் என்று அப்படிப் பெயர்கள் வைக்கிறார்கள். அதேபோல் இந்தியாவில், தமிழ்நாட்டில் பிற மாநிலங்களின் பெயர்களை எல்லாம் புதிதாகப் போடப்படும் ரோடுகளுக்குப் போட்டால் நமது நாட்டில் எவ்வளவு மாநிலங்கள் இருக்கின்றன என்பதை மக்கள் அறிந்துகொள்வதற்கும் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சி ஏற்படுவதற்கும் அது அடிகோலும் என்பதாலும் அப்படிப் பெயர்களை வைப்பதற்கு அரசாங்கம் கார்ப்பரே ஷனுக்கு யோசனை தெரிவிக்குமா, பாம்பே ரோடு, காஷ்மீர் ரோடு, யு.பி. ரோடு என்று பெயர்கள் வைப்பதற்கு? அமெரிக்கா நாட்டில் இருப்பது போன்று அப்படிப் பெயர்கள் வைத்தால் ஒற்றுமை உணர்ச்சியைக் கொண்டுவர முடியும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதெல்லாம் அகில இந்திய அளவில் உள்ளாட்சித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் அல்லது உள்ளாட்சித் துறை ஆணையாளர் மாநாட்டில் அப்படிக் கூடும்போது எல்லோரும் சேர்ந்து எடுத்துக்கொள்ளும் முடிவாக அமைய வேண்டுமே தவிர நாம் மட்டும் அப்படி ஒரு முடிவு எடுத்து மற்றவர்கள் அதற்கு இடம் கொடுக்காதிருந்தால் அது மிக மிகப் பொருந்தி வராது. அந்தந்த மாநிலத்தில், மாவட்டங்களில் வாழும் அல்லது வாழ்ந்த மக்களின் பெயரையும், புகழையும், பெருமையையும் காப் பாற்றத்தக்க அளவிற்குப் பெயரிடுவது பொருத்தமுடையதாக இருக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Madras City has become an international city and it has got a history behind it. The names of streets etc. in the Madras City are of historical importance. For example, there is the Hamilton Bridge. Hamilton was a great Engineer and when he died, his bones were taken to Hosur and buried there. So may I know from the Hon. Minister that the names of those streets and bridges will not be disturbed?

[1972 ஏப்ரல் 1

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நமக்குச் சிறப்பும், பெருமையும், புகழும் தரும் அத்தகைய வரலாற்றுச் சிறப்புடையவைகளை வேண்டுமானால் கவனித்து அதற்கேற்ற அளவிற்கு விலக்கு அளித்துவிட்டு மற்றவைகளில் ஈடுபடலாம். அதற்காக எதிலுமே ஈடுபடத் தேவையில்லை என்று சொல்வதற்கு அவசியமில்லை. எல்லாவற்றையும் எடுத்துத் தீரவேண்டும் என்று சொல்ல வேண்டியதில்லை.

மன்றோ ஸ்டாச்சு இருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் அது அழகு தருகிறது என்பது மட்டுமல்ல, ஸர் தாமஸ் மன்றோவைப் பொறுத்தவரையில் பல நன்மைகளைப் புரிந்தவர், வெளிநாட்டிலிருந்து வந்தவர்களில். அப்படி நன்மைகள் புரிந்ததற்காகத்தான் அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வாரலற்றுச் சிறப்பு மிக்கவர்களின் பெயர்களை, சின்னங்களை நிலைநிறுத்திக் கொள்ளலாம். மற்றவைகளை, அவற்றை எடுத்து ஏற்ற முறையில் மாற்றியமைப்பது என்பது பொருத்தமுடையதாக இருக்கும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மௌண்ட் ரோட்டிற்கு அண்ணா சாலை என்று பெயர் வைத்ததைப் போல் ஆங்கிலேயர்களின் பெயர்களை எல்லாம் மாற்றிவிட்டு தமிழ் அறிஞர்களின் பெயர்களை வைப்பதில் கவனம் செலுத்தப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முன்பே குறிப்பிட்டேன். அப்படிச் சாலைகளின் பெயர்களை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளை மாநகராட்சிமன்றம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று. அப்படி மாநகராட்சிமன்றம் முயற்சி எடுத்துக் கொண்டு அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பும்போது அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. கா. வேழவேந்தன் :** இப்பொழுதே ஆங்கிலேயர்களின் பெயர்களைப் பார்க்கும்போது நமது அடிமைத்தனத்தை நினைவூட்டும் வகையில் இருக்கின்றன. உதாரணமாக இன்றுகூட பல ஆங்கிலேயர்களின் பெயர்களைக் கொண்ட சாலைகள் இருக்கின்றன. அவை நமது அடிமைத் தனத்தை, பழைய நினைவுகளை எல்லாம் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே லாயிட்ஸ் ரோடு என்பதை டாக்டர் கலைஞர் கருணாநிதி சாலை என்றும் எட்வேர்ட் எலியட்ஸ் சாலையை டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை என்றும் பெயர்களை மாற்றுவதற்கு அரசு மாநகராட்சிக்குச் சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாநகராட்சிமன்றம்தான் இதுபற்றி முடிவுகள் எடுக்க வேண்டுமென்று சொன்னேன். மாநகராட்சி மன்றம் அப்படிப் புதுப் புதுப் பகுதிகளுக்கு புதுப் புதுத் தெருக்களுக்கு பெயர்களை வைத்து வருகிறது. பழைய பெயர்களை மாற்றும் முயற்சியில்



1972 ஏப்ரல் 1]

ஈடுபட்டு வருகிறது. மாநகராட்சி மன்றம் எடுத்து அரசுக்கு சிபார்சு செய்ய வேண்டும். மாநகராட்சி மன்றம் சிபாரிசு செய்யுமானால் அரசு தக்க நடவடிக்கைகள் அதன்மீது மேற்கொள்ளும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** புதிதாக பெயர் மாற்றியிருக்கிற பெயர்ப் பலகைகளை பல தெருக்களில் அப்புறப்படுத்தியிருக்கிறார்கள் இதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமேயானால் அது முறைப்படி மாநகராட்சிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அதன் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** சென்னையில் ஆங்கிலேயர்கள் இருந்த காலத்தில். கூட ஆற்காடு சாலை என்றிருக்கிறது. அந்நிலையை யொட்டி தமிழ்நாட்டில் இருக்கிற மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டு, வட ஆற்காடு சாலை, தென் ஆற்காடு சாலை, கோவை சாலை, மதுரை சாலை என்று சாலைகளுக்கு பெயரிடப்படுமா ? அப்படி இல்லை யெனில் காங்கிரஸ்காரர்கள் காலத்தில் தியாகம் செய்தவர்களின் பெயர்கள் இடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தச் சாலைகளின் பெயர்கள் மாற்ற வேண்டிய அவசியமில்லை. ஆற்காடு சாலை, பூவிருந்தவல்லி சாலை, எண்ணூர் சாலை இவைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டிய அவசியமில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** சென்னை நகரிலுள்ள ஆங்கிலேயர்களின் பெயர்களைக் கொண்ட சாலைகளின் பெயர்களை எடுப்பதற்கு சென்னை மாநகராட்சி மன்றம் விரும்பவில்லையா ? அந்தப் பெயர்களை மாற்ற வேண்டுமென்ற அறிவுரை சர்க்காரால் கார்ப்பரேஷனுக்குச் சொல்லப்பட்டதா ? கார்ப்பரேஷன் மெம்பர்களுக்கு அதில் விருப்பம் இல்லையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சிலபல தெருக்களின் பெயர்களை மாற்றி வருகிறார்கள். புதுப் பெயர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேகமாக ஒரேயடியில் செய்தால் அதில் குழப்பங்கள் மற்றவை ஏற்படக்கூடும் என்பதற்காக படிப்படியாக செய்கிற முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே மாநகராட்சிமன்றத்திற்கு இந்தப் பெயர்களை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற அடிப்படையில் மாநகராட்சி மன்றம் ஆங்கிலேயர்களின் பெயர்களைக் கொண்ட தெருக்களின் பெயர்களை மாற்ற வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடுகிற நேரத்தில் சில அரசியல்வாதிகள் காழ்ப்புணர்ச்சியோடு சாடுவதை இந்த அரசு அறியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட காழ்ப் புணர்ச்சியை இந்த அரசு அறியாது.

THIRU K. M. SUBRAMANIAM : When there is a proposal to drop the names of Britishers in the City, is there any other proposal to drop names of those who had been supporting the British rule in this country?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது விவாதத்திற்குரிய ஒன்றாக அமையும். ஆகவே விவாதித்து அதற்குப் பிறகுதான் அதுபற்றி முடிவு எடுக்க வேண்டுமே தவிர அவர்களுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டன என்பதை இப்போது நாம் இங்கு கூறுவதற்கில்லை. ஆங்கிலேயர்களில் கூட, நான் முன்பு எடுத்துச் சொன்னமாதிரி, தமிழ்நாட்டிற்கு நன்மை புரிந்தவர்கள் பல பேர்கள் இருந்திருக்கிறார்கள். மில்லர் ஸ்டாச்சு இருக்கிறது. அவர் கல்விக்கு அரும் பணியாற்றியவர். போப் இருக்கிறார்கள், அரும்பணி ஆற்றியவர். அவற்றை அகற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அடிமைச் சின்னமாக, வெறுப்புக்கும், பெருமைக்கும் உகந்ததல்லாத பெயர்களை மாற்றுகிற முயற்சியில் முதலில் ஈடுபடலாம். மற்றவைகள்—உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்வது போன்ற ஒன்று—விவாதித்து பிறகு முடிவு செய்ய வேண்டிய ஒன்று.

**திரு. கோ. இளங்கோவன் :** சிற்றூர்கள், பேரூர்கள் இவற்றிலிருந்து வருகிற பாமர மக்கள் சென்னையில் உள்ள தெருக்களின் பெயர்களைச் சொல்லவே கஷ்டப்படுகிறார்கள். அதை உணர்ந்து அரசு ஆவன செய்ய முன்வருமா ?

(பதில் இல்லை.)

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இன்று நகாரண்மைக் கழக கட்டடத்தின் பெயர் ரிப்பன் பில்டிங்ஸ், ஆங்கிலேயரின் பெயர்தான் இருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது மாநகராட்சி மன்றம் தான் முடிவு செய்ய வேண்டும். ஏனெனில் ஸ்தல ஸ்தாபன உரிமைகள் எல்லாம் வழங்கியவர் ரிப்பன் என்ற காரணத்தினால் அவர் பெயர் அதற்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் மாநகராட்சிமன்றம்தான் யோசித்து நமக்கு அது பற்றி முடிவு அறிவிக்க வேண்டும்.

**திரு. எம். தேவராசன் :** சில இடங்களுக்குப் பெயர்கள் வைக்கும்போது காந்தி நகர், அண்ணா நகர் என்று வைக்கிறோம். ஆனால் மிக மோசமாக கள்ளச்சாராயம் காய்ச்சுவது போன்ற குற்றங்கள் செய்யக் கூடிய இடங்களாக



அவை இருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட பெரியவர்களின் பெயர்களை வைக்கும்போது நல்ல இடங்களாகப் பார்த்து வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்தக் குற்றமும் நடைபெறாத இடத்தில் அவர்கள் பெயர்கள் இருக்க வேண்டுமென்று தேடிப் பிடித்து வைப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. ஆகவே, அந்தப் பெயர்களைத் தூய்மைப்படுத்துகிற அளவிற்கு அப்படிப்பட்ட குற்றங்களை அந்தந்த இடங்களிலிருந்து அகற்றும் முயற்சியில் ஈடுபடலாமே தவிர பெயர்களை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவது வெற்றி பெறாது.

### தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகள்

* 819 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அண்மையில் நகராட்சியாக மாற்றப்படவிருக்கும் பேரூராட்சி மன்றங்கள் எவையேனும் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். கணேசன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சியிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், அந்தப் பேரூராட்சியை டவுன்ஷிப்பாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா ? ஆமெனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் அரசுக்கு வந்து சேரவில்லை.

### வந்தவாசி—சேதாரகுப்பம் சாலையில் பாலம்

* 820. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி ஒன்றியத்தில், வந்தவாசி சேதாரகுப்பம் சாலை, மைல் 1/1 என்ற இடத்தில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, ஒன்றியத் தலைவராலும், மாவட்ட ஆட்சித் தலைவராலும் சிபார்சு செய்யப்பட்டு வந்திருக்கிறது. அந்த இடத்தில் பாலம் அமைப்பதாலே பத்து கிராமங்களுக்குத் தொடர்பு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை அரசு பரிவுடன் ஆலோசித்து, அந்த ஒன்றியத்திற்கு மானியம் வழங்கி அந்தப் பாலத்தை கட்டிக் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** குறிப்பிட்ட அந்த இடத்தில் பாலம் கட்ட ரூ. 50,000 செலவாகும் என்று கூறப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் பட்டியலில் அந்தப் பாலம் கட்டுவது இடம் பெறவில்லை என்று சொல்கிறார்கள். இதர சாலைகள் என்ற வேலையின் கீழ் எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதர சாலைகளின் கீழ் ரூ. 190 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், ரூ. 220 லட்சத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டு விட்டது. ஆகவே, இப்போது இருக்கிற ஒதுக்கீட்டில் அதற்கு நிதி ஒதுக்குவதற்கு இல்லை. நிதி வசதி ஏற்படுகிறபோது அது சாத்தியமானால் எடுத்துக் கொள்ளலாம் என்று தலைமைப்பொறியாளர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

### அரிசனங்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள்

* 821 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வயலூர் கிராம தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள வயலூர் கிராம மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று நான்கு ஆண்டுகளாகக் கோரிக்கை எழுப்பி வருகிறேன். இப்போது இல்லை என்ற பதில் வருகிறது. இதை மறுபரிசீலனை செய்து இனிமேலாகிலும் உண்டு, நிறைவேற்றித் தருகிறோம் என்ற பதிலை எதிர்பார்க்கலாமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அந்த இடத்தில் ஏற்கெனவே ஒரு குடி தண்ணீர்க் கிணறு இருக்கிறது. அதை ரிப்பேர் செய்வதற்கு ரூ. 3,000 வேண்டுமென்று கேட்கப்பட்டது. அது கொடுக்கப்பட்டிருக்கிறது. கிணறு இல்லையென்றால், கிணறு கட்டுவதற்கும் வேறு பல குடிதண்ணீர் வசதி செய்து



கொடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது. அங்கே பொதுமக்களுக்குத் தேவையான தண்ணீர் இருக்கிறது. அந்தக் கிணற்றை ரிப்பேர் செய்வதற்கும் ரூ. 3,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அது பற்றிய பரிசீலனை இல்லை.

* 822 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிரி வட்டம், கவுத்தரசநல்லூர் தாழ்த்தப்பட்ட பொதுமக்களுக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, என்னுடைய கேள்வி, இருக்கின்ற கிணற்றில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டம் உண்டா என்பதுதான், கிணறு இருக்கிறது என்ற பிரச்னையை நானும் நன்றாக அறிவேன். இனிமேலாவது பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனைக்கு எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அங்கே இருக்கின்ற மக்கள் தொகையை வைத்துத்தான் மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட அந்தக் கிராமத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்களுக்கு அந்தக் கிணற்றில் உள்ள தண்ணீர் போதுமானதாக இருக்கிறது. அங்கே மேல்நிலைத் தொட்டி தேவையில்லை. மேலே சொன்ன கிராமத்தில் அங்கேயிருக்கிற கிணற்றை ரிப்பேர் செய்வதற்கும் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறோம். இரண்டாவது இடத்திலும் குடிதண்ணீர்க் கிணறு இருக்கிறது. அது போதுமானதாக இல்லை என்றால் அதற்காக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுவதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. மு. பழனிவேலன் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் கிணறு கட்டுதல், ஆழப்படுத்தல் போன்றவற்றிற்குத் தொகை ஒதுக்கினால், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்களுக்குப் பயன்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் காலனிகளுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்றுதான் இந்த இலாக்கா நிதி ஒதுக்கம் செய்கிறது ஆனால் அங்கேயிருக்கும் அதிகாரிகள், மற்றவர்கள் அதைத் தவறான முறையில் ஹரிஜன மக்கள் அல்லாதவர்களுக்கு உபயோகித்து வருகிறார்கள். அந்தப் பணம் அதற்காகவே பயன்படுத்தப்படுகிறதா என்று அவ்வப்போது அரசு நடவடிக்கை எடுத்துப் பார்த்து வருகிறது. அரசாங்கத்தின் கொள்கை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டு மென்பதுதான். அதிகாரிகளும் இன்னும் அங்கே இருப்பவர்களும் இதை உணர்ந்து, அந்த மக்களுக்கு என்று செலவழிக்க ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்களுக்காகவே செலவு செய்தால் இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்பட இடமிருக்காது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பொதுவாக இப்படி மேல்நிலை நீர்த் தொட்டிகள் ஒன்றியத்தின் சார்பில் அமைக்கும்போது, ஹரிஜன் வெல்பே டிபார்ட்மெண்டில் மானியம் பெற்றுக் கொண்டு விட்டு, ஹரிஜன மக்கள் வாழும் பகுதிகளுக்கு இணைப்புத் தருவது இல்லை. அப்படிப்பட்ட நிலையில், அந்தந்த ஒன்றியங்கள் இப்படிப்பட்ட ஹரிஜன் காலனிகளுக்கு முதலில் இணைப்பு கொடுக்கப்பட்டால்தான், மற்ற இடங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை அரசாங்கம் உருவாக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இப்படிப்பட்ட குறைபாடுகள் வந்த காரணத்தால்தான், ஹரிஜனக் காலனிகளில் நீர்நிலைத் தொட்டி கட்ட வேண்டுமென்று தகவல் வந்தால், அந்த இடத்தில் உண்மையாகவே அது தேவைதானா, அதற்கு என்ன பணம் செலவாகும் என்பதைக் கண்டறிய இப்போதெல்லாம் நலத்துறை இயக்குநரே நேரில் சென்று பார்த்து ஒப்புதல் தருகிறார்கள். அதற்கு முன்னால் ஒன்றியத் தலைவர்கள், நலத்துறை அதிகாரி கள்தான் அதைச் செய்து கொண்டு வந்தார்கள். அதை மாற்றி இப்போது இந்த முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மாறுதலின் காரணமாகத் தவறுதல்கள் இனி ஏற்பட வழியில்லை.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவது சம்பந்தமாக முன்பெல்லாம் மாவட்ட நல அதிகாரிகளின் பொறுப்பில் இருந்தது. அது ஏன் இப்போது மாற்றப்பட்டது ? மேலும், அங்கே பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்களுக்கு அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டலாம் என்று உத்தரவு போட அதிகாரம் இருக்கும்போது மாவட்ட ரீதியிலே உள்ள மாவட்ட நல அதிகாரிக்கு அந்த உத்தரவு போடும் அதிகாரம் கொடுக்கக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு முன்னால் 2 பேர் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். அதற்குரிய காரணத்தை நான் சொன்னேன். காரணம் அங்கே இருக்கிற அதிகாரிகள், நலத்துறை அதிகாரிகள்கூட, அங்கேயிருக்கும் அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரில், அங்கேயிருக்கிற சிப்பந்திகள் மற்ற அதிகாரிகளின் தூண்டுதலின் பேரிலும், ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படு கிற அந்தப் பணத்தை, ரோடு போட, குடி தண்ணீர் தொட்டி போன்ற வேலை களுக்குப் பயன் படுத்துவதற்காகக் கொடுக்கும் பணத்தை, ஹரிஜன மக்கள் அல்லாத கிராமங்களுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஆனவே கீழ்மட்டத் தில் இருக்கும் அதிகாரிகள், மாவட்ட நலத்துறை அதிகாரிகள் ஆகியவர் களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்காமல், இதற்காகவே இருக்கிற நலத்துறை இயக்குநருக்கே அந்த அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. இதைத் தான் மாண்புமிகு மு. பழனிசாமி, நா. வீராசாமி ஆகியோரின் கேள்விக்கும் பதிலாகச் சொன்னேன்.

### *Paraffin factory*

* 823 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a paraffin factory in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) இந்திய அரசாங்கத்தின் கூட்டுத்துறை நிறுவனமான திருவாளர்கள் மெட்ராஸ் ரிபைனரிஸ் லிமிடெட் கழிவு மெழுகிலிருந்து தோல், மெழுகுவர்த்தி. நெசவம் இன்னும் ஏனைய தொழில்களில் பயன்படும் பாரபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலை யொன்றை நிறுவுவது பற்றி யோசித்து வருகிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 23,000 மெட்ரிக் டன் களாகும்.

THIRU N. DENNIS : May I know the market potential for this product?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதைக்கு அது கிடைக்கவில்லை என்ற குறை தான் இருக்கிறது. அதற்கு ஏராளமாகச் சந்தை இருப்பதாகத் தெரிகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த பாரபின் தொழிற்சாலையை மத்திய அரசே இங்கே அமைக்கிறார்களா ? இந்த ஆண்டு அமைக்கப்படுமா ? அப்படி அமைப்பதற்கு எவ்வளவு மூலதனம் போட வேண்டியிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விரைவில் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுப்பதாகச் சொல்லி இருக்கிருர்கள். எவ்வளவு மூலதனம் என்ற விவரம் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இப்போது அமைக்க இருக்கிற தொழிற்சாலைக்குப் போதிய மூலப் பொருள்கள் பாரபின் வாக்ஸ் கிடைக்குமா? இப்போது சிறுசிறு தொழில் நடத்துபவர்களுக்கே அது கிடைக்கவில்லை. இந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிற அடிப்படையில் மூலப்பொருள்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன வழிவகைகளை வகுத்து இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பாரபின் வாக்ஸ் தான் பல தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள். அது கிடைக்கவில்லை என்ற குறை இருப்பதாலே தான் அதையே உற்பத்தி செய்வதற்கு மெட்ராஸ் ரிபைனரீஸ் ஏற்பாடு செய்து வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டால், எத்தனை தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்; என்ன மதிப்பீட்டில் அதை ஆரம்பிக்கும் உத்தேசம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது அவர்கள் யோசித்துக் கொண்டு வருகிருர்கள். மற்ற விவரங்கள் நம்மிடத்தில் வரவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Are the Government aware that because of shortage of paraffin wax, the handloom industry is affected, the match industry is affected and very huge blackmarketing is going on in this paraffin wax ? Will the Government take steps to control this and see that this is properly distributed?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது பற்றி நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிரும். நம்முடைய ஆலோசனை, நம்முடைய மாநிலத்திற்கு மட்டும், 5,000 டன் தேவைப்படுகிறது. அது முழுவதையும் நம்முடைய கையிலேயே ஒப்படைத்து, வழங்கும் உரிமையையும் வழங்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிரும்.

**திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் :** தற்சமயம் சீராக விநியோகம் இல்லை என்ற காரணத்தினுல் நம்முடைய அரசாங்கம் உற்பத்தியை எல்லாம் பெற்றுக் கொண்டு தேவையானவர்களுக்குச் சீரான முறையில் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா? நண்பர் கேட்ட அதே கேள்வியைத்தான் நானும் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது.



**திரு. கே. என். குமாரசாமி :** பாரபின்னுக்கு மூலப் பொருள்கள் என்னென்ன என்பதை அரசு அறிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது மெட்ராஸ் ரிபைனரியிலிருந்து கிடைக்கப்படும் சில பொருள்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. தென் இந்திய மாநிலங்களிலும், அஸ்ஸாமிலும் இது போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் 'இதை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிரும். மெட்ருஸ் ரிபைனரியில் கிடைக்கக்கூடிய உபபொருள்களைக் கொண்டு இது உற்பத்தி செய்யப்படும்.

### கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கம்

* 824 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

**தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்கள் தற்போது எத்தனை உள்ளன?**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எட்டு

**திரு. கே. எ. வகாப் :** இந்த எட்டு இடங்களிலுள்ள கைவினைப் பொருள்கள் நிலையங்களில் டெல்லி, வேலூர் ஆகிய இடங்களைத் தவிர, மற்றவைகளெல்லாம் நஷ்டத்தில் நடைபெறுகின்றன என்பது உண்மையா? அதுமட்டுமல்ல, இவற்றிற்கான மூலதனத்திற்காகத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஏறத்தாழ ரூ. 10 லட்சம் கடனுகப் பெற்று இருப்பதால், அவைகள் அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன என்பது அரசுக்கு தெரியுமா? அதற்கு என்ன பரிகாரம் காணப் போகிறது இந்த அரசு?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கிட்டத்தட்ட ஆறு எம்போரியங்களில் லாபம் என்ற கணக்கு இருக்கிறது. லாபத்தையெல்லாம் விழுங்குகின்ற முறையிலே தலைமை சொஸைடியாக விளங்குகின்ற அமைப்பிலே ரூ. 5,99,564 நஷ்டம் என்று இருக்கிறது. பொதுவாக இதை எப்படிச் சீர்படுத்துவது என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

### தீக்குச்சித் தொழிற்சாலைகள்

* 825 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழில் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் தீக்குச்சி தொழிற்சாலைகள் எத்தனை?

(இ) அவை யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஒன்பது.

(இ) நான்கு கூட்டுறவுத் தீக்குச்சி தொழிற்சாலைகள் திருநெல்வேலி மாவட்டத்திலும், மூன்று இராமநாதபுரம் மாவட்டத்திலும், ஒன்று தஞ்சை மாவட்டத்திலும், ஒன்று செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ளன.

**திரு. கே. எ. வகாப் :** இப்படிப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகள் தற்பொழுது மார்க்கெட்டில் ரொம்ப சிரமப்படுகின்றன. அரசாங்கம் சில முயற்சிகள் எடுத்து தீக்குச்சிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற தீப்பெட்டிகளை வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் விற்பனை செய்வதற்கு உதவி செய்வதுதான் நோக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தத் தீப்பெட்டித் தொழில் பாண்டு ரோல் சிஸ்டம் எடுக்கப்பட்டால் கஷ்டப்படும். அதே கஷ்டத்தை கூட்டுறவு தீப்பெட்டி தொழிற்சாலைகளும் அனுபவிக்கின்றன. இதை எடுத்தாலும் நஷ்டத்தில்தான் போய் முடியும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பாண்டு ரோல் சிஸ்டம் வேண்டும் என்று சொல்கிறார்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. பாண்டு ரோல் சிஸ்டம் இல்லாத காரணத்தினால் கூட்டுறவுத் தொழிற் சாலை போன்ற நியாயமாக நடைபெறுகின்ற தொழிற்சாலைகள் வரியை ஏய்க்க முடியவில்லை. தனியார் ஸ்தாபனங்கள் வரியை ஏய்க்கின்றன. இந்த சிஸ்டம் வேண்டும் என்று கோரிக்கை வந்து, மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறது. பாண்டு ரோல் சிஸ்டம் வேண்டும் என்று கேட்கிறவர்கள் பெரிய முதலாளிகளாக இருக்கிறார்கள். அதனால்தான் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது. ஏமாற்ற இப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி சந்தேகம் வருகிற காரணத்தினால், மத்திய அரசு இதை மறுத்துவிட்டது.

**திரு. கே. கந்தசாமி :** தனியாரால் நடத்தப்படுகிற தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு அதிக லாபம் இருப்பதாகக் கூறப்படுகிறதே ? அதைப்போல கூட்டுறவு முறையில் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளில் நல்ல லாபம் இருக்கிறதா ? அப்படியானால் இன்னும் இவைகளை அதிகமாகத் துவங்க அரசு ஏதாவது முயற்சி செய்யுமா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவுத் தொழிற்சாலைகள் வர வேண்டும் என்பது நம்முடைய கொள்கை. இலாபத்தை மட்டும் கருதாது, இலாபம் ஒருவருக்கு மட்டுமே போகாமல் பல பேர்களுக்குப் பங்கிடப்படுகிறது என்ற முறையில் கூட்டுறவுத் துறை நன்றாக நடைபெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. த. சோணையா :** அமைச்சர் அவர்கள் ராமனாதபுரம் மாவட்டத்தில் மூன்று தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதில் கிழக்கு ராமனாதபுரத்தில் ஏதேனும் தொழிற்சாலை இருக்கிறதா ? அப்படியில்லை என்றால், கிழக்கு ராமனாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கிழக்கு ராமனாதபுரத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த உறுப்பினர் அவர்கள் முயற்சிப்பார்களேயானால், அரசாங்கம் உதவி செய்யும்.

### பாய் நெய்பவர்களுக்கு இயந்திரங்கள்

* 826 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி மத்திய பாய் நெசவாளர் கோரை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஜப்பானிய பாய் நெய்யும் மிஷின்களை வாங்கி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அளிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

### அணைக்கரை—கொள்ளிடம் சாலை

* 827 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அணைக்கரையிலிருந்து கொள்ளிடம் வரை உள்ள கரையை அகலப்படுத்தி, பஸ், லாரி போக்குவரத்துக்குப் பயன்படும்படி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அணைக்கரையிலிருந்து கொள்ளிடத்திற்குத் தெற்குக் கரை வழியாகக் கொள்ளிடம் என்று அழைக்கப்படுகிற அணைக்காரன்சத்திரம் பாதையைச் செம்மைப்படுத்தித் தருவதன் மூலம்

மிக அதிகமான கிராமங்களில் போக்குவரத்து வசதி ஏற்படும். அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறியதற்கு நன்றி கூறி, அதற்கு எவ்வளவு மதிப்பீடு என்பதை அறிவிக்க முடியுமா? எப்பொழுது செயல்படுத்த வேலைகள் துவங்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 24 மைல் நீளம் உள்ள இந்தச் சாலை அமைப்பதற்கு ரூ. 60 லட்சம் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. இன்டென்சிவ் அக்ரிகல்சரல் டெவலப்மெண்டு ப்ரோகிராம்—தீவிர சாகுபடித் திட்டத்தின்—கீழ் இதுபற்றி அரசாங்கத்திற்குச் செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

### நாகநதி ஆற்றின் குறுக்கே அணை

*** 828 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுக்கா, கனியம்பாடி தொகுதியில் உள்ள நாகநதி ஆற்றில் (கீழரசம்பமடு கிராமத்துக்கு அருகில் உள்ளது) சிறு பாசனத் திட்டத்தின் கீழ் அணை ஒன்று கட்டப்படும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்.

### கோவை நகரில் உள்ள சிறப்பங்காடிகள்.

*** 829 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) கோவை நகரில் தற்போது சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட ஆண்/பெண் பணியாளர்கள் உள்ளனர்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஒன்று.

(இ) ஆண் 6, பெண் இல்லை.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, சூப்பர் மார்கெட்டுகள் அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் நடைபெறுகின்றன. சூபர் மார்கெட்களில் அரிசனங்களை 100-க்கு 18 பேர்கள் எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா அப்படி எடுக்காவிட்டால் சூபர் மார்கெட்டுக்கு அனுமதி கொடுப்பதற்கு அரசு மறுக்குமா?





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, சூப்பர் மார்கெட்டாக இருந்தாலும் சரி அல்லது வேறு கூட்டுறவு நிறுவனமாக இருந்தாலும் சரி, அந்த நிறுவனங்களுக்கு அவர்களுடைய சிப்பந்திகளை, ஊழியர்களை நியமித்துக் கொள்ள அதிகாரம் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் குறைவாகத் தான் சிப்பந்திகளாக, ஊழியர்களாக இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது என்பதை அரசு உணர்கிறது. அந்தக் குறையை நீக்குவதற்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிர்வாகத்தில் இடம் கொடுத்தால் போதும் என்று இந்த அமைச்சு நம்புகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சூப்பர் மார்கெட்டுகள் லாபத்தில் நடக்கிறதா? அல்லது மினி சூப்பர் மார்கெட்டுகள் லாபத்தில் நடக்கின்றதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்தக் குறிப்பிட்ட சூப்பர் மார்க்கெட் லாபத்தில்தான் நடக்கிறது. இதில் ஏறத்தாழ ரூ. 4 கோடிக்கு மேல் வரவு-செலவு ஆகிறது. சில வருடங்களில் ரூ. 3 லட்சத்திற்கு மேல் லாபம். இந்த வருடத்தில் ரூ. 2½ லட்சம் லாபம். மினி மார்க்கெட்கள் 29-ல், 28 லாபத்தில் நடைபெறுகின்றன.

**திரு. கே. என். குமாரசாமி :** 10,000 பேர்கள் வசிக்கின்ற நகரங்களில் இந்த மினி சூப்பர் மார்கெட் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** 10,000 பேர்கள் என்ற அந்த அளவுகோல் இல்லை. நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 2,000 அளவுக்கு விற்பனையாகக் கூடிய ஊர்களில் மினி சூப்பர் மார்கெட், சிற்றங்காடிகள் திறப்பதற்குச் செயற்குறிப்பு இருக்கிறது.

**திரு. கே. கந்தசாமி :** இந்த சூப்பர் மார்க்கெட் நல்ல தரமான சரக்குகளை சப்ளை செய்வதாலும், நல்ல நியாயமான விலையில் அங்கே சாமான்கள் கிடைப்பதாலும் மக்கள் திருப்தி அடைகிறார்கள். ஆகவே, மதுரை ஜனநெருக்கடி உள்ள இடமாக இருப்பதால், அங்கே இன்னும் அதிகமாக ஒன்றிரண்டு சூப்பர் மார்க்கெட்கள் அமைப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மதுரையில் மேற்கொண்டு சூப்பர் மார்க்கெட் திறப்பது என்பது இப்பொழுது அரசின் ஆய்வில் இல்லை. ஏற்கனவே நடைபெறுகின்ற சூப்பர் மார்க்கெட் நஷ்டத்தில் நடைபெறுகிறது. ஆகவே, மதுரை நகரத்தை யொட்டி மேற்கொண்டு சூப்பர் மார்க்கெட் திறப்பது சற்று ஆலோசித்துச் செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, உதகையில் உள்ள கலைஞர் கருணாநிதி சிறப்பு அங்காடிக்குக் கிளைகள் ஏற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா?

[1972 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்து அனுப்பச் சொல்ல முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சூப்பர் மார்க்கெட் என்பதற்கு சிறப்பு அங்காடி நல்ல தமிழ்ப் பெயரா? அல்லது பேரங்காடி நல்ல தமிழ்ப் பெயரா? இதை அரசு பரிசீலனை செய்து எது நல்லது என்று அறிவிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** சிறப்பு அங்காடி என்று சொல்ல முடியும். சூப்பர் மார்க்கெட், மினி மார்க்கெட் என்று இரண்டு வகை இருக்கிற காரணத்தினால், ஒன்றை பேரங்காடி, மற்றொன்றை சிற்றங்காடி என்று சொல்லத் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிற்றங்காடியா, சிறப்பு அங்காடியா?

### கள்ளக்குறிச்சி வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்

* 830 வினா.—**திரு. ந. நாச்சியப்பன்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் செயல்படவில்லை என்றும், கடன் தவணை முறைப்படி சரியாக வசூலாகவில்லை என்றும் சொல்லப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம். சங்கம் 1—7—1964 முதல் செயல்படவில்லை. சங்கத்திற்குக் கொடுத்த கடனில் 1—3—1972-ல் அசல் ரூ. 2,910.46-ம் வட்டி ரூ. 4,333.70-ம் தவணைப்படி வசூலாகவில்லை.

(இ) சங்கத்தை செயல்படுத்த திருக்கோயிலூர் கூட்டுறவுத் துணைப் பதிவாளர் 7 இயக்குநர்களை புதிதாகத் தேர்ந்தெடுத்து சங்கத்தின் குழுவை 18—3—1970-ல் புதிதாக அமைத்தார். ஆனால் சிறிது காலத்திற்குப் பின் இச் சங்கம் மறுபடியும் செயல்படவில்லை. ஆகவே கூட்டுறவுத் துணைப் பதிவாளர் முதுநிலை ஆய்வாளரை பொதுச்சபையைக் கூட்டி நிர்வாகக் குழுவைத் திரும்ப அமைக்க அதிகாரம் அளித்திருக்கிறார். தேர்தல் அதிகாரி தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். கூட்டுறவுத் துணைப் பதிவாளர் தவணை கடந்த கடன்களை அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

10·00 ல் **திரு. ந. நாச்சியப்பன்:** தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் வீடு கட்டுவதற்கு வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் வீடுகள் கட்டப்படவில்லை; சங்கம் செயல்படாமல் இருக்கிறது. ஆகவே இந்தச் சங்கத்தை நல்லமுறையில் நடைபெறச் செய்ய மானியங்கள் வழங்க வேறு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1972 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தைப் பொறுத்த வரையில் நிலம் வழங்கப்பட்டதற்கு முழுத் தொகையும் இன்னும் தரப்படவில்லை. இந்தச் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட கடனும் இன்னும் வசூலாகவில்லை. கடனைத் தீவிரமாக வசூலிப்பதற்கு இப்போது கூட்டுறவுத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கடன் முழுவதும் வசூலான பின்புதான் மீண்டும் சங்கத்தை நல்லமுறையில் செயல்படுத்த முயற்சி செய்யப்படும்.

### சென்னையில் சுழலும் ஓட்டல்.

* 831 வினா.—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் பல மாடிக் கட்டட சுழலும் ஓட்டல் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சென்னையில் பல மாடிக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. அக் கட்டடத்தின் ஒரு மாடியில் சுழலும் ஓட்டல் ஒன்று அமைப்பதற்கான இடமும் வரைவு படத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, கட்டப்பட இருக்கின்ற இந்த ஹோட்டல் எத்தனை மாடிகளைக் கொண்டதாக இருக்கும்? அவை என்னென்ன மாதிரியாக இருக்கும்? வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்குமா அல்லது உள்நாட்டில் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தகுந்த வகையில் பம்பாயிலிருந்து திரு. சி. எஸ். கே. ராஜ் அவர்கள் அளித்த 65 மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டும் திட்டம் அரசினர் கவனத்தில் இருக்கிறது. அதுபற்றி இன்னும் இறுதியான முடிவு எதுவும் எடுக்கவில்லை. இன்னும் அமைச்சரவை மட்டத்தில் அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியிருப்பதால் கட்டப்படக்கூடிய அறைகள் எந்த மாதிரி இருக்கும், அறைகள் எந்த எந்த அளவில் இருக்கும் என்பன போன்ற விபரங்களை இப்போது தெரிவிப்பதற்கில்லை.

**THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Hogenakkal with its** waterfall is going to become one of the most famous and ideal tourist centres and all are awaiting to see that it becomes such a centre. So, may I know from the Hon. Minister whether such a hotel will be constructed there?

THE HON. THIRU K. RAJARAM : Does the hon. Member want this building to be constructed there? There is no such proposal?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த 65 மாடிக் கட்டடத்தைக் கடற்கரையில் கட்டுவதனால் நகரத்திற்குள் வரக்கூடிய காற்று தடைபடுவதாக இருக்கும். ஆகையால் அந்தக் கட்டடத்தை வேறு இடங்களில் அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்தக் கட்டடத்தை எந்த இடத்தில் அமைப்பது என்பது கூட இன்னும் சரியாக முடிவு செய்யப்படவில்லை. அதை மவுண்ட் ரோடு பக்கத்தில் அமைத்தால் வியாபார ஸ்தலமாகவும் இருக்கும் என்ற எண்ணம் குறிப்பில் இருக்கிறது. அதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, இந்த ஓட்டலை அரசாங்கம் கட்ட இருக்கிறதா அல்லது தனியார் யாராவது கட்டுவதற்கு முன்வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இந்தக் கட்டடத்தின் திட்டம் அறிவிக்கப்பட்டவுடன் தனியார் சிலபேர் அதைக் கட்டுவதற்கு அக்கறை காட்டி வந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய மூலதனத்திலேயே கட்டுவதற்குத் தயாராய் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, சுழலும் ஓட்டல் ஒன்றைக் கட்டப் போவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படிக் கட்டப்படுவதில், அந்தக் கட்டடம் முழுவதுமே சுழலுமா அல்லது மேலே இருக்கின்ற ஓட்டல் அறைகள் மட்டும் சுழலுமா? சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஓட்டல் அறைகள் சுழன்று கொண்டிருந்தால் சாப்பிடுகிறவர்களுக்கு வாந்தி வரும். எனவே, அரசாங்கம் அதைப்பற்றி ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஓட்டல் சுழலுவதில்லை. ஓட்டலுக்குப் போகிற சில பேர்கள்தான் சுழலுவதாக அறிகிறேன். (பலத்த சிரிப்பு).

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இப்படிப்பட்ட சுழலும் ஓட்டல் மேல்நாடுகளில் இருக்கின்றன. அங்கே யாரும் வாந்தி எடுப்பதில்லை. எனவே வாந்தி எடுத்துவிடுவார்கள் என்ற பயத்திற்காக அந்தக் கட்டடத்தைக் கட்டுவதை விட்டுவிடாமல் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இந்தச் சுழலும் ஓட்டல் என்பது ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவைதான் சுழலுமேயல்லாது சும்மா ராங்கராட்டினம் மாதிரி சுழலாது (சிரிப்பு) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, when 80 per cent of the people in this country are not earning even Re. 1 per day, is it the policy of the Central Government or the State Government to construct such costly and luxurious hotels for the benefit of a few people who come here as tourists and spend the money from the American P.L. 480 funds and not bring any foreign exchange ? Also, is it the intention of this Socialistic Government to spend such huge money on such things when more urgent things are needed for the people?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அந்தக் கட்சியினுடைய துணைத் தலைவர் திருமதி அனந்தநாயகி அவர்கள் இந்தக் கட்டடத்தைக் கட்டச் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் திட்டத்தை கைவிடச் சொல்கிறார்கள். எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், வசதி உள்ளவர்களிடம் இருந்து வாங்கி வசதி இல்லாதவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதுதான் சோஷலிஸ தத்துவம் என்று நான் அறிகிறேன். ஆகவே, வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய வசதி படைத்தவர்களிடமிருந்து வாங்கி, இந்த நாட்டிலே இருக்கின்ற 80 சதவீத ஏழை மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, ஒரு இன்டர்நாஷனல் ஓட்டல் கட்டுவதற்கு எலியட்ஸ் பீச்சில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதே, அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, எலியட்ஸ் பீச்சில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது. அது யாருக்கும் தரப்படவில்லை.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** தலைவரவர்களே, இந்த பல மாடி ஓட்டல்கள் மதுரை போன்ற பெரிய நகரங்களிலும் கட்டுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சென்னையிலே ஒரு ஓட்டலைக் கட்டுவதற்கு பல பிரச்னைகள்—பணப் பிரச்சனைகள் இருக்கின்றன. அதனால் மதுரைக்கு இம்மாதிரியான ஓட்டல் வர நீண்டகாலம் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1972 ஏப்ரல் 1

## சென்னையில் ஐந்து நட்சத்திர ஓட்டல்கள்

*832 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் கட்டுவதற்காகத் தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்த இடங்கள் எங்கெங்கே ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், அந்த ஓட்டல்களை நடத்துவதற்கு மத்திய அரசு கடன் உதவி அல்லது மானிய உதவி அளிக்க முன்வந்துள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அரசினர் மாளிகையில் ஆடம்சாலையில் 5 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது; அதைப் போன்று கிரீன்வேய்ஸ் சாலையில் 5 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமும் ஐந்து ஸ்டார் ஓட்டல்கள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசினர் மாளிகையில் ஆடம்சாலையில் உள்ள இடம் இன்றைய தினம் டெண்டர் விடப்பட்டு, டெண்டரை உபராய் ஓட்டல்காரர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த ஓட்டல்களை எல்லாம் தனியார்களுக்கு வாடகைக்கு விடுவதைவிட, கூட்டுறவுத்துறையில் நடத்த அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த ஐந்து ஸ்டார் ஓட்டல்களை நடத்துவதற்கு நிறையப் பணம் தேவைப்படுகிறது. அதனை கூட்டுறவுத் துறையில் நடத்துவதற்கு இயலாது. தனியார் துறையினர் நடத்துவதற்கு மத்திய அரசு ஓட்டல் குழு உதவி செய்கிறது. ஆகவே தனியார்கள் அந்த உதவியைப் பயன்படுத்தி, நடத்திக்கொள்வதற்காக அவர்களுக்கு வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர்வர்களே, இந்த உபராய் ஓட்டல் காரர்கள் அரசுக்கு மாதாமாதம் வாடகை தருகிறார்களா அல்லது ஒரு வருடத்திற்கு என்று வாடகை தருகிறார்களா? எவ்வளவு தருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, உபராய் ஓட்டல் காரர்களுக்கு டெண்டர் மூலம் விடப்பட்டு, குத்தகை மூலம் வருடத்திற்கு 7.7 லட்சம் ரூபாய் அரசுக்கு வாடகை வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Is it not a fact that the State Government had applied to the military authorities for giving a portion of the Island Ground for the construction of this five-star hotel?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நேற்றையதினம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யுத்த நினைவுச் சின்னத்திற்குப் பக்கத்தில் இருக்கிற நிலத்தில் கட்டலாமா என்ற எண்ணம் இருந்தது. அந்த எண்ணம் இப்போது கைவிடப்பட்டுவிட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: ஐந்து நட்சத்திர ஓட்டல் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐந்து நட்சத்திர ஓட்டலின் தகுதிகள் என்ன என்ன என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் சென்னையில் உள்ள அசோகா—ஐந்து நட்சத்திர ஓட்டல், சேலத்தில் உள்ள துவாரக இரண்டு நட்சத்திர ஓட்டல், திரு. கோவை செழியனுக்கு இரண்டுமே புரியும் என்று நினைக்கிறேன்.

DR. H. V. HANDE : The Hon. Minister said that they had sought for a place near War Memorial. There is no place near War Memorial except one abutting on Island ground. May I know from the Hon. Minister specifically what is the area they have sought for, what is the extent they have sought for and when was it sought for?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: யுத்த நினைவுச்சின்னத்திற்கு அருகில் கூவம் ரிக்ளமேஷன் செய்யப்பட்ட இடத்தில் ஓட்டல் கட்ட அனுமதி கேட்டார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்ததே தவிர எந்த முடிவுக்கும் வரவில்லை.

MR. SPEAKER : Dr. Hande, there is no ' Island Ground ' near War Memorial. War Memorial is somewhere in South Beach Road. Island Ground is far away. There is no connection.

திருமதி த. ந. அனந்தநாயகி: அமைச்சர் அவர்கள் ஐந்து ஸ்டார் ஓட்டல், 2 ஸ்டார் ஓட்டல் பெயர்களைச் சொன்னார்கள். சட்டசபை உறுப்பினர்களையே அங்கு அழைத்துப்போய் விளக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தமிழகத்திலே உள்ள ஓட்டல்கள் எல்லாம் எந்த எந்த ஸ்டார்களின் கீழ் வரும் என்பதை வரையறுக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது வரையறுத்தவுடன் உறுப்பினர்களே அங்கங்கே போய் அறிந்துகொள்ள முடியும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** சட்டமன்ற உறுப்பினர் விடுதி எந்த ஸ்டாரைப் பெற்றிருக்கிறது? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சூப்பர் ஸ்டாராக வரலாம்.

### சுற்றுலா மையங்கள்

* 833 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் சுற்றுலா கேந்திரங்களாக (Tourist Centres) எந்தெந்த நகரங்கள் உள்ளன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** விவர அறிக்கை ஒன்று மேசைமீது@ வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. எஸ். மணியன் :** இந்தப் பட்டியலில் சென்னை நகரம் இடம் பெற்றிருக்கிறது. திருச்சி நகரமும் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னைக்கு அடுத்த மாநகராட்சியாக இருக்கும் மதுரை இங்கே குறிப்பிடப்படவில்லை. மதுரைக்கு தினசரி பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். மதுரை நகரத்தையும் ஒரு சுற்றுலா கேந்திரமாக அமைப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை மத்திய சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டவைதான். நாம் சுற்றுலா வாரியம் என்று அமைத்து அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள் ஆகியவர்களைச் சந்தித்து எந்த எந்த இடங்களை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கலாம் என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்குப் பிறகு எல்லா இடங்களும் நல்ல முறையில் விளம்பரப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. பழனிவேலன் :** நாமக்கல்லுக்குப் பக்கத்தில் உள்ள கொல்லி மலையில் அறப்பள்ளீசுவரர் கோயில் இருக்கிறது. ஒரு நீர்வீழ்ச்சியும் இருக்கிறது. நாமக்கல் ஒரே கல்லிலான மலை—திப்புசுல்தான் கட்டிய கோட்டை இருக்கிறது. புகழ்பெற்ற பல்லவர் குகைக்கோயில்கள் இருக்கின்றன. ஒரு அனுமார் கோயில் இருக்கிறது . . . .

---

@ 115-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாமக்கல்லைப்பற்றி உங்களுக்கும் தெரியும், அமைச்சருக்கும் தெரியும். நாமக்கல்லை ஒரு சுற்றுலா கேந்திரமாக அமைப்பார்களா என்று கேள்வியைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தமிழ்நாட்டில் பல இடங்கள் இருக்கின்றன. திருத்தலங்கள், சரித்திரப் புகழ்பெற்ற கோட்டைகள், இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி கட்டப்பட்ட கோயில்கள்—புழலேரிக்குப் பக்கத்தில் உள்ள கோயில் அதுபோன்றது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்—எல்லாம் இருக்கின்றன. எல்லாம் வளர்ச்சிபெறுகிற காலத்தில் நாமக்கல்லும் வளர்ச்சிபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *First-aid Boxes in Taxis*

* 834 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the police in Madras City is aware that taxis and other public carriers do not keep first-aid boxes in their vehicles; and

(*b*) if so, the steps taken thereon ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) வாடகை வண்டிகளில் முதலுதவிப் பெட்டிகளைப் பொருத்த வலியுறுத்தப்படுகின்றனர். பொருத்த தவறியவற்றின் மீது வழக்கு தொடரப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ் :** இது சம்பந்தமாக ஒழுங்கான செக்கிங் நடக்கவில்லை என்கிற புகார்களுக்கு இடம் கொடுக்காமல் தக்க முறையில் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இது சம்பந்தமாக ஒழுங்காக நடவடிக்கை எடுத்திருப்பதினால்தான் 1971-ஆம் ஆண்டில் 250 லாரிகளும், 35 பேருந்துகளும், 19 வாடகை வண்டிகளும் இந்தக் குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

### *Automatic signal lights in Madras*

* 835 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Madras City Police and made arrangements to synchronise the automatic signals at Madras City to regulate vehicular traffic; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) அண்ணாசாலையில் ஸ்பென்ஸர்ஸ் அருகிலும் வெலிங்டன் அருகிலுமுள்ள நாற்சந்திகளில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கிப் போக்குவரத்து அடையாள விளக்குகளை ஒரே காலத்தில் இணைந்து இயங்கச் செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று சென்னை மாநகர சாலை மேம்பாடு போக்குவரத்து திட்டக்குழுவினால் ஆலோசிக்கப்பட்டு கைவிடப்பட்டது.

THIRU N. DENNIS : May I know whether this automatic light system has improved the flow of traffic and reduced the rate of accidents?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Yes, Sir.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த ஆட்டமாடிக் சிக்னல் போட்ட பிறகு விபத்துகள் அதிகமாகியிருக்கிறதா? குறைந்திருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** விபத்துக்களைக் குறைக்க வேண்டும் என்றுதான் இந்த ஆட்டமாடிக் சிக்னல்கள் போடப்பட்டு வருகின்றன. விபத்துகள் குறைந்துதான் இருக்கின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆட்டமாடிக் சிக்னல் எவ்வளவு நேர இடைவெளியில் மாறி மாறி வரும் என்பது கொள்கை அளவில் நிர்ணயிக்கப்படுகிறதா? கார் ஓட்டிகளுக்கு அது இடைஞ்சலாக இருப்பதாக ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியில்—நாற்சந்திப் பகுதிகளாகப் பார்த்து இவைகள் அமைக்கப்படுகின்றன.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply stated that it was not possible to connect the two automatic signals at the moment. Will it not be possible for the Traffic Department to properly synchronise? When going along Edward Elliots Road, there is one stop; the rate of speed could be only 20 miles per hour. Immediately there is another stop. Can it not be done as in Bombay and other cities, so that when there is green signal at one place it will be so at other places also and traffic could flow smoothly; if there is green signal at one point, we could go on a particular rate of speed without being stopped at the next signal. That is what is happening in Bombay and other cities. Can we not synchronise like that here?



THE HON. THIRU S. RAMACHANDRAN : Owing to mixed traffic in all main roads and also due to pedestrian crossings and due to extra expenditure that is likely to be involved, for the time being the proposal is shelved.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக தானியங்கி அடையாள விளக்குகள் மதுரையில் ஏராளமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் வைக்கப்பட வேண்டிய இடங்கள் இருக்கின்றன. ஆகவே, இதை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் பொருத்துவதற்கு படிப்படியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## *Mutts of Kanchi Sankaracharya*

* 836 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Mutts of Kanchi Sankaracharya have been drawn under the purview of the Hindu Religious Endowment Department;

(*b*) if not, the reasons; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ) இம்மடத்தின் சகாயத்தொகையை இதன் வருவாய் ரூ. 3,74,731 மீது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே காஞ்சி சங்கராச்சாரியார் மடம்போல எத்தனையோ மடங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. மடாதிபதிகளுக்கு இந்தியா பூராவும் சுற்றிவர டெல்லி சர்க்கார் இலவச ரயில்வே பாஸ்கூட அளித்திருக்கிறார்கள். எனவே, மடாலயங்களின் சொத்துக்களைக் கணக்கெடுத்து, நமது அரசு உபரியாக இருப்பதைக் கைப்பற்றுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, எத்தனை மடங்கள் என்கிற கணக்கு விவரம் இல்லை. மடத்தினுடைய சொத்துக்களிலிருந்து செலவு செய்யக்கூடியவற்றை அறநிலைய ஆணையாளரின் ஒப்புதலைப்

பெற்றுத்தான் செலவு செய்கிறார்கள். அந்த மடங்களையெல்லாம் அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான் நிர்வாக அதிகாரிகளைப் போடவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவர் அவர்களே, அறநிலைய ஆணையாளரின் ஒப்புதலைப் பெற்றுத்தான் செலவு செய்யப்பட வேண்டுமென்று கூறுகிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல் வேறாக இருக்கிறது. செய்யப்பட்ட செலவுகள் அறநிலைய ஆணையாளருக்கு அறிவிக்கப்படுகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அப்படியும் சில இடங்களில் நடக்கிற காரணத்தால்தான், ஆங்காங்கே நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is this Government aware (i) that the Kanchi Mutt is one of the poorest mutts in Tamil Nadu and (ii) the Head of the Kanchi Mutt is leading the most ideal life, living in a hut, not going in trains, buses or cars and not using electricity, but going on foot and living on only three morsels of food everyday and is there necessity to interfere in such cases unnecessarily? If there is need for interference we have no objection.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, காஞ்சி மடத்திற்கு 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக வருமானம் வருவதாகத் தெரிகிறது. இது ஏழை மடம் என்று கூற முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் ரயிலில் ஏறுவதில்லை. கால்நடையாகத்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மடங்களைவிட குன்றக்குடி மடத்தைப்பற்றிக் குறைகள் வந்திருக்கிறதே அதுபற்றி ஆராய்ந்து சொல்ல இதுவரை ஏதாவது கமிட்டி போடப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, கால்நடையாகச் செல்வதற்கும், கணக்குகளைச் சரிப்பார்ப்பதற்கும் சம்பந்தம் இல்லை (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு). இரண்டும் சரியாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நிர்வாக அதிகாரிகளைப் போட வேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றி வருகிறோம்.



### கிறித்துவ மத நிறுவனங்கள்.

*837 வினா—திரு. என். கிட்டப்பா, புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறித்துவ மத ஸ்தாபனங்கள், மாதா கோயில்கள் ஆகியவற்றினைக் கண்காணிக்க தனியே ஒரு கிறித்துவ அறநிலையத்துறை அமைக்கப்பட்டிருக்கின்றதா?

(இ) இல்லையெனில், அந்த ஸ்தாபனங்களின் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எப்படிக் கண்காணிக்கப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) கிறித்துவ மத ஸ்தாபனங்கள், மாதா கோயில்கள் ஆகியவற்றினைக் கண்காணிக்க ஒரு கிறித்துவ அறநிலையத் துறை அமைக்கப்படவில்லை.

(இ) கிறித்துவ தேவ ஆலயங்களின் சொத்துக்கள், அந்தந்த பகுதியில் உள்ள கிறித்துவ பாதிரிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் வினாவின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வினா உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிவிப்புகள்.

#### (அ) அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1972-73-ம் ஆண்டுக்கான அவையுரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினொன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட பதினொன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. ஏ. சுப்பிரமணியம்.
2. டாக்டர் எச். வி. ஹாண்டே.
3. திரு. கே. கந்தசாமி.
4. திரு. சோ. அழகர்சாமி.
5. திரு. கே. பி. கோபால்.
6. திருமதி ஜோதி வெங்கடாசலம்.

(பேரவைத் தலைவர்)

7. திரு. ரா. ரா. முனுசாமி.

8. திரு. ஏ. எம். இராஜா.

9. திரு. கு. பாலகிருட்டிணன்.

10. திரு. ச. மு. பழனியப்பன்.

11. திரு. நா. நாச்சிமுத்து.

12. திரு. க. மு. கதிரவன்.

13. திரு. ஜே. எஸ். இராசு.

14. திரு. எம். ஏ. லத்தீப்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1972-73-ம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப் பேரவையின் 183 (4) விதியின்கீழ் பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஆ) அவையினர் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1972-73-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்கு (House Committee) சட்டப் பேரவையின் பதின்மூன்று உறுப் பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப் பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்:—

1. திரு. எஸ். அழகுத்தேவர்.

2. திரு. த. சோனையா.

3. திருமதி வி. ப. பழனியம்மாள்.

4. திரு. தொ. ப. சீனிவாசன்.



[பேரவைத் தலைவர்]

5. திரு. அ. ஆறுமுகம்.

6. திரு. வீ. செ. கோவிந்தசாமி.

7. திரு. இரா. இராமலிங்கம்.

8. திரு. செ. பெருமாள்.

9. திரு. எ. சுவாமிதாஸ்.

10. திரு. என். மருதாசலம்.

11. திரு. எம். சுரேந்திரன்.

12. திரு. கே. எ. வகாப்.

13. திரு. கு. அ. பொம்மன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1972-73-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)-வது விதிக்கிணங்க,

1. திரு. துரை கோவிந்தராசன்.

2. திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்.

3. திரு. ச. சங்குமுத்து தேவர்.

4. திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி.

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்த சட்டமுன்வடிவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்]

### 3. அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்து சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்த சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### 4. அறிக்கைகள் அளித்தல்.

"வேலை வாய்ப்பு பயிற்சி", "தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்" ஆகியவை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU K. VEZHAVENDAN: Sir, I have pleasure to present two Reports today of the Estimates Committee, one on "Employment and Training" and the other on "Labour including Factories".

### 5. தனியார் அலுவல்கள்.

#### (1) சட்டமுன்வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1971)—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது திரு. க. சுப்பு அவர்கள் பேசுவார்கள்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலே மாணவர்களும் பங்கு பெற வேண்டுமென்ற அடிப்படையில் திருத்தச் சட்டத்தில் ஏற்கெனவே கருத்துக்களைக் கூறியிருக்கிறேன்.





[திரு. க. சுப்பு]

பல்கலைக் கழக நிர்வாகத்தில் மாணவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டுமென்கிற கொள்கை ஏறக்குறைய எல்லா இடங்களிலும் பரவி, கோரிக்கை அதிகமான அளவில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ராஜஸ்தானத்தில் சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள் அளித்த உரையில் இது அரசாங்கத்தின் கொள்கையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்க முதலமைச்சர் திரு. ரே அவர்களும் இதை வலியுறுத்தி கேரள மாநிலத்தை முன்மாதிரியாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். கேரள மாநிலத்திலே செனட்டிலே மாணவர்களின் பங்கு அதிகப்படுத்தப்பட்டு, அகடமிக் கவுன்சிலிலும் மாணவர்களுக்கு பங்கு கொடுக்கவேண்டுமென்பதற்காக புதிய சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அஸ்ஸாம் சட்டமன்றத்திலேகூட பல்கலைக் கழக நிர்வாகத்திலே மாணவர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அதுபோல தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்களிலும் மாணவர்களுக்கு இடம் அளிக்கக்கூடிய வண்ணம் பாராளுமன்றத்திலே ஒரு அங்கத்தினர் அவர்கள் இந்தக் கொள்கையை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கையும் அதுவாகத்தான் இருக்கிறது. இப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயத்தை நாம் உடனடியாகச் செய்யவேண்டும்.

பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலே மாணவர்கள் பங்குபெற வேண்டியதன் அவசியம் பற்றி அனைவருக்கும் தெரியும். பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலே குறைபாடுகள் காணப்படுகின்ற நேரத்திலே அதைச் சுட்டிக்காட்டும் போதெல்லாம், பல்கலைக் கழகம் "அடானமஸ் பாடி" என்றும், அதில் தலையிடுவதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லையென்றும் கூறிவிடுகிறார்கள். பல்கலைக் கழகத்தின் தணிக்கை அறிக்கையை எடுத்துப் பார்த்தால்கூட இந்தச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதன் அவசியம் தெற்றென விளங்கும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக தணிக்கை அறிக்கையை எடுத்துப் பார்த்தால், அங்கு வைத்திருக்கும் கணக்கும், வவுச்சர்களுக்கும் ஒத்துவரவில்லை. அங்கு இருக்கிற ரசீதுகளுக்கும் வவுச்சர்களுக்கும் கணக்கு காட்ட முடியவில்லை. பல்வேறுவிதமான ஆட்சேபணைகள் கிளப்பப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு விதமான கோளாறுகள் நடைபெறுகின்ற நேரத்தில் அதை எதிர்த்துக் கேட்பதற்கு யாரும் இல்லாத நிலைமை இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்ல; பொதுவாக எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் காணப்படுகின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்கும், மாணவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்பு இல்லாத முறை இருக்கின்ற

[திரு. க. சுப்பு]

காரணத்தால்தான், அதிருப்தி ஏற்படுகின்ற நேரங்களில் அது போராட்டமாக வெடிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாணவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கும், பல்கலைக் கழக நிர்வாகத்தில் ஏற்படுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்துவதற்கும் மாணவர்கள் சார்பில் இடம் அளிக்க வேண்டும். இப்போது வினாத்தாள்களை விரட்டுவதும், விடைத்தாள்களை விரட்டுவதுமான கேடுகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10–30 அப்படிப்பட்ட கேடுகள், கோளாறுகள் இப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிலும் பள்ளியிலிருந்து கல்லூரி வகுப்புக்கு சேரவேண்டுமானால் அதற்குக் கூட பணம் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படை சர்வசாதாரணமாகி விட்டது. இதையெல்லாம் சட்ட மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல முறை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதை மாற்றுவதற்கு சரியான திட்டம் என்னவென்றால் மாணவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகத்தில் இடம் அளிக்க வேண்டும் என்பதை சட்டமாக்கிக் கொடுத்து அமுல்படுத்துவது நியாயமாக இருக்கும்.

அண்டை மாநிலங்கள் அதை அமுல்படுத்தும்போது தமிழகத்தைப் பொறுத்தவரை எந்தத் தகராறும் இருக்க முடியாது. இந்தப் பல்கலைக் கழகத்தில் எவ்வளவுதான் நாம் சரிவர நடத்துவதில் கட்டுப்பாடு செலுத்தும் முறையில் குழு போட்டு கணக்குகளைப் பார்க்கலாம் என்று விதிகள் இருந்தாலும்கூட, இதுவரை எந்தக் குழுவும் போய் கணக்குகளைப் பார்த்து ஊழல் செய்வதைக் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட முறையில் நாம் தலையிட முடியாமல் இருக்கிறது. உயர் மட்டத்தில் இருப்பவர்களை எல்லாம் எந்த அளவுக்கு நமக்கு வேண்டியவர்களாக்கிக் கொள்வது, "ப்ரோ-சான்லலரை" வேண்டியவர் ஆக்கிக் கொள்வது என்பதில் மிகக் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

ஆட்சியில் யார் இருந்தாலும், ஆளும் கட்சியில் இருப்பவர்களை தங்களுக்கு உரியவராக்கிக் கொள்வதில் தவறில்லை. ஆனால் தவறான நிர்வாகத்துக்கு இட்டுச் செல்லக் கூடாது. ஒத்துழைப்பு உணர்ச்சியுடன் இருக்கவேண்டும். மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்தில் இடம் அளிக்கவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள நாம் அதற்கு ஏன் சட்ட வடிவம் கொடுக்கக் கூடாது என்ற அடிப்படையில்தான் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இந்தத் தீர்மானத்தின் அடிப்படைக் கருத்துக்களை மாமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, நம் அருமை நண்பர் சுப்பு அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை முழு மனத்துடன் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லலாம் என்று கருதுகிறேன்.



(திரு. செ. கந்தப்பன் தலைமை)

இன்றைய தினம் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பிரின்சிபால்கள் இருக்கிறார்கள். இந்தப் பிரின்சிபால்கள், அவர்கள் பிரின்சிபாலாக இருக்கக்கூடிய காரணத்தால் யுனிவர்சிடியில் இருக்கக்கூடிய செனேட்டில் இடம் பெறுகிறார்கள். அது மட்டுமின்றி சட்ட மன்ற உறுப்பினர்களால் பல பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அது மட்டுமின்றி, பட்டதாரித் தொகுதி, ரிஜிஸ்டர்டு கிராஜுவேட்ஸ் மூலமாக பல பேர் அங்கே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். செனெட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் கூர்ந்து கவனித்தால் ஒரு விஷயம் நன்றாகப் புலப்படும். அங்கு, தைரியமாக ஏதாவது அரசாங்கத்தினுடைய கொள்கைகளுக்கு எதிராக, நாட்டு நன்மைக்காக விமரிசனம் செய்யக்கூடிய துணிவு பெற்றவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால், 2—3 பேர் ரிஜிஸ்டர்ட் கிராஜுவேட்ஸ் மூலம் வந்திருக்கும் பிரதிநிதிகள் தான். பிரின்சிபால்கள், அவர்கள் தைரியமாக எடுத்துச் சொல்வதற்கு அங்கு சங்கடமான நிலைமையை நாங்கள் பார்க்கிறோம். இருந்தாலும், பிரின்சிபால்கள் வைஸ்-சான்சலருக்கு ஒரு வகையில் கட்டுப்பட்டிருக்கிறார்கள். இலாகாவிற்கு ஒரு வகையில் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

யுனிவர்சிடியிலிருந்து "க்ராண்ட்ஸ்" வரவேண்டும். அதே நேரத்தில் அரசாங்கத்தில் இப்போது பி.யு.சி. போன்ற வகுப்புகளை இலவசமாக்கி மாணவர்களுக்கு செய்திருப்பதால் "கிராண்ட்ஸ்" வரவேண்டிய காரணத்தால் இந்தக் கல்லூரிகள் ஓரளவுக்கு, முக்கால் பாகம், அரசாங்கத்திற்குத் தான் கட்டுப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட துணை வேந்தர்களுக்கு கட்டுப்பட்டிருக்கிறார்கள். அவர்களை தனிப்பட்ட வகையில் நாங்கள் விமரிசனம் செய்யக் கூடாது. ஆனால் இன்றைய துர்ப்பாக்கியமான நிலைமை Vice-Chancellors are practically appointed by the Governm·nt என்ற அளவிற்கு, துணை வேந்தர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு நிலைமை, எந்த யுனிவர்சிடியை எடுத்தாலும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டிருக்கக்கூடிய துணை வேந்தர்கள், அரசாங்கத்துக்கு கட்டுப்பட்டுள்ள பல்கலைக் கழகம், துணை வேந்தர்களுக்குக் கட்டுப்பட்ட பிரின்சிபால்கள் போன்றவர்களைப் பார்க்கும் நேரத்தில், இந்தக் கருத்துகளை தைரியமாக எடுத்துப் பேச முடியுமா என்று பார்த்தால், ஏதோ 4—5 பேர், ரிஜிஸ்டர்ட் கிராஜுவேட்ஸ் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களுக்குத்தான் துணிவிருக்கிறது என்பதை ஆணித்தரமாகச் சொல்ல முடியும். இதில் எந்த நண்பர்களுக்கும் கருத்து வேற்றுமை இருப்பதற்கு இடமில்லை என்று கருதுகிறேன், ஒரு கோணத்தில் பார்க்கும் நேரத்தில்.

இன்னொரு கோணம் என்னவென்றால், அங்கே இருப்பவர்கள் நீண்ட காலம் கல்வித் துறையில் இருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கக்கூடிய இளைஞர் சமுதாயத்துக்கு நல்ல நல்ல கருத்துக்களைச் சொல்லக்கூடிய, குறைகளை

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

எடுத்துச் சொல்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்றால், விரல் விட்டு எண்ணக் கூடியதாகத்தான் இருக்கிறது. ஏனென்றால் மாணவர்களிடையே—கிறிஸ்டியன் காலேஜ் மாணவர்களிடையே, லயோலா காலேஜ் மாணவர்களிடையே, பிரெசிடென்சி காலேஜ்—எந்தக் காலேஜை எடுத்துக்கொண்டாலும் மாணவர்களுக்கு பல பிரச்னைகள், பல பிரச்னைகள் அவர்களுக்குத் தோன்றுகின்றன. அவை மேலிடத்தில் இருப்பவர்களுக்குத் தெரியவேண்டும் என்ற அடிப்படையில் தெரிவிக்க மாணவர்களுக்குச் சரியான வாய்ப்புகள் இல்லை. ஆகவே மாணவர்களுக்குச் என்ன பிரச்னை இருக்கிறது, அவர்களின் குறைகள் என்ன என்று அந்த செனேட் அல்லது அகாடமிக் கவுன்சில் தலைவர் யாராலாவது பார்த்துச் செய்ய முடியுமா என்றால், மாணவர் பிரதிநிதிகளால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால்தான் முடியும்.

இன்று, உதாரணமாகப் பல அம்சங்களை எடுத்துப் பார்க்கலாம். இங்கிலீஷ் சிலபஸை எடுத்துக்கொண்டு பாருங்கள். சரித்திரம் சிலபஸை எடுத்துப் பாருங்கள். அதேபோல் எகனாமிக்ஸ் சிலபஸைப் பாருங்கள். பொருளாதாரம் அது ஒரு மாதிரியான பொருளாதாரமாகத்தான் அங்கே சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நம் நாட்டில் இருக்கும் பொருளாதாரம்—எகனாமிக்ஸ்—சரியோ, இல்லையோ அது தனிப்பட்ட பிரச்னை. ஆனால் இன்றைய தினம் பொருளாதார அடிப்படையில் பரவலான நடைமுறையைக் கையாண்டிருக்கிறார்கள். அது எந்தப் பொருளாதாரமாக வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். ஆனால் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு முற்றிலும் வேறான, பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட பொருளாதாரத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொருளாதாரத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கு நாட்டின் அரசியல் சூழ்நிலையில் நிச்சயமாக இடமில்லை. அந்தத் துறையில் "எகனாமிக் பிரிசெப்ட்ஸ்—எகனாமிக் கான்செப்ட்ஸ்" என்று சொல்வோம்.

அந்த மாதிரி நடைமுறைக்கு வேறான எண்ணங்களை அங்கே சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக—அந்த எகனாமிக்ஸ் படித்தவர்—வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி அமைச்சரின் கீழே வேலை செய்யவேண்டும். அமைச்சராக இருப்பவர் சொல்லும் கொள்கைக்கும்—நடைமுறையில் கொண்டுவரவேண்டுமென்ற கொள்கைக்கும்—அவர் எகனாமிக்ஸ் எம்.ஏ., எகனாமிக்ஸ் பி.ஏ.-இல் படித்த கருத்துக்களுக்கும் முற்றிலும் வேறுபாடாக இருக்கக்கூடிய காட்சியைப் பார்க்கும் நேரத்தில், மாணவன் எழுந்து கேட்கிறான், 'இதை எதற்காகப் படிக்கவேண்டும்?' என்று.



[டாக்டர் எச். வி. ஹாண்டே]

அதே வகையில் சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும்சரி, இந்தியன் ஹிஸ்டரி, ஏன்சியண்ட் ஹிஸ்டரி, மாடர்ன் ஹிஸ்டரி என்று பல சிலபஸ் இருக்கிறது. செனேட்டில் இருப்பவர்கள் யார்? 1930-ல் 1935-ல் படித்தவர்கள். நாங்கள் உட்கார்ந்திருக்கிறபோது இருந்த முறை " In my good old days I had read those things அது ஒரு பாடம், இப்போது இல்லை. அதுமாதிரி, பத்தாம் பசலி கருத்துக்கள் அந்த மன்றத்தில் இருக்கிறது. அந்த விவாதத்தை எடுத்துப் பாருங்கள். நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அந்த ஒரு சரித்திரத்துக்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கும். அதே முறையில் விஞ்ஞானத்தை எடுத்துக் கொண்டாலும் நன்றாகத் தெரியும்—படிக்கக் கூடிய விஞ்ஞானத்திற்கும், படித்து விட்டு வெளியே வந்த பிறகு நடைமுறையில் ஈடுபடவேண்டிய விஞ்ஞானத்துக்கும் மைல் கணக்கான— "There are miles of difference" தூரம் இருக்கும் காட்சியைப் பார்க்கும் நேரத்தில், மாணவன் 'நான் எதற்காகப் பத்தாம் பசலிக் கருத்துக்களைப் படித்து, நடைமுறையில் கொண்டுவர முடியாத துர்பாக்கிய நிலையில் எதற்காக அதைப் படிக்க வேண்டும்?' என்று கேட்பதில் என்ன தவறு இருக்கிறது?

நான் பல கல்லூரிகளுக்குப் போய் மாணவர்களிடத்தில் பேசுவது உண்டு. என்னை அவர்கள் அழைக்கிறார்கள். நான், 'உங்கள் குறை என்ன?' என்று கேட்பது உண்டு. மாணவர்கள் சில ஜர்னல்ஸ் கொண்டுவருகிறார்கள். லயோலா காலேஜ் மாணவர்கள், கிறிஸ்டியன் காலேஜ் மாணவர்கள், அவைகளை முற்போக்கு ஜர்னல்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளலாம்; சில கட்சிகள் மறுக்கலாம். இருந்தாலும் அதைப் பார்க்கும் நேரத்தில், ' The entire educational system should be scrapp'd என்று மனவேதனையுடன், தங்கள் கொள்கைகள் வெற்றி பெற முடியவில்லை, தேர்வு பெற்று வந்தபிறகு நம் நிலைமை என்ன என்ற கவலையுடன் இருப்பதால், ஆங்கிலத்தில் சொல்வதென்றால், 'ஃப்ரஸ்ட்ரேஷன்' அடையப் போகிறோம் என்ற உறுதியான நம்பிக்கை மாணவர்களிடத்தில் இருப்பதால், மாணவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், " The entire educational system is antiquated and it should be scrapped என்று கோபத்துடன் எழுந்து சொல்லுகிறார்கள். அதில்லாமல், இன்றைய தினம் "சப்ட்யூட்" புரட்சி என்று சொல்லுமளவிற்குப் பரவலான காட்சியைப் பார்க்கிறோம். அந்த அளவு 'சப்ட்யூட்' புரட்சிக்கு காரணம் பல்கலைக் கழகத்தில் நாம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லை என்று நிச்சயமாகச்சொல்ல முடியும். மாணவர்களிடையே வளர்ந்து வரும் இந்த அதிருப்தி படிப்படியாக வளர்ந்து பயங்கர

நிலைமைக்குக் கொண்டுவந்து வெடிக்கும் அளவிற்கு—எந்தக் கட்சி பிறகு தலையிட்டாலும்கூட—அது வெடித்து வரக்கூடிய அளவிற்கு ஒரு நிலைமை ஏற்படுமே தவிர, வேறொன்றுமல்ல.

ஆகவேதான் மாணவர்கள் இதிலே குறிப்பிடுவது நியாயம் என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். இன்றைய தினம் பயங்கரமான வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஹிஸ்டரி, இந்த எகனாமிக்ஸ், இந்த ஜியாகரபி எதையெடுத்தாலும் படித்துவிட்ட பிறகு வேலை வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்கிறார்கள். வேலை வாய்ப்புக்கு ஏற்றாற்போல் நல்ல முறையிலே மாணவர்களுக்குக் கல்வி முறை அமையவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . .

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள பாடத் திட்டங்களை மாணவர்கள் அங்கீகரிக்கவில்லை என்றும் மாணவர்கள் அதை வெறுக்கிறார்கள் என்றும் அது அவர்களுக்குப் பயன் உள்ளதாக இல்லை என்றும் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் டாக்டர் ஹாண்டே அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். புதிய பாடத் திட்டங்கள் வேண்டுமென்றால் என்ன பாடத் திட்டங்கள், எந்த முறையிலே அமைத்து நடத்தலாம், எப்படி நடத்தினால் நீங்கள் சொல்கிற வேலையில்லாத் திண்டாட்டம் போகும் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் அதைச் சொல்வதற்குள் மதிப்புக்குரிய மொய்தீன் அவர்கள், அன்புக்குரிய மொய்தீன் அவர்கள் அவசரப்பட்டுவிட்டார்கள். ஜாப் ஓரியண்டட் என்ற முறையிலே நல்ல முறையில் வேலை வாய்ப்பு உள்ள திட்டங்களை உண்டாக்க வேண்டும் . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஜாப் ஓரியண்டட் என்றால் வேலை வாய்ப்புக்களை உண்டாக்குகிற என்ற பொருள் அல்ல. ஜாப் ஓரியண்டட் என்றால் வேலைகளையும் தாங்களே உருவாக்கிக்கொள்கிற திறன்தரும் பயிற்சி என்றுதான் பொருள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அரசாங்கம் உருவாக்கிக் கொடுக்கிறதோ, தானே உருவாக்கிக் கொள்வதோ என்ற பிரச்னை வேறு. நான் சொல்வது அந்த வாய்ப்பே இல்லையென்றால் பழைய பூகோளத்தைப் படித்து எந்த வகையிலே பயன் கிடைக்கும் என்ற ஆராய்ச்சியிலே ஈடுபட்டால் புரிந்துகொள்ளலாம். ஜாப் ஓரியண்டட் என்று சொன்னால் அமைச்சர் சொன்னதில் ஒரு பகுதியை நான் ஒத்துக்கொள்கிறேன், அவர்களே உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்பது வேறு, ஆனால் அதே நேரத்திலே இன்னொரு பகுதி இருக்கிறது, அதுதான் அரசாங்கம் வேலைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அரசாங்கம் பல வேலைகளைச் சொல்



கிறார்கள், அப்படிப்பட்ட வேலைகளுக்குச் சரியாக 'பிட் இன்' ஆகிற அளவுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார்களா என்றால் இல்லை. இன்னும் விளக்க வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும், கல்வியமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். "Education department also has ssed itself to this take இந்தப் பணியை எப்படிச் செய்வது என்பதுபற்றி ஆராய்வதற்கு அதைத் தொடுவதற்குத் தொடங்கியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும்கூட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வி இலாகாவோ பல்கலைக் கழகமோ, அக்கடமிக் கவுன்சிலோ, செனேட் அவையோ அதைப்பற்றி கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். சென்ற ஆண்டு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கல்லூரிகளில் உள்ள புரபசர்களையெல்லாம் அழைத்து கல்வியிலே சொல்லித்தரப்படுகிற முறையிலே எப்படி எப்படி மாற்றலாம் என்ற வகையிலே ஆராய்ந்து கம்ப்ளீட் ரீஓரியண்ட் செய்வதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள், அந்தக் குழு அறிக்கை கொடுத்திருக்கிறார்களா என்பது தெரியவில்லை. இது சயின்டிபிக் ஆக இருப்பதால் முழுமையும் எனக்குச் சொல்வதற்குக் கஷ்டமாக இருக்கும். அவர்கள், மாணவர்கள் அடிக்கடி கோரிக்கைகளைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள், பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே நல்ல வேலை வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய கல்வியாக மாற்றிப் பயனுள்ளதாக இருக்கக்கூடிய அளவுக்கு, மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நோயாளிக்கு சிகிச்சை அளிக்கவேண்டுமென்று திரு. மொய்தீன் அவர்கள் சொல்லலாம். என்ன என்ன சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று இலாகா செய்வார்கள். இதைப்பற்றி இந்த இலாகா நல்ல முறையிலே செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மாணவர்களிடையே நீங்கள் செய்யவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. வெளிநாட்டிலே இருக்கின்ற கல்வியின் தரத்தை நாம் பார்க்கிறோம். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷியா என்று எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் பல முற்போக்கான காரியங்கள்—சந்திர மண்டலத்திற்குப் போவதானாலும் விமானத்தை ஓட்டுவதானாலும்—செய்வதற்கேற்ற வகையிலே பயிற்சி கொடுக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே ஏரோநாட்டிக்ஸ், விமானம் எப்படிச் செய்வது என்பதுபற்றி எத்தனை பேர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறார்கள்? எத்தனை பேர்களுக்கு செய்ய முடியும்? கப்பல் கட்டுவது, கப்பல் ஆர்கிடெக்சர், என்று சொல்கிறார்களே எத்தனை பேர்களுக்கு அதைப்பற்றிச் சொல்லிக்கொடுக்கிறார்கள்? விசாகப்பட்டினம் யார்ட்டிலே உத்தியோகம் பார்ப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து அவர்களை நாம் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். இங்கே திறமையுள்ளவர்கள் இல்லையா? இருக்கிறார்கள். திறமை இருக்கிறது, அதை எப்படி நல்ல

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

முறையிலே இந்த மண்ணிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பார்த்து பல பயிற்சிகள்—ரஷியாவை எடுத்துக்கொண்டாலும் வேறு எந்த டெமாக்ரடிக் கன்ட்ரியை எடுத்துக்கொண்டாலும் எது எதிலே அங்கே திறமையுள்ளவர்கள் இருக்கிறார்களோ அவர்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள், ஜப்பானிலும் அப்படித்தான் செய்கிறார்கள்—கொடுத்து வாய்ப்புக்கொடுக்கக் கூடிய முறையிலே மாற்றியமைக்க வேண்டும். நாங்கள் இப்படிச் சொல்வது ஒரு பக்கம் இருக்கட்டும். மாணவர்கள் சொல்கிறார்களே அதை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் குறைபாட்டை எப்படிப் போக்குவது . . .

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, நான் கனம் ஹாண்டே அவர்களிடம் கேட்டது மாணவர்கள் இந்தப் பாடத் திட்டங்கள் சரியில்லை இந்தத் திட்டத்திலே பயன் இல்லை பிரயோஜனம் இல்லை என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள், எந்த எந்த மாற்று முறைகள் வேண்டும், எந்த எந்தப் பாடங்கள் இருக்க வேண்டுமென்று மாணவர்கள் அவர்களிடம் ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? என்ன வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியதிலே டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஒப்புதல் ஏற்பட்டிருக்கிறதா? எந்தப் பாடங்கள் எந்த எந்த முறையிலே அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்? அதையெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னால் இந்தப் பேரவை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சிலபஸ் பொறுத்த வரையில் என்ன என்ன செய்ய வேண்டுமென்று பட்டியலே என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் அவர்கள் சொல்கிறார்கள், அகடமிக் கவுன்சிலிலே இரண்டு இடமாவது கொடுங்கள், செனேட்டிலே இரண்டு இடமாவது கொடுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்களுக்கு இடம் கொடுத்தால் தைரியமாகப் பேச முடியும்.*

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். வெட்டர்னரி காலேஜிலே நடந்துகொண்டிருக்கிற ஸ்ட்ரைக் நமக்குத் தெரியும். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை, இரண்டு மாணவர்களுக்கு அங்கே அகடமிக் கவுன்சிலிலோ அல்லது செனேட்டிலோ இடம் கொடுத்திருந்தால் அவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. அவர்கள் இன்றைக்கு அதிருப்தியைக் காட்டுவதற்கு ஸ்ட்ரைக், உண்ணாவிரதம் நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாகாமல் இருப்பதற்கு அது நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சனை என்டைர் எஜுகேஷனல் சிஸ்டத்தையே ரீஆர்கனைஸ் செய்து பயன் உள்ளதாக

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



[டாக்டர் எச். வி. ஹாண்டே]

செய்து மாணவர்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கவேண்டும். ஒரு கல்லூரிக்கு 1,000 பேர்கள் விண்ணப்பம் போடுகிறார்கள், 300 பேர்களுக்குத் தான் இடம் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணியவுடனே அடுத்துப் போய்ச்சேர இடம் இல்லாத நிலைமை ஏற்பட்டவுடன் நான் பெயில் ஆகியிருந் தால்கூட பரவாயில்லை, அடுத்து எஸ்.எஸ்.எல்.சி.யிலேயேகூட இருந்திருக்கலாம் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு வேதனையடையக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த அளவிற்கு வேதனைப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இன்றைய தினம் பாஸ் செய்த பிறகு ஏன் பாஸ் செய்தான் என்று தந்தையேகூட, பெற்றோரே கூட வேதனைப்படும் அளவிற்கு இருக்கிறது. My boy has passed and now the problem has started என்ற அளவிற்குப் பிரச்னை உருவாகியிருக்கிறது. ஏன் பாஸ் செய்தான் என்று பெற்றோர்கள் சொல்லக்கூடிய, எண்ணக்கூடிய அளவிற்குத் துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அம்மாதிரியான பிரச்னைகள், அட்மிஷன் பிரச்னைகள், நல்ல நல்ல பயிற்சி கொடுக்கக்கூடிய பிரச்னைகள் ஆகியவைகளை எடுத்துச் சொல்லும் இடங்களை உருவாக்கினால் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, இன்னும் பல பிரச்னைகளைக் கூறுவதற்கு நேரமில்லாத காரணத்தினால் இதைச் சொல்லி மாண்புமிகு அமைச்சரவர்கள் இவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு வாக்குறுதி தருவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்):** திரு. ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது * * என்ற வகையில் கூறிய கருத்துக்களை அவையின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஆப்போசிஷன் கருத்துக்களை . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்):** * * என்று வரும் கருத்தைத்தான் நீக்கச் சொன்னேன்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** * *

DR. H. V. HANDE : Sir, I meant the Madras Senate. I did not mean the Syndicate Congress.

* THIRU M. A. LATHEEF : Hon. Chairman, Sir, I wish to offer a few observations in connection with the draft Bill which seeks to give representation to the student representatives in the various bodies of the University.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[Thiru M. A. Latheef]

Sir, the very Bill is based upon the philosophy that the student body does form a separate organisation which has got different goals and different policies and it is different from the other section, namely, the teaching section of the colleges and schools.

Sir, when our country attained independence which was under the foreign rule for such a long time adopted the democratic set-up and granted to all the adults the rights of exercising their vote in the formation of the Government. Then it was felt that there should be training because the democratic ideal at that time was a new ideal to the people of India.

Therefore, the fathers of the University education then felt that there should be some training given to the student community in the matter of elections, in the matter of exercising their franchise and in the matter of public affairs. So, rightly some way was found to introduce the method of elections and the method of selections of representatives. Therefore we have had, what we called, class pupil leader, then school pupil leader and then in the colleges, representatives of various faculties and then the Chairman and the Secretary of the College Union. From the second-class I had been a class leader, school pupil leader and then the President of the Islamia College and then the Chairman of the Pachaiappa's College Union and a representative of the Law College in Madras and the leader of the student community in different fields.

Therefore, I know the various intricacies, complication, 'ins' and 'outs' that are involved in the matter of student activities and the extra curricular activities of the colleges and schools. But curiously enough. Mr. Chairman, it was rather very unfortunate that the students' unions are now identified with the trade unions. That is a very unfortunate development in our country.

At the outset, I would like to say that I stand for the student bodies and I have been working for the student bodies and I am also a leader of the student community. But the way in which the student activities are being misunderstood today, is rather very unfortunate. What I submit is that the trade union is different from the student union and the aim of the trade union is entirely different from the aim of the student union. Both should not be identified alike. If you just try to identify both, then it will be a fatal blow to the very foundation of the educational system in our country. One thing that we must understand clearly is whether



[Thiru M. A. Latheef]

the method of education and the syllabus that should be prescribed is a matter that should be decided by the teachers or by the taught.

We must first decide whether the teacher is competent to decide which thing is to be taught to the student or whether the student is competent to decide which thing is to be taught. There is the view that the students should have a say in the matter of selection of studies and also in the formulation of syllabus. My submission is that a student must always be a student. At least students are expected to be respectful to the teachers.

Sir, the student is there in the educational institution not to administer but to be administered. He is not there to control the affairs of the educational institution but he is there to be controlled by the teachers. He is not there to regularise the educational system but he is there to be regularised. He is not there to rationalise the entire edific of education but he is there to be rationalised. He is not there to suggest but he is there to be suggested. He is not there to advise but he is there to be advised. Above all, he is not there to teach but to be taught.

These things should be clearly understood. Why I say this is this—I am not against the student community—we are all interested in the future of the student community. If we just say that the students should have a say in the matter of the affairs of the University and in the matter of educational institutions, then how to control the students? If the students are not to be controlled, how can they sit in the class and get proper education from the teachers? This they should understand.

We are interested in importing something which may be politically profitable to some people but we are not interested in securing a free forum for the student community. I feel that the student community should have a bright future. How they could get a bright future? Only if they have good educational foundation in university as well as in schools. How they will get a firm foundation? They will get it only if they have a sense of discipline, sense of devotion to education and this sense of devotion they will have only if they feel that they are in educational institutions to get knowledge, to acquire knowledge, to learn and not to demonstrate and not to teach somebody else. That is my submission, to all students not only in this State but also in other places. They should rise to the occasion. Then only these people when they come

முற்பகல் 11.00

[Thiru M. A. Latheef]

out of colleges can face competition from outside world, from outside controversies. These people must be freed. That is my submission.

What happens in educational institutions? I can understand if a student does not go to his class for some valid reason. What happens? The teachers are paid but students do not get proper education from classes. How much national loss? Not only national loss, but loss to State exchequer and the grant that is given by Educational Department but also it is personal loss to the student community. This should be avoided.

I am not only a student leader but an advocate and an advocate-teacher. So I know the students' mentality. All students are good. There may not be two opinions on that. Leave them alone. No student is bad. But the way in which they are trained, the way in which they are given a picture about the future, counts. It depends upon their reaction. They are a reactive force and not active force. Reaction comes only when they get frustrated about their future. So, at least there should be a sense of security on the part of student community about their future. How to get that security?

The first thing that students must realise is that they are students and nothing but students. Their first duty is to study, second duty is to study and third duty is to study. Their duty is to study, study and study, not only study carefully what is taught in classes but also things happening in the outside world. I shall narrate an incident. Two students are going and one student addresses another student: 'இந்த பஜ்ஜி என்ன சொன்னான் பார்த்தியா?' யாரைப் பார்த்து 'பஜ்ஜி' என்று சொல்லுகிறான்? லெக்சரரைப் பார்த்து 'பஜ்ஜி' என்று சொல்லுகிறான். தன்னுடன் படிக்கும் சக மாணவனை மரியாதையாக "சார்" என அழைக்கும் அவன் தன் ஆசிரியரை ஏகாரத்தில் "சொன்னான்" எனக் குறிப்பிடுகின்றான். He is addressing his co-student as 'Sir', but refers to his teacher as "என்ன சொன்னான் பார்த்தியா?" This is the way in which students are behaving. This is not because students are bad by themselves, but because of the circumstances, they get changed like this. People like me, public



[Thiru M. A. Latheef]

men, politicians may not be responsible for this. But we have trained them in such a way.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்'
பிற்றைநிலை முனியாது கற்றல்நன்றே

That was the great principle that was laid down by Nedunchezhiyan the Pandya Emperor. You must respect the teacher. 'Gurubrahma' we say. The teacher is likened to 'Brahma'. We must respect him like that. Unless a Muslim prays for the welfare of his teacher five times a day, his prayer will not be complete, and he will not be a perfect Muslim. Even in Valluvar's philosophy, the student is expected to held the teacher in reverence. All these norms are only in the interest of the student community. That is my submission.

What I want to point out to the Hon. Minister is another thing. In every university, a note is sent to the examiner that at least 75 per cent should get through. That is University secret. Direction is given to examiner that atleast 50 per cent, or 75 per cent should get through. Poor examiner, what can he do? He has to see that most of the pupils are pushed through. Even those securing 20, 25 are pushed up to 40 and given pass. These people when they come out, are inefficient, not only generally inefficient but inefficient in the field wherever they work. This should be avoided.

The University must scrupulously lay down a principle wherein all the examiners should be instructed that pass mark should be given only to those who attain a particular standard. Others should be weeded out. Only those who work and come to a particular standard should be eligible for promotion. That should be kept in view.

Mr. Suppu has asked for representation for student community in the affairs of the University. Representation for what? I am neither opposing nor supporting. I would like to be enlightened why they should be given representation in the university bodies? If they are going to decide method of education, if they are going to formulate policy of education, if they are going to say that this principle should be there and that principle should not be there, I think that should not be accepted. It is wrong. But if you say the

[Thiru M. A. Latheef]



representation is for them to have a say in the formulation of policy, in the shaping of their culture in scholastic and collegiate education, then I would submit it will lead to so many complications. A doctor is a person who should prescribe the medicine: it is he who administers medicine and he is entitled to prescribe it. If you say that patient, who has to take medicines, should have a say in the matter of prescription of medicine, then it is nothing but mockery. I do not understand the philosophy behind it. It is also 'known as', "அறியாமைப் பிணி" You should try to remove this "அறியாமைப் பணி" 'ignorance' and keep educational sphere quite peaceful.

You must have the heart to admit that if a person is a teacher, he should be respected and kept in regard as a person imparting knowledge. That is my submission. If Mr. Suppu could enlighten me on these points, how and why there should be representation, it would be better. If you say there has been universal frustration in general, sense of indiscipline, and so they want representation in university bodies, then if you give representation, there will be further deterioration in the matter of discipline in educational institutions. The students being a reactive force, if you do not give them what they want they will react. This reaction will spread far and wide and it will have diverse reflection in the educational field.

You may say in order that they may be responsible, you must give them a chance. If that is so, I am for that. I support it and say 'All right, you can have some representation'. Let one or two or even three people be elected by the Student Body in the educational institution and give them some representation in the University Bodies also. But are these elections confined to the colleges, I would like to ask. Are these elections very free, without violence and are these elections without there being any adverse repercussions upon the education of the students? This has been telling very badly and very adversely upon the educational career of the student community. What happened? You want to give some citizenship training to the students. But it has become a political matter. Even the newspapers, it is very unfortunate in this country, it is a curse and newspapers do not have any sense



[Thiru M. A. Latheef]



of responsibility. They say such and such party has captured the the Union. They say it so openly. Such and such political party has captured the Union Chairmanship in such and such college, the secretaryship and so on. Whenever something happens in the student community, they give prominence publishing in their newspapers, so that it affects the moral character of the students and the students get agitated.

I blame the elders for all the evils in the educational system, I blame the elders for all the indiscipline in the educational institutions; only the elders are responsible for all the ills among the students and the so-called newspapers which are expected to portray a true picture for the benefit of the common people, but who give biased, prejudiced and narrowminded reports about things. The newspapers are expected to give an unbiased and correct picture of the incidents. But they do not.

Take even the proceedings of our own Legislature. They want to give just a big image of some people and suppress the other people. Whatever they say, the newspapers have got to present to the people outside. Because of their narrow-minded attitude and very wrong philosophy of journalism, they are suppressing some people, just giving a protracted, bulged image of some other people, just to give them some political domination, some political influence. Is it the way newspapers should function? Is it the philosophy of journalism? I would quote one instance where an English paper refused to publish a particular person's statement for the past two weeks. Why it is so, I want to know?

THIRU A. SUBRAMANIAM: On a point of order, Sir. I wonder whether this is a debate on the University (Amendment) Bill or on the duties and responsibilities of the journalists and newspapers. Will you please clarify that, Sir?

MR. CHAIRMAN: (Thiru S. Kandappan): Mr. Latheef, you have already taken more time.

THIRU M. A. LATHEEF: Sir, I am just dealing with the responsibilities of journalism only with reference to the activities of the student community, with reference to the way in which the students' activities are portrayed in journals. I am entitled to deal

[Thiru M. A. Latheef]

with journalistic bias and prejudices in this context. There will be only disorder and not order, if they go on in this way. I charge the newspapers. In this country, they are like that. Of course, some of the newspapers are good papers. But this tendency on the part of some should be curbed. Whenever students clash or something connected with students happen in any educational institution, they must give only a correct picture ad they must not give political colour to such incidents.

With these observations, Mr. Chairman, what I submit is that if you feel that the issue and grievances of the student community will be fully met by giving them representation in the University Bodies and when you *bonafide* feel that this will curb the frustration and the ill-will towards the teaching community by the students; then, all right, we will have it as an experiment.

Also, I will plead with the Education Minister to consider this sympathetically and see if there is feasibility and if there will be a good atmosphere if you just have this representation of students in the educational field. So, with these observations, I feel this. Let them do it. Let us know this.

Student community is student community; let them have their activities; let their activities be their own activities; let them have no outside interference; let them not get involved in party politics; let them have education freely and uninterruptedly, the only consideration of theirs should be pertaining to their future; let them have the feeling that they are students and not the teachers. Thank you, Sir.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, நண்பர் சுப்பு அவர்கள் கொண்டுவந்திருக்கிற சென்னைப் பல்கலைக் கழக திருத்த மசோதாவை முழு மனதோடு ஆதரித்து இந்த மசோதாவினை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு சட்டமாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

நான் பேசும்போது எனக்குப் பின்னால் இருந்து இப்போதுதான் பேசி முடித்த நண்பர் லத்தீப் அவர்கள் பேசிய சில கருத்துக்களை மறுதளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நான் ஆளாகியிருக்கிறேன் என்பதனையும் நான் முன்கூட்டியே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





[திரு. ஏ. சுப்பிரமணியம்]

1947-க்கு முன்னாலே, இந்த நாடு விடுதலை அடைவதற்கு முன்னாலே இந்த நாட்டின் கல்விக்கூடங்கள் ஆட்சியாளர்களால் ஒரு குறிக்கோள், ஒரு நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பதனை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். அந்த நோக்கம் குறிக்கோள், மாணவர்களை ஒன்று அன்னிய ஆட்சியினுடைய ஆதாரவாளர்களாக அவர்கள் இட்ட வேலைகளைச் செய்கிற ஏவலாளர்களாக ஆக்குவது, இரண்டாவது அவர்கள் நெஞ்சத்திலே சமுதாயத்தை திருத்தி யமைக்கிற, சீரமைக்கிற எண்ணங்கள் ஏதும் வளரவிடாமல், முற்போக்கான கருத்துக்கள் ஏதும் அங்கு முளைத்துவிடாமல் தடுத்தாள்வது என்று இந்த இரண்டு குறிக்கோள்கள் அன்று இருந்தன. நாடு விடுதலை பெற்றதற்குப் பின்னால் விடுதலையடைந்த நாட்டினுடைய பொறுப்புமிக்க குடிமக்களாக, அந்த நாட்டை மேம்படுத்துகிற சிறப்பான பணியினில் முழுமனதோடு, முழுத் தெளிவோடு, திறந்த கண்களோடு அதில் ஈடுபடுகிற பொறுப்புமிக்கப் பணியாளர்களாக அவர்களை ஆக்கவேண்டுமென்ற குறிக்கோள் தானாகவே அமைந்துவிட்டது. இந்தக் குறிக்கோளை ஆட்சி ஏற்றுக்கொண்டு விட்டதா அல்லது இந்தக் குறிக்கோளை பல்கலைக் கழகங்கள் ஏற்றுக்கொண்டு விட்டனவா என்று கேட்டால், ஆம் என்ற பதிலை என்னால் சொல்ல முடியாது என்று சொன்னாலும் கூட அந்தக் குறிக்கோளைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். பின்னர் இக்குறிக்கோள் சமதர்ம சமுதாயம் அமைப்பது என்று வளர்ந்தது. ஒருசில கட்சிகள் இதனை முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறதா இல்லையா என்ற பிரச்னை இருந்தபோதிலும் இந்த நாடு ஒட்டுமொத்தத்தில் அந்தக் குறிக்கோளை ஏற்றுக்கொண்டிருக்கிறது. சமதர்ம சமுதாயம் என்று சொல்லும்போது, ஒரு புது சமுதாயத்தை உருவாக்கும்போது, அங்கு மாணவர்கள், வருங்கால குடி மக்கள், முக்கியமான இடத்தைப் பெறுகிறார்கள். அந்த மாணவர்களை அந்த சமுதாயத்தில் வாழ்வதற்கு உரியவர்களாகவும், அதோடு சமுதாயத்தை உருவாக்குகிற பணியினைச் செய்ய வல்லவர்களாகவும் ஆக்குகின்ற இன்னொரு பணியும் சேர்ந்துவிடுகிறது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, அந்த வகையில் பார்க்கும்போது இந்த நாட்டிலிருக்கிற. குறிப்பாக, தமிழ்நாட்டிலிருக்கிற கல்விமுறை, சிலபஸ், இன்னும் மற்றவை எல்லாம் எப்படியிருக்கின்றன என்றால் எப்போதோ ஒரு காலத்தில் ஆக்கி வைத்ததுதான் அப்படியே இருந்துகொண்டிருக்கின்றன. பலர் பேசியாகி விட்டது, பல அறிஞர்கள் எல்லாம் பேசியாகி விட்டது. பல்வேறு குழுக்களை அவ்வப்போது அமைக்கிறார்கள். அந்தக் குழுக்களும் அறிக்கைகள் தருகின்றன. பல கருத்துக்களை மேடைகளில் சொல்கிறார்கள், இத்தகைய மன்றங்களிலும் எடுத்துச் சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்கள்? புதிய சமுதாயத்திற்கேற்ப கல்வித் தரம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

1972 ஏப்ரல் 1

[திரு. ஏ. சுப்ரமணியம்]

ஆனாலும் அந்தக் கல்வித் துறையில் மாற்றம் என்று சொல்கிறபோது பல இடற்பாடுகள் வருகின்றன. சட்டமன்றத்தில் இதுபற்றிய கேள்விகள் எழுப்பப்படுகின்றன, அப்போது எல்லாம் அமைச்சரவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? யூனிவர்சிடி அடானமஸ் பாடி, அதில் அரசாங்கம் ஒன்றும் தலையிட முடியாது, இப்படித்தான் செய்ய வேண்டுமென்று ஆணையிட முடியாது என்று சொல்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம் என்ற பதில் தான் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகம்--பள்ளிப் பருவத்திற்குப் பிறகு, கலாசாலைதான் மாணவர்கள் எதிர்காலத்தை செப்பனிடப்படுவதற்கு கருவியாக இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகம் எப்படி இருக்கிறது என்று கேட்டால் அங்கே புதிய கருத்துக்கள் நுழைவதற்கே கடினமாக இருக்கிறது. புதிய கோட்பாடுகள் நுழைவதற்கே சிரமமாக இருக்கிறது.

இங்கேயுள்ள யூனிவர்சிடி ஆக்டைப் பார்த்தேன். செனட், சின்டிகேட், அகடமிக் கவுன்சில் இவற்றில் எல்லாம் பழைய பெரியவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் முன்னொரு காலத்து கருத்துக்களை கோட்பாடுகளை வேல்யுசைக் கொண்டவர்கள். இன்றைக்குக் கருத்துக்கள், கோட்பாடுகள், வேல்யூஸ்கள் மாறுகின்றன. புதிய சமுதாயத்திற்கு ஏற்ப கருத்துக் கோட்பாடுகளை அமைத்தாக வேண்டியிருக்கிறது. அதற்கு இடையூறாக அவர்களின் கருத்துக்கள், கோட்பாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன.

இப்படிச் சொல்கிறபோது தான் நண்பர் லத்தீப் குறிப்பிட்டார்கள்

'He is there to be taught and not to teach; he is there to be guided and not to guide; he is there to be advised and not to advise; and he is there to be suggested to and not to suggest'. என்று எல்லாம் சொன்னார்கள். இது எல்லாம் சரி. சின்னக் குழந்தைகளிடத்தில், நான் எல்லாம் சின்னப்பையனாக இருந்த நேரத்தில் என் தகப்பனார் சொல்வார்கள். நீ சின்னப் பையன், நாங்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும். பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும். பெரியவர்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்று சொல்லுவார்கள். தொழிற்சாலைகளில் எடுத்துக்கொண்டால், நிர்வாகத்தினர் சொல்லுவார்கள். நீ இப்படி வேலை செய், நான் சொல்கிறபடி வேலை செய்யத்தான் நீ இருக்கிறாய் என்று சொல்லார்கள். இப்படி ஒரு கருத்து முந்தைய தலைமுறையில் இருந்தது. ஆனால் இப்போது அந்தக் கருத்துக்கள் மாறுகின்றன. குழந்தைகள் இயல் வல்லுநர்கள் என்ன சொல்கிறார்கள், குழந்தைகளிடத்தில் அப்படிச் சொல்லக் கூடாது, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள்.



1972 ஏப்ரல் 1]

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, நான் பேசும்போது ஆசிரியர்கள் எல்லாம் தெரிந்தவர்கள் ஆகவும், மாணவர்கள் தெரியாதவர்கள் என்ற கருத்தில் சொல்லவில்லை. At least there should be presumption என்று சொன்னேன். ஆசிரியர்கள் நம்மைவிட அதிகம் தெரிந்தவர்கள் என்ற எண்ணம் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் சொன்னேன். அப்படி இருந்தால் தான் படிக்க முடியும் என்ற கருத்தில் சொன்னேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அதிலே ஒன்றும் ஆட்சேபணையில்லை. நான் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளையும் சொன்னீர்கள். குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும். குழந்தைகளைப் பெற்றவர்கள் குழந்தைகள் இயல் சொல்வதையும் கேட்கவேண்டும், அவர்களுக்கு இப்படிப்பட்ட சுதந்திரம் கொடுத்தால்தான் நல்ல முறையில் வளர்ச்சியடைவார்கள் என்று குழந்தை வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். அதேபோன்று, தொழிலாளர்களுக்கு அதிக உரிமைகள் வழங்கவேண்டும். அப்போதுதான் தொழில் முன்னேறும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாணவர்கள் உள்ளத்தில் பல்வேறு ஆசைகள், நல்ல நல்ல கருத்துக்கள், எண்ணங்கள் உண்டு. கல்வியின் தரம் இப்படியிருக்க வேண்டும். சிலபஸ் இப்படி இருக்கவேண்டும் என்ற கருத்து நிச்சயமாக அவர்களுக்கு ஏற்படத்தான் செய்யும். அந்த எண்ணங்களை வெளிப்படுத்த என்ன வழி? இப்போது ஆர்பாட்டங்கள், ஊர்வலங்கள் எடுத்துத்தான் சொல்லவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை மாறவேண்டுமானால், அவர்களின் எண்ணம் சரியான முறையில் வெளிப்படுத்தப்படவேண்டுமானால், சொல்லவேண்டிய இடத்தில் சொன்னால்தான் முடியும்.

கல்வித் துறையைப் பற்றி, பாடத் திட்டங்களைப் பற்றி அவர்களுக்கு அனுபவ வாயிலாக எடுத்துச் சொல்லி செயல்படுத்தும் வாய்ப்பு தரவேண்டும். ஆசிரியர்களுக்கு ஏன் சின்டிகேட், செனட், அகடமிக் கவுன்சிலில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யூனிவர்சிடி அமைத்துக்கொடுக்கிற பாடத் திட்டங்களை அப்படியே சொல்லித் தரவேண்டிய பொறுப்பைக்கொண்டவர்கள் தானே? அவர்களுக்கு மட்டும் ஏன் பிரதிநிதித்துவம் கொடுத்து இருக்கிறோம்? அவர்களுக்கு அனுபவத்தின் வாயிலாக பல கருத்துக்கள் இருக்கும். அவர்களுடைய வாழ்வும், யூனிவர்சிடி, பல்கலைக் கழகத்தின் வாழ்வில் சம்பந்தப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டு காரணத்தால்தான் ஆசிரியர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாணவர்களுக்கும், அவர்களுடைய அனுபவத்தின் வாயிலாக பல கருத்துக்கள் ஏற்பட்டிருக்கும். அவர்களுடைய எதிர்காலமே அதில் சம்பந்தப்பட்டு இருக்கிறது. ஆசிரியர்களுக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது. சம்பளம் [illegible] [illegible]கொண்டிருக்கும்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்]

ஆனால் மாணவர்கள் அப்படி அல்ல. அவர்கள் எதிர்காலத்தைச் செப்பனிட்டுக் கொள்வதற்காக அடித்தளம் அமைக்கப்படுவதே இந்தப் பல்கலைக் கழகத்திலே தான். அப்படிப்பட்ட இடத்தில், நம்முடைய எதிர்காலம் எப்படி அமைத்திட வேண்டும். அங்கே சரியாக அதைச் செய்கிறார்களா என்று பார்த்து அதுபற்றி ஆலோசனை செய்து, திருத்தங்களைச் சொல்லி, கண்டனங்கள் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி, அதைச் செவ்வையாகக் கொண்டு செல்லும் பொறுப்பு, உரிமை மாணவர்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் அவர்களுக்கு இடமளிக்கவேண்டும்.

நான் இதைச் சொல்கிறபோது ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரூ. 25,000 டொனேஷன் கொடுத்தவர்கள்கூட இந்த செனட்டில் இடம்பெறுகிறார்கள். ஆக, பணம் கொடுத்தவர்கள், அந்தப் பல்கலைக் கழகத்தோடு எந்த விதத்திலும் சேராதவர்கள், அந்தச் செனட்டில் இருக்கிறபோது, மாணவர்களின் வாழ்வு, அவர்களுடைய தலையெழுத்து நிர்ணயிக்கப்படுகிற அந்த இடத்தில் மாணவர்களுடைய கருத்தைச் சொல்வதற்கு அது ஏற்ற இடம் இல்லை என்பது எந்த வகையிலே ஜனநாயகம் என்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவர்கள் இருக்கவேண்டிய இடத்தில் இடம் கொடுக்காமல் இருப்பதால் ஏற்படும் விளைவுகளை நாம் பார்க்கிறோம். நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல, பிரான்சிலே ஒரு பெரிய கிளர்ச்சி நடந்ததற்குப் பின்னாலே, பல்கலைக் கழகத்திலே மாணவர்களுக்கு நிர்வாகத்திலே இடம் கொடுத்தார்கள். பல நாடுகளில் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அண்டை மாநிலமான கேரளத்தில், மாணவர்களுக்குச் சிண்டிகேட், செனட், அகாடமிக் கவுன்சில் ஆகியவற்றில் இடம் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரியாக மாணவர்கள் எண்ணத்தில் எழும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக, நல்ல கருத்துக்களைச் சொல்வதற்காக, இடம் அளிப்பதில் என்ன தவறு இருக்கிறது?

மாணவர்கள் படிப்பில் மிகுந்த நாட்டம் செலுத்தவேண்டும். அதுதான் அவர்களுடைய தலையாய கடமை என்பதை ஒப்புக்கொள்கிறேன். என்னுடைய வருத்தம் என்னவென்றால், அரசியல் கட்சிகள் பதவிக்கு வருவதற்கு முன்பு, அரசியலில் மாணவர்களை தங்களுடைய நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். பதவிக்கு வந்ததற்குப் பிறகு, மாணவர்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். மாணவர்கள் அரசியலைக் கற்றுக்கொள்ளலாம், அரசியலில் ஈடுபடக்கூடாது என்று.

அரசியல் கட்சிகள் மாணவர்கள் விஷயத்தில் தலையிடாமல் இருந்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும். அரசியல் கட்சிகள் மாணவர்களை தவறாகப் பயன்படுத்துக்கொள்வதற்குக் காரணம் ஒன்று உண்டு. அது மாணவர்களுக்குப்





[திரு. ஏ. சுப்பிரமணியம்]

பல்கலைக் கழக நிர்வாகத்தில் இடம் அளிக்காததால் தான். மாணவர்களை அரசியல் கட்சிகள் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்றால், அவர்களுக்கு ஏற்படும் எண்ணங்களை, கருத்துக்களைச் சொல்வதற்கு செனேட், சின்டிகேட், அகடமிக் கவுன்சில் ஆகியவற்றில் இடம் அளிக்க வேண்டும். இப்படி அவர்களுக்கு இடமளித்தால் தான் நன்றாக இருக்கும்.

இன்றைக்கு அவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்காகவே ஊர்வலங்கள், ஆர்பாட்டங்கள் போன்றவற்றை நடத்தவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு அதில் இடம் அளித்து விட்டால் அவர்கள் மற்றவர்களை நாடிச் செல்லமாட்டார்கள். அந்த வகையில் இந்த மசோதாவின் நோக்கம் மிகச் சிறந்த நோக்கமாக, மிகத் தேவையான நோக்கமாக இருக்கிறது என்று நான் கூறிக்கொள்வேன்.

இதைச் செய்தால் தான் மாணவர்களுடைய கிளர்ச்சிகளைக் குறைக்க முடியும். வேறு எந்த முறையிலும் குறைக்கமுடியாது. இது எல்லோருக்கும் தான் பொருந்தும், மாணவர்களுக்கு மட்டுமல்ல. பெரியவர்களுக்கும்தான் பொருந்தும். நண்பர் லத்தீப் சொன்னார்கள். இந்த நாட்டில் இருக்கும் தீமைகளுக்குக் காரணம் பெரியவர்கள்தான் என்று சொன்னார்கள்.

'They are to be blamed for all the ills that the country is suffering from ''.

என்று பொருள்படும்படிச் சொன்னார்கள். அப்படியானால் அந்தப் பெரியவர்கள் தான் அந்தக் கேட்டுக்குக் காரணம். நண்பர் லத்தீப் அவர்கள் அடித்து, ஆணித்தாரமான அவர்களுக்கே உரிய பாணியில் சொன்னார்கள். பெரியவர்கள் கையில் தான் அந்த யூனிவர்சிடி இப்போது சிக்கிக் கிடக்கிறது. அங்கேயிருக்கக் கூடிய வைஸ்-சான்சிலர்கள் வெள்ளிவிழா கொண்டாடுகிறார்கள். பல உறுப்பினர் வெள்ளி விழா, வைர விழா கொண்டாடுகிறார்கள். செனட், சின்டிகேட்டில் உள்ள உறுப்பினர்களுக்குத் தலை நரைத்திருக்கிறது, உள்ளமும் நரைத்திருக்கிறது. எல்லாம் நரைத்திருக்கிறது. பல்லும் போய், உடல் பழையதாகிப்போய் இருக்கிறார்கள். இப்படி நிலைமையிருக்கிறது. காலம் மாறுபாடுகளுக்கு ஏற்ப, புதுப்புது கருத்தோட்டங்கள் அந்தக் கல்விக் கூடத்திலே நுழைவதற்கு வழி வகை செய்ய வேண்டும். கல்விக் கூடம் என்பது ஒரு 'கல்விக்கோயில்'. அந்தக் கல்விக் கோயிலில் மாணவர்களுக்கு இடம் வேண்டுமானால் எப்படி நுழைவது? மாணவர்கள்தான் வருங்காலத் தலைவர்கள். ஆகவே, அவர்கள் சம்பந்தப்பட்ட சின்டிகேட், செனேட், அகடமிக் கவுன்சில் ஆகியவைகளில் உரிய இடம் அவர்களுக்குத் தரவேண்டும். அந்தக் கல்விக் கோவிலுக்குள் அவர்களுக்கு இடம் அளிக்க வேண்டும். முன்பெல்லாம், கோவிலுக்குள்ளே சிலர் தான் நுழையலாம்,

பிற்பகல் 11-30 மணி.

[1972 ஏப்ரல் 1

[திரு. ஏ. சுப்பிரமணியம்]

மேல் ஜாதியினர் தான் நுழையலாம் என்றெல்லாம் இருந்தது. கோவிலில் இப்பொழுது எல்லோரும் நுழையலாம். கர்ப்ப கிருகத்திற்குப் பக்கத்தில் எல்லோரும் போகலாம், உள்ளே கூட போகலாம். கல்விக் கோவிலாக இருக்கும் பல்கலைக் கழகத்திற்குள், அந்த கர்ப்பக் கிருகத்தில் மட்டும் மாணவர்கள் ஏன் போகக்கூடாது? அதற்குள் போகமுடியாத நிலையில் அவர்களைத் தடுத்து வைக்கும் முறை சரியானதல்ல.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பழங்காலக் கருத்துகளின் பிரதிநிதி அல்ல. முற்போக்குக் கருத்துக்களைத் தம்முடைய சிறிய வயதிலேயிருந்து இந்த நாட்டிற்குச் சொல்லிவிருகிறார்கள். இந்த அரசாங்கத்தில் அப்படிப்பட்டவர்கள் நிரம்ப இருக்கிறார்கள். அந்த வகையிலே நான் நிச்சயம் நம்புகிறேன். இந்த மசோதாவை கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள், ஏற்றுக்கொண்டு ஒரு முன்மாதிரியாக செயல்படுவார்கள், செயல்படுவதற்கு வழி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் கஜேந்திரகட்கர் தலைமையில் நியமித்த உட்குழு அதனுடைய அறிக்கையில் பரிந்துரை செய்ததாக நான் அறிகிறேன். செனேட், சின்டிகேட் போன்ற அமைப்புகளிலும், பல்வேறு பேகல்டிகளிலும் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை போதுமான அளவுக்கு முற்போக்கானதாக வரவில்லை ஆனாலும் அவர்களே கூட சொல்கிறார்களே. அதற்கும் மேலே சென்று உண்மையான பிரதிநிதித்துவம் மாணவர்களுக்கு இந்த மூன்று அமைப்புகளிலும் கிடைப்பதற்கு வழி செய்கின்றது இந்த மசோதா. இதிலே கூட செனேட்டில் 7 உறுப்பினர்களில் இரண்டு பேர்கள் தான் மாணவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மெஜாரிடி கூட இல்லை, சிறிய மைனாரிடிதான். தொடக்கம், எக்ஸ்பெரிமெண்ட் என்ற வகையில் தான் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் கேட்கிறார்கள். மைனாரிடி பிரதிநிதித்துவமாவது மாணவர்களுக்கு இருப்பது ரொம்ப அவசியம். அதற்கு வசதியாக அத்துணை தரப்பினர்களும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்கள் பல வாதங்களைச் சொன்னார்கள். கடைசியாக அவர் கூட அதனைக் கூடாது என்று சொல்ல முடியவில்லை. இந்த மசோதாவை வரவேற்றுத் தான் அவரும் தமது பேச்சை முடித்திருக்கிறார் என்பதில் மகிழ்ச்சி. அந்த வகையிலே இந்த மசோதாவை எல்லா தரப்பினரும் ஏற்றுக்கொண்டு, தமிழகம் இந்த விஷயத்தில் பின்தங்கி நிற்கவில்லை. முற்போக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, முற்போக்கான கருத்துக்களை ஏற்று நடவடிக்கை எடுப்பதற்கு, புதிய தலைமுறையினர் புதிய சமுதாயத்தை உருவாக்க வருவதற்குத் தயாராக இருக்கிறது என்பதை எடுத்[illegible]



1972 ஏப்ரல் 1]

[திரு. ஏ. சுப்பிரமணியம்]

அதே நேரத்தில் சமுதாயத்தில் உள்ள நல்ல கருத்தினை ஏற்றுக்கொண்டு, புதிய நல்ல திட்டத்தை ஏற்றுக்கொள்வதில் பின்தங்கிய நிலையில் இல்லை, முன்னேறுகிறது என்ற நல்ல பெயரை இந்த அரசு தமிழகத்திற்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை மீண்டும் வரவேற்று, ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவர் அவர்களே, நண்பர் மாண்புமிகு சுப்பு அவர்கள் சென்னை பல்கலைக் கழக சட்டத்திற்குக் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தைப்பற்றி ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் முன்னிலையில் வைக்க நான் பிரியப்படுகிறேன்.

எனக்கு முன்பு பேசியவர்கள் பலர் சொன்னதிலிருந்து சில விஷயங்கள் நமக்குத் தெளிவாக இருக்கின்றன. ஒன்று மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொன்னார்கள். குரு, மாணவன் என்ற அந்தப் பழைய கோட்பாடு இருக்கிறதே, அந்த தெய்வீகக் கோட்பாட்டுக்கு எந்தவிதத்திலும் இடையூறுவராத அளவுக்கு இந்தத் திருத்தம் இருக்கிறதா என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன அதே உள்ளமும் உணர்வும் எனக்கும் அதே நேரத்தில் இருக்கிறது. ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய கல்வி முறைக்கும், அந்த உயரிய நோக்கத்திற்கும் இடையே இருக்கக்கூடிய வேறுபாடுகள் என்ன, நடைமுறையில் நம்முடைய உள்ளத்தில் இருக்கக்கூடிய செயல்முறைகள் இவைகளுக்கும் அந்த உயரிய நோக்கத்திற்கும் எந்த முறையில் தொடர்பு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பழைய காலத்து குருகுலப் பரீட்சை முறையில் இந்த மாதிரியாக ஸ்ட்ரைக் முறையைப் பற்றியோ, அல்லது மாணவர்கள் பரீட்சைப் பற்றி சொல்வதையோ நாம் எதுவுமே கேள்விப்பட்டதில்லை. குருகுல படிப்பிற்கும், அந்த அம்சத்திற்கும், அந்த முறைக்கும், இப்பொழுது இருக்கக்கூடிய படிப்பு முறைக்கும், தன்மைக்கும், நாம் இப்பொழுது கைக்கொண்டுள்ள நடைமுறைக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல இப்பொழுது இருக்கக் கூடிய பாடப் புத்தகங்கள் மாணவர்கள் மனதிலே அவ்வப்போது அமைதியின்மையை ஏற்படுத்துகிறது. அதைப்போலவே அவர்கள் சில நேரங்களில் நல்ல முறையில் செயல்படவில்லை என்பதும் நீண்ட நெடுங்காலமாக இருக்கிற ஒரு குறை அந்தக் குறை அவ்வப்பொழுது இருந்துகொண்டே இருக்கிறது. மாணவர்களுடைய ரீதியில் பத்திரிகைகள் இந்தச் செய்திகளை வெளியிடுகின்றன. அப்படி அவர்கள் குறையைப்பற்றி, பத்திரிகைகளில் செய்திகள் வருவதைப்பற்றிச் சற்று ஆவேசமாக அவர்கள் குறிப்பிட்டார்கள். மாணவர்கள் உலகம் என்ன நினைக்கிறது,

[1972 ஏப்ரல் 1

[திரு. சௌடி எல். சுந்தரபாரதி]

அதைப்போலவே எல்லா மாணவர்களும் அறிந்துகொள்ளவேண்டிய நீதியும், நியாயமும் இருக்கிறது. எனவே அவர்களுக்கு இருக்கக்கூடிய கடமை என்ற ரீதியில் பத்திரிகைகள் இந்தச் செய்திகளை வெளியிடுகின்றன. அப்படி அவர்கள் வெளியிடவேண்டியது அவசியம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சில பத்திரிகைகள் ஒரு சார்பிலே இயங்குகின்றன, அவர்கள் நம்முடைய கருத்துக்களை சொல்கிறார்களா, இல்லையா என்பது வேறு விஷயம். ஏனென்றால், தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் கட்சி சார்பிலே இருக்கக்கூடிய பத்திரிகைகள் எவை, கட்சி சார்பிலே இல்லாமல் இருக்கக்கூடிய பத்திரிகைகள் எவை என்பதையெல்லாம் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஜனநாயக அமைப்பில் டெமாக்ரெடிக் இன்ஸ்டிடியூஷன்—கட்சி சார்பிலே இருக்கக்கூடிய பத்திரிகைகள் இருக்கத்தான் செய்யும். அவர்கள் கட்சிக் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய பத்திரிகைகளும், அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் ஏதாவது சொன்னால், அதை மிகப் படுத்தக்கூடிய அம்சமும் நாட்டில் இயற்கையாக இருக்கத்தான் செய்யும். இரண்டு கட்சிகளின் சார்பிலேயும் இருக்கக்கூடிய கருத்துக்களை வெளியிடுகின்ற பத்திரிகைகளும் இருக்கத்தான் செய்கின்றன. மக்கள் அவைகளைப் படிக்கும் பொழுது கட்சி சார்பில் சொல்லக்கூடிய கருத்துக்கள் எவை, கட்சி சார்பற்ற முறையில் சொல்லக்கூடிய கருத்துக்கள் எவை என்பதை சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறார்கள். எனவே, தமிழகத்தில் உள்ள எல்லா பத்திரிகைகளும் நல்ல முறையில் செயல்படவில்லை, தர்மத்துக்கு விரோதமாக செயல்படுகின்றன என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. பூரணமாக வேறு கருத்துக்களைச் சொல்லக்கூடிய பத்திரிகைகளாக இருக்கலாம். ஆனால் அவை நல்ல முறையில் செயல்படவில்லை என்று சொல்ல முடியாது. நல்ல முறையில் செயல்படுகின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

அதேநேரத்தில் நானும் கூட ஒரு பத்திரிகையின் மீது பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவந்தேன். அந்தப் பத்திரிகையின் மீது நான் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தால் கூட, அந்தப் பத்திரிகை ரொம்ப நல்ல முறையில் நடக்கவில்லை, தவறு செய்கிறது, தவறு செய்தால்கூட அதைக் கண்டித்துத் திருத்தவேண்டும் என்பதற்காகத்தான் கொடுத்தேன். ஒரே மாதிரியாக பத்திரிகைகள் நல்ல முறையில் நடக்கவில்லை என்று குற்றச்சாட்டு சாட்டுவது நல்லது அல்ல என்பது என்னுடைய கருத்து என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்களைப் பொறுத்தவரையில் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல, அவர்கள் மத்தியிலே இருக்கக்கூடிய குறைபாடுகள் இருக்கின்றன. மனதில் தோன்றக்கூடிய அமைதி



1972 ஏப்ரல் 1]

[திரு. சௌடி எல். சுந்தரபாரதி]

யின்மைத் தன்மைகள் இருக்கின்றன, இவைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. மாணவர்கள் மத்தியிலே இருக்கக்கூடிய இந்த அமைதியின்மையான சூழ்நிலையை யார் பயன்படுத்திக்கொள்கிறார்கள்? பயன்படுத்திக்கொள்ளக்கூடியவர்கள் எல்லாம் அரசியல் வாதிகள்தான். ஏனென்றால் மாணவர்களுக்குத் தங்களுடைய கருத்துக்களை, தங்கள் மனதில் இருக்கக்கூடிய குறைகளைச் சொல்வதற்கு இந்த நாட்டில் ஒரு நல்ல அமைப்பு இருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படி ஏதாவது ஒரு அமைப்பு இருந்தால் மாணவர்கள் மனதில் தோன்றக்கூடிய கோரிக்கைகளை, மனதில் உள்ள உணர்ச்சிகளை சொல்லிக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். அப்படி ஏதாவது ஒரு அமைப்பு தமிழகத்தில் இருக்கிறதா என்று பார்த்தால், இருப்பதாக நமக்கு ஒன்றும் தெரியவில்லை. மாணவர்கள் ஏதாவது ஒரு கட்சியைச் சார்ந்த தலைவர்களுடைய வலையில் விழுகிறார்கள். அதற்கான சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் நாம் எல்லோரும் ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறோம்.

எனவே தான், நண்பர் சுப்பு அவர்கள் கொண்டிருக்கக்கூடிய கருத்தினை நான் பூராவக ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லவில்லை. என்னுடைய நண்பர் கந்தசாமி அவர்கள் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். மாணவர்கள் பல்கலைக் கழக நிர்வாகத்தில் தலையிடுவதற்கு இடம் கொடுத்து விடக்கூடாது. அதன் மூலம் மாணவர்களுக்கு நலன் பயக்குமா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணமாக கேள்வித்தாள்களை எடுத்துக்கொண்டால், என்னென்ன கேள்விகள் வேண்டும், பரீட்சைகளே கூடாது என்று மாணவர்கள் சொல்லக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என்று கூறினர். அதுவும் வாஸ்தவம்தான். அம்மாதிரி பயமும் இருக்கத்தான் இருக்கிறது. அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டும்.

அதற்காக யுனிவர்சிடி நிர்வாகத்தில் அவர்களுக்குப் பங்கு கொடுக்காமல் நிறுத்திவிட முடியுமா, இவர்களுக்கு இப்படி பங்கு கொடுப்பதன் மூலம் மாண வர்கள் சமுதாயம் நல்ல வழியில் திருப்பிவிடப்பட்டு பொறுப்பு உணர்ச்சியோடு எல்லாவற்றையும் பார்த்து செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு யுனிவர்சிடி ஸ்தாபனத்தில் இவர்களுக்குப் பங்கு கொடுக்க முடியுமா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். மாணவர்கள் சமுதாயம் அரசியல் வாதிகள் கையில் சிக்காமல், அவர்களுடைய கருத்துக்களையும், கோரிக்கை களையும், உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்வுகளையும் வெளியே எடுத்துச் சொல் வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கக்கூடிய விதத்தில் இந்த ஸ்தாபனங்களில் அவர்

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

களுக்குப் பங்கு கொடுக்கலாமா என்பதும் சிந்திக்கவேண்டிய விஷயம். அதனால் நமக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதைப்பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும். சுதந்திரம் பெற்றதற்குப் பின் மாணவர்கள் மனதில் திருப்தி ஏற்படவில்லை. என்ன காரணம்?

நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சிக்கல்கள், கஷ்டங்கள் மாணவர்களுக்குப் புரிவதில்லை. நாம் எவ்வளவோ நல்ல மனதோடு நல்ல காரியங்களைச் செய்தாலும் மாணவர்களுக்கு அதைச் சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த சூழ்நிலையில் நிர்வாகத் தொடர்புடைய பல்கலைக் கழகத்தில் அவர்களுக்கு ஏதாவது ஒரு பங்கு கொடுத்தால், அந்த நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சிக்கல்களை அவர்கள் புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். நாம் நல்ல முடிவுகள் எடுத்தாலும், அவற்றை அவர்கள் புரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமா, இல்லையா இந்த ஸ்தாபனத்தில் இவர்களுக்குப் பங்கு கொடுத்தால் என்பதைப்பற்றி சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதன் மூலமாக மாணவர்களின் கஷ்டங்கள், சிக்கல்களைத் தெரிந்துகொண்டு, மன ஓட்டத்தில் உள்ள நல்லெண்ணத்தைப் புரிந்துகொண்டு, எதன் மூலம் அவர்கள் கிளர்ச்சி செய்யவேண்டுமென்று நினைத்தாலும், போராட வேண்டுமென்று நினைத்தாலும், அவர்கள் அதை கைவிட வேண்டும் என்று நாம் அவர்களை 'கன்வின்ஸ்' செய்வதற்கு, மன வருத்தத்தைத் தீர்க்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

அதற்காக சின்டிகேட், செனேட், அகாடமிக் கவுன்சில் எல்லாவற்றிலும் அவர்களுக்குப் பங்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நான் அந்தக் கருத்தை பூரணமாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். 'சின்டிகேட்' என்பதை மிகவும் உயர்ந்த குருவாக இருக்கும் ஸ்தாபனமாக வைத்துக் கொள்ளலாம். நம் நாட்டின் பழக்கத்திலே கூட, நாம் பிள்ளைகளை ஆரம்பத்தில் பையனாகக் கருதி வளர்க்கிறோம். அதற்கு பிறகு, பையன் வளர்ந்த பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக பெரியவனான பிறகு, தன் பிள்ளையாக இருந்தாலும் சகோதரன் என்ற மனப்பான்மையுடன் நடத்தும் நிலைமை இருக்கிறது. ஆனால் அதே பையன் நல்ல முறையில் வளர்க்கப்பட்டிருந்தால் தகப்பனாருக்குச் சமானமாக பேச வேண்டிய நிலை வந்தாலும் கூட, அவர் பக்கத்தில் உட்கார் என்று சொன்னாலும் கூட, உட்காராமல் நின்றுகொண்டு பேசும் பிள்ளைகள் நம் நாட்டில் இருக்கிறார்கள்.



[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

அதேபோல நாம் பல்கலைக் கழகத்தை ஒரு தகப்பனாராக வைத்துக் கொள்ளலாம். அந்தத் தகப்பனாருடைய நிர்வாகத்தில் இருக்கும் மாணவர்கள் ஓரளவு வளர்ந்து பிள்ளைகளுக்கு இன்னும் நல்ல முறையில் நல்லறிவு பெறும் நிலையை மாணவர் சமுதாயத்துக்குக் கொடுப்போம் என்று அந்த முறையில் நடத்த வேண்டுமென்று சிந்திக்கத் தொடங்கும் இந்த நேரத்தில், அவர்களுக்கும் ஓரளவு பங்கு கொடுத்தால் அதன் மூலம் எப்படி செயல்படுகிறார்கள் என்று கண்டறிந்தால், அதன் மூலம் மாணவர் சமுதாயத்தின் மனக்குறைக்கு "ஸ்டூடன்ட்ஸ் அன்ரெஸ்ட்"க்கு காரணம் என்ன என்பதைக் கண்டு கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தை தெரிவித்துக்கொண்டு, அந்த முறையில் அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Chairman, Sir, I would like to offer a few remarks regarding the Bill that is before the House. The hon. Member, Thiru Suppu, has given valid reasons for its acceptance by this House. I think on behalf of our Party I would say that the argument advanced by the hon. Member Thiru Suppu is tenable and it has to be accepted. Now, the main question that has to be considered is whether there should be students' participation in the University. At the very outset, I may say without fear of contradiction that there is a growing feeling among the student community that the present system of education is not congenial to their progress and well being and so much so, there should be re-thinking on the method of education. That is one aspect that will have to be taken note of. The question, whether our educational system will have to be revised or not, has to be considered by our University and educational experts. So far as the University is concerned, it is an autonomous body and there are many limbs in the autonomous body. I would say that the participation of the students in the management of the University is a welcome move in that there shall not be unnecessary bickerings. It has been stated that the relationship between the teacher and the taught will be strained on account of the participation of students or their representation in the governing bodies of the University. That is the main argument that has been advanced. I would say that that argument does not hold water and that is not tenable because if representation is given to the students in the governing bodies it does not mean that they are going to dictate to the other members of the Senate or the Syndicate. Suffice it for me to say

[1972 ஏப்ரல் 1

[Thiru R. Ponnappa Nadar]

that the viewpoint that is now being focussed by the student community can be discussed in the governing bodies and it would be just and proper that their voice also should be heard in the University.

I may say that in Kerala, the Hon. Minister, Thiru Koya, gave representation for the student community in the Senate and that is the legislation that they had contemplated. The hon. Member, Thiru Latheef, has stated that the relationship may get strained but I would say that the apprehension is baseless and devoid of any substance.

THIRU M. A. LATHEEF: Sir, by way of clarification, I would like to submit that I have never stated that merely on the basis of giving representation to the student community in the governing body of the University, the relationship between the teacher and the taught will be strained. What I have stated is, that the purpose of the Bill should be clearly stated by the hon. Mover of the Bill. Sir, I am for the Bill and it is not as if I am opposing it tooth and nail. I gave two alternatives. So far as the first alternative is concerned, I oppose it and as regards the second alternative I support it. That is my contention.

THIRU R. PONNAPPA NADAR: Sir, thanks for the clarification given by the hon. Member.

I may say that the student community is always progressive in its outlook. They always want a change and that the old order should be changed and new things should come. I think there is some substratum of truth in their contention that the present system of education should be changed and that is the view expressed by educational pandits and other experts. I may say that there is nothing wrong in giving representation to the student community and precedents also are not wanting. It may be stated that agitations by students are on the increase in the various places.

As a matter of fact, if you refer to newspapers, you will see that there are students' agitations not only in India but also in other parts of the world. In France there was agitation and in other countries also there were agitations. But the question is, how to bell the cat and that is the problem we have to tackle. I think the agitational approach is not congenial to the national



1972 ஏப்ரல் 1] [Thiru R. Ponnappa Nadar]

well-being. But we have to think and devise ways and means to bring forward a suitable legislation so that students may also participate in the Senate and other representative bodies. What should be the method by which they should be admitted in the Senate and other representative bodies, and that has to be thought of by the Government. I think that in France and other countries representation is given to them and there is re-thinking. In order to cope up with the advanced knowledge, it is just and proper that in the interest of the student community and in the interest of the nation, they also should be given representation, just as there is participation of labour in the industrial concerns. This is just a remedy for a malady. I think the Hon. Minister for Education and the University will have very strong views on the matter. So far as this legislation is concerned, I think it is a welcome move and so much so we can also satisfy the student community. We can also explain to them the practical difficulties and convince them. It is not as if there will be no friction between the students' representatives and the members of the governing body but the whole thing can be resolved in a proper manner. So I support the Bill moved by the hon. Member Thiru Suppu. With these words, I conclude my speech.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கல்வி ஸ்தாபனங்களில் வேண்டுமென்ற இந்த பில்லில் ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் நானும் என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் எப்போதும் என் பக்கத்தில் இருக்கின்றவர், இப்போது அடுத்தப் பக்கத்தில் போய் நின்று பேசுகிறார்கள். அவர்கள் எப்போதும் என் பக்கத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால் அவர்கள் திடீரென்று இடம் மாறி இருக்கின்றார்கள். அது முறையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி: கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மதித்து, தலைவரவர்களின் அனுமதியுடன் என் இடத்திற்கு மீண்டும் வந்து விட்டேன். முதலில் இந்த இடத்தில் பல உறுப்பினர்கள் உட்கார்ந்திருந்ததால் நான் அங்குபோய் இருந்தேன். அப்போது தலைவரவர்கள் பேச அழைத்ததால் தலைவரின் உத்தரவுக்குப் பணிந்து நான் அங்கிருந்தே பேச ஆரம்பித்து விட்டேன். இதில் வேறு எந்த நோக்கமும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. கந்தசாமி] [1972 ஏப்ரல் 1

நாடு சுதந்திரம் அடைந்தும், ஜனநாயகம் பெற்று 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் போதிய அளவு நாம் முன்னேறவில்லை. மக்களின் முன்னேற்றத்திற்காக மாநில, மத்திய அரசுகளின் மட்டத்தில் எல்லா முயற்சிகளையும் எடுத்தும் கூட மக்களுக்கு ஏற்படவேண்டிய மனப்பக்குவத்தை இன்னும் அடையச் செய்ய முடியவில்லை. மக்கள் மனப்பக்குவம் அடையவில்லை. அதனால் ஜனநாயகம் வெற்றியடையவில்லை என்ற கருத்தை அரசியல் மேதைகளும், அரசியல் தலைவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே நமது ஜனநாயகத்தை 'இன்பேன்ட் டெமாக்கிரஸி' என்று சொல்லலாம். அது இன்னும் வளர்ச்சிப் பெறுவதற்கு, முதிர்ச்சி பெறுவதற்கு, ஜனநாயகம் வெற்றி நடைபோடுவதற்கு இளம் சந்ததியினரான மாணவர்கள், சமுதாயத்தில் நல்லமுறையில் மனப்பக்குவநிலை அடைந்து செயல்படவேண்டியிருக்கிறது. அதற்காக கல்லூரி நிர்வாகங்களில் மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று நண்பர் திரு. சுப்பு அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த பில்லில் பல உறுப்பினர்களும் பலவிதமானக் கருத்துக்களைச் சொன்னார்கள்.

சிலர் இந்த பில்லை ஆதரித்தும், சிலர் கொஞ்சம் ஆதரித்தும், சிலர் விரோதமானக் கருத்துக்களையும் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலைகளில், அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதில், வாக்குப் போடுவதில் வயதை குறைக்கவேண்டும், கல்வி ஸ்தாபனங்களில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள். அந்த நிலை இன்று இல்லாததனால்தான் மாணவர்களிடையே அமைதியின்மை, குரோயிங் அன்ரெஸ்ட் இருக்கிறது. அதைப்போல மாணவர்களுக்கு புரட்சிகரமான கருத்துக்கள் தேவை; மாற்றங்கள் தேவை; அதற்கு உறுதியான அடிப்படையில் கல்வி ஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம் இருந்தால் எங்கள் கோரிக்கைகளை நல்லமுறையில் சொல்லி, தேவைகளைப் பெற முடியும் என்று மாணவர்கள் கருதுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் பெறவேண்டிய மனோ பக்குவ நிலை, அனுபவங்கள், அறிவுத்திறன் வளர்ச்சி இவை போதாது என்பது என் கருத்து.

மனப் பக்குவத்தையும், அறிவு வளர்ச்சியையும், திறமையையும் அளிப்பதற்காகத்தான் அவர்களை மாணவர்கள் என்ற நிலையில் வைத்து, அவர்களுக்கு அனுபவமும், அறிவாற்றலும் மிக்க ஆசிரியர்களை வைத்து படிப்புச் சொல்லித் தருகிறோம் என்பதை நாம் தெளிவாக உணரலாம். அப்படிப்பட்ட மாணவர்களுக்கு, எதையும் அறிய வேண்டிய நிலையில் இருக்கின்றவர்களுக்கு வேறு துறைகளிலும், கல்வி அமைப்புகளிலும், கல்வி ஸ்தாபனங்களிலும் பிரதிநிதித்துவம் அளிப்பதால் வாழ்க்கையிலும், மற்றத் துறைகளிலும் எந்த அளவுக்குப் பயன் அளிக்கும் என்பது ஐயப்பாடுதான் என்பது என் கருத்து.



1972 ஏப்ரல் 1] [திரு. கே. கந்தசாமி]

ஆகவே, மாணவர்களுக்கு மதிப்பிற்குரிய நண்பர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டது போல அவ்வளவும் பிரதிநிதித்துவம் இல்லை என்றாலும், ஓரளவு பரீட்சார்த்தமாக நாம் ஏற்றுக்கொள்ளலாம். சில நிறுவனங்களில் நாமினேட்டட் மெம்பர்ஸ் இருக்கிறார்கள். அவர்கள் அந்த விவாதத்தில் பங்குகொள்ளவும், கருத்துக்களைச் சொல்வதற்கும் அனுமதி இருக்கிறது. ஆனால் அதிலே ஓட்டு போடுவதற்கு அவர்களுக்கு அனுமதி கிடையாது. அதைப்போல மாணவர் சமுதாயத்திற்கு கல்வி ஸ்தாபனங்களில் பங்குகொண்டு, ஆலோசனை கூறுவதற்கும், தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கும் மட்டும் வாய்ப்பளித்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆனால் அந்த உரிமையை 'பாலிஸி மேக்கிங் பாடீஸ்' ஆன சிண்டிகேட், செனட்டுகளில் அப்படிப்பட்ட பொறுப்புள்ள ஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம் கொடுக்காமல் இருப்பதே சிறப்பானது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இன்றைக்கு மாணவர்கள் ஸ்டிரைக் நடத்துகிறார்கள்; நிர்வாகத்தைக் கண்டித்து ஊர்வலம் போகிறார்கள். கோஷங்கள் போடுகிறார்கள். சில இடங்களில் பரீட்சையே வேண்டாமென்று சொல்கிறார்கள். பரீட்சை கட்டாயமா என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நாட்டிலே இருக்கும்போது, மாணவர்களுக்கு கல்வி ஸ்தாபனங்களில் முக்கிய பொறுப்புகளில் இடம் அளித்தால் நிலைமை என்ன ஆகும்? எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

வளர்ச்சிப் பெறாத, 8 அல்லது 10 வயது மைந்தனிடம் பொறுப்புள்ள ஒரு தந்தை இரும்புப்பெட்டிச் சாவியைக் கொடுக்கமாட்டார். கொடுப்பது உசிதம் அல்ல; புத்திசாலித் தந்தையாக இருந்தால் நிச்சயமாகக் கொடுக்க மாட்டார். அன்பு காரணமாக சாவியைக் கொடுத்துவிட்டால், அதன் அருமை தெரியாத பையன் பெட்டியைத் திறந்து நூறு ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு சினிமாவுக்குப் போய்விடுவான்; அல்லது வேறு வழிகளிலே செலவு செய்துவிடுவான். அதற்குப் பின்னால்தான் பெட்டிச் சாவியைக் கொடுத்தது எவ்வளவு தப்பாகப் போய்விட்டது என்று உணருவார். இன்றைய சூழ்நிலையில் மாணவர்களுக்கு கல்வி ஸ்தாபனங்களில் முக்கிய பொறுப்புகளில் பிரதிநிதித்துவம் கொடுப்பதும் அதைப்போன்றதுதான் என்பதை இங்கே தெளிவாகக் கூறிக்கொள்கிறேன்.

ஆகவே, மாணவர்களுக்கு கொள்கைப் பிரச்சனைகளில் ஓட்டுப் போடுவதற்கோ, முடிவு செய்வதற்கோ இடம் அளிக்காமல், அவைகளில் தங்கள் எண்ணங்களையும், ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வெளியிடுவதற்கு ஸ்தாபனங்களில் இடம் அளித்தால் சாலச் சிறந்தது என்று விபரத்தைக் கூறி பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

யத்தைத் தெரிந்து சட்டமியற்றிக் கொடுக்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம் இதுபற்றி அவர்களது விருப்பங்களைக் கேட்டதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் தங்களுடைய சொந்தக் கருத்தைத் தெரிவிக்காமல் மாணவர்கள் இப்படிக் கோருகிறார்கள் என்ற ரீதியில் அனுப்பியிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கொள்கை அளவில் இதை ஏற்றுக்கொண்டு, இதனால் ஏற்படக்கூடிய பல்வேறு விளைவுகளையும் அரசு யோசித்து அதற்குத் தக்க வகையில் சட்டமியற்ற வேண்டும் என்று தெரிவித்திருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இந்திய மாணவர்கள் மாவட்டக் குழுவினரும் இதுபற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். பாட திட்டங்களைப் பற்றியோ, தேர்வு பற்றியோ, பரீட்சைகள் பற்றியோ, எடுக்கப்படுகிற விவாதங்கள், முடிவுகளில் மாணவர்களுக்குப் பங்கு தரவேண்டும் என்பதில்லை. கல்லூரியில் இருக்கிற ஹாஸ்டல் சங்கடங்கள், உணவுச் சங்கடம், தண்ணீர் இல்லாதது, பல மாதங்கள் ஆசிரியர்களே போடாமல் இருப்பது போன்ற குறைபாடுகளை மாணவர்களே எடுத்துச் சொல்வதற்கு வசதி இருந்தால்போதும், பல சங்கடங்களைப் போக்க அது உதவி செய்யும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பாட திட்டங்களைப்பற்றி திரு. ஹாண்டே அவர்களும் குறிப்பிட்டார்கள். கல்வித்துறை நிபுணர்கள், பலகால டீச்சிங் அனுபவம் உடைய கல்வித்துறை நிபுணர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம் அது. திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது ஆசிரியர் ஆசிரியராக இருக்கவேண்டும், மாணவர்கள் மாணவராக இருக்கவேண்டாமா என்றார். ஆசிரியர் ஆசிரியராகத்தான் இருக்க வேண்டும். மாணவர்கள் மாணவர்களாகத்தான் இருக்கவேண்டும். அதில் கருத்து வேறுபாடிருக்க இடமில்லை.

இன்றைக்குக் கல்லூரிகளில் ஏற்படுகிற மாச்சரியங்களையும் சொன்னார்கள். கல்லூரிகளில் இருக்கிற குறைபாடுகள், ஹாஸ்டல்களில் அதிகப் பணம் வாங்குவது, குறைவாகச் சாப்பாடு போடுவது, வகுப்புக்கு ஆசிரியர்களையே போடாமல் இருப்பது போன்ற காரணங்களினாலும் மாச்சரியங்கள்—போராட்டங்கள் வருகின்றன. ஆனால் மொத்த போராட்டங்களை எல்லாம் எடுத்துப் பார்த்தால் இன்றைய தினம் கல்லூரி யூனியனுக்கு நடத்தப்படுகிற தேர்தல்களை ஒட்டியே பெரும்பாலும் கட்சி மாச்சரியங்கள், சச்சரவுகள், கலவரங்கள் அதிகம் ஏற்படுகின்றன என்பதை இன்றைக்குள்ள சூழ்நிலையில் நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும்.





(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

நாளுக்குநாள் வளர்ந்து வருகிற நிலையில் செனட் அவையில் மாணவர்களது பிரதிநிதிகள் உட்கார்ந்து மாணவர்களுடைய கருத்தை எடுத்துச்சொல்ல வேண்டும் என்கிற நோக்கம் மிகச் சிறந்ததுதான். அந்த நோக்கம் அடிப்படையில் நிறைவேறவேண்டுமென்றால் வேறுசிலபல பிரச்சினைகளைப்பற்றியும் கவனம் செலுத்தியாகவேண்டும்.

என்ன இருந்தாலும் அந்த அச்சங்களை ஓரளவிற்குத் தவிர்க்க வேண்டும். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற நிலைமைகள் ஓரளவிற்கு உண்மை. யூனியன் தேர்தல்களில் இந்தக் கட்சி வென்றது, அந்தக் கட்சி வென்றது என்கிற நிலைமை வரும்போது தோல்வியடைந்த கட்சியைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாச்சரியங்கள் ஏற்படுகின்றன. இன்னும் சிலர் நாம் தேர்தலில் வென்ற செய்தியை, இன்னார் வெற்றி பெற்றார் என்ற செய்தியை இந்தப் பத்திரிகை போடும்போது, அந்தப் பத்திரிகை ஏன் போடவில்லை என்று கேட்டு, பத்திரிகை காரியாலயத்தை முற்றுகையிடுகிற நிலைமைகூட வந்துவிடுகிறது. நாம் வெற்றிபெற்ற செய்தியை அந்த செய்தித் தாள்கள் ஏன் போட மறுக்கின்றன என்ற அளவில் கேட்டு போராட்டம் ஏற்படக்கூடிய நிலைமை உருவாகி விடுகிறது.

எல்லோருடைய உணர்ச்சியின் அடிப்படையிலே பார்த்தால் இந்தமாதிரியான நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும். நான் முதலிலே எடுத்துச் சொல்லியதுபோல, இதைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்றாலும், எந்த அளவிலே இதைச் செய்ய வேண்டும், எந்தக் கொள்கையிலே திட்டவட்டமாக ஒரு முடிவுக்கு வந்ததற்குப் பின்னால்தான் இது குறித்து தக்க முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்ற இடங்களின் தன்மைகளையும் பார்த்துச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். சுமார் 150 பேர்கள் செனெட் மெம்பர்களாக இருக்கக்கூடிய இடத்தில் நான்கைந்து மாணவர் பிரதிநிதிகளைப் போட்டு, அந்தப் பிரதிநிதிகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, மற்ற பிரதிநிதிகளின் கருத்துக்களை மாற்றிவிடுவார்கள் என்ற நிலை இல்லை. மாணவர்கள் பிரதிநிதிகள் செனெட் சபையில் அங்கம் வகிக்கக்கூடிய தக்க சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாடத் திட்டங்கள் வகுப்பது, பாட முறைகள் பற்றி செயல்படுவது போன்ற அத்தகைய தன்மைகளை ஆராயக்கூடிய வல்லுநர்கள் சிண்டிகேட் அவையில் இடம் பெறுவதில்லை, அகடமிக் கவுன்சிலும் இடம் பெறுவதில்லை. ராஜஸ்தான் கேரளா பல்கலைக் கழகங்களில் செனெட்டில் இடம் பெறுவது குறித்து இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் சில கொள்கைகளை நாம் மேற்கொள்ள முடியும்.

கிட்டத்தட்ட பல்கலைக் கழக மாணவர்களுக்கும் ஓட்டுரிமை கிடைத்துவிடுகிறது. 21 வயது ஆனவுடனே அவர்களும் ஓட்டளிக்க உரிமை பெற்றவர்களாகிவிடுகிறார்கள். மாணவர்கள் என்று இருக்கும்போது அவர்களுக்கென்று இருக்கக்கூடிய வகையிலும், அவர்கள் நோக்கங்களை நிறைவேற்றுகின்ற வகையிலும் பல்கலைக் கழகத்தின் ஆட்சி முறைகள் சீராக அமைக்கப்படுகின்ற நிலையில் எந்த அளவிற்கு அவைகளைச் செய்யலாம் என்ற முடிவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், திரு. சுப்பு அவர்கள் மாணவர்கள் செனெட் சபையில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதற்காக தீர்மானம் கொண்டுவந்திருப்பதை, அவருடைய கருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், இதில் மூன்று பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்களையும் அழைத்துப் பேசி, அவர்களை ஒருசேர அழைத்துப் பேசி, மூன்று பல்கலைக் கழகத்தின் சட்டத்தையும் தனித்தனியாக திருத்த வேண்டும். அவர்களைக் கேட்காமல் செய்துவிட்டோம் என்று இல்லாமல், பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்களைக் கலந்துகொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களையும் கவனத்திற்கொண்டு, நல்லதொரு முடிவு எடுக்க இருக்கிறோம். இதைச் செய்யும்போது மூன்று பல்கலைக் கழக துணைவேந்தர்களையும் ஒருசேர அழைத்துப்பேசி, ஒருசேர மூன்றுக்கும் சட்டம் கொண்டுவர முயற்சிகள் எடுக்கலாம். கூட இருக்கின்ற பல்கலைக் கழகத் துணைவேந்தர்களின் கூட்டத்தில் இந்தக் கருத்தை எடுத்துவைத்து, இந்தச் சட்டத்தை அரசாங்கமே கொண்டுவர முயற்சி செய்வோம். ஆகவே, கனம் திரு. சுப்பு அவர்கள் இதை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் அங்கே எடுத்துவைக்க வாய்ப்பாக அமையும். ஆகவே, இதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம் கொண்டுவரப்படும்போது முறையாக கொண்டுவர வேண்டும், சிலவற்றையும் நாம் யோசிக்க வேண்டும். அங்கம் வகிக்கக்கூடிய பிரதிநிதிகள் போஸ்ட்-கிராஜுவேட்டாக இருந்தால் எல்லாவற்றிற்கும் நல்லது. பி.யு.சி.யிலிருந்து டிகிரி படித்து, போஸ்ட்-கிராஜு வேட்டாக இருக்கும் நிலையில் அவர்களுடைய தகுதியும் உயர்ந்திருக்கும். அவர்களும் மூத்தவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய கருத்துக்களும் சிறப்பாக அமையும். மாணவர்களுடைய கோரிக்கைகளும் நல்லவகையில் தீர்க்கப்பட உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, போஸ்ட்-கிராஜுவேட்டுகள் அளவில் மாணவர்கள் இடம் பெறத்தக்க அளவில் இருக்கவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அப்படி போஸ்ட்-கிராஜுவேட் மாணவர்களைப் போடுவதால் அவர்களுக்கு வயதும் இருக்கும், அவர்களுக்கு ரெஸ்பான்ஸிபிலிட்டியும் இருக்கும். பி.யு.சி. மாணவர்களைவிட போஸ்ட்-கிராஜுவேட் மாணவர்கள் பிரதிநிதிகளாக வருவது நலம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொள்கிறேன். இந்தநோக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, இதை வற்புறுத்த வேண்டாமென்று திரு. சுப்பு அவர்களைக் கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, நான் கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தச் சட்டத்தை டாக்டர் நாவலர் அவர்கள் ஏற்றுக்கொண்டு விரிவான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய ஐயப்பாடுகளுக்குக்கூட விளக்கம் அளிக்கும் வகையில் மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டிய நோக்கத்தைப் பற்றியும், அதன் நியாயத்தைப்பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிக் கொடுத்ததற்குக் காரணம், எல்லா பல்கலைக் கழகத்திற்கும் அரசாங்கத்தால் உரிய முறையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்பதால்தான், அந்த நோக்கத்தோடுதான் இதைக் கொண்டுவந்தேன். என்னுடைய கோரிக்கை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிருந்து நிறைவேறிவிட்டது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. லத்தீப், மாண்புமிகு திரு. கந்தசாமி அவர்களுடைய ஐயப்பாடுகளுக்குக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளித்து, நல்ல விளக்கத்தைக் கூறி, என்னுடைய கோரிக்கை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு நன்றிகூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. சுப்பு அவர்களின் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

(ஆ) 1971-ம் ஆண்டு கிருத்துவ வழியுரிமை (ரத்து) சட்ட முன்வடிவு
(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1971).

THIRU J. JAMES: Sir, I move—

"That the Chiristian Succession Repeal Bill, 1971 (L.A. Bill No. 46/71) be circulated for eliciting opinion thereon".

The main object of the Bill is to assure the Christian female population of Kanyakumari District and Shencottah Taluk in Tirunelveli District, equal share in the property of their parents.

As law stands now the female is entitled to only Stridhanam, and the quantum of Stridhanam is $\frac{1}{4}$ share of the value of the share of a son or Rs. 5,000 whichever is less.

The Christian Succession Act, 1092 (Travancore Act II of 1092), is the law governing intestate succession among Indian Christian domiciled in the Kanyakumari district, and the Shencottah taluk of Tirunelveli district. Though by the Part B State (Laws) Act, 1951, the Indian Succession Act, 1925, has been extended to the former Part B State, that Act does not govern the succession of Indian Christians in the Kanyakumari district and the Shencottah taluk of Tirunelveli district in view of the fact that under Section 29 (2) of the Act that law will apply save as otherwise provided by any other law for the time being in force. In view of the existence of the Travancore Act II of 1092, the Indian Succession Act, 1925, cannot apply in relation to the intestate succession among Christians in Kanyakumari and Shencottah. This position has been upheld by the Travancore-Cochin High Court in its decisions. Thus, the outmoded Travancore Act is still in force in the transferred territory. One main feature of the Travancore Act is that where Stridhanam is given at the time of the marriage to any female, then she cannot claim any share in the property of the father or mother. According to the Act the quantum of Stridhanam will be only one-fourth of the value of the share of the son or Rs. 5,000 whichever is less. Thus this provision works real hardship in the case of females. This is more so in the changed circumstances prevailing in the country after the enactment of the Hindu Succession Act, 1956, under which females claimed equally with males in regard to share from the property of the father.

Again, an anomalous situation has been created after the enactment of the Dowry Prohibition Act, 1961, which prohibits giving or taking of dowry. In the circumstances, the validity of granting stridhanam itself is a matter of dobut. Therefore, the position of a Christian female in the transferred territory is very pitiable compared to their sisters in the rest of the country. It does not also stand to reason why after the Indian Succession Act has been extended to the former Part B States it should not apply only to the Christians of the former Travancore State and particularly people of the transferred territory. In view of the





position set out above, there is no need for retaining Travancore Act II of 1092. If that Act is repealed, the Indian Succession Act will automatically apply to the transferred territory.

It is a progressive piece of legislation. It will definitely be accepted by the Christian Community of Kanyakumari district and Shencottah taluk. So I feel that they must be given a chance to express their opinion about this Bill. This House will also be in a better position to discuss the Bill if the opinion of the Chiristian Community also is before this House. Hence I move that this Bill be circulated for the purpose of elicting opinion thereon and I request this House to accept this motion.

The motion was duly seconded.

THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Speaker, Sir, the women of India are very fortunate people. We did not have to fight the suffrage movement. Our rights were handed to the women of India with honour. I am sure, Sir, that this is really quite a simple matter. It seems to me like some technical oversight. I think the legal pandits here will be able to straighten out things quite easily and efficiently. But I am sure that all the women of India who are enjoying the rights of succession under the new Act will see that justice is done to this very small section of Christian women in the district of Kanyakumari and Shencottah taluk; not only women, I am sure, that everybody will see that right has to be done and therefore will support the repeal of the Act referred to. I think that is all that needs to be said in the matter. It seems quite straightforward and simple and I am also certain that the Government of Tamil Nadu will see that it is their duty to put matters right. Thank you, Sir.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த 1971 ஆம் ஆண்டு கிறிஸ்தவ வழியுரிமை ரத்து மசோதா எண். 46/71 இந்தச் சபையினுடைய அங்கீகாரம் பெற்று பொது மக்களுடைய கருத்துக்களை அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஜேம்ஸ் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

எங்களுடைய கட்சியின் சார்பிலே இந்தக் கருத்தை நான் வரவேற்று சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்பினால் அதற்கு வழிவகை செய்வது அவசியம் என்று நினைக்கிறேன். அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள்ளாவது அவர்களுடைய கருத்துக்களைப்பற்றி இந்த மசோதாவை இந்தச் சபை விவாதிக்க வேண்டுமென்ற முறையிலே இங்கு முடிவு எடுத்தால் உதவிகரமாக இருக்கும்.

நம்முடைய நாட்டிலே சக்ஸஷன் ஆக்ட் மிகவும் குழப்பம் உள்ளதாக தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. யாராவது ஒருவர் உயில் எழுதிவைக்காமல் காலமாகிவிட்டால் என்ன நிலைமை என்பதைப்பற்றி பிரிட்டிஷ் சட்டம் தெளிவாக இருக்கிறது. அவர் இறந்தபின்பு அவருடைய துணைவியாருக்கு மூன்றில் ஒரு பங்கும் அவருடைய பிள்ளைகளுக்கு ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல் பாக்கியிருக்கிற மூன்றில் இரண்டு பங்கு சமமாக பிரித்துக்கொடுக்கப்படும் என்று தெளிவாக இருக்கிறது. நான் மலேயாவிலே வழக்கறிஞராக இருந்த காலத்திலே பேருதவியாக இருந்தது, சிக்கல் இல்லாத முறையிலே தீர்த்து வைக்க வழியிருந்தது. கிறிஸ்துவர்களாக இருக்கலாம், மலே[illegible]க்காரர்களாக இருக்கலாம், இந்துக்களாக இருக்கலாம், சீனர்களாக இருக்கலாம், யார் இறந்து போய்விட்டாலும் அவர்களுடைய பின் சந்ததிக்கு என்ன கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டது. சீனர்களைப் பொறுத்தவரையிலே பலபெண்களை அவர்கள் விவாகம் செய்துகொள்ளலாம். எந்த மனைவிக்கு பங்குகொடுப்பது என்பது பிரிவி கவுன்ஸிலுக்குப் போய் செவன் விடோஸ் கேஸ் என்றே கேஸ் இருக்கிறது, ஏழு பேர்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று அவர்கள் செய்திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டிலே யாராவது சொந்தமாக சம்பாதித்து அவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு என்ன என்ன எழுதிவைக்கிறார்கள் என்பதுபற்றி கவலை கிடையாது. பலரும் கூட்டுக்குடும்பமாக இருக்கின்ற நிலையில்தான் சிக்கல்கள் எல்லாம் வருகின்றன. 1925-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், இந்தியன் சக்ஸஷன் ஆக்ட் கொண்டுவரப்பட்டு வாரிசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப் பட்டது. இந்துக்கள் பொறுத்தவரையில் ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் பிரித்துக்கொடுக்கவேண்டுமென்று 1956-லே சட்டம் வந்தது. வந்ததற்குப் பின்னாலேயும் எந்த அளவுக்கு அது அமலாகிறது என்பது மிகவும் கேள்விக்குரிய விஷயமாகத்தான் இருக்கிறது. இன்றைக்கும் பழைய முறையை வைத்துக்கொண்டே பெண்களுக்கு இஷ்டப்பட்டால் கொடுக்கலாம் என்ற நிலைமைதான் இருந்துவருகிறது பெரும்பாலும். இந்த மசோதா இங்கே விவாதிக்கப்படுவதன்மூலமாக வசதியானவர் காலமாகிவிட்டால் அவருடைய பையனுக்கும் பெண்ணுக்கும் சமபங்கு உரிமை இருக்கிறது என்று இந்தச் சட்டசபை ஞாபகப்படுத்தும் என்ற அளவுக்கு வந்தால் பேருதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவனந்தபுரத்திலே கிறிஸ்துவ சட்டத்தைக் கொண்டுவந்தபொழுது பெண்களுக்கு ஆண்களைவிட மிகக் குறைந்த முறையிலே 5 ஆயிரம் என்ற அளவிற்குமேல் போகாத அளவிலே குறைந்த அளவிற்குத்தான் இருக்கிறது. பி. ஸ்டேட் ஆக இருக்கின்ற காரணத்தினால் இந்தச் சட்டங்களை திருத்துகின்ற



அதிகாரம் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டமும் நெல்லை மாவட்டத்திலே செங்கோட்டைப் பகுதியும் அந்த முறைக்கு இடமளிக்கிற நிலைமை இருப்பதாலே எப்படி இந்துக்களுக்கு ஆண் பெண் இருவருக்கும் ஒன்று என்று கொண்டு வந்தோமோ அதைப்போன்று அங்கேயும் ஏற்படுத்தவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டுவந்திருக்கிறார்கள்.

ஏற்கனவே இருந்த சட்டத்தை ரிப்பீல் செய்துவிடுவதாலேயே இந்த நிலைமை சரியாகிவிடுமா என்பதை லா டிபார்ட்மெண்ட் பரிசீலனைசெய்து . முறையாகச் செய்யக்கூடிய வகையில் கருத்துக்களைத் தெரிந்துக்கொள்வதற்கும் கெஜட்டில் வெளியிட்டு ஜூலை 20ம் தேதிக்குள் வெளியிடுவதினால் நல்ல பிரச்சாரம் ஆகவும் விளக்கமாகவும் இருக்கும் என்பதால் இந்தத் தீர்மானத்தை, மக்களுடைய கருத்துக்களை அறிந்துகொள்வதற்காக விடவேண்டுமென்ற தீர்மானத்தை, நான் ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I wish to support the Bill moved by the hon. Member, Thiru James for eliciting public opinion. பிற்பகல் 12-30

So far as the Bill is concerned, it is a very simple thing but the reaction that it will have on the community has to be gone into in greater detail. Sir, in the Kanyakumari district the Travancore-Cochin Christian Succession Act of 1092 was the Act that was administered so far as the succession to the Indian Christian community was concerned. Even after 1951 when the Part B State (Laws) Act was passed, the Christian Succession Act was not universally made applicable to the Kanyakumari disrict and so much so there was so much of litigation and confusion in the matter of administration of this branch of law.

Sir, Hindu women can hold property. Muslim women can hold property. But in the case of Christian women, an injustice is being meted out to them. If a son is born, he is entitled to succession but if a daughter is born, she is not entitled to succession and that is law.

Sir, so far as the widows' estate is concerned, after the Hindu Succession Act of 1956 the widows' estate is no longer subsisting It has been stated in that Christian Succession Act that when an intestate dies and if he leaves behind only his wife, she is entitled only to half of the estate and that it is terminable on death or remarriage.

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஏப்ரல் 1

Sir, when Thiru Williams was a Member of this House, he also wanted to move a Bill that the Travancore-Cochin Christian Succession Act should be repealed. Due to the dissolution of the House, that Bill was not moved. Now the hon. Member Thiru James has moved an identical matter. I think it is better that the matter is discussed among the Christian community and the opinion of the bishops and other religious dignitaries obtained before the Bill is taken up for consideration in this House.

Sir, we should have a uniform Civil Code and that is contained in the Constitution and that would be in consonance with the Directive Principles of the Constitution and this legislation has to be examined in that context.

Sir, in the Travancore-Cochin High Court, in 1955 a ruling was given that even Part B State (Laws) Act, did not abrogate the principles or rights that have been conferred under the Travancore Succession Act. So far as the Madras High Court was concerned, I learn that a different view has been taken by his Lordship Ismail who stated that the Indian Succession Act would be applicable and not the Travancore-Cochin Succession Act. So I think that matter has not been finally decided because the concerned parties have now taken the matter before the Supreme Court and the decision of the Supreme Court is also awaited.

I think in a matter like this, prudence dictates that we should bestow attention and thought to the complicated legal issue and that is the reason that impelled the hon. Member, Thiru James, to move that the Bill be circulated for eliciting public opinion, so that the community that will be affected will have an opportunity to offer their remarks and objections, if any, which will have to be gone into and examined by the Government. I think there will be no objection to that course and it would be a glorious day for the womenhood of the Christian community to avail this opportunity.

Sir, the Indian Christian women of the Tirunelveli district enjoy a different right whereas the Christian women of the Kanyakumari district and parts of the Shencottah taluk have a separate law. Why should there be disparity in law? All are equal in the eye of law. I think in this matter the Hon. Minister for Law will agree with me that this Bill will have to



[Thiru R. Ponnappa Nadar]

1972 ஏப்ரல் 1]

be circulated for eliciting the opinion of the concerned community. Also, I think it would be better that the Travancore Succession Act is also repealed in relation to the Kanyakumari district and the provisions of the Indian Succession Act should be made specifically applicable and that is the legal problem which is upper most in my mind. With these words, I conclude my speech.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, குமரி மாவட்டத்திலேயுள்ள கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுடைய சொத்துரிமை பற்றிய சட்டம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த மசோதா இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது.

திருவாங்கூர் பகுதியைச் சேர்ந்த பகுதி என்ற காரணத்தினால் ஒருகாலத்திலே திருவாங்கூர் சட்டத்தின் அடிப்படையிலே இந்தச் சொத்துரிமை பரிசீலிக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தும், 'இன்டியன் சக்செஷன் ஆக்ட்' என்ற சட்டத்தின்கீழ் சொத்துரிமை பரிசீலிக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தும் இங்கே விவாதிக்கப்பட்டது. 'இண்டியன் சக்செஷன் ஆக்ட்' தான் இந்தப் பகுதியிலேயுள்ள கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாம் கொண்டுவர வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஆட்சேபிக்கக்கூடிய நிலைமை இல்லை. கொள்கையளவில் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். திரு. டென்னிஸ் அவர்களிடத்திலும் நான் கேட்டேன், அவர்களுடைய சமுதாயத்திலே வேறு ஏதாவது எதிர்ப்பு வருமா என்று கேட்டேன், திரு. பொன்னப்ப நாடார் அவர்களிடத்திலும் இதுபற்றிப் பேசினேன். அவர்களெல்லாம் பெரும்பாலும் ஒத்த கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு அந்த மாவட்டத்திலுள்ள கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நிலை ஏற்பட்டால் அதை அரசாங்கமே நிறைவேற்றி வைப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டபூர்வமாகப் பரிசீலிக்கும்பொழுது 'கன்கரண்ட் லிஸ்டி'லே வருகிறது. மத்திய சர்க்காரின் அனுமதி அல்லது கலந்து ஆலோசிக்கப்பட வேண்டுமென்ற நிலை இருக்கிறது.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இந்த மசோதாவையே குமரி மாவட்டத்திலுள்ள கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் கருத்தை அறிவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற

[திரு. செ. மாதவன்]

ஒரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நான் நம்முடைய பொன்னப்ப
நாடார் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னதைப் போல, உண்மையிலேயே
அந்தச் சமுதாயத்திலிருந்து எதிர்ப்பு வராது என்று அவர்களெல்லாம் கூறிவிட்
டதால் எப்படி சட்டபூர்வமாக இந்தச் சட்டத்தை நம்முடைய மாநில அரசே
கொண்டு வரலாம் என்பதைப்பற்றி நம்முடைய சட்டத்துறை பரிசீலித்து
அதற்கு ஒரு மசோதா உருவாக்கப்பட்டு, அந்த மசோதாவின் அடிப்படையிலே
கருத்தைத் தெரிந்துகொள்ளுகின்ற முயற்சியிலே ஈடுபட்டால்தான் அது உண்
மையிலேயே பயனுள்ள பணியாக இருக்க முடியுமென்று கருதுகிறேன். அதை
அவர்களெல்லாம் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த
அடிப்படையில் நம்முடைய அரசாங்கமும் மத்திய அரசின் கருத்தையும்
அறிந்து அது சம்பந்தப்பட்ட ஒரு மசோதாவைத் தயாரித்து அந்த மசோதா
வின் அடிப்படையிலே கருத்தறிந்து நிறைவேற்றப்பட இந்த அரசாங்கம்
உடனடியாக முயற்சிகள் எடுக்கும் என்ற கருத்தையும் நான் இந்தச் சந்தர்ப்
பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு வாரிசு உரிமைச் சட்டம் இருக்கிறது. இந்து
மதத்தைப் பொறுத்தவரை 1956-ம் ஆண்டு புதிய சட்டம் கொண்டு வரப் பட்டி
ருக்கிறது. 1938-ம் ஆண்டில் இந்துப் பெண்களுக்கு ஓரளவு உரிமை கொடுக்க
வேண்டுமென்ற சட்டம் வந்தது. அது போதாது என்ற நிலையிலே 1956-ம்
ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்போது இருக்கும் சட்டத்தில்கூட
உடனடியாக உரிமை கிடைக்கும் வகையில் இந்தியன் சக்செஷன் ஆக்டில்
உரிமை கிடைக்கும் என்று சொல்ல முடியாது. தந்தை தன்னுடைய பெண்
ணுக்குச் சொத்துரிமை வேண்டாமென்று கருதினால் தன்னுடைய வாழ்நாளி
லேயே அந்தச் சொத்துரிமை கிடைக்காது செய்யவும் இந்து சட்டத்தில் இடம்
இருக்கிறது. முஸ்லீம்களுக்குத் தனிப்பட்ட சட்டம் இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர
மற்ற மாவட்டங்களுக்கு இண்டியன் சக்செஷன் ஆக்ட் பயன்படுத்தப்படு
கிறது. ஸ்பெஷல் மாரேஜ் ஆக்ட் என்று தனியாக சட்டம் இருக்கிறது. இந்தச்
சட்டத்தின் கீழ் திருமணம் செய்கிறவர்களுக்கு வாரிசு உரிமை இண்டியன் ச
செஷன் ஆக்டின் கீழ் நிர்ணயிக்கப்படுகிறது. இதிலே பல பிரச்சினைகள் இரு
பதால் குமரி மாவட்டத்தில் பிரச்சினையைப் பொறுத்தவரை அதையெல்லா
சம்பந்தப்படுத்தாது திருவாங்கூரில் சேர்ந்திருந்த அந்தப் பகுதிகளுக்குத்
தற்போது இண்டியன் சக்செஷன் ஆக்ட் வர வேண்டுமென்று கருதுகிறார்கள்.
ஆகவே, அந்தப் பகுதியைப் பொறுத்தவரை தனியாக ஒரு மசோதா தயாரிப்
பது நல்லது என்று கருதுகிறேன்.



[திரு. செ. மாதவன்]

அவர்களே எடுத்துக் காட்டியது போல் கேரளா உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பும் தமிழ்நாட்டு உயர்நீதி மன்றம் இன்னொரு தீர்ப்புக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது என்று நண்பர் டென்னிஸ் அவர்கள் கூடச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். புதிய சட்டத்தைக் கொண்டு வரும் போது யாருக்கும் கொஞ்சமும் பாதகம் ஏற்படாமல் விரோதம் அல்லது அரசியல் குரோதம் என்ற நிலை ஏற்படாமல் கொண்டுவர வேண்டும். ஸ்டேட் ரீ-ஆர்கனிசேஷன் ஆக்ட்டின் கீழ் இந்தச் சட்டம் எப்படி எல்லாம் பாதிக்கப்படும் என்பதை எல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதையெல்லாம் பரிசீலித்து மிக விரைவில் அடுத்த சட்டமன்ற கூட்டத்திற்குள்ளாக நம்முடைய அரசாங்கம் ஒரு மசோதாவைத் தயாரித்து, இது கன்கரண்ட் லிஸ்டில் இருப்பதால், மத்திய அரசின் ஆலோசனையையும் பெற்று, கொண்டுவரப்படும். அப்படிக் கொண்டுவரப்படுகின்ற நிலையில் அங்குள்ள கிறிஸ்த்தவ சமுதாயத் தலைவர்கள் சார்பில் கருத்துச் சொன்னால் அரசாங்கம் நல்ல விதத்தில் அதைக் கொண்டு வரமுடியும். நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்கு இப்போதே செல்வாக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அதை அவர்கள் பயன்படுத்தி, மதத் தலைவர்கள், மத ஸ்தாபனங்கள் என்ற முறையில் அவர்களுடைய கருத்துக்களை விரைவில் அனுப்பினால் அடுத்த சட்டமன்றக் கூட்டத்திற்குள்ளாக இந்த மசோதாவைத் தயாரித்துக் கொண்டு வருவோம் என்று உறுதியளித்து, இந்த உறுதியின் அடிப்படையில் இந்த மசோதாவை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கான காரணத்தை ஏற்கனவே கூறியிருக்கிறேன். நான் விரும்புவது எல்லாம், ஒருவேளை நாங்கள் மக்கள் பிரதிநிதிகள், மக்கள் செல்வாக்கை வைத்துக் கொண்டு கூறுகிறோம் என்ற நிலை இல்லாமல், மதத் தலைவர்களின் கருத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் எங்கள் மீது ஒருவேளைக் குற்றம் சாட்டக்கூடிய நிலை ஏற்பட்டாலும் அதிலிருந்து நாங்கள் தப்பித்துக் கொள்ள முடியும் என்ற நிலையில்தான் பொதுமக்கள் கருத்தை அறிய அனுப்பவேண்டுமென்று கூறினேன். அமைச்சர் அவர்கள் நான் கூறியதற்கு இணக்கமாகக் கருத்தறிவித்தார்கள். எப்படியாவது எண்ணம் நிறைவேற வேண்டும். அங்குள்ள கிறித்தவப் பெண்களுக்கும் ஆண்களைப் போன்று மற்ற சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு இருப்பது போன்று உரிமை கொடுக்க வேண்டுமென்ற எண்ணமே தவிர, வேறல்ல. அந்த எண்ணத்தை அரசு ஒரு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றித் தரும் என்ற வாக்குறுதியை அளித்த பிறகு இந்த மசோதாவை வலியுறுத்தவில்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

THIRU MANALI C. KANDASWAMY: Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill 1972."

The motion was duly seconded.

The motion was put and carried and leave was granted.

THIRU MANALI C. KANDASWAMY: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள்—சிறு இனும்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் சிறு இனும்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் முறையாக வழிமொழியப்பட்டது.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா: இச் சட்டமுன்வடிவுவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் படுகிறது.

## (ii) தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

### கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பளித்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 9—12—1971-ம் நாளன்று முன்மொழியப்பட்டு விவாதித்த தீர்மானத்தின்மீது இப்பொழுது விவாதம் தொடரும்.



டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. தங்கமணி அவர்களால் ஏற்கனவே இந்த மன்றத்திலே கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்ட இந்தத் தீர்மானத்திலே அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கட்சி சார்பாகச் சில கருத்துக்களை மேலும் வலியுறுத்திச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

நெசவாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் இருக்கக் கூடிய அத்தனை உறுப்பினர்களும் ஏகமனதாக அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தக்க முடிவுகளை உடனடியாக அரசாங்கம் எடுக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

இருக்கின்ற 234 தொகுதிகளையும் எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு தொகுதியிலும், சராசரியாக ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பத்தாயிரத்து உட்பட்ட வாக்காளர் பெருமக்களின் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, ஏனை பகுதியில் ஏறத்தாழ மூவாயிரம் குடும்பங்களுக்கு மேல் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலையைப் பார்க்கும்போது மிகுந்த வேதனைக்குரிய ஒரு காட்சியாக இருக்கிறது. அங்கு வேலை செய்கிறவர்களைப் பார்த்தால் ஒரு இல்லத்தில் கணவன் வேலை செய்து கொண்டிருப்பான்; மனைவி வேலை செய்து கொண்டிருப்பாள்; குழந்தைகள் கூட அந்தப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரு குடும்பத்திலுள்ள ஐந்து பேர் சேர்ந்து இந்த வேலையைச் செய்வார்கள். ஆனால் கிடைக்கக் கூடிய ஊதியமோ ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கக்கூடிய அளவு இரண்டு ரூபாய்தான் கிடைக்கும். அதைப் பங்கிட்டுப் பார்த்தால் சராசரியாக 50 காசு, 60 காசு, 70 காசு என்ற அளவில் மட்டுமே வரக்கூடிய பயங்கரமான நிலைமையில் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். பின்தங்கிய சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் கொடுக்கக்கூடிய சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. எந்த விதமான சலுகையும் கொடுக்காததோடு மட்டுமல்ல, இவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கவும் அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை; அந்த மாதிரி நிலைமையில் இவர்கள் இருக்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இந்த மாதிரி நிலைமையில்

திரு. ஜேம்ஸ் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

THIRU MANALI C. KANDASWAMY: Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill 1972."

The motion was duly seconded.

The motion was put and carried and leave was granted.

THIRU MANALI C. KANDASWAMY: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள்—சிறு இனாம்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் சிறு இனாம்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் முறையாக வழிமொழியப்பட்டது.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா: இச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படுகிறது.

(ii) தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பளித்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 9—12—1971-ம் நாளன்று முன்வைக்கப்பட்டு விவாதித்த தீர்மானத்தின்மீது இப்பொழுது விவாதம் தொடரும்.





டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. தங்கமணி அவர்களால் ஏற்கனவே இந்த மன்றத்திலே கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்ட இந்தத் தீர்மானத்திலே அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கட்சி சார்பாகச் சில கருத்துக்களை மேலும் வலியுறுத்திச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

நெசவாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களும் ஏகமனதாக அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தக்க முடிவுகளை உடனடியாக அரசாங்கம் எடுக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

இருக்கின்ற 234 தொகுதிகளையும் எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு தொகுதியிலும், சராசரியாக ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பத்தாயிரத்து உட்பட்ட வாக்காளர் பெருமக்களின் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, ரூளை பகுதியில் ஏறத்தாழ மூவாயிரம் குடும்பங்களுக்கு மேல் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலையைப் பார்க்கும்போது மிகுந்த வேதனைக்குரிய ஒரு காட்சியாக இருக்கிறது. அங்கு வேலை செய்கிறவர்களைப் பார்த்தால் ஒரு இல்லத்தில் கணவன் வேலை செய்து கொண்டிருப்பான்; மனைவி வேலை செய்து கொண்டிருப்பாள்; குழந்தைகள் கூட அந்தப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரு குடும்பத்திலுள்ள ஐந்து பேர் சேர்ந்து இந்த வேலையைச் செய்வார்கள். ஆனால் கிடைக்கக் கூடிய ஊதியமோ ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கக்கூடிய அளவு இரண்டு ரூபாய்தான் கிடைக்கும். அதைப் பங்கீட்டுப் பார்த்தால் சராசரியாக 50 காசு, 60 காசு, 70 காசு என்ற அளவில் மட்டுமே வரக்கூடிய பயங்கரமான நிலைமையில் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். பின்தங்கிய சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் கொடுக்கக்கூடிய சலுகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. எந்த விதமான சலுகையும் கொடுக்காததோடு மட்டுமல்ல, இவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கவும் அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை; அந்த மாதிரி நிலைமையில் இவர்கள் இருக்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இந்த மாதிரி நிலைமையில்

இருக்கின்றன. அவர்கள் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை எப்படி இருக்கிறது என்றால் எந்தவிதமான காற்றும் புக முடியாத அளவுக்கு, வெளிச்சம் இல்லாத நிலையிலே, க்ஷயரோகம் வருவதற்கு என்ன சூழ்நிலை இருக்க வேண்டுமோ அத்த கைய சூழ்நிலையிலே தங்களுடைய பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இது எனக்கு எதிரில் உட்க்கார்ந்திருக்கும் நண்பர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இங்கிலாந்தில் இன்டஸ்ரியல் ரெவல்யூஷனுக்கு முன்பு தொழிலாளர்கள் எப்படி வேலை செய்து கொண்டிருந்தார்களோ, அந்த மாதிரி சூழ்நிலையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையைப் போக்க சுகாதாரத் துறை, தொழில் துறை, தொழிலாளர் நலத் துறை என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறது என்று பார்த்தால் கடந்த பத்து, பதினைந்து ஆண்டு காலமாக எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

யாராவது வெளிநாட்டுக்காரர்கள் வந்தால் இவ்வளவு கொடுமைகளுக்கு உள்ளாகி பணியாற்றிக்கொண்டிருக்கிறார்களே என்று ஆச்சரியப்படத்தக்க அளவிற்கு, இது இருபதாம் நூற்றாண்டா என்று சந்தேகிக்கக்கூடிய அளவிற்கு அங்கு அந்தத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குடும்பங்களுக்கு நீங்கள் என்னென்ன திட்டங்களை வகுக்கப் போகிறீர்கள்?

மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான ஆறுதலை அளிக்கப் போகிறார்கள் என்ற பதிலை நான் எதிர்பார்க்கிறேன். இந்தத் தொழிலாளர்களுக்கு என்ன ஊதிய பாதுகாப்புக் கொடுக்கப் போகிறார்கள், ஒரு ஆளுக்கு என்ன ஊதியம், ஒரு குடும்பத்தில் உள்ள நான்கு பேர்கள் வேலை செய்தால் அவர்களுக்கு என்ன ஊதியம் என்றெல்லாம் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒரு தொழிலாள ருக்குக் கிடைக்கும் ஊதியம் கூட இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழி லாளர்களுக்குக் கிடைப்பதில்லை, ஆகவே அவர்களுக்கு என்ன பரிகாரம் காணப் போகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தமது பதிலில் தெரிவிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அந்தத் தொழிலாளர்களுக்கு எப்படிப்பட்ட சுகாதார வசதியை அளிக்கப் போகிறார்கள் என்பதையும் அவர்களது பதிலில் எதிர் பார்க்கிறேன்.

மூன்றாவதாக, அவர்கள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு சத்துள்ள உணவு கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்கு கன்செஷனல் ரேட்டில் பல தொழிற்சாலைகளில் இருப்பதைப் போல் சப்சிடைஸ்ட் சாப்பாடு



என்ற முறையில் ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய்க்கு மூன்று ரூபாய் பெறுமான முள்ள சாப்பாடு கிடைக்கும்படிச் செய்யவேண்டும். அந்த வகையிலும் அவர் களுக்கு நன்மைசெய்து கொடுக்கமுடியுமா என்று பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, அவர்களது தொழிலுக்கு வேண்டிய எக்விப்மெண்ட்ஸை நவீன ரீதியில் ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். இப்போது அவர்கள் முப்பது வருடங்களுக்கு முன்பு பயன்படுத்தி வந்த எக்விப்மென்ட்சைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே எந்த வகையில் அவர்களுக்கு நவீன முறையிலுள்ள எக்விப்மெண்ட்ஸ் கொடுக்கப் போகிறார்கள் என்பதையும் அவர்கள் பதிலிலிருந்து அறிந்து கொள்ளவிரும்புகிறேன். பின்னர், ப்ரொட்டக்ஷன் டு தி இண்டஸ்ட்ரி, தொழி லாளர்களுக்கு பாதுகாப்பு தரவேண்டுமென்றால் தொழிலுக்கு பாதுகாப்பு தர வேண்டும்.

ஹாண்ட்லூம் செக்டாருக்கு என்ன பாதுகாப்பு தரப்போகிறீர்கள்? இப்போது அவர்கள் மில் துணியோடு போட்டி போடவேண்டியிருக்கிறது. மில்லுக்கு நாம் ஜாஸ்தி அக்கறை காண்பித்தால் இதைப் புறக்கணித்ததுபோல் ஆகிவிடும். மில்களைப் புறக்கணித்துவிட்டால் மற்ற மாநிலங்களோடு போட்டி யிடமுடியாது. ஆகவே இந்த ஹாண்ட்லூமிற்கு ஸயன்டிஃபிக் ரீதியில், விஞ்ஞான ரீதியில் என்ன பாதுகாப்பு கொடுக்கப் போகிறீர்கள் என்ற பதிலை யும் அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையில் ஐந்து நாட்களுக்குப் பிறகு எழும்பூரில் எக்ஸிபிஷன் நடக்கப் போகிறது. அந்தப் பொருட்காட்சியில் அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் வந்து பேசுவதை ஒவ்வொரு வருடமும் பார்த்துவருகி றோம். வெளி மாநிலங்களிலிருந்து நல்ல அட்ராக்டிவ் துணி ரகங்களைக்கொண்டு வந்து விற்கும்போது நம் மாநிலத்திலிருந்து எப்படிப்பட்ட துணி ரகங்களை விற்பதற்கு இந்த இலாகா ஏற்பாடு செய்திருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில் இந்த இலாகா எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் கொஞ்சமும் போதாது.

நம் மாநிலத்தில் ஏராளமானமுறையில் கைத்தறி விற்கப்படவேண்டும், வெளி மாநிலங்களிலும் நம் கைத்தறித் துணிகள் அதிக அளவில் விற்கப்படவேண்டும். அதோடு கூட வெளி நாடுகளுக்கு நம் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வ தற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? வெளிநாடு களில் இத்துணிகள் விற்பனை செய்யப்படுவதைப் பார்க்கும்போது இவ்வளவு ஊரத்திற்கு அரசாங்கத்தின் ஆதரவு இருந்தும், இவ்வளவு பெரிய இலாகாவாக இருந்தும், அரசாங்கத்தின் எல்லாவிதச் சலுகைகளும் இருந்தும் கூட இந்தப்

பொருள்களை விற்பனை செய்யமுடியவில்லை என்பது வேதனையைத் தருகிறது. அந்த வேதனையைப் போக்கும் அளவிற்கு நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கான பதிலை நான் எதிர்பார்க்கிறேன். ப்ளீடிங் மதருஸ்க்கு நல்ல பெயர் இருந்தது. அது எப்படி கெட்டுப்போயிற்று என்று தெரியும். ஏற்கனவே அந்தத்துறையில் நாம் தோற்றுப்போயிருக்கிறோம். மீண்டும் அந்தத் துறையில் வெற்றிபெற என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலோடு இருக்கிறேன். அதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன்.

பல மாநிலங்களில் தொடர்பு வைத்துக்கொள்ள இன்பர்மேஷன் அன்ட் பப்ளிஸிட்டி இலாகா என்ன செய்திருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு போர்ஷனை ஹான்ட்லூமிற்கு என்று ஒதுக்கிவைக்க வேண்டும். கரை போட்ட வேஷ்டி, அல்லது ஒருமாதிரியான புடவை என்று இப்படி ஒரு போர்ஷன் ஹான்ட்லூமிற்காக ஒதுக்கிவைக்கவேண்டும் என்று ஒவ்வொரு தடவையும் இந்த மன்றத்தில் தீர்மானம் வருவதும், அதை முன்மொழிவதும், எல்லோரும் ஏற்றுக்கொள்வது என்றும் நிலை இருக்கிறது. அப்படி ஒரு போர்ஷன் அதற்காக ஒதுக்கி வைக்கப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதற்கான பதிலையும் அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து எதிர்பார்க்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

இறுதியாக, ஒரு ஹான்ட்லூம் கமிஷனை நியமிக்கவேண்டும். இந்தக் கைத்தறித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களது கஷ்டங்களை ஆராயவும். அவர்களது வொர்க்கிங் கண்டிஷன், எமாலுமென்ட் ஸ்ட்ரக்சர் இவைகளை ஆராயவும் இத்துறையில் விஷயங்களைத் தெரிந்த நிபுணர்களைக் கொண்ட, தொழிலாளர்களுக்கு என்னென்ன துன்பங்கள் உள்ளன என்பதைப் பற்றி தெரிந்திருக்கக்கூடியவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதன் அறிக்கையைப் பெற்று அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல வாய்ப்பைப் பெற்றுத் தரவேண்டும்.

அதோடு இந்தத் துறையை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கு என்ன என்ன தேவை என்று பார்த்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

டாக்வேர்ட் க்ளாஸைல் கமிஷன் என்று போட்டார்கள், அவர்கள் அறிக்கையும் தயாரித்தார்கள். சட்டநாதன் குழு அறிக்கையும் தரப்பட்டது. அதன் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறோம் என்பதைப் பற்றி இங்கு சொல்வதாக வாக்களித்திருந்தார்கள். அந்த அறிக்கையின்மீது என்ன





நடவடிக்கைகள் எடுக்கப்போகிறார்கள் என்பதை சட்டசபைக்கு தெரிவித்தால் உறுப்பினர்களுக்கு அது ஓரளவிற்கு மனநிறைவு அளிக்கும். அந்தத் தகவலையும் சொல்லிவிட்டால் நன்றாகயிருக்கும் என்று கூறி என் உரையை நிறைவு படுத்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I thank at the outset Thiru K. T. K. Thangamani for having brought this resolution which is important. (p.m. 1·00)

The question of giving protection to the handloom industry, I need not go into, because it is well-known that the income of the handloom people are the lowest in India, if you take monthly income. What are the reasons for this state of affairs in handloom industry in spite of the fact that total production of textile mill industry is pegged to 5,000 million yards or 4,000 million metres? Handloom industry production has increased from 750 million yards to 2,700 million metres, today. Their wages have also increased from Rs. 48 to Rs. 100 per family. What are the reasons for the present situation?

Dr. Hande has given several reasons. My complaint is we have not gone sufficiently deeply into this question. Handloom is becoming more and more popular in North India. In spite of the fact that we have reserved bordered dhotis and coloured sarees for handloom, handlooms have not made headway in our State. Why? The sartorial fashion is changing. There is no use of experimenting with dhoti when they are giving way to trousers. Similarly for sarees. The market today is changing. Coloured handloom sarees is giving place to printed sarees. New designs and types are coming in printed sarees. Unless we sit together or the Research Development section of Handloom Department analysis these things and adopts remedial measures, I am sure, Madras handloom cannot make headway.

You have pegged mill production. So, what you must now see is to expand the handloom sector on proper lines, after analysing the reasons for the present glut. Now with the spread of education, the weavers' children after passing the S.S.L.C., may not sit behind the old wheel nor will the female children after passing S.S.L.C., sit in the streets, weaving sarees. Modern ideas are developing and accordingly we must change. That is why I say

give powerlooms for every two or three handlooms. Let not one man come and have a big powerloom capturing 100 handlooms. Try to give employment for weavers by giving powerlooms in the manner I have said. We must know that times are changing and accordingly we must change our method of production. The dhobis, sons after S.S.L.C. may not like to continue the old avocation of their parents. You see how dry cleaning is coming up. Let the following be done :—

(1) Let there be some sort of reservation for handloom industry.

(2) Get the essential raw materials that they want.

(3) Appoint Development Commission to go round country and start manufacturing what the people want.

(4) Develop small handloms into powerlooms without creating unemployment.

Unless these things are done seriously, our handloom industry cannot make headway. If these things are done, we have a great future.

Many here do not know and I am not a person to self-advertise, that I did some research into handloom industry when the British Government was here and Mr. S.A. Venkataraman was Registrar of Co-operative Societies. So, I talk from experience and not as a lay man.

Unless we diversify production, it is very difficult for handloom industry to expand. I hope under the D.M.K. Government, the Handloom industry will flourish under our industrious Minister for Industries.

We have appointed so many committees but their reports are there on the shelves. So let us proceed on the lines I have indicated and I am sure we will succeed. **Thank you.**

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்களே, இந்த நெசவுத் தொழிலுக்கு ஊக்கம் தரத்தக்க வகையில் அரசு ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று பிரேரேபிக்கும் இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.



**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, நான் பேசும்போது ஆசிரியர்கள் எல்லாம் தெரிந்தவர்கள் ஆகவும், மாணவர்கள் தெரியாதவர்கள் என்ற கருத்தில் சொல்லவில்லை. At least there should be presumption என்று சொன்னேன். ஆசிரியர்கள் நம்மைவிட அதிகம் தெரிந்தவர்கள் என்ற எண்ணம் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் சொன்னேன். அப்படி இருந்தால் தான் படிக்க முடியும் என்ற கருத்தில் சொன்னேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அதிலே ஒன்றும் ஆட்சேபணையில்லை. நான் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளையும் சொன்னீர்கள். குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும். குழந்தைகளைப் பெற்றவர்கள் குழந்தைகள் இயல் சொல்வதையும் கேட்கவேண்டும், அவர்களுக்கு இப்படிப்பட்ட சுதந்திரம் கொடுத்தால்தான் நல்ல முறையில் வளர்ச்சியடைவார்கள் என்று குழந்தை வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். அதேபோன்று, தொழிலாளர்களுக்கு அதிக உரிமைகள் வழங்கவேண்டும். அப்போதுதான் தொழில் முன்னேறும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாணவர்கள் உள்ளத்தில் பல்வேறு ஆசைகள், நல்ல நல்ல கருத்துக்கள், எண்ணங்கள் உண்டு. கல்வியின் தரம் இப்படியிருக்க வேண்டும். சிலபஸ் இப்படி இருக்கவேண்டும் என்ற கருத்து நிச்சயமாக அவர்களுக்கு ஏற்படத்தான் செய்யும். அந்த எண்ணங்களை வெளிப்படுத்த என்ன வழி? இப்போது ஆர்பாட்டங்கள், ஊர்வலங்கள் எடுத்துத்தான் சொல்லவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை மாறவேண்டுமானால், அவர்களின் எண்ணம் சரியான முறையில் வெளிப்படுத்தப்படவேண்டுமானால், சொல்லவேண்டிய இடத்தில் சொன்னால்தான் முடியும்.

கல்வித் துறையைப் பற்றி, பாடத் திட்டங்களைப் பற்றி அவர்களுக்கு அனுபவ வாயிலாக எடுத்துச் சொல்லி செயல்படுத்தும் வாய்ப்பு தரவேண்டும். ஆசிரியர்களுக்கு ஏன் சின்டிகேட், செனட், அகடமிக் கவுன்சிலில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யூனிவர்சிடி அமைத்துக்கொடுக்கிற பாட திட்டங்களை அப்படியே சொல்லித் தரவேண்டிய பொறுப்பைக்கொண்டவர்கள் தானே? அவர்களுக்கு மட்டும் ஏன் பிரதிநிதித்துவம் கொடுத்து இருக்கிறோம்? அவர்களுக்கு அனுபவத்தின் வாயிலாக பல கருத்துக்கள் இருக்கும். அவர்களுடைய வாழ்வும், யூனிவர்சிடி, பல்கலைக் கழகத்தின் வாழ்வில் சம்பந்தப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டு காரணத்தால்தான் ஆசிரியர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாணவர்களுக்கும், அவர்களுடைய அனுபவத்தின் வாயிலாக பல கருத்துக்கள் ஏற்பட்டிருக்கும். அவர்களுடைய எதிர்காலமே அதில் சம்பந்தப்பட்டு இருக்கிறது. ஆசிரியர்களுக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது. சம்பளம் வந்து கொண்டிருக்கும்.

முன்பு இந்தக் கைத்தறி துணிகளுக்கு எங்கும் தாராளமாக விற்கவேண்டுமென்று நோக்கம் கொண்டு வந்தபோது, வியாபாரிகளும் கைத்தறித் துணியை விற்றால் 10 சதவிகிதம் ரிபேட் கொடுக்கப்பட்டது. கூட்டுறவு ஸ்டோரில் விற்றாலும் 10 சதவிகிதம் ரிபேட் என்று கொடுக்கப்பட்டது. இன்று அந்தச் சலுகை கூட்டுறவு ஸ்டோர்களில் இருக்கும் வியாபாரத்திற்கு மட்டும் வைத்துக்கொண்டு விட்டு வியாபாரிகளுக்கு இல்லை யென்று சொல்லிவிட்டார்கள். வியாபாரிகளுக்குச் சலுகை கொடுத்தால் நன்றாக கைத்தறி துணி வியாபாரம் பெருகும். இதனால் நிச்சயம் கைத்தறித் துணி நிறைய செலவாகும். துணிகள் அதிகம் செலவானால் தொழில் அபிவிருத்தியாகும். தொழில் அபிவிருத்தியானால் நெசவுத் தொழிலாளர்களுக்கும் நல்ல கூலி கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர்களுடைய குடும்பங்கள் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரம் வேலை செய்யவேண்டியிருக்கிறது. சிறு குழந்தை முதற்கொண்டு, 6, 7 வயது குழந்தை முதற்கொண்டு இந்தத் தொழிலில் ஈடுபட்டு சம்பாதித்தால் கூட ஒரு வாரத்திற்கு அந்தக் குடும்பம் ரூ. 30-க்கும் அதிகமாக வருமானம் பெறமுடியாத நிலையில் இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய வாழ்க்கை சூழ்நிலையில் நான்கு ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பம் ஒரு வாரத்திற்கு ரூ. 30, 40 வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்த முடியாது. ஆகவே, அவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க வழிவகைகள் செய்யவேண்டும்.

அத்தோடு கைத்தறிக்குப் போதுமான நூல்கள் மில்களிலிருந்து கிடைக்காமல், இடைஞ்சல்கள் இருக்கின்றன. திடீரென்று நூலின் விலையேறிப்போகிறது. இந்த வாரம் நூல் விலை ஒன்றாக இருந்தால், அடுத்த வாரம் நூல் விலை ஏறிவிடுகிறது. ஆனால் தயாரித்து வைத்திருக்கிற துணிகளுக்கு மார்கெட்டில் எப்பொழுதும் ஒரு நிரந்தரமான விலை தான் இருக்கிறது.

கைத்தறி வியாபாரிகள் தங்கள் துணியின் விலையை கட்டுப்படுத்தி விற்கிறார்கள். மில்காரர்கள் திடீரென்று நூல் விலையைக் கூட்டிவிடுகிறார்கள். இதனால் கைத்தறி நெசவாளர்கள் நசித்துப்போய்விடுகிறார்கள், நஷ்டம் ஏற்படுகிறது. இம்மாதிரி சங்கடங்கள் ஏற்படும்பொழுது வியாபாரிகள் தங்களுடைய சங்கடத்தை நெசவாளர்களின் தலையில் தான் சுமத்திவிடுகிறார்கள்.

ஆகவே, மில்கள் சரியான விலையில் நூல்களை விற்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அது மட்டுமில்லை. அவர்களுக்குத் தேவையான நூல் 40, 60, 80-ம் நம்பர் நூல்; தேவையான நூல் மில்களிலிருந்து கிடைப்பது கஷ்டமாகி விடுகிறது. ஆகவே, சரியான முறையில் மில்களிலிருந்து கைத்தறித் துணிக்குத் தேவையான நூல்கள் மார்க்கெட்டில் பொதுவாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*





கைத்தறித் தொழிலுக்கு சில மில்களும் சேலைகளைத் தயாரிக்கின்றன. ஒதுக்கியிருக் கும் ரகங்களை நாம் ஒதுக்கியிருந்தால் கூட—சேலை முதலியவைகளை ஒதுக்கியிருக்கிறோம் என்றால், பவர்லூம் போன்ற மில்கள்—நடைமுறையில் என்ன பார்க்கிறோம் என்றால், ஸ்தாபனங்களோடு கைத்தறி நெசவாளர்கள் போட்டி போட முடியவில்லை. காரணம் சேலைகள் உண்மையில் கைத்தறித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட, பவர்லூமில் உற்பத்தி செய்யப்பட்டு வெளிவராத சேலைகளே கிடையாது என்று சொல்ல முடியும். மிக அழகான வண்ணங்களில் வருகின்றன. மிக அழகாக பிரிண்ட் செய்யப்பட்டு வருகின்றன. அழகை நாடக்கூடிய மக்கள் மில்துணிகளைத் தான் வாங்குகிறார்கள். இவைகளுக்கு எதிராக கைத்தறித் துணிகளை விற்பதில் போட்டி போட முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் ஒரு நல்ல யோசனையை அரசு நிறைவேற்றிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்கிற இந்த யோசனையை மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யவேண்டும் இந்த அரசாங்கம் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது பெரும்பாலும் சேலைகளை தயாரிப்பதற்கு மில்களுக்கு முதலில் காடா, சாதாரண கச்சாத் துணிதான் தேவைப்படுகிறது. இந்த காடா துணியைத் தான் ப்ளீச் செய்து, ப்ராசெஸ் செய்து, பிரிண்டு செய்து அல்லது பார்டர் போட்டு சேலைகளாக நெய்கிறார்கள். ஆகவே, இம்மாதிரி சேலைகள் தயாரிப்பதற்கு காடா துணிதான் மில்களுக்கு தேவைப்படுகிறது. ஒரு பெரிய மில்லை எடுத்துக்கொண்டால் 10 விழுக்காடு கைத்தறி காடா வாங்கவேண்டும் என்ற ஒரு நிபந்தனையைப் போடவேண்டும். பவர்லூமில் ரூ. 400 கோடி அளவுக்கு கைத்தறி துணி உற்பத்தி ஆகிறது. அவர்கள் 40 கோடி ரூபாய் அளவுக்கு காடா வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை ஏற்படுத்தினால், கைத்தறியில் நெய்யப்பட்ட காடாவை அவர்கள் வாங்கவேண்டிவரும். அதனால் அவர்களுக்கும் நஷ்டம் இல்லை. அதை ப்ளீச் செய்து, ப்ராசெஸ் செய்து, பிரிண்டு செய்து அழகான சேலைகளை உற்பத்தி செய்து விற்க முடியும். அதன் மூலம் மில்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை. அதே சமயத்தில் கைத்தறித் துணிக்கும் ஆக்கம் ஏற்படுகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : I may inform the hon. Member that 50 per cent damage would occur if handloom cloths are processed in textile machinery.

THIRU V. M. ABDUL JABBAR : I emphatically do not agree with the opinion of my hon. Friend. I too am in the trade; I know it.

[திரு. வா. மை. அப்துல் கபார்]

தலைவர் அவர்களே, 50 பெர்சன்டுக்கு டாமேஜ் வரும் என்று சொல்கிறார்கள். அதை நான் உண்மையிலேயே வன்மையாக மறுக்கிறேன். கைத்தறித் [illegible] தயாரித்துக்கொடுத்தால், [illegible] தான் அந்த விலை கிடைக்கும் என்று மில்கள் [illegible] கொடுக்க [illegible] கைத்தறியில் காடா தயாரித்துக் [illegible] வேண்டும் [illegible] இருக்கும், அதற்கு எத்தனை இந்தமாதிரி காடா [illegible] கொண்டால், இம்மாதிரி [illegible] ஆகவே, அரசு [illegible] செய்ய முன்வரவேண்டும் என்று [illegible] மாநில கிறேன். இந்த விஷயத்தில் இரு சாரருக்கும் நன்மை ஏற்படும். இதன் மூலம் கைத்தறி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு [illegible] வருவாய் கிடைக்க வழிவகைகள் ஏற்படும்.

இரண்டாவதாக, நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சுகாதார வசதிகள் மிகக் குறைவு. வீடு இல்லாமல் [illegible] தெரு ஓரங்களில் படுத்து உறங்குகிறார்கள். [illegible] கல்வி [illegible] குடும்பத்தில் இருப்பவர்கள் கல்வி [illegible] நெசவா[illegible] அவர்களை பாது[illegible] முழுநேரத்தை விடுகிறார்கள். அதனால் அந்தக் குழந்தைகள் கல்வி [illegible] இல்லாமலே [illegible] செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தின் பேரில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: [illegible] தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கைத்தறித் தொழிலுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதற்காக, அதற்கு ஒரு [illegible] வழிவகை கொடுக்கவேண்டும் என்ற ஒரு பிரேரணையை இந்த மன்றத்தின் முன்னால் சமர்ப்பித்திருக்கிறார்கள். [illegible] நல்ல கருத்துக்களைச் சொல்ல இந்த தொழிலில் [illegible] வாய்ப்பளித்ததற்கு அவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கனவே இந்தத் தொழிலில் இருக்கக்கூடிய [illegible] அதன் காரணமாக பல உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களையெல்லாம் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் தெரிந்த விஷயம், நம்முடைய கைத்தறித் தொழில் இருக்கிறதே, அது ஒரு தாழ்த்தப்பட்ட தொழிலாக அமைந்திருக்-



61564

[திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி]

கிறது. சமுதாயத்தில் எப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களோ, அதைப்போல இந்தத் தொழில் துறையிலும் கைத்தறித் தொழில் தாழ்த்தப்பட்ட தொழிலாக இருந்து வருகிறது. நம்முடைய [illegible] அமைப்பில் தொழில் துறையில் இந்த கைத்தறித் தொழி[illegible] இருக்க வேண்டுமா அல்லது இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய மக்களையெல்லாம் வேறு புதிய தொழிலுக்கு போகச் சொல்லவேண்டுமா என்பது ஒரு பக்கம் இருக்கக்கூடிய சர்ச்சையாகும். அதே நேரத்தில் இந்தத் தொழிலை எப்பொழுதும் நீடித்துவைத்து இந்தத் தொழில் நல்ல முறையில் செயல்படுவதற்கு வேண்டிய வசதிகளையும், அந்தத் தொழிலாளிகளுக்கு வேண்டிய நல்ல திட்டங்களையெல்லாம் கொடுக்கவேண்டுமா என்பது இரண்டாவது பிரச்னை. இந்தப் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவு, திட்டமான முடிவு, நிச்சயமான முடிவு எடுத்துக் கொண்டால் தான், இனிமேல் இந்தத் தொழிலில் என்னென்ன முறையில் நல்ல சீர்திருத்தம் செய்து இந்தத் தொழிலை வளம்பெறச் செய்ய முடியும் என்பதைப் பற்றி ஆலோசிக்க முடியும்.

ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேல் நாடுகளில் கைத்தறித் தொழில் எப்படியோ படிப்படியாக இயந்திரமாக்கப்பட வேண்டும் என்ற முறையில் பொருளாதார வளர்ச்சி அங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், மேல் நாடுகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில், அதே கொள்கையை பயன்படுத்தி, நம்முடைய நாட்டிலும் எல்லாவற்றையும் இயந்திரமயமாக்கி தொழில் முறை முன்னேற்றத்துக்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்த்தோமானால், மேல்நாடுகளுக்கும் நம்முடைய நாட்டிற்கும் இருக்கக்கூடிய ஒரு பெரிய வித்தியாசம், மனித சக்தி நம்முடைய நாட்டில் ஏராளமாக இருக்கிறது. எனவே அந்த மனித சக்தியை பயன்படுத்தாமல், எல்லாவற்றையுமே இயந்திரமயமாக்கி நம்முடைய நாட்டில் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காணமுடியுமா என்றால், முடியவே முடியாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இன்று நம்முடைய நாடு இருக்கக்கூடிய நிலையில், தமிழ் நாட்டில் மட்டும் சுமார் 5 லட்சம் கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 5 லட்சம் கைத்தறித் தொழிலாளர்களைச் சார்ந்து இருக்கக்கூடிய சுமார் 20 லட்சம் மக்கள் கொண்ட ஒரு பெரிய பகுதியை, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற இந்த மக்களை 'நீங்கள் எல்லோரும் இந்தத் தொழிலை விட்டுவிட்டு, புதியதாக வேறு தொழில்களுக்குப் போக முயற்சி செய்யுங்கள்' என்று சொன்னால், எந்தத் தொழிலில் இவர்கள் அத்தனை பேர்களையும் கொண்டுபோய் சேர்க்க முடியும்? மேல் நாடுகளைப் போல அவ்வளவு பெரிய தொழில் வளர்ச்சி நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறதா? 20 லட்சம் மக்களை ஈடுபடுத்தக்கூடிய அளவில் இயந்திரத்தின் மூலம் செயல்

படுகின்ற ஒரு பெரிய தொழில் அமைப்பை நம்முடைய நாட்டில் அமைக்க
முடியுமா என்று கேட்டால், முடியவே முடியாது. அந்த நிலையில் நம்முடைய
நாமு இல்லை. நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய மனித சக்தியை பயன்
படுத்தி, இப்பொழுது அவர்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய கைத்தறித் தொழிலைத்
தான் அபிவிருத்தி அடையச் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

கைத்தறித் தொழிலுக்கும், கைத்தறி மூலம் தயாரிக்கக்கூடிய துணிக்கும்
மேல் நாடுகளில் கிராக்கி இருந்துகொண்டுதான் இருக்கிறது. தமிழகத்தில்
இருக்கக்கூடிய மக்களும், அதைப்போல இந்தியாவிலே இருக்கக்கூடிய மக்களும்,
ஏழை மக்கள் அத்தனை பேர்களும் அதிகமாக விரும்புவது கைத்தறித் துணி
யாகத்தான் இருக்கிறது.

எனவே, உடனடியாக நாம் இந்தக் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள
மக்களை வேறு தொழிலுக்கு மாற்றிப் போகவேண்டுமென்று கேட்டால், அதற்கு
எத்தவிதமான ஏற்பாடும் இப்போதுள்ள சூழ்நிலையில், நாம் அந்த எல்லாத்
தொழிலாளர்களுக்கும் வேறு ஏதாவது தொழில் கொடுக்க முடியுமா என்றால்
அதுவும் முடியாது. எனவே, இந்தக் கைத்தறித் தொழிலில் இப்போதிருக்குப்
முறையில் என்ன முறையில் உதவிகள், வசதிகள் செய்து கொடுத்தால் இந்தத்
தொழில் சிறந்து நடக்கும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் மிகக்
குறைந்த வருவாய் பெற்றுள்ள மக்கள், அதை எந்த முறையில் அதிகமாக்க
முடியும் என்பதைப்பற்றி சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த
முறையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது கைத்தறித் தொழிலுக்குப் போட்டி என்னவென்றால், மில் க்ளாத்—
இயந்திரத்தின் மூலம் தயாராகும் துணிகள். இவை இரண்டுக்கும் உள்ள போட்டி
"அன்ஹெல்தி காம்பெடிஷன்" என்ற முறையில் இருக்கிறது. ஏனென்றால்,
மில் துணிகள், அதற்கு வேண்டிய மூலாதாரப் பொருட்களை (ரா-மெடீரியல்ஸ்)
அதுவே தயாரித்துக்கொள்கிறது. ஆனால் கைத்தறிக்கு வேண்டிய 'ரா-மெடீரி
யல்ஸ்', மூலாதாரப் பொருட்கள், மில்லைச் சார்ந்துதான் இருக்கவேண்டியிருக்
கிறது. எனவே, மில் தொழிலில் ஈடுபட்டவர்கள், இன்னொரு தொழிலில்
ஈடுபட்டவர்களுக்கு—கைத்தறித் தொழிலுக்கு வேண்டிய 'ரா-மெடீரியல்ஸ்'
—அவர்கள் நினைத்த நோக்கில் விலையை அதிகமாக ஏற்றிக் கொள்கிறார்கள்.
இதன் காரணமாக கைத்தறித் தொழிலை நசுக்குவதற்கு, மில் தொழிலைவிட
சிறந்த முறையில் நடக்காமல் இருப்பதற்கு, அவர்கள் அதிக வருவாய் பெறுமல்
தடுப்பதற்கு. அந்த நிலையில் அவர்களை வைக்க வேண்டும் என்று சொல்லுமள
விற்கு வேண்டிய வசதிகள் இப்போது மில் தொழில் நடத்துகிறவர்கள் கையில்
இருக்கிறது. அவர்கள் எப்போதுமே மில் முதலாளிகளுடைய தயவை எதிர்





பார்த்துக்கொண்டு, அவர்கள் விலையை கூட்டாமல் இருப்பார்களா என்று எதிர் பார்த்துக்கொண்டு, அந்த முறையில் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு எவ்வளவு காலத்திற்கு அச்சமின்றி, நிம்மதியாக தொழில் நடத்திக்கொண்டிருக்க முடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதனால் தான் மதிப்பு மிக்க தங்கமணி அவர்கள் ஒரு பாதுகாப்பு கொடுக்கவேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். இன்னொருவர் பேச வேண்டும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: 2 அல்லது 3 நிமிடங்களில் முடித்து விடு கிறேன். எனவே, கைத்தறித் தொழிலை பாதிக்கக் கூடிய அவசியம் என்ன என்பதை உணர்ந்து அது பாதிக்கப்படாமல் நடக்க வேண்டிய நடவடிக்கை கள் எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முக்கியமாக, கைத்தறித் தொழிலுக்கு வேண்டிய மூலாதாரப் பொருட்களை கைத்தறித் தொழிலில் ஈடுபட்டவர்களே தயாரிக்கும் முறையைக் கண்டு கொண்டால் நிச்சயமாக கைத்தறித் தொழிலுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி இல்லாமற் போகும். சில இடங்களில் அவர்களுக்கு திடீரென்று வேலையில்லாத் திண்டாட்டம் வருகிறது. அப்போது கைத்தறித் தொழிலில் ஈடுபட்ட மக்கள் வேலையில்லாத போது, வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டு மென்று போராட்டம் நடத்தும் நிலையில் இருக்கிறார்கள். இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலில் ஏற்றுமதி பற்றி ஒரு சின்ன கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் கைத்தறித் துணிகள் பம்பாய்க்கு சென்று, அங்கு கோடவுனில் தேக்கி, அங்கேயிருந்து ஏற்றுமதியாகிறது. நம் சென்னைத் துறை முகத்தில் கைத்தறித் துணிகளைத் தேக்கி வைக்க 'கோடவுன்' வசதி செய்து அதன் மூலம் ஏற்றுமதியானால், தமிழ்நாட்டிலிருந்து கைத்தறித் துணி ஏற்று மதிக்கு வசதி செய்து கொடுத்தால், நிச்சயமாக ஓரளவுக்கு கைத்தறித் தொழி லுக்கு தமிழகத்தில் நல்ல வாய்ப்பாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, கைத்தறித் தொழில் பாதிக்கப்படாமல் நடக்கின்ற முறையில் ஒரு நல்ல சட்டத்தை "காம்ப்ரிஹென்சிவ் ஆக்ட்" கொண்டு வர வேண்டும் என்று இந்த தீர்மானம் கொண்டு வந்திருப்பது மிக வரவேற்கத் தக்கது, என்று சொல்ல ஆசைப்படு கிறேன்.

ஆனாலும் அந்தக் கல்வித் துறையில் மாற்றம் என்று சொல்கிறபோது பல இடர்ப்பாடுகள் வருகின்றன. சட்டமன்றத்தில் இதுபற்றிய கேள்விகள் எழுப்பப்படுகின்றன, அப்போது எல்லாம் அமைச்சரவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? யூனிவர்சிடி அடாமனஸ் பாடி, அதில் அரசாங்கம் ஒன்றும் தலையிட முடியாது, இப்படித்தான் செய்ய வேண்டுமென்று ஆணையிட முடியாது என்று சொல்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம் என்ற பதில் தான் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகம்—பள்ளிப் பருவத்திற்குப் பிறகு, கலாசாலைதான் மாணவர்கள் எதிர்காலத்தை செப்பனிடப்படுவதற்கு கருவியாக இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகம் எப்படி இருக்கிறது என்று கேட்டால் அங்கே புதிய கருத்துக்கள் நுழைவதற்கே கடினமாக இருக்கிறது. புதிய கோட்பாடுகள் நுழைவதற்கே சிரமமாக இருக்கிறது.

இங்கேயுள்ள யூனிவர்சிடி ஆக்டைப் பார்த்தேன். செனட், சின்டிகேட், அகடமிக் கவுன்சில் இவற்றில் எல்லாம் பழைய பெரியவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் முன்னொரு காலத்து கருத்துக்களை கோட்பாடுகளை வேல்யுசைக் கொண்டவர்கள். இன்றைக்குக் கருத்துக்கள், கோட்பாடுகள், வேல்யூஸ்கள் மாறுகின்றன. புதிய சமுதாயத்திற்கு ஏற்ப கருத்துக் கோட்பாடுகளை அமைத்தாக வேண்டியிருக்கிறது. அதற்கு இடையூறாக அவர்களின் கருத்துக்கள், கோட்பாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன.

இப்படிச் சொல்கிறபோது தான் நண்பர் லத்தீப் குறிப்பிட்டார்கள்

'He is there to be taught and not to teach; he is there to be guided and not to guide; he is there to be advised and not to advise; and he is there to be suggested to and not to suggest'. என்று எல்லாம் சொன்னார்கள். இது எல்லாம் சரி. சின்னக் குழந்தைகளிடத்தில், நான் எல்லாம் சின்னப்பையனாக இருந்த நேரத்தில் என் தகப்பனார் சொல்வார்கள். நீ சின்னப் பையன், நாங்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும். பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும். பெரியவர்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்று சொல்லுவார்கள். தொழிற்சாலைகளில் எடுத்துக்கொண்டால், நிர்வாகத்தினர் சொல்லுவார்கள். நீ இப்படி வேலை செய், நான் சொல்கிறபடி வேலை செய்யத்தான் நீ இருக்கிறாய் என்று சொல்லார்கள். இப்படி ஒரு கருத்து முந்தைய தலைமுறையில் இருந்தது. ஆனால் இப்போது அந்தக் கருத்துக்கள் மாறுகின்றன. குழந்தைகள் இயல் வல்லுநர்கள் என்ன சொல்கிறார்கள், குழந்தைகளிடத்தில் அப்படிச் சொல்லக் கூடாது, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள்.



[திருமதி த. ந. அனந்தநாயகி]

பல லட்சம் நெசவாளர்களைக் கொண்ட தமிழகத்தில் அதற்கு என்று ஒரு தனி அமைச்சரே போட்டாலும் வரவேற்கத் தக்கதாகும். அப்போதுதான், அப்போதைக்கப்போது வரும் பிரச்னைகள் என்ன என்பதை ஓரளவு புரிந்து கொள்ள முடியும். பெண்கள் மட்டும் இல்லையென்றால் இப்போது இருக்கும் கைத்தறித் துணி கூட நசித்துப் போயிருக்கும். பெண்கள் கைத்தறியை இந்த அளவுக்கு காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். என்னதான், மில்கள், கைத்தறியுடன் போட்டி போட்டாலும் கூட கைத்தறிச் சேலைகள், கைத்தறி பட்டுச் சேலைகளில் அவர்கள் தனி கவனம் செலுத்தி வாங்கிக் கொண்டிருப்பதால்தான் அது காப்பாற்றப் படுகிறது, என்பதை கனம் கைத்தறி அமைச்சர் அவர்கள் உணருவார்கள் என்று நினைக்கிறேன். நான் உடுத்தி இருப்பது கதர்ப் பட்டு. இரண்டும் ஒன்றுதான். அதற்கு இது ஒரு படி மேல். இன்றைக்கு அதைக் காப்பாற்றுவது பெண்கள்தான்.

ஆனால் இந்தக் கைத்தறித் துணிகளை விற்பதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறோம்? வருஷா வருஷம் ஒரு கைத்தறி வார விழா கொண்டாடி, பொங்கல், தீபாவளி எப்போது வரும் என்று பார்த்து, 5 பைசா, 10 பைசா ரிபேட் கொடுப்பது, இப்படியே எத்தனை நாள் ஒரு தொழிலுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். மில்களுக்கென்று சில துணிகள், கைத்தறிக் கென்று சில துணிகள் உற்பத்தி செய்ய ஒதுக்கவேண்டும். கரை போட்ட வேட்டி, சேலைகள் —It must be exclusively reserved for the handloom industry. கைத்தறி மாத்திரம் இதைச் செய்யவேண்டும்; மற்றவர்கள் செய்யக் கூடாது என்று எத்தனையோ காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதை யாரும் கடைப்பிடித்ததில்லை. யாரும் அமுல் நடத்தவில்லை. லட்சக்கணக்கான நெசவாளர்களுக்கு உற்சாகம் தரும் அளவில் கரைபோட்ட சேலைகள், வேட்டிகள் உற்பத்தியை கைத்தறிக்கு ஒதுக்கி வைக்கவேண்டும் என்று இருந்தால்தான் சிறப்பாக இருக்குமென்று நினைக்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் 'மாஸ்டர் வீவர்ஸ்' என்று இடைத் தரகர்கள் சிலர் இருக்கிறார்கள். இந்த மாஸ்டர் வீவர்கள் கையில் மாட்டிக் கொண்டிருக்கும் கைத்தறி நெசவாளர்கள் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். பல துறைகளில் இடைத் தரகர்களை ஒழிக்கிறோம். இனாம், ஜமீன், ஒழிக்கிறோம். ஏன்? இன்றைக்கு மார்க்கெட் கமிட்டியில் கமிஷன் ஏஜெண்டுகளை ஒழித்திருக்கிறோம். இந்த நிலை வரும்போது மாஸ்டர் வீவர்ஸ்

[திருமதி த. ந. அனந்தநாயகி]

என்ற ஒரு இடைத் தரகர்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களின் நிலைமை என்ன என்று ஆராய்வதற்கு தனி நிபுணர் கமிட்டி போட்டு அந்தப் பிரச்சினையில் அக்கறை காட்ட அரசாங்கம் முன்வரவேண்டும்.

அடுத்து நெசவாளர்கள் கூலி மிக மிகக் குறைவு. அதுவும் கிடைத்தால் உண்டு; இல்லாவிட்டால் இல்லை. மாஸ்டர் வீவர் இஷ்டப்பட்டால்தான் வேலை கொடுப்பார். சரக்கு தேங்கி விட்டால், வேலையில்லை போ என்று சொல்லி விடுவார். இப்படி நிரந்தரம் இல்லாத ஒரு நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு பரிகாரம் காண வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற முறை அதற்கென்று ஒரு கமிட்டி போட்டிருப்பதாகவும் அது ஆராயப் போகிறது என்றும் சொல்லப்பட்டது. ஆனால் நெசவாளர் நிலைமையை ஆராயும்போது துரிதமாக நிரந்தரக் கூலி பெற வழிவகை செய்ய வேண்டும். அப்போது குறைந்தபட்சக் கூலி என்னவாக இருக்கவேண்டும் என்றும் யோசிக்கவேண்டும்.

பிற்பகல் 1-30 வெளிநாடுகளுக்கு நம்முடைய கைத்தறித் துணிகளை அனுப்பி அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்துக்கொண்டிருந்தோம். 'ப்ளீடிங் மெட்ராஸ்' என்ற பெயரில் வெளிநாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். அதிகமாக அமெரிக்காவுக்குச் சென்றுகொண்டிருந்தது. நான் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது கூட, அங்குள்ளவர்கள் என்னை 'நீங்கள் சென்னையிலிருந்து வருகிறீர்களா' என்று கேட்கவில்லை. 'ப்ளீடிங் மெட்ராஸ்' வருகிறதே அந்த ஊரிலிருந்தா வருகிறீர்கள் என்றுதான் கேட்டார்கள். ப்ளீடிங் மெட்ராஸ் என்றால் சென்னைக்கு அவ்வளவு பெருமை இருந்தது. இன்றைக்கு அந்தப் பெருமை, அந்த கௌரவம் கிடையாது. காரணம் இதைப்போன்றத் துணிகளை மில்லிலேயே தயார் செய்து கொடுக்கிறார்கள். நாமும் காலாகாலங்களில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. திருமதி அனந்தநாயகி அவர்கள் தொடர்ந்து
பிற்பகல் 1-31 அடுத்த 'நான்-அஃபிஷியல்' தினத்தன்று பேசுவார்கள். பேரவை நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 9-00 மணியளவில் மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**



## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

**89. Notification issued with Memo. No. 129603/A-11/71-3,** Agriculture, dated the 24th December 1971, in regard to an amendment to the Agriculture Department notification II-1 No. 1304 of 1969, relating to declaration of market area to the market at Vadaseri in Kanyakumari district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

90. Notification issued with G.O. Ms. No. 2308, Rural Development and Local Administration, dated the 15h October 1971, in regard to redescription of the areas forming the Thottiam, Musiri, Thathiengarpet, Thuraiyur and Uppiliapuram Panchayat Unions in the North Tiruchirappalli development district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

91. Notification issued with G.O. Ms. No. 3342, Home, dated the 10th December 1971, making the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Rules, 1971. [Laid on the Table of the House under section 27 (4) of the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Act, 1971 (Tamil Nadu Act 37 of 1971).]

### B. *Reports, Notifications and other papers*

159. Notification issued with G.O. Ms. No. 2891, Revenue, dated the 5th October 1971, in regard to an amendment to the table of fees published at pages 316 to 319 in part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

160. Notification issued with G.O. Ms. No. 3801, Revenue, dated the 19th November 1971, in regard to remission of Stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the two sale deeds in favour of the N.A. Annappa Raja Memorial High School, Rajapalayam of Ramanathapuram district.

## இணைப்பு—I.

[1-ஆம் பக்கத்தில் 813-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(*a*) & (*b*) Cash awards were paid to the following Police Officers and Fire Service Officers in the Chief Minister's Police Medal Parade held in Tiruchirappalli on 15th September 1971.

### FOR OUTSTANDING SERVICE.

| | Name. (1) | Lump sum grant. (2) |
|---|---|---|
| 1 | Thiru S. Rangiah Naidu, Head Constable No. 3269, Madras City Police. | Rs. 1,000 (Rupees one thousand only). |
| 2 | Thiru K. Subramaniam, Head Constable No. 1291, Madurai (Urban) district. | Do. |
| 3 | Thiru K. Sundaram, Head Constable 81, Special Branch, C.I.D., Madras. | Do. |
| 4 | Thiru A. Arokiaswamy, Police Constable 484, Tiruchirappalli district. | Do. |
| 5 | Thiru M. Shunmugiah Thevar, Police Constable 1682, Tirunelveli district. | Do. |
| 6 | Thiru N. Kannadoss, Head Constable 199, Vigilance and Anti-corruption, Madras. | Do. |
| 7 | Thiru C. Subbiah, Inspector of Police, Crime Branch, C.I.D., Madras. | Rs. 2,000 (Rupees two thousand only). |
| 8 | Thiru P. K. Ramaswamy, Inspector of Police (Officiating), Food Cell (C.I.D.), Madras. | Do. |



| | Name. (1) | Lump sum grant. (2) |
|---|---|---|
| 9 | Thiru P. A. Manickam, Inspector of Police (Officiating), Madras City. | Rs. 2,000 (Rupees Two thousand only). |
| 10 | Thiru G. Varadarajan, Inspector of Police (Officiating), Madras City. | Do. |
| 11 | Thiru P. Sekhara Panickar, Inspector of Police (Subedar), S.A.P.I. Battalion, Avadi. | Do. |
| 12 | Thiru H. V. Hart, Reserve Inspector, South Arcot district. | Do. |
| 13 | Thiru R. Dhalavai Sundaram, Inspector of Police, Crime Branch, C.I.D., Madras. | Do. |
| 14 | Thiru T. K. Balakrishnan, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Tiruchirappalli Detachment. | Do. |
| 15 | Thiru T. R. Swaminathan, Sub-Inspector of Police (Officiating), Railway Police, Tiruchirappalli. | Do. |
| 16 | Thiru C. Palaniyandi, Sub-Inspector of Police, Coimbatore District. | Do. |
| 17 | Thiru D. Arokianathan, Reserve Sub-Inspector (Officiating), Special Branch, C.I.D., Madras. | Do. |
| 18 | Thiru T. S. Devaraja Rao, Inspector of Police, Vigilance Cell, High Court, Madras. | Do. |
| 19 | Thiru Aaron David, Station Fire Officer, Tamil Nadu Fire Service, Madras. | Do. |

| Name. (1) | Lump sum grant. (2) |
|---|---|
| 20 Thiru S. Ramaswamy Kone Assistant Commissioner of Police, Madras City. | Rs. 3,000 (Rupees three thousand only). |
| 21 Thiru S. J. Arumairaj, Deputy Superintendent of Police (Officiating), Salem. | Do. |
| 22 Thiru M. P. Vasudevan, Deputy Superintendent of Police (Category III) (Officiating), Special Armed Police, I Battalion, Avadi. | Do. |
| 23 Thiru A. Thanaraj, Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Kancheepuram. | Do. |

## FOR GALLANTRY.

| | |
|---|---|
| 1 Thiru V. K. Karuppiah, Inspector of Police, Madras City. | Rs. 3,000 (Rupees three thousand only). |
| 2 Thiru K. P. Ekambaram, Police Constable 575, Chingleput (West) district. | Do. |
| 3 Thiru A. Murugakalathi, Police Constable 1586, Chingleput (West) district. | Do. |
| 4 Thiru J. Narayanaswami, Assistant Sub-Inspector of Police, North Arcot district. | Do. |
| 5 Thiru K. Govindarajulu, Police Constable 1441, North Arcot. | Do. |

(c) Under the Tamil Nadu Chief Minister's Police Medal Rules, the Medals are awarded.

(i) For conspicuous gallantry in saving life and property, or in preventing crime or arresting criminals the risks incurred being estimated with due regard to the obligations and the duties of the officer concerned and for outstanding detective work in the preceding year.

(ii) a specially distinquished record in Police Service.



(iii) success in organising Police Service/Fire Service or in maintaining the organisations under special difficulties.

(iv) Special service in dealing with serious or widespread outbreaks of crime or public disorder or fire.

(v) Prolonged service of ability and merit.

To be eligible for the award, members of the service should have completed service for a period of not less than ten years. consideration being given to those with longer years of service.

The Inspector-General of Police, the Director of Vigilance and Anti-corruption, the Director of Fire Service and the Registrar, High Court, Madras, send their recommendations to Government for the award in respect of their officers. The Government pass orders for the award.

(அ) & (இ) 1971 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற முதலமைச்சர் காவல் பதக்க அணிவகுப்பின்போது கீழ்க்காணும் காவல்துறை அதிகாரிகளுக்கும், தீ அணைப்புத் துறை அதிகாரிகளுக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### தலை சிறந்த பணிக்காக.

| பெயர். (1) | மொத்த மானியம். (2) |
|---|---|
| 1 திரு எஸ். ரெங்கையா நாயுடு, தலைமைக் காவலர், 3269, சென்னை மாநகர் காவல்துறை. | ரூ. 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்). |
| 2 திரு கே.சுப்பிரமணியம், தலைமைக் காவலர், எண் 1291, மதுரை (நகர்) மாவட்டம். | ரூ. 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்). |
| 3 திரு கே. சுந்தரம், தலைமைக் காவலர், 81, சிறப்புப் பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை, சென்னை. | ரூ. 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்). |
| 4 திரு எ. ஆரோக்கியசாமி, காவலர் 484, திருச்சிராப்பள்ளி மாவட்டம். | ரூ. 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்). |
| 5 திரு எம். சண்முகய்யா தேவர், காவலர், 1682, திருநெல்வேலி மாவட்டம். | ரூ. 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்). |
| 6 திரு என். கண்ணதாஸ், தலைமை காவலர், 199, ஒழுக்கக் கண்காணிப்பு—லஞ்ச ஒழிப்புத்துறை, சென்னை. | ரூ. 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்). |

[1972 ஏப்ரல் 1

| | பெயர். (1) | மொத்த மானியம். (2) |
|---|---|---|
| 7 | திரு சி. சுப்பையா, காவல் துறை இன்ஸ்பெக்டர், குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை சென்னை. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 8 | திரு பி. கே. இராமசாமி, காவல் துறை இன்ஸ்பெக்டர் (தற்காலிகம்), உணவுப் பிரிவு (குற்றப் புலனாய்வுத்துறை), சென்னை. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 9 | திரு பி. எ. மாணிக்கம், காவல் துறை இன்ஸ்பெக்டர் (தற்காலிகம்), சென்னை மாநகர். | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 10 | திரு ஜி. வரதராஜன், காவல்துறை இன்ஸ்பெக்டர் (தற்காலிகம்), சென்னை மாநகர். | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 11 | திரு பி. சேகர பணிக்கர், காவல் துறை இன்ஸ்பெக்டர் (சுபேதார்), எஸ். ஏ. பி. 1 அணி, ஆவடி. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 12 | திரு ஹெச். வி. ஹ்ரார்ட், எமக் காவல் இன்ஸ்பெக்டர், தென் ஆர்க்காடு மாவட்டம். | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 13 | திரு ஆர். தளவாய் சுந்தரம், காவல்துறை இன்ஸ்பெக்டர் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை, சென்னை. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 14 | திரு டி. கே. பாலகிருஷ்ணன், காவல்துறை இன்ஸ்பெக்டர், ஒழுக்கக் கண்காணிப்பு—லஞ்ச ஒழிப்பு, திருச்சிராப்பள்ளிப் பிரிவு. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 15 | திரு டி. ஆர். சுவாமிநாதன், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர் (தற்காலிகம்) ரயில்வே காவலர் திருச்சிராப்பள்ளி. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 16 | திரு சி. பழனியாண்டி, காவல் துறை சப்–இன்ஸ்பெக்டர், கோயம்புத்தூர் மாவட்டம். | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 17 | திரு டி. ஆரோக்கியநாதன், எமக் காவல் சப்–இன்ஸ்பெக்டர் (தற்காலிகம்), சிறப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |



1972 ஏப்ரல் 1]

| | பெயர். (1) | மொத்த மானியம். (2) |
|---|---|---|
| 18 | திரு டி. எஸ். தேவராஜ்ராவ், காவல்துறை இன்ஸ்பெக்டர், ஒழுக்கக் கண்காணிப்பு பிரிவு, உயர்நீதி மன்றம், சென்னை. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 19 | திரு எரான் டேவிட். நிலைய தீயணைப்பு அதிகாரி, தமிழ்நாடு தீயணைப்புத்துறை, சென்னை. | ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). |
| 20 | திரு எஸ். இராமசாமிக்கோன், காவல்துறை உதவிக் கமிஷனர், சென்னை மாநகர். | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |
| 21 | திரு எஸ். ஜே. அருணைராஜ், காவல்துறை டிபுடி சூப்பரின்டென்டென்ட் (தற்காலிகம்), சேலம். | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |
| 22 | திரு எம். பி. வாசுதேவன், காவல்துறை டிபுடி சூப்பரின்டென்டென்ட் (தரம் 3) (தற்காலிகம்), படைக் கலம் தாங்கிய சிறப்பு காவல் படை, 1-வது அணி, ஆவடி. | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |
| 23 | திரு எ. தனராஜ், காவல்துறை டிபுடி சூப்பரின்டென்டென்ட் ஒழுக்கக் கண்காணிப்பு—லஞ்ச ஒழிப்பு, காஞ்சீபுரம். | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |

**வீரச் செயலுக்காக**

| | | |
|---|---|---|
| 1 | திரு வி. கே. கருப்பையா, காவல் துறை இன்ஸபெக்டர். சென்னை மாநகர். | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |
| 2 | திரு கே. பி. ஏகாம்பரம், காவலர் 575, செங்கல்பட்டு (மேற்கு) மாவட்டம். | ரூ. 3.000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |
| 3 | திரு எ. முருககாளத்தி, காவலர் 1586, செங்கல்பட்டு (மேற்கு) மாவட்டம். | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |
| 4 | திரு ஜே. நாராயணசாமி, காவல் துறை உதவி சப்–இன்ஸபெக்டர் வடஆற்காடு மாவட்டம். | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |
| 5 | திரு கே. கோவிந்தராஜுலு, காவலர், 1441, வடஆற்க்காடு மாவட்டம். | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). |

(உ) தமிழ்நாட்டு முதலமைச்சர் காவல்பதக்க விதிகளின் கீழ், கீழ்க்காணும் செயல்களுக்காக பதக்கங்கள் அளிக்கப்படுகின்றன:—

(i) ஓர் அதிகாரி தம் கடமையையும் அலுவலையும் செய்கையில் தன் நலம் பாராது பிற உயிரையும், சொத்தையும் பட்டல் அல்லது குற்றத்தைத் தடுத்தல் அல்லது குற்றவாளிகளைக் கைது செய்தல், முந்திய ஆண்டில் அதிகாரி ஒருவர் ஆற்றிய தலைசிறந்த துப்பறியும் பணி;

(ii) காவல்பணியில் தலையாய பணி ஆற்றியிருத்தல்;

(iii) மிகக் கடினமான சூழ்நிலைகளில் காவல்பணி/தீயணைப்புப் பணி அமைத்தல் அல்லது மிகவும் நெருக்கடியான நேரங்களில் அமைப்புகளைப் பேணுவது;

(iv) கடுங்குற்றங்கள் பரவலாக ஏற்படும் காலத்து அல்லது பொது அமைதி நிலைகுலையும் காலத்து அல்லது பெரும் தீ விபத்துக்கள் நேருங்கால் செய்யும் தலைசிறந்த பணி;

( ) திறமையுடனும் தகுதிடனும் நீண்ட காலம் ஆற்றிய பணி.

பரிசு பெறத் தகுதியடைவதற்கு, பணிபுரியும் உறுப்பினர்கள், பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும். அதிக ஆண்டு பணியாற்றியவர்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டு வருகிறது.

காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், ஒழுக்கக் கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர், தீயணைப்புத் துறை இயக்குநர், சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளர் ஆகியோர், அவர்களுடைய அதிகாரிகளுக்குப் பரிசு வழங்குவது குறித்துப் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்புகின்றனர். பரிசுகள் வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.



## இணைப்பு—2

[36-ம் பக்கத்தில் 833-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தமிழ்நாட்டில் எண்ணற்ற இடங்கள் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பினும், சில இடங்களே சுற்றுலா கேந்திரங்களாகக் குறிக்கப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் தக்க போக்குவரத்து சாலையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். குடிநீர் வசதி, தங்கும் இட வசதிகள் இருக்க வேண்டும். அந்த இடங்கள் ஏற்கனவே சுற்றுலா பயணிகளைக் கவர்ந்து முக்கியத்துவம் பெற்றிருப்பதால், அவைகள் சுற்றுலா வெளியீடுகளில் குறிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய தகுதி பெற்ற இடங்களையே, மத்திய திட்டக் குழுவில் வளர்ச்சிக்காக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள்.

2. தமிழ்நாட்டில் சுற்றுலா கேந்திரங்களாக மத்திய அரசின் சுற்றுலா செய்தி வெளியீடுகளில் கீழ்க்கண்ட இடங்கள் குறிக்கப்பட்டுள்ளன :—

(1) சென்னை நகரம்

(2) வேடந்தாங்கல் (பறவைகள் சரணலயம்)

(3) திருக்கழுக்குன்றம்

(4) மகாபலிபுரம்

(5) காஞ்சிபுரம்—திருத்தலம்

(6) செஞ்சி—சரித்திர வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடம்.

(7) திருவண்ணமலை—திருத்தலம்.

(8) வேலூர்—சரித்திர, கோட்டை வரலாற்று இடம்.

(9) திருத்தணி—திருத்தலம்.

(10) சிதம்பரம்—திருத்தலம்.

(11) கும்பகோணம்—திருத்தலம்.

(12) தஞ்சாவூர்—திருத்தலம்.

(13) திருவையாறு—திருத்தலம் (ஸ்ரீ தியாகராசர் பிறப்பிடம்)

(14) திருச்சிராப்பள்ளி—சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம்.

(15) ஸ்ரீரங்கம்—திருத்தலம்.

[1972 ஏப்ரல் 1

(16) நாரதமலை, சித்தன்ன வாசல், திருமயம்—சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்.

(17) அழகர்கோவில்—திருத்தலம்.

(18) திருநெல்வேலி—திருத்தலம்.

(19) கன்னியாகுமரி—திருத்தலம்.

(20) குற்றாலம்—நீர்வீழ்ச்சி.

(21) பாபநாசம்—நீர்வீழ்ச்சி.

(22) ராமேச்வரம்—திருத்தலம்.

(23) மேட்டூர்—அணைக்கட்டு.

(24) ஏர்க்காடு—மலை வாசஸ்தலம்.

(25) கொடைக்கானல்—மலை வாசஸ்தலம்.

(26) உதகை—மலை வாசஸ்தலம்.

(27) பவானிசாகர்—அணைக்கட்டு.

3. தமிழக அரசின் சார்பில் ஒரு விரிவான சுற்றுலா வழிகாட்டி நூலொன்றை தயாரிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய தகவல்கள் கோரப்பட்டுள்ளன. இவ்விபரங்கள் சேகரிக்கப்பட்ட பின் தமிழகத்திலுள்ள எல்லா சுற்றுலா இடங்கள் பற்றிய தகவல்களையும் ஓர் வெளியீடாக பிரசுரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் ஒவ்வொரு மாவட்டத்தின் சுற்றுலா வளர்ச்சிக்காக கருத்தரங்குகள் நடத்தி, மாவட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து வருகிறது. இத்தகைய மாவட்டக் கருத்தரங்குகள் முடிவடைந்ததும், மாவட்டங்களில் எந்த இடங்கள் சுற்றுலா சிறப்புப் பெற்றவை என்று ஆராய்ந்து அவைகளின் வளர்ச்சிக்காக மாநில திட்டக் குழுவின் ஆலோசனையுடன் வழிகள் வகுக்கப்படும்.



1972 ஏப்ரல் 3]

சுவாந்தார்கள் செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது. அம்மாதிரியாகச் செய்யக்கூடியவரைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1971 ஜூலை 1 அன்றிலிருந்து பசலி ஆரம்பமாகிறது. அந்தத் தேதியிலிருந்து பணம் கொடுத்திருந்தால், பழைய பாக்கிக்கு என்று குறித்து வைக்கப்பட்டிருந்தாலும் 1—7—1971 தேதிக்கும் பிறகு கொடுத்து இருந்தாலும் நிச்சயமாக இந்தப் பசலிக்கு வந்ததாகவே கணக்கெடுத்துக் கொள்ளப்பட்டு, அப்படிப் பழைய பாக்கிகளெல்லாம் ரத்து செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## சர்க்கரை கைப்பற்று

*6 குறுகிய கால வினா—திரு. நா. வீராசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 மார்ச் மாதத்தில் சட்ட விரோதமாக இரண்டு ரயில் வாகன்களில் எடுத்துச் செல்லப்பட்ட சர்க்கரை, மாநில அரசு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட 520 சர்க்கரை மூட்டைகளில் 321 மூட்டைகள் போலீசாரால் கைப்பற்றப்பட்டன.

(இ) வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, சர்க்கரை ஒரு புறத்தில் திருட்டுப் போகிறது. சர்க்கரையின் விலையை நிர்ணயிக்கிறபோது வெளி மார்க்கெட் விலை ரூ. 3.20 ஆக உயர்ந்திருக்கிறது. அதைத் தவிர்த்து நியாயமான விலையில் சர்க்கரை கிடைக்க அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

[1972 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பல முறை நான் சர்க்கரையைப்பற்றி இம் மாமன்றத்தில் விவரமாகத் தெரிவித்திருக்கிறேன். இப்போதும் தெரிவிக்கிறேன். ஆங்காங்கு குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குடும்பக் கார்டைப் பயன்படுத்தி, எந்தெந்தக் குடும்பக் கார்டு எந்த எந்தக் கடையில் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அந்தக் கடைக்குச் சென்றால் சர்க்கரை தாராளமாகக் கிடைக்கும். இன்னொன்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏற்கெனவே ஸிவில் ஸப்ளைஸ் பற்றிய நிதிக் கோரிக்கையின் மீதான விவாதம் இங்கே நடந்தபோது நான் முடிவுரையில் ஒன்றைத் தெரிவித்தேன். அதாவது, ரூ. 500க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு மாதமொன்றுக்கு ஆறு கிலோ சர்க்கரை கொடுக்கப்படும் என்று தெரிவித்தேன். அதை எப்படி அறிவித்தீர்கள் என்று கேட்டு, அப்படி அறிவித்ததைப்பற்றிக் கூட மத்திய அரசாங்கத்திடமிருந்து எங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது.

இருந்தாலும் இந்த அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள், கூட்டுறவுத் துறையின் ஒத்துழைப்பை வைத்து தமிழ்நாட்டு மக்களுக்கு இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ வீதம் சர்க்கரை கிடைக்கச் செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்கிறோம். அரசாங்கத்திற்கு ஒதுக்கப்படும் சர்க்கரை முழுதும் மக்களுக்குப் பயன்படுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர வியாபாரத் துறைக்கு இந்தச் சர்க்கரை கொடுப்பதில்லை. கொடுக்கக் கூடாது என்று முடிவெடுத்திருப்பதால் பொது மக்களுக்குத்தான் பயன்படுகிறது. ஆங்காங்கு ஏதேனும் சிறு தவறுகள் ஏற்பட்டாலும்கூட, நான் உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வேன், ' அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவாருங்கள் ' என்பதுதான். இப்பொழுதே எட்டாயிரம் டன் சர்க்கரை அரசாங்கத்தின் கையிருப்பில் இருக்கிறது. வெளி மாவட்டங்களிலும் சென்னை நகரிலும் இதைக் கொடுக்க ஏற்பாடு செய்தும், விநியோகிக்கின்ற இடங்களில் ஏதேனும் இடர்பாடு இருக்கிறதா என்று நான் மீண்டும் ஆராயச் சொல்லியிருக்கிறேன். இடர்பாடு இருந்தால் களைந்து, கிலோ இரண்டு ரூபாய் வீதம் சர்க்கரை கிடைக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.



1972 ஏப்ரல் 3]

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** விநியோகத்தில்தான் சிக்கல் இருக்கிறது. விடியற்காலை ஆறு மணிக்குச் சென்றவர்களுக்குத் தான் அந்த ஆறு கிலோ சர்க்கரை கிடைத்தது. விநியோகத்தைப் பிரித்துக்கொடுத்தால் கஷ்டம் இருக்காது. அதற்கு ஏதாவது அரசு வழி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்னையைப் பொறுத்த வரையில், ஏறக்குறைய 400 கடைகளுக்குமேல் போட்டிருக்கிறோம். அரசாங்கத்திற்கு ஒதுக்கப்படும் சர்க்கரையை நாம் கூட்டுறவுத் துறை மூலமாகத்தான் மக்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்திக் கொண்டு வாங்கவேண்டும். ஏதாவது கடைகளில் வழங்குவதில் கோளாறு இருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாகக் கடைக்காரர்மீது நடவடிக்கை எடுத்து உரிமத்தை ரத்து செய்து வேறு யாருக்காவது கொடுத்து நல்ல முறையில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பறிமுதல் செய்யப்பட்ட இந்த 321 மூட்டை சர்க்கரையையும் அரசு எடுத்து மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டதா ? அல்லது 321 மூட்டை சர்க்கரையையும் ஸ்டாக்கிலே வைத்துக்கொண்டு விநியோகம் நடைபெறாமல் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. நீதி மன்றத்தில் வழக்கு முடிந்தபிறகுதான் சர்க்கரையை எடுத்து விநியோகிக்க முடியும். அரசாங்கத்தின் சார்பாக மனுப் போடச் சொல்லியிருக்கிறேன். சர்க்கரை கெட்டு விடாமல் கொடுத்துவிட ஏற்பாடு செய்யவும் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மொத்தம் 520 மூட்டைகள் என்றும் அவற்றில் 321 மூட்டைகள் கைப்பற்றப்பட்டன என்றும் அமைச்சரவர்கள் கூறியுள்ளார். பாக்கி 200 மூட்டைகள் என்ன ஆயின என்று சொல்ல முடியுமா ?

சர்க்கரையின் இண்டர்நாஷனல் மார்க்கெட் ப்ரைஸ் மிகவும் குறைவாக இருக்கிறது. நமது ஊரில் அது மிகவும் கூடுதலாக இருப்பதால், அதைக் குறைப்பதற்கு வேறு நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ளப்படுகிறதா ?

[1972 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து இந்த மாநிலத்துக்கு கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட சர்க்கரையின் அளவைச் சொன்னேன்; கைப்பற்றப்பட்ட சர்க்கரையின் அளவைச் சொன்னேன். இப்படியெல்லாம் சில வியாபாரிகள் எடுத்துக்கொண்டுபோய் விற்றிருக்கிறார்கள். அவர்களைப் புலன் விசாரணை செய்கிறார்கள் என்று தெரிவித்தேன். சர்க்கரை விலையைப்பற்றிச் சொல்லுகிறார்கள் கிலோ இரண்டு ரூபாய் என்று இருக்கிறது. இப்போதே ஏறக்குறைய பத்தாயிரம் டன் சர்க்கரை விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆங்காங்கு இருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து பொது மக்களுக்கு நன்மை செய்கிற காரியத்தில் ஈடுபட்டால் நிச்சயமாக சர்க்கரையின் விலையைக் கட்டுப்படுத்திக் கொடுக்க முடியும். கூட்டுறவுத்துறையின் மூலமாகத்தான் பெரும்பாலும் சர்க்கரை விநியோகிக்கப்படவேண்டும் என்பது திட்டம். ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் தனியார்க் கடைக்காரர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. தனியார்க் கடைக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் சில இடங்களில் தவறு செய்கின்றன என்று புகார் வந்திருக்கிறது. அவைகளின்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சர்க்கரையின் விலையை நிர்ணயம் செய்து வரையறுப்பது மத்திய அரசே தவிர மாநில அரசு அல்ல.

திரு. நா. வீராசாமி: இந்தக் கடத்தல் வேலையில் ஈடுபட்டவர்கள் ஏற்கெனவே ஆட்சியில் உள்ளவர்களோடு தொடர்பு கொண்டு பல ஆண்டுகளாக இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது உண்மையா? அப்படி என்றால், இந்தக் கள்ளக்கடத்தலோடு வேறு என்ன என்ன கள்ளக் கடத்தலில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் கண்டறியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முற்பகுதியைப்பற்றி எனக்குத் தெரியாது. பிற்பகுதியைப் பொறுத்தவரையில் வேறொரு கூட்டத்தார்மீது வழக்கு இருந்து நீதி மன்றத்தின்முன் கொண்டுவரப்பட்டார்கள். இவர்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு உண்டா என்பது தெரியாது.



1972 ஏப்ரல் 3]

திரு. ஏ. எம். இராஜா: வெளிமார்க்கெட்டில் சர்க்கரை விலை அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்கிற முகத்தான் அரசு வழங்கியிருக்கிற கார்டுகளுக்கு இப்போது கொடுக்கிற அளவை இரட்டிப்பாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு கார்டுக்கு ஒரு கிலோ சர்க்கரைதான் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. நீங்கள் ஏன் அதிகம் கொடுக்கிறீர்கள் என்று அவர்கள் நம்மைக் கேட்கிறார்கள். கிராமத்தில் உள்ள சர்க்கரை உபயோகப்படுத்துகிற மக்களுக்கும் சர்க்கரை முறையாகக் கிடைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படியாகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, பத்திரிகையில் பார்க்கும்போது சென்டரில் லெவி சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது. நம்முடைய மாநிலத்தில் சர்க்கரை அதிக விலை விற்கிறது. ஆகையால் நமக்குக் கிடைக்கின்ற Levy sugar percentage-ஐ அதிகப்படுத்தும்படி அரசு, மத்திய அரசு Dog in the manger policy-யை adopt செய்யாமலிருக்க எடுத்துக்கூறுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாட்டில் இருந்து ஒதுக்கப்படுகிற முழு அளவு லெவி சர்க்கரையையாவது தமிழகத்திற்கே ஒதுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் நம்முடைய மாநில சர்க்கரையைக் கூட வெளிமாநிலங்களுக்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனினும் இதுசம்பந்தமாக மீண்டும் கடிதம் எழுதுவதாக இருக்கிறோம்.

திரு. த. சோலையா: கார்ப்பரேஷன், முனிசிபாலிடி போன்ற நகரங்களில் அரசும் அதிகாரிகளும் முறையாகச் சர்க்கரை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், கரும்பை உற்பத்தி செய்கிற விவசாயிகள் வாழ்கிற கிராமங்களில் அவர்களுக்கே சர்க்கரை கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே கிராமப் பகுதியில் இருக்கும் மக்களுக்கும் சர்க்கரை கிடைக்க ஏற்பாடு செய்வார்களா?

[1972 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நாம் முன்பே சொன்னேன். கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் சர்க்கரை கிடைப்பதற்கான ஏற்பாட்டை முறையாகச் செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எங்கேயாவது குறைபாடு இருந்தால் அதை உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கவனத்திற்கு கொண்டுவரலாம்.

**திரு. ப. முத்துசாமி :** ஊராட்சி மன்றங்களின் மூலமாக சில மாவட்டங்களில் சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டதுபோல இனியும் விநியோகம் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஊராட்சி மன்றங்கள் சர்க்கரையை எடுத்து விநியோகம் செய்வதற்கு அதிகாரம் இல்லை. முன்பு செய்ததற்கான கணக்குகளே செட்டில் ஆகாமல் இருக்கின்றன. இப்போது கூட்டுறவுத் துறையில் செய்து வருகிறோம். எந்த் கிராமத்திலேயாவது கூட்டுறவுத்துறை அமைப்பு சரியாக இல்லாமல் இருந்தால் ஊராட்சித் தலைவரே சொந்தமுறையில் பொறுப்பேற்று முறையாகச் செய்வதாக இருந்தால் அவர் மூலமும் விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** கார்டுகளுக்கு சர்க்கரை விநியோகம் செய்கிற கடைக்காரர்கள் அரசியல் கண்ணோட்டத்தோடு அரசாங்கத்தைப்பற்றி மக்களிடம் குறை கூறிவருவதை இந்த அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்த அரசு அறியாது. அரசியல் கண்ணோட்டத்தோடு பேசுகின்றவைகளைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆனால் நாம் விதித்துள்ள முறைப்படி சர்க்கரை விநியோகம் செய்யாத கடைக்காரர்களைப்பற்றி யார் சொன்னாலும் உடனே கவனித்து நடவடிக்கை எடுக்கத் தயார்.

**திரு. கே. என். குமாரசாமி :** வருமானத்தைக் கணக்கிட்டு அதிக வருமானம் உள்ளவர்களுக்கு அதிக சர்க்கரை, குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு குறைந்த அளவு சர்க்கரை என்று விநியோகம் செய்கிறார்களே ; அது இன்றி குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில் சர்க்கரை விநியோகம் செய்ய முன்வருவார்களா?



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எந்த முறையில் எந்த எந்த இடங்களில் எப்படி விநியோகம் செய்யலாம் என்று நிர்ணயித்துக்கொள்கிற உரிமையையே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அவர்களை அணுகலாம். அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் உறுப்பினர்கள் அந்த அந்தக் கிராமத்திற்கு ஒதுக்கப்படுகிற சர்க்கரையின் அளவுப்பட்டியலைப்பெற்று, அந்த அளவு சர்க்கரை முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பதையும் கவனித்து வரலாம். சர்க்கரையை விநியோகிக்கிறவர்களும் அச்சத்தோடு நடந்துகொள்வார்கள்.

**திரு. எஸ். நல்லசாமி:** இப்போது வட்டத்திற்கு ஒரு நிலவள வங்கியாக இருந்தது. யூனியனுக்கு ஒரு நிலவள வங்கியாக மாற்றப்பட்டிருக்கிறது. நிலவள வங்கிகள் விவசாய மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தினால் நிலவள வங்கிகள் மூலமாக சர்க்கரை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிலவள வங்கிக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இன்றையதினம் ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு நாணயச் சங்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கரை விநியோகம் செய்வதற்கு கூட்டுறவு நாணயச் சங்கங்களைப் பயன்படுத்துகிறோம். குறை காணப்பட்டால் பிறகு யோசிக்கலாம்.

### நொய்யலாற்றின் குறுக்கே அணைகள்.

* 7. குறுகிய கால வினா—திரு. வா. அப்துல் ஜப்பார்

**திரு. எஸ். நல்லசாமி :**

**திரு. ஆ. கு. சுப்பையா :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1972 ஏப்ரல் 3

(அ) நொய்யலாற்றில் இரு அணைகள் கட்ட திருச்சி தலைமை பொறியாளர் செயற்குறிப்பு ஏதும் தயாரித்துள்ளாரா ?

(இ) ஆம் எனில், அது குறித்த அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா:** (அ) & (இ) இத் திட்டம் திருச்சி மேற்பார்வைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. ஆய்வு வேலை முடிந்து பரிசீலனை செய்தபின் ஒப்புதல் அளிப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

**திரு. எஸ். நல்லசாமி:** நொய்யலாற்று அணைகள் திட்டத்திற்கு ஏற்கனவே திட்டங்கள் போடப்பட்டு மத்திய சர்க்காரின் கன்கரன்சுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக சொன்னார்கள் அவற்றைப் பற்றி தொகுதி மக்கள் அடிக்கடி கேட்பதனால் அவை என்ன ஆயிற்று என்று அறியவிரும்புகிறேன். அவற்றுக்கு உயிர் இருக்கிறதா? அவை செத்துவிட்டதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** நொய்யலாறு காவேரி நதியின் ஒரு முக்கிய உபநதி. அதில் உங்காம்பாளையத்தின் அருகே நொய்யலாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்காக முதலில் தயாரிக்கப்பட்ட திட்டம் ஆதாயம் இல்லாதது ஒன்று—இரண்டு மைசூர் அரசுடன் காவேரி நதி தண்ணீர்பற்றி தகராறு இருப்பதனால் கைவிடப்பட்டது. அதன்பிறகு வேலாயுதம்பாளையம் கிராமத்தின் அருகில் நொய்யலாற்றின் அருகே ஒரு அணைகட்டி, உங்காம்பாளையம் கிராமத்தின் அருகே வளயாபாளையம் கிராமத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான பரிசீலனை நடைபெறுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நொய்யலாற்றுத் திட்டங்கள் பற்றி பத்தாண்டுக்காலமாக பேசப்பட்டு வருகிறது. கரூரில் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். சென்ற மாதம் 23 ஆம் தேதி உண்ணாவிரதம் கூட நடத்தியிருக்கிறார்கள். அதில் கழிவுநீர் விடப்படுவதாகவும் சொல்லப்படுகிறதே. ஆகவே அமைச்சர் அவர்கள் இரண்டாவதாகச் சொன்ன திட்டத்தையாவது எடுத்து நிறைவேற்ற பரிசீலனை செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இப்போது இருக்கிற காவேரியாற்றுச் சிக்கல் காரணமாக மற்ற எல்லா விவரங்களையும் சொல்ல இயலவில்லை. இது முறையாகக் கவனிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*Drainage and Water Supply Schemes.*

* 838 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : THIRU K. N. KUMARASWAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state the total loans made available to the Government through Life Insurance Corporation for the purpose of Drainage and Water Supply Schemes in Tamil Nadu?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குடிநீர் வழங்கு—கழிவு நீர் அகற்றுத் திட்டங்களுக்காக இம்மாநிலத்திலுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 1969-70-ம் ஆண்டிற்காக ரூபாய் 192.33 லட்சமும், 1970-71-ஆம் ஆண்டிற்காக ரூபாய் 270.78 லட்சமும் கடனாக வழங்கியுள்ளது. தொடர்ந்து நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்றுத் திட்டங்களுக்காக 1971-72-ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 361.37 லட்சம் கடன் ஒப்பளிக்க ஒப்புக்கொண்டுள்ளதாக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் தெரிவித்துள்ளது. இதில், இதுவரை ரூபாய் 2 கோடி 14 லட்சத்து 2 ஆயிரத்துக்கான காசோலையை இக்கழகம் வழங்கியுள்ளது. மேலும், வீராணம் திட்டத்திற்காக ரூபாய் 5 கோடி கடன் வழங்கியுள்ளது.

**திரு. ஏ. சுப்பிரணியம்:** தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் கடன் கோரப்பட்டதா ? அப்படிக் கோரப்பட்டதற்குக் கடன் கிடைத்ததா ? கடன் கிடைக்காமலிருந்தால் அதற்கு மாற்று வழி ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் செயல்படத் தொடங்குவதற்கு முன் அதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடக் கூடும்.

[1972 எப்ரல் 3

**திரு. கே. என் குமாரசாமி :** தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவருவதாக அரசாங்கத்தால் போன ஆண்டு அறிவிக்கப்பட்டு, பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாகவும், அதற்காக உலக வங்கியிடமிருந்து பணம் கடனைப் பெறுவதற்காக குடிநீர் வாரியம் முயன்று வருவதாகவும் குடிநீர் வாரியத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அதுசம்பந்தமான நடவடிக்கைகள் செய்து முடிக்கப்பட்டனவா ? அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றனவா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பொதுவாக கோவைப் பகுதியிலே குடிநீர் வழங்குவதற்காக அரசு பல முயற்சிகளைச் செய்து வருகிறது. சிறுவாணித் திட்டத்தில் ஏற்கெனவே பேச்சுவார்த்தைகள் முடிவடைவதற்குள் இடையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக நிறைவேற்ற முடியவில்லை. அதுபற்றி வெகு விரைவிலே கேரள மாநில அமைச்சரோடு நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்திருக்கிறார்கள். சிறுவாணித் திட்டத்தைப்பற்றிய பேச்சுவார்த்தைகள் முடிவடைந்ததும் தொடர்பான அந்தப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இப்போது நாகர்கோயில் நகரத்திலே தண்ணீர்ப் பஞ்சம் மிகுதியாக இருக்கிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் 1 கோடி ரூபாய் கடனைக் கோரியிருந்தார்கள். அதுசம்பந்தமாக முடிவெடுக்கப்பட்டதா ? துரிதமாக அந்தக் கடனைப் பெற்றுத் தண்ணீர் விநியோகம் செய்யும் வேலைகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நாகர்கோயில் சம்பந்தமான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லப்படும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, 1969-லிருந்து 1972 வரை 13 கோடி ரூபாயை நாம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து வாங்கியிருக்கிறோம். இதற்கு எவ்வளவு வட்டியை நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்? எத்தனை ஆண்டுத் தவணைகளில் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும் ?



1972 எப்ரல் 3]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வட்டி 7 சதவீதம். கடன் 20 ஆண்டிலிருந்து 22 ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தரப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே. குடிநீர் வாரியத்திற்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன் வாங்கும்போது, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக நகரசபைகளுக்கும் டவுன்ஷிப்புகளுக்கும் வரி போடுகிறோம். குடிநீர் சம்பந்தமான வேலைகள் முடிவுற்ற பின்னர்தான் நகரசபைகளும், டவுன்ஷிப்புகளும் அதிகமான வரியை விதிக்க வேண்டும். அதுதானே நியாயம். ஆனால் தண்ணீர் வழங்குவது சம்பந்தமான வேலைகள் முடிவுறாமல் இருக்கும்போதே இப்பொழுது அதிகமான வரியை உயர்த்தி வசூலிக்கிறார்கள். ஆகவே, இதுபற்றி அரசாங்கம் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நியாய அநியாயங்களைப் பரிசீலித்துப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்றபடி அதிகமான வரியை வசூலிக்கிறார்களா என்பதைப் பார்த்து, அரசு அதுகுறித்து தக்க முடிவு எடுக்கும்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகையில், கோயம்புத்தூருக்கு, மதுரைக்கு, கன்னியாகுமரிக்கு என்று ஒவ்வொரு ஊராகப் பேசுவதைவிட, தமிழகம் முழுவதற்கும் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் போட்டு, 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிப்பது என்ற கொள்கையை வகுத்துக் கொண்டிருப்பதுபோல இந்தத் திட்டத்திற்கும் இந்த ஆண்டு என்று ஒரு காலவரையறையை அரசு ஏற்படுத்தியிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, காலவரையறை வைத்து தமிழகம் முழுவதற்கும் குடிநீர் வழங்கச் செய்ய வேண்டுமென்கிற ஆர்வம் அரசுக்கு இருக்கிறது. மின்சாரம் வழங்குவதற்கு ஒரு காலவரையறை குறிப்பிட்டுள்ளதைப்போல இந்தத் திட்டத்திற்குக் குறிப்பிடுவதற்கும் இன்னும் கொஞ்ச காலம் தேவை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கின்ற நகரசபைகளின் நிலை, பொருளாதார நிலைக்கேற்ப வசூலிக்கப்படுகிறது. வந்தவாசி பேரூராட்சியில் ஏழை எளிய மக்கள், பாய்முடைபவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் தண்ணீர் அளவுமானிகூட இல்லாமல் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 7 ரூபாய் கட்டணமாக வசூலித்தால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மீட்டர் பொருத்தினால்தான் குடிநீர்க்கான கட்டணத்தைச் சரியாக வசூலிக்க முடியும். ஒவ்வொரு வீட்டிலும் கணக்கில் வராமல் மூன்று, நான்கு குழாய்கள் என்று இருக்கின்றன. அவர்கள் ஒரு குழாயை மட்டும் கணக்கில் காட்டி பணம் செலுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, புதிதாக ஏற்றுக்கொள்கிற எந்த இடமாக இருந்தாலும், சிறுசிறு குழாய் அமைந்தாலும் மீட்டர் பொருத்தும்படி வற்புறுத்தப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இது யோசிக்கப்படலாம். வற்புறுத்துவது, வலியுறுத்துவது என்பது பின்னர் யோசிக்கப்படும்.

*840 வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியைச் சார்ந்த சிறுமுகை குடிநீர்த் திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சிறுமுகை குடிநீர்த் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடுகளுக்கு அரசு தனது 12—4—1971-ஆம் தேதிய 1175-ஆம் எண் ஆணையில் 27 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியைச் சேர்ந்த சிறுமுகை குடிநீர்த்திட்டம் ஆமை வேகத்தில் நடந்து வருகிறது. அது முயல் வேகத்தில் நடைபெற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, முயல் தூங்கிவிடாமல் இருந்தால் நல்லது (சிரிப்பு).

*Water for Alangulam Cement Factory*

*841 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether this Government have any proposal to utilise the Ayyanar Koil River Water (situated 8 miles west of Rajapalayam in Tirunelveli District) for Alangulam Cement Factory; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) ஐயனார் கோவில் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்திற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. வைப்பாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்து ஆலங்குளம் சிமிட்டி ஆலைக்குப் பயன்படுத்த திட்டம் ஒன்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

*Income for Tamil Nadu Public Sevice Commission*

*842 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the total amount of income of the Tamil Nadu Public Service Commission, for the year 1971; and

(*b*) the details thereof (1) Gazetted and (2) Non Gazetted?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :**

(அ) ரூ. 7,83,244-64 காசுகள் :

(இ) (1) அரசிதழ் பதிவு பெற்றவர்கள் மூலம்—ரூ. 17,151-65 காசுகள்.

(2) அரசிதழ் பதிவு பெறாதவர்கள் மூலம்—ரூ. 766.092.99 காசுகள்.

**திரு. என். டென்னிஸ் :** அங்கஹீனமானவர்களுக்கு அப்ளிகேஷன் பீஸ் எக்ஸெம்ப்ட் செய்யப்படுகிறதா? அப்படி இல்லையெனில் அது எக்ஸெம்ப்ட் செய்யப்படுமா ?

முற்பகல் 5-30

[1972 ஏப்ரல் 3

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதிருக்கிற சலுகைகள் ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்குந்தான் இருக்கிறது. அங்கஹீனர்கள் பற்றி விவரம் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வெகு முக்கியமான ஒரு பணியை ஆற்றக்கூடிய ஒரு கமிஷனாக இருப்பதன் காரணமாக மத்தியில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஆண்டுதோறும் ரிப்போர்ட் சமர்ப்பிக்கிற மாதிரி இங்கும் இவர்கள் அப்படி ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அப்படியானால் சபையில் விவாதிப்பதற்குக்கூட ஒரு வாய்ப்பிருக்கும். எனவே அம்மாதிரி ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது மத்தியில் எவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்த்து அதற்குப் பிறகு முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அட்மினிஸ்ட்ரேடீவ் ரிபார்ம்ஸ் கமிஷனில் இந்தப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தில் நான்-அபிஷியல்சை நியமனம் செய்யலாம் என்று ஒரு பரிந்துரை இருக்கிறது. அந்த அடிப்படையில் நான்-அபிஷியல்ஸ் யாரையாவது இந்தத் தேர்வுக் கழகத்தில் நியமனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கனவே இருந்த முறைதான் பின்பற்றப்பட்டு வருகின்றது. புதிதாக உத்தேசப் ஏதுவும் இப்போது இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு ஏழு லட்சம் ரூபாய் அப்ளிகேஷன் மூலம் வருகிற வருமானம அல்லது வேறு ஏதாவது வருமானத்திற்கு வழி இருக்கிறதா அங்கஹீனர்கள்பற்றி இப்போது விவரம் இல்லை என்று சொன்னலும் இனிமேலாவது அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அங்கஹீனர்கள்பற் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை அரசு ஆலோசிக்கும்



1972 ஏப்ரல் 3]

ஆனால் இந்த ஏழு லட்சம் ரூபாய் என்பது தேர்விற்கான அட்மிஷன் பீஸ் என்ற முறையில் வந்ததுதான். ஆனால் தேர்விற்காகும் செலவு 11 லட்சத்திற்கு மேலாகிறது.

**திருப்பூரிலுள்ள காங்கயம் கால்நடை வளர்ச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கம்.**

*843 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பூர் காங்கயம் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1963, 1966 ஆண்டுகளில் முனைப்புத் திட்டத்தின்கீழ் வாங்கியுள்ள கடன், உதவித் தொகை எவ்வளவு ?

(இ) மேற்படித் தொகையை என்ன என்ன காரணங்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

(அ) 1963-ஆம் ஆண்டு கால்நடை முனைப்புத் திட்டத்தின் கீழ் திருப்பூரிலுள்ள காங்கயம் கால்நடை வளர்ச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு கடன், உதவித் தொகை ஒன்றும் கொடுக்கப்படவில்லை. 1966-ம் ஆண்டு இச்சங்கத்திற்கு ரூ. 1,90,000 கடனாகவும், ரூபாய் 30,000 உதவித் தொகையாகவும் கால்நடை முனைப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) தீவனத் தயாரிப்புத் தொழிற்சாலைக்கான நிலம், இயந்திரங்கள், லாரி வாங்குவதற்கும், தொழிற்சாலை, அலுவலகம், கிடங்கு ஆகியவற்றுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கும் பணியாளர்களை நியமிப்பதற்கும் மேற்படித் தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியைக்கொண்டு சுழல் நிதி ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் தயார் நிலையிலுள்ள கலவைத் தீவனத் தயாரிப்புக்கான தானிய வகையராக்கள் வாங்க வழி செய்யப்பட்டுள்ளது.

[1972 ஏப்ரல்

இது முறைப்படி தருகிற பதில். இதோடு சேர்த்து, இங் கால்நடை முனைப்புத் திட்டத்தின்கீழ் கடன் கொடுக்க பட்டுள்ளதா என்று வினா கேட்கப்பட்டிருக்கிற காரணத்தினா 1963-ம் ஆண்டில் ‘ இல்லை ’ என்ற பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆனால் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1963-ம் ஆண்டில் ஒ கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : அப்படி வாங்கிய கடனை முறையா செலவழித்திருக்கிறார்களா ? அல்லது வாங்கிய கடன் முறை படியாகச் செலவழிக்கப்படாமல் பாங்கில் இருந்ததா ? அந்த சங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் இல்லை அவர்கள் செலவழிக்காத விவரமும் இல்லை, கடன் தொகையை திருப்பிக் கட்டிய விவரமும் இல்லை. உற்பத்தி, விற்பனை ஆகி வற்றின் விவரங்கள் இருக்கின்றன. இதில் முறைகேடு உள்ளத என்பது இங்கு தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தெரியவில்லை.

திரு. கோவை செழியன் : காங்கேயம் பொலிக் காளைகளை முன்பு அரசாங்கமே வாங்கி விவசாயிகளுக்கு இனாமாகத் தந் இரண்டு ஆண்டுகள் அவை பொலிக் காளை வேலையைச் செய்தா அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்து விடுவது என்றிருந்தத அந்த முறை மறுபடியும் பின்பற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி 1963, 196 ஆண்டுகளில் முனைப்புத் திட்டத்தின்கீழ் திருப்பூர் காங்கய கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு கொடுத்த கடன், உதவி இவைபற்றியது. பொலிக் காளைக பற்றிய பொதுவான கேள்வி தனியாகக் கேட்கப்படவேண்டும்.

திரு. ஏ. எம். இராஜா : இந்தக் கால்நடை வளர்ச்சிக் கூட்டுற விற்பனைச் சங்கத்திற்கு ஏறக்குறைய 1966-ல் இரண்டு லட்சத்திற் அதிகம் கொடுத்திருக்கிறார்கள். 1963-ல் கால்நடை வளர்ச்சி திட்டத்தின்கீழ் பணம் கடன் கொடுத்திருப்பதாக குறிப்பிட்டார்கள். இவ்வளவு பணம் இந்தக் கால்நடை வளர்ச்சிக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்குக் கொடுத்தும் எவ்வளவு கால்நடைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன, எவ்வள



1972 ஏப்ரல் 3]

கால்நடைகளை விற்றது என்ற கணக்குகளை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1962-ம் ஆண்டில் தீர்மானிக் கப்பட்டு 1963-ல் தரப்பட்ட கடன் தொகை ஏறத்தாழ ரூ. 59,700 ஆகும். அது உதவித் தொகையும், கடன் தொகையும். அந்தக் காலத்து ஆட்சி நம்மிடம் இல்லை என்பது உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். 1966-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட கடன் தொகையும் 1967-க்கு பின்னால் தரப்பட்டதல்ல. ஆனால் அப்படித் தரப்பட்ட கடன் தொகைகள் அந்தச் சங்கத்தினால் என்னென்ன காரியங்களுக்காகத் தரப்பட்டனவோ பெரும்பாலும் அதற்காகத் தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அவர் களுக்கு, தீவன கலவைப் பிரிவு அமைக்க ஏற்பட்ட தொடக்கச் செலவு பற்றிய விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இந்தச் சங்க நடவடிக்கைகளில் ஏதாவது குறை இருந்தால் அதைக் குறிப்பாக என் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் பரிசீலிக்கப் படும்.

திரு. சு. துரைசாமி : அரசாங்கத்திலிருந்து இவ்வளவு பெரிய தொகை கொடுத்தும்கூட நாள் ஒன்றுக்கு ஒரு டன் தீவனம்கூட அங்கு தயாரிப்பது கிடையாது. அங்கு தீவனம் கூடத் தயாரிக்கப் படாமல், அதுகூட இல்லாமல், லாரி எல்லாம் வாங்கி அரசாங்கப் பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். அதையெல்லாம் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து ஆராயப்படும்.

## மருத்துவ மனைகள்

*844 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் வெளியுறை நோயாளிகள் பிரிவு துவக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

[1972 ஏப்ரல் 3

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்படிப்பட்ட மாவட்ட மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிகளில் எல்லாம் ஓ.பி. ஆரம்பிக்கப் படுவதில் என்ன சங்கடங்கள் இருக்கின்றன ? ஏன் மீண்டும் புனராலோசனை செய்து அப்படி ஆரம்பிக்க வழிவகை செய்ய இயலாதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தஞ்சையில் இருக்கிற மருத்துவ கல்லூரியைச் சேர்ந்த மருத்துவமனை என்பது தஞ்சை நகரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருக் கிறது. தஞ்சை நகரத்திற்குள் ராஜா மிராசுதார் மருத்துவமனை என்ற ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது. வெளிநோயாளிகள் அனைவரும் ராஜா மிராசுதார் மருத்துவமனையில் கவனிக்கப்படு கிறார்கள். அங்கு சில குறிப்பிடப்பட்ட துறைகளில் இன்னின்ன வகையான நோய்களுடையவர்கள், சிறப்பாக ரெஃப் பரல் அவுட் பேஷியன்ட்ஸ் என்ற முறையில் அனுப்பப்படுகிறவர்கள் கல்லூரி மருத்துவ மனையில் கவனிக்கப்படுகிறார்கள். பொதுவான வெளி நோயாளிகளுக்கு நகரிலுள்ள ராஜா மிராசுதார் மருத்துவமனையே பணியாற்றி வருகிறது.

* 845. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருத்துவக் கல்வி இயக்குநர், புதிய கட்டிடத்திற்கான தேவையை விரிவாக விளக்கியும், தற்போதைய தேவைகளுக்கேற்பத் திருத்திய மதிப்பீட்டுடன் கூடிய வரைவு படத்துடன் அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI :** Sir is there a proposal to start another Women and Children's Hospital in North Madras to relieve the congestion at Egmore?



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தக் கேள்வி மகப்பேறு மருத்துவமனைபற்றியது. மகப்பேறு மருத்துவமனை இப்போதே வடசென்னையில் ஸ்டான்லி மருத்துவமனையோடு இணைக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

**திரு வை. பாலசுந்தரம் :** சென்னை மாநகராட்சி மன்றம் ஏராளமான மகப்பேறு மருத்துவமனைகளை நடத்தி வருகிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக சென்னை மாநகராட்சி மன்றம் சங்கடப்படுவதை மீட்டுத் தருவதற்கு சென்னை மாநகராட்சி மன்றம் நடத்துகிற மகப்பேறு மருத்துவ மனைகளை அரசே ஏற்று நடத்துமா ? அப்படி நடத்தவில்லை என்றால் மானியமாவது வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாநகராட்சி மன்றத்திற்கு நிதிப் பற்றாக்குறை என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இங்கேயும் அதே கதைதான்.

* 846 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether the proposals to provide about 40 beds in the Maternity Ward in the Government Hospital in Hosur Town has been finalised; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு க. அன்பழகன் :** (அ) & (இ) அத்தகைய திட்டமொன்றும் அரசிடமில்லை.

* 847. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் மருத்துவ வசதி பற்றாக்குறையினைப் போக்கிடப் புதிய மருத்துவமனைகளைத் துவக்கிட அரசு திட்ட மிட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

### *Mobile Hospital for Hosur Taluk*

* 848 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether there is a proposal before the Government to sanction at least one mobile hospital for Hosur Taluk in Dharmapuri District; and

(*b*) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* (அ) & (இ) அவ்வட்டத்தில் அரசின் நடமாடும் மருத்துவமனை ஒன்று ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

### *ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மருத்துவ மாதுகள்*

*** 849 வினா—திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களின் தாய்-சேய் நல விடுதிகளில் பணியாற்றும் மருத்துவ மாதுகளையும், ஆயாக்களையும் மருத்துவத் துறையின் நிர்வாகத்திற்குக் கொண்டுவர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* ஆம்.

*திரு. கா. காளிமுத்து:* அப்படியானால் அது எப்போது செயல்படுத்தப்படும்? ஏதாவது காலவரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* இது அந்தத் துறையைச் சார்ந்த இலாகாச் செயலாளரிடத்தில் பரிசீலனையில் இருக்கிறது. இன்னொரு இலாகாவின் மேற்பார்வையும் இருக்கும் காரணத்தால் அவர்களுடைய ஒப்புதலும் பெற்றுத்தான் முடிவு எடுக்கப்படும்.

### *Handloom weavers in Paramakudi*

* 850 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Labour be pleased to state:





(*a*) whether it is a fact that Handloom Weavers in Paramakudi, Ramanathapuram district propose to go on hunger strike;

(*b*) whether the Master Weavers have honoured the settlement; and

(*c*) if not, the steps taken by the Government to meet the demands of weavers?

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:* (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) தொழிலாளர் நல அதிகாரி இருதரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி வந்துள்ளார். மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்தக் கருதியிருந்தார். 28-2-1972-ம் நாளன்று நிர்ணயிக்கப்பட்ட பேச்சு வார்த்தைகளுக்குத் தறி உடைமையார்கள் வரவில்லை. யூனியன் பிரதிநிதிகள் மட்டும் வந்திருந்தனர். கைத்தறி உடைமையார்கள் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகின்றது. முன்னர் ஏற்றுக்கொண்டபடி ஊதியம் கொடுக்காத தறி உடைமையாளர்களை முதலில் அணுகுவதாகவும் தேவையானால் தொழிலாளர் நல அதிகாரியைப் பின்னர் அணுகுவதாகவும் சங்கப் பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை இப்போது சீராக உள்ளது.

*திரு. கா. வேழவேந்தன்:* இப்படி மாஸ்டர் வீவர்கள் எல்லாம் கைத்தறி நெசவாளர்களுக்கு உரிய ஊதியத்தைக் கொடுக்காத பிரச்சினை நாடெங்கும் இருக்கிறது. ஆகவே, உடனடியாக கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கும் திட்டம் அமல்படுத்தப்படுமா?

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:* அரசு அதுபற்றித் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* பரிசீலனை செய்தால் போதாது. எந்தக் காலவரையறைக்குள் இப்படிப்பட்ட திட்டம் கொண்டு வரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:* பரிசீலனை செய்த பிறகு அதன் விளைவாக அந்தக் காலவரையறைபற்றித் தெரிவிக்கப்படும்.

[1972 ஏப்ரல் 3

**திரு. கே. என். குமாரசாமி :** கைத்தறி உடைமையாளர் சங்கம் கலைக்கப்பட்ட காரணத்தால் தனித் தனியாகத் கைத் தறியில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் கோரிக்கை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கலைத்திருக்கிறார்கள். மீண்டும் அவர்களிடத்தில் தனித் தனியாகப் பேசி முடிக்கப்பட்ட ஒப்பந்தப் பிரகாரம் அவர்களுக்கான கோரிக்கையைக் கொடுக்க அரசாங்கம் வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதைப்பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கைத்தறி நெசவாளர் பிரச்சினையில் பரமக்குடி, மதுரை போன்ற இடங்களில் ஆண்டு தோறும் அரசு தலையிட்டு ஒப்பந்தம் ஏற்படுகிறது. அந்த ஒப்பந்தம் தாசில்தார் முன்னிலையிலோ ஆர்.டி.ஓ. முன்னிலையிலோ நடைபெறுகிறது. தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் ஏற்படும் நேரத்தில் அதை 12 (3) சட்டத்தின்படி என்ஃபோர்ஸ் பண்ண முடியும் என்ற நிலை இருக்கும்போது இங்கு அம்மாதிரி நிலை இல்லை என்று ஏற்படுகின்றது. மாஸ்டர் வீவர்கள் பல முறையில் ஒப்பந்தத்தை மீறுகிறார்கள். அம்மாதிரி இவர்கள் ஒப்பந்தத்தை மீறாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாஸ்டர் வீவர்களை அணுகி அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றனர். அதற்குள்ளாக தொழிலாளர் பிரதிநிதிகள் நாங்களே அணுகி முடிவுகாண்கிறோம். முடிவு காண வில்லை என்றால் உங்களை அணுகுகிறோம் என்று தெரிவித்திருக் கிறார்கள்.

## பீடி, சுருட்டு தொழில்கள் சட்டம்.

* 851 வினா—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பீடி, சுருட்டு தொழிலாளர் சட்டம் தமிழ்நாட்டில் அமலாவதை உயர்நீதி மன்றத்தின் மூலம் பீடி முதலாளிகள் 'ஸ்டே' உத்தரவுகள் பெற்று நான்கு ஆண்டுகளாகியும், அச்சட்டத்தை அமலாக்க நீதிமன்ற விசாரணையைத் துரிதப் படுத்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா ?



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றத்தை வழிவகை காணுமாறு அரசு வழக்குரைஞர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமாக நீதிமன்றத் தில் தாக்கல் செய்வதற்காக வரைவு மனு ஒன்றைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**திரு. என். மருதாசலம் :** பீடித் தொழிலாளர் சட்டம் மத்திய சர்க்காரால் நிறைவேற்றப்பட்டு மாகாண சர்க்காரால் அமல் நடத்தப்பட வேண்டியது. இப்போது பீடி முதலாளிகள் கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். சர்க்கார் அரசியல் சட்டத்தில் 25-வது ஷரத்தைத் திருத்திய பிறகு அந்த 'ஸ்டே'யை ரத்து செய்து உடனடியாகப் பீடித் தொழிலாளர் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இந்த வழக்கு ஏறத்தாழ நான்கு ஆண்டுக் காலமாகக் காலதாமதமாவதால், உடனடியாக இதை எடுத்துக் கொள்ளுமாறு அரசு வழக்குரைஞர் மூலம் நீதிமன்றத்திற்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவில் அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அண்டை மாநிலங்களிலும் பீடி சுருட்டுத் தொழிலாளர் சட்டம் வந்தால்தான் இதை நல்ல முறையில் அமல் நடத்த முடியும். இப்போது பீடித் தொழில் அதிபர்கள் தங்களுடைய தொழிலை ஆந்திராவுக்கோ, கேரளா வுக்கோ எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே நம்முடைய அரசு மத்திய சர்க்கார் ஒத்தாசையோடோ அல்லது அண்டை மாநிலங்களில் ஒத்தாசை பெற்றோ இந்தச் சட்டத்தை அங்கும் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அண்மையில் சென்னைக்கு வந்திருந்த மத்திய தொழிலாளர் நல அமைச்சர் கடில்கரிடத்தில் இதைப்பற்றித் தெரிவித்தோம். அவர்கள், விரைவில் நான்கு மாநிலங்களில் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

[1972 ஏப்ரல் 3

திரு. கே. டி. கே. தங்கமணி: பீடி, சுருட்டுத் தொழிலாளர் பாதுகாப்புக்கான சட்டம் மத்திய அரசுச் சட்டம். அந்தச் சட்டம் செல்லாது என்று சொல்லி கோர்ட்டுகளிலே வாதாடுகிறார்கள். அப்படி வருகிறபோது குறிப்பிட்ட காலத்திலாவது அது முடிய வேண்டுமென்ற அளவுக்கு நமது ஹைகோர்ட்டுக்கு எந்த முறையில் சொல்ல முடியுமோ அந்த முறையில் அரசு சொல்ல முன்வருமா? ராஜமன்னார் குழு சிபாரிசில்கூட இம்மாதிரி ஹைகோர்ட், சுப்ரீம்கோர்ட்டில் இதெல்லாம் ஒரு கால அளவுக்குள் முடிய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பீடித் தொழிலாளர் சட்டத்தையும், அதன்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிமுறைகளையும் கூடிய விரைவில் இம்மாநிலத்தில் செயல்படுத்த வேண்டுமென்ற வகையில் அரசு வழக்குரைஞர் நீதிமன்றத்தில் வழிவகை காணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த ரிட் மனுக்கள் கோடை விடுமுறைக்குப் பின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அரசு வழக்குரைஞர் தெரிவித்துள்ளார்.

திரு. கே. என். குமாரசாமி: இந்தச் சட்டம் அமலாக்கப்படாமலிருக்க முதலாளிகள் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதை அமலாக்காத பகுதிகளில் வேலை நிறுத்தங்கள், உண்ணாவிரதம், தொழிற் தகராறுகள் கிளப்பப்பட்டு வருகின்றன. பீடித் தொழிலாளர் சட்டம் இருந்தும்கூட பரிதாபகரமான முறையில் பீடித் தொழிலாளர் நிலை இருப்பதால் அரசு கடுமையான நடவடிக்கையை எடுப்பதன்மூலம் அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவு மாநில அரசு எந்த அளவுக்குத் தலையிட முடியுமோ அந்த அளவுக்குத்தான் தலையிட முடியும். நீதிமன்றத்தை வலியுறுத்தப் போதிய அதிகாரம் இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த அரசுக்குள்ள அக்கறையின் காரணமாக விரைவில் விசாரணைக்கு எடுக்க முறைப்படி வழிவகை காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1972 ஏப்ரல் 3]

## அரிசன விடுதி மாணவர்களுக்குச் சத்துணவு.

* 852 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன நல விடுதியில் உள்ள மாணவர்களுக்கு ஊட்டச்சத்து அளிக்கும்பொருட்டு முட்டை, பால் வழங்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 5 வீதம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பெரும்பான்மையான மாணவர் விடுதிகளுக்குத் தேவையான முட்டைகள் ஒரு சில சமயங்களில் கிடைப்பதில்லை. ஆகவே, பால், முட்டைக்குப் பதிலாக அது கிடைக்கவில்லை என்றால், ஆட்டு இறைச்சி கொடுக்க அரசாங்கம் தகுந்த ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முட்டை கொடுக்க வேண்டும் அல்லது பால் கொடுக்க வேண்டும். முட்டையும், பாலும் கொடுக்கக்கூடிய இடத்தில் மூன்று தினங்கள் முட்டையும், இரண்டு தினங்கள் பாலும் என்று மாற்றி வெள்ளி, சனி, நீங்கலாகக் கொடுக்கப்படுகிறது. இந்த ஊட்டச் சத்துப் பொருளுக்குப் பதிலாக மாமிசம், இறைச்சி கொடுப்பது என்றால் அதை ஒழுங்காக விடுதியைக் கண்காணிப்பவர்கள் செய்ய முடியாது என்ற காரணத்தால் முட்டையும், பாலும் கணக்காகக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அது கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை: அரிசன மாணவர்களுக்கு மாத்திரம் ஊட்டச் சத்து கொடுப்பதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றிய அளவில் எத்தனை ஏழை மாணவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், அரசு, இன்னும் கேர், யூனிசெப் போன்ற ஸ்தாபனங்கள்

[1972 ஏப்ரல் 3

எல்லாம் சேர்ந்து ஜாதி மத வித்தியாசம் இன்றி எல்லா ஏழை மாணவர்களுக்கும் ஊட்டச் சத்துக் கொடுக்க அரசு திட்டத்தை வகுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இது நலத்துறை இலாகா சம்பந்தப்பட்டது அல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அரிசன ஹாஸ்டலில் வேலை செய்யக் கூடிய சமையல்காரர்களுக்கு ரொம்பக் குறைவாகச் சம்பளம் கொடுக்கப்படுகின்ற காரணத்தால் ருசியாகச் சமையல் செய்யக்கூடிய சமையல்காரர்கள் இருப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தி நல்ல ருசியாகச் சமைக்கக்கூடிய சமையல்காரர்களைப் போட முன்வருவர்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அப்படி ஒன்றும் கிடையாது. பின்தங்கிய மாணவர்கள் விடுதியிலிருக்கக்கூடிய சமையல்காரர்களுக்குக் கொடுக்கப்படும் அதே சம்பளவிகிதம் அரிசன மாணவர் விடுதிகளில் பணியாற்றும் சமையற்காரர்களுக்கும் தற்போது கொடுக்கப்படுகிறது. இடையில் பின்தங்கிய மாணவர் விடுதி சமையற்காரர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுத்தார்கள். அரிசன மாணவர் விடுதிகளில் உள்ள சமையற்காரர்களும் அதே சம்பள விகிதம் வேண்டுமென்று கேட்டு இப்போது அதே அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. இதுதான் காரணமேதவிர ருசியாக சமைக்கிறார்களா இல்லையா என்ற பிரச்சினை இல்லை. மாணவர்கள் குறை சொல்ல வேண்டுமென்று நினைத்தால் ருசியாக இருப்பதைக்கூட ருசியாக இல்லை என்று கூறுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி சத்துணவைப்பற்றியது, நீங்கள் சமையற்காரருக்குப் போய்விட்டீர்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அரிசனங்களுக்கு இந்த சத்துணவு வழங்கப்படுவதில் சனிக்கிழமை முட்டை வழங்குவதில்லை என்று சொன்னார்கள். சனிக்கிழமை விரதநாள் என்று சொல்கிறார்கள். அதனால் அவர்களுக்கு வழங்கவில்லையா அல்லது வேறு ஏதாவது காரணமா?



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** உயர்த்தப்பட்டிருக்கின்ற 5 ரூபாயில் வாரத்திற்கு 5 நாட்கள்தான் கொடுக்க முடியும். அதிகமாகப் பணமிருந்தால் இன்னும் 7 நாட்களுக்குக் கூடக் கொடுக்கலாம். பணம் குறைவாக இருப்பதால் ஏதாவது இரண்டு நாட்கள் விடப்படவேண்டும் என்று சொல்லும்பொழுது, மாணவர்களின் விருப்பம் அது வெள்ளி, சனி என்று இருக்கட்டும் எனக் கூறுகிறார்கள். ஆகவே வெள்ளி, சனிக்கிழமைகளில் வழங்காமல் மற்ற நாட்களிலே வழங்கப்படுகிறது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இப்படி சத்துணவு கொடுக்கப்பட்டும்கூட இந்தப் பின்தங்கியவர்கள் வசிக்கும் மாணவர் விடுதிகளிலும், அரிசனங்கள் வசிக்கும் மாணவர்கள் விடுதிகளிலும் இருப்பவர்களுக்குச் சோகை நோய் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அதன்காரணமாகப் பல மாணவர்கள் வருந்துகிறார்கள், அப்படிப்பட்ட சோகைநோய் எத்தனைபேருக்கு இருக்கிறது என்ற கணக்கையெடுத்து அதை நீக்குவதற்கு இன்னும் அதிகச் சத்துள்ள உணவு வழங்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இரண்டு சமுதாய மாணவர்களுக்கும்தான் இந்த 5 ரூபாய் உயர்த்திச் சத்துணவு போடும் திட்டம் இருக்கிறது. மாணவர்களுக்குச் சத்துக் குறைவாக இருப்பதால் வளர்ச்சியில்லாமல் பல நோய்கள் வருகிறது என்பதை அறிந்துதான் இந்த சத்துணவு போட வேண்டுமென்று, மிகவும் சத்து அடங்கியுள்ள முட்டையும் பாலும் கொடுக்க வேண்டுமென்று முடிவெடுத்துக் கொடுக்கிறோம். அந்தக் குறைபாடுகள் இல்லாமல் இப்பொழுது இப்படிப்பட்ட சத்துணவு பெற்ற பிறகு மாணவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை அவ்வப்பொழுது பரிசிலனைசெய்து அதற்குரிய நடவடிக்கை ஈடுக்கப்படும்.

*Supply of milk powder in slum areas*

* 853 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) whether milk powder and milk prepared therefrom are being distributed in slum areas in Madras City by any Private Agencies; and

(b) if so, the details thereof?

[1972 ஏப்ரல் 3

**மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) பால் மாவு, அறநிறுவனங்கள் மூலமாக, இனம், சாதி, சமய வேறுபாடின்றி ஏழையருக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக டென்மார்க், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளால் நன்கொடைப் பொருள்களாக வழங்கப்படுகிறது. இத்தகைய பதினொரு அறநிறுவனங்கள், சென்னை மாநகர் குடிசை வாழ் பகுதிகளில் பால் வழங்குகின்றன. இதுகுறித்து மாநில அரசுக்கு நேரடிப் பொறுப்பு எதுவுமில்லை. ஆயினும், பால்மாவு தவறாகப் பயன்படுத்தப்படாமலிருப்பதைத் தவிர்க்க நன்கொடைச் சரக்கு எப்போது வருகிறது, எப்படிப் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பது குறித்து நிறுவனங்கள் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அறிவிக்க வேண்டும். இது சரிவரப் பகிர்ந்தளிக்கப்படுவது குறித்து சான்றிதழ் ஒன்றை மாநில உணவுப் பொருள் வழங்கு அதிகாரிகள் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படுவது உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையாளரால் கண்காணிக்கப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, லிஸ்ட் தயார் செய்து அதன் அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் அல்லது பொதுநல நிறுவனங்களின்மூலம் இவைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதற்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையில்லை. நல்ல வாலண்டரி இன்ஸ்டிட்யூஷன்ஸ், தனியாகத் தொண்டு செய்யும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகள் இவைகளையெல்லாம் முறையாகச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்கள் சென்னையில் 11 நிறுவனங்கள் இப்படிப்பட்ட பாலைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

## சிறுமலைக் காடுகளிலுள்ள நிலங்கள்

*854 வினா—**திரு. க. நாகராஜன் :** மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) சிறுமலைக்காடுகளில் சர்வே செய்யப்பட்ட ரேஞ்சின் நிலங்களை ஏற்கனவே நிறைய நிலம் உள்ளவர்களும் பெரிய



1972 ஏப்ரல் 3]

பணக்காரர்களும் ஆக்கிரமித்துக்கொண்டு ஒவ்வொருவரும் 70-80 ஏக்கர் நிலங்களை 3 (d) பட்டா போட்டு அனுபவித்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இவர்களிடமிருந்து அந்தப் பட்டாக்களை நீக்கிவிட்டு ஏழைகளுக்கு அந்த நிலங்களைப் பிரித்துக்கொடுக்கச் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) எஸ்டேட்டில் உள்ள ஒரு நிலத்தில் உரிமையாளராக உள்ள ஒருவர் ரயத்துவாரிப் பட்டா பெறுவதற்கு வெளிப்படையாக உரிமையுடையவர் என்று அரசு கருதினால், நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகளின் முடிவு தெரிகிற வரையில் எந்த நிலத்தின் உடைமையிலிருந்தும் அவரை அரசு அகற்றக் கூடாது என்று தமிழ் நாடு 1948-ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் 3 (d) பிரிவின் வரம்பு நிபந்தனை விதிக்கிறது. 3 (d) பிரிவில் குறிப்பாக அரசின் காட்டுப் பகுதியில் ஆக்கிரமிப்புச் செய்திருப்பவருக்குப் பட்டா ஏதும் வழங்க வகை செய்யவில்லை; இப்பிரிவின்கீழ் எவருக்கும் பட்டா வழங்கப்படவில்லை.

(இ) மேலே (அ) பகுதியில் தெரிவித்துள்ள நிலையையொட்டி, வழங்கப்பட்டுள்ள பட்டாக்களை ரத்து செய்வதற்கோ நிலங்களைத் திருப்பி எடுத்துக்கொள்வதற்கோ இடமில்லை.

**திரு. க. நாகராஜன் :** தலைவரவர்களே, பொதுவாகவே மலைப்பகுதிகளில் பட்டா வழங்கும்பொழுது பட்டாப் பெறுபவர்கள் ஏற்கனவே நிலம் வைத்திருந்தால் அவர்களுக்கு வழங்கக் கூடாது என்றும், புதிதாக பட்டா வழங்கும் திட்டத்தில் 5 ஏக்கருக்கு மேல் வழங்கக்கூடாது என்றும் அரசு சட்டம் இயற்றுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மலைப் பகுதியிலே பட்டா வழங்குவது என்பது ஏற்கனவே அவர்களுக்கு உள்ள உரிமையை அடிப்படையாக வைத்து வழங்குவது. ஆனால் மலைப்பகுதிகளிலுள்ள நிலங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நாம் விலக்குக் கூடாது என்று சட்டம் கொண்டுவர இருக்கிறோம். பட்டாக் கொடுப்பது

என்பது வேறு, உச்சவரம்பிற்குக் கொண்டுவந்து நிலத்தை எடுப்பது வேறு. மலைப்பகுதியில் இருப்பவைகளைக் கொடுப்பதற்கு தர்க்கா சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், பிளாண்டேஷனுக்கு உச்சவரம்பு வைக்கும்பொழுது இங்கே சாதாரண பிளாண்டேஷனுக்கு இருப்பதுபோலில்லாமல், ஒரு வயபிள் யூனிட்டாக, எஃபிசியன்டாக நடத்துவதற்கு என்னென்ன தேவை என்று பார்த்து வைப்பார்களா? அல்லது வெறும் எண்ணை வைத்து இருப்பதைப் பங்கிட்டுக் கொடுக்கும்வகையில் அன்வயபிள் யூனிட்டாகச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் நான் கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காக வருந்துகிறேன். நான் பிளாண்டேஷனுக்கு உச்சவரம்பு கொண்டு வருவதாகச் சொல்லவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, சிறுமலைப் பகுதிகளில் விவசாயிகள் பல வருஷங்களாக அங்கே போய் விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுப்பது பற்றி அதிகாரிகள் போய்ப் பார்த்து, சர்வே செய்யப்பட்டு ரெவின்யூ போர்டுக்குப் போய் நம்முடைய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டும் இன்னும் பட்டாச் செய்து கொடுக்க முடியாமல் பல வருஷங்களாக இருக்கிறதே அது சம்பந்தமாக அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மொத்தம் இந்தச் சுருளிமலை கிராமத்தில் இருக்கும் ஏக்கர் 29,57 இதிலே 7,138 ஏக்கர் பட்டாக் கொடுக்கப்பட்டு விட்டது. மீதம் ஆக்கிரமிப்பில் உள்ளதைப்பற்றி அரசு பரிசீலிக்கிறது. அவர்களுக்கு உரிமை வழங்குவதுபற்றி அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இன்றைக்கு இம்மாதிரி மலைமேல் இருக்கும் நிலங்களுக்கு விதிவிலக்கு ரத்துச் செய்வதாக இன்றைக்கு நாம் சட்டம் இயற்ற இருக்கிறோமே, அப்படியானால்





இம்மாதிரி சிறுமலை போன்ற பல மலைகளில், ஹில் ஏரியாக்களில் இன்றைக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அவை எப்பொழுது ரத்து செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இதைப்பற்றி இரண்டு அவைகளையும் கொண்ட குழு சிபார்சு செய்திருக்கிறது. விரைவிலே சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றுவதாக இருக்கிறோம்.

**திரு. இ. ராமசாமி :** தலைவரவர்களே, மலைப்பகுதிகளில் இருக்கும் இடங்களில் அடுத்த நாட்டுக்காரர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை 99 ஆண்டுகளுக்கு லீசுக்கு எடுத்திருக்கிறார்கள். அந்த லீஸ் முடிந்ததும் அத்தகைய இடங்களை அரசு எடுத்துக் கொள்ளுமா அல்லது அந்த லீசைப் புதுப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்தக் குத்தகை ஒப்பந்தக் காலம் முடிவடையும்பொழுது யோசிக்கப்பட வேண்டிய ஒன்று. அப்பொழுது அதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்த பிளாண்டேஷனிலே 25 ஏக்கர் ஒரு வயபிள் யூனிட்டாக் இருக்கும் என்று தோட்டங்களை வைத்திருப்பவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அந்த பிளாண்டேஷனிலே 25 ஏக்கர் என்று உச்சவரம்பு கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தற்போதைக்கு பிளாண்டேஷனிலே நாம் உச்சவரம்பிற்கு அந்தச் சட்டத்திலே இருக்கும் விதிவிலக்கை ரத்துச் செய்வதாக இல்லை. ஆனால் அரசு பரிசீலித்து உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஃபாரஸ்ட் லேண்டிலே எந்த அளவிற்குப் பட்டாக் கொடுப்பதாகக் கொள்கை இருக்கிறது. கிரே 3 ஏக்கர் நஞ்சை, 1½ ஏக்கர் புஞ்சை என்பதுபோல் இல்லாமல் அதிகப்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, எல்லா இடத்திலும் ஒரேமாதிரியான நீதிதான் வழங்கப்படும்.

[1972 ஏப்ரல் 3

## கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள தரிசு நிலங்கள்

* 855 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், பல ஆண்டுகளாக ஏல தரிசாக உள்ள நிலங்களை உடனடியாகத் தரிசாக மாற்றி அனுபோகதாரர்களுக்கு அடைமானம் செய்துவைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. ந. நாச்சியப்பன்: பேரவைத் தலைவரவர்களே, 12 ஆண்டுகளாகத் தீர்வை செலுத்தி, சலான் கட்டி 1958-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் அந்த விவசாயிகளுக்கு நிலம் அடைமானம் செய்யவில்லை. பல தடவைகள் அந்த விவசாயிகள் கோட்டாட்சித் தலைவரிடத்திலே சென்றும் கட்டுக்கோப்புகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இவைகளைப் போக்க ஒரு தீர்வை செலுத்தியவர்களுக்குக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அடைமானம் செய்ய முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வட்டத்தில் 1,767 ஏக்கர் 46 சென்ட் நிலம் ஏலத்தரிசாக இருக்கிறது. 87 ஏக்கர் 39 சென்ட் சம்பந்தப்பட்ட வாரிசுகாரர்களுக்கு அடைமானம் செய்யப்பட்டது. மீதம் நிலத்தை ஏலம் விட்டு தயார் செய்திருக்கிறார்கள். அல்லது வேறு யாராவது ஆக்கிரமிப்புச் செய்து அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 12 ஆண்டுகள் தீர்வைகட்டி வைத்திருந்தால் அவைகளைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிக்கிறேன்.

## அசோக் நகரிலிருந்து இணைப்புச்சாலை.

* 856. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1972 ஏப்ரல் 3]

சென்னை அசோக் நகருக்கும், பூவிருந்தவல்லிச் சாலைக்கும் இடையே இணைப்புச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

## சுகநதியின் குறுக்கே சிறு அணை.

* 857 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட. ஆர்க்காட்டில் உள்ள வந்தவாசி நகருக்கு அருகில் ஓடும் சுகநதியின் குறுக்கே ஒரு சிறு அணைகட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் உல்லாசப் பயணிகள் தங்குமிடங்கள்.

* 858 வினா—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில், "உலக்கை அருவி" "திற்பரப்பு அருவி" "முத்துக்குழி வயல்" போன்ற வனப் பிரதேசங்களையும், கன்னியாகுமரி நகர் போன்ற இடங்களையும் உல்லாசப் பிரயாணிகள் தங்குமிடமாக்குவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கன்னியாகுமரி நகர் ஏற்கனவே உல்லாசப் பயணிகள் தங்குமிடமாக இருந்து வருகிறது. ஆனால் குமரி மாவட்டத்திலுள்ள "உலக்கை அருவி" "திற்பரப்பு அருவி" "முத்துக்குழி வயல்" போன்ற வனப் பிரதேசங்களை உல்லாசப் பயணிகள் தங்குமிடமாவதற்குரிய செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

[1972 ஏப்ரல் 3

*Retired Government Servants in Forshore Estatr.*

*859. Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Backward Clases be pleased to state—

(a) whether the Government have received representation from the retired Government Servants occupying quarters at the Foreshore Estate, Santhome, Madras City seeking alternative quarters about July-August, 1971; and

(b) the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) விண்ணப்பதாரர்கள் குடிசைவாசிகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்வதற்காகக் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைக் கேட்டதனால் அவர்கள் விண்ணப்பம் மறுக்கப்பட்டது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவரவர்களே, விண்ணப்பதாரர்கள் குடிசைவாசிகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்வதற்காகக் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைக் கேட்டதனால் அவர்கள் விண்ணப்பம் மறுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் பரிசீலனை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு மாற்று வீடு தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அவர்கள் குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகளைக் கேட்டார்கள். ஓய்வு பெற்றவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் 3 மாதம் வரையில் குடியிருக்கலாம் என்ற முறையில் அந்த நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு அனுமதி வழங்கலாமே தவிர, அவர்களுக்கு மாற்று வீடு வேண்டுமானால் அவர்கள் வேறு வியாபார முறையில் தவணை முறையில் வீடுகள் வாங்கிக் கொள்ளலாம்; வேறு வழியில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, ஓய்வு பெற்ற அதிகாரிகளின் பிள்ளைகளோ, பெண்களோ இருந்தால் அவர்களுக்கு மாற்றிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? அவர்களை வெளியேற்றாமல்.



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அரசாங்க அதிகாரிகளின் பிள்ளைகள் அரசாங்க பணியில் இல்லாதவர்களாக இருந்தால், அவர்களுக்கு மாற்று வீடு தர ஏற்பாடு செய்ய முடியும்.

### செஞ்சி வட்டத்திலுள்ள காட்டு நிலங்கள்.

*860. வினா—**திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் உள்ள காரை, செஞ்சி, பாடிபள்ளம், சென்றூர், எதப்பட்டு ஆகிய கிராமங்களின் அருகில் உள்ள தரைக்காடுகளை விவசாயம் செய்வதற்கென அங்குள்ள ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. இராமன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவரவர்களே, செஞ்சி வட்டத்திலுள்ள காரை, செஞ்சி, பாடிபள்ளம், சென்றூர், எதப்பட்டு, வயலூர் ஆகிய கிராமங்களின் அருகில் ஆயிரக்கணக்கான தரைக் காடுகள் இருக்கின்றன. மரம் செடி இல்லாமல் காடுகள் பாழாகி இருக்கிறது. அந்தத் தரைக்காடுகளை அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளித்தால் ஏழை விவசாயிகள் அதை உழுது பயன்படுத்த முடியும்; ஆகவே, அதைச் செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மேலும் காட்டு நிலங்கள் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

### மரம் வளர்ப்பு விழா.

*861. வினா—**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

[1972 ஏப்ரல் 3

(அ) மாவட்டந்தோறும் வன மகோத்சவம், வன விலங்குகள் பாதுகாப்பு வாரம் ஆகியவைகள் கொண்டாடப்படுகின்றனவா ?

**(இ) இவ் விழாக்களுக்கு அரசு மானியம் ஏதாவது கொடுக்கப்படுகிறதா ?**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

**(இ)** மரம் வளர்ப்பு விழாவை ஒட்டிய செலவுகளுக்காகத் தமிழக அரசு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ரூபாய் 500 வழங்கிறது. இத் தொகையை மாவட்ட ஆட்சியாளர், தமது மாவட்டத்திற்குட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

**1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில் நடந்த** வன விலங்கு வார விழாவை ஒட்டிய செலவுகளுக்காக, ரூபாய் 6,500க்கு தமிழக அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, வன விலங்கு வாரங்கள் கொண்டாடுகிற நேரத்தில் வன விலங்குகளைத் திருட்டுத் தனமாக வேட்டையாடும் அபாயம். விஷயம் வைத்துக் கொல்லுகிறார்கள். குறிப்பாக முதுமலைப் பகுதியில் புலிகளை இந்த விஷம் வைத்துக் கொல்லுவதால் அதன் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது ? முதுமலைக்காட்டில் உள்ள புலிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கிடப் பட்டிருக்கிறதா ?

* **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே. அனுமதி இல்லாது வன விலங்குகளை வேட்டையாடினால், இப்போதே சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு சட்டம் இருக்கிறது. வன விலங்குகள் எந்த அளவில் இருக்கிறது என்பதை சர்வே செய்ய புதிய குழு ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, இதற்கு முன்னாலே வன மகோத்சவம் என்று சொல்லி மரங்கள் நடப்பட்டதே, அவற்றில் எத்தனை மரங்கள் பிழைத்து இருக்கின்றன, குறிப்பாக மாதவரம் பால் பண்ணையில் வன மகோத்சவம் ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா ?



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு மரங்கள் வைக்கப்பட்டன என்ற கணக்கு இருக்கிறது. சென்னை மாவட்டத்தில் 6,000 கன்றுகள் வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

**திரு. த. சோனையா :** தலைவரவர்களே, 10-15 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த மரம் வளர்ப்புத் திட்டம், மரம் நடும் திட்டம் என்று முன்னால் இருந்தவர்கள் செய்தார்களே, அவர்கள் நட்ட மரங்களில் எத்தனைக்குத் தண்ணீர் ஊற்றினார்கள், எத்தனை மரங்கள் பிழைத்தன என்ற கணக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே அது பற்றிய கணக்கு இல்லை. அகில இந்திய அளவில், தேசீயப் பணியாக ஏற்றுக் கொண்டு, ஒவ்வொரு மாநிலத்திலும், ஆண்டுக்கொரு முறை இந்த மரம் நடுவிழா கொண்டாடப்படுகிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, முன்பு மரம் நடுவிழா என்று சொன்னார்கள். இது மரம் நடுவிழாவா, செடி நடுவிழாவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மரம் நடுவிழா என்று பெயரே தவிர, கன்றுகள், செடிகள் தான் நடுகிறோம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் 500 தான் அரசாங்கம் அந்த விழாக் கொண்டாடுவதற்காக வழங்குகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிட்டத்தட்ட 40-50 ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூபாய் 10 தான் வரும். ரூபாய் 10 வைத்துக் கொண்டு இந்த விழா நடத்துவது என்பது முடியாது. அரசாங்கம் மறு பரிசீலனை செய்து, அதிகமாகப் பணம் ஒதுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, அதிகமாகப் பணம் ஒதுக்க உத்தேசமில்லை. அங்கே விரும்புகிறவர்கள், பொது பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியவர்கள் வீடுகளில் வைத்து வளர்க்க வேண்டுமென்ற தாக்கீது ஒன்றை அரசு அனுப்பியுள்ளது.

## பெரியபாளையம் பவானி அம்மன் கோயில் வருவாய்

* 862. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டை பெரியபாளையம் பவானி அம்மன் கோயில் வருவாயைக் கொண்டு ஓர் அனாதைச் சிறுவர் இல்லம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஆம்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஆம் என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அந்த ஆலயத்தைப் பார்த்திருக்கிறார்கள். ஆண்டவனின் குழந்தைகளாக இருக்கும் அனாதைகளுக்கு விடுதி துவக்க இருப்பதாகச் சொன்னார்கள். அந்த விடுதியை இந்த ஆண்டே, தொடங்கப் போகிற கல்வி ஆண்டிலேயே, இந்த ஜூன் திங்களிலேயே துவக்கி அதை அமைச்சர் அவர்கள் கையாலேயே திறந்து வைக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அனாதை இல்லம் துவக்கலாமா என்று அறங்காவலர்களைக் கேட்டோம். அறங்காவலர்கள் ஒப்புதல் தந்து இருக்கிறார்கள். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, அந்த பவானி அம்மன் கோவிலுக்கு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே. 1968-ம் ஆண்டில் ரூ. 67, 865-ம், 1969-ல் ரூ. 83,230-ம், 1970-ல் 81,566-ம் வருமானமாக வந்திருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether any representation has been made by Thiru Raghava Reddi, ex-M.L.A., regarding the administration of this temple and the action taken thereon?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட கோவில்களுக்கு வருகிற வருமானத்தை யெல்லாம் அந்தக் கோவிலின் முன்னேற்றத்திற்குச் செலவழிக்காமல், சில சமயங்களில் வேறு பல கோவில்களுக்கு அந்தப் பணத்தை டைவர்ட் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தந்தக் கோவில்களுக்கு வருகிற வருமானத்தை அந்தந்த கோவில்களுக்கே செலவழிக்க அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, உபரி நிதியைத்தான் வேறு கோவில்களுக்கு நாம் கொடுக்கிறோம்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, பெரியபாளையம் ஆலயம் அரசாங்கத்தின் அறங்காவல் துறையின் கீழ் இருக்கிறதா ? அல்லது தனிப்பட்டவர்களின் ஆளுகையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அந்த ஆலயம் அறங்காவல் துறையின் ஆளுகையின்கீழ் இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் தான் அந்த ஆலயத்திற்கு அறங்காவலர்களை நியமிக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய இந்தக் கோவிலைப் பற்றி பல குறைபாடுகள் எல்லார் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே. இப்போது இருக்கக்கூடிய அறங்காவலர்களை மாற்றி அமைக்கும் ஆலோசனை அரசுக்கு உண்டா.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அந்தக் கோவில் நிர்வாகத்தைப் பற்றிய குறைபாடுகள் ஏதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஏதாவது வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அறங்காவலர்கள் மாற்றுவது என்பது, அவர்களுடைய காலவரையரை முடிவடைந்த பிறகு யோசிக்கலாம்.

[1972 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## (2) அமைச்சர் அறிக்கை

### முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பத்திரிகைக்கு அளித்த செய்தி குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது 82-வது விதியின் கீழ் இப் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்.

THIRU K. T. K. THANGAMANI : I have written a letter to the Hon. Chief Minister with a copy to you, Sir. There are three or four issues which are now being commented in the Press. One is concerned with Hon. Chief Minister and other Ministers also. When the Hon. Chief Minister makes his statement under Rule 82, if he could touch upon those points also, it will be better.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவரவர்களே, 30-3-1972-ஆம் நாள் சட்டப் பேரவையில் நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசும்போது திருவண்ணாமலை நகரத்தில் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற அமளியில் தி.மு. கழகத்தினர் நாற்பத்தி எட்டுப் பேரும், காங்கிரஸ் கட்சியினர் இருபது பேரும் கைது செய்யப்பட்டு வழக்குப் போடப்பட்டதென்றும். அன்றைய முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்களின் உத்திரவுப்படி காங்கிரஸ்காரர்கள் மீது மட்டும் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு, கழகத்தினர்கள் வழக்கில் தண்டிக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிட்டேன்.

அத்துடன் திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராக இருந்தபோதே அவரது குடும்பத்தில் நில உச்ச வரம்புச் சட்டக் கொள்கைக்கு மாருக அந்தச் சட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு



1972 ஏப்ரல் 3]

[டாக்டர் மு. கருணாநிதி]

commencement of the Act 6-4-1972 முதல் Notified date 2-10-1962 வரையில் 137 (நூற்றி முப்பத்து ஏழு) ஸ்டாண்டர்டு ஏக்கரா நிலங்களை திரு. பக்தவத்சலத்தின் மகள் திருமதி சரோஜினியின் கணவர் திரு. வரதப்பன், நாற்பத்து ஏழு பேர்களிடம் விற்றுவிட்டார் என்றும், திருமதி சரோஜினியின் பெயரில் நிலமிருந்தால் அது கணவன் கணக்கில் சேர்ந்து உச்ச வரம்புச் சட்டப்படி உபரி நிலமாகி விடக்கூடும், அந்த நிலங்கள் 27 ஏக்கராக்கள் 8-12-1959-லும், 4-4-1960-லும் விற்கப்பட்டுவிட்டன என்றும் கூறினேன். நிலச் சீர்திருத்தக் கொள்கையை வகுத்த அமைச்சர் குடும்பத்திலேயே அந்தக் கொள்கைக்கு எதிராக நடைபெற்ற காரியத்தை நான் குறிப்பிட்டதற்குப் பதிலாக திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆத்திரத்துடன் பத்திரிகைகளில் அறிக்கைவிட்டிருக்கிறார்.

அதுபற்றி விபரம் தர விரும்புகிறேன். திருவண்ணாமலையில் காங்கிரஸ்காரர்கள், கழகத்துக்காரர்கள் இருதரப்பினர் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. காங்கிரஸ் கட்சியினர் மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. அண்ணாமலைப்பிள்ளை, திரு. ஆறுமுகம் எம்.எல்.ஏ., இருவரும் திரு. பக்தவத்சலம் அவர்களிடம் மனுக் கொடுத்தார்கள். அந்த மனுவின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சியினர் மீது போடப்பட்ட வழக்கை மட்டும் முதல்வர் பக்தவத்சலம் உத்திரவின் பேரில் திரும்பப் பெற்றுள்ளார்கள். கழகத்தினர் தண்டிக்கப்பட்டார்கள். தலைமைச் செயலகத்திலிருந்து வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழ்கண்ட உத்திரவு சென்றது.

Copy of the D.O. No. 813/65-1, dated 18th February 1965, Public (General-A) Department from Thiru C. Ramachandran, I.A.S., Under Secretary to Government, Madras-9, addressed to the Collector of North Arcot, Vellore-5.

*Subject.*—Law and Order—North Arcot District—Thiruvannamalai Anti-Hindi Agitation—Violation of orders under Section 144 Cr.P.C.

I enclose herewith a copy of the representation, dated 16th February 1965 addressed to the Chief Minister by Sri D. Annamalai Pillai, President, District Congress Committee and Sri A. Arumugam, M.L.A., Tiruvannamalai. In the circumstances stated therein, the Chief Minister desires that they need not be proceeded against. Please acknowledge the receipt of this D.O. and intimate the result of the action taken.

Yours sincerely,
(Signed) C. Ramachandran.

இதன்படிதான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அடுத்ததாக, அரசின் உச்சவரம்புச் சட்டக் கொள்கைக்கு எதிராக திரு. பக்தவத்சலம் குடும்பத்திலேயே நடைபெற்ற காரியத்தைச் சொன்னதற்கு அவர் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு எனக்கிருந்த நிலங்களை உச்ச வரம்பை ஏமாற்றுவதற்காக விற்று விட்டதாகக் கூறியிருக்கிறார். என்மீது மாசு கற்பிக்கும் வண்ணம் அவர் குற்றஞ்சாட்டிவிட்டு அதனை விசாரித்துச் சொல்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். பதிலுக்குப் பதில் குற்றம் சாட்டிவிட்டதாக திரு. பக்தவத்சலம் மகிழ்ச்சி அடையலாம். ஆனால் பொறுப்பு மிக்க ஒருவர் தவறான தகவலை நாட்டு மக்களிடம் தந்துவிட்டது முறையல்ல. எனக்குள்ள நிலம் எவ்வளவு என்ற விபரங்களை 1967-ஆம் ஆண்டு முதல் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள சொத்து விபரங்களில் காட்டியுள்ளேன். என் குடும்பத்திற்கு எந்தக் காலத்திலும் உச்சவரம்புக்கு மேல் நிலம் இருந்ததும் இல்லை. உச்ச வரம்பு என்ற சோஷலிசக் கொள்கைக்கு மாறாக அவைகளை விற்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. அப்படி விற்கவும் இல்லை. திரு. பக்தவத்சலத்தின் கூற்று உண்மைக்கு மாறானது, வேண்டுமென்றே புனைந்துரைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கும் என் பிள்ளைகளுக்கும் இருக்கும் நிலங்கள் 8-4-1953-ஆம் நாள் வாங்கப்பட்டது. நஞ்சை சுமார் 14¾ சாதாரண ஏக்கர் புஞ்சை சுமார் 3¾ சாதாரண ஏக்கர். இந்த நிலங்கள் ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கில் சுமார் 13 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் வரும் என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன்.



திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அதோடு லாரி சம்பந்த மாகவும் கள்ளநோட்டு சம்பந்தமாகவும் உணவு அமைச்சர் அவர்களைச் சம்பந்தப்படுத்தி பல பத்திரிகைகளில் வந்த செய்திகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக அந்தப் பத்திரிகைகள் மீதும், அந்த விபரங்களை அளித்தவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு அமைச்சர் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். இந்தச் அவர்களைப்பற்றிச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கு விளக்கம் தந்து சபையில் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.

(3) அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்கள் இடங்களில் இல்லாமையால் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து

MR. SPEAKER: Now the hon. Member Thiru A. C. Narasimhan will call the attention of the Hon. Minister for Industries.

The hon. Member is not here. So the call attention notice is deemed to have been withdrawn.

Similarly the hon. Member Thiru B. Venkataswamy who has given a call-attention notice to invite the attention of the Hon. Minister for Electricity, is not in his seat. So his call-attention notice also is deemed to have been withdrawn.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றாம் திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

[1972 ஏப்ரல் 3

[டாக்டர் மு. கருணாநிதி]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தமிழ் நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பேரவைக்கு ஒரு அறிவிப்பு.

தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு தமிழக ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார் கள்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

## (ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.



1972 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## (இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## (ஈ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாயிகள் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாயிகள் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தமிழ்நாடு, 1972ம் ஆண்டு விவசாயிகள் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்பட்டுத்தப்பட்டிருக்கிறது.

(5) அறிக்கை அளித்தல்.

கால்நடை வளர்ப்புத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Sir, I have pleasure to present the last report of the Committee on Estimates on Animal Husbandry Department. I express my sincere thanks to the hon. Members and the House for preparation of the Report.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

**(2) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/72.)**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "
என்று கோருகிறேன்.

இச்சட்ட முன்வடிவை முன்னுரைக்கையில், நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல் வரியை ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து பேரளவு வீதமாகிய இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்த இச் சட்ட முன்வடிவு விழைகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். தமிழ் நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) கீழ் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி, ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய முக்கிய வருவாய்களில் ஒன்றாகும். நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற்போது விதிக்கப்படும் பேரளவு செஸ் மேல்வரி ஒரு ரூபாய் ஐம்பது காசாகும். 1—3—1972-ல் முதலமைச்சர் அளித்த வரவு-செலவுத் திட்ட உரையில் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சிறு கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் முக்கியமாகக் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், இணைப்புச் சாலைகளைப் போடுவதற்கும் இயலும் வகையில், நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற்போது விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி பேரளவு வீதமாகிய ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்தப்படும் என்று குறிப்பிடப்பட்டது.

* 28—3—1972 -ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



[டாக்டர் இரா நெடுஞ்செழியன்]

எனவே, நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரியை அதன் பேரளவு வீதமாகிய ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்தும் வகையில் தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958). 116-வது பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் தேவைகளை உரியவாறு பரிசீலித்த பின்னர், தற்போது விதிக்கப்படும் மேல்வரி வீதத்தை உயர்த்த ஊராட்சி ஒன்றியக் குழுக்களே தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

இச் சட்ட முன்வடிவு, மேற்கண்ட முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது. இத் தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMI : Sir. I move—

'That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A Bill No. 9 of 1972) be circulated to elicit public opinion.'

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கெனவே செஸ் சர்சார்ஜ் 1½ ரூபாய் வீதம் போடப் பட்டிருக்கிறது. இந்த 1½ ரூபாய் கட்டணம் சில பஞ்சாயத்து யூனியன்களில் போடப்படவில்லை என்பது நமக்குத் தெரியும். சமீபத்தில் இதைப் பரிசீலனை நடத்திய எலிமென்டரி எடியூக்கேஷன் நிதிக் குழுவினர் பல பஞ்சாயத்து யூனியன்களில் இந்த 1½ ரூபாய் போடப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசு இம்மாதிரி இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்களில் உடனடியாக நிர்ப்பந்தித்து வசூலிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து இருக்கிறார்கள். ஆகவே 1½ ரூபாயிலிருந்து 2½ ரூபாயாக அதிகரிக்கும் போதும் வசூல் செய்வதில் இம்மாதிரியான நிர்ப்பந்தம் இருக்கத்தான் செய்யும். அதன் காரணமாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் கட்டாயம் இரண்டு ரூபாய் ஐம்பது காசு வசூலிப்பார்கள்.

ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன்கள் போட்டிருக்கும் வீட்டு வரி அதிகமாக இருக்கின்றது. மேற் கொண்டும் இம் மாதிரியான அதிக வரி போடுவதன் மூலமாகப் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படும்.

அதுமட்டுமல்ல, முன்னாலே இந்த பஞ்சாயத்து யூனியன்களைப் பிரிக்கக்கூடிய நேரத்தில் ஏ, பி, சி, டி. என்று நான்கு பிரிவுகளாக 'அட் ஹாக்' முறையில் பிரித்தார்கள். அந்த நான்கு பிரிவுகளையும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் எந்த எந்த அளவுக்கு வருமானம் வருகிறது என்ற அடிப்படையில் பிரிக்கவில்லை. இப்படிப் பிரித்ததன் காரணமாகப் பல பஞ்சாயத்து யூனியன்களுக்கு வருமானமே கிடையாது. அதனால் சர்க்காருடைய மாச்சிங் கிராண்டும் அந்த யூனியன்களுக்குக் கிடைக்க வழியில்லை. முன்னால் 50 ரூபாய் வருவதாக இருந்தால் சர்க்கார் 20 ரூபாய் மாச்சிங் கிராண்ட் கொடுத்தார்கள். அப்போது அனிமல் ஹஸ்பண்டரிக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. சோஷியல் எடியூகேஷனுக்குக் குறைவாகப் பணம் கொடுத்தார்கள். ஆகவே, இந்த செஸ் சர்சார்ஜ் 2 டன், சர்க்கார் மாச்சிங் கிராண்ட் வைத்து அந்தந்த பஞ்சாயத்து யூனியன்கள் செலவை ஈடுகட்டி வந்தன. ஆனால் ஏ. பி. சி. என்று பிரித்த பின்னால் வருமானம் அதிகமாக வரக்கூடிய பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சர்க்கார் உதவித் தொகை அதிகமாகக் கிடைக்கிறது. வருமானம் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்க உதவித் தொகையும் இல்லாமல் போகிறது. இந்த மாதிரியான ஒரு நிலைமை இருந்து வருகிறது.

பஞ்சாயத்து யூனியன்களைப் பிரித்து அமைத்தபோது ஐந்து வருஷங்களுக்கு ஒரு தரம், இந்தமாதிரியான ஏற்றத் தாழ்வுகளைப் போக்க, வருமான அடிப்படையில் யூனியன்கள் அமைந்திருக்கின்றனவா என்று பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் 15 வருஷங்களுக்கு மேலாகியும் அரசினால் புனர் அமைப்புச் செய்யப்படவில்லை. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு சீரான உதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக உடனடியாக 18 சதவிகிதம் ஆசிரியர்களின் சம்பளங்களுக்காகக் கொடுக்கப்பட்டது. பின்னர் அது 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. ஆனால் இப்போது ஆசிரியர்களின் சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 10 பி.டி. ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்ற முறையில் நியமித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் ரூ. 250-லிருந்து ரூ. 450 வரை இருக்கிறது. இதையும் பஞ்சாயத்து யூனியன்களே கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. ஏற்கெனவே லோக்கல் சர்சார்ஜ் போட்டு எந்த எந்த பஞ்சாயத்து யூனியன்கள் வேலைகளைச் செய்து வந்ததோ அவைகளுக்குச் சில கஷ்டங்கள் ஏற்படவே, படிப்படியாக இன்று அதை சர்க்காரே எடுத்துக் கொண்டு, மார்சிங் கிராண்ட் போட்டு, பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்திற்காக இந்த 1½ ரூபாய் கட்டணத்தையும் சர்க்காரே எடுத்துக் கொண்டால் பஞ்சாயத்து யூனியன்களுக்கு எந்தவித வள்ளும் இல்லாமல் போகும். ஆகவே, கல்வி முன்னேற்றத்திற்காக ரூபாய்க்கு மூன்று அணாவாக அவர்களே வசூலித்து, ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் கொடுக்கலாம். இல்லையென்றால், கிணற்றை ஆழம் பார்ப்பதற்காக, அடுத்த வீட்டுக் குழந்தையைக் கிணற்றில் போட்டு ஆழம் பார்ப்பது மாதிரியான இந்த முறை இருக்கும்.



இப்போதே மக்களுக்கு அதிகக் கஷ்டம் இருப்பதால், இப்போது இருக்கின்ற 1½ ரூபாய் அளவை மேலும் உயர்த்துவதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று கூறி, முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். சுப்பையா :** தலைவரவர்களே, இதிலே சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

இன்று 116-வது செக்ஷன்படி லோக்கல் சர்சார்ஜ் 1½ ரூபாய் வசூலிக்கப்பட்டு வந்ததை இப்போது 2½ ரூபாயாக உயர்த்த வகை செய்யப்பட்டிருக்கிறது. இதைக் குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் சிற்றூர்களில் இணைப்பு ரோடுகள் போடுவதற்கும், குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் 116-வது செக்ஷன்படி வசூல் செய்யப்படுகின்ற பணம் 139-வது செக்ஷன்படி பஞ்சாயத்து யூனியன்களின் ஜெனரல் பண்டில் சேர்க்கப்படுகிறது. ஜெனரல் பண்டுக்குப் போகும் போது வேறு பல பணிகளுக்கும் இந்தப் பணம் பயன்படுத்தப்படக்கூடிய நிலைமை இருக்கிறது.

முதலில் கல்விக்காகச் செலவு செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே சிற்றூர்களின் இணைப்புச் சாலைகளுக்கும் குடிநீர் வசதிக்கும் ஆக வசூல் செய்கின்ற பணத்தை ஒரு தனி 'ஹெட் ஆஃப் அக்கவுண்ட்ஸ்'சிலே வைப்பதற்கு 'இயர்மார்க்' செய்ய வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். தனியாக அதைப் பிரித்து வைத்துக் கொண்டால், குறிப்பிட்டப் பணிகளுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்படும். அப்படி இல்லையானால் செக்ஷன் 119 இருக்கிறது. அபிவிருத்தி வரிக்கு என்று இருக்கிறது. இந்தப் பணிகளைப் பொறுத்த வரையில் அந்த செக்ஷனை பயன்படுத்திச் செய்யலாம். அந்த 119-வது செக்ஷன்படி பஞ்சாயத்தில் 'பெட்டர்மென்ட் டாக்ஸ்' போட வழி இருக்கிறது. அதிலே பஞ்சாயத்து ஒன்றிப்பும் வரி போட 119-வது செக்ஷனில் ஒரு அமென்ட்மென்ட் செய்யலாம். செக்ஷன் 139 படி வசூலிக்கின்ற பணம் உடனடியாக ஜெனரல் பண்டுக்குப் போகிறது. எனவே, அதை நிறுத்திவிட்டு, தனி ஹெட் ஆஃப் அக்கவுண்ட் வைத்துக் கொண்டு அதன்மூலம் அபிவிருத்திகள் செய்வதுதான் நலம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஆவனச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு பல அபிவிருத்திகளைச் செய்வதற்கு நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக 150 காசு அதிகமாக வரி விதிப்பதற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வரி என்று சொல்லும்போது, மாநில அரசு விதித்தாலும் மத்திய அரசு விதித்தாலும் அது சாதாரண கிராம மக்கள் தலையில்தான் போய் விழுகிறது. அதனால் சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் அவர்கள் அரசாங்கத்தின்மீது ஒரு துவேஷ மனப்பான்மை கொண்டவர்கள் ஆவார்கள். அதைத்தான் நாம் இன்றைய தினம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவ்வாறு இருக்கும்போது, பஞ்சாயத்து யூனியன்கள் இதற்கு முன்னாலே பல முறைகளிலும் வரி விதித்து இருக்கிறார்கள். இந்த நிலையில் மேலும், மேலும் வரி வசூலிப்பது அவசியம்தானா என்பதை நாம் யோசிக்க வேண்டும். அதைக் கைவிடுவதுதான் சரியானது என்பது எங்கள் கருத்து.

இதற்கு முன்னால் வரி விதித்து, எந்த வேலை செய்ய வேண்டுமானாலும் அதற்கு ஒரு பங்குத் தொகை வேண்டுமென்று மக்களிடம் நிர்ப்பந்தமாக வசூல் செய்யப்படுகிறது. இல்லையானால் பங்குத் தொகைக்காக வேலை செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களிடம்



ஒரு தொகையைப் பிடித்துக் கொண்டு, சரிக்கட்டக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்த 150 காசு அதிக வரி விதிப்பு நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நிதி நிறைய இருந்தால், இம்மாதிரியான இணைப்புச் சாலைகளைப் போடுவதற்கும், குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கும் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் அளித்தால் உதவியாக இருக்கும். அந்த நிதி போதவில்லை என்றால், அரசாங்கம் அதற்கு உதவித் தொகை வழங்க வேண்டும். அதுதான் சிறப்பான முறையாக இருக்கும். அதைவிட்டு விட்டு இந்தமாதிரியான கூடுதல் வரி விதிப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம். அவர் அந்த அதிகாரத்தை வேறு பல காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடும். அதனால் மக்களுக்குப் பெருங்கஷ்டங்கள் ஏற்படும். எனவே பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு இந்த அதிகாரம் அளிக்கவேண்டுமா என்பதை நன்றாக யோசனை செய்ய வேண்டுமென்றும், அவர்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். டென்னிஸ்** : தலைவரவர்களே, இந்தத் திருத்த சட்ட மசோதாவின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதற்கு இணங்க இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது இணைப்பு சாலைகளை அதிகப்படுத்துவதற்கும், கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வழங்குவதற்குமான நோக்கத்துடன் இந்த வரி உயர்வு திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் நடைமுறையில் பல இடையூறுகள் இருக்கின்றன. என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரி உயர்வு இல்லாமலேயே குடிநீர் வசதிக்கும், இணைப்புச் சாலைகள் வசதி செய்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். இன்று பல வரிகள் மூலம் விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அத்துடன் இந்த வரி உயர்வும் சேர்ந்தால் அவர்களுக்குப் பெரும் சுமையாக இருக்கும். விவசாயிகள் தான் இதன் மூலம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறா

[திரு. என். டென்னிஸ்]



அடுத்தாற்போல், இன்று லோக்கல் செஸ் சர்சார்ஜ் உச்சவரம்பு ரூ. 1½யாக இருக்கிறது. அந்த வரியான 1½ ரூபாய் விதிக்கும் பஞ்சாயத்து யூனியன் இன்று அதிகமாக இல்லை. 50 பைசா, ஒரு ரூபாய் என்ற விகிதத்தில்தான் இருக்கிறது. ஆதலால் இந்த ஒன்றரை ரூபாய் அளவுகூட விதிக்காத நிலையில் பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அவர்களுக்கு இவ்விதம் 1⅓ ரூபாய்க்குமேல் உயர்வு செய்ய முடியாத பஞ்சாயத்து யூனியன்களுக்கு இணைப்பு சாலை அமைக்க, குடிநீர் வசதி அமைக்கப் போதுமான நிதி இல்லாத நிலைமை ஏற்பட்டு விடும்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தின் மூலமாக அதிக வரி உயர்வு ஏற்படுத்தி. பஞ்சாயத்து ரோடுகள் இணைப்பு, குடிநீர் வசதி கொடுக்கும் பொறுப்பை பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வரி உயர்வு செய்ய இயலாத பஞ்சாயத்து ஒன்றியங்கள், விவசாயிகளின் பொருளாதார நிலைமை கருதி—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அதற்கு முன்வராத காரணத்தால்—இந்த வரி உயர்வு ஏற்படுத்தாத பஞ்சாயத்து யூனியனில் இணைப்பு சாலைகள், குடிநீர் வசதி முதலானவைகள் அபிவிருத்தி செய்ய இதற்கான வாய்ப்பில்லாமல் போய்விடும்.

அடுத்து பார்த்தால், வரி உயர்வு பஞ்சாயத்து யூனியன் தீர்மானிக்க வேண்டிய விஷயமாக இருக்கிறது. ஆதலால் இந்தப் பிரச்சினையில் மாநிலம் பூராவும் ஒரே விதமான யூனிபார்மிட்டியைக் கண்டுகொள்ள முடியாது. சில பஞ்சாயத்து யூனியன்களில் அதிக வரி உயர்வின் மூலம் இணைப்பு ரோடுகள் அபிவிருத்தி அடைவதற்கான வழி வகைகள், சில பஞ்சாயத்து யூனியன்களில் அடைவதற்கான வழி வகைகள், சில பஞ்சாயத்து யூனியன்களில் இந்த வரி உயர்வின் மூலம் அரசு மானியம் கிடைக்கக் கூடும் நிலைமை இழந்துவிடுகிறது. ஆதலால் இப்பிரச்சினையில் சில விடங்களில் பிற்பட்ட நிலையில் செயல்பட வேண்டிய நிலைமை ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. இப்போதிருக்கும் ஒன்றரை ரூபாய் அளவிற்குக் கூட பல பஞ்சாயத்து யூனியன்களில் இல்லை. முதல் ஸ்டேஜாக ரூ. 1½ உச்சவரம்பு கூட ஏற்படுத்த முடியாத நிலை இருக்கும்போது அதற்கடுத்த ஸ்டேஜ் ரூ. 1½-க்கும் அதிகமாக ரூ. 2½ ஸ்டேஜ் ஏற்படுத்துவது பொருந்தாத காரியமாகும். ரூ. 1½ உச்சவரம்பு கூட சில



[திரு. என். டென்னிஸ்]



பஞ்சாயத்து யூனியன்களில் மக்கள் தாங்காத—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்காத நிலைமை இருக்கிறது. அவ்வாறிருக்கும் போது 2½ ரூபாயாக்குவது என்பது நடைமுறையில் செயல்படும் காரியமாக இருக்காது. ஆகையினால் வரி உயர்வு ஏற்படுத்தும் நோக்கம் ஈடேறாமல் போய்விடும். இதன் மூலம்தான் குடிநீர் வசதி, இணைப்பு ரோடுகள் கொடுக்க வேண்டும் என்ற அந்த நோக்கம் இடேறாமல் போய்விடும். இன்று பார்க்கும்போது மாநிலத்தில் 10 சதமானம் பஞ்சாயத்து யூனியன்கள் ரூ. 1½ உச்சவரம்பு அளவுக்கு வரி விதித்ததாகக் கண்டுகொள்ள முடியாது. ஆகவே 50 சதவிதம் பஞ்சாயத்து யூனியன்களாவது 1½ ரூபாய் உச்சவரம்புக்கான வரியை விதித்த பிறகு அடுத்த ஸ்டேஜுக்கு போவது நல்லது. ஆதலால் இவ்விதமான பல சிக்கல்களைக் கணக்கில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, . இந்தப் பஞ்சாயத்து லோகல் செஸ் அதிகப்படுத்துவதற்கான மசோதாவின் பேரில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போதுள்ள 1½ ரூபாயை, இரண்டரை ரூபாய் என்று ஆக்குவது ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளை மிகவும் பாதிக்கும் அளவுக்கு நிலைமை இந்த மசோதாவின் மூலம் வந்துவிடும். பல பஞ்சாயத்து யூனியன்களில் ஏற்கனவே 50 பைசாவிலிருந்து ஒரு ரூபாய், ஒரு ரூபாயிலிருந்து ஒன்றரை ரூபாய் என்று அதிகப்படுத்தும்போது பலமான எதிர்ப்புகள் அந்த பிரதேசத்தில் வந்திருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும். மாவட்ட ஆட்சித் தலைவர் இதை ‘யுனானிமஸ்’ ஆக எல்லா பஞ்சாயத்து யூனியன்களும் இந்த லோகல் செஸ்ஸை 1½ ரூபாயாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை டி.டி.சி.யில் கொண்டுவரும்போது பல்வேறு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், அது மிகவும் கடினமானது; எல்லாம் ‘யுனானிமசாக’ கொண்டு வருவது முடியாத காரியம்; சில பகுதிகளில், வாய்ப்பும் வசதிகளும் உள்ள பகுதிகளில் வேண்டுமானால், இந்த 1½ ரூபாய் போடலாம். வறட்சியான, மிகப் பின் தங்கிய பகுதியில் ரூ. 1½ போடுவதே விவசாயிகளைப் பாதிக்கும் என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது.

[திரு. கே. என். குமாரசாமி]

[1972 ஏப்ரல் 3

ஆனால், இன்றைக்கு மீண்டும் ஒரு ரூபாய் அதிகம் போட்டு 2½ ரூபாய் லோகல் செஸ் என்று அதிகப்படுத்துவது மிகப் பின் தங்கிய வறட்சி பகுதி விவசாயிகளை மிகவும் பாதிக்கும். ஏற்கனவே வீட்டு வரியானது, டெவலப்மென்ட்டுக்காக மினிமம் ஒரு ரூபாயிலிருந்து 5 ரூபாய் வரை மதிப்பீடு போட்டுவிட்டு வரி வசூலிக்கப்பட்டது. 'மாக்சிமம்' 5 ரூபாய் என்ற அளவுக்கு மைனர் பஞ்சாயத்துக்கு, நகர பஞ்சாயத்துக்கு என்ன வரி உண்டோ அந்த அளவிற்குப் போடப்பட்டு வருகிறது. அதிலும் விவசாயிகளை ஆயிரம் தொல்லைகளுக்கு உட்படுத்தி விட்டு வரி போட வேண்டிய பிரச்னை—இப்படி வீட்டு வரி வசூலிக்கும் அளவிற்கு இருக்கிறது. அதுவே மிகவும் கஷ்டம் என்று சொல்கிறபோது, அவர்களின் குடியிருப்பு பகுதிகளுக்கு எஸ்டிமேட் கணக்குப் போட்டால், அவர்களின் மாட்டுச் சாலைகள், குடியிருப்பு சாலைகள், இதைக் கணக்குப் போட்டு மதிப்பீடு போட்டால் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 60 ரூபாய் வரை குடியிருக்கும் சாலைகளுக்கு வரி கொடுக்கவேண்டி இருக்கிறது.

லோகல் செஸ் மசோதாவின் படி 2½ ரூபாய் என்று ஆக்குவது அவர்களுடைய சுமையை அதிகமாக்கும் என்பது எல்லோருக்கும் சொல்லாமலே விளங்கும். அப்படிப்பட்ட கஷ்டத்தை அவர்கள் பேரில் திணிப்பதை விட அரசாங்கமே பொது ஃபண்டிலிருந்து இம்மாதிரி பின் தங்கிய பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி ஒதுக்கி ரோடு வசதிகள் பராமரிக்க, குடிநீர் வசதி போன்ற பிரச்னைகளுக்கு அந்தப் பணத்திலிருந்து அரசாங்கம் கொடுக்குமானால், இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண முடியும். அப்போது தான் அந்த விவசாயிகளைப் பாதிக்காமல் இருக்கும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொது பண்டிலிருந்து கொடுப்பதன் மூலம் அப்படிப்பட்ட காரியங்களை நிறைவேற்றும் வாய்ப்பு நிறைய இருக்கிறது. அரசாங்கம் இந்த ஆண்டு உபரி பட்ஜெட்டில் பணம் ஒதுக்கியிருக்கிறது. இந்த மாதிரி டெவலப்மெண்ட் ஸ்கீமுக்கு அப்படிப்பட்ட பண்டிலிருந்து செய்ய வேண்டுமே தவிர, ரோடு பராமரிப்புக்கு இந்த செஸ் அதிகப்படுத்துவதன் மூலம் செய்யவேண்டுமென்று அரசாங்கம் நினைக்குமானால், அதனால் பல கஷ்டங்கள், இடையூறுகள்தான் நேரிடும் என்பதைச் சொல்லிக் கொண்டு, இப்படிப்பட்ட 'செஸ்' ரூபத்தில் அதை 'அட்ஜஸ்ட்'



[திரு. கே. என். குமாரசாமி]

1972 ஏப்ரல் 3]

பண்ணவேண்டுமென்று சொல்வது, பொருளாதாரத் துறையில் ஓரளவு நிதிநிலையைக் கூட்ட, இந்த செஸ் போடாமலே இந்தத் தொகையை ஈடுகட்ட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இந்தத் துறையில் அபிவிருத்திக்காகப் போடப்படும் இந்த வரியை நிறுத்தி விட்டு, வேறு துறையில் விவசாயிகளைப் பாதிக்காதத் துறையில் வருமானம் அதிகமாக வருகிற ஒரு துறையை எடுத்துக் கொண்டு, அந்தத் துறையிலிருந்து ஈடுகட்ட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது ஜெனரல் பண்டிலிருந்து பஞ்சாயத்து யூனியன் இணைப்பு ரோடுகள் போட அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை அரசாங்கம் கைவிட்டு, விவசாயிகளுக்கு அனுகூலமாக நடவடிக்கை எடுக்கும்படி இந்த நேரத்தில் வேண்டி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, வரி போடுவதற்கு கிராமத்தையும் விடப் போவதில்லை என்ற எண்ணத்தோடு கிராமங்களில் லிங்க் ரோடு போடுவதற்காக கிராம செஸ் வரியை 1½ ரூபாயில் இருந்து 2½ ரூபாய் வரை செஸ் விதிக்கலாம் என்பதற்குச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நான் உள்ளாட்சித்துறை மானியத்தில் பேசும்போதே குறிப்பிட்டேன். வருமான அடிப்படையிலும், மக்கள் தொகை அடிப்படையிலும், சுற்றளவு அடிப்படையிலும் எல்லா பஞ்சாயத்து யூனியன்களையும் ஒழுங்காகப் பரிசீலித்து மீண்டும் பிரிப்பதற்கு முன்வர வேண்டும். சில பஞ்சாயத்து யூனியன்களில் எழுபது கிராமங்கள் இருக்கின்றன. சில பஞ்சாயத்து யூனியன்களில் ஐந்து பத்து கிராமங்களே இருக்கின்றன. இப்படி பஞ்சாயத்து யூனியன்கள் அன் ஈக்குவலாக இருப்பதனால்தான் பலவற்றின் நிதி வருவாய் மோசமான நிலையில்யி இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிலையிலே செஸ் வரியையும் 2½ ரூபாய் வரையில் உயர்த்திக் கொள்ளலாம் என்று நாம் சட்டம் கொண்டு வருவதனால் முக்கியமாக விவசாய மக்களே பாதிக்கப்படப்போகிறார்கள். ஏற்கனவே விவசாயிகள் பலவகையிலும் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சாரத் துறையில் ஏற்றியாகி விட்டது. விவசாயிகள் உபயோகப்படுத்தக் கூடிய ரசாயன

[திருமதி த. ந. அனந்தநாயகி]

[1972 ஏப்ரல் 3

உரங்கள், பம்பு செட்டுகள் மீது மத்திய அரசாங்கத்தால்
வரி ஏற்றப்பட்டிருக்கிறது. மேலும் நாம் கன்வர்ஷன் டேபிள்
என்று வைத்துக்கொண்டு அவர்கள் சாகுபடி செய்கிற
பயிர்களின் அடிப்படையில் 7½ ஏக்கரா வைத்திருப்பவர்களும்
வருமான வரி கட்டக்கூடிய அளவில் செய்துவிட்டோம். அதை
விடக் குறைவான ஏக்கர்தான் இருக்கிறது என்றாலும், பணப்
பயிர்கள் போட்டால் வருமான வரி கட்டியாக வேண்டிய
சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் இந்த செஸ்
வரியையும் விதிப்பது தேவைதானா என்பதை அரசு சிந்தித்துப்
பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப்
படுகிறேன்.

Report of the Panchayat Education Enquiry Committee.
யில் அவர்கள் பஞ்சாயத்துகளின் வருமானத்தை எந்த எந்த
வகைகளில் எல்லாம் அதிகரிக்க முடியும் என்பதை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் வருமானத்தைப்
பெருக்க யோசிக்கலாமே தவிர, அதைவிட்டு செஸ்ஸை அதிகரிக்க
வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

அதோடு இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்க
வேண்டும். நாம் 2½ ரூபாய் விதிக்க வேண்டும் என்று டெப
னெட்டாக கொண்டுவரவில்லை. விதிப்பவர்கள் விதிக்கலாம்,
வேண்டாதவர்கள் வேண்டியதில்லை என்பதாகத்தான் இருக்கிறது.
இதன் காரணமாக பக்கத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியனில் 2½
ரூபாய் விதிப்பார்கள். இங்கே 1 ரூபாய் கூட விதிக்கமாட்டார்கள்.
இதனால் அந்த அந்த ஊர் ஜனங்களிடையே ஒரு அதிருப்தி. ஒரு
கொந்தளிப்பு உண்டாகும். ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டம்,
தென்காசியில் வீட்டு வரியை அதிகப்படுத்தியதற்கு ஒரு போராட்
டமே நடந்து—துப்பாக்கிச் சூடு நடைபெற்றதை நாம்
மறக்க முடியாது. இந்த நிலையில் இதைவிடக் குறைவாக எல்லா
யூனியன்களும் இந்த அளவுக்கு வரி விதிக்கவேண்டும் என்று
நாம் இந்தச் சட்டத்தின் மூலம் சொல்கிறோம் என்றாலும் நமக்கு
இத்தனை ரூபாய் வருமானம் வரும், இந்த இந்த வேலைகளைச்
செய்யலாம் என்று திட்டமாக முடிவு செய்யலாம். அப்படி
டெபனெட்டாகவும் பில் இல்லை.



[திருமதி த. ந. அனந்தநாயகி]

1972 ஏப்ரல் 3]

இரண்டரை ரூபாய் வரை போடலாம் என்றால், எவ்வளவு
பேர்கள் போடப் போகிறார்கள்? தெரியாது. எவ்வளவு வருமானம்
வரும்? தெரியாது. எந்த எந்த லிங்க் ரோடுகளைப் போடலாம்?
இப்போது சொல்ல முடியாது என்கிற அளவில் இது இண்டெப
னெட் சட்டமாக இருக்கிறது. போட்டால் போடுங்கள், போடா
விட்டால் வேண்டாம் என்றால், பலபேர்கள் ஊர் மக்களிடத்தில்
நாம் ஏன் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதாகப்
போடத் துணியமாட்டார்கள். ஏற்கெனவே 1½ ரூபாய் வரையில்
போட்டிருக்கிறவர்கள் 2½ ஆக உயர்த்திவிட்டால் மொத்தமாகப்
பார்க்கிறபோது அது பெரும் அளவுக்கு அந்தப் பகுதி விவசாய
மக்களைப் பெரிதும் பாதிக்கும். இன்றைக்கே என்டர்டெயின்
மெண்டு டாக்ஸ் இதுபோலத்தான் டெபனெட்டாக—இந்த
அளவுக்குப் போடலாம் என்று வைத்திருக்கிறோம். அதன்
காரணமாக இந்தப் பகுதியில் டாக்ஸ் அதிகமாக இருக்கிறபோது
டூரிங் சினிமாக்காரர்கள் டாக்ஸ் குறைவாக உள்ள பகுதிக்குப்
போகிறார்கள். இதுபோல சட்டத்தை இன்டெபனெட்டாகப்
போடுவது சரியில்லை, எனக்குத் தெரியும். இன்றைக்கு எத்தனை
பஞ்சாயத்துக்கள் ஒழுங்காக நடக்கின்றன? அவற்றின் நிர்வாகம்
எப்படி இருக்கிறது என்பதை அரசாங்கம் பரிசீலிக்கவில்லை.
கூட்டமே நடக்காது. வீட்டில் இருந்தபடியே நோட்டை அனுப்பி
உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கிவிடுகிற பஞ்சாயத்துக்கள்
எல்லாம் இருக்கின்றன.

பஞ்சாயத்து நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி, இருக்கிற
குறைபாடுகளை உடனடியாகக் களைந்து, இருக்கிற நிதி ஆதாரங்
களை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டு வருகி
றார்களா என்று கவனித்துக் கொண்டுவந்தாலே இந்த செஸ்ஸை
உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்
கிறேன். சுற்றளவு அடிப்படையில், வருமான அடிப்படையில்,
மக்கள் தொகை அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன்களை
எல்லாம் முறையாகப் பிரிக்க முதலில் நடவடிக்கை எடுத்துக்
கொண்டாலே எல்லா பஞ்சாயத்து யூனியன்களின் நிதி ஆதாரங்
களும் செம்மையாகும். அப்படியின்றி இதுபோன்ற இன்டெப
னெட் வரி உயர்வைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை
என்று தெரிவித்துக் கொண்டு, இதை மீண்டும் சிந்தித்துப் பார்க்க
வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[1972 ஏப்ரல் 3

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களுடைய நிதி ஆதாரத்தைப் பெருக்க வேண்டும். லிங்கிங் ரோடுகளை அமைக்க வசதியாக இருக்கும் என்கிற எண்ணத்தில் இந்த செஸ் வரி விதிப்பு மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எனக்கு முன் பேசிய அம்மையார் அவர்கள் இப்படி பஞ்சாயத்துக்களுக்கு வேண்டுமானால் போடலாம், இல்லை என்றால் வேண்டாம் என்கிற முறையில் செயல்படும் அதிகாரத்தைக் கொடுப்பது முறைதானா என்று கேட்டார்கள். பல பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. நிதி ஆதாரம் பெருகினால் அவர்கள் இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்வார்கள் என்பது உண்மைதான். ஆயினும் இந்த வரி உயர்வினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் விவசாயிகளாக இருப்பதால், நாம் இதுபற்றி பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. அப்படித் தெரிந்து கொண்டாகளா என்பது தெரியவில்லை. இல்லையென்றால் அவர்களுடைய கருத்தை தெரிந்துகொள்வதற்கு அனுப்பிவைப்பதே நலம் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து, ஊராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற செஸ் மேல்வரியை, உச்சவரம்பை 1 ரூபாய் 50 காசிலிருந்து 2 ரூபாய் 50 காசு வரையிலும் உயர்த்திக் கொள்ளலாம் என்ற கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையிலே தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திருத்தச் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தில் எதிர்த்திருக்கிறார்களே தவிர, காரிய காரணங்களை எடுத்துப் பார்த்தால், இது யாரையும் பாதிக்காது என்பதை அவர்களே தெரிந்து கொண்டிருக்கிறார்கள். எதிர்க்க வேண்டுமென்ற உணர்வோடுதான் எதிர்த்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் இதை வசூலித்தே தீர வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறதென்று சொல்ல முடியாது. அவைகளுக்கு வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தர வேண்டு



1972 ஏப்ரல் 3]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மென்பதற்காகத் தான் 1½ ரூபாய் என்பதை 2½ ரூபாய் என்று ஏற்படுத்தித் தருகிறோம். எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் இதைக் கட்டாயமாக வசூலித்தே தீரவேண்டுமென்று சொன்னால், அது எல்லோரையும் பாதிக்கும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவர் அவர்களே, சட்டத்தின் பிரகாரம், எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அவசியம் இல்லாவிட்டால்கூட, இந்தச் சட்டம் அமலுக்கு வந்தபிறகு டிபார்ட்மெண்டில் உள்ளவர்கள் "உங்கள் பஞ்சாயத்தில் வருமானம் போதவில்லை யென்றால் இதையும் வசூலிக்கலாமே" என்ற பிரஷரை மறைமுகமாகச் சொல்ல முடியும். "உங்களிடத்தில் வரி வசூலிக்கும் அதிகாரம் இருந்தும்கூட, இதைச் செய்ய மாட்டேன் என்கிறீர்களே" என்றுதான் சொல்வார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இவ்வளவு வரி வசூலித்தே தீரவேண்டுமென்று அரசாங்கமோ, அரசாங்க அதிகாரிகளோ எந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியையோ கட்டுப்படுத்த முடியாது. எந்த ஊராட்சி ஒன்றியமும் அப்படிச் செய்யாது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தலைவர் இருக்கிறார், அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அந்தந்தப் பகுதிகளிலுள்ள நிலைமையை ஆராய்ந்து இதை வசூலிக்கலாமா, வேண்டியதில்லையா என்பதை முடிவு செய்வார்கள். சட்டத்தில் 1 ரூபாய் 50 காசு என்று போட்டிருந்தாலும் குறைந்த வரியை வசூலிக்கும் ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. 25 காசு மட்டுமே விதிக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் 3 இருக்கின்றன. 30 காசு வசூலிக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியம் ஒன்று. 40 காசு என்று வசூலிக்கக்கூடியவை 5. 45 காசு என்று வசூலிக்கக்கூடியவை 2 இருக்கின்றன. 50 காசு மட்டுமே வரியாக வசூலிக்கக்கூடிய அளவில், 1½ ரூபாய் அளவுக்கு நாம் இடம் கொடுத்தாலும் அவர்கள் தங்களுடைய தகுதி, வாய்ப்புகளை அறிந்து வசூலித்துக் கொள்ளக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் 31 இருக்கின்றன. 55 காசு வசூலிக்கக்கூடியவை 3 இருக்கின்றன. 60 காசு என்ற அளவில் 7 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. 70 காசு என்ற அளவில் 29 11 இருக்கின்றன. 75 காசு மட்டுமே வசூலிக்கக்கூடியவை

1972 ஏப்ரல் 3]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருக்கின்றன. 80 காசு என்ற அளவிலே 9 ஒன்றியங்கள் இருக்கின்றன. 85 காசு என்ற அளவிலே 2 ஒன்றியங்கள் இருக்கின்றன 90 காசு என்ற அளவிலே 2 ஒன்றியங்கள் இருக்கின்றன. 100 காசு, அதாவது ஒரு ரூபாய் என்கிற அளவிலே—நாம் 1½ ரூபாய் வசூலிக்கலாம் என்று சொல்லியிருந்தபோதிலும்—வசூலிப்பவை 185 ஒன்றியங்கள் இருக்கின்றன. நாம் இப்பொழுது 2½ ரூபாய் என்ற அளவிற்கு ஏற்றிய பிறகும் அதை வசூலிக்காமல் இருக்கக்கூடிய முழு உரிமை அந்தந்த ஒன்றியத்திற்கு இருக்கிறது. அதை வசூலித்துத்தான் ஆகவேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. 110 காசு என்று வசூலிக்கக்கூடிய ஒன்றியங்கள் 3 இருக்கின்றன. 115 காசு என்ற அளவிலே 1 ஒன்றியம் இருக்கிறது. 120 காசு என்ற அளவிலே 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. 125 காசு என்ற அளவிலே 30 ஒன்றியங்கள் இருக்கின்றன. 130 காசு என்ற அளவிலே வசூலிக்கக்கூடிய ஒன்றியம் 1; 150 காசு என்ற அளவிலே வசூலிக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள்—மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங்களிலே—38 ஊராட்சி ஒன்றியங்கள்தாம் இருக்கின்றன

மேலும் இவற்றையெல்லாம், ஏ, பி, சி. டி. என்ற பிரிவாகப் பிரித்து அவைகளுக்கு 'மேச்சிங் கிராண்ட்' தருகிறோம். 'ஏ' பிரிவாக இருந்தால் வசூலிக்கின்ற தொகையில் 75 சதவீதம் தருகிறோம்; 'பி' பிரிவாக இருந்தால் 100 சதவீதம் தருகிறோம் 'சி' பிரிவாக இருந்தால் 125 சதவீதமும், 'டி' பிரிவாக இருந்தால் 150 சதவீதமும் ஆகத் தருகிறோம். அவர்கள் செஸ் வரியை உயர்த்துகின்ற அளவுக்கு ஈடான முறையில் ஈட்டு மானியம் வழங்குகிறோம். 'பி' பிரிவாக இருந்தால் ஒன்றரை மடங்கு என்ற அளவில் ஈட்டுமானியம் பெறத்தக்கதாக இருக்கிறது. இப்போது ஏற்படுத்தப்படுவது யாரையும் வற்புறுத்துகின்ற சட்டம் இல்லை 1958-ம் ஆண்டிலே கொண்டுவந்த சட்டத்தின் அடிப்படையிலே இது இருக்கிறது. விகிதத்தை மட்டும் சற்று உயர்த்தியிருக்கிறோம். சிலபல ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய வசதிகளை வாய்ப்புகளை ஓரளவுக்கு உயர்த்த விரும்புவார்களேயானால், அவர்களுக்கு ஏற்றவாறு இது வழி செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சி பிளாக்குகளை ஏ, பி, சி, டி என்று மாற்றியமைக்க வேண்டுமென்று திரு. பழனிச்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கோரிக்கை நிர்வாக சீர்திருத்தக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.



1972 ஏப்ரல் 3]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மேலும் பெரிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டது. 374 ஊராட்சி ஒன்றியங்களில் பெரியவைகளாக இருப்பதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதையும் நிர்வாகச் சீர் திருத்தக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பியிருக்கிறோம். ஏ, பி, சி, டி வகையாகப் பிரித்து மாற்றியமைக்க வேண்டும். இவற்றை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பரிசீலித்துச் செய்தால் நல்லது என்கிற கருத்தை திரு. பழனிச்சாமி அவர்கள் கூறினார்கள். அந்தக் கருத்தையும் பரிசீலித்து, ஊராட்சி ஒன்றியத்தின் வருமானம் போன்றவற்றைப் பரிசீலித்து, அதுபற்றி தக்க முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் பேசும்போது எந்த செஸ் போட்டாலும் அது ஜெனரல் பண்டுக்குப் போய்விடுகிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த செஸ் நிதியை இணைப்புச் சாலைகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது. இதை 'இயர் மார்க்' செய்து, இவ்வளவு பகுதி இணைப்புச் சாலைகளுக்கு, இவ்வளவு பகுதி பொது நிதிக்கு போகவேண்டுமென்று வரையறை செய்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். அந்தயோசனை சிறந்த யோசனைதான். அதைச் சட்டத்தில் கொண்டு வர வேண்டுமென்கிற அவசியம் இல்லை. அதை ஆராய்ந்து பார்த்து இருக்கின்ற நிலைமைகளையும் பார்த்து, ஊராட்சி ஒன்றியத் தலைவரே 'எக்சிக்யூடிவ் இன்ஸ்பெக்ஷன்' செய்து, இவ்வளவு தொகை இணைப்புச் சாலைகளுக்கு, இவ்வளவு தொகை பொது நிதிக்கு என்று அதைச் செய்துவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு பல நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும்போதும், வரி ஏறிக் கொண்டு போகக்கூடாது, வசதிகள் மட்டும் செய்துதர வேண்டுமென்றால் எப்படிச் செய்வது? ஊராட்சி ஒன்றியங்கள் நினைக்கின்ற அளவுக்கு நாம் செய்துகொடுக்க முடியாது. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தநிலைமை மாறி, இன்னின்ன வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். இன்னின்ன வசதிகளைத் தங்களுடைய ஊர் பெற வேண்டுமென்ற துடிப்பு இன்றையதினம் எல்லா இடங்களிலும் இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் போர்டாக இருந்த காலத்தைவிட இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களாக மாற்றி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

யமைக்கப்பட்ட பிறகு சீரான வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கின்றன என்கிற உண்மையை யாரும் மறுக்க முடியாது. இன்னும் செய்ய வேண்டியவை அதிகமாக இருக்கின்றன. என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

செஸ்லை உயர்த்துபவர்களுக்கு ஈட்டுமானியத்தை உயர்த்தி அவர்களுக்கு ஊக்கம் தரலாமா என்பதையும் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. இப்பொழுது 75 சதவீதம், 100 சதவீதம் என்பதற்குப் பதிலாக எந்த அளவிற்கு உயர்த்துகிறார்களோ, அந்த அளவிற்குக் கொடுக்கலாமா என்பதையும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். பொதுமக்களும் நன்கொடை போன்று இதை அளிப்பார்கள் என்று கருதுகிறேன். எந்த அளவிற்குத் தங்கள் பகுதியும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதில் பொதுமக்களுக்கும் அக்கறை உண்டு, ஆர்வம் உண்டு. 150 காசு என்று அளவில் வரியாக வசூலிப்பது இப்பொழுது 38 ஊராட்சி ஒன்றியங்கள்தாம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் தங்கள் தங்கள் நிலைமைகளுக்கேற்பதான் வரி வசூலித்துக் கொள்கிறார்கள். 2 ரூபாய் 50 காசு என்று வந்தாலும் தங்களுடைய நிலைமைகளுக்கேற்ப பெற்றுத்தான் காரியங்களை கவனிக்கிறார்கள். 2 ரூபாய் 50 காசு வசூலிக்க வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. அவர்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். இப்படி ஒரு வாய்ப்பு இருக்கிறதே, அதைப் பெறலாமா கூடாதா என்பது அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்துள்ள விஷயம். இதை மறுபடியும் யோசனைக்கு விடலாமா என்று திரு. பழனிச்சாமி அவர்கள் சொன்னார்கள். நாம் இப்பொழுது வரம்பை மட்டும் உயர்த்துகிறோம். யாரையும் வற்புறுத்துகின்ற நிலைமை இல்லை.

ற்பகல் 11.00 வசதி வாய்ப்புகள் உள்ள இடங்களில் வைத்துக்கொள்ளலாம், எல்லா இடங்களிலும் சரி சமமாக என்று சொல்ல மாட்டேன். வறட்சியான பகுதிகளில், கொடுக்க முடியாத இடங்களில் 25 காசு, 50 காசு, 75 காசு என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். வசதியான இடங்களில் தஞ்சை மாவட்டத்திலே கிட்டத்தட்ட எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் அதிகப்படியான நிதி இருக்கிறது. வேறு எந்த மாவட்டங்களையும் விட அதிகமான பாதை வசதிகளைச் செய்ய வேண்டிய அவசியம் தஞ்சை மாவட்டத்திற்கு இருக்கிறது.



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிட்டத்தட்ட சேலம் மாவட்டத்திலிருந்து கோயம்புத்தூர் மாவட்டத்திற்குப் போகும் அளவில் 40, 50 பாலங்கள் வருகின்றன என்றால் சீர்காழியிலிருந்து பூதலூர் வரை செல்வதற்குள் கிட்டத்தட்ட 600 பாலங்களைக் கடக்க வேண்டியிருக்கிறது. பாலங்கள் ஏற்படுத்த, சாலைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் தஞ்சை மாவட்டத்திற்கு அதிகமாக இருக்கிறது. வருமானத்தை அதிகமாகப் பெருக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் தஞ்சை மாவட்டத்திற்கும் இருக்கிறது. அதன்மூலம் அரசாங்கம் தரும் ஈட்டு மானியத் தொகையும் அதிகமாக ஏற்படும். அதன்மூலம், சாலை வசதிகளை அதிகமாகப் பெருமளவிருக்கும் தஞ்சை மாவட்டத்தில் சாலைகளைப் பெருக்குவதற்கு இது ஒரு தூண்டுகோலாக அமையும்.

அதுமட்டுமல்லாமல் விரைவாக உணவுப் பண்டங்களை அகற்ற வேண்டிய நிலைமை தஞ்சை மாவட்டத்திற்கு அதிகமாக இருக்கிறது. அதிக மழை பெய்தால் சதுப்புப் பகுதி அதிகமாக ஏற்பட்டு வண்டிகள் போக முடியாமல் சாலைகள் பழுதுபட்டிருக்கிறது. எனவே அதிக இணைப்புச் சாலைகளைப் போடவும், செம்மைப்படுத்தவும் வேண்டிய நிலைமைகள் தஞ்சை மாவட்டம் போன்ற சதுப்பு நிலம் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்குத் தூண்டுகோல்போட்டு அதன்மூலம் முயற்சிகளை மேற்கொள்ள இந்தச் சட்டம் வகை செய்யும். எனவே, மீண்டும் அதைப்பற்றி எண்ணம் அறிய வேண்டிய அவசியமில்லை. நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே, 2½ ரூபாய் என்பதை வற்புறுத்தி, கட்டாயம் உயர்த்த வேண்டும் என்பதல்ல, இப்பொழுது இருப்பதை அதேஅளவில்கூட வைத்துக்கொள்ளலாம்.

தஞ்சாவூர் மாவட்டத்திலும் கட்டாயப்படுத்தப் போவதில்லை. வசதி வாய்ப்புள்ளவர்களுக்கு, நினைப்பவர்களுக்கு மட்டும் வசதி ஏற்படுத்துவதற்காக இந்த மன்றம் இந்தத் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE:** Sir, on a point of clarification. Has the Hon. Minister consulted the Panchayat Union Chairman and others connected with the Panchayats and whether there is support

[Dr. H. V. Hande]

from them to increase the tax proposed in the Bill. Also, whether there is resistance from them in regard to thr proposed increase in the tax or whether the suggestion to increase the tax has come from the Government or from them. Will the Hon. Minister be pleased to enlighten the House on these points?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 374 ஊராட்சி ஒன்றியங்களின் அபிப்பிராயங்களையும் கேட்கவில்லை. சில ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்புக்கொள்வார்கள். சில வசதி படைத்தவர்கள் மேலும் வசதியைப் பெருக்கிக்கொள்ள முடியும். ஆனால் இப்பொழுது நான் சொல்வது யாரையும் கட்டாயப் படுத்துவதாக இல்லை. யாரையும் 2½ ரூபாய் என்பதைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. இப்பொழுது வசூலிக்கின்ற 75 காசையே கூட வசூலிக்கலாம் கட்டாயம் இல்லை. 374 பேர்களையும் கேட்டால் 25 காசு இருப்பவர்கள் வேண்டாம் என்றுதான் சொல்வார்கள். ஆகவே, கேட்க வேண்டிய அவசியமில்லை. யாரையும் கட்டாயப்படுத்தவில்லை, ஆகவே யாருக்கும் இடையூறாக இருக்காது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஏதாவது ஒரு பஞ்சாயத்துத் தலைவராவது இந்த விருப்பத்தை அமைச்சரவர்களிடம் தெரிவித்தாரா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவர்களுடன் நேரில் பேசும்பொழுது கூட சிலபல ஊராட்சி ஒன்றியங்களில் வசதியுள்ளவர்கள் 150-க்கு வந்துவிட்டார்கள், மேலும் கொஞ்சம் வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். எல்லா இடங்களைப்பற்றியும் என்னிடத்தில் குறிப்பு இல்லை. ஆனால் 374 பேர்களையும் கேட்க வேண்டியதில்லை. இப்பொழுதும் எல்லோரையும் கட்டாயப்படுத்தக் கூடிய சூழ்நிலை இருந்தால், எல்லோரையும் கட்டாயமாகக் கேட்க வேண்டும். 2½ ரூபாயைக் கட்டாயமாக வசூலிக்க வேண்டுமென்று சொன்னால், எல்லா ஊராட்சி ஒன்றியங்களையும் கேட்பது முறையாக இருக்கும். அப்பொழுது எல்லோருடைய கருத்தையும் அறிய வேண்டிய அவசியம் இருக்கும். ஆனால் இப்பொழுது கட்டாயமில்லை. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது வசதியற்றவர்கள் இப்பொழுதிருக்கும் நிலையிலேயே கூட இருக்கலாம். எனவே



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதைத்தவிர கடின நிலை ஏற்படாது என்பதால், திருத்தச் சட்ட மசோதாவினால் பின்னால் வாய்ப்பு வசதி இருக்கும் என்பதால் நிறைவேற்றப்படுகிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். இரண்டு மாதங்களுக்கு முன்பு இலாக்காவில் ஒரு உத்தரவு இருந்தது. அதாவது மேச்சிங் கிராண்ட், செஸ் சர்சார்ஜ் இரண்டையும் சர்க்கார் டிஸ்போசலுக்கு வைத்து, ஆசிரியர்கள் சம்பளத்திற்காகவும் என்று இருந்தது. எலிமெண்ட்ரி எஜுகேஷன் கமிஷனும் இந்த செஸ் சர்சார்ஜ், மேச்சிங் கிராண்ட் இரண்டும் சர்க்காரிடத்தில் இருக்க வேண்டும், ஆசிரியர்கள் சம்பளத்திற்கு என்று இருக்கிறது. எனவே இது பொது நிதிக்கு, பொதுச் செலவிற்கு அனுமதிக்கப்படுமா அல்லது ஆசிரியர்கள் சம்பளத்திற்காக இந்த மேச்சிங் கிராண்ட், சர்சார்ஜ் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கல்வி நிதியைப் பொறுத்தவரையில் கமிட்டி ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. உறுப்பினராவர்கள் கூறுகின்ற ஐயப்பாட்டைப்பற்றிய விளக்கம் என்னிடத்தில் இல்லை. அதைக் கருத்திற்கொண்டு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முடியுமா என்று பார்த்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சிக்கலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** தலைவரவர்களே, நம்முடைய அரசின் கொள்கை, இணைப்பு ரோடுகள், குடிதண்ணீர்த் திட்டத்திற்கு என்று இருக்கும் பொழுது 'ஹெட் ஆஃப் அக்கவுண்ட்'க்கு இப்பொழுதே அந்த எக்ஸிகியூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷனைக் கொடுப்பதில் என்ன தாமதம்? மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்வதாகத் தெரிகிறது. ஹெட் ஆப் அக்கவுண்ட் தனியாகப் போட இன்ஸ்ட்ரக்ஷன் கொடுப்பதில் ஏன் தாமதம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்பொழுதே சட்டத்திலே கொண்டுவந்தால் அதிலிருந்து மாற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முடியாத நிலை ஏற்படும். ஆகவே மறுபடியும் ஆலோசித்து மற்ற நிலைமைகளை எவ்வளவு பர்செண்டேஜ் ஒதுக்குவது 50 பர்செண்டா, 25 பர்செண்டா அல்லது 30 பர்செண்டா அல்லது குடிநீருக்கும் சேர்த்தா அல்லது சாலைக்கு மட்டுமா அல்லது பொது நிதிக்கு ஒதுக்குவதா என்பதையெல்லாம் ஆராய்ந்து செய்ய வாய்ப்பிருக்கிறது. எக்சிகியூடிவ் இன்ஸ்ட்ரக்ஷன் மூலம் அந்தக் கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு இருப்பதால் சட்டத்தில் கொண்டுவர அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கொடுத்தத் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**Clause 2 was put and carried.**

**Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



## (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

### தமிழ்நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்ட முன் முன்வடிவு.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவை* இரண்டு மன்றங்களையும் சேர்ந்த 21 உறுப்பினர்களைக் கொண்ட ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கோரு கிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister has not given notice of such an amendment.

அமைச்சரவர்களின் கருத்துப்படி அவர்கள் செலக்ட் கமிட் டிக்கு அனுப்பவேண்டுமென்றே அவர்கள் கருத்து இருப்பதாகத் தெரிகிறது. ஏற்கனவே திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும் ஒரு அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அதையே அரசாங்கம் ஒத்துக்கொண்டு

'it may be referred to the Joint Select Committee'.

என்று முன்மொழிந்திருக்கிறார்கள் என கருதுகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, if the Bill is going to be referred to the Select Committee, I want to know the names of the Members of the Select Committee. Also even if the Bill is going to be referred to the Select Committee, there may be a brief discussion. . . .

---

* 2—2—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செலக்ட் கமிட்டிக்கு அனுப்பும் பொழுது விவரங்களை விவாதிப்பதில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of 21 Members (14 Members of the Assembly and 7 Members of the Council) to consider the Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972 and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee.'

The names of the hon. Members of the Select Committee will be announced by the Government.

The amendment was duly seconded.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் யோசனையை ஏற்றுத்தான் நான் ஆரம்பத்திலே சொன்னதுபோல் ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு இதை விடவேண்டும் என்று சொன்னேன். அதிலே சட்டப் பேரவையிலுள்ள உறுப்பினர்களின் பெயர்களை இங்கே நான் கூற விரும்புகிறேன்.

1. திரு. கா. வேழவேந்தன்.
2. திரு. மா. வே. நாராயணசாமி.
3. திருமதி த. ந. அனந்தநாயகி.
4. திரு. என். கே. பழனிசாமி.
5. டாக்டர் எச். வி. ஹாண்டே.
6. திரு. ஏ. சுப்பிரமணியம்.
7. திரு. கே. கந்தசாமி.
8. திரு. கே. எ. வகாப்.
9. திரு. என். கணபதி.
10. திரு. சு. துரைசாமி.
11. திரு. இரா. ராமலிங்கம்.
12. திரு. பி. எஸ். மணியன்.
13. திரு. கா. காளிமுத்து.
14. திரு. வை. பாலசுந்தரம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி அனந்தநாயகி அவர்களுடைய இந்தத் திருத்தம் . . .

THIRU K. T. K. THANGAMANI : Sir, since the motion has been moved, I would like to speak. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுவது என்றால் ஆட்சேபனை இல்லை. செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகின்ற நேரங்களில் அதிகமாகப் பேசுவதில்லை. சம்பிரதாயங்கள் நல்ல சம்பிரதாயங்களாக இருக்கட்டும் என்பதுதானே தவிர வேறல்ல. செலக்ட் கமிட்டியின் முன்னால் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். ஆகவே, இதை வாக்கெடுப்புக்கு விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** செலக்ட் கமிட்டியில் இல்லாதவர்கள் கருத்தைச் சொல்ல வாய்ப்பளிக்கப்படலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேச உரிமையுண்டு. இல்லையென்று சொல்லவில்லை. வழக்கமாக இந்தச் சபையில் சம்பிரதாயமாக செலக்ட் கமிட்டிக்குப் போவதாக இருந்தால் பேசுவதில்லை. கண்டிப்பாக உரிமையை மறுக்க முடியாது. தாங்களும் பேசலாம், எல்லா மெம்பர்களும் பேசலாம். வழக்கமாக, கமிட்டியில் இருப்பவர்கள் பேசுவதில்லை. பெரும்பாலான நேரங்களில் செலக்ட் கமிட்டிக்குப் போவதாக இருந்தால் மெம்பர்கள் பேசுவதில்லை என்றுதான் சொன்னேன். தாங்கள் இப்போது பேசலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பொதுவாக, செலக்ட் கமிட்டிக்கு ஒரு மசோதா போகின்ற காலத்தில் இங்கு விவாதம் தேவையில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் சில முக்கியமான [illegible] காக்கள் பொறுக்குக் கமிட்டிக்கு விடக்கூடிய காலத்தில் [illegible] பொறுக்குக் கமிட்டியில் உறுப்பினர்களாக இல்லா[illegible] கள் சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு ஒரு [illegible] மென்ற முறையில்தான் நான் வற்புறுத்[illegible] கூர்ந்து விவாதத்தைத் தொட[illegible] சொ[illegible] நன்றியுடையவனாக இருக்கி[illegible]

[1971 ஏப்ரல் 3

[திரு. கே. டி. கே. தங்கமணி]

பொதுவாக, இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டாலும்கூட பொறுக்குக் கமிட்டியில் விவாதிக்கப்படும்போது இன்னின்ன காரியங்களை மனத்தில் கொள்ள வேண்டுமென்று சொல்வதற்கு இன்றைக்குச் சபைக்கு அதிகாரம் இருக்கிறது.

பொதுவாக, இந்த மசோதாவைப் பொறுத்தவரை நல்ல அம்சம் இருக்கிறது. இதற்கு முன்பு மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட பிறகுதான் உறுப்பினர்களுக்கு அதைக் கொடுத்து வந்தார்கள். நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பாக இரண்டு தினங்களுக்கு முன்பாக உறுப்பினர்கள் கையில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறார்கள். அப்படிச் செய்வதன் காரணமாக ஜனங்களுக்கு விரோதமான மசோதாக்களைக் கொண்டுவரும்போது மசோதாவை அறிமுகப்படுத்தும் நேரத்திலேயே எதிர்க்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறது.

பாதுகாப்புச் சட்டம் அல்லது தடுப்புக் காவல் சட்டம் நாடாளுமன்றத்திற்கு வருகிறபோதெல்லாம் அதை அறிமுகம் செய்யக்கூடிய காலத்திலேயேகூட எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எதிர்த்திருக்கிறார்கள். அந்த முறையில் தமிழ்நாடு லேபர் வெல்பர் பண்ட் மசோதா ஏற்கனவே நம் கையில் பல நாட் பிறகு இப்போது அறிமுகப்பட்டிருக்கிற முறை வந்தது, வர பிறகு இப்போது அறிமுகப்பட்டிருக்கிற முறை வந்தது வரவேற்கத் தக்கது. இதைப் போலவே எல்லா மசோதாக்களையும் முன்கூட்டி நம் கையில் கொடுத்து அதைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தால் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். முன்பு என்ன சொல்லப்பட்டது என்றால் மசோதாவை அறிமுகப்படுத்திய பிறகுதான் கெஜட்டில் கொண்டுவருவது வழக்கமாக இருந்து வருகிறது ; அறிமுகப்படுத்திய பிறகுதான் மசோதா என்ற உருப் பெறுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்து மாறுபட்டு இன்றைக்கு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பது வரவேற்கத்தக்க அம்சம். இப்படி ஒவ்வொரு மசோதாவையும் கொண்டுவர வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். இது மெம்பர்கள் கவனமாகப் படித்து விஷயங்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கிறது.



1972 எப்ரல் 3]

[திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடக்கூடிய காரணத்தால் நான் பல அம்சங்களைப்பற்றிக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இந்த நோக்கத்தைப்பற்றிச் சொல்லுகின்றபோது இப்போது மத்திய அரசு எல்லா மாநிலங்களும் ஒரு லேபர் வெல்பேர் பண்ட் அமைக்க வேண்டும் ; அம்மாதிரி அமைத்து அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஒரு குழு அமைப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் இந்த மசோதா என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இது மாதிரி மசோதாக்கள் எந்தெந்த மாநிலங்களில் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. மகாராஷ்டிராவில் இதுமாதிரி இருப்பதாகவும், அங்கு லேபர் வெல்பேர் இன்ஸ்டியூட் என்ற ஒரு அமைப்பே இருப்பதாகவும் அதைக்கூடப் போய் பார்க்கவேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வது என்னவென்றால் இந்தப் பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்கள் தங்களுடைய அனுமதியின் பேரில் ஒரு முறையாவது பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டு, பம்பாயில் இருக்கக்கூடிய அந்த இன்ஸ்டிட்யூட்டைப் பார்த்துவந்தார்கள் என்றால் உதவிகரமாக இருக்கும் என்ற ஆலோசனையைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், தொழிலாளி ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும், முதலாளி இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும், அரசைப் பொறுத்த அளவில் போதுமான நிதியைக் கொடுப்பது என்ற அளவிலும் இருக்கிறது. சில பெரிய தொழிற்சாலைகளில் இருக்கக்கூடியவர்களுக்கு இதைக் கொஞ்சம் அதிகப்படுத்தலாம். அரசுத் தொகை இவ்வளவு என்றும் நிச்சயப்படுத்தலாம். குறைந்த அளவு ரிசர்வ் நிதி வைத்திருப்பது மாதிரி நிதி அமைப்பு இருப்பது உதவிகரமாக இருக்குமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் ஆரம்பத்தில் ஐந்து லட்சம் ரூபாய் போடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் நியாயம் வழங்குவதற்காக இருக்கும் நிதியில் ஐந்து லட்சம் ரூபாய் போதாது. அதை அதிகப்படுத்தக்கூடிய முறையில் சரியான

[திரு. கே. டி. கே. தங்கமணி]

திருத்தங்களைப் பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்கள் கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறேன். இது பொதுவாக வரவேற்கக் கூடிய மசோதாதான். இன்னொரு ஆலோசனையையும் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

வெல்பேர் கமிட்டி என்று தமிழக அரசு போட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டி சென்ற தடவை அகமதாபாத்துக்கும் பம்பாய்க்கும் போவதாக இருந்தது. பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்கள் பம்பாய்க்கும் அகமதாபாத்துக்கும் போகின்றபோது அந்த உறுப்பினர்களும் சேர்ந்து போவது உதவிகரமாக இருக்கும். இந்த நிதி அமைக்கப்பட்டிருக்கும் குஜராத்துக்கும், மகாராஷ்டிராவுக்கும் போய்ப் பார்த்து வருவது உதவிகரமாக இருக்கும். மற்ற விவரங்களைப் பொறுத்தவரை பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனை செய்வார்கள் என்று நினைக்கிறேன். மற்ற மாநிலங்களில் மட்டுமல்லாது வேறு சில நாடுகளில் இம்மாதிரி விதிகள் எம்மாதிரி அமைத்திருக்கிறார்கள் என்பது போன்ற விஷயங்களைப் பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பொறுக்குக் கமிட்டி தன்னுடைய முடிவுகளை அடுத்த சட்ட மன்றத் தொடருக்குள் அறிக்கையாகக் கொடுப்பார்களானால் அடுத்து கூடுகின்றபோது இந்த மசோதாவை நிறைவேற்ற உதவியாக இருக்குமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

அரசினர் தீர்மானம் திருமதி அனந்தநாயகி அவர்களுடைய திருத்தத்துடனும் அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலோடும் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

MR. SPEAKER: The Bill is referred to Joint Select ommitte.

**(எ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, பந்தய வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1972).**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, பந்தய வரி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

* 14-3-1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



[திரு. ப. உ. சண்முகம்]

பல்வேறு சட்ட விதித் துறைகளின்கீழ் செலுத்தத்தக்க வரித் தொகை அல்லது செலுத்தத்தக்க ஏனைய தொகை, திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவைகுறித்து ரூபாயின் பின்னங்களில் கொடுக்கல் வாங்கல் ஏற்படுகையில் நடைமுறை எளிதாவதற்காக, அடுத்துள்ள ரூபாய்க்கு . முழுமையாக அத்தொகையை மாற்றச் சட்ட பூர்வமான விதித்துறை செய்யப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கருத்துரைக்கிணங்க 7-ஏ என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம், தமிழ்நாடு 1935-ம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது.

இச்சட்டமுன் வடிவை நிறைவேற்றித் தருமாறு மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2, was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and caried.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதைச் சட்டமாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஏ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு, எண் 3/1972).**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1972) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என முன்மொழிகிறேன்.

* 17-3-1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்]

பல்வேறு சட்ட விதித் துறைகளின்கீழ் செலுத்தத்தக்க வரி தொகை அல்லது செலுத்தத்தக்க ஏனைய தொகை, திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவைகுறித்து ரூபாயின் பின்னங்களில் கொடுக்கல் வாங்கல், ஏற்படுகையில் நடைமுறை எளிதாவதற்காக, அடுத்துள்ள ரூபாய்க்கு முழுமையாக அத்தொகையை மாற்ற சட்ட பூர்வமான விதித்துறை செய்யப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கருத்துரைக்கிணங்க 7-பி என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம், தமிழ்நாடு, 1939-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2, was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : இதை சட்டமாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு. சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஐ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1972).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1972). ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

* 23—3—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



[திரு. ப. உ. சண்முகம்]

இதற்கு முன்னர், அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மதுவின்மீது தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) கீழ் 12 சதவீத ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டதோடுகூட, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 34/1971) கீழ் 12 சதவீத விற்பனை வரி விதிக்கப்பட்டது. அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மதுவின்மீது இவ்வாறு இருமுறை வரி விதிப்பதற்குப் பதிலாக, தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 24 சதவீதம் ஒரு மொத்த விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-வது பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டதன்மூலம் இது 22—2—1972-ல் செயலுக்கு வந்தது.

1026/1969 ஆம் எண் நடுவர் மன்ற மேல்முறையீடு குறித்து சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் நீதி மன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது. பாட்டரி உலர்ந்த மின்கலங்கள் (ட்ரை பாட்டரி செல்ஸ்) தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் ஐந்தாவது இனத்தின் கீழ் 15 சதவீத வரி விதிப்பிற்குட்படமாட்டா; அவை மேற்படி சட்டத்தின் 41-வது இனத்தின்கீழ் மின்சாரப் பொருள்களாகக் கருதப்படுவதோடு அவை 9 சதவீத ஒருமுனை வரி விதிப்பதற்குட்பட்டவையாகும். பின்னர், மேற்படிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் தனி இனத்தின்கீழ் உலர்ந்த தின் முதலாம் விவர அட்டவணையில் தனி இனத்தின் கீழ் உலர்ந்த மின் கலங்களின் முதல் விற்பனையின்மீது 15 சதவீத விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. இதற்காக மேற்படி சட்டத்தின் 59-வது பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்மூலம் இது 24—2—1972-ல் செயலுக்கு வந்தது.

தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-வது பிரிவின் (2) உட்பிரிவின் கீழ், மேற்சொன்ன அறிவிப்புகளுக்குப் பதிலாகச் சட்ட முன்வடிவு ஒன்று சட்ட மன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரில் முகவுரைக்கப்பட வேண்டியுள்ளது.

[1972 ஏப்ரல் 3

[திரு. ப. உ. சண்முகம்]

தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் 69-வது இனத்தின்படி, 'கொப்பரை உட்பட தேங்காய்', இம்மாநிலத்தில் முதல் கொள்முதல் மீது 5 சதவீத ஒருமுனை வரி விதிப்பிற்குட்பட்டதாகும். மேற்படிச் சட்டத்தின்கீழ் தேங்காய் விற்பனைக்கு வரி விதிப்பதினின்றும் அரசு விலக்களித்துள்ளது. தேங்காய்க்கு விலக்களித்துள்ளதைத் தவறான முறையில் பொருள் கொள்வதைத் தவிர்க்கும் பொருட்டு, மேற்படிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் 69-வது இனத்தைத் தனிப்பட்ட இரு இனங்களாக அதாவது தேங்காய்க்கு ஒரு இனமாகவும், கொப்பரைக்கு மற்றொரு இனமாகவும் பிரிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட செயற்குறிப்புகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1972) முகவுரைக்கப்பட்டுப் பரிசீலனைக்காக இம்மாமன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை இம்மாமன்றம் ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஸ்பீக்கர் ஸார், இந்த 1972-ம் ஆண்டு நான்காம் மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். மூன்று அம்சங்கள் இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. முதலாவதாக, இன்று வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் அன்னிய பிராந்தி, வைன் போன்ற சரக்குகளுக்கு எல்லாம் 24 சதவீதம் வரி போடுவது ஒருமுனையில் என்ற அம்சம் நல்ல அம்சம். அதை முழுமனதோடு வரவேற்கிறேன். அதேநேரத்தில் இந்த மசோதவின் இரண்டாவது பிரிவில்

For item 70 and the entries relating thereto, the following item and entries shall be substituted, viz.

முதலாவது, ஃபாரின் லிக்கர் சம்பந்தமாக 24 சதவீதம் என்று போட்டிருக்கிறது

All kinds of alcoholic liquors for human consumption (other than foreign liquors falling under sub-item (a), toddy and arrack).

12 சதவீதம் என்று போட்டிருக்கிறது. இதிலிருந்து நான் புரிந்துகொள்வது இந்த நாட்டில் உற்பத்தியாகக் கூடிய அந்நிய



[திரு. கே. டி. கே. தங்கமணி]

1972 ஏப்ரல் 3.]

நாட்டுச் சரக்கைப் போல் இங்கும் உற்பத்தி செய்கிறார்கள். வைன், பிராந்தி போன்றவைகளுக்கு அவைகளுக்கெல்லாம் 12 சதவீதம் விற்பனைவரி என்று புரிந்துகொள்கிறேன். அதுவும் வரவேற்கத்தக்க அம்சம்தான்.

அடுத்தாற்போல், சாராயத்திற்கு இப்போது 6 சதவீதம்தான் இதில் விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. இந்த 6 சதவீதம் என்பதை அதிகப்படுத்தலாம். சாதாரணமாக கள்ளுக்கு நாம் விற்பனை வரி போடவில்லை. சாராயம் நல்லமுறையில் விற்பனையாகிறது என்றும் போதுமான சரக்குக் கிடைக்கவில்லை என்றும் தான் அதில் காண்ட்ராக்ட் எடுத்தவர்கள் சொல்கிறார்கள். டெப்போவிலிருந்துகூடப் போதுமான சரக்குக் கிடைக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். இப்போது இரண்டு டிஸ்டிலரீஸ் இருக்கின்றன. திருச்சியில். நெல்லிக்குப்பத்தில் இருக்கின்றன. இரண்டு புதிய டிஸ்டிலரீஸ்க்கு பெர்மிஷன் கிடைத்திருக்கிறது ஒன்று சக்தி ஷுகர்ஸ், இன்னொன்று அருணை ஷுகர்ஸ். இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அதில் லாபம் கிடைக்கும் தொழில் இது. இந்தத் தொழிலில் இன்று அருணை ஷுகர்ஸ்க்கு ஒரு கூட்டுறவுத் துறைக்குக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. அப்படி கூட்டுறவுத் துறை இருக்கிறபோது தனியாருக்கு, சக்தி ஷுகர்ஸ்க்கு கொடுத்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது. நெல்லிக்குப்பத்தில் இருப்பது ஆரூரான், சக்தி ஷுகர்ஸ் இவைகளுக்குப் படிப்படியாக லைசென்ஸை ரத்து செய்துவிட்டு தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் பல ஆலைகள் உள்ளன, சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் நடக்கின்றன என்ற நிலைமை ஏற்படுத்துவதற்குக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இம்மாதிரியான பர்மிஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆகவே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரித் தனியாக நான் திருக்கம் கொடுக்காமல் இருந்தாலும், இந்த 6 சதவிகிதத்தை அதிகப்படுத்தலாம். நமக்கு வருவாய் ஜாஸ்தியாக ஆகும். இந்த நல்ல காரியத்தை அரசு செய்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி]

[1972 ஏப்ரல் 3

'According to item 69 of the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959, 'coconuts ineluding copra is liable to 5 per cent single point tax at the point of first purchase in this Statr. The Government have exempted sale of coconuts from liability to tax under the said Act. . .

இது ரொம்ப வரவேற்கத்தகுந்த அம்சம். சாதாரண மக்கள் மிகவும் பயனடைவர்கள். தேங்காய் மீது வரிபோடவில்லை யென்றாலும் கொப்பரை மீது வரி வசூலித்துக்கொண்டிருந்தார்கள். இந்த வரி ரத்தானது நல்ல முறையில் விளம்பரப் படுத்திச் சொல்லலாம்.

அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கும் போது இந்த சாராயத்திற்கு வரி அதிகமாக்கலாம். ஆறு என்று இருப்பதை 12 என்று கூடப் போடலாம். அது அதிகம் இல்லை என்று சொல்லிக் கொள்வேன்.

இப்போது எலெக்டிரிகல் கூட்ஸ்க்கு 9 சதவிகிதம் தான் வரி போடுகிறோம். அப்படிப் போடும்போது டிரை செல் அதிகமாக பயன் படுத்தும் சாமான். அந்த சாமானுக்கு 9 சதவிகிதம் போட்டுக் கொண்டிருந்தார்கள். 9 சதவிகிதம் என்பது நியாயமானது. அதை ஏன் 15 சதவிகிதமாக ஆக்கவேண்டும். எலெக்டிரிகல் கூட்ஸ்க்கு 9 சதவிகிதம் போடுவது மாதிரி டிரைசெல்லுக்கும் 9 சதவிகிதம் என்று அரசு செய்யவேண்டும். கோர்ட் சொன்னது என்று சொல்லி அதை 15 சதவிகிதமாக உயர்த்துவது என்பது கூடாது.

சுருக்கமாகச் சொன்னால், தேங்காய்க்கு வரி விலக்குக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. சாராயத்திற்கு 6 சதவிகிதம் என்பதை 12 சதவிகிதமாகப் போடலாம். டிரை பேட்டரிஸ்க்கு கோர்ட்டார் தலையிட்டு 9 சதவிகிதம் என்று சொல்லியும், அதை 15 சதவிகிதம் என்ற அளவுக்கு உயர்த்துவது நியாயம் அல்ல என்ற திருத்தத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் பேசும்போது இப்போது சாராயத்திற்கு போடப்பட்டிருக்கிற 6 சதவிகித வரியை 12 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்று சொன்னார்கள்.



[திரு. ப. உ. சண்முகம்]

1972 ஏப்ரல் 3]

வரியை உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அது கள்ளச் சாராயத்திற்கு அதிகமாக வசதி செய்யும் அளவுக்கு ஆகிவிடும். நம்முடைய சாராய விற்பனை வரி அப்படி இருக்கக்கூடாது. அதனால் தான் 6 சதவிகிதம் என்று வைத்து இருக்கிறோம். இருந்தபோதிலும், தக்க காலத்தில் மாண்புமிகு தங்கமணி அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் டிஸ்டில்லரீஸ் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இது தொழில் துறை அல்ல. வரிக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. அதற்குத் தொழில் அமைச்சரைக் கேட்க வேண்டும். நிறைய உற்பத்தி ஆகவேண்டுமென்ற காரணத்தால் தான் தரப்பட்டிருக்கிறது.

தேங்காய்க்கு இப்போது நாம் வரியை ஏற்றவில்லை. 2 ஆண்டுகளுக்கு முன்பே தேங்காய்மீது இருந்த வரியைத் தள்ளிவிட்டோம், கொப்பரைக்கு வரி என்று இருந்தது. இப்போது அதற்கும் வரியில்லை.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கொப்ப டிரை செல்லுக்கு எல்லாம் 15 சதவிகிதம் என்று இருப்பதை 9 சதவிகிதமாக வசூல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எலெக்டிரிகல் கூட்சாகக் கருத வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. எலெக்டிரிகல் கூட்ஸ் என்று ஏற்றுக்கொள்ளாது 15 சதவிகிதம் என்று அரசாங்கம் கொண்டுவந்திருக்கிறது. இதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை என்று சொல்லி, அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் சட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்): பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

[திரு. செ. கந்தப்பன்]



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்டமுன்வடிவு பரிசீலனையாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**The amendments of Thirumathi T. N. Anandanayaki and Thiru J. James were deemed to have been not moved, since the hon. Members were not in their seats.**

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொது விற்பனைவரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1972) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஒ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (தணிப்பு) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1972).**

THE HON. THIRU P. U. SHUNMUGAM : Mr. Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill * 1972 (L.A. Bill No. 6 of 1972), be taken into consideration.

Honourable Members are aware that in 1968, the State Legislature passed an Act facilitating payment of arrears of rent in four instalments by the cultivating tenants to their landlords. Under the above Act, the cultivating tenants have to pay before the 1st April of every year one-fourth of the arrears of rent along with the rent due for each year subsequent to the 20th April

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 28th March 1972.



[Thiru P. U. Shanmugam]



1968. It has been represented that the cultivating tenants have found it difficult to pay the arrears of rent as well as the rent due for each year as indicated above with the result that they are in heavy arrears in respect of the rents payable. It has also been represented that the cultivating tenants have borrowed and added to their debts during the years of drought and that they are not in a position to pay the arrears of rent due to their indebtedness and poor economic conditions. Due to default in the payment of arrears of rent, land holders have taken action against the cultivating tenants for eviction and for recovery of arrears of rent. It has been considered that the cultivating tenants should be spared the distractions and expenditure involved in such action in order to increase agricultural production. Further, as part of the agrarian reform it has been decided to give relief to the cultivating tenants from the burden of discharging the arrears of rent outstanding on the 30th June 1971, subject to the condition that the cultivating tenants pay the rent due for the current fasli, namely, fasli 1381. This decision has also been announced by the Chief Minister in his Budget Speech on the 1st March 1972. The Bill seeks to achieve the above object.

The salient features of the Bill are as follows :—

**In clause 3 of the Bill, time has been granted for a period of six months from the date of the publication of this Act for the payment of the dues for the current fasli, namely, fasli 1381, that is for the period commencing from the 1st July, 1971 and ending with the 30th June 1972, so as to enable the cultivating tenants to become** eligible for the waiver of arrears of rent due up to the 30th June 1971.

Clause 5 of the Bill prohibits any action being taken against a **cultivating tenant for the eviction for non-payment of any arrears of rent and for the recovery of such arrears until the expiration of a period of six months from the date of the publication of the proposed Act. It also provides that all pending proceedings relating to eviction of a cultivating tenant for non-payment of any arrears of rent or for the recovery of such arrears shall stand stayed for a period of six months from the date of the publication of the proposed Act.**

[Thiru P. U. Shanmugam]

[1972 ஏப்ரல் 3

Clause 7 of the Bill provides for the restoration of the possession of the land by a cultivating tenant who has been evicted from the land on or after the 1st March 1972 and before the date of the publication of this Act on the ground of non-payment of any arrears of rent, if he pays or deposits, or has paid or deposited, or is deemed to have paid or deposited, under the proposed Act the whole of the rent due for the current fasli.

According to the decision of the Madras High Court, in *Palaniswami v. Kandappa Gounder* (AIR 1968, Madras-96), under section 3 (4) (*b*) of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), the Revenue Divisional Officer has jurisdiction to direct the cultivating tenant in order to avoid being evicted from his holding, to deposit all arrears of rent even though some portion of arrears of rent has become time-barred. It has been considered that it will be harsh if the cultivating tenant is required to deposit even those arrears of rent which have become time-barred. This opportunity has, therefore, been availed of to amend section 3 (4) (*b*) of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), so as to provide that the Revenue Divisional Officer should not ask the cultivating tenant to deposit arrears of rent which have become time-barred under the law of limitation. Similar amendment has been suggested to section 19 of the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961).

The Bill seeks to achieve the above objects.

Sir, I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN : (THIRU S. KANDAPPAN) : Now the hon. Member, Thiru N. K. Palanisamy, will move his amendment.

THIRU N. K. PALANISAMY : Sir, I, move the following amendment :—

'That the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972), be circulated for the purpose of eliciting public opinion thereon.'

The amendment was duly seconded.



[திரு. என். கே. பழனிசாமி]

1972 ஏப்ரல் 3]

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்குச் சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

இந்த மசோதாவின் காரணமாக 20,000-க்கு மேற்பட்ட குத்தகை விவசாயிகளுக்கு, பெரும்பாலும் தஞ்சாவூரில் இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், இந்த நான்கு வருஷங்களில் மூன்று வருஷங்கள் கட்டாமல் இருந்தால், இந்த வருஷம் கட்டினால் மட்டும் பாக்கி இருக்கக்கூடிய கடன்களை ரத்துச் செய்வதாகச் சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கொள்கை சரியென்று சொன்னால், இந்த நான்கு வருஷங்களில் ஏதாவது ஒரு வருஷம் மட்டும் அந்தக் குத்தகை பாக்கியை விவசாயி கட்டியிருந்தால், ஒரு வருஷ அர்யர்சை கட்டியிருந்தால், அந்தக் குத்தகைதாருக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். நான்கு வருஷம் கொடுக்காவிட்டாலும், இந்த ஒரு வருஷம் கொடுத்தால் போதும் என்று சொன்னால், இந்த நான்கு வருஷங்களுக்குள் ஏதாவது ஒரு வருஷம் குத்தகை அர்யர்சை விவசாயி கட்டியிருந்தாலும், ஒன்றும் நடவடிக்கை எடுக்கக்கூடாது. நான்கு வருஷங்கள் என்று சொன்னால், அப்படித் தள்ளிக் கொடுக்கும் நான்கு வருஷங்களில் விளைச்சல் இல்லை, போதுமான அளவுக்கு விளைச்சல் இல்லாததால், விவசாயி குத்தகையைக் கொடுக்கமுடியவில்லை. அதன் காரணமாகக் கோர்ட்டில் பல ஆயிரக்கணக்கான கேஸ்கள் பெண்டிங்காக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. 1972-ம் ஆண்டில் பல பேர்களுக்கு, குத்தகை விவசாயம் செய்பவர்களுக்குச் சரியானபடி விளைச்சல் இல்லை என்று சொன்னாலும், அந்தக் கொள்கை இதற்கும் பொருந்தவேண்டும்.

அதுமாத்திரமல்ல, 1968-ம் ஆண்டில் சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவந்து இருக்கக்கூடிய பாக்கியை நான்கு தவணைகளாகக் கொடுப்பதற்கு வழிவகை செய்தார்கள். ஒரு தவணை கட்டாவிட்டாலும், பூமியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று சட்டத்தில் இடம் இருந்த காரணத்தினால், ஏராளமான பேர்கள் பூமியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த பூமியை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கக்கூடிய காலத்தில், ஏற்கனவே அவர்கள்மீது கோர்ட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு மறுபடியும் பூமி

[திரு. என். கே. பழனிசாமி]



கொடுக்க வேண்டும். 1968-ம் வருஷத்தில் சர்க்கார் போட்ட சட்டத்தின் காரணமாக வெளியேற்றப்பட்டவர்களுக்கு இந்த வசதி கிடைக்கவேண்டும். அவர்களுக்கு மறுபடியும் பூமி கொடுக்ககூடிய முறையில் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்காரால் கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவின் மூலம்—தீவிரமாகப் பல இடங்களில் விவசாயிகள் வெளியேற்றப்பட்டார்கள்—சர்க்கார், உடனடியாக அம்மாதிரி வெளியேற்றக் கூடாது என்று உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு விவசாயிகளுடைய குத்தகை பாக்கியை ரத்து செய்துகொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவைப் பாராட்டி, விவசாயிகளின் சார்பிலே நன்றியை தெரிவித்துக் கொண்டு, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்தக் குத்தகை பாக்கி என்று சொல்வது 1966-ம் வருடம் போதுமான அளவுக்கு மழை இல்லாமல் பல இடங்களில் பஞ்சம் ஏற்பட்டதன் காரணமாக தமிழகத்தில் இருக்கக் கூடிய பெரும்பாலான விவசாயிகள் தங்களுடைய குத்தகையைத் தள்ளுபடி செய்யவேண்டும், தங்களுக்கு விளைச்சல் இல்லை என்ற கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை அன்றையதினம் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் நிராகரிக்க முடியாமல் ஏற்றுக் கொண்டு, குத்தகை பாக்கிக்காக யாரையும் வெளியேற்றக் கூடாது என்று சட்டம் கொண்டுவந்தார்கள். அன்று நானும் உறுப்பினராக இருந்தேன். நான் ஒரு யோசனை சொன்னேன். குத்தகை விவசாயிகளுக்குக் குத்தகையை நிறுத்திவைப்பது நியாயமாக இருக்க முடியாது. அதைத் தள்ளுபடி செய்து சட்டம் செய்ய வேண்டும் என்று கூறினோம். காங்கிரஸ் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளாமல் 1967-வது ஆண்டில் நடந்த தேர்தலில் மெஜாரிடி பெற்று, வெற்றிபெற்று விடலாம் என்று கருதிக் குத்தகையை நிறுத்தி வைப்பதன்மூலம் விவசாயிகள் தங்களுக்கு வாக்கு அளிக்க வேண்டும் என்று நினைத்து நிறுத்திவைத்தார்கள்.



[திரு. ஆ. கு. சுப்பையா]

1967-ம் ஆண்டு நடந்த தேர்தலில் விவசாய மக்கள் நல்ல ஒரு தீர்ப்பை வழங்கினார்கள். அந்தத் தீர்ப்பு வந்த பிறகு விவசாயிகள் தாங்கள் கொடுக்கவேண்டிய அந்த இரண்டு வருட பாக்கியையும் நான்கு தவணைகளில் செலுத்தலாம் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு சட்டத்தை 1968-ம் ஆண்டு பிறப்பித்தது. அந்த சமயத்தில்கூட ஒரு யோசனை சொன்னோம். காணாத பாக்கியை திருப்பித் தரச்சொல்வது நியாயமாக இருக்க முடியாது, விவசாயிகள் வாரத்துக்கு விவசாயம் செய்கிறார்கள், அவர்களுக்குக் கிடைக்கின்ற வாரம்கூடப் போதுமானதல்ல என்ற யோசனையைச் சொன்னோம். எப்படியாவது நான்கு தவணைகளில் செலுத்த வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது. நடைமுறையில் பார்த்தபிறகு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் யதார்த்த நிலைமையை உணர்ந்து தன்னுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். நடைமுறையில் விவசாயிகள் வேதனைப் படுகிறார்கள், குத்தகை பாக்கியைக் கொடுக்கமுடியாத அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கின்ற முறையில் அவர்கள் அளிக்கவேண்டிய குத்தகை பாக்கியை ரத்துச் செய்கிற ஒரு சட்டம் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். அது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும். அந்த முறையிலே இந்த மசோதா வந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய குத்தகை நெல்லை அளக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டது என்பதை நியாயமாக ஒத்துக் கொள்கிறோம். 1968-ம் ஆண்டுக்குப் பிறகு ரெவின்யூ கோர்ட்டுகள் ஆரம்பமாகி ரெவின்யூ அதிகாரிகள் அன்றையதினம் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக இருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அப்படி வெளியேற்றப் பட்ட விவசாயிகளுக்கு நிலம் கொடுத்தாகவேண்டும். அவர்கள் இரண்டு தவணை செலுத்தினாலும்கூட, மூன்றாவது தவணையை செலுத்தக்கூடிய நிலைமை இல்லாத காலத்தில் அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி வெளியேற்றப் பட்ட பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் விவசாயக் கூலிகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் கொடுக்கக்கூடிய அம்சமும் இதிலே இருக்கவேண்டும்.

அதுமாதிரி இல்லை. நிலம் இழந்தவர்களுக்கும் நிலம் கிடைக்கும் என்ற ஷரத்தைப் பார்க்கிறபொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் அறிவித்த தேதிக்குப் பிறகு வெளியேற்றப்பட்டால், அவர்களுக்கு நிலம் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் இங்கு அறிவித்த பிறகு வழக்கும விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை, எந்த ஒரு விவசாயியும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படவில்லை. ஆகவே, அதற்கு முன்னாலே வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். அப்படி வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கின்ற முறையில் ஒரு உத்தரவாதத்தை நம்முடைய தமிழக அரசு அளித்தாகவேண்டும். அந்த முறையில் இந்த மசோதா சட்டமாக நிறைவேறவேண்டும். விவசாயிகள் குத்தகை பாக்கியை அளிக்க முடியாத ஒரு நிலையில்—பல்வேறு காரணங்களால் அந்த நிலை ஏற்பட்டது என்பதை உணர்ந்து—இந்த அரசு அம்மாதிரி வெளியேற்றப்பட்டவர்களுக்கும் நிலம் கிடைக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே குத்தகை விவசாயிகள் என்று ஒரு சிலரை இன்னும் எத்தனை காலத்திற்கு நாம் குத்தகைதார்கள் என்றே வைத்துக்கொண்டு இருப்பது என்பது அரசாங்கம் முடிவு செய்ய வேண்டிய ஒன்று. இருந்தாலும், அவர்களுடைய நிலையைக் காப்பாற்றுவதற்காக, அவர்களுடைய சங்கடமான நிலையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

நேரடியாக விவசாயம் செய்யக்கூடிய சிறு நில விவசாயிகளுக்கு நன்கு தெரியும் சாகுபடிக்காக எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது, எவ்வளவு செலவு செய்யவேண்டியிருக்கிறது என்பது. அம்மாதிரி செலவழித்து குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் சாகுபடி செய்து, ஒரு பகுதியை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கி இருப்பதை வைத்துக்கொண்டு தாங்கள் வாழ்க்கையை நடத்தவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.



அப்படி இருக்கின்ற நிலையில் ஒரு சில காலங்களில் சரியான விவசாயம் ஏற்படவில்லை என்றால், குத்தகை பாக்கியை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு, அவர்கள் சங்கடத்திற்குள்ளாகுகிறார்கள். இந்த நிலையில்தான் 1966-ம் ஆண்டில் தமிழ் நாடு பூராவிலும் குத்தகை விவசாயிகள் குத்தகையை செலுத்த முடியாத நிலையில் குத்தகையை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் சட்டம் கொண்டு வந்தது.

1968-ல் அந்த சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரும்போது, அப்போதே இதை ரத்து செய்து விடவேண்டுமென்று நாமெல்லாம் கோரினோம். அப்போது இதை 4 சம தவணைகளாக வரும் பசலியில் கொடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் திருத்தப்பட்டது. அப்படியிருந்தும், அநேகம் பேரால் அந்த ஆண்டுக்குரிய குத்தகையையும் கொடுத்து, மேற்கொண்டு பாக்கியில் நான்கில் ஒரு பாகம் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது கொடுக்கப்படாத நிலையில் பல சங்கடங்கள் ஏற்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள், 1968 ஏப்ரலுக்கு பிறகு. அதற்கு முன்பு அவர்கள் வெளியேற்றப்படுவது தடை செய்யப்பட்டிருந்தது. அதன் பிறகும் குத்தகை பாக்கி பூராவும் கொடுக்கப்பட முடியாமல் பலர் வெளியேற்றப்பட்டார்கள். பலர் ஏதோ காரணத்தால், அவர்கள் திறமையால், வெளியேற்றப்படாமல் இருப்பவர்களுக்கு இந்த சட்டத்தின் மூலம் சலுகை கிடைக்கிறது. வெளியேற்றப்பட்டிருந்தால் அவர்களுக்கு இந்த சட்டத்தின் மூலமாக சலுகை கிடைக்கவில்லை. ஆகவே 1968 ஏப்ரலுக்குப் பிறகு வெளியேற்றப்பட்டிருந்தாலும் அவர்களை அந்த நிலத்தில் 'ரெஸ்டோர்' பண்ண வேண்டும். அவர்கள் சாகுபடிதாரர்களாக ஆக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தச் சட்டம் கொண்டு வந்ததன் முழு எண்ணமும் கை கூடும் என்று நான் எண்ணுகிறேன். இந்த சட்ட திருத்தத்தில் மார்ச்சுக்குப் பிறகு வெளியேற்றப் பட்டிருந்தால் அவர்கள் வெளியேற்றப்படுவதைத் தடை செய்வதற்கு வழிவகை செய்து அவர்களிடத்தில் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய நண்பர் சுப்பையா அவர்கள் குறிப்பிட்டது போல் சட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்த பிறகு யாரும் வெளியேற்றம் பண்ணி இருக்க முடியாது. கோர்ட்டில் கேஸ் நடத்தமாட்டார்கள்.

[1972 ஏப்ரல் 3

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அதன் பிறகு யாரும் வெளியேற்றி இருக்க முடியாது. அதனால் யாருக்கும் பயன் கிடைக்கப் போவதில்லை. ஆகவே 1968 ஏப்ரலுக்கு பிறகு 'எவிக்ட்' பண்ணப்பட்டு இருந்தால், அவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று மாறுதல் செய்யப்பட்டால் ரொம்ப பயனுள்ளதாக இருக்கும். அதைச் செய்வது சிரமம் என்று அரசு கருதினால், சென்ற பசலி ஆரம்பத்திலிருந்து—ஜூன் 1971 ஆரம்பத்திலிருந்து அதாவது, அதற்குப் பிறகு வெளியேற்றப்பட்டிருந்தால் அவர்களுக்கு அந்த நிலம் திரும்பி கொடுப்பதற்கான வகையிலாவது இந்தச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதால் குத்தகைக்காரர்களுக்கு எல்லாம் கிடைத்து விட்டது என்று கருதி விடாமல், குத்தகைக்காரர்களுக்கே நிலத்தை சொந்தமாக்குவதற்கு அடுத்த கட்டத்தை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்புக்குரிய அவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரை வெளிப்படையாக ஏழை எளியவர்களுக்கு, குத்தகைதாரர்களுக்கு நன்மை செய்வதாக இருந்தாலும் கூட, அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்று விளக்குவதற்கு நான் முற்படுகிறேன். ஒரு கோணத்திலிருந்து பார்க்கிற நோக்கில் இது ஒரு உண்மையான முற்போக்கு சட்டம் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் இன்றைய தினம் நாட்டில் நம் தஞ்சை மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு மதிப்புக்குரிய முன்னாள் அமைச்சர் மதியழகன் அவர்கள் ஒரு அறிக்கையை நம்மிடத்தில் சமர்ப்பித்தார்கள். ஏறத்தாழ 3 லட்சம் பேர். 5 ஏக்கருக்கும் குறைவாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 3 ஏக்கர், 1½ ஏக்கர், 2 ஏக்கர் இப்படி வைத்திருப்போர் ஏறத்தாழ 3 லட்சம் பேர் அங்கே உரிமையாளர்கள்—அதற்கு 'லாண்ட் லார்ட்ஸ்' என்ற வார்த்தை இருக்கிறது. அந்த மாதிரியாக எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற விவரத்தை சட்டசபையில் கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் நோக்கில் அத்தனை லட்சக்கணக்கான 'லாண்ட் லார்ட்ஸ்' உரிமை



1972 ஏப்ரல் 3]

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

யாளர்கள் இன்று இந்த சட்டத்தின் விளைவாக பாதிக்கப்படுகிறார்கள் என்ற அந்த விஷயத்தை நாம் கவனிக்க வேண்டியது மிக மிக அவசியம். சாதாரணமாக நம் நாட்டில் ஒரு சம்பிரதாயம்—Haves and have nots வசதி படைத்தவர்கள்—வசதியில்லாதவர்கள் இரண்டு பாகங்களாகப் பிரித்து 'ஹாவ்-நாட்ஸுக்கு' எப்போதுமே பாகங்களாகப் பிரிந்து 'ஹாவ்-நாட்ஸுக்கு' எப்போதுமே இயற்கையாக நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் இந்த "ஹாவ் நாட்ஸ்" என்றால் 'டெனன்ட்ஸ்', 'ஹாவ்ஸ்' என்றால் 'லாண்ட் லார்ட்ஸ்' என்ற மனப்பான்மையை மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவது நியாயமாக இருக்குமென்று கருதுகிறேன். காரணம் இந்த 2 ஏக்கர், 1½ ஏக்கர், ½ ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள் நிலைமை என்ன? நாளைய தினம், மதிப்பிற்குரிய நண்பர் மாரிமுத்து சொன்னதுபோல், 'டெனன்ட்ஸ்' எல்லோரையும் உரிமையாளர்களாக மாற்றி விடுவோம். மாற்றினால் என்னவாகும்? இப்போது அவர்களுக்கிருக்கும் பாதுகாப்பு போய், "லாண்ட் லார்ட்ஸ்" ஆக இருக்கும் துர்ப்பாக்கியமான நிலைமை வரும். They are அந்த நிலை வரும் அவர்கள் லாண்ட்லார்ட்ஸ் ஆகிவிட்டால். ஆகவே பலர் லாண்ட் லார்ட்சாக வருவதற்கு விரும்பவில்லை. இதைப் பார்க்கிற நோக்கில், என்னைப் பொறுத்தவரை இந்தச் சட்டத்தின் விளைவாக லட்சக்கணக்கான 'டெனன்ட்சுக்கு' குத்தகைதாரர்களுக்கு நன்மை ஏற்படும் என்றால், நான் முழு மனத்துடன் இது முற்போக்கான சட்டம் என்று ஆதரிக்க தயாராக இருக்கிறேன். அதே நோக்கில் இந்த ஒரு விளக்கம் கொடுக்க, அதற்கு சர்க்கார் ஆராய்ச்சி செய்திருக்கிறதா? தணிக்கை, விசாரணை செய்து சிறு, சிறு நிலம் வைத்திருப்போர் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தீர்மானிக்கவேண்டும் என்பது தான் நான் சொல்லவேண்டிய இன்னொரு விஷயம் என்று கருதுகிறேன். பரவலாக பொருளாதார நிபுணர்கள்—சில நாள் முன்பு பால்கிவாலா என்ற பொருளாதார நிபுணர் ஒரு கருத்து பேசியிருக்கிறார்—அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

[1972 ஏப்ரல் 3

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

அந்த மாதிரியான 'ஸ்கூல் ஆஃப் தாட்' என்று சொல்லலாம்.
'அக்ரிகல்ச்சுரல் செக்டாருக்கு' இன்னும் வரி போட்டு அதி
லிருந்து பணம் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள்.
இது 'அக்ரிகல்ச்சரை'-ப் பொறுத்தவரை விஷயம் தெரியாதவர்கள்
கருத்து என்பது என்னுடைய கருத்து. 'அக்ரிகல்ச்சுரல் செக்
டாரால்' இனிமேல் எந்த வரிச் சுமையும் தாங்க முடியாது.
இன்றைய தினம் 'அக்ரிகல்ச்சரில்' ஈடுபட்டவர்கள் 10 ஏக்கர்,
15 ஏக்கர் வைத்திருந்தாலும் கூட, "அக்ரிகல்ச்சுரல் இன்கம்-
டாக்ஸ்" வரும்போது பணம் கட்ட முடியாத நிலையில்
இருக்கிறார்கள். யாராவது சொல்லலாம் டாக்டர் ஹாண்டே
பிற்போக்குவாதி போல் பேசுகிறார் என்று என்னைப் பொறுத்த
வரை 'டெனன்ட்சுக்கு' நன்மை செய்ய வேண்டுமென்று
வலியுறுத்திச் சொல்லுகிறேன். அதற்காகத்தான் பழனிசாமி
அவர்களின் பொதுமக்கள் அபிப்ராயத்திற்கு விடவேண்டும் என்ற
தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இவ்விதம் ஒரு
கோணத்திலிருந்து சொல்லலாம்.

நான் இன்னொரு கோணத்திலிருந்து சொல்கிறேன், எந்த
அளவிற்கு 'அக்ரிகல்ச்சுரல் செக்டார்' இந்தச் சுமையைத் தாங்க
முடியும் என்று பார்க்கும்போது திட்டவட்டமாக 15 ஏக்கருக்கு
கொண்டு வந்து விடுவோம். அதற்குப் பிறகு 10 ஏக்கருக்கு
வரட்டும். ஆட்சேபணை இல்லை. ஆனால் எந்த அளவிற்கு பாதிக்
கப்படுகிறார்கள், எந்த அளவு சலுகை கொடுக்கிறோம் என்று
பார்ப்பது மட்டுமின்றி, இன்று பலர் சாப்பாட்டுக்கு கூட திண்
டாடும் அளவிற்கு இருக்கும் சின்ன சின்ன நிலச் சொந்தக்காரர்
களுக்கு என்ன செய்வது என்று பார்த்து செய்யவேண்டும். அதே
நேரத்தில் இன்னொரு முக்கிய விஷயத்தை அமைச்சரவர்கள்
ஆராய்ச்சி செய்வார்கள் என்று கருதுகிறேன். பல டெனன்ட்ஸ்
அரசாங்கம் இப்படி கடுமையாக இருப்பார்கள் என்று நம்பிக்
கொண்டு குத்தகை கொடுத்திருக்கிறார்கள். சிலர் கட்டத் தவறி
யிருக்கிறார்கள். அவர்களை பாகுபாடு செய்யாமல் எந்தவித
நன்மை செய்யவேண்டும் என்று பார்க்க வேண்டும் என்று தெளி
வாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். எந்தவிதமான முற்போக்கு
கொள்கை கொண்டு வந்தாலும் கூட கட்சி சார்பை பொறுத்த
வரை ஆதரவு தரத் தயாராக இருக்கிறேன். பல ஆண்டுகளுக்கு
முன் 'அக்ரிகல்ச்சுரல் டெட் ரிலீஃப் ஆக்ட்' என்று மதிப்பிற்குரிய



1972 ஏப்ரல் 3]

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

ராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள், என்று முதலமைச்சர்
அவர்கள் ஒரு நாள்பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டுச் சொன்னார்
கள். அது வேறு பிரச்சினை. அப்போதெல்லாம் ஏராளமான பேர்
'அக்ரிகல்ச்சுரல் டெட்' வாங்கிக்கொண்டு, அதனால் நிறைய
வட்டி வாங்கி பலர் பணக்காரர்களாகும் நிலைமையைப் பார்த்து—
1937-ம் ஆண்டு என்பது எனக்கு சரியாக ஞாபகமில்லை—அந்தக்
காலத்தில் தள்ளுபடி செய்தார், என்று தெரிகிறது. அது வேறு
விஷயம். ஆனால் இங்கே இவர்கள் டெனன்ட்ஸ், லாண்ட் லார்ட்
ஸுக்கு கொடுக்க வேண்டியவர்கள், அரசாங்கத்திலிருந்து கூட்
டுறவு இலாகாவிற்கும் கடன் இருக்கிறது. அதிலே ஒருவித பாகு
பாடு செய்யாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அரசாங்கத்திற்கு வேறு வரிக்கு இடமில்லை. போடவேண்டிய
நிலைமை இருக்கிறது. எனக்குத் தெரியும். 5 ஏக்கர் வைத்
திருக்கும் 'லாண்ட் லார்டிடத்தில்' வாங்கிக் கொடுக்க வேண்டாம்.
இந்த அரசாங்கம் வலிமையாக இருப்பதால் "இட் இஸ் எ ஸ்ட்ராங்
இன்ஸ்டிட்யூஷன்; ஸ்டேபிள் கவர்ன்மென்ட்"—ஸ்டேபிளாக
இருக்கும் இந்த அரசாங்கத்திற்கு கடன் கொடுக்க வேண்டிய
நிலைமை இருக்கும்போது வரி விலக்கு கொடுக்கவேண்டிய
தேவையில்லை என்று சட்டம் போடலாம். அது நிச்சயமாக
'டெனன்ட்சுக்கு' நன்மை செய்யக் கூடிய அளவிற்கு இருக்கு
மென்று சொல்லி, 'டெனண்ட்சுக்கு' முழுப் பாதுகாப்பு
கொடுக்க வேண்டும் என்பதில் எந்தவித கருத்து வேறுபாடுமில்லை.
சின்ன சின்ன விவசாயிகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும்,
கொடுங்கள் என்று சொல்லிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.
அந்த அளவுக்கு இதை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை
முடித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, இந்த நல்ல நண்பகல் 12-00.
திட்டத்தை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு
எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்
பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லி
விட்டு, இறுதியில் இதை ஆதரிக்கிறேன் என்று சொன்னார்கள்.
அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

இது உண்மையிலேயே விவசாயிகளுக்கு ஒரு நல்ல அரிய திட்டமாகும். இது ஒரு புரட்சிகரமானத் திட்டம் என்று பட்ஜெட் உரையில் ஆரம்பத்தில் நமது முதலமைச்சரவர்கள் கூறி இருக்கிறார்கள். அது உண்மை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்குகின்ற வகையில் இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். விவசாயப் பெருங்குடி மக்களும் நிச்சயமாக இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. எல்லா விவசாயிகளும் இதை வரவேற்கிறார்கள்.

நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் வேண்டுமென்றே குத்தகைப் பாக்கியைக் கொடுக்கக் கூடாது என்ற நிலையில் யாரும் இல்லை. அவர்களால் எவ்வளவோ முயன்றும், அந்தப் பாக்கிகளைக் கொடுக்க முடியாததால் தான் கொடுக்கவில்லை. பல்வேறுவிதமான கஷ்ட நிலைகளால்தான் பாக்கிகளைக் கொடுக்க முடியாத பரிதாபகரமான நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் அந்தப் பரிதாபகரமான நிலையைப் போக்கவே, இந்தச் சட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள்.

இதிலே, எனக்கு முன்னால் பேசிய திரு. மாரிமுத்து அவர்களின் பேச்சின் ஒரு அம்சத்தை ஆதரிக்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக மார்ச் 1972-க்குப் பிறகு யாராவது இந்தக் குத்தகைப் பாக்கிக்காக வெளியேற்றப்பட வேண்டுமென்று இருந்தால் அவர்களுக்கு மட்டும் தான் இந்தச் சட்டத்தின் மூலம் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் குத்தகைப் பாக்கிக்காக இதற்கு முன்னால் வெளியேற்றப்பட்டிருந்தாலும் அவர்கள் பணம் கொடுக்கவேண்டியதில்லை. இருந்தாலும் அவர்கள் குத்தகை நிலத்தை அனுபவிக்கும் உரிமை இல்லை. இங்கே 1972-ல் இருந்துவந்த பசலிக்கு மட்டும் பாக்கியின்றி கொடுத்தால் போதும். அதற்கு முந்தின பாக்கியை கொடுக்க வேண்டியதில்லை; அதற்காக நிலத்தை விட்டு வெளியேற்ற முடியாது என்று இருக்கிறது. 1972-க்கு முன்பே இந்தக் காரணத்திற்காக வெளியேற்றப்பட்டிருந்தால், 1968-க்கு பிறகு எந்த விவசாயி வெளியேற்றப்பட்டிருந்தாலும், நிச்சயமாக அவர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்பட வேண்டும். வேறு காரணங்களுக்காக வெளியேற்றப் பட்டிருந்தால் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்



[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

கில்லை. இந்த அரசு அந்தச் சலுகையை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அந்த விவசாயிகளும் இந்த அரசை நல்ல முறையில் பாராட்டுவார்கள்.

அடுத்தபடியாக ரிவிஷனுக்காக ஹைகோர்ட்டுக்குப் போவதற்கு ஒரு புரோவிஷன் இருக்கிறது. ஹைகோர்ட்டுக்கு ரிவிஷனுக்குப் போவதற்கு இந்த ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு சில கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாகப் பொருளாதார நெருக்கடி இருக்கிறது. எனவே, அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும். ஏனென்றால் ஏற்கெனவே இருக்கக்கூடிய விவசாயிகள் தங்கள் நிதிநிலைமை காரணமாக, பாக்கி கொடுக்க முடியாததால் இந்தச் சலுகைகளைக் கொடுக்கிறோம். ஏதோ அறியாமை காரணமாக அல்லது அதிகாரிகள் தவறு செய்து, அதன் காரணமாக ரிவிஷனுக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு சர்க்காரே விரைந்து ரிவிஷனுக்கு போகக் கூடிய முறையில் இந்த சட்டத்தைத் திருத்தி அமைத்தால் இன்னும் அதிக சலுகை இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தமாதிரியான வரவேற்கக்கூடிய நல்ல சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரும்போது, அதை சட்டமன்றம், சட்ட மேலவை ஆகிய இரு சபைகளிலும் வைத்து, ஒப்புதல் பெற வேண்டுமென்ற ஒரு கண்டிஷன் இருக்கிறது. அதையும் அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். ஏனென்றால் எல்லா ரூல்களையும் இரண்டு சபைகளிலும் ஒப்புதல் பெறவேண்டுமென்றால் காலதாமதம் ஆகும். அதுவும் விவசாயிகளுக்கு நல்லதொரு அம்சமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது அதற்கு சம்பந்தப்பட்ட ரூல்களை வைத்து, இரண்டு சபைகளின் ஒப்புதலையும் பெறவேண்டும் என்பது அவ்வளவு அவசியமானது என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, அதைப் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சரவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக ஏராளமாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள்தான் பயன் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே, இது அவர்கள்

[1972 ஏப்ரல் 3

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

தான் மிகவும் வரவேற்கக்கூடிய அம்சமாக இருக்கிறது. தஞ்சை
மாவட்ட விவசாயிகள் போலவே இராமநாதபுரம் மாவட்ட விவ
சாயிகளும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த நான்கு
ஐந்து ஆண்டு காலமாக அங்கே பஞ்ச நிலை ஏற்பட்டது. அதன்
காரணமாக விவசாயிகள் குத்தகைப் பாக்கியை சரியாகக்
கொடுக்க முடியவில்லை. அதனால் அவர்கள் உடைமைகளை ஜப்தி
செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த அரசுக்கு அதைப்
பற்றிச் சொன்னால் அவர்களுக்கும் நன்மை கிடைக்கும் என்று
சொல்கிறார்கள். இங்கே தனிப்பட்ட ஒருவர் லாண்ட் லார்டாக
இருப்பதால் இந்தச் சட்டம் செல்லுபடி ஆகிறது. அங்கே, இராம
நாதபுரம் மாவட்டத்தில் அரசாங்கமே லாண்ட் லார்டாக இருக்
கிறது. அதாவது அரசாங்க இலாகாவின் நிலமாக இருக்கிறது.
அதனால் இந்தச் சட்டம் அங்குள்ள விவசாயிகளுக்குப்
பொருந்தாத நிலையில் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கும்
இத்தகைய நல்ல சட்டத்தைக் கொண்டுவருவதைப்பற்றி
அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

கடைசியாக ஒன்றைமட்டும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
இந்தச் சட்டம் எப்போதும் ஒரு நிரந்தரப் பரிகாரமாக இருக்க
முடியாது. இப்போதைக்கு இது ஒரு பரிகாரம் ஆக இருக்கிறது.
இதற்குப் பதிலாக நிரந்தரமாக விவசாயிகளுக்கு ஒரு பரிகாரம்
கொடுக்கக்கூடிய வகையில் ஒரு சட்டத்தை நாம் கொண்டுவர
வேண்டும். அப்படி நிரந்தரமாக ஒரு பரிகாரம் செய்யப்பட்டால்
விவசாயிகள் ஒழுங்காக குத்தகை செலுத்தமாட்டார்கள் என்று
சிலர் சொல்லலாம். நமது விவசாயிகள் அப்படிப்பட்டவர்கள்
அல்ல. நியாயமாக குத்தகை செலுத்த வேண்டுமென்ற எண்ண
முடையவர்களே நமது விவசாயிகள். வேண்டுமானால் குத்தகை
கொடுக்காமல் இருந்துவிடுவார்களோ என்ற ஐயப்பாட்டைப்
போக்குவதற்கு சட்டத்தில் ஏதாவது ஒரு வழியை வைத்துக்
கொள்ளலாம். எனவே, கஷ்டம், பஞ்சம், வறட்சி காரணமாக
குத்தகைச் செலுத்த முடியாமல் இருந்தால் அவ்வப்போது இப்
படிப்பட்டச் சட்டம் கொண்டு வரப்படுமா அல்லது வேறுவிதமாக
இருக்குமா என்பதை தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1972 ஏப்ரல் 3]

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிற பல முற்போக்கான
புரட்சிகரமான, சிறப்பான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று
என்று சொன்னால் மிகையாகாது. பொதுவாக நம்முடைய நாட்
டினுடைய ஏழ்மைக்கு அடிப்படையாக இருப்பது, நம்முடைய
பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கிற சீர்குலைவுக்குக் காரணமாக
இருப்பது கிராமங்களில் வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்கள்
தான். அவர்கள் எப்போதுமே கடன் தொல்லைகளினாலும், ஏழ்
மையினாலும் பலவிதமான துன்பங்களை அனுபவித்துக்கொண்டு
வாழ்ந்து வருவது நாம் எல்லாம் அறிந்த ஒன்றாகும். அவர்கள்
அன்றாடம் ஆற்ற வேண்டிய பணிகளை தடங்கல் இல்லாமல், கவலை
யில்லாமல் நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு கடன் தொல்லைகள்
இருக்கக்கூடாது. அதை உணர்ந்து நம்முடைய அரசு இந்தப்
புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்
காக தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இந்த அரசையும், சம்பந்தப்
பட்ட அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

பொதுவாக தகை என்றால் சிறப்பு. அந்தச் சிறப்புக்குரிய
வர்கள் காரியம் செய்பவர்கள், தொழில் செய்பவர்கள், எவன்
ஒருவன் தானே தன் சொந்த நிலத்தை உழுது, பயிரிட்டு, உற்பத்தி
யைப் பெருக்கி, நாட்டு மக்களுக்கு உண்டி கொடுத்து, உயிர் கொடுக்
கிறானோ அவன் தகை பெற்றிருக்கிறான். பிறருடைய, நிலத்தை
எடுத்து பயிரிடுகிற நிலையை தகையாகக் கொள்ளாமல் நாம் குத்
தகையாகக் கொள்கிறோம். ஏன் அப்படிச் சொன்னார்கள் என்
பதை தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடும், ஆர்வமும் கொண்டவர்கள்
தான் விளக்கவேண்டும். குத்தகைகாரர்களுக்கும் கடன்
தொல்லை இருக்கக்கூடாது. ஆகவே இந்தச் சட்டத்தை நான்
முழுமனதுடன் ஆதரிக்கிறேன். இன்றுள்ள நிலையில் ஒரு
காலவரையறையை ஏற்படுத்தி அதற்குள் இருக்கிற பழைய
பாக்கியை நடைமுறைக் கடனைக் கொடுத்து விட்டால் ரத்து
செய்து விடுகிற ஒரு விதி இருக்கிறது.

ஆனால் திரு. சௌடி சுந்தரபாரதி சொன்னதுபோல வருங்
காலத்தைப்பற்றி ஒன்றும் இல்லை. அதற்கும் ஒரு விரிவான
சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

[1972 ஏப்ரல் 3

[திரு. எம். ஏ. லத்தீப்]

இப்போது சாதாரணமாக கிராமங்களில் பார்க்கலாம், ஒரு விவசாயி—நிலக்காரருக்குப் பாதி, தனக்குப் பாதி என்கிற அடிப்படையில் நிலத்தை உழுது பயிரிட்டு 50 மூட்டை அறுவடை செய்திருப்பான். நிலக்காரர் தமக்குச் சேரவேண்டிய 25 மூட்டையை வண்டியில் ஏற்றி அனுப்பிய கையோடு "நீ பாக்கி தரவேண்டியது 25 மூட்டை இருக்கிறதே. அதற்கு இதை எடுத்துக் கொண்டு விடுகிறேன் போ" என்று இந்த 25 மூட்டையையும் ஏற்றிக்கொண்டு போய்விடுவான். விவசாயி அம்போ என்று உட்காரவேண்டியதுதான். அவனுடைய பெண்டு பிள்ளைகள் ஏமாற்றமடைந்து நிற்பார்கள். அவன் அன்றையச் சாப்பாட்டிற்கே வேறு ஒருவரிடம் கடனுக்குப் போக வேண்டிய நிலைதான் இருக்கும். வருங்காலத்திலும் இதுபோன்ற நிலை அவர்களுக்கு ஏற்படாதிருக்க கடனுக்காக அந்த வருட மகசூலை தம் பங்கு போக பாக்கியுள்ள பங்கையும் பறித்துக்கொள்ளாதிருக்க ஒரு பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும்.

அதேசமயம் சமுதாயத்தில் சில பலஹீனங்கள் இருக்கின்றன. விவசாயிகளும் சரியாக குத்தகை அளிக்காது எல்லாவற்றையும் எடுத்துப் போய்விடுகிறவர்களும் இருக்கலாம். ஒரு விதவை—மைனர் பிள்ளை—அந்த நிலத்தில் இருந்து வருகிறதைக் கொண்டுதான் சாப்பிடவேண்டும் என்கிற நிலை இருக்கும். அதோடு சில நிர்வாகங்கள்—கல்வி, கலாசார ஸ்தாபனங்களுக்கு யாராவது ஒரு ஏக்கர் எழுதி வைத்திருப்பார். அதில் இருந்து வருகிற வருமானத்தைக் கொண்டு அவை நடக்க வேண்டியதாக இருக்கும். இவர்களுக்குச் சேரவேண்டிய குத்தகை நியாயமான அளவில் கிடைத்துக்கொண்டிருக்கவும் வழி செய்யவேண்டும்.

பொதுவாக இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நல்ல புரட்சிகரமான சட்டம் என்பதில் ஐயமில்லை. காரணம் அந்தக் காலத்தில் இருந்து சொல்லி எழுதிக் கூட வைத்துவிட்டார்கள்.

'Indian farmer is always in debt'. என்பதாக. அப்படிக் கடன் தொல்லைகளினால் அவதிப்படுகிறவர்களுக்' இப்போது நாம் நிவாரணம் அளிப்பதோடுகூட வருங்காலத்தில் அவர்கள் கடன் படாமல் வாழக்கூடிய ஒரு சமுதாய பொருளாதார அமைப்பை ஏற்படுத்த வேண்டும். விவசாயி என்றால் இன்றைக்கு நம்மைப்



[திரு. எம். ஏ. லத்தீப்]

1972 ஏப்ரல் 3]

போல் சட்டை போட்டுக்கொள்ள வசதியில்லை. மேலே துண்டு. பனியனுக்கு வழியில்லை. இன்னும் காலில் வேனிற் காலத்தில் போட்டுக்கொள்ளக்கூடச் செருப்பு இல்லாதவர்கள் பலர்.

அதைத் தீர்ப்பதற்கு வழி இல்லை. கடன் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. அதை நீக்குவதற்கு என்ன வழி என்பதைப் பார்க்க வேண்டும். இதைப்பற்றி முதல், இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களைப் போடும்போதே சொன்னோம். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்று நாம் அப்பொழுதே சொன்னோம். விவசாயி முன்னேறினால்தான் நாடு முன்னேறும். தொழிற்சாலைகள் ஏற்படத்தான் வேண்டும். அதனால் வேலைவாய்ப்பு பெருகலாம். ஆனால் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டிய உணவை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயியும் நல்ல முறையில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். தொழிலாளர்களுக்கு உணவு வேண்டும். அவன் என்ன பெரிய கோடீஸ்வரனா, ப்ரூட் சாலட் சாப்பிட்டுக் கொண்டிருக்க ?

ஆகவேதான் சொல்கிறோம், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளின் பிரச்சினைகளை முதலாவதாகத் தீர்க்க வேண்டும். கிராமங்களில் உணவுத் தானியங்களுக்கு டிமாண்டு அதிகம். அதை உற்பத்தி செய்ய வேண்டியது நமது கடமை. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ; மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உழவின் சிறப்பை எடுத்துச் சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரும், நாம் உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவில்லை, தேவையைப் பூர்த்தி செய்யாமல் இருக்கிறோம். (மணியடிக்கப்பட்டது) தலைவர் அவர்களும் மணியடிக்கிறார்கள். மணி அடிப்பது நல்ல சகுனம்தான். பேரவைத் தலைவர் என்னை உட்கார வைப்பதற்காக மணி அடித்திருந்தாலும், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லும்போது மணி அடிப்பது நல்ல சகுனம்தான். இந்த நல்ல சகுனத்தை நான் வரவேற்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்திப்]

[1972 ஏப்ரல் 3

இனி வருங்காலத்தில் விவசாயிகளின் வாழ்க்கையிலே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு நிரந்தரமான முறை என்ன என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். விவசாயிகளின் கஷ்டத்தை இந்த அரசு நல்ல முறையில் உணர்ந்திருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் நல்ல பல சட்டங்களை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. சுறுசுறுப்பான நல்ல துடிப்புள்ள நம்முடைய மாவட்ட அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவரைப் பாராட்டுகிறேன், இந்த அரசைப் பாராட்டுகிறேன் என்று கூறி, என் உரையை நிறைவு செய்துகொள்கிறேன்

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, குத்தகை நிலுவை (தணிப்பு) சட்டம் உண்மையிலேயே வரவேற்கத்தக்கது என்பதை முதலில் அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. லத்திப் அவர்கள் சொன்னதுபோல், கிராமங்களிலே கடனுடைய சுமை எந்த அளவிற்கு இருக்கிறது, ஆங்காங்கு விவசாயிகள் எப்படி கடன்பட்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக ஆராய்வதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும். அன்றைக்கு முதலமைச்சராகயிருந்த திரு. ராஜாஜி அவர்கள் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்து, விவசாயிகள் தனி நபர்களிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன் வாங்கி அதிகமான வட்டியைக் கொடுத்தே ஏழைகளாக இருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடுதான் அப்போது சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இப்போது நம் மாநிலத்தில் குறிப்பாக குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் மிக நல்ல சீர்திருத்தமுள்ளதாக இருக்கிறது. அதுபோலவே 60-க்கு 40 பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், போன்றவை விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டம் எல்லாம் விவசாயிகளின் நிலைமையை, விவசாயிகளின் குறைகளை முழுவதும் போக்காமல் அந்தந்த நேரங்களில் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக இருக்கிறதே தவிர, எழும் பிரச்சினைகளையும் முழுவதுமாக தீர்க்க வேண்டிய நிலையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



[திருமதி த. ந. அனந்தநாயகி]

1972 ஏப்ரல் 3]

முதலிலே குத்தகைதாரர்களுடைய நிலைமை என்ன, அவர்கள் படுகின்ற கஷ்டங்கள் என்ன என்பதையெல்லாம் அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். விவசாயிகள் எதெதற்காகக் கடன்படுகிறார்கள், எந்தெந்தச் செலவுகளை அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் செய்யாமல் இருக்கலாம், அவர்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒரு நல்ல நிபுணர் குழுவைப் போட்டு, யோசித்துப் பார்ப்பது வரவேற்கத்தக்கதாக இருக்கும். சில ஷரத்துக்களைப் பார்க்கும்போது ஒழுங்காக இருப்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பதுபோல் இருக்கிறது. இன்றைக்கு, Clause 4 sub-clause 3 ஐப் பார்த்தால்,

(3) Nothing in this section or in any other provision of this Act shall entitle any cultivating tenant to claim any refund from the landlord on the ground that the payment or deposit made on or after the 1st July 1971, towards the discharge of any arrears of rent or towards full or part satisfaction of a decree or order for **the recovery of any arrears of rent, is in excess of the rent due as** current rent.

உண்மையிலே அதிகமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், திரும்பப் பெறுவதற்கு வசதி இல்லை. ஒழுங்காக குத்தகை செலுத்திய ஒருவனுக்கு, 'ஏன் செலுத்தினாய், உனக்கு ரீஃபண்டு இல்லை' என்று சொல்வதுபோல இருக்கிறது. அது எப்படி நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. விவசாயி பல கஷ்டங்களுக்கு மத்தியில் ஒழுங்காக செலுத்தியிருக்கிறான். ஆகவே, இதை அரசு மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ரீஃபண்டு . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ரீஃபண்டு யார் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள் ?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** விவசாயிகள் லேண்ட் லார்டுக்கு கொடுத்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்து திரும்பப் பெற வேண்டும். ஏன் இப்படி சட்டம் போட்டிருக்கிறீர்கள் ?

Nothing in this section or in any other provision of this Act shall entitle any cultivating tenant to claim any refund from the landlord.

என்று இருக்கிறது. கொடுத்தவன் ஏமாந்தவன் ஆகிறான் . . . .

[1972 ஏப்ரல் 3

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தங்களுடைய வாதப்படி கொடுத்தவன் ஏமாந்தவன் என்றால், கொடுக்காதவன் ஏமாற்றியவன்தானே?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, கொடுத்தவன் ஏமாந்தவன் ஆகிறான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கொடுத்தவன் ஏமாந்தவன் என்றால். கொடுக்காதவன் ஏமாற்றியவன் என்றுதானே கூறுகிறீர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, உங்கள் சட்டத்தின்படி அதுதான் அர்த்தம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காமராஜ் அவர்கள் இம்மாதிரி ஏமாற்றியவர்களுக்காகத்தான் வாதாடினார் என்று தெரிகிறது. தஞ்சாவூரில் பேசும்போது, சொன்னார். நிலத்திலிருந்து வெளியேற்றுவதன் காரணமாக 25 ஆயிரம் பேர் பாதிக்கப்படுகிறார்கள் என்று பெரும் தலைவர் கூறுவதை ஏற்று இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். காமராஜ் அவர்கள் ஏமாற்றியவனுக்குச் சலுகை தருகிறார்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, வழக்கம் போல் கனம் முதலமைச்சர் அவர்கள் திசை திருப்புகிறார். கொடுக்காதவர்கள் ஏமாற்றியவர்கள்தாம். இவ்வளவு கஷ்டத்திற்கும் மத்தியில் ஒழுங்காகக் கொடுத்திருக்கிறான் என்றால், அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமா? 1972-க்கு குத்தகைக்குக் கொடுத்திருந்தால் நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு வழி இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைச் சரியாகப் படித்தால் விவரம் தெரியும். அம்மையார் அவர்கள் ஒருவேளை புரிந்துகொண்டு வழக்கறிஞர் வாதமாக பேசுகிறாரோ என்னவோ தெரியவில்லை. பழைய நான்கு ஆண்டுக்காலம் குத்தகை பாக்கி கொடுக்கவில்லை. இந்த ஆண்டு பாக்கி கொடுத்துவிட்டிருந்தால் கடந்த ஆண்டு பாக்கிகளும் தீர்ந்து விட்டதாகக் கொள்ளலாம். சென்ற ஆண்டு கொடுத்திருந்தால் அவைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பது வழக்கமான



[திரு. ப. உ. சண்முகம்]

1972 ஏப்ரல் 3]

வாதம். நான்கு ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகளுக்குக் கொடுத்து விட்டு, இந்த ஆண்டு குத்தகை பாக்கி கொடுத்துவிட்டு, பின்னர் 'தெரியாமல் கொடுத்து விட்டேன், அதைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்' என்பது எங்கும் சரியில்லை. அது எப்படி சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்கும்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, சர்க்கார் சட்டத்தைப் பரிசீலனை செய்துதான் கொண்டு வருகிறது. இல்லாதவன் கடனாளியாகிவிட்டான் என்பதற்காக விதிவிலக்கு செய்திருக்கிறது. குத்தகைக்கு நெல் அளக்காமல் இருந்திருந்தால் அவனுக்கு விளையாமல் இருந்த காரணத்தினால் கொடுக்காமல் இருந்திருப்பான். விளைந்தவன் கொடுத்திருக்கிறான். சிலர் குத்தகை கொடுக்க முடியாமல் போனதற்குக் காரணம் பயிரிட்ட நேரத்தில் நெல் கிடைக்கவில்லை. ஆகவே, அவன் கடனாளியாக இருந்தான். அவனால் கொடுக்க முடியாமல் இருப்பதற்காகத்தான் இந்தச் சட்டம். கொடுத்துவிட்டவனுக்கு அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்வதற்கல்ல இந்தச் சட்டம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகரவர்களே, விளைந்து கொடுத்தானா? அல்லது நாணயமாகக் கொடுத்துத்தான் தீர வேண்டுமென்று கொடுத்திருக்கலாம். அப்படிக் கொடுத்தவர்களின் நிலை என்ன? சில குத்தகைதாரர்களைப்பற்றி எனக்குத் தெரியும், விளைந்தாலும் கொடுக்க மனம் இல்லாமல் சிலர் இருப்பார்கள், விளையாவிட்டாலும் நாணயத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அளப்பவர்களும் இருக்கிறார்கள். அப்படி நாணயமாக அளந்தவன் இன்றைக்கு இழந்தவனாகிறான். அதைத்தான் சொல்கிறேன், அளந்துவிட்ட காரணத்தினால் அவர்களுக்கு ஏன் இந்தச் சலுகையைத் தராமல் இருக்கிறீர்கள்? குத்தகையை நாணயமாக அளந்திருக்கிறானே அவனுக்கும் அந்தச் சலுகையைத் தாருங்கள். அதிகமாக அளந்தவர்களுக்கு லேண்ட் லார்ட்களிடமிருந்து வாங்குவதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

பிற்பகல் 12-30

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார். கனம் அம்மையார் அவர்கள், அதிகமாகக் கொடுத்திருந்தால் திரும்பப் பெறுவதற்குச் சட்டத்திலே வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள். அதாவது, குத்தகை அதிகட்

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

[1972 ஏப்ரல் 3

கொடுத்திருந்தால், எந்த விவசாயியும் வருஷத்திற்குக் கொடுக்க வேண்டியதைவிட அதிகமாகக் கொடுக்கமாட்டான். இதற்குமுன் விவசாயி கொடுத்திருந்தாலும் அவர்கள் என்ன கொடுக்க வேண்டுமோ அதைத்தான் கொடுத்திருப்பார்கள். அப்படியிருக்கும் பொழுது அதிகமாக எப்படிக் கொடுக்க முடியும்? அதிகமாகக் கொடுத்திருந்தால் தானே திரும்பப் பெற வாய்ப்பு வேண்டும். அதிகம் எங்கே இருக்கிறது என்று புரியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் அங்கத்தினர் அவர்கள் நான் சொன்னதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். யாரும் அதிகமாகக் கொடுக்கவில்லை. குத்தகை கொடுத்திருக்கிறார்கள், சிலர் கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள். கொடுக்காமல் இருந்தவர்களுக்கெல்லாம் இந்தச் சலுகையை நாம் தருகிறோம். ஏனென்றால் அவர்களால் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறோம். ஆனால் கொடுத்திருக்கிறானே அவன் கதி என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஓட்டப்பந்தயத்தில் ஓட முடியாமல் வலுவில்லாமல் இருப்பவர்களை முன்னால் நிறுத்துவது வழக்கம். ஆனால் அம்மையார் அவர்கள் அந்த வலுவில்லாதவர்களையும், வலுவுள்ளவர்களையும் ஒன்றாக ஓடச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள், இதுதான் அம்மையார் அவர்களின் விளக்கம் என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாணயமாக அளந்திருப்பவர்களுக்கு இது ஒரு பனிஷ்மெண்ட் என்றுதான் சொல்கின்றேன். விளைந்தால் அளக்கிறான், விளையவில்லை என்றால் அளக்கவில்லை என்று சொல்கிறார்கள். சிலசமயங்களில் அவனுக்கு மனச்சாட்சியிருந்தால், குத்தகைக்கு ஒத்துக்கொண்டிருக்கிறோம், அளந்துவிடுவோம் என்று அளக்கிறானே அவன் ஏமாளியாகிறான்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின் பெயரையே கொஞ்சம் அவர்கள் திரும்பவும் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குத்தகை பாக்கி செலுத்தாதவர்களுக்குப் பாதுகாப்பு சட்டமே தவிர, செலுத்தியவர்களுக்குப் பாதுகாப்பு என்பது அல்ல. குத்தகை பாக்கி செலுத்தா-



[திரு. ப. உ. சண்முகம்]

1972 ஏப்ரல் 3]

தவர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதுதான் சட்டத்தின் நோக்கமே தவிர ஏற்கனவே கொடுத்தவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் அல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குத்தகை பாக்கிச் செலுத்தாமல் இருந்ததற்கு வறட்சி, சரியாக செம்மையாக விளைச்சல் இல்லை என்று காரணம் சொல்லலாம். ஆனால் இத்தனை கஷ்டங்களுக்கும் மத்தியில் கொடுத்திருக்கிறானே அவனுக்கு ஏன் ரீஃபண்ட் செய்ய வகையில்லை. புரிந்துகொண்டே புரியாமல் பேசுவதுமாதிரி பேசுவது நியாயமல்ல. இவ்வளவு கஷ்டங்களுக்கும் மத்தியில் எத்தனைபேர் நாணயமாக அளந்திருக்கிறார்கள், அவர்களின் நிலை என்ன? ஆகவே நிலச்சுவான்தார்களிடமிருந்து ரீஃபண்ட் வரவில்லை என்றால் அடுத்த முறை கொடுக்க வேண்டிய குத்தகையை ரைட் ஆஃப் செய்வது சரியாக இருக்கும். எனவே அப்படி ரீஃபண்ட் கிடைக்காத அளவில் குத்தகையை அளக்காமல் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக வரும்பொழுது, நாங்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறோம். நாம் எப்படி குத்தகைதாரர்களுக்கு இவ்வளவு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமோ அதேமாதிரி குறைந்த நிலமுள்ள நிலச்சுவான்தார்கள், பெண்கள், விதவைகள் இவர்களுடைய நிலைமைகளையும் யோசிக்க வேண்டும். ஆகவே இந்தக் கடன் நிவாரணத்தில் பெண்கள் நிலச்சுவான்தாரர்களாக இருந்தால் அவர்களுக்கும் அல்லது மைனர் குழந்தைகள், விதவைகள், 1 ஏக்கரா, 2 ஏக்கரா, 3 ஏக்கரா என்று வைத்திருக்கும் அவர்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும். நாங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். எனவே சிறுநிலச்சுவான்தாரர்களுக்கு இந்தக் கடன் நிவாரணச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் மற்றொன்றைச் செய்யலாம். ஸ்மால் லேண்ட் லார்ட்ஸ் யாருக்காவது இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கவில்லையென்றாலும் அவர்களுக்கு அரசாங்க நிதியிலிருந்து விதிவிலக்கு கொடுத்தால் நல்லது. ஏனென்றால் குத்தகைப் பணம் கிடைத்தால்தான் அதிலிருந்து நிலத்திற்கான செலவைப் பார்க்கிறார்கள். குத்தகையே தர வேண்டாம், இதோடு ஒதுக்கிவிட்டோம் என்று சொல்லும்பொழுது வரி மற்றைய சுமைகளையாவது குறைப்பதற்கு

[திருமதி த. ந. அனந்தநாயகி]

[1972 ஏப்ரல் 3

நாம் முன் வரவேண்டும். சிறுநிலச்சுவான்தார்களுக்காவது இத்தகைய வரிச்சுமையைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். எப்படி குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் கொடுக்க ஆசைப்படுகிறேமோ அதைப்போல சிறுநிலச்சுவான்தாரர்களுக்கும் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கும் மற்றச் செலவுகளைத் தாங்கவும் வேண்டியிருப்பதால், அவர்களிடத்திலிருந்து வாங்க வேண்டிய வரிகளை வஜா செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்வந்தால் அதனால் உங்களுக்கு நஷ்டம் அதிகமாக வராது. 3 ஏக்கரா, 5 ஏக்கரா என்று வைத்திருக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கு இத்தகைய ஒரு ரிலீஃபைத் தந்தால் உண்மையிலேயே சிறுநிலச்சுவான்தாரர்களுக்கும், விவசாயிகளுக்கும் பாரபட்சமற்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம் என்ற நல்ல பெயருக்கும் ஆளாவோம் என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, சிறுநிலச்சுவான்தாரர்களுக்கெல்லாம் வஜா செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். நாணயமாகக் குத்தகை அவர்களுக்கு அளந்திருந்தால் என்ன செய்வது ?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அப்பொழுது அவர்களிடத்திலே வரி கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** குத்தகையை அளக்காதவர்கள் நாணயமில்லாதவர்கள் போலவும், அளந்தவர்கள் நாணயம் உள்ளவர்கள் போலவும் சொல்கிறார்கள். குத்தகை கொடுத்திருந்தால் மிராசுதாரர்களிடமிருந்து திருப்பிக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல் விதவைகளாக இருப்பவர்களிடமிருந்து, அவர்களுக்கு நியாயமாகக் குத்தகை கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களிடத்திலிருந்தும் திருப்பி வாங்கிக் கொடுப்பதா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** யாராக இருந்தாலும் அந்தப் பாலிசியிலே, விதவைகளாக இருந்தாலும் நாணயமாகக் குத்தகை அளந்திருந்தால் மற்ற விவசாயிகளுக்கு எந்த நிவாரணத்தைக் கொடுக்கிறேமோ அது அவர்களுக்கும் உரியது குத்தகை பாக்கி கிடைக்காமல் இருப்பவர்களுக்கு வரி வஜா செய்யவேண்டும்



1972 ஏப்ரல் 3]

[திருமதி த. ந. அனந்தநாயகி]

ரிஃபண்ட் என்று சொல்லும்பொழுது 3 ஏக்கராவாகயிருந்தாலும் சரி, 1½ ஏக்கராவாகயிருந்தாலும் சரி எல்லோருக்கும் ஒரே சட்டமாக இருக்கும் வகையிலே நல்ல முறையிலே வந்தால் நன்றாக இருக்குமே தவிர பனிஷ்மென்ட் கொடுக்கும் முறையிலே அந்தச் சட்டம் இருக்கக்கூடாது.

* **மணலி திரு. சி. கந்தசாமி:** தலைவரவர்களே, இந்தச் சட்டம் எல்லாக் கட்சியாலும் மனமார வரவேற்கப்பட வேண்டிய சட்டம். இன்றைக்கு சமூக நீதி என்பது சட்டத்தை வைத்து அல்ல. தங்களது யதார்த்த நிலையில் விவசாயிகள் நிலத்தை இழந்துவிட்டு, உள்ள உழைப்பைச் செலுத்திவிட்டு சந்தியில் நிற்பவர்களுக்கு வரும்பொழுது படியே வாழ்வளிக்கும் முறையில் இந்தச் சட்டம் போகாத ஊர்களுக் இந்தச் சட்டத்தை சிலர் எதிர்க்க முடியாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். குப் போய் வழிகாட்டிக்கொண்டு சொல்ல தயக்கம், நான் அதைத் துணிந்து எதிர்க்கிறேன் என்று மாண்புமிகு அங்கத்தினர் ஆகவே சுற்றிச் சுற்றிப் பேசுகிறார்கள். சந்தோஷப் ஓரண்டே அவர்கள்கூட அதை வரவேற்றிருப்பதற்குச் ஆரம்பத்தைப் படுகிறேன். சுதந்திராக் கட்சியில் கூட அசைவின் பார்க்கிறேன்.

உள்ளபடியே அம்மையார் அவர்கள் சொல்வது, ஏற்கனவே கொடுத்தவனுக்கு நிவாரணம் கொடுக்க கட்டியவர்களுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இது ஏதாவது உருப்படியான வாதமா ? கட்டாமல் இருக்கிறான் என்றால் அப்படிக் கட்டாமல் இருப்பதால் சுமை கூடிவிட்டது. அதனால் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடிய நிலைமை வந்தால் அது சமுதாயப் பிரச்னையாகிவிடுகிறது. தப்பித்தவறி அம்மையார் அவர்கள் அமைச்சராக வந்துவிட்டால் சமுதாயத்தில் நியாயமான சட்டத்தைக் கொண்டுவரும்பொழுது உள்ள படியே தமிழ்நாடே அல்லோலகல்லோலப்படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I take strong objection to those words (laughter).

**மணலி திரு. சி. கந்தசாமி:** அடுத்தபடியாக, சின்ன நிலக்காரர்கள் சம்பந்தமாகச் சொன்னார்கள். சின்ன நிலக்காரர்கள் பற்றி ஏற்கனவே பேசியபொழுது குறிப்பிட்டேன், அது இறுதியாக

[மணலி திரு. சி. கந்தசாமி]

தீர்க்கப்பட வேண்டும். நேரம் வரும்பொழுது விதவைகள், மைனர்
கள் இவர்களெல்லாம் கவனிக்கப்படவேண்டும். குத்தகை செய்ப
வர்கள் 3 எக்கரா, இரண்டு எக்கரா என்று குத்தகை செய்பவர்
களின் நிலைமை எவ்வளவு பரிதாபகரமாக இருக்கும் என்பதை
எண்ணிப்பார்க்கவேண்டும். மூன்று எக்கர்காரர்களிடமிருந்து 1
ஏக்கர் குத்தகை வாங்கியிருப்பவர்கள் படும் சமுதாய நிலைபற்றி
சிந்தித்தால் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று தோன்றும்.
விதவை என்ற அளவில் சொன்னால், சொந்தக்காரர்கள் யாராவது
இருக்கலாம். குன்னியூர் அம்மா பெரிய நிலப்பிரபு, பல்லாயிரக்
கணக்கான ஏக்கர்கள் நிலம் இருக்கிறது. ஆகவே நான் கூறுவது
என்னவென்றால் விதவைகள் என்பது ரொம்பக் குறைச்சலாக
இருப்பவர்கள், சொந்தக்காரர்களிடத்தில் கேட்டுச் சாகுபடி
செய்யலாம். விதவை என்று சொல்ல வேண்டுமானால் ஏதும்
உழைக்காமல் இருக்கக்கூடியவனும் கூட விதவையாக இருக்
கிறான். அவனும் ஒரு விதத்திலே விதவையாகத்தான் இருக்
கிறார். தின்றுவிட்டு தின்றுவிட்டு வீட்டிலே இருக்கிறான்.
இப்படியிருக்கும் ஆப்செண்டி லாண்ட்லார்ட்ஸ் ஒழிய வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி யோசிக்க
வேண்டும். ஆப்சன்டி லாண்ட்லார்டு என்ற முறையே ஒழிக்கப்பட
வேண்டும். குத்தகையில் இருப்பவர்களுக்கு, காலப் போக்கில்
நிலச் சொந்தகாரனுக்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு குத்தகை
செய்பவனுக்கு நிலப் பட்டாவை மாற்றியமைக்கும் முறையில்
நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அம்மையார் அவர்கள்
ஆராய்ச்சிக்கு ஒரு ஆள் போட வேண்டுமென்று சொன்னார்கள்.
ஆராய்ச்சி செய்யவேண்டிய இன்டெட்டட்னஸ் அல்ல இது.
குத்தகைதாரன், வாரதாரருக்கு ஏதோ இரண்டு, மூன்று ஏக்கரா
வது சொந்தப்படுத்த வேண்டும். ஏழெட்டு ஆண்டுக் காலத்தில்
நஷ்ட ஈட்டை நிலச் சொந்தக்காரனுக்கு வழங்குகின்ற முறையில்
இரண்டு பேருக்கும் நீதி காணக்கூடிய அடிப்படையில் செய்ய
வேண்டும்.

நிலத்திலிருந்து 1968-ம் வருஷத்திலிருந்து வெளியேற்றப்படு
பவர்கள் ஒரு பகுதி இருக்கிறார்கள். அவர்களுக்கும் நீதி வழங்க
ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும். அவர்கள் ஓரிரு
தவணைகள் கட்டியிருந்தாலும் வெளியேற்றப்படக்கூடிய நிலை



[மணலி திரு. சி. கந்தசாமி]

இருக்கிறது. ஒரு வருஷத் தவணை கட்டியிருந்தாலும் அவர்கள்
வெளியேற்றப்படக் கூடாது என்ற அடிப்படையில் திருத்தம்
கொண்டு வருவதன் மூலம் நீதி வழங்க முடியும். ஏதோ ஏழை
எளியவனுக்கு மீண்டும் குத்தகைக்கு விட்டிருந்தால் அதைக் கூட
விட்டு விடலாம். மற்றப்படி ஒரு வருஷம் கட்டியிருந்தாலும்
அவனை வெளியேற்றக்கூடாது என்ற வகையில் சட்டம் கொண்டு
வரவேண்டும். அந்த அடிப்படையில் வரப்போகிற காலத்தில்
நிலப் பிரச்சினையைத் தீர்க்கும் முழு வடிவம் கொண்ட சட்டத்
தைக் கொண்டு வர ஆரம்பமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு
வந்த முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, வரவேற்று, தூண்டு
கோலாக இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கும் நன்றி
யைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தமிழ்
நாடு விவசாயிகளிடத்தில் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தியிருக்
கின்ற புரட்சிகரமான சட்டமுன்வடிவைக் குறித்த விவாதத்தில்
கலந்துகொண்ட உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைத் தெரிவித்
தார்கள்.

கடைசியாகப் பேசிய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்
மாண்புமிகு பெரியவர் கந்தசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்
கள். அதைப்பற்றித் துவக்கத்தில் சொல்ல வேண்டுமென்று நினைக்
கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு பெருந்
தலைவர் காமராஜர் அவர்கள் தூண்டுகோலாக இருந்தார்கள் என்று
சொன்னார்கள். உண்மை நிலை அதுவல்ல. அவர் பேசுவதற்கு
முன்பே வரவு-செலவுத் திட்டம் முதலமைச்சர் அவர்களால்
தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருக்குள்ளான தஞ்சை மாவட்ட
விவசாயிகள் முதலமைச்சர் அவர்களிடம் தங்கள் நிலையைத்
தெரிவித்தார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் முதலமைச்சர் அவர்களே
சொன்னார்களே.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேலி, கிண்டலுக்காகச்
சொல்லி இருக்கலாம். அந்தக் கேலியைப் புரிந்து கொள்ளாத
வர்கள் அரசியல்வாதியாக இருக்க முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சட்டசபையில் மற்றொரு அரசியல் தலைவரைப் பற்றிக் கேலி செய்யலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கேலி என்றால் அந்தப் பொருளிலே எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. 'உங்கள் பெருந் தலைவரும் சொன்னார்கள்; சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டுவர தூண்டுகோலாக யாரும் இல்லை. முதலமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றபோது அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய கோரிக்கையின் விளைவாகத்தான் இது உருவாயிற்றே தவிர வேறல்ல.

**மணலி திரு. சி. கந்தசாமி:** ஹாஸ்யத்திற்காகச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வேடிக்கையாகச் சொன்னதை அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகத் தான் நான் நிலைமையை விளக்கிச் சொன்னேன்.

இந்தச் சட்டத்தைப் பற்றி விரிவாக எல்லா அங்கத்தினர்களும் சொன்னார்கள். 1967-ம் ஆண்டில் தமிழ்நாட்டில், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மழை சரியாக இல்லாததன் காரணமாக வேளாண்மை சரியாக இல்லை. இதனால் குத்தகைதாரர்களை வெளியேற்றும் நிலைமை ஏற்பட்டது. 1967-ம் ஆண்டு தேர்தல் வந்த நேரம். 1966-ல் குத்தகை பாக்கி கொடுக்காதவர்களை வெளியேற்றும் அவசியம் ஏற்பட்டபோது அதைத் தடுத்து நிறுத்த ஒரு சட்டம் போடப்பட்டது. 1968-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் முன்பு இருந்த பாக்கிகளை நான்கு தவணைகளாகக் கொடுங்கள், கால வரம்பு வேண்டாம் என்றார்கள். அப்படிக் கொடுப்பது கூட விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கும் என்று முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டதன் பேரில் நடக்கின்ற பசலிக்கு மட்டும் குத்தகையைக் கொடுத்துவிட்டால் முன்பு இருந்த பாக்கி எல்லாம் கொடுத்துவிட்டதாகக் கருதி ரத்து செய்யப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து சட்டம் வந்திருக்கிறது.

கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் பேசும் போது பொதுமக்களுடைய கருத்தை அறிந்து கொள்ள இதை அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அது தேவையில்லை என்று கருதுகிறேன்.



**திரு. ஆ. கு. சுப்பையா:** பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு விட வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்போது வேண்டா மென்று சொல்லுகிறார்கள். அது தேவையில்லை என்றுதான் நானும் தெரிவித்துக் கொள்கிறேன். இது அவசர நிலையில் கொண்டு வரப்பட்ட சட்டம். விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வந்திருப்பதால் இதைப் பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு விடத் தேவையில்லை. இதை எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றுகிறோமோ அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை பயக்கும். நாம் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு இந்தியக் குடியரசுத் தலைவர் சம்மதத்தைப் பெற்றாக வேண்டும். அது கையெழுத்தாகி வந்த தேதியில் இருந்து ஆறு மாதகாலம் தவணை பாக்கி கொடுக்க என்று சட்டத்தை வைத்திருக்கிறோம். ஆறு மாத காலம் என்று இருப்பதை 9 மாத காலம் என்று ஆக்க வேண்டுமென்று திரு. சுப்பையா அவர்கள் சொல்லுகிறார்கள். அடுத்த பசலி வரும்போது 60—40 பாக்கி கொடுக்க வேண்டும். இப்போது 40 அப்போது 40, ஆக 80 ஆகி விட்டால் மீண்டும் குத்தகை பாக்கி சேர்ந்து கொண்டே போகும் நிலைமை ஏற்படும். இதற்கு நிரந்தர பரிகாரம் காண வேண்டுமென்பதற்காகத்தான் 6 மாத காலம் என்று வைத்திருக்கிறோம், வேறல்ல.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** 9 மாதம் ஆக்கினால் முதல் கிராப் வரும்போது ஒன்றைக் கொடுத்துவிடலாம். பிறகு டபிள் கிராப் வரும்போது கட்டக்கூடிய நிலை இருக்கும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஜுலை மாதம் குறுவை அறுவடை வந்து விடுகிறது. சுலபமாகக் கொடுத்து விடலாம். இதிலே சிரமம் இருக்குமானால் யோசிக்கலாம், சிரமம் இருக்காது.

திரு. பழனிசாமி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 1967-ம் ஆண்டில் இருந்து நான்கு ஆண்டு காலத்திற்குள் ஏதேனும் ஒரு வருஷம் கொடுத்திருந்தால் கூட நான்கு ஆண்டு தவணையும் கொடுத்துவிட்டதாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று சொன்னார்கள். சட்டம் கொண்டு வந்திருப்பது விளையாத காரணத்தால் விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டு

[1972 ஏப்ரல் 3

[திரு. ப. உ. சண்முகம்]

மென்பதற்காக விளைந்து கொடுத்திருக்கக்கூடியவர்களுக்கு அதை வைத்துக் கொண்டு பின் பாக்கியைத் தள்ள வேண்டுமென்று சொல்லுவது சட்டத்திற்கு முரணாக இருக்கும். ஆகவேதான் இந்தப் பசலிக்குக் கொடுத்தால் போதும் என்ற முறையில் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

பொதுவாக, இந்தச் சட்டத்தை எல்லோரும் வரவேற்றிருக் கிருர்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட, கடைசியாகச் சொல்லும்போது இதை வரவேற்கக் கூடத் தயாராக இருக்கிறேன் என்று மெல்ல மெல்லச் சொன்னார்கள். அவர்கள் வேகமாகவே கூடச் சொல்லலாம். வரவேற்பதில் தவறு இல்லை.

சிறு நிலச்சுவாந்தார்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், மூன்று லட்சம் நிலச்சுவாந்தார்கள் சிறு நிலச்சுவாந்தார்களாக இருக் கிருர்கள் என்று சொன்னார்கள். ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த மூன்று லட்சம் பேரும் குத்த கைக்கு நிலத்தை விட்டவர்கள் அல்ல. அவர்களிலே பெரும்பாலும் சொந்தப் பயிர் வைப்பவர்கள். அப்படிக் கொடுத்திருந்தாலும் எண்ணிக்கை மிகவும் குறைவாகத்தான் இருக்கும். அப்படிக் குறைவாக இருப்பவர்களைப் பாதுகாக்கப் போய் பெரிய முதலைகள் தப்பிவிடக் கூடாது. பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது. வளர்ந்து வருகிற சமுதாயச் சீர்திருத்தத்தில் உழுபவர்களுக்குப் பாதுகாப் பாகச் சட்டம் கொண்டு வருகிருேமே தவிர வேறல்ல. குத்தகை தாரர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற முறையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

எனவே சிறியவர்கள், விதவைகள், வேறு நிறுவனங்கள் என்று வைத்துவிட்டால் பல சிக்கல்கள் ஏற்படும். தெளிவாகச் சொல்லி விட்டோம். இந்த ஒரு பசலிக்கு கொடுத்துவிட்டால் பாக்கி பூராவும் தள்ளுபடியாகும் என்று போட்டிருக்கிருேம். நான் அரசு சார்பில் ஒன்று தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். குத்தகை நிலுவை தேங்கிக்கொண்டே போனால் ஆண்டுக்காண்டு சட்டம் வந்து குத்தகை பாக்கியை தள்ளுபடி செய்துவிடுவார்கள் என்று விவசாயிகள் மத்தியிலே இப்படிப்பட்ட தொரு எண்ணம் பரவக்கூடாது. அப்படிச் சட்டம் வரும் என்று யாரும் நம்ப வேண்டாம். இப்போது கொண்டுவரப்படுகிற அவசரச் சட்டம், துர்ப்பாக்கியவசமாக மழை பொய்த்து விட்ட



1972 ஏப்ரல் 3]

[திரு. ப. உ. சண்முகம்]

தால், வெள்ளாண்மை தவறிய காரணத்தினால் உழுபவர்கள் பாதுகாப் பிற்காக இதைக் கொண்டு வந்திருக்கிருேம். இதைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் குத்தகைகளை எல்லாம் தள்ளிவிடுவார்கள் என்ற எண்ணம் யாருக்கும் வரக்கூடாது. அப்படி சட்டம் வராது. இப்படி ஒரு பயங்கரமான வரட்சி நிலை ஏற்படுமானால் இப்படிப்பட்ட பாதுகாப்புச் சட்டம் வரலாம், அப்படி வருவதில் தவறு இல்லை.

பருவ மழை பெய்யும்போது இப்படி ஒரு பாதுகாப்புச் சட்டத் தைக்கொண்டு வந்து குத்தகை கொடுக்கவேண்டியதை தள்ளிவிடு வார்கள் என்று நிலம் வைத்திருப்பவர்கள் பயப்படத் தேவை யில்லை. ஏற்கனவே கொடுத்துள்ள நிலுவைகளைக் கணக்கில் வைத்துக்கொண்டு இப்போதுள்ள பாக்கியை வரவு வைத்து கொள்வது என்பது சரியல்ல. 1—3—1972-ல் இருந்துதான் பாது காப்பு அளித்திருக்கிறீர்கள், முதல்வர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தைப் படித்தபிறகு யாரும் வெளியேற்றப்படவில்லை என்று கருத்து சொன்னார்கள். முன்பே வெளியேற்றப்பட்டவர்கள்கூட, 68-ல் வெளியேற்றப்பட்டவர்களையெல்லாம் கொண்டுவந்து மீண்டும் நிலத்தில் வைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். இதில் சட்டச் சிக்கல்கள் பல இருக்கின்றன. 68-க்குப் பிறகு வெளியேற்றப் பட்டவர்கள்—வேறு யாரையாவது கொண்டு வந்து குத்தகை தாரர்களாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடும்.

மணலி அவர்கள் குறிப்பிட்டார்கள். யாரையாவது—ஏழையை வைத்துக்கொண்டிருக்கக் கூடும் என்று சொன்னார்கள். உண்மை நிலை அதுதான், ஆகவே அப்படி வைத்துக் கொண்ட பிறகு குத்தகை பாக்கியைக் கொடுத்திருந்தால் அவரை வெளியேற்றி விட்டு இன்னொருவரைக் கொண்டு வந்து வைப்பது என்பது நாம் கொண்டுவரும் சட்டத்திற்கே பாதகம் ஏற்படும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

ஆகவே 1—3—1972-க்குப் பிறகு வெளியேற்றப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிருேம் என்று சொன்னேம். அப்படி வெளி யேற்றப்படவில்லை என்று சொல்கிருர்கள். மகிழ்ச்சி. 1–7–1971-ல் இருந்து பஸ்லி ஆரம்பமாகிறது. பஸ்லி ஆரம்பத்தில் யாராவது குத்தகை பாக்கிக்காக வெளியேற்றப்பட்டு வேறு யாரும் குடி யேற்றப்படாமல் இருந்தால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக் கலாம். வேறு யாரும் இல்லையென்றால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

[திரு. ப. உ. சண்முகம்]

இன்னொருவரை வைத்துவிட்டு அவர்கள் பயிர் வைத்ததற்குப் பிறகு அவரை வெளியேற்றி விட்டு பழைய குத்தகைதாரரை கொண்டுவரவேண்டுமென்று சொல்வது சரியாகாது. அது சட்டச் சிக்கலைக் கிளப்பிவிடும். குத்தகைதாரர்கள் என்று எவ்வளவு ஆண்டுக்காலம் இருப்பது ? உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். அந்தக் கருத்து திராவிட முன்னேற்றக் கழக அரசு முழுக்கமுழுக்க ஏற்றுக்கொள்கிற கருத்தாகும். அதற்கு நாங்கள் மாறுபட்டவர்கள் அல்ல.

கொள்கை அளவில் இன்று முதல் அமைச்சராக இருக்கிறவர்கள் இதே மன்றத்தில் பலமுறை இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள் என்றாலும் நாம் நினைக்கும் சமுதாயச் சீர்திருத்தத்தை படிப்படியாகப் போய் எட்டவேண்டும் என்று கருதுகிறோமே தவிர வேறு ஒன்றும் அல்ல. இதைச் சீக்கிரம் கொண்டு வாருங்கள் என்று மணலி அவர்கள் சொன்னார்கள். அது பாழாகாது. காலம் பிடிக்கும். காலம் கனியும் வரையில் காத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சௌடி சுந்தர பாரதி அவர்கள் சொன்னார்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் வரி பாக்கி நிறைய இருக்கிறது என்று. அதை ரத்து செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட தப்பான எண்ணம் பரவக் கூடாது. இராமநாதபுரம் மாவட்டத்தில்தான் வரி நிலுவை அதிகமாக இருக்கிறது. கடன் பாக்கி அதிகமாக இருக்கிறது. உரக் கடன், கிணறு வெட்ட வாங்கிய கடன் இவைகளில் அதிக பாக்கியிருக்கிறது. அதற்காக அதைத் தள்ளுபடி செய்துவிடவேண்டும் என்று சொல்வது சரியல்ல. நிலுவையைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். வரிபாக்கிகளை எல்லாம் துரிதமாக வசூலிக்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. வரியும், கடனும் சேர்த்து 12 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாட்டில் இருக்கிறது. இப்படி எல்லா மாவட்டங்களிலும் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் அரசே நடைபெறாது. ஆகவே அந்தக் கோரிக்கை நியாயமானதல்ல என்று கூறிக்கொண்டு பிரிவுகள் வரும்போது உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தால் அது பற்றித் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். 63-க்குப் பிறகு வெளியேற்றப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்று





[திரு. ப. உ. சண்முகம்]

சொன்னார்கள். அங்கு வேறு குத்தகைதாரர்கள் குடியேற்றப் பட்டிருப்பார்கள். ஆகவே அது இயலாத காரியம். 1—3—1972-ல் இருந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும். இதில் எல்லா விதமான பாதுகாப்பும் இருக்கிறது. விவசாயிகளுக்குப் பாதகமான பிரிவுகள் இந்தச் சட்டத்தில் எதுவும் இல்லை. எனவே இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment of Thiru Palanisami was, by leave, withdrawn.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி ;

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (தணிப்பு) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு என் பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2 was put and carried.

*Clause* 3.

MR. SPEAKER : The question is—

'That clause 3 do stand part of the Bill'.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker. Sir. **I move the following amendment to Clause 3—**

'In clause 3 of the Bill—

(*a*) in sub-clause (1) (*a*) (ii). *add* the word 'or' at the end;

(*b*) after the same sub-clause. *insert* the following, **namely—**

(iii) is deemed to have paid or deposited under this **Act.**';

(c) In sub-clause (2), *for the words* '**upon deposit in the court or before the competent authority, or upon proof by the cultivating tenant of the payment, of the current rent**', *substitute the words* '**if the cultivating tenant pays or deposits, or has paid**

[Thiru P. U. Shanmugam]

or deposited, or is deemed to have paid or deposited, under this Act, the whole of the current rent and on the application of the cultivating tenant';

(*d*) in sub-clause (3), *for the expression* 'upon deposit in the court or before the competent authority, or upon proof by the cultivating tenant of the payment, of the current rent within the period specified in clause (a) (ii) of sub-section (1)', *substitute the expression* 'if the cultivating tenant pays or deposits, or has paid or deposited, or is deemed to have paid or deposited, under this Act, the whole of the current rent.'

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment, namely:—

'(i) in sub-clause (1) (*a*) of clause 3 for the letters and words '30th June 1971', *substitute* the letters and words '30th June 1972'.

(ii) In item (ii) of sub-clause (1) (*a*) of clause 3, *for the words and figures*, "the whole of the rent due for the fasli year commencing on the 1st July 1971 and ending with the 30th June 1972" *substitute the following*: "the whole of the rent due for any four fasli years commenced before 1st July 1971 or the whole of the rent due for the fasli year commencing on the 1st July 1971 and ending with the 30th Junr 1972".

The amendment was duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move my amendment, namely:

*Add* the following proviso at the end of clause 3: "Provided small holders of lands possessing less than 3 (three) acres of lands shall be exempted from the provisions of the Act."

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்தத் திருத்தத்தின் நோக்கம் 3-4 வருஷம் குத்தகை இல்லை, அவர்கள் கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும், இந்த வருஷம் மழை இல்லை என்று சொன்னாலும், அவர்களுக்கும் அந்தப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது திருத்தம். அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும்.



THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, so far as these amendments are concerned, I would like to say a few words. As regards the Government amendment, it is stated—

'If the cultivating tenant pays or deposits, or has paid or deposited, or is deemed to have paid or deposited.........'

I am not able to understand the expression 'deemed to have paid or deposited'. Supposing you want to know whether a cultivating tenant has paid or deposited the rent, he must produce some proof in that regard. Otherwise, how can the court come to the conclusion that he is deemed to have paid or deposited? This is definitely a vague term and I want to know from the Hon. Minister, what are the guide lines in regard to this matter, and why this expression has been used.

So far as my amendment is concerned, even while speaking on the Bill, I have stated that the small landholders possessing less than three acres of land must be exempted from the provisions of the Bill. But the Hon. Minister is not willing to exempt them. Then my prayer is that at least they should be exempted from the payment of land revenue, water cess, local cess, etc., because they depend upon the rent that the cultivating tenant pays for the payment of these taxes. So to meet this expenditure, the Government should exempt them from the payment of these taxes.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். இந்த ஆண்டு பசலியில் முழுவதும் இன்றி, அடுத்த பசலியிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ளலாம் என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பழனிசாமி அவர்கள் திருத்தம் கொடுத்து இருக்கிறார்கள். அடுத்த பசலிக்கு என்று வைத்துக்கொண்டால், நடைபெறுகிற ஆண்டுக்கும் குத்தகை பாக்கி இல்லாமல் போய்விடக்கூடும். அது கூடாது என்பதற்காகத் தான், நடைபெறுகிற ஆண்டு குத்தகைப் பாக்கியை கொடுத்து விட்டால், இதற்கு முந்தைய 4 ஆண்டுகளுக்குள் இருக்கும் பாக்கியை கொடுத்துவிட்டதாகக் கருதப்படும் என்ற அந்த நோக்கத்தோடு போடப்பட்டிருக்கிறது. கொள்கையில் சிறு வித்தியாசமே தவிர சட்டத்தில் முரண்பாடு இல்லை. அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவு சரியானது என்று சொல்லிக் கொள்கிறேன்.

[1972 ஏப்ரல் 3

[திரு. ப. உ. சண்முகம்]

அம்மையார் அவர்கள் பேசும்போது, டீம்ட் டு ஹாவ் பேய்ட், ஆர் டெபாசிடெட் என்றால் என்ன என்று கேட்டார்கள். சென்ற ஆண்டு குத்தகை பாக்கியை 1—7—1971-க்குப் பிறகு இப்போது கொடுத்திருந்தால், கொடுத்திருக்கலாம், அவர்கள் எல்லாம் ஏற்கனவே உள்ள பாக்கியைக் கொடுத்துவிட்டவர்களாக கருதப் படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே வேறு ஒன்றும் இல்லை. ஆகவே, அரசாங்கத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the Hon. Minister has not given me an assurance that the small landholders will be exempted from the payment of land revenue, etc., and I do not know what is running in their mind.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I am very clear about it and there is nothing running in our mind. The Government do not have such a proposal.

MR. SPEAKER : Is the hon. Member pressing her amendment?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I cannot.

The amendment was, by leave, withdrawn.

**Clause 3, as amended**, was put and carried.

*Clause* 4.

MR. SPEAKER : The question is—

'That Clause 4 do stand part of the Bill'.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move the following **amendment :**



[Thiru P. U. Shanmugam]

1972 ஏப்ரல் 3]

'In clause 4 of the Bill.—

(a) in sub-clause (1), *for the words* " or any order of court or competent authority ", *substitute the words* " and in cases of payment through or deposit before the court or the competent authority, it shall, on the application of the cultivating tenant, reopen the proceeding and pass an order that the rent so paid or deposited shall be deemed to have been paid or deposited towards the current rent ";

(b) in sub-clause (2), *for the words* " notwithstanding anything to the contrary contained in any order of court or competent authority ", *substitute* the words " and thr court or the competent authority shall, on the application of any person affected by such **decree or order, whether or not** he was a party thereto, reopen the proceeding and pass an order that the a mount so paid or deposited shall be deemed to have been paid or deposited towards the current rent ".

The *Government* amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

*Clause* 5.

MR. SPEAKER : The question is—

'That Clause 5 do stand part of the Bill'.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, என்னுடைய திருத் தத்தை முன் மொழிகிறேன்.

'In sub-clause (1) of clause 5, for the words " six months " *substitute* the words " nine months ".'

[திருமதி த. ந. அனந்தநாயகி]

[1972 ஏப்ரல் 3

**திருத்தம் முறையாக வழி மொழியப் பட்டது**

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஆறு மாதத்திற்குள் குத்தகை பாக்கியை கொடுத்துவிட வேண்டுமென்று மசோதாவில் இருக் கிறது. நான் 9 மாதம் என்று போடவேண்டுமென்று சொல்லி

யிருக்கிறேன். காரணம் 9 மாதம் முடிவிற்குள் குறுவை அறுவடை வரும். குறுவை அறுவடை வந்தால் விவசாயிகள் குத்தகை அளக்க வசதியாக இருக்கும். இப்போதே கோர்ட்டுக்கு இழுத்து விட்டால், கரண்ட் பசலிக்கு கொடுக்க முடியாமல் போய்விடும், இப்போதே ஏகப்பட்ட ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். 6 மாதத்திற்குள் குத்தகை கொடுக்காவிட்டால் அவர்கள் வெளி யேற்றப்பட்டு விடுவார்கள். 9 மாதத்திற்குள் என்று வைத்து விட்டால், கரெண்ட் பசலிக்கு விவசாயிகள் கொடுத்து விடலாம். இது நடைமுறைச் சிக்கல்தான். அதைத்தான் கூறினேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 6 மாதம் என்பதை 9 மாதம் என்றுக்குவதிலே அரசாங்கத்திற்கு சிக்கல் இல்லை. நாம் அறிவித்த 1—7—1971-க்குப் பிறகு கொடுத்திருந் தால், நடைபெறுகிற பசலிக்கு கொடுத்து விட்டதாகக் கணக்கு வந்து விடும். அதற்குப்பிறகு தாளடி, சம்பா வருகிறது. அவா களுக்கு அடுத்த ஒரு பசலிக்கு கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, 9 மாதம் என்று போடவேண்டியதில்லை. தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளைக் கேட்ட பிறகுதான் 6 மாதம் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். 6 மாதம் என்று இருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களின் திருத்தம். பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே. என்னுடைய திருத்தத்தை முன்மொழிகிறேன்.

Clause 5 was put and carried.

Clause 6 was put and carried.

*Clause 7.*

MR. SPEAKER : The question is—

'That Clause 7 do stand part of the Bill.

'In sub-clause (1) of Clause 7, for the words and figures "1st Mach 1972" substitute the words and figures "20th April 1968".'

The amendment was duly seconded.





THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :

'In sub-clause (1) of Clause 7, for the words and figures "1st March 1972" substitute the words and figures "1st March 1968".'

The amendment was duly seconded.

THIRU A. R. MARIMUTHU : Sir, I move the following amendment :

'In sub-clause (1) of Clause 7, for the words and figures "1st March 1972", substitute the words and figures "1st March 1971".'

The amendment was duly seconded.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இதற்கு முன்னால் விவரமாகப் பேசியிருக்கிறோம். மறுபடியும் அதையே சொல்ல வேண்டியிருக்கிறது. 1968-ம் வருஷத்திற்குப் பிறகு நிறைய பேர் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். வெளியேற் றப்பட்ட அந்த நிலத்தில் நிலச்சொந்தக்காரர்களே சொந்த சாகுபடி செய்திருந்தால், வெளியேற்றப்பட்டவர்களுக்கு கொடுக்கும்படி கேட்கலாம். நிலத்தை வேறு நிலம் இல்லாத விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்தால், அவர்களே சாகுபடி செய்திருந்தால், அவர்களை வெளியேற்றவேண்டிய அவசியம் கிடையாது. அந்த முறையில் சட்டத்தை ஒழுங்குபடுத்தலாம். என்னுடைய ஆலோசனை என்னவென்றால், இப்போது மார்ச்சு மாதம் முடிகிறது. பிப்ரவரி மாதம் வரையிலும் வெளியேற்றப் பட்டவர்கள் ஏகப்பட்ட பேர்கள் இருக்கிறார்கள். ஜூலை மாதத்தில் குறுவை விவசாயம் செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது ரெவின்யூ போர்டில் வழக்கு போட்டு குறுவை சாகுபடி அறுவடை செய்யாமல் செய்து இருக்கிறார்கள். சம்பா மகசூலை அறுவடை செய்யாமல் ஏகப்பட்ட பேர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி ஆபத்து இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும். இந்த வருஷம் உழுத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்படவில்லை. மார்ச்சு மாதம் முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறகு யாரும் வெளியேற்றப்பட

வில்லை. சட்ட அமைச்சர் கூட யாரையும் வெளியேற்றக்கூடாது என்று நிர்வாக சம்பந்தப்பட்ட வரையிலும் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இப்போது அந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப் படவில்லை. அம்மாதிரியான ஒரு நிலை இருந்தது. ஆகவேதான் வெளியேற்றப்படவில்லை. வெளியேற்றப்படாமல் இருப்பது நல்லதுதான். இருந்தபோதிலும், இந்த வருஷம் சாகுபடி செய்த விவசாயிகள் இருக்கிறார்களே, அவர்கள் இந்த அரியர்ஸைக் கொடுக்கவில்லை என்பதற்காக வெளியேற்றப்பட்டால், அவர்களுக்கு நிலம் கொடுக்கக்கூடிய அளவுக்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய திரு. சுப்பையா அவர்கள் கூறிய கருத்துக்களை முழுக்க முழுக்க நான் ஆதரிக்கிறேன். இம்மாதிரி ஒரு வருட காலத்தில் வெளியேற்றப்பட்டு, அவர்கள் அந்த நிலத்தை சொந்த சாகுபடி செய்துகொண்டிருந்தால், அந்த நிலத்தையாவது அம்மாதிரி வெளியேற்றப்பட்டவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். வேறு யாராவது நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தால், அதை எடுக்க வேண்டியதில்லை. அந்த அளவுக்காவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: தலைவர் அவர்களே. 1968-ல் பாக்கி கொடுக்காமல் இருப்பவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்க வேண்டும் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். இப்பொழுது அதைச் சொல்லவில்லை. ஏனெனில், அதனால் ஏராளமான சிக்கல்கள் ஏற்படும் என்று சொல்லப்பட்டது.

இந்தப் பசலி பாக்கியைக் கொடுத்துவிட்டால், அவர்களுக்கு நிலம் நிச்சயம் கிடைக்கும் என்ற அளவுக்காவது ஏற்பாடு செய்ய வேண்டும். 1972 மார்ச்சுக்கு முன்பு பாக்கியில் ஒரு பாதியை கொடுத்திருக்கலாம். 1972-ம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்கு முன்பு நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கலாம். இந்தப் பசலிக்குச் சேரவேண்டிய பாக்கியில் ஒரு பாதியை முன்னால் கொடுத்திருந்தும், பாக்கி பாதியை கொடுக்கவில்லை என்பதற்காக லாண்டு லார்ட்ஸ் எவிக்ஷன் ப்ரொஸீடிங்ஸ் எடுத்து குத்தகைதாரர்கள்



மார்ச்சுக்கு முன்பு வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்களுக்கு நிலம் கிடைக்கும் என்ற முறை இல்லை. இதைச் சற்று கூர்ந்து கவனிக்கவேண்டும். ஒருவர் இந்தப் பசலி குத்தகைக்கு ரூ. 1,000 கொடுக்கவேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அதில் பாதிப் பணத்தை ரூ. 500 கொடுத்துவிட்டால், மிச்சம் ரூ. 500 கொடுக்க முடியாத நிலையில், அதன் காரணமாக 1972 மார்ச்சு மாதத்திற்கு முன்னால் அந்த விவசாயிமீது நடவடிக்கை எடுத்து அவன் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கலாம். 1972 மார்ச்சுக்குப் பின் எந்த நிலச்சொந்தக்காரரும் நடவடிக்கை எடுத்து, வார குத்தகைதாரரை நிலத்தை விட்டு வெளியேற்ற முடியாது. ஆனால், 1972 மார்ச்சுக்கு முன்னால் நடவடிக்கை எடுத்து வெளியேற்றப் பட்டிருந்தால் அந்த ஒரு காரணத்திற்காக அப்படி வெளியேற்றப் பட்டவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்காது. இந்தப் பசலிக்கு இருக்கும் பாக்கியை கொடுத்தால் மட்டும் போதும் என்று நாம் சொல்கிறோம். இந்தப் பசலி ஆரம்பத்தில் யாராவது வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்களுக்கெல்லாம் இந்தச் சலுகை கிடைக்கச் செய்தால் மிகவும் நலமாக இருக்கும் என்ற கருத்தை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு தகவல் அறிய விரும்புகிறேன். இந்த மசோதா பற்றிய அறிவிப்பு வந்ததற்கு அப்புறம் கூட திருநெல்வேலி மாவட்டத்தில் சிவன்புரம் என்ற கிராமத்தில் இனாம்தார்கள் 56 விவசாயிகளை வெளியேற்றியிருக்கிறார்கள். 27—3—1972 அன்று தேதியிட்டு ரிகார்டு வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட கேஸ்களைப்பற்றி உடனுக்குடன் அரசு கவனம் செலுத்தி, வெளியேற்றத்தை ரத்து செய்வதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இனாம்தார்கள் பிரச்னை வேறு. தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

வெளியேற்றத்தைப்பற்றி நாம் போட்டிருப்பது என்ன வென்றால், நம் கொள்கையை நாட்டிற்கு அறிவித்ததற்குப் பின்னாலே, இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலே வெளியேற்ற

[திரு. செ. மாதவன்]

யாராவது முயற்சிப்பார்களேயானால், அது தவறு. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இது போடப்பட்டது. முன்கூட்டியே வெளியேற்றியிருந்தாலும் தவறு தான். அவர்களுக்கும் சலுகை கொடுக்க வேண்டும் என்று சலுகையாகக் கேட்பது தவறு இல்லை. 1972-ம் ஆண்டு மார்ச்சு 1-ம் தேதிக்கு முன்னால் அன்றைக்கு இருந்த சட்டப்படி வெளியேற்ற நடவடிக்கை எடுத்து, வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்களுக்கும் நாம் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்பதிலே ஆட்சேபணை இல்லை. நாம் அப்படி பாதுகாப்பு கொடுப்பதினால் ஏராளமாக லிட்டிகேஷன்ஸ், வழக்குகள் வருவதற்குத்தான் வழி வகுக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதைப்போலவே இப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கின்ற காரணத்தினால் சில பேர்களுக்கு தவறு ஏற்படும், பாதகம் ஏற்படும் என்று ஒரு வாதத்தைக் கூறினார்கள். பாதி முன் கூட்டியே கொடுத்திருந்தால், மார்ச்சுக்கு முன்னாலேயே கொடுத்திருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்களுக்கு மட்டும் சலுகை இல்லாமல் போய்விடுகிறதே என்று சொன்னார்கள். அது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்த அளவில் இம் மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அத்தனை பேர்களையும் இதில் சேர்த்து எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுப்பது என்றால், ரொம்ப சிரமம். நாம் சொல்லக்கூடியதெல்லாம், 1972-ம் ஆண்டு மார்ச்சு முதல் தேதி நாம் இப்படிப்பட்ட கொள்கையை அறிவித்தோம். நாம் அப்படி அறிவித்ததற்குப் பின்னாலே, இப்படி ஒரு சட்டம் வரப்போகிறது என்று அவர்கள் முன்கூட்டியே தெரிந்து கொண்டு, வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பார்கள், அதற்கு மட்டும் பாதுகாப்பு கொடுப்பது என்பதுதான் நியாயமாக இருக்கும். முன்னாலே வெளியேற்றப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பது சலுகை என்ற முறையிலே கேட்கலாம் என்றாலும், அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு, அதை ஒத்துக்கொண்டு சட்டமாகக் கொண்டு வரும் பொழுது, 1968-ம் ஆண்டிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களையும்



[திரு. செ. மாதவன்]

சேர்த்துக் கொண்டு வந்தால், ரொம்ப பாதகம் ஏற்படும். ஏராளமான லிடிகேஷன் ஏற்படும். அதில் பலன் கிடைக்காத சூழ்நிலை ஏற்படும் என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்காகத்தான் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சலுகை கொடுத்திருக்கிறோம். 'டைம் டு ஹாவ் பின் பெய்டு' என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருக்கிறோம். இந்தப் பசலி ஜூலை முதல் தேதி ஆரம்பிக்கிறது. நாம் இப்பொழுது ஏப்ரலில் இருக்கிறோம். இன்னும் இந்தச் சட்டமுன்வடிவு சட்டம் ஆவதற்கு ஒரு மாதம் ஆகலாம். மத்திய அரசு அனுமதி பெற்று சட்டமாவதற்குள் இத்தனை மாதங்கள் கடந்து விடுகின்றன. இத்தனை மாதங்களுக்குள்ளாக ஒரு விவசாயி இந்தப் பாக்கியைக் கொடுத்திருந்தால், அந்தப் பாக்கியை வேண்டுமென்றோ அல்லது இயல்பாகவோ அந்த நிலச்சுவாந்தார் முன்னால் பாக்கியுள்ள பாக்கிக்காக வரவு வைத்துக்கொண்டு, கரெண்டு பசலிக்குக் கொடுக்கவில்லை, இந்தப் பசலிக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லக்கூடிய ஒரு வாதம் வந்துவிடுமோ என்பதை உணர்ந்து தான், 'டைம் டு ஹாவ் பீன் பெய்டு' என்ற வார்த்தைகளைப் போட்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு கொடுத்திருந்தால், ஜூலை மாதத்திற்குப் பின்னாலே கொடுத்திருந்தால், அது பழைய பசலிக்கு என்று வைத்துக்கொண்டாலும் கூட, அதையும் இந்த ஆண்டு கொடுத்ததாக எடுத்துக்கொள்ளவேண்டும், அப்படி எடுத்துக்கொண்டு பழைய பாக்கியை ரத்து செய்யவேண்டும் என்று இப்பொழுது போட்டிருக்கிறோம். பழைய சட்டங்களைப் படித்துப் பார்த்தால் தெரியும். 1948-ம் ஆண்டு சட்டம், 1963-ம் ஆண்டு சட்டம், இப்படிப்பட்ட சட்டங்களிலெல்லாம் இதைப்போன்ற வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் நினைவுபடுத்துகிறேன். இங்கே கேட்டுக்கொண்டபடி 1968-ம் ஆண்டிலிருந்து அல்லது 1972-ம் ஆண்டுக்கு முன்னால் பாதி கொடுத்திருந்தால், அவர்களுக்கும் இந்தச் சலுகையை கொடுக்கவேண்டும் என்றால், அதிலே பல சிக்கல்கள் ஏற்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோருகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் சிவன்புரம் இனும் கிராமத்தில் குத்தகை பாக்கிக்காக 56 விவசாயிகள் வெளியேற்றப் பட்டிருப்பதைப் பற்றி கூறினேன். அவர்கள் நிலைமையும் இந்தப் பாதுகாப்பிற்குள்ளே வருமா என்பதைப்பற்றி தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இனும் நிலங்களைப் பொறுத்த வரையில் இனும் சட்டம் கொண்டுவரும்பொழுது பழைய பாக்கியை கொடுத்து விட்டால் வெளியேற்ற முடியாது. இப்போது இனும் சட்டத்தின் கீழ் யாருக்கு பட்டா என்பதுதான் பிரச்னை, யாருக்குப் பட்டா என்ற பிரச்னை இருக்கும்பொழுது இனும் சட்டத்தின்கீழ் அவரை குத்தகைதாரர் என்று கூறி வெளியேற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி குறிப்பு எழுதி அனுப்பினால், அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம். இனும் சட்டத்தின் கீழ் ஒருவரை ரயட்டி என்று கருதி, அவரை குத்தகைதாரர் என்று கருதி, யாராவது வெளியேற்றிருந்தால் தவறுதான். நெல்லை மாவட்டத்தில், இப்படிப் பட்ட பல தவறுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நீதிமன்றத்திற்குச் சென்று அந்தச் சட்டத்தையே ஸ்டே செய்துவிடுகிறார்கள். அம்பா சமுத்திரம் தொகுதியில் அடிக்கடி இந்தத் தகராறு உள்ளது. ஸ்டே இருக்கும் பொழுது குத்தகைதாரர் என்று கருதிக்கொண்டு வெளியேற்றப்படுகின்ற முயற்சியில் ஈடுபட்டு நீதி மன்றத்தில் வழக்குகள் நடக்கின்ற காட்சியைக் காண்கிறோம். தகவல்களை அரசாங்கத்திற்குக் கொடுத்தால், அரசாங்கம் சாத்தியப் படுகின்ற அளவுக்கு உழுகின்ற விவாசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியும், அவர்களுக்கு கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. கு. சுப்பையா.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸார், நாங்கள் சொன்ன கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அமைச்சர் அவர்கள் கூறிய பதில் எங்களுக்கு சமாதானமாக இல்லை. ஆகவே, நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.





திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

Clause 7 was put and carried.

Clauses 8 to 12 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move :

"**That the Tamil Nadu Cultivating** Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972), as amended, be passed."

The motion was put and carried, and the Bill, as amended, was passed into law.

## (6) அரசினர் தீர்மானம்.

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் 'அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பில், (8) மற்றும் (3) எண்கள் உள்ள சட்டமுன் வடிவுகளை, 7-ம் எண் உள்ள சட்டமுன்வடிவுக்கு முன்னதாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(ஓ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரித் தண்டல் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 12/1972).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரித் தண்டல் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1864-ம் ஆண்டு வரித்தண்டல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1864) 52-வது பிரிவின் கீழ் நிலவரி நீங்கலான ஏனைய வரி பாக்கிகளும், மாநில அரசுக்குச் சேர வேண்டிய மற்றெல்லாத் தொகைகளும், நிலவரி பாக்கியைப் போலவே வசூலிக்கப்படலாம். சென்னையில் உள்ள தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் போன்ற ஓரளவு அரசுப் பங்கு பெற்ற நிறுவனங்களுக்கு சேரவேண்டிய தொகைகளுக்கும், போருக்கு பிந்திய பணிகள்--மறுவாழ்வு நிதி, முன்னாள் படையினர் மறுவாழ்வு சிறப்பு நிதி ஆகியவற்றில் தமிழ்நாட்டிற்குள்ள ஒருங்கிணைந்த பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட கடன்களையும், முன் பணங்களையும், வசூலிப்பதற்கும் இந்த விதி பொருந்தாது. சென்னையில் உள்ள தமிழ்நாடு வேளாண்--தொழில் கழகம் அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படக் கூடிய அத்தகைய பிற கழகங்கள் எவருக்கேனும் கொடுத்த அல்லது போருக்கு பிந்திய பணிகள்--மறுவாழ்வு நிதி, முன்னாள் படையினர் மறுவாழ்வு சிறப்பு நிதி ஆகியவற்றில் தமிழ் நாட்டிற்குள்ள ஒருங்கிணைந்த பங்கிலிருந்து எவருக்கேனும் கொடுக்கப்பட்ட கடன்களையும் முன் பணங்களையும் வசூலிப்பதற்கு திறனுள்ள வழிமுறை எதுவுமில்லை.

எனவே, மேற்கூறிய தொகைகளை நிலவரி பாக்கியைப் போலவே வசூலிப்பதை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்நாடு 1864-ம் ஆண்டு வரித்தண்டல் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம்

* 29—3—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2/1864) புதிய விதித்துறை ஒன்றை அமைத்துக் கொள்வதன் மூலம் அச்சட்டத்தை திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்டமுன்வடிவு மேற்கண்ட நோக்கத்தை எய்த விழைகிறது.

இதனைப் பேரவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER : There are no amendments.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move :

"That the Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972) be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

**(ஔ) 1972-ஆம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (கால வரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு.**

THE HON THIRU S. J. SADIQ PASHA : Sir, I move :

"That the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, * 1972 (L.A. Bill No. 5 of 1972) be taken into consideration.

The Public Wakfs (Extension of Limitation) Act, 1959 (Central Act 29 of 1959) as subsequently amended extends the period of limitation in certain cases for suits to recover possession of immovable property forming part of public wakfs up to the 31st December 1970. Though, availing this provision, a number of

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 23rd March 1972.

[1972 ஏப்ரல் 3

Thiru S.J SADIQ PASHA

suits have already been filed, there are number of cases in which suits have yet to be filed. It is, therefore, considered necessary that the time limit for filing such suits in this State should be extended up to the 31st December 1972. The present Bill seeks to achieve the above object.

Sir, I commend the motion for acceptance of the House.

MR. SPEAKER: Motion moved:

"That the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 (L.A. Bill No. 5 of 1972) be taken into consideration."

* **திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** பேரவைத் தலைவர்களே, தமிழ்நாட்டில் சுமார் ஏறக்குறைய 150 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள வக்ப் சொத்துக்கள் தனியார் வசம் தற்போது இருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த அறநிலைய மசோதாவின் மீது பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் இஸ்லாமிய அறநிலையங்கள் பற்றி பேசுவதற்கு வாய்ப்பில்லாததால் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு சில விஷயங்களை அமைச்சரவர்களின் கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே பேரவைத் தலைவர்கள் சற்று அவகாசம் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசவேண்டும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** 31—12—1970 வரை காலகெடு நீடித்திருப்பதை காலவரையின்றி நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் காலவரையற்ற சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வக்ப் சொத்துக்களைத் தனியார் கையாள்வதில் ஊழல் மிகமிக அதிகமாக உள்ளன. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் சென்னையில் உள்ள ராமராவ் தோட்டத்தில் அமீருன்னிசா பேகம் கபர்ஸ்தானில் மாபெரும் சொத்துகள் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு 5 டிரஸ்டிகள் இருக்கிறார்கள். ஜனநாயக சட்டங்களுக்கு விரோதமாக இந்த 5 டிரஸ்டிகளும் ஆயுட்கால டிரஸ்டிகளாக இருக்கிறார்கள் என்பது வேறெங்கும் காணாத விநோதமாக இருக்கிறது. இதற்கு மாறாக வக்ப் டிரஸ்டிகள் என்றால் குறிப்பிட்ட காலத்திற்கு 3 அல்லது 5 ஆண்டுகள் தான் இருக்கும் முறையில் சட்டத்தை அமைக்க வேண்டும். அதற்கு மாறாக இங்கு ஆயுள்



1972 ஏப்ரல் 3]

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

காலத்திற்கும் இருந்து வருவதால் அவர்கள் செய்யும் ஊழல் எல்லையே இல்லாமல் போய்விட்டது. வக்ப் சொத்துக்களை நிர்வகிக்க ஒரு ஸ்கீம் தயாரித்து, அந்த மஸ்ஜிதுகளோ, அல்லது தர்காவோ, அல்லது பள்ளிக்கூடமோ, எந்த ஏரியாவிலே இருக்கிறதோ, அந்தப் பகுதியில் வாக்காளர் ஜாபிதாவில் உள்ள முஸ்லீம் வாக்காளர்கள் வாக்கு கொடுக்க, தகுதி பெற்றவர் ஒருவர் தேர்தலுக்கு நின்று டிரஸ்டியாக வரும் அளவிற்கு, மூன்று அல்லது ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒரு முறை என்ற அளவுக்கு **ஒரு ஸ்கீம் கொண்டுவரவேண்டும். ராமராவ் தோட்டத்திலுள்ள** அமீருன்னிசா பேகம் கபர்ஸ்தானில் 5 டிரஸ்டிகளும் ஆயுட்கால டிரஸ்டிகளாக இருப்பதால் இன்று 2 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் பெரும் ஊழல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, இந்த வக்பில் உள்ள மஸ்ஜிதுக்கோ, கபர்ஸ்தானுக்கோ, முஸ்லீம் மக்களுக்கோ பயன் இல்லாத அளவிற்கு நிர்வகித்து வருவதாகவும் முழு சொத்துக்களையும் பாதித்துக் கொண்டிருப்பதாகவும் பொது மக்களிடத்தில் பரவலான குறை இருந்து கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்த சட்டத்தில் போதுமான வழியில்லை என்பதை தாழ்மையுடன் குறிப்பிடுகிறேன்.

**ராமராவ் தோட்ட கபர்ஸ்தானில் ஒரு பணக்காரர் தனக்கு** சமாதி, அடக்கம் செய்து கொள்வதற்கு ரூ. 350 கட்டணம் கேட்கப்படுகிறது. 350 ரூபாய் கட்டணம் வாங்கிக் கொண்டு ஒரு பணக்காரருக்கு நிலையான ஒரு இடம் கொடுக்கப்படுகிறது. ஒரு ஏழைக்கு அந்த வசதியில்லை. நான் அந்த அடக்க ஸ்தலத்திற்கு சென்று பார்த்தேன். பணக்காரர்களுக்கு ஒரு பக்கம்; ஏழைகளுக்கு ஒரு பக்கம். மனிதன் உலகத்தில் வாழும்போது தான் **பணக்காரனுக்கு தனி இடம், ஏழைகளுக்குத் தனி இடம் என்று** இருக்கிறது. ஆனால் இங்கே மௌத் ஆன பிறகு இறுதி இடத்திலும் பணக்காரர்—ஏழை என்ற வித்தியாசம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். **ஆகவே இப்படிப்பட்ட, இஸ்லாமிய சட்ட திட்டங்**களுக்கு விரோதமான முறையில் இஸ்லாமிய வக்ப் சொத்துக்கள் **நிர்வகிக்கப்படுகிறது.** இந்த **அக்கிரமங்களை ஒழித்துக்கட்ட** சட்டங்கள் கொண்டு வரவேண்டும். ஏனென்றால் **கோடிக் கணக்கான** ரூபாய்கள் எந்த **புனிதமான நோக்கங்களுக்காக** மக்கள் நல்வாழ்வுக்காக, மஸ்ஜிதுகள் போன்ற அறநிலையங்களுக்கு **ஒதுக்கப்பட்டனவோ,** அவைகள் இன்றைக்கு குறையாடப்படு

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

கின்றன. கொள்ளையடிக்கப்படுகின்றன. இவைகளை அரசும், முஸ்லீம் சமுதாயமும் பார்த்துக் கொண்டிருப்பது பொருத்தமற்றது. ஆகவே உரிய சட்டங்கள் கொண்டு வரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிதம்பரம் லல்கான் மஸ்ஜிதில் சில சொத்துக்களை முன்பிருந்த முத்தவல்லிகளும் சில தனியாரும் தங்களுக்கு சொந்தம் என்று வைத்து தங்கள் சொத்துக்களாக செய்து கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு கேள்வி எழுப்பினேன். அந்தக் கேள்வி எனக்கே திரும்பி அனுப்பப்படுகிறது, "சிதம்பரம் நகர் எங்கே இருக்கிறது?" என்ற குறிப்புடன். நான் டிபார்ட்மெண்டுக்கு சொல்லவேண்டியது சிதம்பரம் எங்கே இருக்கிறது என்று? ஐந்தாம் கிளாஸ் பையனைக் கேட்டால் கூட சிதம்பரம் எங்கே இருக்கிறது என்று சொல்வான்.

சென்னை நகரில் மற்றொரு வக்ப் அன்ஜுமனே கயர் காஹெ குர்பயே இஸ்லாம், முஸ்லீம் ஏழைகள் நலம் விரும்பும் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்தச் சங்கத்தின் சொத்துக்கள் கணக்கு சொல்லப்படுகிறது. 1955-ஆம் வருட ஆடிட் ரிப்போர்ட் படி ரூ. 67,000 மதிப்புள்ள சொத்துக்களும் ரொக்கம் ரூ. 31,611 ஆக ரூ. 98,611 ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபாய் அவர்களிடத்தில் இருக்கிறது. இன்றைய மதிப்பீட்டின்படி ரூ. 6 லட்சம் பெறுமென்று சொல்லப்படுகிறது. அநாதைகளாக யாராவது இறந்துவிட்டால், வழியில், ஆஸ்பத்திரியில் கேட்பாரின்றி இறந்து போனால் ஒழுங்காக அவர்களை இஸ்லாமிய மார்க்க நெறிக்கேற்ப அடக்கம் செய்யவேண்டும் என்பது அந்த திட்டத்தின் நோக்கம். இதுவரை அந்தமாதிரி எத்தனை அனாதை சவங்களை இச்சங்கம் புதைத்துள்ளது என்று கணக்கு உண்டா? முழுக்க முழுக்க அந்த சொத்துக்களை டிரஸ்டிகளில் சிலர் தின்று கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. அதற்கு 34 டிரஸ்டிகள் என்று சொல்லப்படுகிறது. 5 பேர் கூடினால் 'கோரம்' போதும் என்று இருக்கிறது. அந்த 5 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு 5 பேர் கையெழுத்துப் போட்டு இப்படி கொள்ளை அடிக்கப்படுகிறது, என்று சொல்லப்படுகின்றது. அவைகள் புனிதமான சொத்துக்கள் என்பதை அரசுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

பிற்பகல் 1-50

மேலும் சையதனு பீபி தர்காவில் பள்ளிவாசல் கட்டப்படுவதற்கு வக்ப் போர்டிலிருந்து அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அது எப்போது கட்டப்படும் என்று தெரியவில்லை. அதைப்பற்றியெல்லாம் இங்கே ஒன்றும் சொல்லப்படவில்லை.

அடுத்து, மருநிகள் பணத்தினை கொள்ளையடிப்பவர்கள் ஒருபுறம் இருக்கிறார்கள். மற்றொருபுறம் நியாயமான இறைபக்தி உள்ள முஸ்லிம்களின் வழிபாட்டிற்காகப் பள்ளிவாசல்களை நிர்மாணிப்பதற்கு ஆண்டிற்கு இரண்டாயிரம், மூவாயிரம் என்று பொதுமக்களிடம்—நல்ல உள்ளம் கொண்டவர்களிடம் நன்கொடை பெற்றால் அதிலே அரசாங்கம் பங்கு கேட்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இருக்கின்ற சட்டப்படி காண்டிரிபியூஷன் பெற்றாலும் அரசாங்கத்திற்கு அதில் ஒரு சிறு தொகை செலுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற வக்ப் போர்டு, கடமையை மீறி கொள்ளையடிப்பவர்கள் யாராவது இருந்தால், எங்காவது தவறு நடந்தால், அதைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கையை மேற்கொள்கிறது. அந்த முறையில் ஏதாவது தவறு இருந்தால் அங்கத்தினர் அவர்கள் சுட்டிக்காட்டலாம். இப்போது வந்திருக்கிற சட்டம் வழக்குப் போடுவதற்கான கால அளவை எக்ஸ்டென்ட் பண்ணுவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம். அதைப்பற்றி தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் பயனுள்ளதாக இருக்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இன்றைக்கு வழக்குப் போடுவதற்கான காலத்தை நீட்டித்துவிட்டு, நடக்கக்கூடியத் தவறுகளை தடுக்கமுடியாமல் போனால், அதற்கு ஒரு வாய்ப்பு இல்லாமல் போனால், அதனால் என்ன பயன் ஏற்படப் போகிறது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது). இதைப் பற்றி பேசுவதற்கு அதிக நேரம் இல்லாமையால் இன்னும் ஓரிரு கருத்துக்களைச் சொல்லிவிட்டு ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இப்போது பள்ளிவாசலுக்காக வசூலிக்கப்படும் நன்கொடையில் 6 சதவிகிதம் அரசாங்கம் வசூலித்துவிடுகிறது. இது நியாயம் அல்ல. அமைச்சரவர்கள் தவறு நடந்தால் சுட்டிக்காட்டச் சொல்கிருர்கள். இங்கே ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் கூற விரும்புகிறேன். 1—3—1971 தேதியிட்ட ரசீதுபடி ராமராவ் தோட்டத்தில் நிரந்தர கபர்சான் கட்டுவதற்கு ரூ. 350 நன்கொடை வசூலித்திருக்கிருர்கள். ஆனல் இன்னும் சில தொகைகள் இம்மாதிரி கப்ர்களுக்காக வசூலித்தவை காட்டப்படவில்லை. இதை (ரசீது) அமைச்சரிடம் தந்துவிடுகிறேன். 10—2—1971-லே 143-ம் நம்பர் ரசீதுபடி ரூ. 361.81 வட்டி வசூலித்திருக்கிருர்கள். இது இஸ்லாமிய தத்துவத்திற்கு முரணானது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டி வாங்குவதைப் பற்றி, தங்கள் கருத்தினை வக்ப் போர்டு மூலமாக அல்லது மதத் தலைவர்களுடன் பேசி, முடிவான நடவடிக்கைகளை எடுக்கலாம். அரசாங்கம் அதைப்பற்றி கூறுவது சாத்தியமாக இல்லை. மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ள தாங்களே அது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** உண்மையிலேயே எனக்கு அப்படிப்பட்ட அதிகாரம் இருந்தால், கொள்ளையடிப்பவர்களையும், திருட்டுத்தனம் செய்கிறவர்களையும் ஒரே நாளில்கூட அந்த இடத்திலிருந்து நீக்கிவிடுவேன். ஆனல் என்னிடம் அந்த அதிகாரம் இல்லை. நான் அதிகாரமற்றவனுக இருக்கிறேன்.

இறை வழிபாட்டிற்காக, தர்ம காரியங்களுக்காக, மற்றுமுள்ள நற்பணிகளுக்காக நேர்மையானவர்கள், நல்ல உள்ளம் படைத்தவர்கள், புனிதவான்கள் தங்கள் சொத்துக்களை எழுதி வைக்கிருர்கள். அவர்கள் எந்த நோக்கத்திற்காக தங்கள் சொத்துக்களை எழுதி வைக்கிருர்களோ அந்த நோக்கத்திற்காகவே அந்த சொத்துக்களைப் பயன்படுத்தவேண்டும். அதற்கு முஸ்லீம் பெரியார்களையும், அறிஞர்களையும் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து, ஒரு ஸ்கீம் தயாரித்து அதன்படி செயல்பட வேண்டும்.



[திரு. வ. மை. அப்துல் ஜப்பார்]

இந்த மசோதா கேஸ் போடுவதற்காக டிசம்பர் 1972 வரை காலத்தை நீட்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது நல்லதுதான். ஆனல் அதற்குப் பின்னல் கண்டுபிடிக்கப்படும் தவறுகளை தடுக்க, கேஸ் போட இதில் வழி இல்லை. எனவே, காலவரையறை இல்லாமல் வழக்குத் தொடுக்க வகைச் செய்யப்பட வேண்டும் . . . . (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

**திரு. எம். ஏ. லத்தீப் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சட்டத்தைப் பற்றியக் கருத்துக்களை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** வக்ப் சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கு இன்று இருக்கின்ற காலவரையறை போதாத காரணத்தினால், அதை மேற்கொண்டு நீட்டிக்க வேண்டுமென்று இந்தத் திருத்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிருர்கள். இந்தச் சட்டத்தை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

பொதுவாக வக்ப் சொத்துக்களை பராமரிக்கின்ற முறைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அப்துல் ஜப்பார் அவர்கள் சொன்ஞர்கள். அந்தச் சொத்துக்கள் 'வக்பே ஆம்' ஆக இருக்கிறது. அதை பராமரிப்பதற்கு ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிர்வாகிகளாக வரவேண்டும். அப்படியானல்தான் நிர்வாகம் அமைகின்ற வகையிலேதான் வக்ப் போர்டு அமைக்கப் நிர்வாகம் அமைகின்ற வகையிலே தான் வக்ப் போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயக முறையிலே சந்ததிகளுக்கு வாக்கூடியச் சொத்துக்களை (வக்பு ஔலத்) முழுமையாகவோ ஒரு பகுதியையோ வாகித் என்று அந்தச் சொத்தை நல்ல உள்ளம் கொண்டவர் சிலர் நற்பணிகளுக்காக தானம் செய்து விடுகின்றனர். வாகித் சொத்துக்களுக்கு ஒரு நிர்வாகம் தேவை என்ற நிலையிலே, அதுவும் அன்றைக்கு இருந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப சட்டத் திட்டங்களை வகுத்துக்கொண்டு, இந்த முறையிலே பெற்றுக்கொண்ட சொத்துக்களைப் பேணி வந்தனர். ஆகவே,

[1972 ஏப்ரல் 3

[திரு. எம். ஏ. லத்தீப்]

அரசாங்கம் இதிலே தலையிடுவதாக இருந்தாலும் ஒரு வரையறைக்கு உட்பட்டுதான் அரசாங்கம் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு பல விவகாரங்களையும் நாம் சொல்லலாம். ஆனால் அந்த விவகாரங்களில் தலையிட இன்றைக்கு இருக்கின்ற சட்டத்திலே அரசுக்கு இடமில்லை. ஆகவே இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இன்று நாம் கவனிக்கவேண்டிய முதல் விஷயம் என்னவென்றால் பல வாகித் சொத்துக்கள் எல்லா ஊர்களிலும் இருப்பதை நாம் பார்க்கிறோம். வாகித் சொத்துக்கள் முழுக்க முழுக்க 'வக்பே ஆம்'-மைச் சேர்ந்ததாகும். ஆனால் அவைகளை சில இடங்களில் சில வெளியார்கள் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாகித் என்றால் ஒரு நிலத்தை தானம் செய்துவிட்டார் என்று பொருள். அதற்குப் பிறகு அதில் தனிப்பட்டவர்களுக்கோ அல்லது அரசாங்கத்திற்குகோ உரிமை கிடையாது என்ற அடிப்படைத் தத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தனக்குள்ள சொத்தை ஒருவர் தானம் செய்து 'வக்பே ஆம்' என்று பிரகடனம் செய்துவிட்டால், அதில் கடவுளுக்குத் தான் 'ஓனர்ஷிப்' உண்டு 'The ownership is immediately vested in God, the Almighty; it is intended for the general public; not only Muslims—a time may come when there may not be Muslims and in order to provide for such a contingency, this is done and that is the philosophy of Wakf in the Islamic genius. The ownership is vested in God for the use of, for the betterment of the Human Community' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நாம் சொல்லும்போது, அந்தச் சொத்துக்களை எந்த நோக்கத்திற்காக—கல்விக்காக, தர்ம காரியங்களுக்காக அல்லது இதர நற்பணிகளுக்காக—தானம் செய்திருக்கிறார்களோ அந்த எண்ணம் நிறைவேறுகின்ற வகையிலே அந்தச் சொத்துக்களைப் பராமரித்து நேர் பாதையிலே செல்கின்ற வகையில் அரசாங்கத்திற்கு சட்டங்களை இயற்ற கடமையும், உரிமையும் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஏதோ 1,500 கோடி பெறுமானமுள்ள சொத்துக்கள் இந்த முறையில் இருக்கிறது என்று சொன்னால், அதை விடுதலை செய்ய முடியவில்லை என்ற நிலை இருக்குமானால், அதைத் தடுப்பதற்கு கோர்ட்டுக்குக் கூட அதிகாரம் கிடையாது. சொத்து விதிமுறைகளில் 'அட்வர்ஸ் பொசஷன்' என்ற முறை இருக்கிறது. பொசஷன் ஆக்குப்பேஷனை டிஸ்டர்ப் செய்யமுடியாது, தடுக்க முடியாது. அவர்களுக்கு ஓனர்ஷிப் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அந்த ரூல் கூட இங்கு வாகித் சொத்துக்களுக்கு இருப்பதாகத் தென்படவில்லை.



1972 ஏப்ரல் 3]

[திரு. எம். ஏ. லத்தீப்]

இன்று இருக்கிற ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற வேண்டுமென்று ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். அதன்படி நம்முடைய வக்ப் போர்டு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதை நாம் அறிவோம். ஆனால் சட்டத்திலே இருக்கின்ற வளைவுகள், நெளிவுகள் காரணமாக தாமதம் ஏற்படுகிறது. இவ்வாறு கால தாமதம் ஏற்படுவதால், அதிலே பலரின் தலையீடு இருக்கிறது என்று குறைபட ஏதுவாகிறது. இவைகளைத் தடுக்கும் முறையிலே வக்ப் போர்டு நாட்டம் செலுத்திக்கொண்டிருக்கிறது. சில சிக்கல்களை தீர்த்து, நடவடிக்கை மேற்கொள்ள சிறிது காலம் தேவைப்படுகிறது. ஆகவேதான் இந்த காலவரையறையை நீட்டிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எந்த நோக்கத்திற்காக வாகித் சொத்துக்கள் கொடுக்கப்பட்டனவோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, அதற்கு விரோதமான நாட்டத்தை தடுக்கும் வகையில், அப்படிப்பட்டவர்களை வெளியேற்றும் அதிகாரத்தை அளிக்கும் வகையில் அரசாங்கம் இந்த சட்டத்தின் வாயிலாக வழி செய்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் அதிகமான அதிகாரத்தைப் பெறுவதற்கு அரசு தனியாக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். அடுத்து—வேறு சந்தர்ப்பமே இதுபற்றிப் பேச கிடைக்காத காரணத்தினால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தர்ப்பம் கிடைக்காது என்பது பொருத்தமில்லை. ஒரு தனி நபர் மசோதா, தனித் தீர்மானம், கேள்வி போன்ற பல முறைகளில் நம்முடைய பேரவை விதிகளின்படி இதுபற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம். இப்போது அந்தச் சட்டத்தின் காலத்தை நீட்டிப்பது பற்றித்தான் மசோதா. நீங்கள் அந்தச் சட்டத்தின் காலத்தை நீட்டலாமா, கூடாதா என்பதுபற்றித்தான் பேச முடியும். அதுதான் நம்முடைய அவை மரபும் ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தை மற்ற எல்லா விஷயங்களையும் பற்றிப் பேசுவதற்கு

[1972 ஏப்ரல் 3

[பேரவைத் தலைவர்]

பயன்படுத்த முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றுக்கு எல்லாம் பதில்சொல்கிற நிலையிலும் இருக்க மாட்டார் இந்த வாய்ப்புக்கு உட்பட்டே அடுத்தபடியாக திரு. வகாப் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

* **திரு. கே. எ. வகாப்** : பேரவைத் தலைவர் அவர்களே, பப்ளிக் வக்ப் சொத்துக்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களிடம் இருந்து அவற்றை மீட்க கேஸ் பைல் பண்ணுவதற்கு இந்தச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற காலவரையறையை மேலும் நீட்டிப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரபட்டிருப்பதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

பப்ளிக் வக்ப்ஸ் சொத்துக்கள் நூறு கோடிக்கு அதிகமாக இருக்கும். ஆனால் இன்றைக்கு பத்து கோடிக்குத்தான் கணக்குகள் இருக்கின்றன. அந்த நூறு கோடி சொத்தையும் கண்டுபிடிக்க முயற்சி எடுத்துக்கொண்டாக வேண்டும் என்கிற நல்ல முயற்சியை அமைச்சர் அவர்கள் தைரியமாக மேற்கொள்ளவேண்டும்.

இன்றையதினம் அவற்றில் பலவகையான ஊழல்கள் இருந்து வருகின்றன என்று பரவலாகக் கூறப்படுகிறது. வக்ப் வாரியத்திலே சிக்கனமாகக் காரியங்கள் நடைபெறவில்லை என்கிற குற்றச்சாட்டு நாட்டிலே இருக்கிறது. இந்தக் கருத்தை நான் அரசாங்கத்திற்கு எதிராக சொல்கிற கருத்தாக எடுத்துக் கொள்ளாமல் சமுதாயத்தில் மக்கள் சொல்கிற குறைபாடாக எண்ணவேண்டும். இந்த வாரியத்தில் முன்னால் இருந்த அதிகாரி ஒருவர் காலத்தில் நிறையத் தவறுகளும், ஊழல்களும் நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது. பல லட்சம் தாளக்கூடிய சொத்துக்கள் எல்லாம் சில ஆயிரம் ரூபாய்களுக்கே விற்கப்பட்டிருக்கின்றன. அப்போது நிறையத் தவறுகளும் ஊழல்களும் நடந்து இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, இதை எல்லாம் ஆராய்வதற்கு வக்ப் வாரியம் நல்லமுறையில் செயல்பட ஒரு விசாரணைக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் ஒரு கல்வி நிறுவனம் வக்ப் வாரியத்தின் சார்பில் நடந்துவருகிறது. நூறு கோடி ரூபாய் வருவாயுள்ள இந்த வக்ஃப் வாரியம் அங்கே உள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம் கூடக் கொடுக்கவில்லை என்கிற புகார்கள் வந்திருக்கின்றன.



1972 ஏப்ரல் 3]

[திரு. கே. எ. வகாப்]

அதுமட்டுமல்ல. வக்ப் வாரியத்தில் வேலை செய்யும் அதிகாரிகளுக்கும் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே மதுரைக் கல்லூரி ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் குறித்த நேரத்தில் சம்பளம் கொடுக்கப்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வக்ப் சொத்துக்களின்மீது 6 சதவிகிதம் வரி வசூல் செய்யப்படுகிறது. இது மிகவும் அதிகம். இதையும் குறைக்க வேண்டும்.

அடுத்து வக்ப் வாரியங்கள் மூலமாக கல்வி நிறுவனங்கள் நடைபெறுகின்றன. அறநிலைய ஸ்தலங்கள் இருக்கின்றன. குறிப்பாக வேலூர், காயல்பட்டினம், ஆக்கூர், லாப்பேட்டை போன்ற இடங்களில் எல்லாம் மதர்சாக்கள் இருக்கின்றன. அவர்கள் இன்றைய தினம் நன்கொடை வாங்கி நடத்துகிறார்களே தவிர அவர்களிடம் எந்தவிதமான மூலதனமும் கிடையாது. அப்படிப்பட்ட கல்வி நிலையங்கள்—அற ஸ்தலங்களுக்கு இந்த வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். அமைச்சர் அவர்களிடம் நான் வேலூரில் உள்ள பாக்யார்த்தசாலிகா என்ற கல்வி நிலையத்திற்கு விதிக்கப்படுகிற வரியில் இருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு கேட்டேன். அவர்கள் அதற்கு விலக்கு அளிப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று மற்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களுக்கும் விலக்கு அளிக்கவேண்டும்.

இந்த வக்ப் வாரியத்தின் சொத்துக்கள் பூரணமாக கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் இங்கிருக்கிற அமைச்சர் அவர்கள் பணக்கார அமைச்சராக—வக்ப் வாரிய அமைச்சர் விளங்குவார்கள். முன்பே சரியான காலத்தில் கேஸ்கள் போடப்படாத காரணத்தினால் பலகோடி ரூபாய் சொத்துக்கள் வாரியத்தின் கையை விட்டுப் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த வக்புகளை ஏற்படுத்தியதன் நோக்கம் இந்த அறநிலையங்கள் நல்லபடியாக நடக்கவேண்டும் என்பதுதான். அதற்காக விடப்பட்ட சொத்துகள் அந்த நல்ல காரியத்திற்குப் பயன்படுகிற விதத்தில் இந்த வாரியம் நல்லமுறையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்

**கொண்டு, அதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுக்க** வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டத்தை முழுமனதுடன் வர**வேற்று, என் உரையை நிறைவு செய்துகொள்கிறேன். வணக்கம்.**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தின் நோக்கமே 31—12—1970-ஓடு முடிந்துவிடுகிற இந்தச் சட்டத்தின் காலவரம்பை 31—12—1972 வரை நீட்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டதாகும்.

இப்போதிருக்கிற பப்ளிக் வாக்ப் சட்டம் மத்திய அரசாங்கத்தின் சட்டமாகும்.

Under this Act, suits can be filed in respect of wakf properties made during the period from 1935 to 1954.

என்பதாக 1935-இல் இருந்து 1954-க்குள் பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களைத்தான் இந்தச் சட்டத்தின் மூலமாக நாம் மீட்க முடியும். அதற்கு முன்னால் பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை இந்தச் சட்டத்தின் மூலம் ஒன்றும் செய்வதற்கில்லை. அதோடு இந்தக் காலவரம்புக்குள் பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கும் கேஸ்கள் 31—12—1970-க்குள் போடவேண்டும் என்று இருந்தது. மத்திய அரசாங்கத்தின் சிபாரிசுப்படிதான் இப்போது 31—12—1972-க்குள் கேஸ்கள் போடலாம் என்பதாக அதன் கால வரையறையை நீட்டியிருக்கிறோம். இதை எல்லா உறுப்பினர்களும் வரவேற்றதற்கு நன்றி.

இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் வேறு சில விஷயங்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்த ஸ்தாபனங்களில் இருக்கும் குறைபாடுகளையும் களையவேண்டும் என்பதுதான் நோக்கம். கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றின் மீது செய்யப்பட்டுள்ள என்டௌமெண்டு வருமானத்தில் இந்த அளவுக்குமேல் போனால் 6 சதவிகிதம் சர்க்காருக்குத்தர வேண்டும் என்பது பொதுச் சட்டம். அதை இந்த ஸ்தாபனங்களும் கொடுத்துத்தான் ஆகவேண்டும். இப்போது அமைக்கப்பட்டிருக்



கிற வாரியம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. அந்த வாரியத்தினர்களோடு கூட மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைத்து இந்த ஸ்தாபனங்களின் நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை நிறை**வேற்றித் தரவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.**

MR. SPEAKER : The question is—

'That the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972, be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER: The Bill will now be taken up clause by clause. There are no amendments.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I move—

'That the Public Wokfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill 1972, be passed.'

The motion was put and carried and the Bill was passed into law.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன. பேரவை நாளைக் காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் 1–50

**(7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

A. *Statutory Rules and Orders.*

92. Notification issued with G.O. R. No. 390, Revenue, dated the 22nd February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Madras Branch of Aurobindo Society on 12th March 1972 at Safire Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

### பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

93. Notification issued with G.O. Ms. No. 3312, Agriculture, dated the 23rd December 1971, in regard to regulation of trade in arecanut in Coimbatore district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

94. Notification issued with G.O. No. 261, Revenue, dated the 29th January 1972, in regard to exemption from liability to entertainments tax for a further period of three years to all cinema shows of 8 mm. and 16 mm. dimension up to and inclusive of the 8th September 1974. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

95. Notification issued with G.O. R. No. 386, Revenue, dated the 18th February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Principal, S.I.V.E.T. College, Gowriwakkam on 19th February 1972 at M.R. Theatre, Tambaram. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)].

96. Notification issued with G.O. Ms. No. 450, Revenue, dated the 14th February 1972, in regard to declaration of Manjalar Reservoir Project in Madurai district as an irrigation work under the Tamil Nadu Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959. [Laid on the Table of the House under section 9 (3) of the Tamil Nadu Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959 (Tamil Nadu Act 25 of 1959).].

97. Notification issued with G.O. Ms. No. 2680, Public Works, dated the 29th December 1971, in regard to an amendment to the Tamil Nadu Electricity (Taxation on consumption) Rules, 1964. [Laid on the Table of the House under section 17 (2) of the Tamil Nadu Electricity (Taxation on Consumption) Act, 1962 (Tamil Nadu Act 4 of 1962.)]



B. *Reports, Notifications and other papers.*

161. Notification issued with G.O. Ms. No. 3942, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed in favour of the Thamizhaga Pulavar Kuzhu.

@ 162. The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972).

@ 163. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972) with Annexure.

@ 164. The Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 8 of 1972) with Annexure.

@ 165. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972) with Annexure.

@ 166. The Tamil Nadu Non-trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972).

**@ 167. The Tamil Nadu** Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972).

@ Despatched to members on 30th March 1972.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

**செவ்வாய்க்கிழமை, 1972 ஏப்ரல் 4.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**கூட்டுறவுத் துறைக்கு தனிக் காவலர் படை.**

*863 **வினா.—திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையிலுள்ள வழக்குகளை கண்டுபிடிக்கவும் துரித நடவடிக்கை எடுக்கவும் தனி போலீஸ் படை அமைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திட்டம் பரிசீலிக்கப்பட்டு, ஆணை பிறப்பிக்கப்பட்டு "வணிக குற்றப் புலனாய்வுத் துறைப் பிரிவு" ஒன்று 1—2—1971 முதல் செயல்பட்டுவருகிறது.

**திரு. பி. எஸ். மணியன்:** தலைவர் அவர்களே, இப்படித் தனிக் காவல் பிரிவு அமைக்கும்போது இரண்டு மூன்று மாவட்டங்களை ஒன்றுகச் சேர்த்து ஒரு தனி அதிகாரியை நியமிப்பதைவிட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூட்டுறவுத் துறையிலுள்ள வழக்குகளைப் புலனாய்வு செய்து வழக்கு நடத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி அதிகாரியும் தனிக் காவல் படையும் போடுவதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஐயாயிரம் ரூபாய் அல்லது அதற்குமேல் கையாடல் செய்யப்படுகிற வழக்குகளுக்கு இந்தப் பிரிவு பயன்படுத்தப்படுகிறது. அதற்கு குறைவான கையாடல் வழக்குகளுக்கு இப்போதே அந்தந்த மாவட்டத்திலுள்ள காவல் துறை பயன்படுத்தப் படுகிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, நமது கழக அரசு ஏற்பட்டதற்குப் பிறகு இந்தக் கூட்டுறவுத் துறையிலுள்ள கையாடல்களைக் கண்டுபிடிப்பதிலும், அதைப்போலவே சிலைத் திருட்டுக்களை கண்டுபிடிப் பதிலும், நமது தமிழகக் காவல் துறையினர் மிக நல்லமுறையில் பணியாற்றிக்கொண்டு வருவதால் அத்தகைய துறையில் பணியாற்றக்கூடிய காவல் துறையினருக்குத் தனிச் சலுகை ஏதேனும் அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** காவல் துறையினர் ஈடுபட்டுப் பணியாற்றுகின்ற ஒவ்வொரு துறையுமே முக்கியத்துவம் வாய்ந்ததுதான். ஆகவே இதை மாத்திரம் முக்கியமாக எடுத்துக் கொண்டு தனிச் சலுகை அளிப்பது என்பது இயலாது.

**திரு. கே. கந்தசாமி :** மதுரை கூட்டுறவு அங்காடியைப் பற்றி ஏதாவது அரசுக்குப் புகார் வந்துள்ளதா ? அப்படியானால், விசாரணை ஏதும் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றி விவரம் தெரிந்து கொள்ள விரும்பினால், உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு கேள்வி போடலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தக் கூட்டுறவுத் துறைக்காக விசேஷ போலீஸ் அதிகாரிகள் வைத்தும் கூட, தூத்துக்குடி, திருவாரூர் போன்ற இடங்களிலுள்ள சில கூட்டுறவு நிறுவனங்கள் சரியான முறையில் நடைபெறவில்லை. பணமெல்லாம் கையாடப்பட்டது என்று தகவல் வந்திருக்கிறதே அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றிலே முடிவு செய்யப்பட்ட வழக்குகளும் உண்டு. 71 வழக்குகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் தூத்துக்குடி, திருவாரூர் வழக்குகளும் இருக்கலாம். திருவாரூரைப் பொறுத்த வரையில் கூட்டுறவுத் துறையினரால் செக்ஷன் 65-இன்கீழ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மேற்கொண்டு போலீஸ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த நடவடிக்கை முடிவுற்ற பிறகு மேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தூத்துக்குடி சம்பந்தமாகத் தொகை அதிகம் என்றும் அந்த கேஸ் இன்னும் தொடரப்படவில்லை என்றும் சொல்கிறார்களே அதனுடைய நிலை என்ன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தூத்துக்குடி சம்பந்தமாக என்னிடத்தில் விவரங்கள் இல்லை. தூத்துக்குடி பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே பிரச்சினை எழுப்பிய காரணத்தால் அதுபற்றி அரசு உடனடியாகக் கவனிக்கும்

**திரு. எஸ். ஆறுமுகம் :** கூட்டுறவுச் சங்கங்களில் நீண்ட காலமாகப் பெரும் மோசடி, கையாடல் நடைபெற்று கண்டுபிடிக்காமல் இருந்து இப்பொழுது புதிய போலீஸ் படை அமைப்பின் மூலம் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கையாடல், மோசடி எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த வழக்குகளில் காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுப்பதற்குப் புதிதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றாலும், தொடர்ந்து இதுபோன்ற கூட்டுறவுத் துறையில் நடைபெற்றுவருகிற மோசடிகள் பல ஆண்டுக்காலமாகவே நடவடிக்கைக்கு உள்ளாகின்றன. அவற்றில் முன்பு எவ்வளவு, இப்பொழுது எவ்வளவு என்று ஒப்பிட்டுச் சொல்லுவதற்கு இயலாது.



**திரு. ஆ. கு. சுப்பையா :** கூட்டுறவுத் துறையில் செயலாளராக அல்லது தலைவராக இருக்கக்கூடியவர்கள் இலட்ச ரூபாய் வரையில் மோசடி செய்து தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். அந்த ரூபாயைத் திரும்ப வசூலிப்பதற்கு அது சம்பந்தப்பட்ட நபரின் குடும்பத்தாருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதிலே சட்டப்பிரச்சினைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

*Pension for wives of deceased freedom fighters.*

***864. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state —**

**(*a*) whether the Government have any proposal to extend the pension amount given to the freedom fighters to their wives after the death of the pensioners ; and**

**(*b*) If so, the details thereof ?**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) : நடைமுறையில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதிய திட்டத்தின்படி, ஓய்வூதியத்தினரின் மறைவுக்குப் பிறகு அவரின் மனைவிக்கு, அன்னாரின் மறைவு வரையிலாவது, அல்லது மறுமணம் செய்துக் கொள்ளும் வரையிலாவது, 'இவ்விரண்டில் எது முன்னதாக உள்ளதோ அதுவரையில் அவரின் வருவாய் திங்களொன்றுக்கு ரூபாய் நூற்றுக்கு மேற்படக்கூடாது என்ற விதிக்கிணங்க, ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, 100 ரூபாய் வருவாய் என்று வைத்திருப்பதை சற்று உயர்த்தி வைக்கக்கூடாதா என்று முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே இந்தத் திட்டம் 1966-ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்டபோதே இப்படிப் பட்ட வரையறைக்குட்பட்டுத்தான் வைக்கப்பட்டது. அப்போதே கூட இந்த அளவுக்கு எதிர்பார்க்கப்படாமலேதான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இப்போதே கிட்டத்தட்ட ஐம்பது லட்ச ரூபாயை ஓராண்டுக்கு அவர்களுக்காக வழங்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கூட பலமுறை சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதில் இந்த நூறு ரூபாய்க்கு மேற்படக் கூடாது என்ற விதியை இப்பொழுது மாற்றுவதற்கில்லை.

**திரு. த. சோணையா :** விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல கொடுமைகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளான பல குடும்பங்களின் பெயர்கள் அரசாங்க ரிகார்டுகளில் இல்லை என்றும், அவர்கள் உண்மையாகவே

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்றும் எங்களைப் போன்றவர் களிடத்தில் வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். பலருடைய வருத்தங் களைத் துடைத்துப் பழக்கப்பட்ட இந்த அரசு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடைய வருத்தங்களையும் துடைக்க முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மூன்று மாதம் அவர்கள் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்பதற்கான அத்தாட்சி வேண்டும் என்று ஏற்கெனவே வரையறுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரிகார்டுகளில் இல்லாமலேயே "நாங்கள் சிறைச்சாலையில் இருந்தோம்" என்று கூறுகிறவர்கள், அவர்களோடு சிறையில் இருந்த பொறுப்பான வர்களுடைய சாட்சியங்களோடு விண்ணப்பித்தால் அதைப்பற்றி கவனிக் கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அதற் கிணங்க பல பேருக்கும் இந்த மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் மேலும் பல பேர், "நாங்கள் சிறையில் இருந்தோம், நாங்கள் மூன்று மாதம் இருந்தோம், நான்கு மாதம் இருந்தோம்" என்று வாயளவில் சொல்வது எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வது என்பது இயலாது.

**திரு. வை. பாலசுந்தரம் :** இதற்கு முன்பே இருந்த அரசு சுதந் திரப் போராட்ட வீரருக்குத் தர வேண்டிய மதிப்பும் மரியாதையும் தரவில்லை என்றும் இன்றைய அரசு அவர்களுக்குத் தரவேண்டிய மதிப்பும் மரியாதையும் தந்து, ஓய்வூதியம் முதலியவற்றை உயர்த்தியது என்பது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முன்பிருந்த அரசு சுதந் திரப் போராட்ட வீரர்களை மதிக்கவில்லை என்று கூறுவது தவறு. அவர்கள் மதித்த அந்த அடிப்படையில் மேலும் பலரை நாம் மதிக் கின்றோம். விட்டுப் போன பலருக்கு நாம் மதிப்பு அளித்து அவர் களுக்குச் சலுகைகள் வழங்குகிறோம். முன்பிருந்த அரசு சுதந் திரப் போராட்ட வீரர்களை மதிக்கவில்லை என்று கூறுவது சரியல்ல.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நமது மாநில அரசு 50 ரூபாய் மாதம் ஒன்றுக்குத் தருகிறார்கள். மத்திய அரசு 200 ரூபாய் கொடுப்பதாக அறிவித் திருக்கிறார்கள். மத்திய அரசு கொடுக்கின்ற ரூபாயும், மாநில சர்க்கார் கொடுக்கக்கூடிய ரூபாயும் சேர்த்து கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லாவிட்டால், அவர்களுக்கு எவ்வாறு வழங்கப் படுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பில் பல அறிவிப்புகள் வந்திருக்கின்றன. எப்படிச் செயல்படுத்தப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. ஆறு மாத காலம் சிறையில் இருந்தவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவ தாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் உதவித் தொகை அளிக்கப்படும்போது, மாநில அரசையும் கலந்து கொண்டால் இருவரும் இணைந்து செயல்படுவதற்கு வசதியாக இருக்கும்.



**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்குக் கொடுத்த நிலங்களைச் சிலர் விற்று விட்டார்களே, அப்படி நிலத்தை விற்பதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ? .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்கவேண்டும். மூலக்கேள்வி தியாகிகளின் மானியத்தைப் பற்றியதாகும். தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் தரப்படும்

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே, போராட்ட வீரர் களுக்கு மானியம் கொடுப்பதைப்போல், அவர்களுடைய குழந்தை களுக்குக் கல்விச் சலுகையும், அதேபோல போரிலே இறந்த வீரர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகையும், உத்தியோகச் சலுகையும் அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இன்றுள்ள நிலைமையில் தியாகிகளுக்கு மானியம் அளிப்பதைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மற்றச் சலுகைகளைப்பற்றி இப்போது எதுவும் சொல்வதற்கில்லை.

*Income through toddy and arrack.*

*865. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the amount collected from the leasing out of toddy and arrack shops and the income derived as licence fee from the wine shops during 1971–72 ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 1971–72-ல்

(1) கள்ளுக்கடைகள் ஏலத்தில் விட்டது ரூ. 8,99,82,759.

(2) சாராயக் கடைகள் ஏலத்தில் விட்டது ரூ. 6,57,86,648.

(3) மதுக்கடைகளுக்கு உரிமம் வழங்கியது ரூ. 42,85,000.

(4) மாநில ஆயத்தீர்வை காலனேஜ் கட்டணம் மூலம் எதிர் பார்த்தது சுமார் ரூ. 6,00,00,000.

மொத்தம் ரூ. 22,00,54,623.

இதில் 31-1-1972 முடிய அரசுக்கு செலுத்தப்பட்ட தொகை மொத்தம் ரூ. 13.77 கோடி.

**திரு. என். கே. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, அதிகப் படியான வருமானம் எந்த மாவட்டத்திலிருந்து கிடைக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இதைக் குறித்துத் தனியாகக் கேள்வி கேட்டால் அதைப்பற்றிய விவர அறிக்கை அவையிலே வைப்பதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. என். கே. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, கள்ளுக் கடைகளுக்கு இன்னின்ன இடத்தில், குறிப்பிட்ட இடத்தில் மரம் இருக்கின்றது என்று சொல்லாததன் காரணமாக, கடைகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. தென்னை மரம் என்றால் எல்லோரும் கள் போட்டுவிடுகிறார்கள் என்ற புகார் இருக்கிறதா ? இப்படிச் செய்வதால் அடுத்த வருஷம் வரக்கூடிய வருமானம் பாதிக்கும் அல்லவா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அதைப்பற்றி திட்டவட்டமான புகார் எதுவும் வரவில்லை.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவாகளே, இப்போது கள்ளுக்கடைகள். சாராயக் கடைகள் இருந்தபோதிலும், கிராமங்களில் காய்ச்சிக் கொண்டிருந்த நாட்டுச் சாராயத்தை அதிகமான அளவில் காய்ச்சுவதால், கடைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, கிராமங்களில் காய்ச்சும் நாட்டுச் சாராயத்தைத் தடை செய்யத் தனி போலீஸ் படையை அரசு ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இப்போதே மதுவிலக்கை ஒத்திவைத்ததன் காரணமாக நாட்டுச் சாராயம் காய்ச்சுகின்ற முயற்சிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றால் காவல் துறையினர் நிச்சயம் கண்காணிப்பார்கள்.

**திரு. த. சோலையா :** தலைவர் அவர்களே, இப்போது சாராயக் கடைகளுக்குச் சரியான முறையில் சரக்குகள் சப்ளை செய்யப்படாத காரணத்தினால் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அதன் காரணமாக கிஸ்தி கட்டுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மதுரை மாவட்டம் போன்ற இடங்களில் சங்கமாக சேர்ந்து சரியான முறையில் சப்ளை செய்யப்படாவிட்டால் எங்களுக்கு நஷ்டம் வருமே என்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு சாராயம் சரியான முறையில் தேவையான அளவு சப்ளை செய்யப்படுமா ? அல்லது அவர்களுக்குக் கிஸ்தியை தள்ளி வைக்க அரசு உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அவர்களுக்கு எதையும் தள்ளித் தருவதாக உத்தேசம் இல்லை.

**திரு. பூ. எட்டியப்பன் :** தலைவர் அவர்களே, மதுவிலக்கினால் வரக்கூடிய வருமானத்திலிருந்து கிராமச் சாலைகளை அமைப்பதற்காகவும், மற்ற வசதிகளைச் செய்வதற்காகவும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கப்படுமா?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தனித் தனியாக இந்த வருமானத்திலிருந்து நிதி ஒதுக்கப்படுவதில்லை. மொத்தமாக மாநிலத்தின் செலவுகளுக்கு அது பயன்படுத்தப் படுகிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, சில கைதேர்ந்த நிபுணர்கள் குறிப்பாக கேரளாவிலிருந்து வருகிறவர்கள் சாராயத்தில் சில வாசனைப்பொருள்களைச் சேர்த்து, அதையே விஸ்கி, பிராந்தி, ஜின் என்ற பெயர்களால் விற்பனை செய்கிறார்கள். அப்படி விற்பனை செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பிட்ட தகவல் ஏதாவது கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுககப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் அமைக்கப்படுகிறபோது அவை பள்ளிக்கூடம், பள்ளிவாசல், கோயில் இவைகளுக்கு அருகாமையில் இருக்கக் கூடாதென்று விதிமுறைகள் வகுத்திருக்கிறோம். இந்த விதிமுறைகளை மீறி, ஆர்க்காட்டில் 100 அடி தூரத்தில் மதுக் கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி கேட்டபோது "பரவாயில்லை என்கிற பதில் வந்திருக்கிறது. ஆகவே இந்த விதிமுறைகளை இன்னும் தீவிரமாக அமல் நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேரவையில் சில புகார்கள் கூறப்பட்டு, ஆட்சேபகரமான பகுதிகளில் இருப்பவைமீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, ஆட்சேபணைகளை எழுதியனுப்பியதன் காரணமாக, அவை அந்தந்த அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுப் பெரும்பாலான இடங்களில் அம்மாதிரியான கடைகள் அகற்றப்பட்டிருக்கின்றன. ஒருசில இடங்களில் அப்படி அகற்றுவதற்குச் சம்மதிக்காமல், கடைகள் அகற்ற முடியாது என்பதற்காக நீதிமன்றங்களுக்குக்கூடச் சென்றிருக்கிறார்கள்.

### ஜலகண்டாபுரத்திலுள்ள சாராயக்கடை.

*866. **வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜலகண்டாபுரம் சாராயக்கடையையும், மேட்டூர் தங்கமாபுரி பட்டணம் கள்ளுக்கடையையும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற முறையீடுகள் வந்திருக்கின்றனவா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தங்கம்மாபுரி பட்டணத்தில் உள்ள கள்ளுக்கடை, மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டதன் மேல் மறுப்பேதும் இல்லாத வேறு ஒரு இடத்திற்கு அது தற்போது மாற்றப்பட்டுள்ளது.

முறையீடு வந்ததின் பேரில் ஜலகண்டாபுரத்தில் உள்ள சாராயக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற மேட்டூர் ஆயத் துறை தாசில்தார் கட்டளையிட்டார். ஆனால் கடை உரிமதாரர் மேல் முறையீடு ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தாக்கல் செய்தார். இந்த மேல் முறையீட்டைத் தள்ளுபடி செய்தும், 15 நாட்களுக்குள் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்றும், இல்லையென்றால் உரிமம் திரும்பப் பெறப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். ஆனால் இவ்வுத்தரவு 17-3-1972 அன்று உரிமதாரரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வுத்தரவை எதிர்த்து உரிமதாரர் உயர்நீதிமன்றத்தில் (சென்னை) ரிட் மனு தாக்கல் செய்ததின் பேரில் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### தொட்டியம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்.

***867. வினா—திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், தொட்டியம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் விஸ்தரிப்புத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) இந்த பஞ்சாயத்தின் நிதி நிலைமை தற்போது சரியாக இல்லாத காரணத்தால் இத்திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீட்டின் மொத்தத் தொகையை அரசே ஏற்றுக் கொள்வதற்கும், பின்னர் இத்தொகையை படிப்படியாக இப்பஞ்சாயத்து அரசுக்கு செலுத்து வதற்கும், அரசை குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

### சிரணிப்படையின் பணிகள்.

***868 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா.—

சீரணிப் படையின் பணிகளை மேலும் விரிவு படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சீரணிப்படையின் பணிகளை மேலும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, மாவட்டந் தோறும் சீரணிப்படையின் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவரே நேரடியாகப் பார்வையிட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிற காரணத்தால், சரியான முறையில் அதை கவனிக்க இயலவில்லை. ஆகவே, மாவட்டந்தோறும் தனித்தனியான அதிகாரிகளை நியமித்து, சீரணிப்படைகளின் வேலைகளை விரைவு படுத்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இதற் கான நிதிவசதி ஏற்பட்டவுடனே கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட சீரணிப் படைத்தலைவர் இப்போது தமிழக அரசில் வேளாண்மைத் துறை அமைச்ச ராக ஆகியிருக்கிறார். ஆகவே, அந்த மாவட்டத்திற்கு புதிதாக ஒரு சீரணிப்படைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மாவட்டத்தினுடைய சீரணிப்படையின் பொறுப்புகளை வகித்து வந்தவர் இப்பொழுது அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறார். எனவே முறைப்படி மாவட்ட சீரணித் தலைவர் நியமிக்கப்படுவார்கள்.

**திரு வை. பாலசுந்தரம் :** தலைரவர்களே, இந்த சீரணியின் சிறப்பு களைப் பற்றிய கருத்துக்களைப்பற்றி வெளிமாநிலங்கள் அறிக்கை கேட்டுள்ள தாக ஒரு செய்தி இருந்ததே, அதுபற்றிய குறிப்புக்கள் ஏதாவது இருந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாணபுமிகு திரு. என். வி. நடராசன் :** மத்திய அரசிலிருந்து ஒரு அதிகாரி இதைப்பற்றி குறிப்புக்கள் கேட்டிருக்கிறார். அந்த விவரம் அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, சீரணியின் மூலமாக நம் முடைய தமிழகத்தில் எவ்வளவு தொகைக்கு பெறுமானமுள்ள வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏறத்தாழ சீரணி துவக்கி இதுவரையில் 1 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகள் செய்யப்பட்டிருக்

கிறது. ஆனால் அரசாங்கத்தின் மூலமாக சேரணிக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஏறத்தாழ 45 இலட்சம் ரூபாய் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, இப்பொழுது சென்னையில் சேரணிப்படையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், மக்களை நேர்வழி யிலே செலுத்தவும் போன்ற பல காரியங்களில் ஈடுபட்டுள்ளார்கள். இதே போல எல்லா மாவட்டங்களிலும் கிராமப் பகுதிகளிலும், நகரப்பகுதி களிலும் இந்தச் சேரணி உதவி செய்யக்கூடிய அளவில் பயன்படுத்திக் கொள்ள திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, அதைப் பற்றியும் யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இப்பொழுது சேரணியினர் ஒவ்வொரு கிராமத்திற்கும் பள்ளிக் கட்டடம் கட்டுதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற நல்ல பணிகளை ஆற்றி வருகிறார்கள். அதேபோல ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்து வரும் எல்லாப் பணிகளையும் சேரணிக்கே ஒதுக்கி அதன்மூலம் கட்டடம் கட்டுதல், சாலைகள் அமைத்தல் போன்ற அப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, நிதி வசதி குறைவாக இருக்கிற காரணத்தினால் அந்த யோசனை ஒத்திவைக்கப்பட்டி ருக்கிறது. நிதி வசதி ஏற்பட்ட பிறகு கனம் உறுப்பினரின் யோசனை பரிசீலனை செய்யப்படும்.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, சேரணியினால் இப்பொழுது நாட்டிலே நல்ல பல வேலைகள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு கிராமத் திற்கும் இரண்டு சேரணி ஊழியர்கள் தான் இருக்க முடியு என்று இப் பொழுது சொல்கிறார்கள். அதை மேலும் உயர்த்தி ஒவ்வொரு கிராமத் திற்கும் 5 உறுப்பினர்களையாவது சேரணியில் சேர்த்தால் இன்னும் நல்ல பணிகளைச் செய்ய முடியும். ஆகவே அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன், நிதிவசதி ஏற்பட்ட பிறகு அதை விஸ்தரிப்பதற்குரிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, நம்முடைய சேரணிப்படை யினருக்கு வீர சிப்பாய்களைப்போல் பயிற்சி கொடுக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி கொடுப்பதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் ;** இதுபோன்ற யோசனை எது வும் அரசின் பரிசீலனையில் இல்லை.



## *Handloom Weavers Co-operative Societies.*

*869. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of handloom Weavers' Co-operative Societies in this State as on today ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மாநிலத்திலுள்ள 727 நெச வாளர் கூட்டுறவு சங்கங்களில் 588 சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக் கின் றன. 139 சங்கங்கள் இயங்க முடியாத நிலையிலுள்ளன.

**திரு என். கே. பழனிசாமி :** சார், இப்பொழுது இயங்கும் சங்கங்கள் எவ்வளவு இலாபகரமாக ஓடுகின்றன. மூடப்பட்ட நெசவாளர் சொசைட்டி கள் அவ்வாறு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, 727 சங்கங்களைப் பற்றியும் இந்த மன்றத்திலே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடி யாது, தனியாகக் கேட்டால்தான் சொல்ல முடியும். 139 சங்கங்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் ஆங்காங்கே அந்த நெசவாளர் கூட் டுறவு சங்கங்கள் சரியான நிர்வாகம் இல்லாத காரணத்தாலும், நெசவா ளர்களின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தாலும், நஷ்டம் அடைகின்ற காரணத்தாலும் செயல்படாத நிலையில் இருக்கின்றன.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** தலைவரவர்களே, நல்ல முறையிலே இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பொதுவாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு என்னென்ன உதவிகள் வழங்கவேண்டுமென்று அரசாங்கம் நியமித்திருக்கிறதோ அதையெல்லாம் வழங்கி வருகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, 139 சங்கங்கள் நிர்வாகக் குறை பாடுகள் காரணமாக மூடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். யாரோ செய்யும் தவறுகளுக்காக நெசவாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அப்படித் தவறான நிர்வாகம் நடைபெறும் இடங்களில் ஸ்பெஷல் ஆபீசர் போட்டு அப்படிப்பட்ட சங்கங்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** யாரோ செய்கின்ற தவறு என்று சொல்ல முடியாது. காரணம் நெசவாளர்களே பிரதிநிதிகளாக இருக்கி றார்கள். கூடுமானவரையில் இப்படிப்பட்ட சங்கங்களுக்குத் தனி அலுவலர் போட்டும், நாம் இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி என்று நாமே ஆரம்பித்தும் புதுப்பிக்க வேண்டுமென்ற முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, இப்பொழுது கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனையும் நஷ்டத்தில் நடப்பதற்குக் காரணம் முழுமையாக நிர்வாகப் பொறுப்பிலே இருப்பவர்கள்தான் என்பது பல முறை நாம் பார்க்கும்பொழுது தெரிகிறது. ஆகவே, அந்தச் சங்கத்தில் நெய்யக்கூடிய கைத்தறித் துணிகள், மற்ற இருப்புகள், கணக்குகள்

எல்லாம் கவனிக்கும் முழுப்பொறுப்பும் அந்தச் செயலாளருக்கு மட்டும் தான் இருக்க வேண்டும். தலைவருக்குப் பொறுப்பு இருக்கக் கூடாது என்ற முடிவை எடுத்தால் எல்லாச் சங்கங்களும் நல்ல முறையிலே நடைபெறும் என்பதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நெசவாளர் சங்கங்கள் அந்தச் சங்கங்களின் பிரதிநிதிகளாலே நிர்வகிக்கப்பட வேண்டுமென்றுதான் ஜனநாயகப்படி நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். ஆனால், தனி அலுவலர் போட்டும்கூட அவர்கள் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஊழல் இருக்கிறது. அவர் இருப்பதால் ஊழல் இல்லை என்று சொல்ல முடியாது. இதற்கு ஆங்காங்குள்ள அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை நடத்துபவர்கள் சிறப்பான வழிகளிலே முயற்சியெடுத்தால்தான் பரிகாரம் காண முடியும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இப்படி மூடப்பட்ட காரணத்தால் நூல் விலை ஏற்றத்தின் காரணமாக அந்த நூல்களை வாங்கி சப்ளை செய்ய முடியாமல் அதற்குரிய பணம் இல்லாத காரணத்தினால் தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலியைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் நஷ்டம் ஏற்பட்டு மூடப்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமல்ல, பொதுவாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் அடிக்கடி நூல் விலையில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு இதிலே ஒரு பாதிப்பு ஏற்படுவது உண்மை. ஆனால், கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் நம்முடைய கூட்டுறவு நூற்பாலையில் அப்போதைக்கப்போது நியாய விலை நிர்ணயிக்கப்பட்டு நாமே கொடுக்கிறோம். அதுவும் போதாது என்பது இந்த அரசாங்கத்தின் கருத்து. மத்திய அரசாங்கத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவது, ஏற்றுமதி இறக்குமதி அதிகமாகி குறைந்து பாதிக்கப்படும் பொழுது நூலின் விலையினால் நெசவாளர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகக்கூடாது. நிரந்தரமான நியாயமான விலையில் நூல் கிடைப்பதற்குத் தனியாக ஒரு திட்டத்தை நம்முடைய மத்திய அரசு உருவாக்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தக் கைத்தறியால் நெய்யப்படும் ஆடைகளுக்கு வெளிமார்க்கெட்டும் சங்கடமாக இருக்கின்றது. அதற்குக் காரணம் அவைகள் மில்லில் உற்பத்தியாகும் துணிகளோடு போட்டிபோட வேண்டியதாயிருக்கிறது. கைத்தறிக்கு என சில தனி ரகங்களை ஒதுக்கவும் முடியாத சட்டச் சிக்கல் சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே இந்தக் காரணங்களையொட்டி இந்தக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனையிலும் கைத்தறியை மாற்றிவிட்டு விசைத்தறியைப் புகுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைத்தறியே வேண்டாமென்று நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லிவிடக்கூடாது. கைத்தறிக்கு என்று ஒதுக்கப்படும் சில ரகங்களுக்கு இன்றைக்கும் வெளி நாடுகளில், வெளி மாநிலங்களில் சந்தை இருக்கத்தான் செய்கிறது.



இருக்கின்ற இடர்ப்பாடுகள் எல்லாம் கைத்தறித்துறை, விசைத்தறித்துறை, ஆலை என்று திட்டவட்டமாக மத்திய அரசின்கீழே இருந்தால் இப்படிப்பட்ட பாதுகாப்பை நாம் கொடுக்க முடியும். ஆகவே, நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்குக் கூறியிருக்கும் யோசனை, மத்திய அரசே அமல்படுத்த முன்வந்து உத்தரவுபோட்டு, அந்த உத்தரவிற்குள்ளாக ஊடே நின்று மாறாமல் தெளிவான ஆணையைப் பிறப்பித்து மத்திய அரசு அமல்படுத்தி தரும் என்று நாம் சொல்லி வருகிறோம்.

**திரு சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் நஷ்டத்திலே பணியாற்றுவதற்கும், உள்ள திறமையாகச் செயல்பட முடியாமல் இருப்பதற்கும் காரணம் இந்த விசைத்தறிகளோடு போட்டிபோட முடியவில்லை என்பதுதான் யதார்த்தமான காரணம். ஆகவே, மூன்று மாத ஸ்டாக்குக்கு மேலேயிருந்தால் அதை மாநில கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களே வாங்கி அதை அரசாங்கமே விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தால் தொடர்ந்து இந்தச் சங்கங்கள் செயல்படவும், அதிலிருந்து ஓரளவாவது வேலை கிடைக்கவும் உதவிகரமாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தென் மாவட்டங்களின் பிரதிநிதிகள் இப்படியே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் வட மாவட்டங்களில் ஏராளமான விசைத்தறிகளை நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பெறுகின்ற ஒரு துர்பாக்கியமான நிலையை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஏற்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

விற்பனையாகாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவருடைய தொகுதியிலேயே ஒரு சங்கத்திற்கு அவரையும் அழைத்துச் சென்றேன். அங்கே உற்பத்தியாகின்ற பொருள்களை வாங்குபவர்களே இருக்க மாட்டார்கள் என்று கருதத் தக்க அளவிற்கு ரொம்ப சாதாரணமான ரகத்தை உற்பத்தி செய்கிறார்கள்.

புதிய ரகங்களை உற்பத்தி செய்கின்ற முயற்சியிலே வெற்றி பெற்றால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். பிரைமரி கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளிலிருந்து மாநில சங்கம் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்பொழுதே ஏராளமாக வாங்கப்படுகிறது. ஆனால் அங்கே கோவில்பட்டியிலே தேங்குவதற்கு பதிலாக சென்னையிலே வந்து தேங்குவது எப்படி முற்போக்காகும், நல்லதாகும் என்பதையும் யோசிக்க வேண்டுமென்றுகேட்டுகொள்கிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி :** கூட்டுறவு சொசைடி நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டில் எத்தனை இண்டஸ்ட்ரிஸ் அந்த மாதிரி நஷ்டத்தில் ஓடுகின்றன? எத்தனை லாபமாக ஓடுகின்றன? கோவாப்டெக்சில் வேலை செய்ய நிறையத் தொழிலாளர்கள் விரும்புகிறார்கள். கரூர் போன்று பெரிய கேந்திரமாக உள்ள பகுதிகளில் தொழிலாளர்கள் கஷ்டம் இல்லாமல் வேலை செய்யும் வகையில் இது விரிவுபடுத்தப்படுமா ? முற்பகல் 9-30

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் பற்றிச் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். அதுதான் நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை

ஏராளமான தொழில் கூட்டுறவுச் சங்கங்களை நாமே தொடங்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். மற்றத் தொழில்களில் நஷ்டம் வரும் காரணத்தால் கைத்தறியிலும் நஷ்டம் வரலாம் என்ற வாதத்தைச் சொல்லுவது போல் தோன்றுகிறது. அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

**திரு. ருப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** இன்று கைத்தறிக்குப் போட்டியாக இருப்பது மில்கள் மாத்திரமல்ல. நான்கு யூனிட்டுகள் கொண்ட பவர் லூம்கள் தான் பெரிய போட்டியாக இருக்கின்றன. அரசு சமீப காலத்தில் இதற்குச் சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. லைசென்ஸ் ஃபீ, சேல்ஸ்டாக்ஸ் ஆகியவற்றில் சலுகை கொடுத்திருக்கிறது. இதிலே 1,500 ரூபாய் வரை அதிக லாபம் கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் பல பேர் இந்த நான்கு யூனிட்டு பவர் லூம்ஸ் நடத்தி மத்திய அரசிடமிருந்து சலுகைகளைப் பெறுகிறார்கள், நல்ல லாபம் பெறுகிறார்கள். ஒன்று இந்த பவர் லூம்லை அனுமதிக்கக்கூடாது அல்லது மற்ற மில்களுக்குப் போடுவது போல் இவற்றுக்கும் வரி விதித்தால் 200 கோடி ரூபாய்க்கு வருமானம் கிடைக்கும். அந்த முறையில் இதற்கு வரி விதிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்த முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய அரசாங்கத்தை பொறுத்த வரை விசைத்தறி நெசவாளர்களுக்கு மட்டும்தான் கூட்டுறவுத் துறைக்கு மட்டும்தான் தனி மாஸ்டர் வீவர்களுக்குக் கிடையாது என்ற கொள்கையைத்தான் பின்பற்றி வருகிறோம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது மற்ற மாநிலங்களின் கொள்கையின் விளைவாக நம்முடைய மாநிலத்தில் விசைத்தறித் துணிகள் கைத்தறித் துணிச் சந்தையைப் பாதிக்கிறது என்பதாகும். அதைத்தான் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசிடம் தொடர்ந்து எடுத்துக் காட்டி வருகிறது.

**திரு. கே. கந்தசாமி :** லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க கூடிய கூட்டுறவு சங்கங்கள் நஷ்டத்தில் ஓடக் காரணம் நெசவாளர்களும் அதை நிர்வகிக்கக்கூடிய நிர்வாகிகளும் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் இதை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய, அவை வெற்றிகரமாக நடைபெற சீரணிப் படையினர், பொது நல அதிகாரி போன்றவர்கள் மூலம் அறிவுப் பயிற்சி கொடுக்கவும், கடமை உணர்ச்சியை எடுத்துக் காட்டவும் வழிவகுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினை. சீரணி அறிவுரையால் மாறுதல் ஒன்றும் ஏற்படுத்த முடியாது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஆங்காங்கு நல்ல முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற ஒத்துழைப்பை நெசவாளர்களிடத்திலிருந்து பெற்றுத் கருவார்களானால் வெற்றி பெற முடியும்.



### வாலாஜாப்பேட்டையில் கம்பளி நெசவுத் தொழிற்சாலை.

* 870 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜாப்பேட்டையில் கூட்டுறவுத் துறையில் ஒரு கூட்டுறவு கம்பளி நெசவுத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** வளர்ந்து வரும் தொழில் நிலவரத்திலே நமது அரசாங்கம் அக்கறை கொண்டு வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக கம்பளத் தொழில் சீரும் சிறப்போடும் நடந்து வருகிறது. அதைத் தற்போது தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அதனால் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதைக் கூட்டுறவு முறையில் தொடங்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு முறையில் தொழில் தொடங்க நம்முடைய அரசாங்கம் முழு ஒத்துழைப்புத் தரும். அதைத் தொடங்குபவர்கள் யார் எனபதுதான் பிரச்சினை. மாண்புமிகு அங்கத்தினர் போன்றவர்கள் அவருடைய தொகுதி இது போன்ற முயற்சி எடுத்தால் உதவி செய்யலாம். ஏற்கனவே இரண்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் கம்பளிக்காகத் தொடங்கப் பட்டு இரண்டும் நஷ்டத்தில் நடக்கின்றன.

### தோவாளை வட்டத்துக்கு முன்சீப் கோர்ட்

* 871 வினா—**திரு வி. கே. இராஜாப்பிள்ளை :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா ?

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலூக்காவில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஏற்கனவே தோவாளையில் ஒரு கோர்ட் இருந்தது. ஆகவே, அரசாங்கம் மறு பரிசீலனை செய்து அங்கு ஒரு முன்சீப். கோர்ட்டை அமைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உயர்நீதிமன்றம் இப்போதைக்கு அந்த இடத்தில் நீதி மன்றம் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இதைப் பற்றிப் பரிசீலிக்கும் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள். கமிட்டி அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி போடப்பட்டு ஏறத்தாழ ஓராண்டுக் காலம் ஆகப் போகிறது. அந்த ரிப்போர்ட் எப்போது வரும் ? அதனுடைய அம்சங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தக் குழுவைப் பொறுத்த வரை கடுமையான வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் போட்டி இருக்கிறது. பொதுமக்களும் இங்கு வேண்டும் அங்கு வேண்டுமென்று போட்டியிடுகிறார்கள். வழக்கறிஞர்களும் போட்டியிடுகிறார்கள். நாம் கேட்டிருப்பது நீண்ட நாட்களுக்கு முன்னால் வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் நீதிமன்றங்கள் எல்லை வகுக்கப்பட்டு பல மாற்றங்கள் இன்று ஏற்பட்டிருக்கின்ற நிலையில் மக்கள் வசதிக்கேற்ப, வழக்குரைஞர்கள் வசதிகளையும் கணக்கில் எடுத்து அறிக்கை தயாரித்துக் கொடுக்கச் சொல்லி இருக்கிறோம். அவர்கள் நாடு முழுவதும் சுற்றி மக்கள் பிரதிநிதிகளை எல்லாம் சந்தித்து அறிக்கை தயாரிக்க வேண்டியிருப்பதால் இதிலே காலதாமதம் ஏற்படுவது நியாயந்தான் என்று கருதுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சில பகுதிகளில் மூன்று முன்சிப் கோர்ட்டுகள் இருக்கின்றன. சில பகுதிகளில் இரண்டு இருக்கின்றன. சில பகுதிகளில் இல்லை. இப்படி ஒரு சில இடங்களில் குவியலாக இருக்கும் காரணத்தால் இதைப் பரவலாக்கும் அடிப்படையில் கமிட்டியின் பரிந்துரை அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** டீசென்ட்ரலைசேஷன் ஆப் கோர்ட்ஸ் என்ற அடிப்படையை வைத்து சில பகுதிகளில் இருக்கும் கோர்ட்டை எடுக்கும்போது அங்கு வேலை பார்க்கும் வழக்குரைஞர்கள் ஆட்சேபிக்கிறார்கள். மதுரைக்குத் தனி உயர்நீதி மன்றப் பிரிவு வேண்டுமென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உற்சாகத்தோடு வலியுறுத்தியிருக்கிறார்கள். அவருக்குப் பின்னால் உள்ளவர்கள் எதிர்க்கிறார்கள். இப்படிப் பல பிரச்னைகள் இருக்கும் காரணத்தால் கவனமாகச் செல்ல வேண்டியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இருப்பதை எடுக்காமல் இன்னும் பல இடங்களுக்கு அதிகமாகக் கொடுக்க என்ன செய்ய வேண்டுமோ அந்த முறையில் செய்ய வேண்டுமென்று இந்தக் கமிட்டிக்கு அரசு ஆலோசனை கூறுமா ? அந்தக் குழுவிலே அங்கம் வகிப்பவர்கள் யார் யார் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** டீசென்ட்ரலைசேஷன் என்றால் இருப்பதை எடுத்துத்தான் இன்னொரு இடத்திற்குக் கொடுக்க வேண்டும். அதைத்தான் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஆதரிக்கிறார்கள். அதைத்தான் இந்த அரசாங்கம் ஆதரிக்கிறது. வேலை அதிகமாகி இருக்கின்ற நிலையில் புதிய நீதிமன்றம் வேண்டுமென்றால் அதைக் கொடுக்கத் தயங்கமாட்டோம். இந்தக் குழுவில் மாவட்ட நீதிபதி திரு. வரதராஜன், ஐ.ஏ.எஸ். அலுவலர் திரு. ரகுபதி ஆகிய இரண்டு பேர் இருக்கின்றனர்.

**திரு. கோவை செழியன் :** வழக்குகள் உடனுக்குடன் பைசலாவதற்காக மொபைல் பெஞ்ச் ஒன்றை மதுரை, கோவை, சேலம் ஆகிய இடங்களில் குறிப்பிட்ட நாட்களில் வைத்து ஜட்ஜுகளை அனுப்பி வைத்து கேஸ்களை உடனடியாக முடிவு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காம்ப் கோர்ட் என்ற முறையில் இது ஒரு நல்ல யோசனை. ஒவ்வொரு நீதிபதியும் ஒவ்வொரு பிரிவைப் பார்க்கிறார்கள். ரிட் அப்பீல், செகண்ட் அப்பீல் என்ற முறையில் தனித் தனியாகப் பார்க்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வேலைகளை மாவட்டங்கள் தோறும் சென்று பார்க்க வேண்டுமென்பதோடு இல்லாமல், விவகாரங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும்போது, குறிப்பாக மதுரை என்று எடுத்துக்கொண்டால் எப்படி எப்படி கொஞ்சம் கொஞ்சமாகப் பரவலாக உடனடியாக நீதி கிடைக்க வழிவகைகள் செய்யலாம் என்பது தான் அரசாங்கத்தின் கொள்கையாகும். உயர்நீதி மன்றம் இதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.



**திரு. ஜே. ஜேம்ஸ் :** இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிற நிலையில் மதுரையில் ஒரு உயர்நீதி மன்றம் தரலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமென்று அரசு பரிந்துரை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தளவிற்கு இந்தக் குழுவிற்கு அதிகாரம் கிடையாது.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** ஒவ்வொரு தாலுகா தலைமை இடத்திலும் ஒரு முன்சிப் கோர்ட் அல்லது முன்சிப்-கம்-சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைத்துக் கொடுக்கும் உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த நல்ல யோசனையை நம் வழக்குரைஞர் சொல்கிறார்கள். ஆனால் அங்குள்ள வழக்குரைஞர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கூடாது என்று சொல்கிறார்கள். ஆகவே, இதை உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பி அவர்கள் தான் இதை முடிவு செய்யவேண்டும். சில இடங்களில் எஸ்.டி.எம்.-கம்-முன்சிப் கோர்ட் செயல்பட்டு வருகின்றன. வட்டம் தோறும் அப்படிச் செயல்பட்டால், ஆந்திர மாநிலத்தில் இருப்பதைப் போல், உடனடியாக நீதி கிடைக்க ஒரு வசதி இருக்கும் என்ற கருத்தும் இருக்கிறது.

## மதுரையில் வக்பு வாரியத்தால் நடத்தப்படும் கல்லூரி.

***872 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வக்பு போர்டால் மதுரையில் நடத்தப்படும் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கடந்த ஆறு மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் முடிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** இந்த வக்பு வாரியத்திற்கு நிறைய மூலதனம் இருந்தும்கூட இப்படிச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? அலுவலர்களுக்குக்கூட சம்பளம் சரியாகக் கொடுக்கப்படுவதில்லை என்று புகார் கூறப்படுகிறது. ஆகவே, இனிமேலாவது ஒழுங்காக சம்பளம் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தக் கல்லூரியில் மாணவருக்கு ரூ. 76 வீதம் கொடுத்து வந்தார்கள். அதை ரூ. 60 ஆகக் குறைத்து விட்டார்கள். இந்த காலேஜ் என்டோமென்ட் ப்ராபர்டி

மூலம் அந்தச் சொத்தை மதுரை மாநகராட்சி மூலம் அரசு எடுத்து 1,63,866 ரூபாய் கோர்ட்டில் டெப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது. அதை வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காலேஜ் நடத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இந்தக் கல்லூரி மாநிலத்தில் உள்ள ஏனைய கல்லூரிகளுக்கு ஏற்ப சீராக நடைபெறவில்லை என்று மக்களிடம் பரவலாக ஏதாவது குறைபாடு உண்டா? இதைச் சீர் செய்ய அரசாங்கம் எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் என்ன? மேலும் இது ஒரு இஸ்லாமிய அறநிலையத்தினுல் நடத்தப்படும் கல்லூரியாதலால் அதில் விரும்புகிற மாணவர்களுக்கு இஸ்லாமிய கலாசாரத்தைப் போதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தக் கல்லூரி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இதில் இடம் கிடைக்கவில்லை என்றுதான் மாணவர்கள் குறைபட்டுக்கொண்டிருக்கிருர்கள். உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பரிசீலிக்கப்பட்டு இஸ்லாமிய மத மார்க்க சம்பந்தமான காரியங்களைச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதுரையில் உள்ள இந்தக் கல்லூரிக்கு அரசு தனியாக ஒரு இடம் கொடுத்திருக்கிறது. இன்னும் கூட கட்டட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. நேற்று நடந்த விவாதத்தின்போது வக்பு போர்டுக்கு 100 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்து இருப்பதாகவும் ஆனுல் ஆறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள்தான் கையில் இருப்பதாகச் சொன்ஞர்கள். இந்தச் சொத்துக்கள் கிடைக்க துரித நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து இந்தக் கல்லூரி செம்மையாக நடக்க உதவி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தச் சொத்துக்களின் மூலம் வருகிற வருமானத்தில் 6 சதவிகிதம் காண்ட்ரிப்யூஷன் கொடுக்கிருர்கள். இந்த 6 சதவிகிதம் என்பது இந்த போர்ட் நடத்தும் செலவினங்களுக்குப் போதாதிருக்கிறது. இந்தக் கல்லூரிக் கட்டடம் கட்ட பொதுமக்கள் நன்கொடையை எதிர்பார்க்கிருர்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவாகக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும்.

Thiru K. T. K. THANGAMANI: Sir, the Hon. Minister has not answered my supplementary. Has the Wakf Board enough property, it was asked. He himself admitted that there was so much property. The question put was what steps have been taken to realise the 6 per cent, which will be enough to run the institution?

Mr. SPEAKER: Your supplementary does not arise from the main question. This question is about college run by Wakf Board. Your question is broader. The Hon. Minister is entitled to answer or not.



Thiru K. T. K. THANGAMANI: A supplementary question was raised about Wakf Board.

Mr. SPEAKER: Your question does not pertain to the main question.

Thiru K. T. K. THANGAMANI: The supplementary put by Thiru Wahab referred to this Wakf Board and its properties.

Mr. SPEAKER: That is also a broader supplementary. That does not pertain to the main question.

Thiru K. T. K. THANGAMANI: My supplementary arose out of that supplementary.

Mr. SPEAKER: Simply because one gentleman commits a mistake, it does not justify another committing the same error. Your supplementary is broader. It does not arise from the main question. The Hon. Minister is entitled to answer or not. How can you demand an answer from him?

Thiru K. T. K. THANGAMANI: My question arose out of the supplementary put by Mr. Wahab. The Hon. Minister can say he wants notice.

Mr. SPEAKER: Your supplementary does not pertain to the main question at all.

Thiru K. T. K. THANGAMANI: My supplementary arose out of the answer of the Hon. Minister to the supplementary question of Mr. Wahab.

Thirumathi JOTHI VENCATACHELLUM: The College in question is the property of Wakf Board. The Wakf Board has got enough property. The question is why when it has got funds, the teachers have not been paid? So the supplementary of the Hon'ble member is quite relevant to the main question.

Mr. SPEAKER: The Hon. Minister has categorically said it has been paid, it has been disbursed. That was his answer even to the main question.

Thiru K. T. K. THANGAMANI: From February, they have not been paid.

Mr. SPEAKER: The Hon. Minister says categorically they have received salary. Is it correct?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: If the Hon. Member were to put a separate question, I will try to answer.

[1972 ஏப்ரல் 4

**திரு. கே. டி. கே. தங்கமணி** : இந்த ஆசிரியர்களுக்கு பெப்ரவரி மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன் ?

MR. SPEAKER : The Hon. Minister has not answered whether it has been paid for February.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இந்தக் கேள்வி வந்த போது, பெப்ரவரி மாதச் சம்பளம் என்றால் மார்ச் மாதம்தான் கொடுக்கவேண்டும். ஜனவரி முடிய சம்பளம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கட்டடம் கட்டுவது சம்பந்தமாகக் கேட்டார்கள். பொதுமக்கள் நன் கொடையை எதிர்பார்க்கிறார்கள். சிலர் முன்வந்திருக்கிறார்கள். அதற் கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிக் கட்டடம் கட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஜனவரி மாதம் முடிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Wakf Board has got property worth Rs. 100 crores.

MR. SPEAKER : You are repeating what Thiru K. T. K. Thangamani has done. This question is about the college in Madurai run by the Wakf Board.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : That Wakf Board is so rich. Why should they wait for private donation ?

MR. SPEAKER : This is not allowed.

### மாரியம்மன் கோவில் சமுத்திரம் நீர்நிலை.

***873. வினு—திரு ந. சோமசுந்தரம்** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் சமுத்திரம் எனும் நீர்நிலை தண்ணீரை இறவை பாசனம் ( Lift Irrigation ) மூலம் விவசாயத் திற்கு பயன்படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா** : இந்த மாரியம்மன் கோவில் சமுத்திரத்தைப் பலர் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த ஆக் கிரமிப்பை வெளியேற்றி லிப்ட் இரிகேஷன் செய்து கொடுத்து விவசாயத் திற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்க முன்வருமா?



1972 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : ஆக்கிரமிப்பு பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். இந்த ஏரி சிறு பாசனத் திட்டத் தின் கீழ் ரூ. 97,500 செலவில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே உறுப்பினர் கோரியபடி நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

### வேப்பங்குளம் கால்வாய்

*** 874 வினு.—திரு. எம். முத்தையா** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவில்பட்டி தாலுகா வேப்பங்குளம் கால்வாய் மராமத்து செய்ய வேண்டி 28-4-1971-ல் மனுச் செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கையெடுத் துள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### எலும்பு உர உற்பத்தி நிலையங்கள்

***875 வினு.—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நடத்தப்படுகின்ற எலும்பு உர உற்பத்தி நிலையங்கள் லாபத்தில் இயங்குகின்றனவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : ஆம்.

**திரு. என். கிட்டப்பா** : லாபத்தில் நடந்து வருவதாக அறிவித்தார் கள். அதை விரிவுபடுத்தி இன்னும் சிலயிடங்களில் அத்தகைய உர உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் ஆவன செய்ய முன் வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்** : இப்போது நான்கு இடங் களில், கோவை மாவட்டத்தில் எருங்காட்டூர், மதுரை மாவட்டத்தில் எழுமலை, கூடலூர், நெல்லை மாவட்டத்தில் ராயகிரி ஆகிய ஊர்களில் எலும்பு குறைந்த விலையில் கிடைக்கிறது. இங்கே எலும்பைப் பொடியாக்கி உரம் ஆக்கும் தொழிற்கூடங்கள் நல்ல முறையில் இயங்குகின்றன. நன்கு இயங்கக் காரணம் பக்கத்தில் காடு இருக்கிறது. எலும்புகள் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. விரிவுபடுத்த செயற்குறிப்பு இல்லை.

[1972 ஏப்ரல் 4

## வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து மாம்பழச்சாறு ஏற்றுமதி

* **876 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971–ஆம் ஆண்டில், வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு மார்க்கெட்டிங் சப்ளை சொசைட்டியிலிருந்து ரஷ்யாவுக்கு மாம்பழ ரசம் ஏற்றுமதி செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அது எவ்வளவு ரூபாய் மதிப்புள்ளது?

(உ) மாம்பழ ரசம் அனுப்பக்கோரி வேறு நாடுகளிலிருந்தும் ஆர்டர்கள் ஏதேனும் வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) ரூ. 1·46 லட்சம்.

(உ) இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** வெளிநாடுகளில் நம் நாட்டில் தயாரிக்கும் மாம்பழ ரசத்தை மிகவும் விரும்பிச் சாப்பிடுவதாகக் கேள்விப்படுகிறோம். ஆகவே, மேலும் இதை ஏற்றுமதி செய்வதற்கு இதர நாடுகளுடன் நம் அரசாங்கம் தொடர்பு வைத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்:** இதர நாடுகளோடு அல்ல, இதர நாட்டிலுள்ள வாணிக நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

**திருமதி. த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, ரூ. 1 லட்சம் பெறுமான ஜூஸ் போய் இருக்கிறது என்று சொல்கிறார்கள். மீண்டும் அதிகமாகத் தேவை என்று ஆர்டர்ஸ் வந்து இருக்கிறதா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, (உ) என்ற உப கேள்வியில் ஆர்டர்கள் இல்லை என்று ஏற்கெனவே நான் பதில் சொன்னேன். ஆனாலும் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டு வருகின்றன.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அந்நியச் செலாவணி ஈட்டித் தருகின்ற அந்தத் தொழிற்சாலையில் சென்ற ஆண்டு ரூ. 1,46,000 அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைத்து இருக்கிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு வருஷத்திற்கு 3 மாதம் மட்டுமதான் இந்த மாம்பழச்சாறு தயார் செய்ய முடிகிறது. மீதியுள்ள மாதங்களில் மூடிக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு மாம்பழச்சாறு தவிர மற்ற சீசன்களில் வேறு பழரசம் தயாரிக்க நடவடிக்கை எடுப்பார்களா?



1972 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தக்காளி ரசமும் தயாரிக்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, மாம்பழ ஜூஸிலிருந்து அல்வா தயாரிக்கிறார்கள். அது இன்னும் அதிகமான நாட்களுக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, ஜூஸிலிருந்து அல்வா தயார் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, அல்வா தயாரிப்பதாக இல்லை. ஆனால் இறுக்கமான சாறு தயார் செய்யப்படுகிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, மாம்பழச்சாறுக்குக் கிராக்கி இருப்பது போல் வாழைப்பழத்திற்கும் வெளிநாட்டில் அதிகக் கிராக்கி இருக்கிறது. வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்தால் கெட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அதையும் பதப்படுத்தி, ரசமாக்கி வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, வாழைப்பழத்தை டின்களில் அடைக்காமல் அனுப்ப வேண்டியிருக்கிறது. அதை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வேலூரிலிருந்து அனுப்பப்படுவது ரசங்கள். அவற்றை டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.

**திரு. எஸ். முருகையன்:** தலைவரவர்களே, சென்ற ஆண்டு இந்தப் பழச்சாறு தொழிற்சாலை எத்தனை நாள் வேலை செய்தது, எவ்வளவு இலாபம் வந்தது? அதிகப்படியான இலாபம் கிடைப்பதற்கு வெளிநாட்டிற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்று இருந்தார்களா, எவ்வளவு ஆர்டர்கள் வாங்கிக்கொண்டு வந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்:** எத்தனை நாள் வேலை செய்தது என்ற குறிப்பு என்னிடத்தில் இப்போது இல்லை. ஆனால், ஏறத்தாழ 80 டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 100 இலாபம் கிடைத்தது. வெளிநாட்டிற்குச் சென்று பார்த்து மார்க்கெட் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. வெளிநாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களோடு நாம் இப்போது பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

**THIRU K. M. SUBRAMANIAM:** Has this Government thought about producing dry jams out of plantains and jack fruits as in Kerala ?

**THE HON. THIRU SI. PA. ADITANAR:** Sir, samples of Jam were produced in this factory. But there was no sale for it. Therefore, it is not being produced in quantity.

## நாகப்பட்டிணம் துறைமுகம்

* 877 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து வரும் கப்பல்களை குறிப்பாக சென்னைக்கு அடுத்தாற்போல் உள்ள நாகப்பட்டினத்தில் மட்டும்தான் பயணிகள் கப்பல் நிறுத்தப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்த அதற்கு அரசு ஏதாவது ஏற்றுறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, அந்த நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நானே அனுபவித்திருக்கிறேன். ஆனால் இப்போது அந்தத் துறைமுகத்தில் 2 லட்சம் டன் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வசதி இருக்கிறது. ஆகவே விரிவுபடுத்துவதற்கு உடனடியாகத் தேவையில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, சிறு துறைமுகங்களை மேம்பாடு செய்வதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது சிறப்புத் திட்டத்தை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, சிறு துறைமுகங்களை மேம்படுத்துவது என்பது, நாகப்பட்டினம், குளச்சல் இவைகளுக்கு மட்டுமல்ல. கடலூர் போன்ற துறைமுகங்கள் இருக்கின்றன. கடலூர் விரிவுபடுத்தப்படுகின்றது. அந்த வேலை துவங்கப்பட்டு, அந்தப் பணி நிறைவேறுகிற தறுவாயில் இருக்கிறது.

திரு. த. [illegible] : தலைவரவர்களே, நாகப்பட்டினத்தில் கப்பல் ஏறுவதில் எவ்வளவு சங்கடம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே உணர்ந்து இருக்கிறார்கள். ஆகவே, கப்பல் ஏறுகிற பிரயாணிகளுக்கு சௌகரியமாக ஒரு நடைபாலத்தை அந்தக் கப்பல் இருக்கிறவரையில் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது சாத்தியமான ஒன்றுமில்லை. ஜெட்டிப் பாலம் நாகப்பட்டினத்தில் ஒரு மைல்கூட இல்லை 1—2 பர்லாங்குதான் இருக்கிறது. கப்பலின் குளச்சல் போன்ற இடங்களில் வருவது போல் கரைக்கருகே அருகில் வரும் சாத்தியக் கூறுகள் இல்லை.



## *Agro Industries Corporation*

***878 Q.—Dr. H. V. HANDE:** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Agro Industries Corporation Limited has come forward to sell Tractors, Power Drills, etc., from 20th September 1971 onwards at Guindy, Madras : and

(*b*) if so, the details thereof and the reasons therefor ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) & (ஆ) பேரவையின் முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

## டிராக்டர் பழுது பார்க்கும் தொழிற்சாலைகள்.

* 879. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் தொழிற் கழகத்தின் சார்பில் டிராக்டர் பழுது பார்க்கும் தொழிற்சாலை தற்போது எங்கெங்கு துவக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கீழ்க்கண்ட இடங்களில் டிராக்டர் பழுது பார்க்கும் பட்டறைகள் (Workshops) துவக்கப்பட்டுள்ளன:—

காஞ்சிபுரம்.

திருச்சிராப்பள்ளி.

மதுரை.

சேலம்.

விழுப்புரம்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, இந்தப் பழுதுபார்க்கும் தொழிற்சாலை பெரும்பாலும் பெரிய நகரங்களில் இடம்பெற்று இருக்கின்றன. இப்போது ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு டிராக்டரோ, அல்லது அதிகமாக 5 டிராக்டர்களோ இருக்கும் அளவுக்கு கிராமப்புறங்களில் டிராக்டர்களை விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். அதை முன்னிட்டு ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்திலும், ஒவ்வொரு தொகுதியின் தலைநகரத்திலும் டிராக்டர் பழுது பார்க்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன் வருமா?

---

@ 369—374-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இந்த ஐந்து வட்டார நிலையங்களில் ஒவ்வொரு நிலையத்தின் கீழும் 3 துணை நிலையங்கள் இருக்கும் விதத்தில் 15 துணை நிலையங்களைத் திறக்கவும், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் கருதியுள்ளது. பரமக்குடி, திருநெல்வேலி, ஈரோடு, பொள்ளாச்சி, இராசிபுரம், அல்லது தர்மபுரி, புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, மாயூரம், கடலூர் முதலிய இடங்களில் துணைக்கூடங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. மு. பழநிவேலன் : தலைவரவர்களே, கோவையிலே இதைப் போன்ற வேளாண்மைக் கருவிகளைப் பழுதுபார்க்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், டிராக்டர்கள் ஒதுக்கீடு செய்தவர்களுக்குக் காலாகாலத்தில் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் சிம்சன் தொழிற்சாலையில் ஏற்பட்ட வேலைநிறுத்தம்தான் என்று சொல்லப்படுகிறது. காலாகாலத்தில் டிராக்டர்கள் கிடைக்கச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வருகின்ற ஆண்டில் அதற்கான அதிகமாக டிராக்டர்கள் வாங்கிக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதுவும் குறிப்பாக உலக வங்கியின் உதவியின் மூலம் 1,500 டிராக்டர்கள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கத் திட்டம் உள்ளது. மேலும், உள்நாட்டில் தயாரிப்பை அதிகரிக்கும் வகையிலும் ஏற்பாடுகள் நடந்து கொண்டு வருகின்றன.

திரு. ஜெ. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, தாலுக்கா தலைநகரங்களில் இந்த மாதிரி தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். அப்படியானால் டிராக்டர்கள் மற்றும் விவசாயக் கருவிகள் பழுது பார்ப்பதற்கு மொபைல் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் ஒரேயடியாக இல்லை என்று சொல்லவில்லை. திருக்காவேரிப்பாக்கம், செங்கற்பட்டு, வடார்க்காடு மாவட்டங்களில் பிராந்தியக்கூடங்கள் வைத்து இருக்கிறோம். புதிதாக பரமக்குடி, திருநெல்வேலி, ஈரோடு, பொள்ளாச்சி, இராசிபுரம், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, மாயூரம், கடலூர் முதலிய இடங்களில், துணைக்கூடங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினேன். மூன்று கிளைகள் ஏற்படுத்தும் திட்டமும் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மொபைல் வைப்பதற்கான தேவையில்லை. அதிகமான டிராக்டர்கள் இருக்கிறபோது, அவற்றைப் பழுது பார்ப்பதற்குப் பெரும் அளவில் வைக்கலாம். அதற்குச் சில உத்தேச நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



1972 ஏப்ரல் 4]

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, சிறிய விவசாயிகள் நம் நாட்டில் ஏராளமாக இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய உச்சவரம்புச் சட்டத்தின் காரணமாக, ஏராளமான பெரிய பெரிய விவசாயிகள்கூட இன்றைக்குச் சிறிய விவசாயிகளாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். சிறிய டிராக்டர்கள், அதாவது ரஷ்யன் டிராக்டர்கள் டி.டி. 14 ஏறத்தாழ ரூ. 10,000-க்குக் கிடைக்கிறது. அதை வரவழைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த ரூ. 10,000 விலையில் கிடைக்கும் டிராக்டரை விவசாயிகள் வாங்குவதற்குப் பயப்படுகிறார்கள். காரணம் 25 குதிரை வேகத்தில் உள்ள மற்ற டிராக்டர்கள் ரூ. 25,000, ரூ. 30,000-க்குக் கிடைக்கிறது. ஆகவே, இந்த 10 எச்.பி. டிராக்டரை ரூ. 10,000 கொடுத்து வாங்க விவசாயிகள் முன்வரத் தயங்குகிறார்கள். இந்தியாவிலேயே 2 இடங்களில்தான் தயாரிக்கிறார்கள். அதைக் குறைந்த விலையில் தயாரித்துத் தர முடியுமா என்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. நாமும் சென்னையிலேயே அந்த டிராக்டர்களைத் தயாரிப்பதற்கு நம்முடைய அக்ரோ இன்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். எப்படிச் செய்தாலும் மக்களுக்குக் குறைந்த விலையில் அது கிடைக்க வேண்டுமென்ற நிலைமை இருப்பதால், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தப் பட்டறைகளெல்லாம் அக்ரிகல்சரல் இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக நடத்தப்படுகின்றன. முற்பகல் 10-00
அதற்குப் பதிலாக அந்த டிராக்டர்களை விற்கின்ற வியாபாரிகளே இந்தப் பட்டறைகளை எடுத்து நடத்துவதற்கு எல்லாவிதமான வசதிகளும் அளிக்கப்படும் என்று முன்பு ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில் விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அவர்களுக்கே அந்த வசதிகளைக் கொடுத்து, அந்தப் பட்டறைகளை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ? அம்மாதிரி செய்தால் துரிதமாக வேலை செய்வதற்கு வழி பிறக்கும் என்ற காரணத்தினால், அம்மாதிரி ஏதாவது ஒரு செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் சொல்வது கொள்கையைப் பொறுத்தது. தனியார் கையில் ஒப்படைப்பதா அல்லது சர்க்கார் ஆதரவில் நடத்துகின்ற ஸ்தாபனங்களிடம் ஒப்படைப்பதா என்பது கொள்கை பற்றிய பிரச்னை. ஆகவே, தனியார் கையில் கொடுக்கக் கூடுமா, கூடாதா என்ற கேள்விக்கு இப்பொழுது பதில் சொல்ல முடியாது.

திரு எ. எம். இராஜா: இப்பொழுது வெளிநாடுகளிலிருந்து வருகிற டிராக்டர்களில் கரும்புக் காடுகள் இருக்கிற பகுதிகளில் பயன்படுத்தக் கூடியது ரஷ்யன் மேக் பைலாரஸ் டிராக்டர். அது மிகவும் நல்ல முறையில் பயன்படுகிறது. பாக்கி எந்த டிராக்டரைக் கொண்டு போய்ப் பயன்படுத்தினாலும், ஒரு ஏக்கர் உழுதவுடனேயே ரூ. 2,000, 2,500 ரிப்பேர் செலவு ஆகிறது. ஆகவே, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற டிராக்டர்களில் யு. 650, யு. 500 போன்றவைகளை விட்டுவிட்டு பைலாரஸ் 500 டிராக்டர் மட்டும் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. எ. ஆர். சுப்பையா : வொர்க் ஷாப்களில் ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ரிப்பேர் செய்வதோடு, ஸ்பேர் பார்ட்ஸ் வேண்டுமென்றால், ஸ்பேர் பார்ட்ஸையும் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு அனுகூலமாக, ஆங்காங்கு ஸ்பேர் பார்ட்ஸும் வைப்பதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஸ்பேர் பார்ட்ஸ் தனியாக தலைநகரங்களில் வைப்பது மட்டுமல்ல, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான திட்டம் இப்போது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது. கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு டிராக்டர்களை ரிப்பேர் செய்து கொள்வதற்கு வசதிகள் அளிப்பதோடு மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டிய போதிய ஸ்பேர் பார்ட்ஸ்களைக் கொடுப்பதற்கான ஏற்பாடு வெகு சீக்கிரம் செய்யப்படும்.

### உழவர்களுக்கு ஊக்கமளித்தல்

* 880 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அதிக அளவில் உற்பத்தி செய்யும் உழவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கி, பட்டமும் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கிராம, வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில் ஆண்டு தோறும் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு பயிர்கள் குறித்து நடக்கும் விளைச்சல்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் மாநில அரசால் வழங்கப்படுகின்றன. இவை தவிர ஆண்டுதோறும் மாநில அளவில் நடக்கும் போட்டிகளில் முதல் பரிசுகள் பெறுபவர்களுக்கு "வேளாண்மைச் செம்மல்" என்ற பட்டத்தை வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : இந்தப் பரிசுகள் வழங்கும்பொழுது ஒவ்வொரு பயிருக்கும், உதாரணமாக ஒரு ஏக்கரில் நெல் அதிக விளைச்சல் செய்கிறார்கள், ஒரு ஏக்கரில் கரும்பு அதிக டன் உற்பத்தி செய்கிறார்கள், ஒரு ஏக்கரில் வாழை அதிகமான அளவுக்கு விளைச்சல் செய்கிறார்கள், இப்படி ஒவ்வொரு தரத்திற்கும் ஒரு பரிசு தர, பட்டம் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாநில அளவில் சோளம், கம்பு, கேழ்வரகு பயிர்கள் குறித்து நடக்கும் விளைச்சல் போட்டி



கள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்றன. கொடுக்கப்படுகின்ற பரிசுகளின் விவரங்கள் பின்வருமாறு :

கிராம அளவில்—ரூ. 10.

வட்டார அளவில்—முதல் பரிசு ரூ. 100.
இரண்டாம் பரிசு ரூ. 50.

மாவட்ட அளவில்—முதல் பரிசு ரூ. 300.
இரண்டாம் பரிசு ரூ. 200

மாநில அளவில்—முதல் பரிசு ரூ. 2,000.
இரண்டாம் பரிசு ரூ. 1,000
மூன்றாம் பரிசு ரூ. 500.

இந்தப்பரிசுகள் தவிர, பரிசு பெறுபவர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட போட்டிகளுக்கு மேலாக, உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக அனைத்திந்தியப் பயிர் விளைச்சல் போட்டி ஒன்றும் உள்ளது. இது மத்திய அரசால் நடத்தப் பெறுகிறது.

ஒவ்வொரு பயிர் குறித்தும் அனைத்திந்திய அளவில் மூன்று பரிசுகள் கீழே கண்டவாறு வழங்கப்படுகின்றன:

முதல் பரிசு—ரூ. 3,000.
இரண்டாம் பரிசு—ரூ. 1,200.
மூன்றாம் பரிசு—ரூ. 800.

இப்படிப்பட்ட ஊக்கங்கள் தரப்படுகின்றன. தனியாகக் கரும்புக்கு இருக்கிறதா என்ற விவரம் இல்லை. இல்லையென்றால், அதற்கும் இப்படிப்பட்ட திட்டத்தைச் செய்ய முயற்சிக்கிறோம்.

### *Artificial rain*

*881 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the success, if any, achieved so far in the field of artificial rain making experiments conducted in the State ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1955–1967 ஆண்டுகளில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகளிலிருந்து, செய்முறையின் வெற்றியை உறுதியாக கூற முடியாவிட்டாலும் மேகத்தைத் தூண்ட கால்சியம் குளோரைடு மற்றும் சோடியம் குளோரைடு சேர்ந்த கலவையை உயர் உஷ்ண நிலையில் ஆவியாக மாற்ற ஒரு ஆவியாக மாற்றும் கருவிக்குப் (Vaporizer) பதிலாக, பல ஆவியாக மாற்றும் கருவிகளைப் பயன்படுத்தினால், செய்முறையின் வெற்றிக்கு வாய்ப்புக் கூறுகள் அதிகமாகும். அதிகச் செலவின் காரணமாக இப்பரிசோதனைகள் தொடர்ந்து நடத்தப்படவில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தற்போது நாம் தீவிர பசுமைப் புரட்சித்திட்டத்தின் அடிப்படையில் பூமிக்கு அடியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து விளைச்சலை அதிகப்படுத்துகிற திட்டத்தில் ஈடு

பட்டிருக்கிறோம். அதற்குச் செலவும் குறைவு. ஆகவே, இந்த இயற்கை மழை பரிசோதனையை நாம் தொடர்ந்து அனுஷ்டிக்காமல் பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டு திட்டங்களை ஊக்கப்படுத்த அரசு மேலும் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போது பூமிக்கு அடியிலிருந்து கொண்டு வர வேண்டிய தண்ணீருக்காகத் திட்டங்களை நமது சர்க்கார் முழு மூச்சாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** சர்க்கார் இந்தப் பரிசோதனைக்கு ஒதுக்கிய தொகை மிகவும் குறைவு. இந்தப் பரிசோதனையை நடத்துவதற்கு அதிகப்படியான தொகை கேட்டார்கள். இது மிகவும் அவசியம் என்ற காரணத்தினாலும், அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் இந்தப் பரிசோதனை நல்ல வெற்றி பெற்று இருப்பதினாலும், நமது சர்க்கார் நிபுணர்களை அனுப்பி வெளிநாடுகளில் இந்தத் திட்டம் எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடக்கிறது என்று பார்த்து, நம்முடைய மாநிலத்தில் அதை அமுலாக்க வழிவகை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இந்தப் பரிசோதனை உலகில் எங்கும் வெற்றி பெற்று நடைமுறையில் இருப்பதாகத் தகவல் இல்லை. இருந்தாலும், ஒரு லட்ச ரூபாய் செலவில் 1955-ம் ஆண்டு இந்தப் பரிசோதனை செய்ய நல்ல குழு ஒன்றைப் போட்டு ஏற்பாடு செய்து நமது மாநிலத்தில் பல இடங்களில் சோதனை செய்தார்கள் என்றாலும், இது வெற்றி பெறவில்லை. மேலும், நமது இந்திய அரசு, இவ்வரசின் செயற்குறிப்பின்மேல், அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகம், புதுடில்லி, அணுசக்தி துறை, திட்டக்குழு மற்றும் இந்திய வானியல் துறைகளைக் கலந்தாலோசித்து, அவற்றின் கருத்துக்களின் மேல் இவ்வரசின் செயற்குறிப்பினை மறு ஆய்வு செய்யக் கேட்டுக்கொண்டது.

இந்திய வானியல் துறை கடந்த இருபது வருடங்களாக செயற்கை மழை உண்டாக்கும் பயிற்சிகளில் போதுமான அளவு திறன் பெற்றுள்ளதால், மழை உண்டாக்குதல் மற்றும் வானியலில் வெளிநாட்டு வல்லுநர்களை அழைக்க வேண்டிய அவசியம் இந்நிலையில் தேவையில்லை என்று வானியல் துறை கூறியது. பொதுவாக, இந்திய அரசு, ஐக்கிய நாடுகள் தூதுக்குழுவினை அழைக்க ஆதரவு தரவில்லை. மாநில நில-நீர் நெறியாளர், செயற்கை மழை உண்டாக்கும் பரிசோதனைகள் நடத்தத் தேவையில்லை என்றும், செயல்படுத்தத் தயாராகும்போது, திட்டத்தினை இந்திய அரசின் பரிசீலனைக்காக நாளடைவில் அனுப்பலாம் என்றும் தற்போது கூறியுள்ளார்.

**திரு. கோவை செழியன் :** விஞ்ஞானிகளால் மழை கொண்டு வர முடியவில்லை

> "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற முறையில் முயற்சி செய்து பார்க்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அந்தக் குறளுக்கு அவர்கள் சொல்கிற விளக்கம் சரியானதாக இல்லை. "பெய்யெனப் பெய்யும் மழை" அதாவது தன் கணவனுக்கு அவள் மழை போன்றவள் என்ற பொருளில் சொல்லியிருக்கிறது. தாய்மார்களைக் கூப்பிட்டு "போய், நீங்கள் மழை பெய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று சொல்லி, அப்படி மழை பெய்ய வேண்டும் என்று சொன்னவுடனேயே மழை பெய்யாவிட்டால், அவளுடைய கற்பில் சந்தேகம் வரும் என்ற காரணத்தினால், வள்ளுவர் ஜாக்கிரதையாக எழுதியிருக்கிறார். அந்தக் குறளுக்கு அது அர்த்தம் இல்லை.

## சுற்றுலாப் பேருந்துகள்.

* 882 வினா-**திரு. பி.எஸ். மணியன்:** மாண்புமிகு பின்தங்கியவகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசு சார்பில் நவீன வசதிகள் கொண்ட சுற்றுலாப் பேருந்துகள் (Tourist Bus) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இல்லை. ஆனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அப்படிப்பட்ட எண்ணங்கள் உள்ளன.

## *Production of Paper.*

*883 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state the steps taken by the Government to augment the availability of raw materials for the production of paper in this State ?

**மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் :** பேப்பர் நிறுவனங்களுக்குத் தேவையான மூங்கில், கற்பூர இனக் கலப்பு மரங்களை வனத் துறை, விரைந்து வளரும் மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழ் பயிரிட்டு வருகிறது. இதுவரை மூங்கில் 3,663 ஹெக்டேர் பரப்பளவிலும், கற்பூ இனக் கலப்பு மரங்கள் 15,355 ஹெக்டேர் பரப்பளவிலும் பயிரிடப்பட்டுள்ளன. 197 -73-ல் இம் மரங்கள் 2,250 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படும்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இப்போது கிடைக்கக்கூடிய இந்த கச்சாப் பொருள் போதுமானதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதை அதிகரிக்க இன்னும் அதிகமான மூங்கில் மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து உண்மை என்று கருதுகிறோம். அதற்காகப் பரிசீலனை செய்து, புதிதாகச் சில பகுதிகளில் மூங்கில்களை வளர்ப்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசிடம் இருக்கிறது.

### கான இயல் பயிற்சியாளர்களுக்கு உதவிப் பணம்.

*884 வினு—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை அணையில் உள்ள கான் இயல் பயிற்சிப் பள்ளியில், பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி (டிரைனிங் அலவன்ஸ்) உதவிப்பணம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### மின் கட்டணச் சலுகை

*885 வினு—திரு கே. எ. வகாப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி, வாலாஜா தாலுக்கா ஆகிய பின்தங்கிய வட்டங்களுக்கு மின் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தற்சமயம் வந்தவாசி, வாலாஜா தாலுக்காக்கள் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாகக் கருதப்பட வில்லை. எனவே அந்தத் தாலுக்காக்களுக்கு தற்சமயம் மின் கட்டணச் சலுகைகள் எதுவும் அளிக்கப்படவில்லை.

### மதுரையில் நகரப் பேருந்துகள்.

*886 வினு—திரு பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

மதுரை நகரில் தேசிய மயமாக்கப்படும் நகரப் பேருந்துகளுக்கு (City Buses) பதில் அரசு போக்குவரத்துத் துறை பேருந்துகள் விட ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, மதுரை நகரில் ஓடுகின்ற நகரப் பேருந்துகளை இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்து நடத்துகிறது. அது மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது என்பதை நாங்கள் எல்லாம் அனுபவ ரீதியாக அறிகிறோம். ஆகவே, மதுரை நகரிலிருந்து ஓடக்கூடிய எல்லா நகரப் பேருந்துகளையும் இந்தப் பாண்டியன் போக்குவரத்துக் கழகமே எடுத்து நடத்த அரசு ஆவனச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மதுரை நகரிலிருந்து செல்கின்ற எல்லா வழித் தடங்களையும் பாண்டியன் போக்கு வரத்துக் கழகமே ஏற்று நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அது ஒரு நல்ல யோசனை என்ற அளவில் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனுல் உடனடியாக ஏற்று நடத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஆரம்பமாக மதுரை நகரில் இருந்து ஓடக்கூடிய சில தனியார் பஸ்களையாவது இந்தப் பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் ஏற்று நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் ஏற் கெனவே தெரிவித்ததைப்போல், இது ஒரு நல்ல யோசனையாக இருந் தாலும் பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் இன்னும் நல்ல முறையில் சீரிய அமைப்பைப் பெற்ற பிறகுதான் அதைப்பற்றி பரிசீலனை செய்யப் படும்.

திரு கோவை செழியன் : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் தங்களுடைய பட்ஜெட் உரையிலே இந்த ஆண்டு பொதுத் துறையிலே இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் லாபம் வந்திருப்பதாக அறிவித்தார்கள். என்றாலும் கீழ்ப்பாக்கத்தில் இருந்து வெளியிடப்படுகின்ற குமுதம் பத்திரிகையில் 3—2—72 தேதியில் "மது ரைக்கு அனுதாபம்" என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறது. இந்திய அரசும், நமது மாநில அரசும் சோஷலிசத்திற்கு அடிகோலுகின்ற வகை யில் பொதுத் துறைகளை ஊக்குவிக்கின்றன. எ.பி.டி. டி.வி.எஸ். போன்ற பெரிய பஸ் நிறுவனங்களிடமிருந்து இந்தப் பத்திரிகைக்கு விளம் பரம் கிடைக்காத எரிச்சலால் நாட்டுக்கு விரோதமான செய்திகளைப் பிரசுரித்து வருகிறது. ஆகவே அந்தப் பத்திரிகை ஆசிரியரை ஏன் கைது செய்யவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதனுல் யார் அனுதாபப்பட்டாலும் கவலை இல்லை. அப்படி அனுதாபப்படக் கூடியவர்களின் நிலைமை தான் அனுதாபத்திற்குரியதாக இருக்கும். அதனுல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. உல்லாசப் பிரியர்களைப் பற்றியே எழுதி வந்த பத்திரிகைகள் இனி உழைப்பாளர்களைப் பற்றியும் எழுதலாம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தக் கீழ்ப்பாக்கத் தில் இருக்கின்ற ஒரு பிற்போக்கான பத்திரிகை, தி. மு. க. எதிர்க் கட்சியாக இருந்தபோதும் அதன் கொள்கைகளை எதிர்த்து எழுதி வந்தது. காங்கிரசுக்கு ஆதரவாக எழுதி வந்தது. குறிப்பாக பெரிய பஸ் முதலாளிகளுக்கு ஆதாயம் கிடைக்கின்ற வகையில் எழுதி வந்தது. இன்று தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னுல் அந்த பஸ்களை யெல்லாம் தேசிய மயமாக்கிவிட்டது. ஆகவே இனி மதுரை மக்களுக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் என்று குறை கூறுகிறது. தேசியமயமாக்கப்பட்ட பின்னுல் பாண்டியன் ரோட்வேஸ் சிறப்பாக நடை பெறுகின்றது. இலாபத்தில் நடைபெறுகின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். இருந்தும் இப்படிப்பட்ட பத்திரிகைகள் அரசின் நல்ல

காரியங்களுக்குத் தடையாக இருக்கின்ற காரணத்தால். இந்தப் பத்திரிகை மீது போக்குவரத்துத் துறை என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தங்கள் கருத்துக்களை வெளியிட பத்திரிகைகளுக்கு சுதந்திரம் இருக்கிறது. ஆனால் கீழ்ப்பாக்கத்தில் இருப்பவர்கள்தான் அப்படிச் சொல்கிறார்கள். இத்தகைய கருத்துக்கள் கீழ்ப்பாக்கத்தில் இருந்து வருகின்றன என்பதால் அதைப் பற்றிக் கவலை இல்லை. (சிரிப்பு)

(பல உறுப்பினர்கள் துணைக் கேள்வி போட கைதூக்கினார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கருத்துக்களை எழுதுவதற்குப் பத்திரிகைகளுக்குச் சுதந்தரம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதனால் மாண்புமிகு உறுப்பினர்களும் கேள்விகள் கேட்கக் கொஞ்சம் சுதந்திரம் கேட்கிறார்கள்.

திரு சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இன்னும் சீரிய முறையில் போக்குவரத்து நடைபெறுவதற்கு மதுரையிலிருந்து புறப்படும் பஸ்களையும் மதுரைக்கு வந்து சேருகின்ற பஸ்களையுமாவது உடனடியாகப் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. வசூல்கூட நல்ல முறையில் ஆகி இருக்கிறது. பணியாளர்களும் அலுவலர்களும் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல் படுத்த முழு ஒத்துழைப்பைத் தந்து வருகிறார்கள். இருந்தாலும் நாம் அதிகமாக பஸ்களை பராமரிக்கக் கூடிய அளவுக்குப் பணிமனைகள் இல்லாமல் இருக்கின்றன: ஆகவே முதலில் பணிமனை கட்ட வேண்டும். அதற்குப் பிறகுதான் இதரத் திட்டங்களைப்பற்றி யோசிக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இந்தக் கருத்துக்கள் கீழ்ப்பாக்கத்தில் இருந்து வருகின்றன என்று சொன்னார்கள். கீழ்ப்பாக்கத்தில் இருந்து வருகின்ற கருத்துக்கள் என்பதை புரியும்படியாகக் கொஞ்சம் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட கீழ்ப்பாககத்தில்தான் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். (பலத்த சிரிப்பு.)

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, நானும் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறேன். (சிரிப்பு). ஆனால் அங்கே இருக்கின்ற பத்திரிகை அப்படி எழுதுவதற்கு முக்கிய காரணம் ஆண்டு ஒன்று 52 வாரங்களிலும் 52,000 ரூபாய் பெறுமான விளம்பரம் பெற்று.............



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகைகளின் அபிப்பிராயம் பற்றிச் சொல்லுகிறார்கள். அது விரும்பத் தக்கதல்ல. அதைப்பற்றிக் கேள்விகள் போடலாம். ஆனால் அதுவும் ஒரு வரம்புக்கு உட்பட்டு இருப்பதுதான் நல்லது. அதற்கு ஒரு நோக்கம் கற்பிப்பதாக இருக்கக் கூடாது. அதனால் வேறு கேள்வி வேண்டுமானால் கேளுங்கள். (உறுப்பினர் வேறு கேள்வி கேட்கவில்லை)

திரு இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கீழ்ப்பாக்கத்தில் ஏராளமான புத்திசாலிகள் இருக்கின்றார்கள். (சிரிப்பு) ஒரு சிலர் மட்டும்தான் இப்படி இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கீழ்ப்பாக்கத்தில் இருக்கின்ற சிலபேருக்குத்தான் இப்படிப்பட்ட எண்ணங்களும், நினைவுகளும் வருகின்றன. கீழ்ப்பாக்கத்தில் இருக்கின்ற பெரும்பாலோர் நல்ல முறையில்தான் இருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு குரோத எண்ணம் உண்டாகக்கூடிய வகையிலே கட்டுரை வெளியிடப்பட்டதால்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அதுபற்றிய கேள்விகள் கேட்கவும், அதற்குப் பதில் சொல்லவும் வேண்டியிருக்கிறது. அவர்கள் எல்லாம் இனிமேலாவது நடைமுறைக்குக் கட்டுப்பட்டு எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளியிட வேண்டுமென்ற முறையிலேதான் பல உறுப்பினர்களும் சொன்னார்கள்.

திரு திருப்பூர். ஏ. எம். மொய்தீன் : கீழ்ப்பாக்கத்தில் இருக்கிறவர் எல்லாம் புத்திசாலிகள். கொஞ்சம் கோளாறு உடையவர்களாக இருக்கக் கூடியவர்களை சுவற்றுக்கு உள்ளே வைத்திருக்கிறார்கள் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். (சிரிப்பு) அந்தச் சுவற்றைத் தாண்டி அவர்கள் எப்படி வந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்;

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதுதான் இப்போது பிரச்னையாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இங்கு கூறப்படுவதைப் பார்த்தால் கீழ்ப்பாக்கத்திற்கு ஒரு அவமானத்தைத் தருவதாக இருக்கிறது. கீழ்ப்பாக்கத்தில் இருந்து வருகின்ற கருத்துக்கள் புத்திசாலித்தனமான கருத்துக்கள் வருகின்றன அதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே கீழ்ப்பாக்கத்திற்குப் பதில் சொல்லிவிடுகிறேன். கீழ்ப்பாக்கம் என்று சொன்னவுடனேயே யாரும் கோபித்துக்கொள்ளக் கூடாது. (சிரிப்பு) நண்பர் அரங்கண்ணல் கீழ்ப்பாக்க உறுப்பினர் என்று குறிப்பிட்டார்கள். சட்டமன்றத் தலைவராகிய நான்கூட கீழ்ப்பாக்கச் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். முன்புகூட, நான் பேசும்போது, 'கீழ்ப்பாக்க உறுப்பினர் பேசுகிறார்' என்று ஒருவர் சொன்னார். ஏதோ, கீழ்ப்பாக்கம் என்றாலே அங்கிருக்கக்கூடிய மருத்துவ மனையைப்பற்றி நினைக்க வேண்டியதில்லை.

பெரிய பெரிய ஞானிகள் எல்லாம் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார்கள். கனம் ராஜாஜி அவர்கள் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார். டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார். மாண்புமிகு அம்மையார் அவர்களும் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார். எவ்வளவோ பெரியவர்கள் எவ்வளவோ நல்லவர்கள் எல்லாம் கீழ்ப் பாக்கத்தில் இருந்திருக்கிறார்கள், இருந்து வருகிறார்கள். கீழ்ப்பாக்கம் என்பது ஒரு 'குறிச்சொல்லாக' ஆகிவிடக்கூடாது. உறுப்பினர் யாரும் அப்படிப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பேசும்போது, சட்டமன்றத்தில் கீழ்ப்பாக்கத்தைப் பற்றி இவ்வாறு ஏளனமாகப் பேசுகிறார்களே என்று வெளியிலே பொதுமக்கள் தவறாக எண்ணிவிடக் கூடாது. ஆகவே, கீழ்ப்பாக்கத்தில் அக்கறையுள்ளவர்கள் யாரும் தவறான கருத்து வருவதாக கருதிக் கொள்ளத் தேவையில்லை.

### பழனி மலையிலுள்ள இழுவை ரயில்

*887 வினா : **திரு இரா. மாணிக்கவாசகம்** : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) பழனி மலையில் தற்பொழுது உள்ள இழுவை ரயில் போல மற்றொன்று அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்** : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு கே. கந்தசாமி** : தலைவர் அவர்களே, நேற்றைய செய்தித் தாளில் சட்டப் பேரவைத் தலைவர், "இனிமேல் நடக்கக்கூடிய சட்டமன்ற நிகழ்ச்சிகள் மாலை நேரத்தில் நடக்கும்" என்று சொன்னதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது பழனிமலையைப் பற்றிய கேள்வி. இன்னும் கேள்வி நேரம் முடியவில்லை.

**திரு கே. என். குமாரசாமி** : தலைவர் அவர்களே, பழனிமலையில் இப்போதுள்ள இழுவை ரயில் மூலமாக பக்தர்கள் போவதற்கு அதிக நேரம் ஆகிறது. சுமார் 4 அல்லது 5 மணி நேரம் காத்திருக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, இன்னொரு இழுவை ரயில் பாதை போட்டு, பக்தர்களுக்கு அதிக வசதியை அரசு ஏற்படுத்தித் தருமா ?

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்** : தலைவர் அவர்களே, இன்னொரு ரயில் பாதை அமைக்க வேண்டுமென்கிற யோசனை அறங் காவலர் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அறங்காவலர் குழு இதுபற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை. அந்தக் குழு முடிவு எடுத்த பின்னர் தான் இது பற்றி யோசிக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவர் அவர்களே, இந்த இழுவை ரயில் பாதை அமைக்க எவ்வளவு பணம் செலவாகும் ? இதைச் செய்வதில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ? இந்த ரயில் பாதையை அமைப்பதற்குப் போதுமான பணம் இல்லையா ? அல்லது மனம்தான் இல்லையா ?



**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்** : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற இழுவை ரயில் அமைப்பதற்காக 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். பக்தர்களுக்குத் தேவையான வசதி செய்து தரப்பட்டுள்ளது. இன்னொரு ரயில் பாதை அமைக்கத் தேவையான பண வசதி இருக்கிறது. இதைப்பற்றி அறங்காவலர் குழு முடிவு செய்தால்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். இழுவை ரயிலில் மேலே சென்று, கீழே வருவதற்காக 2 ரூபாய் கட்டணம் வாங்குகிறார்கள். மேலே செல்வதற்கு மட்டும் அல்லது கீழே வருவதற்கு மட்டும் தனியாக 1¼ ரூபாய் கட்டணம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

### வெள்ளிக்குறியிடாத வினாக்கள்.

*Assessees under Urban Land Tax Act*

1—Q.— Dr. H.V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the total number of assessees of Urban Land Tax in the State, districtwise.

(*b*) the total amount collected so far by way of Urban Land Tax ; and

(*c*) the amount to be collected as on date ?

A.—

(*a*) The Tamil Nadu Urban Land Tax Act, 1966 is in force from 1st July 1963 in the City of Madras. It has been extended to Madurai City and the Municipal towns of Coimbatore, Salem and Tiruchirappalli only during 1971 and the preliminary work of enumeration is in progress in these areas. Information about the number of assessees is therefore available only in respect of Madras City. The number of assessees in Madras City is 1,28,858. This number will go down in view of the exemption granted to persons owning an extent of one ground and below by the Tamil Nadu Urban Land Tax Amendment Act, 1971 which comes into effect from the current Fasli, i.e., Fasli 1381. The actual number of assessees as a result of this exemption is not yet available as the time for submission of returns under the amended Act has been extended up to 29th February 1972.

(*b*) Rs. 3,10,92,980 as on 15th January 1972 in Madras City.

(*c*) Rs. 2,99,59,085 as on 15th January 1972 in Madras City.

(அ) சென்னை மாநகரில் 1966-ம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 1-ம் நாள் முதல் தமிழ்நாடு நகர்புற நிலவரிச் சட்டம் செயலில் உள்ளது. 1971-ம் ஆண்டு, மதுரை மாநகருக்கும், கோயம்புத்தூர் சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சி நகரங்களுக்கும் மட்டும் அச் சட்டம் அண்மையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இப் பகுதிகளில் கணக்கெடுப்பதற்கான தொடக்கப் பணிகள் நடந்து வருகின்றது.

எனவே சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் மட்டும் தான் நில வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. சென்னை மாநகரத்தில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,28,858 ஆகும். ஒரு மனையும் அதற்குக் குறைந்தும் உள்ளோருக்கு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டத்தின் கீழ் விலக்கு வழங்கப்பட்டதன் காரணமாக இந்த எண்ணிக்கை மேலும் குறையும். 1381-வது பசலி முதற்கொண்டு இது செயலுக்கு வரத் தொடங்கும். திருத்தச் சட்டத்தின் கீழ் விவரக் கணக்குகளை அனுப்புவதற்கான கால அளவு 1972-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ம் நாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதனால், மேற்படி விலக்களிப்பின் காரணமாக இதுவரையிலும் நிலவரி விதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. (இ) சென்னை மாநகரில் 15—1—1972 தேதி அன்றுள்ளபடி. ரூ. 3,10,92,980. (உ) சென்னை மாநகரில் 15—1—1972 தேதி அன்றுள்ளபடி. ரூ. 2,99,59,085

*Agricultural Produce Markets Act*

2— *Q.*—DR. H.V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received a memorandum, dated 3rd December 1971 from the Tamil Nadu Varthaga Kazhagam, Kumbakonam regarding Tamil Nadu Agricutlure Produce Markets Act, 1959—new amendments 1971 ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon ?

*A.*—

(*a*) Yes.

(*b*) and (*c*) : The request in the Memorandum was that the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 might be dropped. The Government considered the request and decided to proceed with the Bill. It has since become an Act called the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Act, 1971.

(அ) ஆம்.

(இ), & (உ) இவ் விண்ணப்பத்தில் 1971-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்த) மசோதாவைச் சட்டமாக்காது ரத்து செய்யவேண்டுமெனக் கேட்டிருந்தது. அரசு அதைப் பரிசீலித்து மேற்கொண்டு அம் மசோதாவின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டு, அம் மசோதா 1971-ம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மை விளை பொருள்கள் அங்காடிகள் (திருத்த) சட்டமாக இயற்றப்பட்டது.

*Persons registered with the Employment Exchanges*

3—*Q.*—THIRUMATHI T. N. ANANTHANAYAKI : Will the Hon. the Minister for Industries be pleased to state—



(*a*) the number of Job-seekers registered in the Employment Exchanges in Tamil Nadu for the year 1970–71 ;

(*b*) among them, the number of unskilled, skilled and educated job-seekers ; and

(*c*) the number of registered unemployed who have been able to secure jobs through Employment Exchanges in [illegible] the year 1970–71, district-wise ?

*A.*—

(*a*) 3,78,485

(*b*) Not available.

(*c*)

| | *Name of Employment Exchange.* | *Number provided with jobs.* |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | District Employment Office, Vellore .. .. .. | 3,069 |
| 2 | District Employment Office, Cuddalore .. .. .. | 1,935 |
| 3 | District Employment Office, Neyveli .. .. .. | 1,170 |
| 4 | University Employment Information and Guidance Bureau, Annamalainagar. | 56 |
| 5 | District Employment Office, Chingleput .. .. | 2,854 |
| 6 | District Employment Office, Coimbatore .. .. | 4,226 |
| 7 | District Employment Office, Dharmapuri .. .. | 1,632 |
| 8 | District Employment Office, Kanyakumari .. .. | 1,181 |
| 9 | District Employment Office, Madras-35 .. .. .. | 4,063 |
| 10 | District Employment Office, North Madras .. .. | 2,272 |
| 11 | Professional and Executive Employment Office, Madras. | 562 |
| 12 | Special Employment Office for Physically Handicapped, Madras. | 166 |
| 13 | University Employment Information and Guidance Bureau, Madras. | 49 |
| 14 | District Employment Office, Madurai .. .. .. | 3,253 |
| 15 | University Employment Information and Guidance Bureau, Madurai. | 63 |
| 16 | District Employment Office, Ootacamund .. .. | 1,308 |
| 17 | District Employment Office, Ramanathapuram .. | 2,069 |
| 18 | District Employment Office, Salem .. .. .. | 2,708 |
| 19 | District Employment Office, Thanjavur .. .. | 3,633 |
| 20 | District Employment Office, Tiruchirappalli .. .. | 2,790 |
| 21 | District Employment Office, Tirunelveli .. .. | 2,135 |
| | Total .. | 41,194 |

(அ) 3,78,485

(இ) கிடைக்கவில்லை.

(உ)

| வேலை வாய்ப்பகத்தின் பெயர். (1) | வேலைவாய்ப்புப் பெற்றவர் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 மாவட்ட வேலைவாய்ப்பகம், வேலூர் .. .. | 3,069 |
| 2 மாவட்ட வேலைவாய்ப்பகம், கடலூர் .. .. .. | 1,935 |
| 3 மாவட்ட வேலைவாய்ப்பகம், நெய்வேலி .. .. | 1,170 |
| 4 பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகம், அண்ணாமலைநகர் | 56 |
| 5 மாவட்ட வேலைவாய்ப்பகம், செங்கற்பட்டு .. .. | 2,854 |
| 6 மாவட்ட வேலைவாய்ப்பகம், கோயம்புத்தூர். .. | 4,226 |
| 7 மாவட்ட வேலைவாய்ப்பகம், தர்மபுரி .. .. | 1,632 |
| 8 மாவட்ட வேலைவாய்ப்பகம், கன்னியாகுமரி .. | 1,181 |
| 9 மாவட்ட வேலைவாய்ப்பகம், சென்னை-35 .. .. | 4,063 |
| 10 மாவட்ட வேலைவாய்ப்பகம், வட சென்னை .. .. | 2,272 |
| 11 தொழில் நிர்வாக வேலை வாய்ப்பகம், சென்னை .. | 562 |
| 12 உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பகம், சென்னை. | 166 |
| 13 பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தக்வல் வழிகாட்டிக் கழகம், சென்னை. | 49 |
| 14 மாவட்ட வேலைவாய்ப்பகம், மதுரை .. .. | 3,253 |
| 15 பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல்-வழிகாட்டிக் கழகம், மதுரை. | 63 |
| 16 மாவட்ட வேலைவாய்ப்பகம், உதகமண்டலம் .. | 1,308 |
| 17 மாவட்ட வேலைவாய்ப்பகம், இராமநாதபுரம் .. .. | 2,069 |
| 18 மாவட்ட வேலைவாய்ப்பகம், சேலம் .. .. .. | 2,708 |
| 19 மாவட்ட வேலைவாய்ப்பகம், தஞ்சாவூர் .. .. | 3,633 |
| 20 மாவட்ட வேலைவாய்ப்பகம், திருச்சிராப்பள்ளி .. | 2,790 |
| 21 மாவட்ட வேலைவாய்ப்பகம், திருநெல்வேலி .. .. | 2,135 |
| மொத்தம் .. | 41,194 |

*Elections to dissolved Panchayat Unions*

4—*Q.*— THIRUMATHI T. N. ANANTHANAYAKI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Panchayat Unions dissolved in Tamil Nadu in 1970–71 and the reasons thereof ; and

(*b*) whether fresh elections to such unions have been conducted ?



*A.*— (*a*) and (*b*)—

The term of office of Panchayat Union Councils expired on the 2nd August 1970 due to efflux of time. The Panchayat Union Councils were re-constituted with effect from the 2nd August 1970 after holding ordinary elections to Panchayats. Apart from this, no Panchayat Union Council was dissolved in the official year 1970–71, i.e., from 1st April 1970 to 31st March 1971 for defaults in performing the duties imposed by law.

(அ)&(இ) :

ஊராட்சி ஒன்றியங்களின் பணிபுரியும் காலம் நேர வளர்ச்சி நிறைவின் வழியாக 1970-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-வது தேதியோடு முடிவடைந்தது. ஊராட்சிகளின் சதாரணத் தேர்தல்களுக்குப் பின் ஊராட்சி ஒன்றியங்கள் 2—10—1970 தேதியிலிருந்து திரும்ப அமைக்கப் பெற்றது. இது தவிர அலுவலக ஆண்டு 1970-71-ல் அதாவது 1—4—1970 லிருந்து 31—3—1971 வரை சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட பணிகளிலிருந்து செய்யத் தவறிய காரணத்திற்காக எந்த ஊராட்சி ஒன்றியமும் கலைக்கப்படவில்லை.

*Tamil Nadu Public Service Commission Advertisements*

5—*Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the advertisements given by the Tamil Nadu Public Service Commission during 1971 ;

(*b*) the number of posts (i) Gazetted and (ii) Non-gazetted advertised ; and

(*c*) the expenditure incurred on them ?

*A.*—

(*a*) List Attached *

| | | | |
|---|---|---|---|
| (*b*) | *Gazetted. posts.* | *Non-Gazetted Posts.* | *Miscellaneous relating to examinations.* |
| | 26 | 44 | 13 |
| (*c*) | *Gazetted.* | *Non-Gazetted and Miscellaneous Advertisements.* | |
| | Rs. 48,859·45 | Rs. 98,122·96 | |

* 374–379-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## தனியார் நம்பகங்கள்.

6. **வினு— திரு ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1967, 1968, 1969, 1970 ஆகிய வருடங்களில் சென்னையில் எத்தனை பிரைவேட் டிரஸ்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளன?

(இ) அரசாங்கம் மேற்படி ரிஜிஸ்ட்ரேஷன் வகையில் தள்ளுபடி செய்த அல்லது சலுகை செய்த ரிஜிஸ்ட்ரேஷன் பீஸ் தொகை எவ்வளவு ?

**விடை**—(அ) 1967-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு முடிய சென்னையில் மட்டும் 85,503 பத்திரங்கள் பதிவாகி உள்ளன. இவை களில் பெரும்பகுதி 80 பக்கங்களுக்குக் குறையாமல் பெற்று விளங்குவதால், அவைகளை முழுதும் படித்துப் பார்த்து, அவைகளில் எவை தனியார் நம்பகங்கள் (Private Trusts) வகையினைச் சாரும் எனப் பிரித்தெடுப்பது கடினம். அவ்வாறு பிரித்தெடுக்க வேண்டுமெனில் புதிய அலுவலர்கள் நியமிப்பது அவசியமாகும். அதன்படி புதிய அலுவலர்களை நியமிப்பதன் மூலம், தகவல் சேகரிக்க ஆகும் நேரமும் செலவும், அதனுல் கிடைக்கும் பயனுக்குச் சமமாக இருக்குமா என்பதும் நினைவில் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

(இ) பதிவுக் கட்டண தள்ளுபடியோ அல்லது சலுகையோ அளிக்கப்படவில்லை.

## தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்.

7 **வினு—திரு கே. எ. வகாப் :** மாண்புமிகு பொது பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கு மத்திய அரசு 1970–71-ல் மாநில அரசுக்கு அளித்த தொகை எவ்வளவு ?

(இ) அதன் உதவியால் எந்தெந்த வேலைகள் முடிந்திருக் கின்றன ?

விடை—

(அ) ரூ. 1,51,30,000

இ) கீழ்க்கண்ட வேலைகள் முடிவடைந்திருக்கின்றன.



| வேலையின் பெயர். (1) | மதிப்பீடு (2) |
|---|---|
| | ரூ. |
| 1. தேசிய நெடுஞ்சாலை 45-ல் 14 கலுங்குகள் அமைக்கப் பட்டன. | 1,8[illegible]0 |
| 2. சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலை மை. 102—1-ல் உள்ள சிறுபாலம் திருத்தி அமைக்கப்பட்டது. | 44,500 |
| 3. தேசிய நெடுஞ்சாலை 45—ம. 144—7-ல் சிறு பாலம் கட்டப்பட்டது. | 53,600 |
| 4. மதுரை-தனுஷ்கோடி சாலை ம. 63—2-3ல் வளைவு சீர்திருத்தப்பட்டது. | 1,29,700 |
| 5. இராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடி செல்ல இராமேஸ்வரம் ரயில் நிலையம் வழியாகப் பாதை அமைப்பதற்கு. | 15,58,000 |
| 6. இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி செல்லும் பாதை நெடுகிலும் 24 இடங்களில் கலுங்குகளும் கழிவுநீர் வடிகால்களும் அமைக்கப்பட்டன. | 5,47,200 |
| 7. தேசிய நெடுஞ்சாலை 7 ம. 366—6 ; 367—1- I & II; 367—4 ; 368—1 ; 368—2 ; 368—3 ; ஆகிய இடங்களில் உள்ள கலுங்குகள் சீர் அமைக்கப் பட்டன. | 58,500 |

## தனி அதிகாரிகளின் கீழுள்ள நகராட்சிகள்.

8. **வினு— திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா ?

தமிழகத்தில் தற்போது தனி அதிகாரிகள் நிர்வாகத்திலுள்ள நகராட்சிகள், எவையெவை ?

1. தேனி—அல்லிநகரம் (மதுரை மாவட்டம்)
2. பல்லவபுரம் (செங்கற்பட்டு மாவட்டம்).
3. விருத்தாசலம் (தென்னுற்காடு மாவட்டம்).
4. நாமக்கல் (சேலம் மாவட்டம்).
5. சத்தியமங்கலம் (கோயம்புத்தூர் மாவட்டம்).
6. துறையூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
7. சாத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி ( * ) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

நானூற்று எண்பத்து நான்கு நியாய விலைக் கடைகளில் அரிசி மலிவான விலையில் வழங்கப்பட்டதால் 1972 பிப்ரவரித் திங்களில் இக் குறியீட்டு எண் 885 ஆகக் குறைந்தது. சர்க்கரையும் இம்மாதிரியே வழங்கப்பட்டன. உணவுக்கான எண்ணெய்கள், காய்கறிகள், மிளகாய் முதலியவற்றின் விலைகளும் அதிகப்படியான வரத்தின் காரணமாகக் குறைந்தன.

டிசம்பர் 1970-லிருந்து இக் குறியீட்டு எண்ணின் போக்கை கவனிக்கும் போது, இவ்வெண் 828-லிருந்து 1971 டிசம்பரில் 895 ஆக 67 புள்ளிகள் அதிகமாகியுள்ளது. 1971 ஜனவரியிலிருந்து 1972 ஜனவரி வரை இவ்வெண் 823-லிருந்து 923 ஆக 100 புள்ளிகள் உயர்ந்துள்ளது. 1971 பிப்ரவரியிலிருந்து 1972 பிப்ரவரி வரை இவ்வெண் 819-லிருந்து 885 ஆக 66 புள்ளிகள் உயர்ந்துள்ளது.

இக் குறியீட்டு எண் டிசம்பர் 1971-லிருந்து ஜனவரி 1972-இல் 28 புள்ளிகள் உயர்ந்தது. 1972 பிப்ரவரியில் 38 புள்ளிகள் குறைந்துள்ள போதிலும், 1971 டிசம்பர் புள்ளியுடன் ஒப்பிடின் 1972 பிப்ரவரியில் இவ்வெண் 10 புள்ளிகள்தான் குறைந்திருப்பதும் 1971 பிப்ரவரியுடன் ஒப்பிடின் 66 புள்ளிகள் உயர்ந்திருப்பதும் புலனுகும்.

மத்திய அரசினரால் கணிக்கப்படும் இப் புதுத் தொடர் குறியீட்டு எண்ணில் அரிசியின் விலை கணிக்கப்படும் முறை வருமாறு :—

அரசினரால் நியாய விலைக்கடைகளின் மூலம் வினியோகிக்கப்பட்ட அளவையும், வெளிச்சந்தையில் வாங்கப்படும் அளவையும், தொழிலாளர் குடும்பத் தேவையில் இவ்விரு அங்காடிகள் மூலம் பெறப்படும் அளவின் அடிப்படையில் விகிதாச்சாரம் கணித்து, இவ்விரு அங்காடிகளிலும் நிலவும் விலைகளைக்கொண்டு நிறையிட்ட சராசரி விலை ( Weighted average price ) கணிக்கப்படுகிறது. இவ்விகிதாச்சாரம் 1972 பிப்ரவரியில் நியாயவிலைக் கடைகள் மூலம் 19 சதவிகிதமும், வெளிச் சந்தையில் 81 சதவிகிதமுமாக நிறையிட்ட சராசரி அரிசி விலை கிலோவிற்கு ஒரு ரூபாய் 20 காசாக கணிக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கைச் செலவு குறியீட்டெண்ணை மாநில அரசு திரட்டி மத்திய அரசின் சிம்லாவிலுள்ள தொழிலாளர் நலக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறது. அதுபோலவே மத்திய அரசின் சார்பிலும் மாநிலத்திலிருந்து சரி பார்த்து நேரடியாக விவரம் அனுப்பி வைக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் ஆராய்ந்து இறுதியாக குறியீட்டெண்ணை கணித்து அதிகாரபூர்வமாக மத்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பி வெளியிடச் செய்கிறது. ஆகவே வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் கணிப்பதில் மாநில அரசுக்கு நேரடியான அதிகாரம் கிடையாது. அதுமட்டுமல்லாமல் வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் கணிப்பதில் எவ்விதத் தவறும் ஏற்படவில்லையென்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: Sir, may I know from the Hon. Minister whether it is not a fact that a large number of workers in Tamil Nadu are very much discontented because the cost of livining index as published by the Statistics Department and the real state of affairs in Tamil Nadu are entirely different? The price of rice, dhall and other



necessaries of life has gone up. In view of this, may I know what steps the Hon. Minister is going to take to see that there is no reduction in the Dearness Allowance as a result of the reduction in the cost of living index. As both the cost of living index and the real state of affairs are at variance, what steps he is going to take to rectify the mistake.

Even yesterday it was publisehd in "The Mail" that the Hon. Deputy Minister for Industrial Development made a statement in the Lok Sabha on 22nd March that the average wholesale consumer price index has been steadily going up and that the price of food-grains and other items like sugar have gone up. Now the Hon. Minister has stated that this is the entire responsibility of the Central Government. Most of us know that the cost of living index has really gone up and so there is something radically wrong with the Statistics Department. Therefore, may I know whether it is possible for the Hon. Minister to review the whole position and appoint even a Committee to go into the matter and satisfy the lakhs of workers who are very much discontented? Also, as there is a lot of agitation going on outside, will it be possible for the Hon. Minister to find out a solution to the whole problem?

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 1936இல் வாழ்க்கைப்புள்ளி 100 என்கிற அடிப்படையில் 71 டிசம்பரில் 895 ஆக (முற்பகல் 10-30) இருந்த வாழ்க்கைப் புள்ளி குறியீட்டு எண் 1972 பிப்ரவரியில் 885 ஆக குறைந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அந்த வாழ்க்கைப் புள்ளியை அடிப்படையாக வைத்தே இன்றையதினம் தொழிலாளர்கள் பஞ்சப் படியைப் பெறுகிறுர்கள். அதன் காரணமாக முதல் மாதம் வாங்கியதைவிட இந்த மாதம் பஞ்சப்படி அவர்களுக்குக் குறைந்துவிடுகிறது. உண்மையில் வாழ்க்கையில் எந்தப் பண்டங்களின் விலையும் குறையவில்லை. இந்தப் புள்ளியைக் கணிப்பதில் மாநில அரசுக்கு நேரடியான அதிகாரம் கிடையாது. என்றுலும் நாம் கொடுக்கிற புள்ளியை வைத்துத்தான் சிம்லாவில் உள்ளவர்கள் நிர்ணயிக்கிறுர்கள்.

இம்மாதிரி முன்பு ஒருமுறை வாழ்க்கைப் புள்ளியைத் தயாரிப்பதில் தவறு நடந்து, அதை விசாரிக்க சண்முகசுந்தரம் அவர்களை விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போதும் தயாரிக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரம் சரியல்ல. தவறு நடந்திருக்கிறது என்கிற காரணத்தினுல் ஒரு தனிக் கமிட்டியோ, தனி அதிகாரியைப் போட்டோ டைரெக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ்—அவர் கீழ் பணியாற்றக்கூடிய சிப்பந்திகள் எந்தமுறையில் இதை இப்படி தவருகக் கணக்கிட்டுக் குறைத்திருக்கிறுர்கள் என்பதை விசாரணை நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எனக்கு முன்பாக பேசிய இரண்டு பேர்களும் சொன்னதுபோக மற்ருெரு கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

வாழ்க்கைப் புள்ளி சற்று கீழே விழுந்திருப்பதைத் தெரிவித்தார்கள். நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசி, சர்க்கரை மலிவானவிலையில் வழங்கப்பட்டதால் இந்தப் புள்ளி குறைந்திருப்பதாகச் சொன்னுர்கள்.

சிம்லாவுடன் தொடர்பு கொண்டு அதை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்களா? இந்த மாதிரி சந்தேகம் தொழிலாளர் மத்தியில் இருப்பதால் திட்டவட்டமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம்—இன்று கடைசி நாள்; விவாதிக்க முடியாது—உடனடியாக ஒரு குழு நியமித்தால் "காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ்" சரியாக இருக்கிறதா, இல்லையா? என்று அரசாங்கத்திற்கு ஒரு திருப்தி அளிக்கும் அளவிற்கு நிலைமை உருவாகும். இல்லாவிட்டால் தொழிலாளர்களுக்குப் பரவலாக அதிருப்தி வளர்ந்து கொண்டு போகுமே, ஆகவே சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மாதிரி புள்ளி விவரத்தில் தவறு ஏற்பட்டது என்பது **It is a fraud on the prepartion of cost of living Index.**

தமிழில் சொல்வதென்றால் "ஃப்ராடுக்கு" மோசடி என்று தான் சொல்லவேண்டியிருக்கும். ஏற்கெனவே மகாராஷ்டிராவில் இம்மாதிரி புள்ளி குறைந்த காரணத்தால் "லக்டாவாலா" கமிட்டி போட்டு, 29 புள்ளிகள் வரை தவறாக இருக்கிறது என்று சொல்லி, அதன் பேரில் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்குப் பணம் கிடைத்தது. அது போல் குஜராத்திலும் கிடைத்தது. இங்கும் ஒரு கமிட்டி போட்டோம். 13 புள்ளிகள் வரை குறைந்திருக்கிறது என்று கண்டு ஒரு 10 ஆண்டுக் காலமாகத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய 400 ரூபாய் இன்றைக்கும் கிடைக்காமல் இருக்கிறது. இம் மாதிரியான தவறான பிரச்னை வருகிற போது—அதற்காக யாரையும் குறைத்துச் சொல்லவில்லை—டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டு பரிசீலனை செய்தாலும் அதில் வெகு திறமையாக இருக்கக்கூடிய, 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' எம்.ஏ., பி.ஏ., படித்தவர்களுக்கு அங்கு பங்கு காணோம். மற்றவர்களுக்கு பங்கு இருக்கும் காரணத்தால், தனி அதிகாரி ஒருவரைப் போட்டு பரிசீலனை செய்து, 3 மாதத்திற்கு பிறகாவது சொல்லட்டும். 2, 3 மாதத்தில் பரிசீலனை செய்ததில் காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ் தயாரிப்பதில் முறைகேடுகள் இருந்தன என்பது போன்ற கருத்துக்கள் சொன்னால்—நமக்கு இங்கேயிருந்து அனுப்பக் கூடிய விவரங்கள் சரியாக இருக்குமென்ற காரணத்தால்—மீண்டும் ஒரு முறை சொல்கிறேன்—சர்க்காருக்கு அப்பாற்பட்ட சிறப்பான "ஸ்டாடிஸ்டிஷியன்ஸ்" இருக்கிறார்கள். அவர்களை வைத்து விசாரணை நடத்துவது உதவிகரமாக இருக்கும் என்பதால் அதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நண்பர் கே. டி. கே. அவர்கள் சொன்னது போல் புரொபசர் சண்முகசுந்தரம் தலைமையில் போடப்பட்ட குழு காஸ்ட் ஆப் லிவிங்ஸ் இண்டெக்ஸை எந்த தேதியிலிருந்து மாற்றி அமைப்போம் என்று அறிக்கை தந்தார்கள். அது தனி விஷயம். காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ் குறைந்திருக்கும் ஒரு காரணத்தால் "மோசடி" என்ற வார்த்தையை எதிர்க்கட்சித் தலைவர்கள் உபயோகப்படுத்துவது சரியல்ல.

**Thiru K. T. K. Thangamani: I would like to know the exact amil equivalent for fraud.**



மாண்புமிகு திரு செ. மாதவன்: 'ஃபராட்' என்று சொல்வது சரியல்ல. இப்படிப்பட்ட அபிப்பிராயத்தை வெளியே பரப்புவது தொழிலாளர்களிடத்தில் தப்பெண்ணத்தை ஏற்படுத்தும்.

**Tthiru K. T. K. Thangamani: It is legal terminology. As a lawyer he will alro appreciate that fraud does not mean 'mosadi').**

மாண்புமிகு திரு செ. மாதவன்: டாக்டர் ஹாண்டே 'எனக்கு நம்பிக்கை வரவில்லை' என்று சொல்கிறார்கள். இதை நாம் தொழிலாளர்களிடத்தில் நல்ல முறையில் விளக்கும் மனப் பக்குவம் இருந்தால் இப்படிப்பட்ட எதிர்வாதம் வராது என்று கருதுகிறேன்.

ஏராளமாக புள்ளி விவரம் அமைச்சர் அறிக்கையில் இருக்கிறது. ஒன்றை மட்டும் எடுத்துப் பார்த்தோமானால், 1971 டிசம்பர், 1972 ஜனவரி, இந்த ஒரு மாதத்துக்குள் 28 புள்ளி அதிகமாகி இருக்கிறது. பிப்ரவரியில் 38 புள்ளி குறைந்திருக்கிறது. "ஸ்டீப் ரைஸ் அண்ட் ஸ்டீப் ஃபால்," பக்கத்து பக்கத்து மாதத்தில் வருகிறது. சிலர் சொல்வது போல் அந்த வாதம் உண்மையாக இருந்தால், "டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ்" தவறு செய்கிறார்கள் என்பது உண்மையானால் 28 புள்ளி உயர்த்தி இருப்பார்களா? நிச்சயமாக செய்யமாட்டார்கள். நம்முடைய அதிகாரிகள் வேண்டுமென்றே செய்ததாகச் சொல்வது சரியல்ல. பொதுவாக இதைப் பற்றி எப்படி செய்வது என்று புதிய முறையில் ஆலோசிக்க வேண்டும். ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு அடிக்கடி கூடுகிறது. கூடி இந்த காஸ்ட் ஆப் லிவிங் இண்டைக்சைப் பொறுத்தவரை வாதம் செய்கிறது. தொழிலாளர் தலைவர்கள் வாதம் செய்து புதிய ஆலோசனைகள் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஒரேடியாக மோசடி என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. இன்னொரு வாதம். நியாயவிலைக் கடைகளில் போடும் விலையை மட்டும் வைத்து கணக்குப் போட்டு இப்படி வருகிறது என்ற வாதம் சொல்லப்பட்டது. அதற்கும் அமைச்சர் அறிக்கையில் ...தில் இருக்கிறது. 19 சதவிகிதம் நியாயவிலைக் கடைகளில் கணக்கெடுக்கிறோம். 81 சதவிகிதம் மார்க்கெட் பிரைஸ் எடுத்துக் கொள்கிறோம். இரண்டையும் கணக்கில் கொண்டு பொதுவாகப் புள்ளி தயாரிக்கப்படுகிறது. நியாயவிலைக் கடை விலையை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது தவறாகும். நியாய விலைக் கடை விலையை எடுத்துக் கொள்ளக் கூடாதென்றால், மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. சட்டப்படி சரியாக வராது. மத்திய அரசாங்கத்துக்கும் நமக்கும் உள்ள தொடர்பை விளக்கினேன். நாம் விலைப் பட்டியல் தயாரிக்கிறோம். அதை மத்திய அரசாங்க அலுவலர்கள் சரியாக இருக்கிறதா என்று பார்த்து இரண்டும் சிம்லாவிற்கு அனுப்பப்படுகிறது. அவர்கள் அறிக்கை தயாரிக்கிறார்கள்.

முதலாளிகள் சேர்ந்து சிம்லா நிறுவனத்தில் மோசடி செய்துவிட்டார்களா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். அது பார்லிமெண்டில் கேட்கப்பட வேண்டிய கேள்வி. ஆனால் நம்முடைய அரசாங்

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு. 1972–73-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1 திரு. கே. எஸ். கோதண்டராமய்யா.
2 திரு. எம். முத்தையா.
3 திரு. என். டென்னிஸ்.
4 திரு. மு. சத்தியமூர்த்தி.
5 திரு. க. சுப்பு.
6 திரு. எஸ். முருகையன்.
7 திரு. சு. துரைசாமி.
8 திரு. வி. சா. இளஞ்செழியன்.
9 திரு கே. ஆர். கிருஷ்ணன்.
10 திரு. டி.சி. திம்மராய கவுண்டர்.
11 திரு. ரா. ரா. முனுசாமி.
12 திரு. பழனிவேல்ராஜன்.
13 திரு. இ. எஸ். தியாகராசன்.
14 திரு. சொ. கருணாநாதன்.
15 திரு. நா. வெ. குருசாமி.
16 திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1972–73-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதல் அமைச்சர்) அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பின களாவார்.

இப் பேரவையின் 165–வது விதியின்கீழ் திரு. பழனிவேல்ராஜன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(இ) சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்திகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றன என்பதை இப் பேரவைக்கு அறிவிக்கின்றேன்:—



தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/72) சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 13/72) சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

(3) 1972–73-ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

(1) திரு. வி. வெங்கா.
(2) திரு. ஜி. பராங்குசம்.
(3) திரு. எம். ராமநாதன்.
(4) திரு. ஜி. சுவாமிநாதன்.
(5) திரு. என். சுந்தரேசத் தேவர்.

(4) 1972–73-ம் ஆண்டுக்கான சட்டப்பேரவை பொதுக் கணக்காய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

(1) திரு. கே. எஸ். மணி.
(2) திரு. டி. கே. பொன்னுவேலு.
(3) திரு. ஏ.பி. ஜனார்த்தனம்.
(4) திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு.
(5) திரு. கே. ராஜாராம்.

(5) 1972–73-ம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது :—

(1) திரு. க. அறிவழகன்.
(2) புலவர் ஒ. அறிவுடை நம்பி.
(3) திரு. எஸ்.டி. ஆதித்தன்.
(4) திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்.
(5) திரு. வி. ஈஸ்வர மூர்த்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/72). மாண்புமிகு அமைச்சரவர்கள்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, in the order paper......

MR. SPEAKER : It is in order. These are items left over yesterday

**(அ) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்சவரம்பு வரையறுத்தல்) திருத்தச் சட்டம் முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/72.)**

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I beg to move :

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land Amendment Bill, *1972, (Legislative Assembly Bill No. 7 of 1972) be taken into consideration."

Section 59 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961) originally provided that the provisions of Chapter VIII of that Act relating to cultivating tenant's ceiling area shall remain in force for a period of three years from the date of the publication of the Act, namely, the 2nd May 1962.

The life of this Chapter was extended from time to time by legislation. By the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1970 (Tamil Nadu Act 9 of 1970) the life of this Chapter was last extended up to the 1st May 1972. The life of this Chapter will expire on the 2nd May 1972. The provisions of Chapter VIII of the Act have come to stay and are intended to ensure an equitable distribution of lands among the cultivating tenants. It has therefore now been proposed that Chapter VIII of the Act may be made permanent instead of extending its life from time to time. In order to do this, Section 59 of the Act has to be omitted.

The Bill seeks to achieve the above object.

Sir, I commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER : Motion moved :—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972 ) be taken into consideration.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, இந்த கல்டிவேட்டிங் டெனண்ட்ஸ்க்கு 5 எக்கர்களுக்கு மேற்படாமல் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற சட்டத்தை நிரந்தரமாக இந்தச் சட்டத்தின் ஒரு பகுதியாக்கக் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அதே சந்தர்ப்பத்திலே, நாம் 5 எக்கருக்கு மேல் யாரும் வைத்திருக்கக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டு நடைமுறையிலே வந்திருந்தாலும்கூட இந்தச் சட்டத்தை முறியடிக்கக் கூடிய வகையிலே பலபேர் பினாமியாக பல பெயர்களிலே போட்டு 5 எக்கருக்குமேல், 10 எக்கர், 20 எக்கர், 30 எக்கர்கூட சாகுபடியில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது நடைமுறையிலே

* Published in the Tamil Nadu Government Gazette, Extraordinary dated 28th March 1972.



இருக்கும் உண்மையாகும். அப்படி 20 எக்கர், 30 எக்கர் பினாமியாகப் போட்டு வைத்திருப்பவர்களைக் கண்டு பிடித்து அந்த பினாமி டிரான் ஸேக்ஷனைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முற்பகல்

அதே சந்தர்ப்பத்தில் அரசுக்கே நன்றாகத் தெரியும். வலிவலத்திலே 11-00
கூட தீவிர முயற்சி செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் இம்மாதிரி நிலைமை நீடித்திருக்கிறது. இந்த நிலைமை நீடித்திருக்காமல் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுத்து உண்மையிலேயே சாகுபடி செய்யக் கூடியவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொள்ளாமல் இருப்போமானால் இந்தச் சட்டத்தின் பெரும் பயன் சாதாரண விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. சர்வோதய ஊழியர்கள்கூட இது சம்பந்தப்பட்ட விவரங்களை எந்தெந்தப் பகுதியில் இப்படி பினாமி டிரான்சாக்ஷன்கள் இருக்கின்றன என்று தெரியப்படுத்தி இருக்கிறார்கள். அரசு அதிகாரிகளை நியமித்து எங்கெங்கு இம்மாதிரி பினாமி டிரான்சாக்ஷன்ஸ் இருக்கின்றன என்று கண்டு பிடித்து அதைச் சாதாரண விவசாயிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்

டிரஸ்டை நாம் எடுக்கப் போகிறோம். ரொம்ப நல்லதாகப் போயிற்று. டிரஸ்ட் என்று வைத்துக் கொண்டு பல பேருக்குச் சாகுபடிக்குக் கொடுத்ததாகக் கணக்கு வைத்துக் கொண்டு நிலச்சுவான்தார்கள் அவர்களே அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையைப் பார்க்கிறோம். இந்த மாதிரி நிலைமை இல்லாமல் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Chairman, Sir, I thought that in the year 1972, with a progressive Government, there would not be the term "cultivating tenant" at all. I am not a cultivator myself. But I have been closely watching the statements issued by authorities and members of this Legislature. How can there be a cultivating tenant when the principle is that absentee landlordism should be abolished and cultivating tenant should himself become the landlord either by paying compensation through the Government or by some method by which the lands should be assigned to the cultivating tenant ? I can understand that till that time, till such a reform takes effect, a temporary measure for three years coming in for renewal so that the cultivating tenant ownership legislation comes. Till then this can work. but this has become a perpetual legislation that is coming before the Legislature and the Act is persisting. My only objection is this. There is very much of a fragmentation of land.

I am not at all against ceiling. What I am thinking is unless a dynamic land reform comes up by which consolidation of land takes place and a sort of joint cultivation—not exactly on Western lines, but a kind of joint cultivation where the levelling of the ground, irrigation, fertilisers and use of mechanical appliances can all be utilised. Unless we have some sort of such consolidation of land, it is impossible.

(திரு. கே. எம். சுப்பிரமணியம்) [1972 ஏப்ரல் 4

This morning somebody raised the question of people owning half an acre, one acre and two acres. How can they use these mechanical appliances? I am only saying this taking advantage of this opportunity. A big dynamic land reform should be brought forward by which absentee landlordism will be abolished and the small landlords will be helped to retain their lands and cultivate them by consolidation of land and also preserve the identity of their holdings. While I want the fragmentation of ownership, there should be joint cultivation so that small cultivating tenants could sow the seeds, look after the irrigation, clear the weeds and harvest the grain through a process of joint action. Unless there is such a big land reform, it is impossible to achieve the purpose which we want to achieve. Thank you, Sir.

**மாண்புமிகு திரு ப.உ. சண்முகம்** தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் ஐந்து ஸ்டாண்டர்டு எக்கர் வரை பயிர் வைக்கலாம் என்று இருந்த சட்டம் நிலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட 1968-ம் ஆண்டில் இருந்து மூன்று ஆண்டு காலத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஆண்டுக்காண்டு அந்தச் சட்டம் நீடிக்கப்பட்டு வந்தது. அதை நிரந்தரமாக்க இப்போது நாம் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் பினாமி டிரான்சாக்ஷன்ஸ் நிறைய இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரே நிலச்சுவான்தார் பல பேர் மீது குத்தகை என்று போட்டுவிட்டு தானே அனுபவித்து வருகிறார் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு உதாரணமாக வலிவலத்தில் நடைபெற்ற வழக்கு சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் பினாமி டிரான்சாக்ஷன்ஸ் மீது தனிக் கண் வைத்து எங்கெங்கு தவறு நடந்து வருகிறதோ அதை எல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு வலிவலம் வழக்கே ஒரு சான்றாகும். ஆனாலும் சட்டத்தின் ஓட்டைகளைப் பார்த்து அதிலே நிலச்சுவான்தார்கள் புகுந்து கொள்ளுகின்ற நிலை இருக்கிறது. அதைத் தடுக்க என்ன செய்ய முடியும்? எப்படி விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது என்பதைப் பற்றி அரசாங்கம் தனியாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் இப்படி நிலச் சீர் திருத்தங்கள் நாட்டிலே வருவதைப் பற்றி வரவேற்றுப் பேசினார்கள். இன்னொரு புரட்சிகரமான திட்டத்தையும் சொன்னார்கள். ஆப்சன்டி லாண்ட்லார்டிசமே கூடாது. அதை ஒழித்து விட்டால் குத்தகைதாரர்கள் என்று எப்படி வருவார்கள் என்று கேட்டார்கள். ஆப்சன்டி லாண்ட் லார்டிசம் ஒழிய வேண்டு மென்பதே கொள்கையளவில் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த நிலங்களை எல்லாம் எடுத்துக் கொள்ளுவது என்றால் காம்பன்சேஷன் கொடுப்பது போன்றவற்றுக்கான வழி வகைகளை எல்லாம் செய்ய வேண்டும். இது நினைத்தவுடன் ஒரே நாளில் சட்டம் போட்டு மறுநாள் முடிந்துவிடும் காரியம் அல்ல. கொள்கை அளவில் அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. காலம் கனியட்டும், கனியும்வரை பொறுத்திருப்போம் என்ற நிலையில் இருக்கிறோம். விரைவில் அந்த இடத்தை நோக்கி இந்த அரசாங்கம் நிச்சயமாகப் போய்ச் சேரும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1972 ஏப்ரல் 4] (திரு. ப. உ. சண்முகம்)

இது போன்ற நிலச் சட்டங்கள் நாட்டில் வரும்போது ஆங்காங்கு இருக்கும் நிலப் பிரபுக்கள் சட்டத்தின் ஓட்டைகள் வழியாகப் புகுந்து கொண்டு சட்டத்தின் நோக்கத்தைத் தோற்கடிக்க முயற்சிப்பது என்பது சர்வசாதாரணமான ஒன்றாகும். அவற்றை எல்லாம் அரசாங்கம் கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதி மொழியை அளித்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்

Mr. CHAIRMAN: (Thiru S. KANDAPPAN): The question is—That the Tamil Nadu Land Reforms (Fixation and Ceiling on Land) Amendment Bill 1972 (L. A. Bill No. 7 of 1972) be taken into consideration".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

The Hon. Thiru P. U. SHANMUGAM: Sir I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill 1972 (L.A. Bill No. 7 of 1972) be passed".

The motion was put and carried and the Bill was passed into law.

### (7) அரசினர் தீர்மானம்,

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நீர் வழங்கு—வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன் வடிவுக்கு முன்னால் தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நில வுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/72) எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

### (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தில் இரண்டாம் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (6) அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஞ) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உடைமைக்கு உச்சவரம்பு வரையறுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1972).

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 * (L.A. Bill No. 15 of 1972) be taken into consideration".

Under sub-section (5) of section 5 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act, 58 of 1961), the maximum extent of land which a family consisting of more than five members can hold is 60 standard acres. It has been decided to reduce this maximum extent from 60 standard acres to 40 standard acres, as announced by the Chief Minister in his Budget speech on the 1st March 1972.

The Committee of Legislators of both Houses constituted to review the exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), has recommended the deletion of the exemption in respect of hill areas contained in section 73 (*v*) of the Act. The Government have accepted this recommendation.

Sub-clause (2) of clause (40) of section 3 of Tamil Nadu Act 58 of 1961 prescribes the formula for conversion of ordinary acres. into standard acres in respect of lands in the Kanyakumari district the wet lands irrigated by rain-fed tanks in Kanyakumari district are not covered by this formula. It has, therefore, been decided to amend sub-clause (2) of clause (40) of section 3 of the Act so as to treat the wet lands irrigated by rain-fed tanks in the Kanyakumari district to be on a par with the dry lands irrigated by rain-fed tanks for the purpose of calculation of standard acre.

Under section 60 of the said Act, the cultivating tenant's ceiling area means 5 standard acres. According to sub-rule (2-A) of rule 51 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962, where the authorized officer finds that the land held by a culti-

* Published in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 30—3—1972.



vating tenant in excess of the cultivating tenant's ceiling area is more than ½ an acre in the case of wet lands and one acre in the case of dry lands, the authorised officer may for reasons to be recorded in writing leave such excess land in the possession of the cultivating tenant. On the recommendations of the Committee on Subordinate Legislation, it has been decided to incorporate the above provision in the Act by amending section 62 suitably.

According to clause (iv) of section 73 of the said Act nothing contained in the Act shall apply to any land held by any industrial or commercial undertaking other than a co-operative society, which in the opinion of the Government *bona fide* carries on industrial or commercial operation and which is approved by the Government. Under this section, if the approval is given by the Government, then the industrial or commercial undertaking can hold any extent of land. There is no power under this section to restrict the extent of land in respect of which the undertaking should enjoy the exemption. It has, therefore, now been decided to provide in new section 37-A that an industrial or commercial undertaking should apply to the Government for permission to hold or acquire land in excess of the ceiling area. The exemption will be applicable only in respect of those lands specified in the order granting permission, provided that the conditions specified in the order granting exemption are complied with.

Section 111 of the said Act, empowers the Government to issue orders to remove any difficulty that may arise in giving effect. to any of the provisions of the Act. The Supreme Court in *Messrs. Jalan Trading Company V. Mill Mazdoor Sabha* (1967 I S.C.J. 189)has obesrved that the power to remove difficulty by altering the provisions of the Act would in substance amount to exercise of legislative authority and that such power cannot be delegated to an executive authority. This opportunity has, therefore, been availed of to omit section 111.

The Bill seeks to achieve the above objects.

Sir, I commend the motion for the acceptance of the House.

THIRU N. K. PALANISWAMY : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 15 of 1972) be referred to a Select Committee consisting of.............Members of the Assembly".

The amendment was duly seconded.

திரு. என். கே பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த நிலச்சீர் திருத்தம் இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. என்று கிராமப்புறங்களில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப்

போக்குவது, இன்னென்று, விவசாயிகள் மத்தியில் பணத்தை உண்டாக்குவது. ஆகவே இந்தத் தடை காரணமாக உழைப்புச் சக்திகள் தங்களுக்கு உரித்தான உழைப்பை உபயோகிக்கமுடியாமல் தடங்கல் செய்கிறார்கள். இது கம்யூனிஸ்டுகள் மட்டும் ஏதோ நிலம் இருக்கிறது, அதைப் பங்கிட்டுப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று பொறாமையால் சொல்வதல்ல. நாடு முன்னேற வேண்டும், நாட்டிலுள்ள தொழில்கள் வளரவேண்டும் என்பதற்காகத்தான் சொல்லப்படுகிறது. முதலாளிகள் ஏராளமான தொழிற்சாலைகளைக் கட்டலாம். அதில் உற்பத்தியாகக்கூடிய பொருள்கள் விற்பனையாக வேண்டுமென்றால் அவற்றை விவசாயிகள் வாங்க வேண்டுமென்றால் அவர்களுக்குப் பணம் வேண்டும். இந்த அடிப்படையான நோக்கத்தைக் கொண்டதுதான் நிலச்சீர்திருத்தம்.

நிலச்சீர்திருத்தம் பீஸ்மீலாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படித் துண்டு துண்டாக கொண்டுவரப்படுவதின் காரணமாக எந்த நோக்கத்தோடு இந்த சட்டத்தை நாம் நிறைவேற்றுகிறோமோ அது நடைமுறையில் வராமல் தப்பித்துக் கொள்வதற்கு வழியிருக்கிறது. ஆகவே ஒரு காம்ப்ரிஹென்ஸிவ் பில்லாக வந்திருந்தால் நலமாகயிருக்கும்.

1958-ல் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் எல்லாப் பக்கத்திலும் சொன்னார்கள். இம்மாதிரிக் கொண்டுவரப்போகிறோம், என்ன செய்கிறீர்கள் என்று கேட்டு மூன்று வருடங்கள் கழித்து 1961-ல் அதை சட்டமாக கொண்டுவந்தபோது யாருக்கும் மிச்சம் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. 30 ஸ்டான்டர்ட் ஏக்கர்கள் என்று வைத்தார்கள். அதற்கேற்றபடி 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று பிரித்து எழுதி வைத்துவிட்டார்கள். எருமையின் பெயரிலும்—மோகன் என்ற பெயர் வைத்த எருமை—எழுதி வைக்கப்பட்டது, நாயின் பெயரிலும் எழுதிவைக்கப்பட்டது. முப்பது ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று வைத்தும் வலிவலம் தேசிகருக்கும், தர்மபுரம் ஆதினத்திற்கும், சாமியப்ப முதலியாருக்கும் அப்படியே இருக்கிறது. பூமி கொஞ்சம் கூடக் குறையவில்லை. நாம் போட்டோம் 15 ஏக்கர் என்று. 30-ல் பாதி என்று வைத்தால் பாதியாவது வந்தாகவேண்டும். ஆனால் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டபோது நிலம் கிடைக்கவில்லை, அதில் பாதியாகக் குறைத்து இந்தச்சட்டம் போடப்பட்டும் விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கவில்லை.

இராமநாதபுரத்தில் திரு. முத்தையா செட்டியாருக்குச் சேர்ந்த 400 ஏக்கர் நிலத்தை அவர்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று சர்க்காருக்கு எழுதியும் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லையென்று சொல்லப்படுகிறது. பட்டகாரருக்கு ஆயிரம் ஏக்கர், அவர் தம்பிக்கு ஆயிரம் ஏக்கர் என்று இப்படிப்பட்ட நிலையில் விதிவிலக்குச் செய்தோம். ப்ரசிடெண்ட் அப்ரூவல் கிடைத்துவிட்டது. இன்னும் என் நோட்டீஸ் கொடுக்கவில்லை? சென்ட்ரல் லாண்ட் ரிபார்ம்ஸ் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. மாநிலங்கள் பூராவிலும் ஒரு பேஸிஸில் ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு என்று வரையறுக்கப்படவேண்டும் என்று. தண்ணீர் வசதி உள்ள இடம் என்றால் 18 ஏக்கர், வறட்சியாக இருக்கிற பகுதி என்றால் 56 ஏக்கர் வரையில் என்று விதிக்கலாம் என்றிருக்கிறது. ஆக்ட் 17 ஆஃப் 1970 இருக்கிறது. ஐந்து பேர்கள் உள்ள குடும்பத்திற்கு பதினைந்து ஏக்கர்கள், அதற்கு



மேல் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர், அப்படி 25 ஏக்கர் வரையில் கொடுக்கலாம் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இப்போது ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று இருப்பதை 40 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வரும் இந்தச் சட்டத்தை ஆதரித்து, ஒரு சிலகருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1960 ஆண்டு முதலிலே உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்தபோது, அந்த உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக உபரி நிலம் கிடைக்கவில்லை என்று எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்த பின் அதனால் ஒரு ஏக்கர் நிலம் கூடக் கிடைக்காததற்கு என்ன காரணம்? அந்த உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்ததற்குப்பின்னால், சட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்படவில்லை என்பதுதான். அந்த உச்சவரம்புச் சட்டத்தை எப்படி ஏமாற்றி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். ஒருவருக்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் அளவுக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது, அதற்கு மேல் நிலம் வைத்திருக்கிறார்களா என்று சொல்வதற்கு, ஆதரைஸ்ட் ஆபீசர்ஸ் என்று ஒரு அதிகாரியை நியமித்தார்கள். அவர் தான் ஒருவருக்கு எவ்வளவு சர்பிளஸ் நிலம் இருக்கிறது, அல்லது இல்லை என்பதை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் பெற்றவர். அப்படிப்பட்ட அதிகாரிகளைப் போட்டும் நமக்கு 10 ஏக்கர்கூட கிடைக்காத நிலைமை இருக்கிறது. அந்தச் சட்டம் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை, அந்தச் சட்டம் ஏமாற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது.

சட்டம் உண்மையான நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்குமானால், அந்தச் சட்டம் எந்தத் தேதியிலிருந்து அமல்படுத்தப்படவேண்டுமோ—அதாவது 6-4-60 லிருந்து அமல்படுத்தப்படவேண்டுமானால்—அதற்கு முன்பு 4மாதங்களுக்குமுன்பே என்னென்ன நிலங்கள் விற்கப்பட்டனவோ, குறிப்பாக, பெரும் நிலச்சுவான்தார்கள் எவ்வளவு நிலங்களை விற்று இருந்தார்களோ, அது செல்லாது என்று சொல்லியிருக்கவேண்டும்.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன், அப்போது அமைச்சராக இருந்தவர் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் பெண் சரோஜினி வரதப்பன் என்பவர் 8-12-1959 முதல் 4-4-1960 வரையில் அவர்களுடைய நிலங்கள் 27 ஏக்கர் நஞ்சை நிலங்களை விற்று இருக்கிறார். ஒரு அமைச்சரின் மகள் அதுவும் சாதாரண அமைச்சர் அல்ல, மிகவும் சக்தி வாய்ந்த அமைச்சர், அந்தக்காலத்தில அவரிடத்தில் போலீஸ் துறை இருந்தது, நீதி மன்றம் இருந்தது, உணவுத் துறை இருந்தது, அதோடு அவர் அமைச்சரவையில் இரண்டாவது நிலை பெற்று இருந்தார்கள்—காமராஜர் முதலமைச்சர், இப்படிப்பட்ட செல்வாக்கு உள்ள அமைச்சர்—அவர்களுடைய வீட்டில் இந்தமாதிரி விற்று இருக்கிறார்கள். சட்டம் வந்தது, 6-4-1960ல் அவர்கள் 4-4-1960-ல் விற்றிருக்கிறார்கள் அதாவது சட்டம் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு விற்றிருக்கிறார்கள், அது சட்டப்படி ஒத்துக்கொள்ளலாம் என்றாலும் சட்டம் வந்ததற்குப் பிறகு, வரதப்பன் என்பவர் அவர்களுடைய நிலத்தை விற்றிருக்கிறார். அந்த வரதப்பன் யார், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் மருமகன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இப்போது இருக்கக்கூடிய சட்டத்திற்கும், கனம் அங்கத்தினர் பேசுகிற கருத்திற்கும் எந்தவிதமான சம்பந்தம் இருக்கிறது என்று தெரியவில்லை. ஏற்கெனவே பல தடவைகள் அதுபற்றிப் பேசியாகிவிட்டது. மீண்டும் அதையே பேசிக்கொண்டிருப்பதால் சபையின் நேரம் வீணுகிறது. உறுப்பினர் அவர்கள் பழைய கதையைப் பேசிக்கொண்டிருப்பதற்கான காரணம் என்ன?

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, மன்றத்திலே கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அவர் பேசுவது இந்த மன்றத்தின் நேரத்தை வீணுக்குவது என்று இன்னொரு உறுப்பினர் பேசுவது, உறுப்பினரின் உரிமையைப் பாதிப்பதாகாதா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ரெபடிஷன் வேண்டாம் என்றுதான் சொல்கிருேம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்): இந்தப் பிரச்னை பல முறை பேசப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைச் சுருக்கமாகப் பேசி முடித்து விடுங்கள்.

திரு. ஏ. எம். இராஜா: நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொல்வதற்குள்ளாக திருமதி அனந்தநாயகி அவர்கள் குறுக்கிட்டுவிட்டார்கள். சட்டம் எப்படி ஏமாற்றப்பட்டிருக்கிறது, சட்டம் எப்படிச் செயல்படுத்தப்படவில்லை என்று எடுத்துக்காட்டத்தான் அவற்றைக் கூறினேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. செ. கந்தப்பன்): கடந்த காலத்தில் எப்படியெல்லாம் சட்டம் ஏமாற்றப்பட்டிருக்கிறது, இந்த காலத்தில் அதை எப்படித் தவிர்க்கவேண்டுமென்பதற்காக அவற்றைச் சொல்கிறீர்கள் என்பது புரிகிறது. பல முறை அந்தப் பிரச்சினையைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பதால் நேரம் கருதி, சுருக்கிக்கொண்டு வேறு பிரச்னைக்குச் செல்லுங்கள்.

திரு. ஏ. எம். இராஜா: 1960-ல் வரதப்பன் என்கிறவர், முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் மருமகன், 137 ஸ்டாண்டர்ட் ஏக்கரை 47 பேருக்கு விற்று இருக்கிருர்கள், வாங்கியவர்கள் ஏழை மக்கள், பெரிய பணக்காரர்கள். அவர்களுக்கு இருந்த சர்பிளஸ் நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக இருந்தால் அதை வாங்கிய ஏழை மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்குமா, அல்லது நிலச்சொந்தக்காரர்களுக்குக் கொடுக்குமா என்பதைப் பார்க்கவேண்டும். ஏராளமான ஏழை மக்கள். அதை வாங்கியிருக்கிருர்கள், பணம் கொடுத்து வாங்கியிருக்கிருர்கள். அதே போல் பணக்காரர்களும் வாங்கி இருக்கிருர்கள். சீனிவாசா பார்ம் என்று பூந்தமல்லிக்கு அருகில் ஒரு பார்ம் இருக்கிறது. அதை ஒரு பெரும்பணக்காரர் வாங்கியிருக்கிருர். எங்குமே பார்த்து இருக்கமுடியாது, தோட்டத்திற்கு காம்பௌண்டு சுவர் கட்டியிருப்பதை, ஆனால் இந்தபார்க்கும்



கட்டியிருக்கிருர்கள். எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தால் இப்படிப்பட்ட காம்பௌண்ட் சுவர் கட்டியிருப்பார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

அரசு உச்சவரம்புச் சட்டம் கொண்டுவருவது ஏழை, நிலம் இல்லாத விவசாயிகளுக்காகத்தான். இப்படி சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து ஏமாற்றியிருப்பவர்களிடமிருந்து நிலத்தை வாங்குவதற்காக வழிவகை என்ன என்பதை அரசு கவனிக்கவேண்டும். நியாயமாகப் பார்க்கப்போனுல், சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து இந்தச் சட்டத்தின் நோக்கத்தை ஏமாற்றியவர்களுக்குக் கடுமையான கிரிமினல் தண்டனை கொடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். அன்று அமைச்ச ராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் இதற்கு உடந்தையாக இருந் திருக்கிருர்கள். அன்று சட்ட அமைச்சராக இருந்த, மிகவும் திறமை வாய்ந்த, மிகவும் நேர்மையானவர் என்று சொல்லப்படுகிற கோவை மாவட்டத்தை சேர்ந்த சுப்பிரமணியம் அவர்கள், அன்று இந்தச்சட்டத்தை ஏமாற்றியவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். அவர்கள் நட வடிக்கை எடுக்காததால் அவர்களும் அதற்குத் துணை போய் இருக்கிருர்கள் என்றுதான் பொருள். அன்று முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களும் துணை போய் இருக்கிருர் என்றுதான் பொருள். அவர் கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வரதப்பன் விவகாரம் மிகவும் முக்கியமான விவகாரம். வருவாய்த் துறை அமைச்சர் சட்டமன்றத்திற்கு ஒரு அறிக்கைமூலம் அதைத் தெளிவு படுத்தல் வேண்டும். அப்போதுதான் நாட்டிற்கு அது தெளிவாகும். அப்படிச்செய்தால் வருங்காலத்தில் உச்சவரம்புச்சட்டத்தை ஏமாற்றுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற நிலைமை ஏற்படும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே பல முக்கியமான, நல்ல கருத்துக்களைக் கொண்டுவந்து இருக்கிருர்கள். இப்படி அடிக்கடித் திருத் தங்கள் நிலச்சீர்திருத்தச் சட்டத்திலே கொண்டுவருவதைக் காட்டிலும், முழுவதுமாக உட்கார்ந்து தமிழகத்தில் உள்ள சூழ்நிலையில் என்னென்ன மாறுதல்களை செய்யலாம், எவ்வளவு ஏக்கர் நிலங்கள் ஒரு குடும்பம் வைத்துக்கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்து அதைச் செய்தால் நன் ருக இருக்கும். பொதுமக்களுக்கும் அப்போதுதான் ஒரு நிம்மதி ஏற்படும். இதற்கு முந்தி சட்டம் வந்தபோது 60 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று வைத்தோம். இப்போது 40 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வந் திருக்கிருேம். நம்முடைய பக்கத்திலே உள்ள தீவிரவாதிகள் இது போதாது 20 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று ஆக்குங்கள் என்று திருத்தம் கொடுத்திருக்கிருர்கள். இதையெல்லாம் பார்த்தால் பொதுமக்களுக்கு ஒரு குழப்பம் ஏற்படும். எவ்வளவுதான் நிலம் வைத்துக்கொள்ளலாம். எப்படிப் பிழைப்பு நடத்தலாம் என்பதை அரசாங்கம் தெள்ளத்தெளிவாகச் சொல்லிவிடவேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றுல், நாங்கள் ஆட்சியில் இருந்த போது 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று கொண்டுவந்தோம். அப்படி வைத்தால் விவசாயிகளுக்கு என்ன வருமானம் வரும் என்ப தையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் வைத்தோம், அவனுக்கு

என்ன செலவாகும் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் வைத்தோம். அவனுக்கு என்ன உற்பத்தி வந்தால் அவன் கஷ்டப் படாமல் இருப்பான் என்பதையும் பார்த்தோம். அவன் பயிர் பாழாகி விட்டால் அவனுக்கு கிராப் இன்ஷீரன்ஸ், கேட்டில் இன்ஷீரன்ஸ் என்று எதுவும் கிடையாது. இனிமேல்தான் கொண்டு வரப்போகிறோம். அவர் களுடைய குடும்பமும் மற்ற குடும்பங்கள்போல் சமுதாயத்தில் இருக்க வேண்டும். முதலில் 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்றோம், அது 15 ஆயிற்று. அப்புறம் அது 5 ஆகும் அப்புறம் அது 2 ஆகும். கனம் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள் 2 ஏக்கரில் 20,000 சம்பாதிக்கலாம் என்று.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : 2 ஏக்கரில் ரூ. 20,000 வரும் என்று நான் சொல்லவில்லை. 12 ஸ்டான்டர்ட் ஏக்கரில் என்று சொன்னேன்.

முற்பகல் 11-30

திருமதி த. ந. அனந்தநாயகி : நல்ல காலம் 12 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொன்னீர்கள். 1958-ல் ஒரு உயர்மட்டக்குழு போட்டு ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம். எப்படியும் ஒரு நல்ல சீர் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று கொண்டு வந்தோம். அகில இந்தியாவிலும் பிற மாநிலங்களில் நிலச் சீர்திருத்தம் வருவதற்கு முன்னால், தமிழகம் நிலச் சீர்திருத்தத்தில் வழிகாட்டியாக இருந்திட வேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. வையபிள் யூனிட்ஸ், அதாவது சாதாரணமாக ஒரு விவசாயிக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருந்தால், பொருளாதார அடிப்படையில் அந்த விவசாயி முழு கவனத் தையும் செலுத்தினால், மண் வளத்திற்கேற்ப, மழைச் செல்வத்திற்கேற்ப அவனுக்கு எவ்வளவு நிலம் தரவேண்டும் என்று ஆரஅமர யோசித்து முடிவு எடுப்பது மிக அவசியம். ஏனெனில் நாம் வருஷா வருஷம் சீர்திருத்தம் செய்துகொண்டிருக்கிறோம். 60, 40, 30, 20 என்று இப்படிப் போய்கொண்டிருப்பது நல்லது அல்ல. இதைச் சரியான முறை யில் ஆராய்ச்சி செய்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். ஏனெனில் நம் நாட்டில் மக்கள் தொகை அதிகம். ரஷ்ய நாட்டில் ( (The tiller of the soil can become the owner ) ரஷ்ய நாட்டில் மக்கள் தொகை குறைவு. நிலப்பரப்பு அதிகம். நம்முடைய நாட்டில்தான் கோடிக்கணக்கில் பெருகிக்கொண்டே இருக்கிறது மக்கள் தொகை. நிலத்தை உழுகின்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், நிலம் இருக்குமா என்பதே ஆராய்ச்சிக்குரியது, உழுகிற வனுக்கு நிலம் சொந்தம் என்பதை வேண்டாம் என்று சொல்லவில்லை. இதையெல்லாம் ஆரஅமர யோசித்துச் செய்ய வேண்டும். ஒருவனுக்கு எத்தனை ஏக்கர், ஒரு குடும்பத்திற்கு எத்தனை ஏக்கர் என்ற கொள்கை அடிப்படையில் இந்தச் சீர்திருத்தங்களையெல்லாம் செய்யவேண்டும். ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்தபிறகு இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டும். ஒரு விவசாயினுடைய தேவையையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். ஒருவருக்கு அரை ஏக்கருக்கு மேல் கொடுக்கக் கூடாது என்றால், அது வையபிள் யூனிட்டாக இருக்குமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். பொருளாதார அடிப்படையில் சரியாக இருக்குமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும்.......



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இருக்கிற உழவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்பது கொள்கை அல்ல. இருக்கிற நிலத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்பதுதான் கொள்கை. அடிப்படையில் வித்தியாசமான வாதத்தை வைத்துக்கொண்டு பேசுவதில் அர்த்தம் இல்லை. எவ்வளவு ஆட்கள் இருக்கிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் நிலம் கொடுக்க வேண்டும் என்று பொருள் வைத்துக்கொண்டு விவாதித்துக்கொண்டிருப்பதில் பலன் இல்லை. இருக்கிற நிலங்களை எவ் வளவு பேர்களுக்குப் பிரித்துக்கொடுக்கலாம், உழவர்கள் அதை வைத்துக் கொண்டு எப்படி வாழ முடியும் என்பதுதான் இப்பொழுது இருக்கக் கூடிய பிரச்னை. சமுதாயப் புரட்சி ஏற்படும்பொழுது இதை எல்லோரும் வரவேற்பார்கள் என்றுதான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டத்தின்மூலம் நிலத்தை எடுத்து, துண்டு துண்டாகப் போட்டு அரை செண்டு, ஒரு செண்டு என்று ஒவ்வொரு விவசாயிக்கும் கொடுப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. எந்த அரசாங்கத்திற்கும் அப்படிப்பட்ட கொள்கை இருக்க முடியாது. இந்த அரசாங்கமும் அப்படிப் பட்ட கொள்கையை வைத்துக்கொள்ளவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் சொல்கிறேன், 100-க்கு 75 பேர்கள் உழவர்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் எப்படிப்பிரித்துக் கொடுக்க முடியும். எந்த வகையில் பிரித்துக் கொடுக்கமுடியும் என் பதைப் பார்க்கவேண்டும். கொள்கை அளவில் கோஷம் போட்டுவிட்டுப் போகாமல், நடைமுறையில் நடக்குமா என்பதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். பிரித்துக் கொடுக்கும்பொழுது அன்எகனமிக் யூனிட் என்ற அளவில் பிரித்துக் கொடுப்பது சரியல்ல. இந்த அரசாங்கம் இதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உழவர்கள் நிலம் இல்லாமல் இருக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்குப் பிற்போக்குக் கட்சி எதுவும் கிடையாது. எல்லாம் முற்போக்கு எண்ணம் உள்ள கட்சி களாகத்தான் இருக்கின்றன. ஆனால், நடைமுறையில் என்ன நடக்கும் என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்து பிறகு இதைச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று இந்தச்சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். **Industrial or commercial undertaking should apply to Government for permission to hold the land** இது வரவேற்கப்படவேண் டிய தீர்மானம். பல ஆயிரக் கணக்கான ஏக்கர்களைப் பல இண்டஸ்டிரியல் அண்டர்டேகிங்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏன் அவ்வளவு தூரம் போக வேண்டும் ? அரசு நடத்துகின்ற தொழிற்சாலைகளில் பல ஏக்கர் நிலங்களை எடுத்துக்கொண்டு பிரயோசனம் இல்லாமல் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். குறிப்பாக சேலத்தில் 24,000 ஏக்கர் தேவைப்படுகிறது என்று சொல்லப்பட்டது. இப்பொழுது அதில் 7,000 ஏக்கர் தேவையில்லை என்று விலக்கியிருக்கிறார்கள். மீதியிருக்கக்கூடிய நிலங்களில் எத்தனை ஏக்கர் தேவைப்படுகிறது என்பது ஆராய்ச்சிக்குரியது. வீலிங் ஏரியா 15 ஏக்கர் என்று சொல்லப்படுகிறது. இண்டஸ்டிரியல் ஆர் கமர்ஷியல் அண்டர் டேகிங்ஸ் ஆகியவைகளை தரம் வாரியாகப் பிரித்து, பெரிய அண்டர்டேகிங், ஸ்மால் அண்டர்டேகிங் என்று பிரித்து, அப்படி ஒவ்வொரு தரத்திற்கும் எத்தனை வீலிங் ஏக்கர் என்று நீங்கள் ஏதாவது வரையறுத்திருக்கிறீர் களா ? இல்லையென்றால், 15 ஏக்கருக்குமேல் எந்த இண்டஸ்ட்ரியல் அண்டர்டேகிங்கும் வைத்திருக்கக்கூடாது என்றால், பல நூற்றுக்கணக்கான ஏக்கர்களை அவைகள் திருப்பிக் கொடுக்கவேண்டியிருக்கும். நூற்றுக்

கணக்கான ஏக்கர்களை ஏன் இதுவரையிலும் வைத்திருக்கிறார்கள் ? ஒரு காலத்திற்குத் தேவைப்படும் என்று சொல்லி. அலுமினியம் பேக்டரியைப் பற்றிக் கூட அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். 600, 700 ஏக்கரானவை வளைத்துப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இண்டஸ்ட்ரியல் அண்டர்டேகிங் எவ்வளவு பெரிய தொழிற்சாலையாக இருந்தாலும், எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், 15 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக்கூடாது, அதற்கு மேல் நிலம் வேண்டுமானால் அரசாங்கத்தின் உத்தரவின் பேரில்தான் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டால், அது பல கெட்ட பெயருக்கு இடம் கொடுக்கும். அரசாங்கம் அவர்களுக்கு வேண்டுபவர்களுக்குக் கொடுத்தார்கள், வேண்டாதவர்களுக்குக் கொடுக்கவில்லை, தெரிந்தவர்களுக்குக் கொடுத்தார்கள் என்றெல்லாம் கெட்ட பெயர் வரலாம்..........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கனம் அங்கத்தினர் பேசும்பொழுது இண்டஸ்ட்ரியல் அண்டர்டேகிங்ஸ் ஏராளமாக நிலம் வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அதைக் குறிப்பிட்ட அளவுக்குக் கொண்டுவருகிற நேரத்தில், ஏற்கெனவே வைத்திருந்தவர்கள் குற்றவாளி ஆவார்கள் என்று சொன்னார்கள். அந்தக் காலத்தில் அதை விட்டுவைத்திருந்தவர்கள் அதை அனுமதித்தவர்கள்தான் குற்றவாளிகள் ஆவார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மூன்று வருஷம் நீங்களும் அனுமதித்திருந்தீர்கள். நீங்களும் குற்றவாளிகள்தான். நாங்கள் முதலில் அனுமதித்தோம் என்றால், 1967-லிருந்து 1972 வரையில் நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். எங்கள் குற்றத்தில் பாதி உங்களுக்கும் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு இண்டஸ்ட்ரியல் அண்டர்டேகிங்குக்கும் எவ்வளவு அரசாங்கம் பெர்மிட் செய்கிறது என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிடவேண்டும். Otherwise that will lead to malpractices வருஷா வருஷம் அப்ளிகேஷன் போடவேண்டும் என்றால், எனக்கு 20 ஏக்கர் வேண்டும், 30 ஏக்கர் வேண்டும், கொடு என்று அப்ளிகேஷன் போடுவதென்றால் அது சரியாக வராது. ஒவ்வொரு அண்டர்டேகிங்குக்கும் கணக்குப் பார்த்து ஃப்யூச்சர் யூசுக்கு எவ்வளவு நிலம் வேண்டியிருக்கும், எக்ஸ்டென்ஷனுக்கு எவ்வளவு வேண்டியிருக்கும், 20 வருஷத்திற்கு எவ்வளவு தேவைப்படும் என்ற அளவுக்கு அவர்களுக்கு லீஸில் கொடுக்கும் முறையில் ஒரு பாலிஸியை வைத்துக்கொள்ளவேண்டும். Industrialists should not be running to Government every now and then. It will definitely lead to malpractices.

THE HON. THIRU P. U. SHANMUGAM: I want to correct the hon. Member. We have not said that they should come every year. If they come for once, then it is over. If at all they want to extend, then they will have to apply.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Here it is not stated so. What all is stated here is that they must apply for permission. It is not clear whether they must apply each year or once in five years. We have no idea. You must make the idea clear in the rules, as to how long you are going to give the lands on lease, within how many



Years they should apply, whether you will take into consideration future period, what is the extension you are going to give them, etc. All these things must be made clear.

வருடா வருடம் 50 ஏக்கர் நிலம் என்று கொடுத்துவிட்டால், அவர்கள் ஆட்சி இருக்கிற வரைக்கும் கணக்குப் போட்டுக்கொடுத்துவிட்டு, பிறகு அந்த ஸ்தாபனம் விரியக்கூட இடமில்லாமல் போய்விடக்கூடாது. பிற்காலத்தில் விரிவுபடுத்துவதற்கு அந்தத் தொழிற்சாலைக்கு எத்தனை இடம் வேண்டும் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, எந்த அளவுக்கு அந்தத் தொழிற்சாலை எக்ஸ்டெண்டு ஆகும் என்பதையெல்லாம்பற்றித் திட்டவட்டமாக, ஆர அமர யோசனை செய்து ஒரு முடிவிற்கு வருவது அவசியமாகும். இவ்வளவு போதும் என்று சொல்லி இப்பொழுது கொடுத்துவிட்டால், பின்னால் விரிவடையும்பொழுது கொடுத்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டால், அகுவிஸிஷன் காஸ்டுகூடப் பின்னால் அதிகமாகிவிடும். இதுமாதிரிப் பல சிக்கல்கள் இண்டஸ்ட்ரியல் அண்டர்டேகிங்ஸ்க்கு வரும், இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(a) the nature of the industrial or commercial operation,

(b) whether the excess land is required for immediate use or use in future, and

(c) such other particulars as may be prescribed.

என்றெல்லாம் guide lines சொல்லியிருக்கிறார்கள். இது போதாது. விரிவாக எந்தெந்த அண்டர்டேக்கிங்குக்கு எவ்வளவு லீஸிங் என்ன முறையில் கொடுக்கவேண்டும்? உதாரணத்திற்குச் சொல்லப்போனால், பாலத்தை 10, 20 வருஷங்களுக்கு முன்பாக குறுகலாக கட்டிவிடுகிறோம். பிறகு 10. 20 வருஷம் கழித்து அந்தப் பாலத்தை உடைத்து எறிந்துவிட்டு அகலமான பாலத்தைக் கட்டவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏன், இதற்குக் காரணம் என்ன ?

you do not take future expansion into consideration அம்மாதிரி இருக்கக்கூடாது. ஃப்யூச்சருக்கு எவ்வளவு தேவைப்படும் என்று இன்வெஸ்டிகேட் செய்யவேண்டும். இதற்காக நிபுணர் குழு ஒன்றைப் போட்டாவது, இண்டஸ்ட்ரியல் அண்டர்டேக்கிங்ஸ் இன்குளுடிங் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ், ஸ்டேட் அண்டர்டேக்கிங்ஸ் ஆகியவைகளுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது என்பதைப் பரிசீலனை செய்து, அதில் சரியாக கவனம் செலுத்தி, அதற்குப் பின் எந்த ஸ்தாபனத்திற்கு எவ்வளவு நிலம் கொடுக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டும். அப்படியில்லாமல் அவசரப்பட்டு எந்த மாறுதலையும் சீக்கிரம் செய்துவிட்டால், பின்னர் அது சிக்கலில் கொண்டுபோய் விடக்கூடும். அந்த மாதிரி நிலை ஏற்படுத்தக்கூடாது என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அரசு கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதாவில் குடும்பம் என்பதற்குக்கூட டெபினிஷன் கொண்டுவந்திருக்க வேண்டும். முன்னால்

டும்பம் என்பதற்கு டெபினிஷன் சரியாக இல்லை. இந்தச் சட்டம் ந்ததிலிருந்து அதை மாற்ற வேண்டும் என்று கூறிக்கொண்டு வருகிறோம். அதை மாற்றி இந்த மசோதாவை கொண்டுவந்திருந்தார்களேயானால் இது இன்னும் நன்றாக இருந்திருக்கும். அப்படி குடும்பம் என்று டெபினிஷனை மாற்றி 60, 40 என்று செய்ததை, 25, எக்கராவாக ஆக்கியிருக்கவேண்டும். ஒரு குடும்பத்திற்கு அதிகப்படியாக 25 எக்கர். அதற்குமேல் வைத்திருக்கவேண்டியதில்லை என்று செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். இதற்காக ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொண்டு 40 எக்கர் என்றிருப்பதை 25 எக்கராவாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

25—ஆகக் குறைக்க வேண்டும் என்று நான் கூறுகிறபொழுது அம்மையார் அவர்கள் ஏதோ வயபிள் யூனிட்டாக இருப்பது போய்விடும், நாட்டில் நிலம் எல்லாம் சிதறிப்போய் சாகுபடி குறைந்துவிடும் என்று சொன்னார்கள். 40 ஸ்டாண்டர்டு எக்கர் என்று நாம் சொல்லும்பொழுது, கோவை, சேலத்தில் எடுத்துக்கொண்டால் 160 எக்கர் என்று வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் நியூ ப்ராஜெக்ட் ஏரியாவில் 64 எக்கர் வருகிறது. 64 எக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு ஒரு குடும்பம் சாகுபடி செய்ய வேண்டுமென்றால், 10 பேர்களையாவது சம்பளத்துக்கு வைத்துக்கொண்டு தான் சாகுபடி செய்ய முடியும். 64 எக்கர் முப்போகம் செய்யவேண்டுமென்றால், அந்தக் குடும்பத்தின்கீழ் 10, 20 குடும்பத்தினர் கூலிக்கு வேலை செய்தாக வேண்டும். இப்படி ஒரு குடும்பமே அந்த லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டு போகக்கூடிய நிலைமையை நீண்ட நாட்களுக்கு அனுமதித்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, 25 எக்கர் ஸீலிங் என்று வைத்துவிட்டால், ஒரு சில பேர்களையாவது நிலம் இல்லாதவர்களை நிலம் இருப்பவர்களாக ஆக்க முடியும். அந்தக் கருத்தை ஒட்டித்தான் 25 ஸ்டாண்டர்டு எக்கர் என்று கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தத்தை அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹில் ஏரியாவுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மலைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் சாகுபடிசெய்யப்படாமலேயே கிடப்பதை நாம் பார்க்கிறோம். அதிலே சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. தனிப் பட்டா நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை எடுத்து யாரோ சிலருக்கு ஒப்படைவு செய்கின்றதுபோல் அல்லாமல், அரசாங்கமே அந்த நிலங்களையெல்லாம் சாகுபடி செய்வதற்கு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனிப்பட்ட ஆட்களுக்குக் கொடுப்பதைவிட கூட்டுறவு முறையில் அல்லது அரசாங்கமே நேரடியாக ஆட்களை வைத்து அதிலே வேலை செய்கிறவர்களுக்கு நல்ல கட்டுபடியாகக்கூடிய சம்பளம், குறைந்தபட்சத் தேவையைத் பூர்த்திபண்ணும் அளவிற்குச் சம்பளம் கொடுத்து, அந்த நிலங்களைத் தோட்டங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து "இண்டஸ்ட்ரியல் அண்டு கம்மர்சியல் அண்டர்டேகிங்ஸ்" இது ஒரு ரொம்ப நல்ல முடிவு. இந்தத் திருத்தத்தை கொண்டுவந்திருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அநேக இண்டஸ்ட்ரியல் உரிமையாளர்கள் எல்லாம் தேவையான நிலங்களைவிட மிக அதிகமான



நிலங்களை "அக்வையர்" செய்து வீணாகப் போட்டு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். சேலம் அலுமினியம் பாக்டரி, நூற்றுக்கணக்கான எக்கர் தனிப்பட்டவர் நிலத்தை "அக்வையர்" பண்ணி சும்மா போட்டு வைத்திருக்கிறார்கள். நிலத்தை உழுதவர்கள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி தேவையற்ற, தேசத்தின் உற்பத்தி பெருக்குவதற்கு குந்தகமான முறையில் தேவையான அளவிற்கு மேல் நிலங்களை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் போக்குவதற்கு இந்த மாற்றம் உதவியளிக்கும் என்று கருதுகிறேன். இப்போதே தேவைக்கு மேல் நிலம் வைத்திருப்பார்களானால், தேவையைக் கணக்கிட்டு அதற்கு மேற்பட்டிருக்கும் நிலத்தை எடுத்து உற்பத்திப் பெருக்கத்திற்கு உபயோகப் படுத்திக் கொள்ள இந்தத் திருத்தத்தை சபையில் நிறைவேற்றுவ்து மட்டுமல்லாமல் அதை நல்ல முறையில் அமலாக்குவதற்கு வகைசெய்ய வேண்டும். இண்டஸ்ட்ரீஸ்காரர்கள் நிலத்தை எடுத்தால் "எல்லாம் போச்சு" என்று சொல்வார்கள். அதையெல்லாம் கருத்தில் கொண்டு, நன்கு பரிசீலித்து, உண்மை தேவை என்ன என்பதைக் கணக்கிட்டு அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கியை உற்பத்திப் பெருக்கத்திற்குப் பயன் படுத்தவேண்டுமென்று கூறி இந்த மசோதாவை முழுமையாக ஆதரித்து அமருகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, இந்த மசோதா என்பது சில நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சிகளுடைய தலைவர்களை அழைத்து கூடிப் பேசி அதற்குப் பிறகு எடுத்துக்கொண்ட ஒரு முடிவு என்று நான் கருதுகிறேன். அந்த சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது விரிவாக ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு இறுதியாக ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்டு எக்கர் என்று இருப்பதை 40 ஆக குறைத்துக் கொள்ளலாம் என்று முதலமைச்சர் அவர்களும், அதே நேரத்தில் உணவு அமைச்சர் அவர்களும் சொல்லி, அது சரி என்று எல்லாக் கட்சித் தலைவர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. 40 என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு இன்றைக்கு மறுப்பு யாரும் தெரிவிக்காமல் இருக்கும் காரணத்தால் எல்லாக் கட்சிகள் உட்பட ஓரளவு ஒப்புக் கொண்டதால் இப்போது கொண்டு வரலாம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் அதிலே பல விஷயங்களை நம்முடைய அரசாங்கம் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பல தடவை நம் சட்டமன்றத்தில் நாங்கள் பேசியிருக்கிறோம்.

நம்முடைய "மாக்சிமம் ஸீலிங்—இண்டிவிஜுவலுக்கு 10 எக்கர் வைத்துக்கொள்ளலாமா 5 எக்கர் வைத்துக்கொள்ளலாமா 15 எக்கர் வைத்துக் கொள்ளலாமா என்று வந்த நேரத்தில் எனக்கு ஞாபகம் வருகிறது, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் துணைத் தலைவராக இருந்த எ. பாலசுப்ரமணியம் அவர்கள் ஜப்பானில் இந்த மாதிரி, 7, 8, 9 எக்கர்வரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலை இங்கே சொன்னார்கள். அதற்குப் பிறகு எப்படி செய்துகொண்டு வருகிறார்கள் என்று விசாரித்து எனக்குக் கிடைத்த தகவலைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே ஒரே எக்கர். அங்கேயும் "லாண்ட் ஹங்கர்" இருக்கிறது. இங்கே இருக்கும் பயங்கரம் அங்கே இருக்கிறது. எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அங்கே லாண்டை எடுத்துக்கொள்ளுங்கள்

என்று வற்புறுத்துகிறார்கள். ஏனென்றால் நிலத்தை எடுத்துக்கொண்டு உழைப்பதற்குத் தயாராக இல்லை. இண்டஸ்டிரியல் செக்டாரில் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் அரசாங்கம் அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுத்து, உரம் அதற்கான ஏற்பாடுகள், வேறு கருவிகள் இவைகளை அரசாங்கச் செலவில் கொடுத்து அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டு 10 ஏக்கர் உழுகின்றார் என்றால், நல்ல வகையில் இண்டஸ்டிரியல் செக்டாரில் பணியாற்றக் கூடியவர்களுக்கு வரக் கூடிய அந்த ஆதாயத்தை விட ஜாஸ்தியான ஆதாயம் வருமளவுக்கு அரசாங்கம் அந்தப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்.

உண்மையாக விவசாயத்தில் ஈடுபட்டவர்களைக் கேட்கிறேன். மறைமுகமாகப் பல கருத்துக்களைச் சொல்கிறார்கள். சட்ட மன்றத்தில் பயந்து பேசுகிறார்கள், மறைமுகமாக. கூட்டம் முடிந்து வந்தவுடன் "நீங்கள் கூட ஏன் ஒப்புக் கொண்டீர்கள் ?" என்று என்னைப் பலர் கேட்டார்கள். எதற்குச் சொல்லுகிறேன் என்றால், இராமநாதபுரம் மாவட்டத்தைப் பார்க்க வேண்டும். இந்தச் சட்ட அடிப்படையில் ஒரு குடும்பத்துக்கு 40 ஏக்கர் வைத்துக் கொண்டாலும் சாகுபடி செய்து குடும்பத்தைப் பாதுகாக்க முடியுமா என்ற பிரச்னையைப் பார்க்க வேண்டும். முக்கியமான விஷயங்களைப் பார்க்காமல் நாங்கள் கொண்டு வந்தாகிவிட்டது ; ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது. ஆனால் அதற்கடுத்தபடியாக அரசாங்கத்துக்குப் பொறுப்புள்ள ஒரு கடமை இருக்கிறது. அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதற்காகச் சொல்லுகிறேன். அவர்களுக்கு வேறு வசதிகள் கிடைப்பதற்கு மிக மிக ஜாக்கிரதையாகச் சரியான வகையில் கவனிப்புச் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். இது ஒரு முக்கியமான விஷயம்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால்—காலையில் பெரிதும் கேள்விகள் கேட்கப்பட்டன—டிராக்டர் எங்கே தயார் செய்கிறார்கள்? மதுரையில் வேண்டும் என்று சொன்னார்கள். எனக்கு ஞாபகம் இருக்கிறது. நம் மன்றத்தில் முன்னாள் உறுப்பினர் சங்கரையா அவர்கள் 5 ஏக்கருக்கு மேல் வேண்டாம் என்று சொல்ல, அதே கட்சியைச் சேர்ந்த இன்னொருவர் மதுரையில் டிராக்டர் பாக்டரி வேண்டுமென்று சொல்ல, இரண்டு மாதிரியான கேள்விகள் ஒரு கட்சியிலிருந்து வரக்கூடிய நிலைமை இருந்தது. அதை விவரமாகச் சொல்லவில்லை. எதற்கு சொல்கிறேன் என்றால் டிராக்டர் வேண்டும் என்று சொல்கிறார்கள். டிராக்டரைப் பயன்படுத்த சர்க்கார் ஏற்பாடு செய்கிறோம். நீங்கள் பூராவும் ஜாயிண்ட் ஃபார்மிங் ரஷ்யாவில் நடக்கும் அளவுக்குப் பூராவும் அரசாங்கம் உதவப் போகிறதா ? டிராக்டரைப் பயன்படுத்த விவசாயிகள் தயாராக இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். ஒன்று "ஜாயிண்ட் செக்டாராக" செய்யவேண்டும். இல்லாவிட்டால் சின்ன சின்ன துண்டாக்கிய பிறகு நல்ல வகையில் வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். டிராக்டர்களைப் பயன்படுத்த என்ன திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் விளக்கத்தில் பதிலை எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக இந்த முக்கியமான புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டு வரும் நேரத்தில் எவ்வளவு உபரி நிலம் கிடைக்கப் போகிறது. **How much land are we going to take possession?** எத்தனை



பேருக்குப் பிரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்? அந்தக் கணக்கு நம்மிடத்தில் இருக்கிறதா? ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்பு அதனுடைய விளைவுகள் என்ன, நன்மை என்ன என்று கணக்கிடாமல் அந்த இலாகா அதற்குச் சரியான வகையில் அமைச்சருக்கு ஆதாரம் கொடுக்காமல் இருக்க முடியாது. சாதாரணமாக "மணி பில்" வருகிறதென்றால், அந்த "மணி பில்லால்" அரசாங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் ஜாஸ்தியாக வருமானம் வருகிறது என்று கணக்கிட்டுப்போடுகிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால் எவ்வளவு "எக்ஸ்டெண்ட்" உபரி நிலம் வரும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? என்ற புள்ளி விவரம் கொடுத்து எத்தனை பேருக்கு நன்மை செய்யப் போகிறார்கள் ? 1,000 அல்லது 10,000 பேருக்கு நன்மை செய்யப் போகிறார்களா என்ற தகவலை அவர்கள் எடுத்துச் சொல்லவேண்டுமென்று நான் கேட்கிறேன்.

அடுத்தபடியாக, சுருக்கமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அரசாங்கத்தை ஏமாற்றும் அளவுக்கு யாரும் நடந்து கொள்ளக் கூடாது. கருத்து வேற்றுமை இருக்கலாம். அது வேறு விஷயம். அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டால், எப்படிப்பட்ட பெரிய மனிதராக இருந்தாலும், அதற்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டும். அதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. கருத்து வேற்றுமை இருக்க முடியாது. எனக்கு நன்றாக ஞாபகம் வருகிறது, 1942 போராட்டம் நடைபெறும் நேரத்தில் நமக்கு ரேஷன் வந்தது. எங்கள் குடும்பத்தில் 10 பேர் இருந்தோம். ஆளுக்கு எவ்வளவு அரிசி என்று பார்த்து "டபரா" ரேஷன் என்ற கட்டுப்பாடு பழக்கத்தில் வளர்ந்த காரணத்தால் சொல்கிறேன். யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் சொன்னேன், இன்று இங்கேயும் சொல்லுகிறேன்.

"ஆப்செண்டீ லாண்ட்லார்டிஸத்தை பொறுத்தவரை எந்த விதக் கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது. "ஆப்செண்டீ லாண்ட்லார்டிசம்" என்ற பயங்கர நிலைமை உருவாகி நம் நாட்டில் எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும்கூட, உழைப்பவர்களுக்குக் கொடுக்க மனமில்லை. "நீங்கள்தான் உழைக்கவேண்டும். சாப்பிடுவது மற்றவர்கள்" என்ற நிலை இருக்கிறது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற அந்தக் குறளின்படி உழவர்களுக்கு மீண்டும் அவர்கள் சிறப்பை எடுத்துச் சொல்லவேண்டிய கடமையில் இருக்கிறோம்.

ஆகவே, எந்த விஷயத்தையும் அவர்கள் நன்றாகக் கவனித்துச் செய்கிறார்கள். அந்த ஆப்செண்டீ லாண்ட் லார்டு முறையை அடியோடு எடுத்து விடவேண்டுமென்று நான் கருதுகிறேன். நாங்கள் இப்போது மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறோம் என்று சொன்னால் போதாது. அதனால் எத்தனை பேர் பயன்பெறப் போகிறார்கள், எத்தனைபேர் கவலையோடு இருக்கப் போகிறார்கள் என்பதையும் ஆராய வேண்டும். இப்போது கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் நிலைமை என்ன என்பது தெரியும். கிராமங்களில் இருந்து யாரும் விவசாயம் செய்ய விரும்பவில்லை. மாறாக நகரங்களுக்கு வந்து இரண்டு டாக்சி வைத்து நடத்தினால்கூட நல்ல லாபம் கிடைக்கும் என்று மக்கள் கருதுகிறார்கள். அங்கே இருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு அப்படி இருக்கிறது.

Therefore, this legislation must not force the farmers from the villages to the urban areas.

அவர்களை இங்கு விரட்டக்கூடிய அளவில் இந்தச் சட்டம் அமைந்து விடக்கூடாது என்பதைமட்டும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, இந்த மசோதாவானது ஆரம்பக்காலத்திலே கொண்டுவரப்பட்டது. உச்சவரம்பு நிர்ணயம் செய்து, அதிலே சில பெரிய தவறுகள் இருக்கின்றன என்று கண்டபடியால் இன்றைக்கு இந்த அரசாங்கம் 60 எக்கரா என்று இருந்ததை, 40 எக்கராவாகக் குறைக்கின்ற ஒரு மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

நிலச் சீர்த்திருத்தம் என்று சொல்வது நம்முடைய தேசத்தில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இந்த நிலச் சீர்த்திருத்தம் எப்படிச் செய்வது என்று இன்றையதினம் ஆராயவேண்டும்,. அதற்கு பெரிய பெரிய அறிஞர்கள் தேவை என்று எல்லாம் சொல்கிறார்கள். நிலச் சீர்த்திருத்தம் செய்வதற்கு நாட்டிலே ஏற்பட்ட கிளர்ச்சிகளே காரணமாகும். இதைப் பற்றி ஆராய்வதற்கு குமரப்பா கமிட்டி, சுப்பிரமணியம் கமிட்டி என்று போட்டார்கள். அந்த இரண்டு நிபுணர் குழுக்களும் சிபாரிசு செய்கின்றபடி நிலச் சீர்த்திருத்தம் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். காந்திஜி அவர்கள் "உழைப்பவன் கையிலே நிலம் இருக்கவேண்டும்" என்று சொன்னார்கள். அவர்கள் சில உதாரணங்களைக்கூடச் சொன்னார்கள். எழுதத் தெரியாதவனுக்குப் பேனா தேவையில்லை. படிக்கத் தெரியாதவனுக்குப் புத்தகம் தேவையில்லை. உழத் தெரியாதவனுக்கு நிலம் தேவையில்லை என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் லருக்கு நிலம் கொடுக்கின்ற வகையிலேதான் இந்த நிலச்சீர்த்திருத்தம் காண்டுவரப்பட்டிருக்கிறது.

அவ்வாறு கொண்டுவருகின்றபோது நிலைமை எப்படி இருந்தது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அப்போது விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கவேண்டுமென்று கிளர்ச்சி நடத்தப்பெற்றது. இங்கே இருக்கின்ற பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் அதற்குத் தலைமை வகித்தார்கள். அப்போது, அவருடைய தலையைக் கொண்டுவந்தால் 10,000 ரூபாய் என்றும், அவரை உயிரோடு கொண்டுவந்தால் 5,000 ரூபாய் என்றும் அறிவித்தார்கள். இன்றையதினம் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களே சொல்கிறார்கள் தவறு நடந்தால் செய்யலாம் என்று. அவர்களே இன்றைக்கு ஒப்புக்கொள்கிறார்கள், "நாங்கள் பிற்போக்கு வாதிகள்" என்று. அதனால் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நாங்கள் பிற்போக்கு வாதிகள் என்று நான் சொல்லவில்லை. அன்றைக்கு நிலச் சீர்த்திருத்தம் காங்கிரஸ்காரர்களால் கொண்டுவரப்பட்டது. ஆனால், அது ஒழுங்காகக் கொண்டுவரப்படவில்லை, முறையாகக் கொண்டுவரப்படவில்லை என்று சொல்லியிருக்கிறேன். பிற்போக்கு வாதிகள் என்று சொல்லவில்லை.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** நிலச்சீர்திருத்தம் கொண்டுவரும்போதே தவறுதலாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவர வேண்டுமென்று கருதப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாத வகையில் கொண்டுவந்தால் அது பிற்போக்கானதுதான். அதைக்கொண்டு வந்தது அன்றிருந்த காங்கிரஸ் அரசுதான்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** அன்று கொண்டுவந்த சட்டத்திலே குறைகள் இருந்ததைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். வாண்டையார் போன்ற சில பெரிய நிலப்பிரபுக்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்திருப்பதாக மாண்புமிகு ரெவின்யூ அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தக் குறைகளை எல்லாம் தடுப்பதற்கு அதிகாரம் அளிக்கின்ற வகையிலேதான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு எக்கரா என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பம் என்பது கணவன், மனைவி, மூன்று மைனர் குழந்தைகள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு குடும்பத்திற்கு 40 எக்கரா என்று இருப்பதை 15 எக்கராவாக வைத்தால் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். நிலத்தின் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது ஒரு எக்கரில் 50 மூட்டை விளைவிக்கலாம். நல்ல விவசாயியாக இருந்தால் 60 மூட்டை வரை விளைவிக்கலாம். அந்தக் கணக்கில் பார்த்தால் 40 எக்கர் நிலத்தில் 60,000 ரூபாய் வருகிறது. விவசாயம் செய்வதற்கு 10,000 ரூபாய் செலவு ஆனாலும் கூட 50,000 ரூபாய் நிகர வருமானம் கிடைக்கிறது. ஒரு பெரிய தொழிலை வைத்து நடத்துகின்ற முதலாளிக்குக்கூட இந்த அளவு வருமானம் கிடையாது. ஆகவே, இந்த 40 எக்கர் என்றிருப்பதை 15 எக்கராகக் குறைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன். அப்படிச் செய்யும்போது இன்னும் அதிகமாக உபரி நிலங்கள் கிடைக்கும். அதைச் சாதாரண ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால், அது ஒரு தர்மகாரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள், நான்கு கோடி பேருக்கு நான்கு லட்சம் எக்கர் நிலத்தைப் பிரித்துக்கொடுப்பதால் என்ன லாபம் கிடைக்கப்போகிறது என்று. அப்படிப் பிரித்துக்கொடுப்பதால் நிலத்தை உழுகின்ற உழவர் பெருமக்களுக்கு உபரி நிலங்களைப் பிரித்துக் கொடுக்கமுடியும். அதிலே நியாயமும் இருக்கிறது. அதனால் வருமானத்தையும் பெருக்கமுடியும். அந்த முறையில்தான் நாங்கள் ஆலோசனைகளைச் சொல்கிறோம். தோட்டங்கள், காட்டு நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் என்பனவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு விதிவிலக்கு அளிக்கப்பட்டதன் காரணத்தால்தான் உபரி நிலங்கள் கிடைக்காமல் போயின. அவைகள் எல்லாம் இன்று விளைநிலமாகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு குடும்பத்திற்கு 15 எக்கர் அல்லது 20 எக்கர் நிலம் இருந்தால் போதும். அதற்குத் தக்க வகையில் ஆலோசனை செய்து, அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நிலச்சீர்திருத்தம் இறுதி வடிவத்தில் பல்வேறு கட்டங்களைத் தாண்டி ஒரு குடும்பத்திற்கு 40 எக்கரா என்ற அளவில் கொண்டுவரட்

பட்டிருக்கிறது. இதைத் துண்டு துண்டாகக் கொண்டுவருவது தவறு என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இப்படித் துண்டு துண்டாகக் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏன் ஏற்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஏற்கெனவே துவக்கி வைக்கப்பட்ட சட்டமானது இப்படிப் பல நேரங்களில் துண்டு துண்டாகக் கொண்டுவரும்படி வைத்திருக்கிறது. முதலிலேயே ஒழுங்காக ஒரு சட்டத்தை நல்லமுறையில் கொண்டுவந்திருக்க முடியும். ஒழுங்கு முறையற்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவராமல் இருந்திருந்தாலாவது வேறு ஒரு சட்டத்தைத் தனியாகப்போட்டு இருக்கலாம். இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்ற முறையிலே சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள் (சிரிப்பு). அந்தச் சட்டத்தைப் போடாமல் இருந்திருந்தாலே நன்றாக இருந்திருக்கும்.

எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய உறுப்பினர் சுப்பையா அவர்கள் இதைப்பற்றி விளக்கிச் சொன்னார்கள். நவீன சாகுபடி முறையிலே ஐ.ஆர். 8, கருணா போன்ற நெல்வகைகளைப் பயிர் செய்தால் நல்ல பலன் கிடைக்கும் என்பது அம்மையார் அவர்களுக்குத் தெரியாது. ஹைகோர்ட்டிலே வக்கீல் வேலை பார்ப்பது போன்றதல்ல விவசாயம். கிராமங்களுக்குச் சென்று பார்த்தால்தான் தெரியும். ஒரு எக்கருக்கு 200 கலம் கிடைக்கிறது. 40 ஏக்கர் என்றால், எக்கருக்கு 150 கலம் என்று வைத்துக் கொண்டால் கூட 6,000 கலம் கிடைக்கும். இந்த 6,000 கலத்திற்கும் கிட்டத்தட்ட 75,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். ஒரு குடும்பத்திற்கு 75,000 ரூபாய் என்பது மிகவும் அதிகமானது. எனவே, இதைக் குறைப்பதில் தவறு இல்லை. இந்த அடிப்படையில்தான் நிலச்சீர்திருத்தம் செய்யவேண்டும்.

நவீன சாகுபடியில் விவசாயச் செலவு அதிகமாகும் என்று சொன்னார்கள். பழைய காலத்தில்-ஏர் கலப்பை வைத்து சாகுபடி செய்த காலத்தில்-செலவு அதிகமாகியிருக்கும். இப்போது நடைபெறுவது அந்தமுறைச் சாகுபடி அல்ல. நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவதன் மூலம்-விவசாயிகளுக்கு அதைப் பங்கிட்டுக் கொடுப்பதன் மூலம்-அம்மையார் அவர்கள் நிலம் துண்டு துண்டாகிவிடும் என்றார்கள். அவர்கள் பி.ஏ., பி.எல்., படித்தவர்கள். இவையெல்லாம் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் ஹாண்டே கூட இதன் மூலம் நிலம் எல்லாம் துண்டுதுக்காணி ஆகிவிடும் என்று சொன்னார்கள். அப்படி ஒன்றும் ஆகிவிடாது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலத்தை யாரும் எங்கேயும் எடுத்துக்கொண்டு போய்விடமாட்டார்கள். இருக்கின்ற நிலம் அப்படியேதான் இருக்கும். துண்டுதுண்டாகப் போட்டால் டிராக்டர்கள் வைத்து உழுது பயிரிட கஷ்டமாக இருக்கும் என்று சொல்வது சரியாகாது. இன்றைக்கும் அந்த முறையில்தான் வைத்து பயிர் செய்கிறார்கள். அதேமுறையில்தான் நிலம் இருக்கும். அதிலே நவீன சாகுபடி செய்ய முடியும். இதிலே "வயபிள் யூனிட்டாக" இருக்கவேண்டும் என்கிறார்கள். வயபிள், வயபிள் என்றால் என்ன
ண்பகல் 12-0) மணி. வென்று புரியவில்லை. -என்ன வயபிள் 2 எக்கரா என்றாலும் வயபிள் தான். இன்றையதினம் நிலச் சீர்திருத்தம் என்பது, இருப்பவனிடம் இருந்து பிடுங்கி இல்லாதவனிடம் கொடுப்பது என்பதில்லை. சமுதாயத்தில் இன்றையதினம் அடித்தளத்தில் இருக்கிற விவசாய மக்களுடைய வாங்கும் சக்தி அதிகப்படவேண்டும், கல்வி, கலாசார நிலையில் அவர்கள் உயர



வேண்டும், ஜனநாயகத்தில் அவர்களும் பங்குகொள்கிற ஒரு தெம்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்கிற நிலையில் ஒரு புதுமலர்ச்சி, விவசாயிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுத்தப்படவேண்டும். அதற்காகத்தான் இந்தச் சீர்திருத்தங்கள் எல்லாம். ஒரு புது விழிப்பு உணர்ச்சி அவர்களிடத்தில் ஏற்படுத்தப்படுமானால் ஒரு எக்கரா கூட நிலம் இல்லாதவர்கள் நான்கு பேர்கள் சேர்ந்துகொண்டு டிராக்டர்கள் வைத்துக் கூட நவீன சாகுபடி முறையைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க முடியும். நம்முடைய நிலச் சீர்திருத்தங்களினால் நிலங்கள் துண்டு துண்டாகப் பாழாய்ப் போய்விடும் என்பது சரியல்ல. ருஷ்யா போன்ற நாடுகளில் நிலம் யாருக்குமே சொந்தமில்லை. இதை அம்மையார் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். லெனின் வந்தவுடன் நாட்டில் உள்ள நிலம் அனைத்தும் சமுதாயத்திற்குச் சொந்தம், யாருக்கும் சொந்தமில்லை என்றுதான் முதலாவதாகச் செய்தார்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது எல்லாம் ஒரு குடும்பத்திற்கு 40 ஸ்டாண்டர்ட் எக்கரா வேண்டுமா? எக்கருக்கு ஆயிரம் என்றால்கூட ஒரு குடும்பத்திற்கு வருடம் 40 ஆயிரம் வருமானம் இருக்கிறது. அது அவசியம்தானா? மாதம் நூறு ரூபாய் கூடச் சம்பளம் கிடைக்காது தவிக்கின்றவர்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். ஆகவே அதை 25 ஸ்டாண்டர்ட் எக்கராவாகக் கூடக் குறைத்து விடலாம் என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன். இது தீவிர வாதம் இல்லை. இதைக் கூட அம்மையார் ஒத்துக்கொள்ள மறுத்தால்—அவர்கள் பிற்போக்குவாதிகள்தான். பிற்போக்குவாதிகள் என்றால் கோபம் வருகிறது என்றால் மித வாதிகள்தான் என்பதையாவது ஒத்துக்கொண்டாகத் தான் வேண்டும். அதனால்தான் இந்தப் பக்கம் குந்தியிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மிகவும் தீவிரவாதிகள் என்கிற அவர்களும்தான் தோழமை சேர்த்துக்கொண்டு ஒன்றிரண்டு இடங்களில் வந்திருக்கிறார்களே தவிர தனியாக நின்று வென்று ஆட்சியை எங்கே பிடிக்க முடிந்திருக்கிறது?

**திரு. மணலி சி. கந்தசாமி :** அவர்கள் ஏதோ தோழமை சேரவில்லை போலப் பேசுகிறார்கள். சுதந்திராக் கட்சியோடு சேர்ந்து இருந்தவர்கள் தானே. இன்றைக்கு நாட்டினுடைய நிலைமை எந்தக் கட்சியும் தனித்து இயங்க முடியாத நிலைதான். தயவு செய்து அதை அம்மையார் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரசோடு ஒப்பிட்டுப் பேசுவதில் பிரயோசனமில்லை. இந்த ஆட்சியே இதுபற்றி நன்கு ஆராய்ந்து, விவசாயப்பெருங்குடி மக்களுடைய வாழ்வில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட 40 ஸ்டாண்டர்ட் எக்கராவை 25 ஆகக் குறைத்துவிட முடியாதா என்பதை எல்லாம் யோசித்து விரிவான நல்லதொரு நிலச்சீர்திருத்தச் சட்டத்தையே ஏற்படுத்தித்தர முன்வரவேண்டுமென்று கேட்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Chairman, Sir, I would like to offer a few remarks regardin this bill which is now under discussion. I welcome the provisions of the Bill. while welcoming the provisions of the Bill in general, I would like to add a few words. There is much of confusion which has been resolved as a result of the discussion initiated by the Hon. Member, Thiru Raja. He has stated that a fraud has been committed on the statute of Land Ceiling Act by transfers. So far as transfers are concerned, can we declare illegal such transfers and that is the point which we will have to consider. We have the right to property. Private property is recognised as such. The right to hold, acquire and dispense the property is a fundamental right guaranteed under the Constitution. Of course, I am not relying on the Constitution only. Suffice it for me to say that the existing laws and the Transfer of Property Act give certain fundamental rights so far as the ownership of property is concerned.

First, I will invite the attention of the Hon. Minister for Law and the Hon. Minister for Revenue to sections 5 and 6 of the Transfer of Property Act. In section 5 it is stated—

" In the following sections "transfer of property" means an act by which a living person conveys property, in present or in future, to one or more other living persons, or to himself (or to himself) and one or more other living persons, and "to transfer property" is to perform such act...." So transfer takes place *inter vivos* among the living persons, etc., and I do not want to dwell on this point further.

Then in Section 6 it is stated—

"Property of any kind may be transferred, except as otherwise provided by this Act or by any other law for the timebeing in force.

(a) The chance of an heir-apparent succeeding to an estate, the chance of a relation obtaining a legacy on the death of a kinsman, or any other mere possibility of a like nature, cannot be transferred..' In this Section, so many things which cannot be transferred are enumarated. So far as the land ceiling is concerned, that is a legislation which is needed for the welfare of the people but any transfer which has taken place before the Land Ceiling Act actually came into force cannot be challenged and I think courts will come to the rescue of the concerned persons.

Sir, I am not holding any brief for the persons who have defeated the very provisions of the Bill. But what about the persons who have purchased the lands before the Land Ceiling Act came into force and that aspect of the matter has to be considered by the Law Department. It has been stated that several persons had defrauded but I do not



want to enter into that aspect of the matter and I am only concerned with the transfers which had taken place before the Land Ceiling Act came into force.

Sir, land ceiling is not a new thing but it had been talked of even during the pre-Independence days, Gandhiji had stated that the feudal system of the land ownership should be abolished and suitable land legislation should be initiated so that land should be given to the tiller. These are the principles for which Gandhiji had lived and Gandhiji had cherished those ambitious dreams and they have been translated into action. Sir, it may be stated that the Congress Party which was then in power did not act up to the aspirations of the present ruling party. But this House is aware that sufficient laws had been initiated by the Congress. They had abolished the Zamindari system. They had enacted Cultivating Tenants' Protection Act and other laws which conferred some benefit or other.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் வலியுறுத்துகிறார்கள்? கட்சித் தலைவர் அவர்கள் எந்தக் கருத்தை 4-ம் தேதி விற்பனை செய்யப்படுகிறது. 6-ம் தேதி சட்டம் வருகிறது, 6-ம் தேதி சட்டம் வருகிறது என்று தெரிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் இப்படி விற்றார் என்றால் இது ஏற்றுக்கொள்ளக்கூடியதா? இது டிரான்ஸ்பர் ஆஃப் பிராபர்டி ஆக்ட்படி செய்யப்பட்டதா இல்லையா என்ப தல்ல பிரச்சினை. சட்டத்தின் 4-ம் தேதி விற்றது செல்லுபடியாகும். 6-ம் தேதிக்குப் பின்னால் விற்றால் அது 22-வது பிரிவின்படி அடங்கும். இதில் 'போனஃபைடு' என்ற வார்த்தைக்கு இடமில்லை. 4-ம் தேதி 30 எக்கரா விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய ஆட்சிக் காலத்திலே செய்யப்பட்டிருக்கிறது. 'போனஃபைடு' என்ற வார்த்தைக்கு இடமில்லை. அவருக்காக அப்படி செய்யப்பட்டது சரி என்ப தற்காகக் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாதாடுகிறாரா?

THIRU R. PONNAPPA NADAR: I wish to say at the very outset that if anybody is going to defraud the Land Ceiling Act, that is a thing which I dislike and I would say I would condemn it in the strongest language at my command. I am not holding any brief for any person who is responsible for all this malady but are we having materials, enough materials to hold that information that is available with the Ministry has been passed on to the members of the family; that is the matter which this Government has to consider. I am not defending any person. If section 22 is made applicable such of those transfers can be made to be void. But for such of these persons who had purchased land without notice of any of these defects, those persons will have to be protected. That is the contention which I am making.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, உங்களு டைய வாதம் உண்மையாக இருந்தால் ஏற்றுக் கொள்கிறேன். அப்படி ஏமாற்றி விற்கப்பட்டிருந்தால், வாங்குபவர்களுக்கெல்லாம் ப்ரொ

டெக்ஷன் கொடுத்ததாகிவிடும். நீதிமன்றம் சொன்னாலும், நாங்கள் சட்டத்தை மாற்றத்தான் போகிறோம். இன்றைக்கு 15 ஏக்கர் என்று செய்யப்பட்டு சட்ட அறிவிப்பு செய்து விட்டோம். அதற்கு சென்ட்ரல் கவர்ன்மெண்டு அனுமதி தரவேண்டும். இதற்குள்ளே விற்று விடுகிறேன் என்று சொல்லி, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் விற்கப்பட்டிருக்கிறது. 1962லே சம்பந்தப்பட்ட குடும்பத்திற்கு சர்பிளஸ் உண்டு என்று சொல்லப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும்தான் இதற்கு ஒரு முடிவு கட்டியிருக்கிறோம்.

THIRU R. PONNAPPA NADAR: The Hon. Law Minister was saying that section 22 is there and that section 22 says that such transfers are void. If such transfers are void proper and suitable action can be taken by Government. I do not hold any brief for any person, for any colourable transaction. If it is a colourable transaction naturally it will have to be condemned and probably by way of propaganda, many things are being said and Hon. Law Minister is also aware who are the persons who have actually transferred and who are the persons who have been actually benefited. I do not want to enter into any discussion on that aspect of the question. That is the reason why I have been repeating from the outset that what has transpired should be examined in the light of the law that is now existing. That is the only point that I want to urge. If those transfers are declared to be void, I have absolutely no quarrel. If the legislature is competent to pass such a law, I would be happy; if you are going to pass a law which is not legal and which does not have legislative competence of this body, I would be sorry. That is the only contention I am making.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** *தலைவர் அவர்களே, புதிதாக நாம் எதுவும் சட்டம் போடவில்லை. உங்களுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்டதுதான். அந்தச்சட்டத்திலே சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஆக்டிலே அந்த ஆக்டை "ஓவர்ரைடு" பண்ணி சட்டம் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டால் அதற்குப் பிரசிடெண்ட் கன்கரன்ஸ் வாங்கினால் சரியாகிவிடும் என்று சொல்லப்படுகிறது.*

THIRU R. PONNAPPA NADAR: The Hon. Law Minister was contending that all the laws which have been passed are passed by the people who were in power. I am fully aware that there is over-riding of Transfer of Property Act. It was passed with English concept of law and that was accepted as law of the whole land. The Anglo-American jurisprudence was considered to be the best at that time.

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** *தலைவர் அவர்களே, சீலிங் ஆக்ட் டிரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராபர்ட்டி ஆக்டை கட்டுப்படுத்தாது என்று 1962-ம் ஆண்டு சட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு பிரசிடெண்ட் அங்கீகாரம் கிடைத்தால் இந்த "ஓவர்ரைடு" சட்டம் செல்லும்.*



THIRU R. PONNAPPA NADAR: I am fully aware that State Act will have precedence over Transfer of Property Act. I know as a matter of fact that there are small land-holders who have purchased from big landlords without notice of land ceiling? What about their fate? That is the reason why when we make rules, we have to consider this. The Authorised Officer should look into that aspect afresh.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** *தலைவர் அவர்களே, 'இண்டியன் பீனல் கோடு'லே திருடி வந்த சாமானை யாராவது வைத்திருந்தால், அதை அவருக்கே கொடுத்துவிட வேண்டும் என்றில்லை. சாதாரணமாக பணம் கொடுத்து வாங்கினனே, அதனால் அவனே வைத்துக் கொள்ளலாம் என்கிற பரிதாப உணர்ச்சி இருந்தாலும், சட்டமும் சம்பிரதாயமும் அவருக்கே கொடுக்க இடம் தராது.*

THIRU R. PONNAPPA NADAR: If it is stolen property, I do not think there will be any defence. If it is illegal transaction, I do not think I will be holding any brief for them. I do not think, that this is stolen property because if the question of *mens rea* is absent I am sure criminal law will absolve liability.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** *தலைவர் அவர்களே, இது இல்லீகல் டிரான்சேக்ஷனா, இல்லையா? 6-ம் தேதி சட்டம் வருகிறது, 4-ம் தேதி நிலம் விற்கப்பட்டிருக்கிறது. 137 ஏக்கரா விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இது இல்லீகல் டிரான்சேக்ஷன் இல்லை, உண்மையிலேயே அந்த நிலம் ஒன்றுமே இல்லாத ஏழையால் விற்கப்பட்டது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னால் ஏற்றுக் கொள்கிறோம்.*

THIRU R. PONNAPPA NADAR: So far as the transaction is concerned I have nothing to say. That is a matter which has been declared to be void according to you; I do not think I am competent to go into the question because as a legislator I can only point out whatever is transferred, if it is illegal, that may be treated as void. I do not want to plead for Thiru Bakthavatsalam or members of his family. I am not holding any brief for them. But there are several persons in the villages who are ignorant and who lawfully had purchased the land and such instances are not wanting and what about the plight of these persons. That is a matter which I once again want to reiterate. I fully accept that if any person wilfully or wantonly flouts any legislation, he is not entitled to any protection under the law. I am fully conscious of it and I am not here to defend anyone. That is one aspect.

There is another aspect. So far as 'hill area' is concerned, that is omitted by the new legislation. Hilly area contain rubber plantations, tea and cardamom plantations. So far as plantations are concerned, they are exempt. Is it now said that a person cannot hold more than 30 or 15 standard acres in a hilly area, when under the guise of private

limited company or any other firm, thousands of acres can be held as 'plantations' and income from such source is enormous? I am sure that suitable legislation will have to be brought because there cannot be dual standards or double norms. That is why I say in hilly areas when there is plantation in order that plantation industry may not be adversely affected a viable unit will have to be thought of. I am sure that so far as plantations are concerned, there will be a common policy. That is an important point.

Sir, I know and I am conscious that the exemption is there. Such exemption should not be given. That is the point which I am arguing now. That is a thing which will have to be taken note of, when comprehensive re-thinking takes place or a comprehensive legislation is contemplated. That is a point I once again stress now.

So far as the other portions of the Bill are concerned, regarding industrial concerns, the question is whether they can have extensive lands and that aspect of the matter will have to be thought of. I am sure, what is absolutely needed for an industry should be allotted to them. Industrial progress should not be retarded. So much so, with this general observation, I would once again point out whether the extent of 40 acres now fixed as the norm for a family, would whittle down and that is a matter which we will have to consider. I think when more progressive people adorn this House probably they may say that they would do away with the private property. Sir, this legislation should benefit the real tiller and that is the intention of the Legislature and I think that the land ceiling will really benefit the tiller and the tillers will welcome this Bill. With these observations, I conclude my speech.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான மசோதாவாக இருக்கும் காரணத்தால்தான் எங்கள் கட்சியில் இருந்து மூன்று, நான்கு பேர்கள் இதில் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொதுவாக, 1961-ம் வருஷத்தில் ஃபிக்சேஷன் ஆப் லாண்ட் சீலிங் சட்டமானது நிறைவேற்றப் பட்ட பிறகு அது எந்த முறையில் அமுலானது என்பதைப் பற்றிப் பலரும் கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பாக கிழக்கு ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த ஒருவருடைய கருத்து 'இந்து'ப் பத்திரிகையில் வெளி வந்தது. 1954-ம் வருஷத்தில் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்று காங்கிரஸ் மகா சபை முடிவு செய்த பின்னால் பல மாநிலங்களில் இம்மாதிரிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அப்படி நிறைவேற்றப்பட்ட மாநிலங்களில் அது சரிவர அமலாகாமல் விவசாயிகளுக்கு எந்தப் பலனும் ஏற்படாத ஒரு மாநிலம் இருக்கிறது என்றால் அது தமிழ்நாடுதான்



என்று அவர் பல விவரங்களை எல்லாம் சேகரித்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நமக்கு முன்னால் இந்த நில உச்சவரம்புச் சட்டம் என்ற சட்டம் வந்து இந்தச் சட்டத்தை என்ன செய்வது என்ற நிலையில்தான் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஏற்கெனவே, ஒரு சட்டம் இருக்கும் காரணத்தால் இதற்குத் திருத்தம் என்ற முறையில் தனியார் மசோதா ஒன்றை எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிறோம். அடுத்த சட்டமன்றத் தொடரில் அது எடுத்துக் கொள்ளப்படுமானால் மீண்டும் இம்மாதிரி நில உச்ச வரம்பு சம்பந்தமாகப் பலரும் கருத்துக்களைச் சொல்ல வசதியாக இருக்குமென்று நம்புகிறேன்.

1970-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி அன்று நாடு பூராவிலும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் நில உசச வரம்புச் சட்டங்களானது சரியான முறையில் அமல் நடத்தப்படவில்லை, அதனுடைய நோக்கமே ஏற்படவில்லை என்ற காரணத்தால், தமிழ்நாட்டில்கூட இம்மாதிரி நில உச்ச வரம்புச் சட்டம் இருந்தும் ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் என்று நிலம் வைத்திருப்பவர்களுடைய நிலத்தில் போய் மறியல் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தோம். நில உச்ச வரம்பு என்ற கண்ணோட்டம் நியாயமாக இருந்தாலும்கூட அமல் நடத்துவதில் பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல அந்தப் பேரியக்கம் ஓரளவு உதவியாக இருந்தது. வெளிநாட்டுப் பத்திரிகைகள்கூட, அகில இந்திய ரீதியில் விவசாயிகள் பிரச்சனையை எடுத்து நடத்திய ஒரு பெரிய இயக்கம் என்று கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரிக்கக் கூடிய நாடுகள் மட்டுமல்லாது கம்யூனிஸ்டுக் கட்சியை முழுமையும் ஆதரிக்காத நாடுகள் கூட எழுதி இருந்தார்கள். ஏன் இதை எடுத்துச் சொல்லுகிறேன் என்றால் அதற்குப் பின்னால் தமிழக அரசைப் பொறுத்த அளவில் தமிழக அரசு தயங்கித் தயங்கி நடவடிக்கை எடுக்கிறது என்பதைச் சொல்லாமல் இரண்டு விதத்தில் இதைப் பற்றி விவாதிக்க ஒரு முறை ஏற்படுத்திக் கொண்டோம்.

ஒன்று, எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் நில உச்ச வரம்புக்கு விதிவிலக்கு சம்பந்தமாக இருப்பதில் எவை எவை ரத்து செய்யப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஆராய ஒரு குழுவும், நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர இன்னொரு குழுவும் அமைக்கப்பட்டு நில உச்ச வரம்பு சம்பந்தமாக என்னென்ன விதிவிலக்குகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்று ஆராய்ந்து இரண்டு மூன்று விதி விலக்குகளை ரத்து செய்தார்கள். கரும்பு விளையும் நிலங்கள், பண்ணை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவற்றுக்கான விதி விலக்கை ரத்து செய்தார்கள். அதுகூட எந்த அளவில் அமலாகி இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். அது எப்படி அமலாகி இருக்கிறது, அதன் பலனாக விவசாயிகளுக்கு எப்படி நிலம் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்பது ரொம்ப அவசியம்.

உதாரணமாக, கரும்பு உற்பத்தி பண்ணக்கூடிய நிலம்கூட விவசாயிகளுக்கு அதனுடைய பலன் கிடைக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக அதற்காக ஒரு கார்ப்பரேஷன் அமைத்து நிலச் சீர்திருத்தம் என்ற

நோக்கமே, விதிவிலக்கு ரத்து செய்யப்பட வேண்டுமென்ற நோக்கமே கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை அமல் நடத்தும் நேரத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கூறினார்கள். ஒரு விதி விலக்கு ரத்து செய்யப்பட வேண்டுமென்பதைப் பிரதான அடிப்படையாகக் கொண்டதாக இந்த மசோதா அமைந்திருக்கிறது. உறில் எரியாவுக்கு விதிவிலக்கு இருந்தது ரத்து செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டம் 1—3—1972-ல் இருந்து அமலுக்கு வருகிறது. அப்படியானால் அது எப்படி ஏற்பட வேண்டுமென்பதைப் பற்றிச் சில உதாரணங்கள் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

மதுரை மாவட்டத்தில் வருஷநாடு பகுதி என்று இருக்கிறது. அந்தக் காலத்தில் அது ஒரு ஜமீந்தாருக்கு, கண்டமனூர் ஜமீன்தாருக்குச் சொந்தமாக இருந்து பல நிலைமைகள் ஏற்பட்டு கடைசியில் கோவையில் இருக்கக்கூடிய மிகப் பெரிய முதலாளி பி. எஸ். ஜி. குடும்பத்திற்குச் சொந்தமாயிற்று. வாங்கியவர் இப்போது உயிரோடு இல்லை. பிள்ளைகள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே ஒருவர் பழமுதிர் பண்ணை என்று வைத்து சுற்றிலும் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இதைப் பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு அவர்களுக்குக் கிடைத்திருக்கும் விதிவிலக்கு எந்த அடிப்படையில்? பழமுதிர்ப் பண்ணை என்ற காரணத்தாலா? ஆளுநர் அவர்களே அதை வந்து திறந்து வைத்தார்கள். எங்களுக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது. நில உச்ச வரம்புச் சட்டத்தைப் புறக்கணித்துக் கொண்டிருக்கும் பெரும் புள்ளிகள் பழமுதிர்ச் சோலை என்று வைத்திருப்பதை ஆளுநர் அவர்கள் வந்து திறந்து வைத்திருக்கிறார்கள். அது உறில் எரியா என்ற காரணத்தால் விதிவிலக்கு தரப்பட்டிருக்கிறது. எவ்வளவு ஏக்கர் என்ற கணக்கை அரசு சரியாகச் சொல்ல முடியும். சில ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. 1—3—1972ல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்துவிட்ட பின் அந்த நிலம் கண்டிப்பாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இனிமேல் அந்த நிலம் அவருக்குச் சொந்தமாக இருக்க முடியாது.

ஆகவே, இந்த விதிவிலக்கை அவர்களுக்கு ரத்து செய்து அந்த நிலத்தை எடுத்து விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இம்மாதிரி விவரங்களைச் சேகரிக்க முடியும். என்னைப் பொறுத்த வரையில் சொல்ல விரும்புகிறேன்—தேயிலைத் தோட்டம் போன்றவை எல்லாம் இந்தக் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டுமென்ற கருத்து உள்ளவன் நான்-தேயிலைத் தோட்டத்தை ஒட்டி உள்ள நிலங்கள் இருக்கின்றன. தேயிலைத் தோட்டத்தை விருத்தி செய்வதற்காக வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று பல ஆண்டுக் காலமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது வன நிலமும் அல்ல, தோட்ட நிலமும் அல்ல, அப்படி ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அது 99 வருஷ லீசாக இருக்கலாம், பல முறைகளில் இருக்கும். மூவாளி தோட்டம் என்று பிர்லாவுக்குச் சொந்தமாக 10,000



ஏக்கருக்கும் அதிகமான நிலம் இந்த வரம்புக்குள் வரும் அந்த நிலம் எப்படி விவசாயிகளுக்கு வருகிறது என்று பார்க்க வேண்டும். இப்படி மலையில் இருக்கும் நிலம் என்று விதிவிலக்குப் பெற்றிருக்கக்கூடிய நிலங்கள் நிறைய இருக்கின்றன. நாம் முனைப்பாக ஈடுபட்டோமானால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை விவசாயிகளுக்குக்கொடுப்பதற்குப் பேருதவியாக இருக்குமென்று இந்த இடத்தில் வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே இந்த மசோதாவிலே இன்னொரு ஊனமும் இருக்கிறது. தொழிற்சாலை வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு இல்லை. என்றாலும் கூட விதிவிலக்கு கொடுக்க இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே சட்டமன்றத்தில் பல முறை கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. கனம் உணவு அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள், பரிசீலனை செய்கிறோம் என்று சொன்னார்கள். மேட்டூரில் அலுமினியம் தொழிற்சாலையை ஒட்டி தொழிற்சாலைக்குத் தேவையில்லாத தரிசு நிலங்களை எடுத்துக் கொண்டு அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். இந்த விதிவிலக்கை வைத்துக் கொண்டு அவர்கள் ஒரு காலத்தில் தொழிற்சாலையை விரிவுபடுத்தப் போகிறோம் என்று சொல்லி சர்க்கார் நிலத்தையும், தரிசு நிலத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு அனுபவித்து வருகிறார்கள். அதை நிரந்தரமான முறையிலே கொடுக்க ஏற்பாடு இருக்கிறது. அந்த ஊனம் இந்த மசோதாவிலே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நாம் கொண்டுவரும் சட்டம் ஒரு தொழிற்சாலைக்கு 15 ஏக்கர்களுக்கு மேல் வேண்டுமென்றால் அரசாங்க அனுமதி பெற வேண்டும். ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரிக்கு 2,000 ஏக்கர் தேவைப்படுகிறது. நம் தொழிற்சாலை. அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்பதில் என்ன ஊனம் இருக்கிறது? பிற்ப 12-

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆலங்குளம் பாக்டரிக்கு 2,000 ஏக்கர் தேவைப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது 15 ஏக்கர்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்வதற்கும் இதற்கும் எந்தவிதமான ஒற்றுமையும் இருப்பதாகத் தெரியவில்லை. 15 ஏக்கர்களுக்கு மேல் உள்ளதற்கு பர்மிஷன் தேவை என்றால் குறைந்த பட்சம் எவ்வளவு தேவை என்று கணக்கெடுத்து அதற்கு மேல் வேண்டியிருப்பதற்கு அரசாங்க பெர்மிஷன் வேண்டும் என்று செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரண்டாயிரம் ஏக்கர் என்று சொன்னேன். இவ்வளவு ஏக்கர் வேண்டுமா என்று கேட்கலாம். அங்கு ஏராளமான சுண்ணாம்புக் கற்கள் தேவைப்படுகிறது. அந்தப் பரப்பளவு நிலம் நம் பொஸஷனில் இருக்கிறது. அதை யாராவது ஆக்கிரமித்துக் கொண்டால் நமக்குக் கிடைக்காது. மால்கோ, அந்தக் காலத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதை ஹைலெவல் கமிட்டி போட்டு என்கொயரி செய்கிறோம். மணலியில் 300 ஏக்கர் கொடுக்கிறோம். கொடுக்க

அதிகாரம் எடுக்கிறோம். இன்டஸ்ட்ரியல் அண்டர் டேக்கிங் என்றால் கேட்க முடியாது. இப்போது அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறோம். ஆகவே இதை ஊனம் என்று சொல்வது சரியல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அம்மையார் அவர்களின் வாதத்திற்கும் என் வாதத்திற்கும் பொருத்தம் கிடையாது. 15 ஏக்கர்களுக்கு மேல் வேண்டுமென்றால் அரசாங்க உத்தரவு பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்று 37 (எ) வந்திருக்கிறது. அது நல்ல அம்சம். அரசாங்க உத்தரவு பெற்ற பிறகுதான் சேர்க்க முடியும். அலுமினியம் ப்ளாண்ட் போன்றவை ஊர்ஜிதப்படுத்த முன்வருவார்கள். தேவை இல்லாத நிலங்களை அவர்கள் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள், தரிசு நிலங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே அதைக் கைவிட வேண்டும் என்று அங்குள்ள விவசாய மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்பேர்ப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக்கூடாது.

அடுத்தபடியாக, சாதாரணமாக ஒரு பிரச்னை வந்து ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கமுடியுமா என்றால், அப்படி இந்தச் சட்டத்தைக்கொண்டு வரமுடியுமா என்றால் கொண்டுவர முடியும். விதிவிலக்கை ரத்து செய்யும்போது 50-ம் ஆண்டு ட்ரஸ்ட்களைக் கூடச் சேர்க்கிறோம். மத்திய அரசு கூட லாண்ட் லெஜிஸ்லேஷன் ஒவ்வொரு மாநிலத்திலும் கொண்டு வரவேண்டுமென்று கருதுகிறது. ஒரு சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரும்போது சிலர் பாதிக்கப்படத்தான் செய்வார்கள். சாதாரணமானவர்கள் பாதிக்கப்பட்டால் என்ன செய்வது என்று யோசிக்கலாம். 61-ம் ஆண்டுச் சட்டத்தில் சில அம்சங்கள், டிரான்ஸ்பர் ஆஃப் ப்ராப்பர்டி ஆக்ட் ஷரத்துகள் செல்லாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சபைக்குப் பரிபூர்ண அதிகாரம் இருக்கிறது. நிலப் பிரபுக்கள் லேசாக விட்டுக் கொடுக்கமாட்டார்கள். அரை ஏக்கர் இருந்து கஷ்டப்பட்டு இரண்டு ஏக்கர் சம்பாதித்தவர்களைச் சொல்லவில்லை. பரம்பரையாக, எங்கள் அப்பா வைத்திருந்தார் என்று அந்த நிலத்தை வைத்து, அதை ஒரு மூலதனமாக வைத்து நடத்துகிறார்களே அந்த நிலப்பிரபுத்துவ அமைப்பை உடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இம்மாதிரிச் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

எனக்கு ஒரு தகவல் வந்துள்ளது. உத்தராயன்குடி கிராமம். தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்குத் தெரியும். ஐயாவு வாண்டையார் என்பவருக்கு 60 ஏக்கர் நிலம் இருக்கிறது. குத்தகை விவசாயிகளை அடங்கலில் பதிவு செய்தாகிவிட்டது. பதிவு செய்த அவர்கள் உழப் போகிறார்கள். போகக்கூடாது என்று தடை செய்து இருபது இருபத்தைந்து பேர்களை நேற்று கைது செய்திருக்கிறார்கள். அரசாங்கம் சட்டத்தை அமல் செய்யும்போது போலீஸை அனுப்புகிறார்கள். சொத்து வைத்திருப்பவர்கள், சட்டத்தைப் புறக்கணிக்க வேண்டுமென்று இருப்பவர்கள் பலமுறைகளில் வேலை செய்வார்கள்.

மகாத்மா காந்தி அடிகள் சொன்னார்கள், நிலத்தில் விவசாயி போய் உட்கார்ந்துகொண்டு இது என் நிலம் என்று சொல்ல வேண்டும், அப்போது ரத்தப் புரட்சி ஏற்படுமானால் அப்படி ரத்தப் புரட்சி ஏற்பட்டா-



லும் பரவாயில்லை என்று மகாத்மா காந்தி அடிகள் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு சொன்னார்கள் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு நிருபரிடம். கொஞ்சம் ரத்தப் புரட்சி ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று —நான் சொல்லவில்லை—மகாத்மா காந்தியடிகள் சொல்லியிருக்கிறார். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவது மிகமிகக் கடினமாகும். அவர்களுக்குள்ள வேர் ஆழமாக பரவியிருக்கக்கூடிய வேர். ஆகவே இப்படிப்பட்ட ஒரு பகுதியைக் கொண்டுவருகிறோம். ஹில் ஏரியா என்பது 1—3—72-ல் இருந்து அமலாகிறது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு எவ்வளவு எடுத்தோம், எவ்வளவு கொடுத்தோம் என்ற அதற்குரிய விவரங்களைத் தாக்கல் செய்யவேண்டும். வந்தஅளவிற்குப் போதுமானதுதான். அடுத்த சட்டத்தையும் நிறைவேற்றி பிறகு ஆறு மாதத்திற்குள்ளாக எல்லாவற்றையும் இணைத்த ஒரு பொதுவான நிலச்சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**THIRU R. PONNAPPA NADAR :** I want one clarification. Under Section 37 (*a*) will the industrial and commercial undertakings be given adequate land ? So far as area is concerned will they be given 15 acres or the need of the industry will be assessed in the matter of granting permission .. That is the matter for which I seek clarification from the Hon. Minister.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உதாரணமாக ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரிக்கு மூலப்பொருள் வேண்டும். கட்டடம் தேவைப்படுகிறது. மால்கோ போன்ற பிரச்னை கழிவுப் பொருள்களைச் சேகரித்து வைப்பதற்கு. ஒவ்வொரு தொழிற்சாலையும் அனுமதி கேட்கும்போது இந்த அடிப்படையில் பரிசீலித்துக் கொடுப்போம். கொடுத்ததற்குப் பின்னால்—அதுதான் முக்கியம்—400 ஏக்கரை வைத்துக்கொண்டு பத்து ஏக்கரில் ஒரு ஆலை கட்டிவிட்டு மீதி ஏக்கரில் விவசாயம் செய்கிறார்கள். அதை எடுக்க அதிகாரம் கிடையாது. ஆகவே இப்போது We will impose conditions. If they break the conditions, we will resume the land. அந்த மாதிரி அதிகாரங்களை எல்லாம் போட்டிருக்கிறோம்.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI :** I can understand 15 acres of ceiling for an individual but the same thing cannot apply for an industrial undertaking. That is what I am harping upon.

Individual ceiling for industrial undertaking must be published. If it is over and above, they must come to Government for permission. You must not restrict it to 15 acres.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தக் கருத்து மொத்தத்தில் தவறான கருத்து. கம்பெனிக்கு ஸீலிங் போடுவது எங்களுடைய விருப்பம் இல்லை. 15 ஏக்கர் ஒரு லீகல் எண்டிடிக்கு. அது இண்டிவிஜுவலாக இருக்கலாம், டிரஸ்டாக இருக்கலாம் கம்பெனியாக இருக்கலாம்.

லீகல் என்டிடி தான். அப்படியிருந்தால் 15 எக்கர் சட்டப்படி இயல்பாகவே அவர்களுக்குக் கிடைத்துவிடுகிறது. 15 எக்கருக்கு மேலே தொழில் துறைக்குத் தேவை என்றால், அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும். அதற்கு ஒரு ஸீலிங் வைக்க முடியாது. ஆலங்குளம் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் 2,000 எக்கர் வேண்டும், ஒரு கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்லை எடுத்துக்கொண்டால் 50 எக்கரா வேண்டும். ஆகவே, ஒவ்வொன்றுக்கும் ஒரு ஸீலிங் என்று வைக்க முடியாது. அப்படி ஸீலிங் வைப்பதற்குப் பதிலாக, ஒரு தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்ற நிலத்தை நம்முடைய அரசாங்கமே பரிசீலித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதில் எந்த விதமான தவறும் ஏற்படும் என்று வாதிக்க இடம் கிடையாது. காரணம் யாருக்கும் எக்ஸெம்ப்ஷன் கொடுக்கப் போவதில்லை.

THIRU M. A. LATHEEF: Sir, I would like to enlighten myself about the explanation given in one clause about religious institutions. It is stated that 'religious institution' means 'any temple or mosque or church......' In this connection it is also stated..............

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்)**: அது நாளை வருகிறது. நீங்கள் அவையிலே நீண்ட நேரம் இல்லை. வந்தவுடனேயே ஒரு கேள்வி போடுவதால் வருகிற ஆபத்துதான் இது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டிருக்கிற நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் பல அங்கத்தினர்களும், பல கட்சித் தலைவர்களும் தங்கள் விரிவான கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள்.

விவாதத்தைத் துவக்கி வைத்த கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டம் இந்த நாட்டில் அமுலாக்கப்படுகின்றபொழுது நிலம் எடுத்துக் கொடுக்கவில்லை என்ற பொருள்படச் சொன்னார்கள். யாருக்கும் ஒன்றும் கொடுக்கவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்க முடியாது என்றுதான் நான் கருதுகிறேன். அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு நிலம் கிடைக்கவில்லை, கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைத் தவிர, நிலம் கிடைக்கவேயில்லை, கொடுக்கவேயில்லை என்று சொல்வதற்கில்லை. ஏன் என்று கேட்டால், இதுவரையில் பழைய சட்டப்படி 30 ஸ்டாண்டர்டு எக்கர் ஒரு குடும்பத்திற்கு இருக்கலாம். அந்த பழைய சட்டப்படி எடுக்கப்பட்ட கணக்கில், எடுக்கப்பட்ட உபரி நிலம்; நோடிபைடு செய்யப்பட்ட உபரி நிலம் 28,839 எக்கராவாகும். அதில் அரசாங்கம் கைப்பற்றியது 23,182 எக்கராவாகும். பாக்கி இருப்பவை நீதி மன்றத்தில் இருக்கின்றன. எக்ஸ்டெண்டு அஸைண்டு, கொடுக்கப்பட்டிருக்கிற நிலம் 19,712 எக்கரா, பிரித்துக் கொடுத்திருக்கிறோம், இதனால் 10,694 மக்கள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தைநான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலச்சீர்திருத்தச் சட்டம் என்று ஏற்கனவே கொண்டுவந்துவிட்டு, விதிவிலக்கின் மூலம் மன்றாடியார் போன்ற குடும்பங்களுக்கு 1,000 எக்கரா என்று விட்டு வைத்திருக்கிறீர்களே என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். டெய்ரி பார்ம் லாண்ட்ஸ்க்கு



விதிவிலக்கு இன்னும் ரத்து செய்யவில்லை. விதி விலக்கு இருக்கிறது. மன்றாடியார் குடும்பத்திற்கு இருக்கிற பூமிகள் டெய்ரி பார்ம். அதற்கு விதி விலக்கு இருக்கிறது. கால்நடைகள் மேய்ச்சல் காடு 50 எக்கர் வரை ஒருவர் வைத்துக் கொள்ளலாம் என்று விதி விலக்கு இருக்கிறது. அந்த விதி விலக்கை ரத்து செய்து, அந்தச் சட்டம் இந்திய ஜனாதிபதியினுடைய அங்கீகாரம் பெற்று வந்திருக்கிறது. அந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் அங்கீகாரமானதற்குப் பிறகு எவ்வளவு உபரி நிலம் கிடைக்கும் என்று ஆதரைஸ்டு ஆபீசர்கள் இப்பொழுது வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகுதான் இறுதியாகத் தெரியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, அதிகமாக விவாதிக்கப்பட்டிருக்கிற விஷயம், தொழில் துறைக்காக எடுக்கப்பட்டிருக்கிற பூமியைப் பற்றி விவாதிக்கப்பட்டது. சட்ட அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி நல்ல விளக்கத்தைத் தந்துவிட்டார்கள். இப்பொழுது இருக்கிற தொழில் துறைக்கு எடுக்கப்பட்டிருக்கிற பூமிகள், எவ்வளவு நிலம் அவர்கள் வைத்திருந்தாலும், இப்பொழுது இருக்கிற சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது. அதைக் கட்டுப்படுத்துவதற்கும், அவர்களுக்குத் தேவைக்கு அதிகமான நிலம் வைத்திருக்கக்கூடாது என்பதற்கும், எந்தத் தொழில் துறையும் இருக்கும் பூமியை காம்பவுண்டு போட்டு வளைத்துவிட்டு, அதில் விவசாயம் அல்லது வேறு பல வேலைகளைச் செய்வதைத் தடுப்பதற்கும் சர்க்கார் அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறது. எவ்வளவு நிலம் தொழில் துறைக்கு இருக்க வேண்டும், அவர்கள் எந்தெந்த நிபந்தனையோடு அந்த நிலத்தை வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதற்கும், உபரி நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கும், எவ்வளவு நிலங்களை அவர்கள் நிபந்தனையோடு வைத்திருக்க வேண்டும் என்று வரையறுப்பதற்கும் தேவையான அதிகாரத்தை இன்றைய சட்டத்தின் மூலம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கிறது. இந்த அதிகாரத்தின் மூலம் அதிகப்படியான நிலம் வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும், எந்தத் தொழில் துறையாக இருந்தாலும் அந்த உபரி நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். அந்தத் தொழில் துறைக்குப் போக அதிகமாக இருக்கும் நிலத்தை வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும், அவரிடத்திலிருந்து அந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்பதில் யாருக்கும் எந்த விதமான சந்தேகமும் இருக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலத்தையெல்லாம் சுக்கு நூறாக அடித்துவிட்டார்கள் என்று வருத்தப்பட்டார்கள். ஒரு எக்கர், ½ எக்கர் என்றெல்லாம் பிரித்துவிட்டால் என்ன செய்வது என்று காங்கிரஸ் கட்சி அம்மையார் திருமதி அனந்தநாயகி அவர்கள் கேட்டார்கள். (குறுக்கீடு) டாக்டர் ஹாண்டே அவர்களும் அதைப்பற்றி தெரிவித்தார்கள். (குறுக்கீடு). ஏன் இப்படி நிலத்தை உடைக்க வேண்டும், உடைக்கிறார்கள் என்ற கருத்தில் இங்கே விவாதிக்கப்பட்டது. யாரும் சொல்லவில்லை என்று சொன்னால், இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியதைத்தான் சொல்கிறேன், பரவாயில்லை. இப்படிச் சொல்லவில்லையென்று சொன்னால், அதற்காக நான் வருத்தப்படவில்லை, அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

கம்யூனிஸ்டு கட்சிப் பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டது போல, 15 எக்கராவை ஒருவர் வைத்திருக்கிறார் என்றால், 15 எக்கரா பூராவும் ஒரே வரப்பு இல்லை. ஒரு எக்கராவுக்கு, ½ எக்கராவுக்கு என்று வரப்பு இருக்கிறது. நிலத்தைப் பெற்றிருப்பவர் ஒரே வரப்பை வைத்துக்கொண்டு, அதற்குள் 15 ஏக்கர், 20 ஏக்கர் என்று விவசாயம் செய்வது என்பது எங்கேயும் கிடையாது. அப்படி நிலம் வைத்திருக்க முடியாது, நிலத்தைப் பார்த்திருப்பவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். நிலத்தைப் போய்ப் பார்த்திருந்தால் அப்படி நிலத்தை ஒரே வரப்பாக வைத்திருக்க மாட்டார்கள், வைக்கவும் முடியாது, அப்படி வைத்துக்கொண்டு விவசாயம் செய்வது அவ்வளவு சுலபம் அல்ல, அப்படிச் செய்வது விவசாய முறையும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலம் சிறிது சிறிதாகத் தான் இருக்கும்.

இங்கே ஒன்று கேட்கப்பட்டது. ஜப்பான் நாட்டில் உழவர்களுக்கு அதிகமாக சலுகைகள் தரப்படுகிறதே என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் ஜப்பான் நாட்டில் உழவர்களுக்கு நிறைய சலுகைகள் தந்திருக்கிறார்கள், அப்படி சலுகைகள் தந்து உழவுத் தொழிலை அதிக உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள், ஏன் நாம் அப்படிச் செய்யக்கூடாது என்று வருத்தப்பட்டு கேட்டார்கள். ஜப்பான் நாட்டுக்குச் சென்று வந்திருக்கிற சட்ட அமைச்சர் அவர்களை அதைப்பற்றி கேட்டேன். அங்கே என்ன நடக்கிறது என்றால், ஜப்பான் நாட்டில் விவசாயத்தைவிட தொழில் அதிகமாக வேகமாக வளர்ந்து வருகிறது. அப்படி தொழில்துறை வேகமாக வளர்ந்து வருகிற நாட்டில் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிற மக்கள் தொழில் துறைக்கு வந்துவிடாமல் இருப்பதற்கு விவசாயத்தில் அவர்களுக்கு அதிகமாக உற்சாகம் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், விவசாயத் துறையிலுள்ள பூமி முழுவதும், தொழில் துறைக்குப் போய்விடக் கூடாது என்ற நோக்கத்துடன், உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவில் ஜப்பான் செல்ஃப் சஃபிஷியண்டா இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அந்தச் கொள்கையை அங்கே வைத்திருக்கிறார்கள். எனவே, ஜப்பான் நாட்டில் இருக்கிற முறை வேறு, இங்கே இருக்கிற முறை வேறு. அதனால் விவசாயிகளுக்கு காட்டவேண்டிய உற்சாகத்தைக் காட்டக்கூடாது என்று நான் சொல்லவில்லை. உற்சாகம் காட்ட வேண்டியதுதான். இந்த அரசாங்கம் எலாப்வகையிகிறேன். காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திருமதி அனந்தநகாயகி அவர்கள் வயபிள் யூனிட்டாகஇருக்கவேண்டும் என்று சொன்னார்கள். வயபிள் யூனிட் என்பது அவரவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற கருத்தைப் பொறுத்திருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்பொழுது, ஒருவர் 15 எக்கராவாக இருக்கலாம் என்று சொன்னார்கள். இன்னொருவர் 20 எக்கராவாக இருக்கலாம் என்று சொன்னார்கள். மற்றொருவர் 25 எக்கராக இருக்கலாம் என்று கூறினார்கள். இப்படி ஒவ்வொருவரும் வெவ்வேறாக நினைத்துத் திருத்தத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அது அவரவர்கள் கொண்டிருக்கிற கருத்தாகும். இப்பொழுது இருக்கிற அரசாங்கம் 40 ஸ்டாண்டர்ட்



வரை உச்ச பட்சமாக இருக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறது. ஏற்கனவே இருந்த அரசு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருக்கலாம் என்று அப்பொழுது தீர்மானித்தது. இப்பொழுது நாம் கொஞ்சம் புரட்சிகரமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக 40 ஏக்கர் என்று குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம்.

இப்படியெல்லாம் செய்தால் குழப்பம் ஏற்படாதா என்று கேட்டார்கள். காலப்போக்கில் சட்டம்கூட மாறத்தான் செய்யும். சமுதாயத்தில் புரட்சி ஏற்படும்பொழுது, சட்டத்தை மாற்றித் திருத்தி அமைக்கவேண்டியதுதான். சமுதாயத்திற்கேற்ப சட்டத்தை அமைத்துக்கொள்ளவேண்டும். சட்டத்திற்கேற்ப சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்று நினைப்பது தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீவிரவாதிகளைப் பற்றிப் பேசினார்கள். ரொம்ப வருத்தப்பட்டுச் சொன்னார்கள். சொன்ன காரியங்களை நிறைவேற்றுவதில் நாங்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்த நேரத்தில் நாங்கள் சொன்ன அதே கருத்தை ஒட்டித்தான் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஸீலிங் இருக்க வேண்டும் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னோம். அதை யாரும் மறுப்பதற்கில்லை. அதையேதான் சட்ட ரூபத்தில் கொண்டு வந்தோம். எந்தக் கொள்கையைச் சொல்லி உள்ளே நுழைந்தோமோ அதே கொள்கையை ஏற்றுக்கொண்டு அதையே சட்டமாக நிறைவேற்றியிருக்கிறோம். இந்த அரசாங்கம் சொன்னதை நிறைவேற்றுவதற்கு பல சட்டங்களை இயற்றியிருக்கிறோம். தமிழ்நாடு அரசாங்கம் நில சீர்திருத்த சட்டங்கள் செய்திருப்பதுபோல், புரட்சிகரமான மாறுதல்களைப் போல், வேறு யாரும் செய்யவில்லை. இந்திய உபகண்டத்தில் வேறு பல மாநிலங்கள் நம் மாநிலத்தை பின்பற்ற வேண்டிய அளவுக்கு நாம் சட்டத்தை இயற்றியிருக்கிறோம். யாருக்கும் பின்னோடியாக இல்லை, நாம் முன்னோடியாக இருக்கிறோம் என்று தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத ஒரு நில சீர்திருத்த சட்டத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம். குடியிருப்பு சட்டத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறோம். அந்த மாபெரும் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். மனைச் சொந்தக்காரர்களுக்கு மனை சொந்தம் இல்லை, குடியிருப்பவர்களுக்கு சொந்தம் என்ற அம்மாதிரியான சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். புரட்சிகரமான சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். நாம் எந்த வகையிலும் மற்ற மாநிலங்களுக்கு பின் நிற்பவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டிராக்டர்கள் உபயோகத்தைப்பற்றி இங்கே பேசினார்கள். நிலத்தைச் சிறிதாக்கிவிட்டால், டிராக்டரை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று கேட்கப்பட்டது. பெரிய நிலப்பிரபுக்கள்தான் டிராக்டர்களை வைத்து நிலத்தை உழ முடியும் என்ற நிலைமையை மாற்றி, நாம் செய்த நில் சீர்திருத்த சட்டத்திற்கு ஏற்றவாறு டிராக்டர்களை உபயோகப்

படுத்துவதற்கு விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு நிறைய டிராக்டர்களைக் கொண்டுவந்து வேளாண்மைத் தொழில் கூடத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

சிறிய நிலம் வைத்திருப்பவர்கள் கூட டிராக்டர் வைத்து உழ முடியும். அப்படி உழுவதற்கு வேளாண்-தொழிற்கூடம் இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வாடகைக்கு விட ஏற்பாடு செய்திருக்கிறோம். அதெல்லாமல் ஊராட்சி ஒன்றியங்கள் டிராக்டர்களை வாடகைக்குக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். சிறு விவசாயிகளும் பயன்படுத்திக் கொள்ளலாம். டிராக்டர்கள் என்றால் ஏதோ பெரிய நிலச் சுவான் தார்கள் 100 எக்கர், 1,000 வைத்திருப்பவர்கள் தான் உபயோகப் படுத்தவேண்டும் என்பதல்ல. 5, 10 எக்கர் வைத்துநிருப்பவர்கள் கூட உழமுடியும். அதுவும், புதிதாக வந்துள்ள "பவர் டில்லர்ஸ" ரொம்ப லாபகரமாக இருக்கிறது. வறக்குறைய 10,000 ரூபாய் செலவில் கிடைக்கும் இந்த "பவர் டில்லர்" விவசாயத்துக்கு ரொம்ப உபயோகமாக இருக்கும். சிறு சிறு பூமியாக வைத்திருப்பவர்களுக்கு ரொம்ப வசதியாக இருக்கும். எனவே உச்சவரம்பைக் குறைத்ததின் மூலம் டிராக்டர்ஸ் பயனற்றுப் போகுமா என்று யாரும் அதற்காக கவலைப்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஆப்செண்டீ லாண்ட்லார்டிசம்" கூடாது என்று மீண்டும் இங்கே பேசப்பட்டது. நேற்றைய தினம் சொன்னேன். கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிற, நாங்கள் ஏற்றுக் கொண்ட கொள்கை, இதே மன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும், இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களும் பலமுறை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஏற்று கொண்டுள்ள கொள்கைக்கு ஏற்ப அவசரப்படாமல், சட்டம் நிறைவேற்றுவதற்கு உறுதியான எண்ணத்துடன் இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

"பினாமிகளை" எப்படி ஒழிக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதை ஒழிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். "பினாமிகளை" கண்டு பிடித்திருக்கிறோம். வேறு பல இடங்களில் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். விதி விலக்கிலிருந்து தப்புவதற்கு பலபேர் முயற்சிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. எந்தெந்த விதி விலக்கால் யார் தப்புவார்கள் என்று குழு போட்டு ஆராய்ந்து "ஹில்ஏரியா"வில் "பிளான்டேஷன்" தவிர மற்ற பூமிகளை நிலச் சட்டத்தின்கீழ் கொண்டு வருவது என்று சட்டம் கொண்டுவருகிறோம். அந்த விதியை ரத்து செய்யமாட்டோம்.

இன்றைக்கு ஆராய்வதற்கு அவகாசம் வேண்டும் என்பதற்காக குழு அமைத்திருக்கிறோம். அடுத்த கூட்டத்தில் என்ன செய்ய முடியும் என்பதை பரிசீலிக்கலாம்.

"ப்ளான்டேஷனை" பொறுத்தவரை இங்கே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் குறிப்பிட்டார்கள். "அதற்கும் உச்சவரம்பு சட்டம் வர வேண்டும்" என்று சொன்னார்கள். எங்களுக்கு



ஆட்சேபணையில்லை. முதலமைச்சர்கள் மட்டத்தில் டில்லியில் மாநாடு நடைபெற்றபோது, நமது முதலமைச்சர் சார்பில் நான் அதில் கலந்து கொண்டபோது, மாநாட்டில் இது விவாதத்துக்கு வந்தது. அப்போது நாங்களும் தெரிவித்தோம். எடுத்துக்கொள்வதைப் பற்றி ஆட்சேபணை யில்லை. டீ. காபி போன்றவைகளில் "ப்ராசெசிங் யூனிட்ஸ்" வைப்பதற்கு சிறு சிறு நிலச்சுவான்தார்களால் முடியாது. பெரும் நிலம் வைத்திருந்தால் முடியும், என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இன்னொரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அது வெளி நாட்டுச் செலாவணி கொண்டு வரும் பொருளாக இருப்பதால் அகில இந்திய நிதி மந்திரிகள் மாநாட்டில் முடிவு செய்வோம்; இப்போது வேண்டாம்; மீண்டும் முதலமைச்சர்கள் மாநாடு கூட்டுகையில் முடிவெடுக்கலாம்" என்று ஒத்திவைத்திருக்கிறார்கள். அதில் என்ன செய்கிறார்கள் என்று பார்த்து அதன் பிறகு முடிவு எடுக்கலாம் என்று நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம்.

இங்கு இன்னொரு விஷயம் விவாதிக்கப்பட்டது. நண்பர் ராஜா அவர்கள் பேசும்போது கேள்வி எழுப்பினார். பேசலாமா? என்று கேட்டார்கள். என் பேசக்கூடாது என்று கேட்டார்கள். காங்கிரஸ் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் அப்படிச் செய்ததில் என்ன தவறு? என்று கேட்டார்கள். சட்ட அமைச்சர் சட்டப் பிரச்னைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். பேசப்பட்ட கருத்துக்கு பதில் தெரிவிக்கச் சொல்லுகிறேன். முதலமைச்சர் அவர்கள் அந்த விளக்கத்தைத் தந்து விட்டார்கள். அந்த விளக்கத்திற்கு மேல் இதை, ஒன்றிரண்டு வார்த்தை சொல்லி நிறுத்தி விடலாம் என்று நினைக்கிறேன். அரசாங்கம் உத்தர விட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

The Authorised Officer-He has declared the entire lands sold as void.

அது மட்டுமல்ல; அந்த "ஆதரைஸ்டு ஆபீசர்"—

'He therefore held that all the transfers effected by the landholder Thiru C. N. Varadappan, as specified in the Schedule annexed to this order is void' என்று சொன்னதோடு மட்டுமல்ல;

Thus, it is evident that all the sales were made only with a view to defeat the provisions contained in Sections 7 to 12.

என்று சொல்லியிருக்கிறார்கள்.

நிலச் சீர்திருத்த சட்டத்தை தோற்கடிப்பதற்காகத்தான் இப்படி விற்கப் பட்டிருக்கிறது; இன்றல்ல, 15—11—1970 அன்று. ஆதரைஸ்டு ஆபீசர் போட்ட உத்தரவை என் கையில் வைத்திருக்கிறேன். இந்த உத்தரவு செல்லாது என்று சொல்ல முடியாது. சட்டப்படி விற்றது சரியா இல்லையா என்ற வாதத்துக்குப் போக விரும்பவில்லை.

1960-ஆம் ஆண்டு நிலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கு பிறகு விற்றிருக்கிறார்கள். விற்ற நேரம் சரியா? தவறா? ஒரு அமைச்சருடைய குடும்பத்தில் இப்படிச் செய்யலாமா? இப்படிப்பட்ட தவறு செய்தால், அந்தத் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன்பு குற்றவாளிகளாகத்தான் ஆக்கப்படுவார்கள். சட்டப்படி அந்த நிலத்தை அரசாங்கம் கைப்பற்றும். கைப்பற்றுவதற்குண்டான நடவடிக்கை எடுக்கும்.

" இன்னொருவருக்கு விற்றிருக்கிறார்கள், வாங்கினவர் கதி என்ன? " என்று கேட்டார்கள். வாங்கினவர் யாரிடத்தில் பணம் கொடுத்தாரோ, அவரிடத்தில் பணத்தை வசூலித்துக் கொள்வதைத் தவிர வேறு வழி எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் இன்றுள்ள சட்டப்படி, உபரி நிலம் என்று சொல்லப்பட்ட நிலத்தை அரசாங்கம் எடுத்து, அதற்குண்டான "காம்பென்சேஷன்"-ஐ நிலச் சொந்தக்காரர்களாக இருக்கும் வரதப்பன் அவர்களுக்கு கொடுத்து விடுவோம். வாங்கியிருப்பவர்கள் நிலத்தில் முதலீடு செய்திருக்கிறார்களா என்று எங்களுக்குத் தெரியாது. வாங்கியிருப்பவர்கள் அதற்குண்டான பணத்தை, யாரிடத்தில் இருந்து நிலத்தை வாங்கினார்களோ, அவர்களிடத்தில் வசூலிப்பது தான் முறை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இது பற்றி அறிவிப்பு விடப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது. நிலச்சுவான்தாருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. "வாங்கினவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்களா ?" என்று கேட்டார்கள். இந்த உத்தரவிலேயே இருக்கிறது. அது மட்டுமல்ல. இன்னொரு "கெசட் நோடிபிகேஷன்" வெளியிடப்பட்டிருக்கிறது. 13—10—1971 அரசாங்கம் வெளியிட்ட "கெஜட்டில்"—பெயர் : திரு. சி. என். வரதப்பன் ; திருமதி சரோஜினி வரதப்பன் என்று போட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய கெஜட்டை அங்கத்தினர்கள் தயவு செய்து குறிப்பிட வேண்டுமென்றால், வீட்டிலே உள்ள கெஜட்டை படித்துப் பார்க்கலாம்—தேதி—13—10—1971-ல் வெளியான கெஜட்டில் இந்த நிலம் முழுவதும் குறிப்பிடப்பட்டு, விற்கப்பட்டிருக்கின்ற நிலம் "சர்ப்ளஸ்" என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. மேற்கொண்டு எடுக்கும் நடவடிக்கை சட்டப்படி எடுப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஏதோ விரோத மனப்பான்மையுடன் சொல்லவில்லை. இந்த ஒரு தவறுதான் நடந்திருக்குமென்று நாங்கள் நினைக்கவில்லை. இப்படி பல தவறுகள் நடந்திருக்கும் என்று யூகித்துக் கொண்டிருக்கிறோம். அவற்றை விசாரிக்க "ஆதரைஸ்டு ஆபீசர்களை" கேட்டிருக்கிறேன். எங்கெங்கே இப்படி நடைபெற்றிருக்கிறது என்று 60-ஆம் ஆண்டு சட்டம் வெளி வந்த பிறகு, "62 நோடிபிகேஷனுக்கு" பிறகுகூட அரசாங்கம் 'சர்ப்ளஸ்' என்று 'டிக்ளேர்' செய்து அதற்குப்பின் விற்கப்பட்ட பூமி யாருடையதாக இருந்தாலும் அவர்களையெல்லாம் கண்டு



பிடிக்கவேண்டும் ; அதை அரசாங்கம் கையகப்படுத்தி, நிலமற்றவர்களுக்கு பிரித்துக் கொடுக்கும். அதற்கான "காம்பன்சேஷனை" நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுப்போம்.

வாங்கினவர்கள் யாரிடத்தில் பணம் கொடுத்தார்களோ அவர்களிடத்தில் பணம் பெற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது கொண்டு வந்திருக்கும் சட்டத்தில் 40 ஸ்டாண்டர்ட் ஏக்கராக குறைத்திருக்கிறோம். கொள்கையளவில் 40 ஆக குறைத்தோம் என்றாலும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சொன்னது போல், 20 ஏக்கராக, 25 ஏக்கராக இருக்கலாம் என்று சொன்னார்கள்—அது கால வெள்ளத்தில், குறைய வேண்டிய அவசியம் வரும்போது குறையும். ஆனால் 40 ஆக இருக்கும் இதனை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இப்படிக் குறைப்பதின்மூலம் எவ்வளவு நிலம் கிடைக்குமென்று சொல்லவில்லை. சொல்லவேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள்—அதைக் கேட்கத் தான் எழுகிறார் என்று எனக்குத் தெரியும்—எவ்வளவு கிடைக்கும் என்பதை இப்போது திடீரென்று சொல்வதற்கில்லை. "ஆதரைஸ்டு ஆபீசர்களை" வைத்திருக்கிறோம். அந்தத தேதியிலிருந்து யாரும் நிலத்தை விற்றுவிட முடியாது. விற்றாலும் செல்லாது. எனவே 60 என்பதை 40 ஆக குறைக்கிறோம். 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர்ஸ் வைத்திருப்பவர்களிடமிருந்து மீதி 20 ஸ்டாண்டர்டு ஏக்கர்களை அரசாங்கம் கையகப்படுத்தும். எவ்வளவு வரும் என்று இப்போது சொல்வதற்கு என்னிடத்தில் புள்ளி விவரம் கையில் இல்லை. விரைவில் சேகரிக்கும்படி அதிகாரிகளைக் கேட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாமன்ற உறுப்பினர்களை சபாநாயகர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள், தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்தியதால், அவருடைய திருத்தம் அவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது. பிற்பகல் 1-00

**MR. SPEAKER**: The question is—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L. A. Bill No. 15 of 1972) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 was put and carried.

*Clause 3*

**MR. SPEAKER**: The question is :

" That Clause 3 do stand part of the Bill ".

THIRU MANALI C. KANDASWAMI: Sir, I move the following amendment:—

"In sub-clause (3) of clause 3, for the figure and words '40 standard acres', substitute the figure and words '25 standard acres'.

The amendment was duly seconded.

THIRU A. K. SUBBIAH: Sir, I move the following amendment.

"In sub-clause (3) of clause 3, for the figure and words '40 standard acres', substitute the figure and words '20 standard acres'."

The amendment was duly seconded.

THIRU N. K. PALANISWAMY: Sir I move the following amendment:—

For sub-clause (3) of clause 3, substitute the following:

"(3) in section 5 of the principal Act, in sub-section (5), for the figures and words '60 standard acres', the figures and words '15 standard acres' had been substituted."

The amendment was duly seconded.

The amendment of Thiru Manali Kandaswami was by leave withdrawn.

The amendments of Thiruvalargal N. K. Palaniswami and A. K. Subbiah were put and lost.

Clause 3 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move "That the Bill be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

**(இ) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு–வடிகால் வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1972.)**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியத் திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

* 30—3—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





வாரிய நிதியின் ஒரு பாகமாக இருக்கும் தொகைகளும் வருவாய்களும் அரசுப் பொதுக் கணக்கிலோ, இந்திய ரிசர்வ் வங்கியிலோ வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 34-வது பிரிவின் (4) உட்பிரிவு கோருகிறது. மேற்படி சட்டத்தின் 36-வது பிரிவின்படி வாரியம் கடன் வாங்கலாம்; குடிநீர் வழங்கு வடிகால் திட்டம் ஒன்றைத் தயாரித்தல், முறைப்படுத்துதல் அல்லது மேம்படுத்துதல் குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்களும் முன்பணங்களும் வழங்கலாம். தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியம் தனது நிதியை அரசுப் பொதுக் கணக்கிலோ, இந்திய ரிசர்வ் வங்கியிலோ வைப்பீடு செய்வதோடு மட்டுமல்லாது இந்திய ஸ்டேட் வங்கியிலாவது நாட்டுடமை ஆக்கப்பட்ட எந்த வங்கியிலாவது வைப்பீடு செய்யவும் மேற்படி வாரியத்திற்குஅதிகாரமளிக்கப்பட்டால் மட்டுமே மேற்படி சட்டத்தின் 36-வது பிரிவில் கண்டுள்ள விதித்துறைகளின் பயனை அடையலாம் என்று கருதப்படுகிறது. எனவே, தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியம் தனது நிதியை அரசுப் பொதுக்கணக்கிலோ, இந்திய ரிசர்வ் வங்கியிலோ வைப்பீடு செய்வதோடு இந்திய ஸ்டேட் வங்கி அல்லது நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியிலும் வைப்பீடு செய்வதற்கு இயலும் வகையில் தமிழ்நாடு 4/1971-ஆம் சட்டத்தின் 34-வது பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது. ஆகவே, இப்பிரேரணையை ஏற்குமாறு நான் இப்பேரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

**THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister whether if accounts are transferred or dealt with by commercial banks which are now nationalised, will there be any difficulty in the matter of audit of such local bodies, that is likely to arise? That is the only point. If it is a lacuna, it will have to be looked into when the rules are being framed.**

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சார், ஒரு கிளாரிபிக்கேஷனுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்போது இந்த வாரியத்தின் நிதி எல்லாம் சர்க்கார் பொதுக்கணக்கிலும், ரிசர்வ் வங்கியிலும் வைக்கலாம் என்று இருக்கிறது. இதை மாற்றி கமர்ஷியல் வங்கிகளிலும், ஸ்டேட் பாங்கிலும் போடலாம் என்று வழி செய்வதால் நமக்கு அதிகமாக கிடைக்கும் பலன் என்ன? இந்த நிதி அரசாங்கப் பொதுக் கணக்கில் இருந்தால், 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் என்று ஏதாவது லோன் வாங்க வேண்டுமானால் சர்க்கார் நிதிநிலையைக் காட்டுவதற்கு இது பயன் உள்ளதாக இருக்கும். கமர்ஷியல் பாங்குகளிலும், ஸ்டேட் பாங்கிலும் நிதியைப் போடுவதற்கு இப்போது என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது? அப்படிப் போடுவதால் என்ன பயன் கிடைக்கப் போகிறது என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is stated in the statement of objects and reasons as follows : 'It is considered that optimum advantage of the provisions in section 36 can be derived if the Tamil Nadu Water Supply and Drainage Board is empowered to invest its fund not only in the public accounts of the Government or in the Reserve Bank of India but also in State Bank of India or in any nationalised Bank. I want to know exactly what is the optimum advantage which the Government assesses.

THIRU K. M. SUBRAMANIAM : I would like to know whether this Board has powers to borrow from the L.I.C. I am told that this Board is given power to borrow from the L.I.C. just as the Corporation and other municipalities are borrowing from L.I.C. and depositing it in the account of the State Government. Is this a fact or not ? That is the first thing I want to know.

Secondly, is the transfer of accounts to scheduled Banks ? What is the advantage we are going to derive ? When we deposit some amount with the scheduled Bank, the rate of interest is always higher. If we start borrowing from scheduled Bank, for our schemes, we will have to bear higher rate of interest for the same. Suppose there is fluctuation in market at a particular time. At that time scheduled Bank rate may be high. Is it advantageous to tranfer the account from the Reserve Bank to the scheduled Bank?I know in the Corporation we had to pay as much as $9\frac{1}{2}$ per cent interest for money borrowed from scheduled Bank—when if it is Reserve Bank, the interest rate may be very low. But like that we had spent several lakhs during the last four or five years in Corporation. What is the advantage we are going to derive by this ? We would be only put to disadvantage by over-charging of interest by the scheduled Banks, for what we borrow from them for our schemes.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறிய கருத்துக்களை ஒட்டி, நானும் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இப்போது இருக்கின்ற முறையில் இந்த வாரியத்திற்கு என்னென்ன அசௌகரியங்கள் இருக்கின்றன ? இந்த சட்டத் திருத்தத்தால் என்னென்ன சௌகரியங்கள் ஏற்படப்போகின்றன ? என்னென்ன அசௌகரியங்கள் இருந்ததால் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியாக வாரியங்கள் அமைப்பதன் மூலம் ஏராளமான "சோர்ஸஸ் ஆஃப் இன்கம்" வருகின்ற ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பெரிய திட்டங்களை நிறைவேற்றும் போது நிறைய பணம் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட வாரியங்கள் அமைக்கப்படாவிட்டால், மொத்தச் செலவையும் மக்களுடைய வரிப்பணத்தின் மூலமாகவே ஈடுகட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. வாரியங்கள்



அமைக்கப்பட்டால் எல்.ஐ.சி. மற்றும் கமர்ஷியல் நிறுவனங்களிடமிருந்து
நிதி உதவி பெற முடியும். அவைகளிடமிருந்து நிறையப் பணம் பெறு
வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. அதிலே ஆடிட் தகராறுகள் எதுவும்
வராது. நாம் ஏற்கெனவே பல வாரியங்களை அமைத்திருக்கிறோம். அந்த
வாரியங்களுக்குள்ள ஆடிட் முறை இதற்கும் பொருந்தும். அதனால்
இதில் தவறுகள் ஏற்படுவதற்கு வழி இல்லை. 36-வது செக்ஷனில்
மிக விரிவாக எந்த எந்த வகையில் புதிய ரிசோர்சஸ்-ஐ எழுப்பிக்கொள்ள
லாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எல்.ஐ.ஸி.யில் கடன் வாங்கிக்
கொள்ளலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதில் பி.எஸ்.பி. உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் கூறிய கருத்து
தான் அரசாங்கச் சார்புடைய கருத்து. இந்த வாரியங்கள் எல்லாம்
தங்கள் கணக்கை அரசாங்கக் கணக்கோடு வைத்துக் கொண்டிருந்தார்
களானால் அரசாங்கத்தின் நடைமுறைச் செலவுக்கு—வேஸ் அண்டு மீன்ஸ்
—பணம் இருந்து கொண்டிருக்கும், அரசாங்கக் கணக்கிலேயே அவர்கள்
பணம் வைத்துக்கொள்வதுதான் நல்லது என்பதாக எப்போதும்
நிதி இலாகா வற்புறுத்தும். அந்த விஷயத்தையும் கூட நம் அரசாங்கம்
பரிசீலித்து—வாரியத்திற்கு எது நன்மை என்று கருதி—தேசீய உடைமை
யாக்கப்பட்ட வங்கிகளிலும் அவர்கள் கணக்கு வைத்துக்கொள்வார்
களானால் அவற்றின் மூலம் தேவையான அதிக நிதியை அவர்கள்
பெற்றுக் கொள்வதற்கு பயன்படுமே என்றுதான் இந்த முடிவை எடுத்
தோம்.

உதாரணமாக ஹவுசிங் போர்டை எடுத்துக்கொள்ளுங்கள். அது
அரசாங்கக் கணக்கில்தான் பணம் வைத்திருந்தது. அது பற்றி மத்திய
அமைச்சர், நாம் எல்லாம் கலந்து பேசிய பிற்பாடு தேசீயமயமாக்கப்பட்ட
வங்கிகளிலும் கணக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற பிறகு இன்றைக்கு
அந்த வங்கிகள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு அதிகமான
கடன் தொகை கொடுத்து உதவ முன் வந்திருக்கிறது. அது போன்ற
வசதி—மக்களுடைய நலனுக்காக இந்த நீர் வாரியத்திற்கும் கிடைத்
தால் பல நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதுதான் அரசாங்
கத்தின் கருத்து. அதுவும் நாம் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளில்தான்
கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை—வைத்துக்
கொள்ள 'விரும்பினால் வைத்துக்கொள்ளலாம் என்றுதான் செய்திருக்
கிறோம். பல வாரியங்களுக்கும் இது போன்ற கொள்கைதான் பின்
பற்றப்படுகிறது. இது ஒரு அடானமஸ் பாடி—இது இதற்குப்
பொருத்தமுடைய கொள்கைதான். இதில் வேறு எந்த விதமான சிக்க
லும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I would like to know whether
any preferential rate of interest is given for such Boards. As it is connec-
ted with social service, the Government of India would give it. So,
may I know whether this Government have asked for it ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய பணத்திற்கு அதிக
மான வ ்டியை தேசிய வங்கிகள் தருமா என்று கேட்கிறார்கள் . . .

THIRU K. M. SUBRAMANIAM : Sir, when we borrow from the Banks, whether preferential rate of interest would be given ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தச் சட்டம் டெபாசிட் செய்வதைப் பொருத்ததுதான். இதற்கும் கூட அதிகமான வட்டியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கலாம். அவர்கள் நமக்குக் கொடுக்க இருக்கிற பணத்திற்கும் குறைந்த வட்டி வாங்கினால் நல்லது. இவை பற்றி எல்லாம் தேசிய வங்கிகளோடு பேசும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

MR. SPEAKER : The question is—

'That the Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 14 of 1972) be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That the Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 14 of 1972) be passed.'

The motion was put and carried and the Bill was passed into law.

(5) **அறிவிப்புகள்**—தொடர்ச்சி.

**(உ) தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 16/72).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்த சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(6) **அரசினர் சட்ட முன்வடிவுகள்**—தொடர்ச்சி.

**(ஈ) தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்த சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1972).**

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker, Sir, I beg to move—



"That the Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill,* 1972 (L.A. Bill No. 16 of 1972) be taken in to consideration."

In moving the Bill, I wish to say that the Bill seeks to extend the Tamil Nadu Stamp Penalties Regulation, 1831 (Tamil Nadu Regulation V of 1831) and the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955) to the transferred territory, namely, the Kanyakumari district and the Shencottah taluk of Tirunelveli district. Certain enactments in force in the State of Tamil Nadu have already been extended to the transferred territory in the State, by two separate enactments in 1957 and 1960. Subsequently, by the Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Act, 1965 (Tamil Nadu Act 22 of 1965) certain other enactments in force in the State of Tamil Nadu were also extended to the transferred territory. It is now proposed to extend the following enactments in force in the State of Tamil Nadu to the transferred territory and to repeal the corresponding laws in force in that territory.

1. The Tamil Nadu Stamp Penalties Regulation, 1831 (Tamil Nadu Regulation V of 1831).

2. The Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).

The Travancore—Cochin Agricultural Income-tax Act, 1950, is now in force in the transferred territory. It has been decided to extend the Tamil Nadu Act V of 1955 to the transferred territory and to repeal the Travancore-Cochin Act in order to obtain uniformity in the levy and collection of Agricultural income-tax throughout the State. Under the extended Act, the Agricultural income shall be subject to assessment of Agricultural income-tax in the transferred territory from the financial year commencing on the 1st April 1972.

The Bill seeks to give effect to the above decision. Sir, I request the House to accept the motion.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I would like to speak a few words regarding the Bill which is under discussion. So far as this Bill is concerned, two Acts are extended to the Transferred Territory. I think there are many more laws which will have to be made applicable so far as that area is concerned. Sir, there should be uniformity in laws so far as the various areas are concerned. I think this is a welcome move that is being initiated by the Government now.

---

* Published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated 1—4—1972.

Sir, in 1957 and 1960 two enactments were passed and pursuant to that, certain Madras Acts were extended to the Transferred Territory namely, the Kanyakumari district and the Shencottah taluk. So far as the Agricultural Income-tax Act is concerned, I think it would be a great help so far as the medium owners are concerned. So far as the big estate owners are concerned, the slab would be greater and I do not say that the slab should be reduced. I would welcome it because it is a direct tax and the tax is based on income and the estate owners can afford to pay more by way of Agricultural Income-tax and I think the trend in the Centre is that the Agricultural sector is not fully tapped and that it needs more tapping. More such tax will be contemplated in the near future and I do not want to anticipate all those things but suffice it for me to say that these two Acts are now extended.

Now, I would like to make one suggestion. So far as the Court Fees Act is concerned, there are certain special provisions relating to the Kanyakumari district. Previously there was no ryotwari assessment. So, in the matter of calculation of court fees, market value is taken into consideration. So far as the Madras areas are concerned, there are cases in which the revenue assessment only is taken as the criteria and on the basis of the Revenue assessment, the valuation of suit is so framed and adjusted. I think now that the ryotwari settlement is more or less complete, it would be well within the limits of the Legislature to carry out suitable amendments in the Court Fees Act as well, so that the benefit that is being obtained in other areas may also be availed of by the people of the Kanyakumari district.

Also certain orders and other revenue matters particularly *re.* registry will have to be made applicable to the Kanyakumari district. With these words, I conclude my speach.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவானது நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு இந்த மசோதா இல்லை என்றாலும் கூட இதை வரவேற்கிறோம். தமிழ்நாடு விவசாய வருமான வரியைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கனவே இந்தத் திருத்த மசோதா வந்தபொழுது சில கருத்துக்களைக் கூறினேன். இன்றைய தினம் திருவாங்கூர்—கொச்சி வருமான வரிச் சட்டமானது கன்னியாகுமரி ஜில்லாவிலும் செங்கோட்டை தாலூகாவிலும் அமலில் இருந்து வருகிறது. நாம் இந்தச் சட்டத்தை விரிவுபடுத்துகின்ற நிலையில், ஏற்கனவே அங்கிருக்கின்ற சட்டத்திற்கும் இதற்குமிடையே பல முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். வாழை, ரப்பர், கொக்கோ, பாக்கு முதலானவற்றிற்கு இவ்வளவு ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாக்குக்கு ஒரு குறிப்பிட்ட ஏக்கரா என்பது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகும். பனை மூன்றில் ஒரு ஏக்கர். ரப்பர் ஐந்தில் 2 ஏக்கர். கொக்கோ ஐந்தில் 3 ஏக்கர் என்ற



அளவில் இருக்கின்றது. திருவாங்கூர்—கொச்சி சட்டத்திற்கும் இதற்கும் இடையில் பலத்த வேறுபாடுகள் இருக்கின்றன. இதனால் நடுத்தர விவசாயிகள் தாம் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாக்கைப் பொறுத்தமட்டில் 15 செண்ட் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த விலைக்கும் இப்போது உள்ள விலைக்கும் ஏறத்தாழ நான்கைந்து மடங்கு வித்தியாசம் இருக்கிறது. ஒரு வகையில் அப்போது வருமான வரி கட்டுவதில் சிரமம் இல்லாமல் இருந்தது. ஆயிரம் பாக்கு 20 ரூபாய், 15 ரூபாய் என்று இருந்தது. இன்று ஆயிரம் பாக்கு 60 ரூபாய் என்று இருக்கிறது. வசதி படைத்தவர்கள், அதிகமான நிலம் வைத்திருப்பவர்கள் ஆகியோருக்கு வரி கட்டுவது சிரமம் இல்லையென்றாலும் குறைந்த விவசாயம் செய்பவர்கள் அதிகமாக பாதிக்கப்படத்தான் செய்வார்கள்.

கொக்கோவைப் பொறுத்த வரையில் 75 செண்ட் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று வைத்திருக்கிறோம்.

ரப்பரைப் பொறுத்த வரையில் 40 செண்ட் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். தென்னையை விட ரப்பரில் கிடைக்கின்ற வருவாய் குறைவாக இருக்கிறது. ரப்பரை பொறுத்த மட்டில் விலை மிகவும் குறைவான மார்க்கெட் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்து ஏக்கர், ஐந்து ஏக்கர், மூன்று ஏக்கர் என்று வைத்திருக்கும் சிறு விவசாயிகள்தாம் அதிகம். தென்னையைவிட ரப்பருக்கு அதிகமான சலுகை அளிக்க வேண்டும். அதிகாரிகளும் விவசாயிகளுக்கு இருக்கின்ற கஷ்டத்தை உணர்ந்து வரி விதிக்கும்போது ஏற்ற முறையில் விதித்து சட்டத்தை அமல்படுத்த வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது, ஏற்கனவே விவசாய வருமான வரிச் சட்டத்தில் இருக்கிற பல ஷரத்துக்களை வைத்து, அதில் சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் அவருடைய கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது இந்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசினார். நடுத்தர மக்கள் கொஞ்சம் கஷ்டப்படுவார்கள், பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சீக்கிரம் விஸ்தரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்கள் பேசினார்கள். நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். எல்லா அங்கத்தினர்களும் இந்தச் சட்டத்தை வரவேற்றிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பாராட்டி, இந்தச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER: The question is :—**

**"That the Tamil Nadu (Transferred Territory) Extension Bill, 1972 (L. A. Bill No. 16 of 1972) be taken into consideration"**

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 to 12 were put and carried.

Clause 1, the Enacting Formula and Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move: "That the Bill be passed".

The motion was put and carried and the Bill was passed into law.

(5) **அறிவிப்புகள்**—தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/72).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/72) பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: This may be taken up tomorrow. We have got only two minutes.

MR. SPEAKER: There are only two small Bills and one resolution. I think, if the House has no objection, we can sit till 2' O Clock. Tomorrow also you have many Bills and you may have to sit in the after noon, if need be. If some items are left over, we may have to sit day after tomorrow also.

THIRU K. T. K. THANGAMANI: Tomorrow we can finish. The two major Bills are going to be referred to Select Committee tomorrow. We have plenty of time. We can adjourn now.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று; நாளைக் காலை 9 மணியளவில் மீண்டும் பேரவை கூடும்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

பிற்பகல் 1·28

(8) **பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

A. STATUTORY RULES AND ORDERS.

98. Notification issued with G. O. R. No. 85, Revenue, dated the 13th January 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Principal, Boston Matric School on 15th January 1972 at Devi Theatre, Madras. [*Laid on the*



*Table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainment Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939)].

99. Notification issued with G. O. Ms. No. 29, Co-operation, dated the 25th January 1972, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [*Laid on the Table of the House under section* 119 (4) *of the Tamil Nadu Co-operative Societies Act*, 1961 (*Tamil Nadu Act* 53 *of* 1961)].

100. Notification issued with G. O. Ms. No. 1868, Education, dated the 30th October 1971, in regard to introduction of Tamil in respect of all official communications from the offices of the Treasuries and Accounts Department. [*Laid on the Table of the House under section* 6 *of the Tamil Nadu Official Language Act*, 1956 (*Tamil Nadu Act XXXIX of* 1956)].

101. Notification issued with G. O. Ms. No. 3291, Agriculture, dated the 22nd December 1971, in regard to regulation of trade in respect of Paddy in Ramanathapuram district. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].

102. Notification issued with G. O. Ms. No. 86, Rural Development and Local Administration, dated the 18th January 1972, in regard to division of Sathyamangalam Municipal Council into eighteen wards and reservation of one seat for women and one seat for the members of the Scheduled Castes. [*Laid on the Table of the House under section* 304 (d) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920)].

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

168. Return of Assets submitted to the House by the Hon. Minister for Harijan Welfare and Members of the Legislative Assembly. (*vide*—names below).

*As on* 31*st March* 1971.

HON. THIRUMATHI SATHIAVANIMUTHU,
Minister for Harijan Welfare.

MEMBERS.

1. THIRU A. KARUPPIAH
2. THIRU C. KAVERIMANIAM
3. THIRU A. S. KUMARASWAMI
4. THIRU K. P. GOPAL
5. THIRU M. SHANMUGAM
6. THIRU A. CHINNASAMY
7. THIRU M. CHINNASWAMY
8. THIRU A. P. DHARMALINGAM
9. THIRU M. DEVARAJAN
10. THIRU S. NALLASAMY
11. THIRU E. M. NATARAJAN
12. THIRU P. PADMANABHAN
13. THIRU A. PARANDHAMAN
14. THIRU N. PALANISWAMY.
15. THIRU T. O. PERIASWAMY
16. THIRU P. S. MANIYAN
17. THIRU R. MANICKAVASAGAM
18. THIRU A. R. MARIMUTHU
19. THIRU M. MUTHIAH
20. THIRU V. K. RAMARASAN
21. THIRU M. A. LATHEEF
22. THIRU C. G. VISWANATHAN
23. THIRUMATHI JOTHI VENCATACHELLUM



@169. The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 (L. A. Bill No. 14 of 1972).

@170. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L. A. Bill No. 15 of 1972).

@171. Annexure to Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L. A. Bill No. 6 of 1972).

*172. Annexure to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L. A. Bill No. 15 of 1972).

173. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 8.

## இணைப்பு I

[287-ம் பக்கத்தில் 878-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க].

(a) The Tamil Nadu Argo-Industries Corporation Limited, is selling imported tractors only from 19th June 1969 onwards. But it does not sell power-drills.

(b) The details of tractors sold by Tamil Nadu Agro-Industries Corporation from 19th June 1969 as well as from 20th September 1971 are given below :—

*Details of Tractors Delivered at Guindy, Madras-32.*

| Serial number. | Make of tractors. | H. P. | Country of origin. | Number of tractors sold from 19th June 1969. | Number of tractors sold from 20th September 1971.. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | U. 650 | 65 | Rumania | 48 | 16 |
| 2 | Zetor 5511 | 55 | Czechoslovakia | 52 | 3 |
| 3 | U. 500 and U 500 N | 50 | Rumania | 115 | Nil. |
| 4 | Byelarus | 50 | U.S.S.R. | 103 | 1 |
| 5 | Bolgar | 30 | Bulgaria | 2 | Nil. |
| 6 | Zetor 2011 | 25 | Czechoslovokia | 646 | 1 |
| 7 | R.S. 09 | 20 | G.D.R. | 29 | 12 |

@ Despatched to Members on 1-4-72.
* Despatched to Members on 3-4-72.

Prior to the opening of regional centres in January–July 1971, all the tractors were sold from Guindy, Madras. After the opening of regional centres, the tractors are delivered at Guindy, Madras and also at the regional centres according to the choice of the customers.

*Note*—

The Tamil Nadu Agro-Industries Corporation has been supplying imported tractors with effect from 19th June 1969 onwards. The Agro-Industries Corporation is the only agency through which all imported tractors are distributed in Tamil Nadu. During the initial stages all the Tractors were sold at the Office of the Corporation at Guindy, Madras. Subsequently five regional centres have been opened by the Corporation in 1971 to serve the needs of the districts more effectively. The places at which the regional centres are located and the districts which they serve, the date on which the centres were started are all given below :—

| Place of centre. | Date of starting of the centre. | Districts served by the centre. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| Kancheepuram .. | .. 14th January 1971 | .. Chingleput and North Arcot districts. |
| Tiruchirappalli | .. 18th April 1971. | .. Tiruchirappalli and Thanjavur districts. |
| Villupuram .. | .. 7th May 1971 | .. South Arcot district. |
| Madurai .. | .. 27th June 1971 | .. Madurai, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari districts. |
| Salem .. | .. 18th July 1971. | .. Salem, Coimbatore, Dharmapuri and Nilgiris districts. |

2. After the Centres mentioned above have been opened, the registration of applications for tractors and the supply of tractors are being attended to in those respective regional centres, in addition to the headquarters office in Madras. The tractors are delivered to the customers either at the head office workshop at Guindy or at the regional centres according to the choice of the customers. The total number of tractors



supplied by the Corporation from the date of inception to 15th February 1972 is furnished below :—

| Serial number. | Make of the Tractor. | H.P. | Country of origin | Number of Tractors sold. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | U. 650 .. .. | 65 | Rumania .. .. | 50 |
| 2 | Zetor 5511 .. .. | 55 | Czechoslavokia .. | 77 |
| 3 | U. 500 and U 500 N. | 50 | Rumania .. .. | 115 |
| 4 | Byelarus .. .. | 50 | U.S.S.R. .. .. | 149 |
| 5 | Bolgar .. .. | 30 | Bulgaria .. .. | 2 |
| 6 | Zetor 2011 .. .. | 25 | Czechoslavokia .. | 670 |
| 7 | R.S. 09 .. .. | 20 | G.D.R. .. .. | 29 |

3. The Corporation has taken up the distribution of Kubota and Mitshibushi power tillers recently. So far no power tiller has been sold.

4. Power-drills are not sold by the Corporation. They are being hired by the Corporation for sinking deep bore wells. They are working in South Arcot and Coimbatore district at present.

5. The Corporation still continues to supply imported tractors even after, 1st September 1971 (i.e.) the date on which the "Tractor (Distribution and Sales) Control Order, 1971" promulgated by the Government of India came into force. Under the said Control Order there are provisions for the sale of tractors by the dealers to the persons whose names are found in the registers maintained by the dealers. The Tamil Nadu, Agro-Industries Corporation as one of the dealers under the Orders is carrying on the business of buying and selling the tractors, even after the promulgation of the said Order.

விடை—

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம், 19-6-1969 முதல் தான் இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், இக்கழகம் விசைத் துளைக் கருவிகளை விற்பனை செய்வதில்லை.

(இ) 19-6-1969 முதற்கொண்டும், 20-9-1971 முதற்கொண்டும் தமிழ்நாடு வேளாண்மை தொழிற் கழகத்தால் விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

சென்னை-32 கிண்டியில் ஒப்படைக்கப்பட்ட டிராக்டர்கள் பற்றிய விவரங்கள்.

| வரிசை எண். | டிராக்டர் தயாரிப்பு வகை. | பரித்திறன். | தயாரித்த நாடு. | 19-6-1969 முதல் விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | 20-9-1971 முதல் விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | யூ. 650 | 65 | ருமேனியா | 48 | 16 |
| 2 | ஸீடார் 5511 | 55 | செக்கோஸ்லோவேகியா | 52 | 3 |
| 3 | யூ. 500, யூ. 500 என் | 50 | ருமேனியா | 115 | இல்லை. |
| 4 | பைலோரஸ் | 50 | ருசியா | 103 | 1 |
| 5 | போல்கார் | 30 | பல்கேரியா | 2 | இல்லை. |
| 6 | ஸீடார் 2011 | 25 | செக்கோஸ்லோவேகியா. | 646 | 1 |
| 7 | ஆர். எஸ். 09 | 20 | ஜெர்மன் ஜனநாயக குடியரசு. | 29 | 12 |

1971 ஜனவரி-ஜூலையில் வட்டார நிலையங்கள் தொடங்கப்படுவதற்கு முன்னர், எல்லா டிராக்டர்களும் சென்னை, கிண்டியிலிருந்து விற்பனை செய்யப்பட்டன. இந்த வட்டார நிலையங்கள் தொடங்கப்பட்ட பின்னர், டிராக்டர்கள் வாங்குவோருடைய விருப்பத்திற்கிணங்க சென்னை-கிண்டியிலும் வட்டார நிலையங்களிலும் ஒப்படைக்கப்படுகின்றன.

**குறிப்பு.**—தமிழ்நாடு வேளாண்-தொழிற் கழகம் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி முதற்கொண்டு, இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை வழங்கி வருகிறது. இறக்குமதி செய்யப்பட்ட எல்லா டிராக்டர்களையும் தமிழ்நாட்டில் பங்கிட்டு வழங்கும் ஒரே நிறுவனம் வேளாண்—தொழிற் கழகம்தான். தொடக்க நிலையிலேயே, எல்லா டிராக்டர்களும் சென்னை—கிண்டியிலுள்ள வேளாண்-தொழிற் கழக அலுவலகத்திலேயே விற்பனை செய்யப்பட்டன. தொடர்ந்து மாவட்டங்களின் தேவைகளை செம்மையான முறையில் நிறைவு செய்யும் பொருட்டு, இக்கழகத்தால் 1971-ல் 5 வட்டார நிலையங்கள் தொடங்கப்பட்டன. வட்டார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள், அவைகள் பணியாற்றும் மாவட்டங்கள், அந்த நிலையங்கள் தொடங்கப்பட்ட நாட்கள் பற்றிய விவரங்கள் யாவும் கீழே தரப்பட்டுள்ளன.—



| நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடம். | நிலையம் தொடங்கப்பட்ட நாள். | இந்த நிலையங்கள் பணியாற்றும் மாவட்டங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| காஞ்சிபுரம் .. .. | 14-1-1971 | செங்கற்பட்டு, வடஆற்காடு மாவட்டங்கள். |
| திருச்சி .. .. | 18-4-1971 | திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்கள். |
| விழுப்புரம் .. .. | 7-5-1971 | தென் ஆற்காடு மாவட்டம் |
| மதுரை .. .. | 27-6-1971 | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| சேலம் .. .. | 18-7-1971 | சேலம் கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள். |

2. மேற்சொன்ன நிலையங்கள் தொடங்கப்பட்ட பின்னர், டிராக்டர்களுக்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் பணியையும், அவற்றை வழங்கும் பணியையும் சென்னையிலுள்ள தலைமையிடத்துக்குக் கூடுதலாகத் தொடர்புள்ள நிலையங்களும் செய்கின்றன. வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப, டிராக்டர்கள், கிண்டியிலுள்ள தலைமை அலுவலகப் பணிக்களரியிலோ அல்லது வட்டார நிலையங்களிலோ அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இக்கழகம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து 1972 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் வரையில் இக்கழகத்தால் வழங்கப்பட்ட டிராக்டர்களின் மொத்த எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | டிராக்டர் தயாரிப்பு வகை. | பரித் திறன். | தயாரிக்கும் நாடு. | விற்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | யூ. 650 | 65 | ருமேனியா | 30 |
| 2 | ஸீடார் 5511 | 55 | செக்கோஸ்லோவேகியா | 77 |
| 3 | யூ. 500, யூ. 500 - என் | 50 | ருமேனியா | 115 |
| 4 | பைலோரஸ் .. | 50 | ருசியா | 149 |
| 5 | போல்கார் | 30 | பல்கேரியா | 2 |
| 6 | ஸீடார் 2011 .. | 25 | செக்கோஸ்லோவேகியா | 670 |
| 7 | ஆர். எஸ். 09 .. | 20 | ஜெர்மன் ஜனநாயக குடியரசு. | 29 |

3. அண்மையில், இக்கழகம் குபோட்டா, மிட்ஸிபுஷி - விசைத்துளைக் கருவிகளை பங்கீடு செய்தலை மேற்கொண்டிருக்கிறது. இது வரையில் விசைத் துளைக் கருவி எதுவும் விற்கப்படவில்லை.

4. விசைத் துளைக்கருவிகளை இக்கழகம் விற்பனை செய்வதில்லை. ஆழமான குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதற்காக இவை கழகத்தால் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தற்போது, இக்கருவிகள், தென் ஆற்காடு, கோவை மாவட்டங்களில் இயங்குகின்றன.

5. இந்திய அரசால், "1971ஆம் ஆண்டு டிராக்டர் (பங்கீடு விற்பனை) கட்டுப்பாடு ஆணை" சாற்றுரைக்கப்பட்டு செயலுக்கு வந்த நாளாகிய **1-9-1971**-க்கும் பிறகு கூட இக்கழகம் இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது. வணிகர்கள் வைத்து வருகிற பதிவேடுகளில் பெயர் காணப்படும். நபர்களுக்கு அவ்வணிகர்கள் டிராக்டர்களை விற்பனை செய்ய மேற்சொன்ன கட்டுப்பாடு ஆணையில் விதித்துறைகள் உள்ளன. மேற்சொன்ன ஆணை வெளியிடப்பட்ட பின்னரும்கூட, அரசு ஆணைக்கேற்ப, ஒரு வணிகர் என்ற முறையில் தமிழ்நாடு வேளாண்-தொழிற் கழகம், டிராக்டர் வாங்கவும், விற்கவும் செய்கிறது.

## இணைப்பு—2.

[303-ம் பக்கத்தில் 5-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையை காண்க.]

*Details of Posts advertised.*

*Gazetted.*

1. Fifteen appointments of District Munsifs by direct recruitment from practising Advocates of a High Court in India.

2. Three appointments of District Employment Officers.

3. Two appointments by direct recruitment to the post of Lecturers (Gazetted) in Mathematics in Government Polytechnic in the Madras Educational Service.

4. Three appointments of Professors, Assistant Professors and Lecturers in the Government Engineering Colleges in the Madras Educational Service.

5. Six appointments to the post of Professors of Arts Colleges in the Educational Service.

6. One appointment each to the post of Assistant Director of Industries (Ceramics) and Superintendent, Service Unit in the Madras Industries Service.

7. One appointment to the post of Professor of Hydraulic Engineering in the Post Graduate Wing of the College of Engineering, Guindy.





8. One appointment each to the post of Professor of Public Health Engineering in the Post Graduate Wing, Professor of Mining Engineering in the Under Graduate Wing in Government Engineering Colleges.

9. One appointment to the post of Full Time Secretary, District Soldiers', Sailors' and Airmen's Board.

10. One hundred and eighteen appointments of Veterinary Assistant Surgeons in the Animal Husbandry Service.

11. One appointment to the post of Chief Electrical Inspector to Government.

12. Forty-two appointments of Assistant Dental Surgeons in the Medical Service.

13. Posts included in Group I Services.

14. Posts included in Group I Services from Emergency Commissioned Officers.

15. One appointment to the post of Special Officer (Women and Children Welfare) in the Tamil Nadu General Service.

16. Three appointments of Dieticians in Government Hospitals and Thirty-nine posts of Non-Medical Tutors in Government Medical Colleges.

17. One appointment to the post of Automobile Engineer in the Madras Fisheries Service.

18. One appointment by direct recruitment to the post of Bio-Chemist, Institute of Veterinary Preventive Medicine, Ranipet.

19. One appointment to the post of Assistant Engineer, Mechanical and one appointment to the post of (Civil and Fuel) and two appointments to the post of Depot Superintendent in the State Transport Service.

20. One appointment to the post of Technical Assistant to the Police Radio Officer in the Tamil Nadu General Service.

21. Two posts of Superintendent, Boys approved Schools in the Approved School Services.

22. One appointment to the post of Assistant Conservator of Forest from Emergency Commissioned Officers.

23. Seven appointments to the post of Assistant Works Manager, Government Press.

24. Four appointments of full-time Lecturers and seventeen appointments of part-time Lecturers in the Law College, Madras.

25. Three appointments of Assistant Conservator of Forest in the Forest Service.

26. One appointment each to the post of Assistant Superintendent in Art Pottery Section, Vridhachalam and Works Superintendent in the Training-*cum*-Production Centre, Koswapet, in the Industries Service.

*Non-Gazetted.*

1. Two appointments of Senior Instructors in Mathematics, five appointments of Instructors in Commercial Practices in Government Polytechnic for Women in the Educational Subordinate Service.

2. One appointment by direct recruitment to the post of Instructor in Commercial Art in the College of Arts and Crafts, Madras, in the Madras Industries Subordinate Service.

3. Two appointments in the post of Instructor (one in the Spinning and the other in the Weaving) and seven appointments of Operators in the Spinning, Weaving, Testing and Textile Chemistry in the Institute of Textile Technology, Madras Educational Subordinate Service.

4. One appointment of Librarian, Grade I, in the Madras Industries Subordinate Service.

5. Four appointments of Physical Directors in Government Polytechnics.

6. Five appointments of Assistant Chemist in the Cinchona Department.

7. One appointment of Technical Assistant in the office of the Director of Handlooms and Textile.

8. Two appointments of Agricultural Assistant in the Cinchona Department.

9. Four appointments of Ephigraphists in the Department of Archaeology in the Madras General Subordinate Service and two appointments of Statistical Investigators in the Public Health Subordinate Service.

10. One appointment to the post of Assistant Dairy Chemist in the Dairy Development Department.

11. Six appointments to the post of Statistical Assistant in the Public Health Subordinate Service and one appointment to the post of Demonstrators in Leather Press in the Industries Subordinate Service.

12. One appointment of Lecturer in History in the College of Arts and Crafts.



13. Eight appointments of Associate Lecturers in Mechanical Engineering in the Government Polytechnics.

14. Three hundred and fifty posts of Upper Subordinate and three posts of Statistical Assistant in the Agricultural Subordinate Service.

15. Thirty-four appointments of Assistant Statistical Investigator in the Department of Statistics, one appointment of Librarian, one appointment of Inspector in Graphic Art in the College of Arts and Crafts.

16. Five appointments of Audit Assistant in the Local Fund Audit Department from Emergency Commissioned Officers.

17. Fifteen appointments of Audit Assistants in the Local Fund Audit Department.

18. Two appointments of Research Assistant and one appointment of Instructor of Fisheries.

19. Eleven appointments of Statistical Assistant in Government Technical High School.

20. Six appointments of Forest Apprentice in the Forest Subordinate Service.

21. Two appointments of Forest Apprentice from Emergency Commissioned Officers.

22. Posts included in Group II Services from Emergency Commissioned Officers.

23. Thirteen appointments of Graduate Librarians in Government Colleges in the Tamil Nadu General Subordinate Service.

24. One appointment of Statistician in the Highways-Research Station, Madras.

25. One appointment of Junior Instructor in Fisheries Technology and Navigation Engineering in Central Polytechnic, Madras.

26. Posts included in Group IV Services.

27. Two appointments to the post of Associate Lecturers in Commerce in State Institute of Commerce, Madras.

28. Six appointments of Associate Lecturers, six appointments of Senior Instructors and nine appointments of Junior Instructors in the Government Polytechnics.

29. Posts included in Group II and III Services.

30. Three appointments of Store-Keeper, Grade I, in the Agricultural Department.

31. Appointment of Boiler Foremen (four appointments) in the Government Polytechnics

32. Five appointments of Lecturers—Non-Gazetted in Commercial Practice, etc., in the Educational Subordinate Service.

33. One hundred and twelve appointments of Agricultural Supervisors in the Tamil Nadu Agricultural Subordinate Service.

34. One appointment of Foreman-Instructor (Ceramics) in the Ceramic Training School.

35. One appointment to the post of Technical Assistant in the Nilgiris District Small Tea Growers' Industries Co-operative Society in the Tamil Nadu Industries Subrodinate Service.

36. Post included in Group IV Services from Emergency Commissioned Officers.

37. One appointment of Demonstrator in Biology, three appointments of Demonstrators in Chemistry and three appointments of Demonstrators in Physics in the Veterinary College.

38. One appointment of Production Assistant, and four appoinments of Senior Instructors in the Educational Subordinate Service.

39. Four appointments of Hostel Superintendent-*cum*-Physical Training Instructors in the Industrial Training Institute in the Industries Subordinate Service.

40. One appointment of Research Assistant, one appointment of Maintenance Engineer, one appointment of Production Manager and one appointment of Lecturer in Production in the Institute of Technology in the Education of Subordinate Service.

41. One appointment of Assistant Superintendent, Brick Plant, Thirumazhisai in the Industries Subordinate Service.

42. Four appointments of Foremen-Instructors in the Tamil Nadu Employment and Training Subordinate Service.

43. Five appointments of Laboratory Assistants and four appointments of Assistant Chemists in the General Subordinate Service.



43. (*a*) Regularisation of temporary appointments of Supervisors and Junior Engineers of the Construction Branch of the Industries, P.W.D. and Highways and Rural Works Department.

*Miscellaneous notification regarding examination, etc.*

44. Extension of last date for appointment of Professors, Assistant Professors and Lecturers in the Government Engineering Colleges.

45. Proficiency Test in Tamil for I.A.S., I.R.S. and I.F.S.

46. Admission to Rashtriya Military College, Dehra Dun.

47. Special and Departmental Test for Government servants.

48. Results of Special and Departmental Test, November 1970.

49. Extension of last date to the post of Audit Assistants in the Local Fund Audit Department.

50. Half Yearly Examinations and Language Test for Officers of I.A.S.

51. Admission to the Rashtriya Military College, Dehra Dun.

52. Extension of last date to the post of Forest Apprentice.

53. Results of Special and Departmental Test, May 1971.

54. Special and Departmental Test for Government servants for November 1971.

55. Extension of last date to the post of Agricultural Engineering Supervisor.

56. Extension for date of receipt of application for regularisation of temporary appointments of Supervisors and Junior Engineers.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

**புதன்கிழமை, 1972 ஏப்ரல் 5.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) இரங்கல் தீர்மானம்.

#### திரு. காய்தே மில்லத் முகமது இஸ்மாயில் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சென்னை மாநகர முஸ்லீம் நகர்ப்புற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவராகவும் இருந்த திரு. 'காய்தே மில்லத்' முகம்மது இஸ்மாயில் அவர்கள் இன்று அதிகாலை 0.55 மணிக்கு மறைந்துவிட்டதைப் பேரவைக்கு மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகர முஸ்லீம் நகர்ப்புற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1964 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவராகவும் இருந்த திரு. காய்தே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்கள் 5—4—1972-ம் நாளன்று அதிகாலை 0.55 மணிக்கு மறைந்து விட்டதைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அவரை இழந்து வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காய்தே மில்லத்' என்று எல்லோராலும் பேரன்போடு அழைக்கப்பட்ட உயர்திரு முகம்மது இஸ்மாயில் அவர்கள் மறைந்துவிட்ட செய்தி ஆற்றொணாத் துக்கத்தையும் துயரத்தையும் எல்லோருக்கும் அளிக்கக்கூடிய ஒன்றாகும். முகமது இஸ்மாயில் அவர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 ஏப்ரல் 5

இன்றைய அரசியல் உலகில் கண்ணியத்திற்கும் பெருந்தன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய ஒரு பெருந்தலைவர் ஆவார் என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள். ஆகவே, எல்லாவித சிறந்த பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாக விளங்கி, எல்லோருடைய உள்ளத்திலும் இடம்பெறத்தக்க அளவுக்கு தம்முடைய பணியை மிகச் சிறப்பான முறையில் ஆற்றிவந்த அவர்களுடைய இழப்பு இன்றையதினம் அரசியல் உலகில் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும் என்பதை எல்லோரும் நன்கு உணர்வார்கள். அவர்கள் ஆரம்ப காலத்திலேயே நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் கொண்டு அந்த வகையில் நாட்டுக்கு உழைத்து வந்தவர்கள் ஆவார்கள் என்பதையும் எல்லோரும் நன்கு அறிவார்கள்.

1920-ஆம் ஆண்டு அவர் பி.ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது அண்ணல் காந்தியடிகள் துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொள்ளுகிற துடிதுடிப்பைப் பெற்ற அவர்கள் பரீட்சை எழுதுவதற்கு இருபது நாட்கள் இருக்கும் நேரத்தில் அந்தப் போராட்டத்தில் குதித்து, போராட்டத்தில் தம்முடைய பங்கினையும் செலுத்தியவர்கள் ஆவார்கள். காங்கிரசின் சார்பாகப் பல முறை சிறைக்குச் செல்லும் அளவுக்கு அரசியல் வாழ்வை அவர்கள் துவக்கியவர்கள் ஆவார்கள்.

1920-ம் ஆண்டிலிருந்து 1936-ம் ஆண்டு வரை காங்கிரசில் மதிக்கத்தக்க ஒரு பெரும் தலைவராக விளங்கி, அப்பொழுது காங்கிரசில் முக்கிய உறுப்பினராக இருந்த அலி சகோதரருக்கு மிகவும் உறுதுணையாக இருந்து, அவருடன் இணைந்து நின்று அரசியல் பணியினை ஆற்றிய பெருந்தன்மை அவர்களுக்கு மிகச் சிறப்பாக உண்டு.

அதற்குப் பிறகு 1936-ம் ஆண்டிலிருந்து முஸ்லீம் லீக் கட்சியில் சேர்ந்து ஜனாப் ஜின்னா அவர்களோடு இணைந்து நின்று, முஸ்லீம் லீக் கட்சியினுடைய கொள்கைகளைப் பரப்புவதிலும் அந்தக் கொள்கைகளை நிலைநாட்டுவதிலும் மிக முன்னணியில் இருந்து எல்லோருடைய அன்பையும் ஆதரவையும் மிகச் சிறப்பாகப் பெற்றவர்கள் ஆவார்கள் என்பதை நாம் உணர்வோம். 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரையில் ஒன்றாக இணைந்திருந்த தமிழக சட்டப் பேரவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே முக்கிய எதிர்க் கட்சிகளாக விளங்கிய கட்சிகள் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக விளங்கியவர்கள் ஆவார்கள். 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும் எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்கினார்கள். ஆகவே, எதிர்க் கட்சித் தலைவருக்கு வேண்டிய எல்லாச் சிறப்புக்களையும் பண்புகளையும் ஒருங்கே பெற்று, மாமன்றமே பாராட்டத்தக்க அளவுக்குத் தம்முடைய பணியினை ஆற்றியவர்கள் ஆவார்கள் என்பதைச் சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புக்களைப் புரட்டிப்



1972 ஏப்ரல் 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பார்க்கும்போது, அவ்வப்போது எழுந்த பிரச்சினைகளை அவர்கள் எப்படி அணுகியிருக்கிறார்கள் என்பதையும், அந்தக் கருத்துக்களையெல்லாம் எப்படி அவர்கள் எடுத்துச் சொல்வதில் தம்முடைய முழுக் கவனத்தையும் செலுத்தி வந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் காணலாம்.

அறிவாற்றல், அன்பு, உறுதி, அடக்கம், அமைதி ஆகிய சிறந்த பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, ஒரு அரசியல் கட்சியை நடத்திச் செல்லும் தலைவருக்கு எப்படிப்பட்ட சிறப்புக்குரிய பண்புகளெல்லாம் இருக்க வேண்டும் என்று உலகத்திலேயிருக்கும் அரசியல் அறிஞர்கள் எல்லாம் எதிர்பார்ப்பார்களோ அப்படிப்பட்ட சிறப்புக்குரிய பண்புகளெல்லாம் ஒருங்கிணைந்த ஒரு பெரும் தலைவராவார்கள்.

அதற்குப்பிறகு 1962-ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் கேரளத்தில் ஒரு தொகுதியில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1967-ம் ஆண்டிலிருந்து 1971-ம் ஆண்டு வரையிலும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய மக்களிடத்தில்—சிறுபான்மையோர் மக்களிடத்தில் காட்டிய அன்பும் மதிப்பும் மிக உயர்ந்ததாகும். அவர்களுடைய நலனில் எத்தகைய ஆர்வம் கொண்டிருந்தார் என்பதும், அவர்களிடத்தில் எத்தகைய தொடர்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தார் என்பதும், தேர்தல் நடக்கும் போது ஒரு தடவைகூட தொகுதிக்குப் போகாமல் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதிலிருந்து விளங்கும். தேர்தலில் வெற்றிபெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர்தான் அவர்கள் தொகுதியை எட்டிப் பார்த்திருக்கிறார்கள். தேர்தல் நடக்கின்றபோது ஒரு நாள்கூட தொகுதிக்குப் போகாமல், தேர்தல் முடிந்து அவர் வெற்றி பெற்றார் என்ற செய்தி கிடைத்த பிறகுதான், நன்றி தெரிவிப்பதற்காகத் தன்னுடைய தொகுதிக்குச் செல்லும் அளவுக்கு தொகுதி மக்களின் நன்மதிப்பையும் அன்பையும் நம்பிக்கையையும் பெற்றிருக்கிறார்கள். அவர் பிறந்தது தமிழகம் என்றாலும், அவர்கள் தேர்தலுக்குக் கேரளத்தின் ஒரு பகுதியில் நின்றார்கள் என்றாலும், வேறு மாநிலத்தில் தேர்தலுக்கு நின்ற நிலையில் அந்தத் தொகுதிக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை ஆகியவற்றை எண்ணிப்பார்க்கும்போது அவர் எந்த அளவுக்கு மக்களுடைய அன்பையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்கள் என்பது நன்கு விளங்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் நீங்காப் பற்றும் அன்பும் கொண்டு சிறந்த தோழமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் ஆவார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சீரிய தலைமையில் இயங்கிவந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலே தணியாப் பற்றும் ஆர்வமும் கொண்டு, அவருடைய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி வைப்பதிலே அவரோடு கை

கோர்த்து நின்று, எந்தப் பணியினை ஆற்றினாலும், அதிலே தம்முடைய உறுதியான, திட்டவட்டமான, அழுத்தந்திருத்தமான அத்தகைய ஆதாரவையும் அத்தகைய தன்மையையும் அவர்கள் செலுத்தி வந்தார்கள். அரசியலில் ஆரவாரத்திற்கு இடம் அளிக்காமல், ஆவேசத்திற்கு இடம் அளிக்காமல், ஆத்திரத்திற்கு இடம் அளிக்காமல், எந்த வகையிலும் உணர்ச்சி வசப்பட்டுவிடாமல், எதையும் சிந்தித்துப் பார்த்து, ஆழ்ந்த தன்மையில் சிந்தித்துப் பார்த்து, எந்தக் கருத்துக்களையும் சூடான சொற்களில் இல்லாமல், ஆனால், ஒளி பொருந்திய சொற்களைக் கையாண்டு நிதானமாக, ஆனால் அழுத்தந்திருத்தமாக, கருத்துக்களை எடுத்துவைப்பதில் அவர்கள் மிகச் சிறந்து விளங்கினார்கள் என்பதையும் நாம் நன்றாகக் கவனித்திருக்கலாம். இந்தக் காலத்தினுடைய அரசியலுக்கு அப்படிப்பட்ட தலைவருடைய அறிவுரைகளும் பரிந்துரைகளும் தலைமைத் தன்மையும், வழிகாட்டுகின்ற தன்மையும், எவ்வளவு இன்றியமையாதனவாகத் தேவைப்படுகின்றன என்பதை நாம் நன்றாக உணரலாம். அதுமாத்திரமல்லாமல் எத்தகைய மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் கொண்டவராக விளங்கி எடுத்துக் காட்டாக இருந்தார் என்பதற்குப் பல்வேறு உதாரணங்கள் எடுத்துக்காட்டலாம். அரசியல் நிர்ணயச் சட்டம் உருவாகும்போது இந்தியாவின் பொது மொழி எதுவாக இருக்கவேண்டும் என்று பெரும் சர்ச்சை ஏற்பட்டது. பல சமயம் நாடாளுமன்றத்தில் அதுபற்றிய பிரச்சினை வந்து, வோட்டளிக்கவேண்டிய அவசியம் வந்து, அதிலே கருத்துக்களெல்லாம் பரிமாறப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு, சமமான அளவுக்கு வாக்கு வந்து அதை ஒத்திவைத்தார்கள். மறுபடியும் வோட்டு எடுக்கும்போது, சமமான அளவு வந்து, தலைவராக இருந்த டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள் ஒரு வோட்டு கொடுத்து, இந்தியே ஆட்சி மொழியாகவும் பொது மொழியாகவும் கொண்டு வரப்பட வேண்டும் என்று பல நாட்கள் தொடர்ந்து விவாதம் நடந்தபோது கூட, காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் அரசியல் நிர்ணய அவையில் உறுப்பினராக இருந்து, இந்தி இந்தியாவின் பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருப்பதற்கு வேண்டிய தகுதியும் திறமையும் பெற்றது அல்ல என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்லி விவாதித்து, அப்படி இந்தி இல்லையென்றால் வேறு எந்த மொழிதான் இருக்கவேண்டும் என்று ஒரு குரல் எழும்பியபோது அவர்கள் எழுந்து, "வளமை மிகுந்த மொழியும் தொன்மை வாய்ந்த மொழியும், ஆண்டு பழக்கப்பட்ட மொழியும் என்னுடைய தாய்மொழியாகிய தமிழ்தான்" என்று வேறு யாரும் எதிர்ப்புச் சொல்லாத வகையில் அரசியல் நிர்ணய அவையிலேயே இந்தக் கருத்தை அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொன்னார்கள். தங்களுடைய மார்க்க மொழி அரபு மொழியாக இருந்தாலும், தன்னுடைய தாய்மொழி தமிழ்தான் என்று சொல்லி, அந்தத் தாய்மொழி எல்லா வளமும்



கொண்டது, செழுமை கொண்டது, ஆண்டு பழக்கப்பட்டது; சிறப்பானது என்று சொல்லி, அதுதான் பொதுமொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லித் திறம்பட வாதாடிய பெருமை அவருக்கு உண்டு.

ஜனாப் ஜின்னா அவர்கள் காங்கிரசில் இருந்தபோது இவரும் காங்கிரசில் இருந்து, அன்றைய பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டது மாத்திரமல்லாமல், அதற்குப்பிறகு ஜனாப் ஜின்னா முஸ்லிம் லீக் கட்சிக்குத் தலைமையேற்று நடத்திய நேரத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்து, அவருடைய கருத்துக்களுக்கு ஆதாரவாக இருந்து, பாகிஸ்தான் ஏற்படுவதற்குத் துணையாக இருந்து முஸ்லிம் லீகுக்கு அரும்பாடு பட்டவர்கள் என்றாலும், பாகிஸ்தான் வேறாகப் பிரிந்து, இந்தியா தனியாக ஆனதற்குப்பிறகு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் முக்கிய குறிக்கோளும், திட்டமும், நோக்கமும் இந்தியாவின், இந்திய மக்களின் உரிமையைக் காப்பாற்றுவதுதான் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியது மட்டுமல்லாமல், ஏதாவது மாச்சரியங்கள் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டாலும், இந்திய முஸ்லீம்கள் இந்தியாவின் பக்கம்தான் இருப்பார்கள் என்று பலமுறை அழுத்தந்திருத்தமாகச் சொல்லி வந்தார்கள்.

1965-ம் ஆண்டு நடந்த பாகிஸ்தான்—இந்தியா பெரும்போரின்பொழுது அழுத்தந்திருத்தமாக இந்தியாவின் பக்கமிருந்து பாகிஸ்தானுடைய எதிர்ப்பை முழுமூச்சோடு இந்தியாவிலுள்ள முஸ்லீம் சமுதாயமும், முஸ்லீம் லீக் கட்சியும் எதிர்ப்பதற்குப் பாடுபடும் என்று சொல்லியவர், வீட்டிற்கு ஒருவர் தரவேண்டுமென்றாலும் என்னுடைய ஒரே மகனை இருப்பவரைக்கூடத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று அழுத்தந்திருத்தமாகப் பாராளுமன்றத்தில் சொல்லிய பெருமை அவருக்கு உண்டு.

அண்மையிலே வங்காள தேஷ் பிரச்சினையின்போது, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மாச்சர்யங்கள் ஏற்பட்ட நேரத்தில் காயிதே மில்லத் அவர்கள் பாராளுமன்றத்திலும் சரி, நாட்டு மக்களுக்கு அறிவிப்பு தருவதிலேயும் சரி, தன்னுடைய கட்சிக்கும் முஸ்லீம் சமுதாய மக்களுக்கும் மிகத் தெளிவாக, அழுத்தந்திருத்தமாக எடுத்துத் தெரிவித்து, தன்னுடைய நாட்டுப்பற்றுக்கு மிகச் சிறப்பாக விளங்கி பாராளுமன்றத்திலே பலரும் பாராட்டத்தக்க அளவில் அத்தகைய முயற்சியை இவர்கள் தந்து, ஆக்கபூர்வமாக அத்தகைய முயற்சிக்கு முழு மூச்சாக ஆதரவு தந்திருக்கிறார்கள். மிகச்சிறந்த பண்புகளுக்கு உறைவிடமாக இருந்தவர்கள், அடக்கத்திற்கு எடுத்துக்காட்டாகவும், கண்ணியத்திற்கு எடுத்துக்காட்டாகவும் இருந்தவர்கள், அரசியல் நாகரீகம், அரசியல் பண்பு, அரசியல் கண்ணியம் நாட்டில் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதிலே மிகச் சிறந்த விளங்கியவர்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 ஏப்ரல் 5

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியாவின் தலைமையமைச்சராக இருந்தபொழுது காயிதே மில்லத் அவர்களிடம் சிறந்த அன்பும், மதிப்பும் கொண்டிருந்தார்கள். பாகிஸ்தான்-இந்தியா போர் ஏற்பட்ட நேரத்தில் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இவர்களிடம் சிறந்த மதிப்பையும், போன்பையும் கொண்டிருந்தார்கள். இப்பொழுது இந்தியாவின் பிரதமராக இருக்கின்ற இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் இவர்களிடத்திலே பேரன்பையும், பெருமதிப்பும் கொண்டிருந்தார்கள் என்பதை அவர்களுடைய பேச்சுக்கள், மற்றவைகளிலிருந்து தெளிவாக அறியலாம்.

இப்படிப் பல்வேறு பணிகளைப் புரிந்து அவர்கள் தம்முடைய 76-வது ஆண்டில் இயற்கை எய்தியிருக்கிறார்கள். அவருடைய இழப்பு இந்த நாட்டிற்கே ஈடு செய்ய முடியாத இழப்பு என்று கருத வேண்டும். அரசியலிலே பிறருக்கு எடுத்துக்காட்டாக, அமைதிக்கு எடுத்துக்காட்டாக, அடக்கத்திற்கு எடுத்துக்காட்டாக, சிறந்த பண்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள். இந்தியாவில், அரசியலுக்கு இப்படிப்பட்ட பண்புகளை உணர்த்துகின்றவர்கள் ஒருவர்பின் ஒருவராக மறைந்துகொண்டிருக்கிறார்களே என்று ஏக்கத்தோடு இருக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த வகையில் பேரிழப்பு என்ற முறையில் இந்த மன்றத்தின் சார்பாக இந்த இரங்கல் தீர்மானத்தை நாம் நிறைவேற்ற இருக்கிறோம்.

அந்த வகையிலே அவரைப் பிரிந்து வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கும், அவருடைய ஒரே மகனுக்கும், அவருடைய உற்றார் உறவினர்களுக்கும், அவருடைய கட்சியினருக்கும், அவரைச் சார்ந்த மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, சபையின் முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

மறைந்த தலைவர் காயிதே மில்லத் அவர்கள் எவ்வளவு சிறப்பாகத் தன்னுடைய வாழ்க்கையை நடத்தி இன்று வாழ்க்கையை முடித்து இறைவனடி சேர்ந்திருக்கிறார்கள் என்பது நாமெல்லோரும் அறிந்த ஓர் உண்மையாகும். தேசிய இயக்கத்திலே அயராது உழைத்து தனக்கென்று ஒரு பாரம்பரியத்தைச் சிருஷ்டித்த பெருமை காயிதே மில்லத் அவர்களைச் சார்ந்தது என்று சொன்னால் அது மிகையல்ல. அன்னார் நல்ல ஒழுக்கமும், பண்பும், அன்பும் நிறைந்த பெரிய மாமேதையாக விளங்கினார்கள் என்று நாம் சொல்ல வேண்டிய தேவையில்லை. அவர்கள் இந்தத்



1972 ஏப்ரல் 5] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

தேசத்திற்கு எவ்வளவு நல்ல காரியங்களை, நல்ல பணிகளை ஆற்றினார்கள் என்பதையும், அதன் காரணமாக இன்றைக்கு நாம் சுதந்திரமாக இருக்கிறோம் என்பதையும் நாம் உணர்வோம். அவர்களுடைய வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக இருக்கிறது, அவர்கள் எளிய வாழ்க்கை நடத்தி அன்போடு எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒரு உத்தமத் தலைவர். அந்தத் தலைவர் இன்றையதினம் நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள்.

இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியிலேயிருந்து செயலாற்றி இருக்கின்றார்கள், பாராளுமன்றத்திலே உறுப்பினராகச் செயலாற்றியிருக்கின்றார்கள். தேசத்திற்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் தேசத்தின் ஒற்றுமையை மனத்திற்கொண்டு இந்தத் தேசத்திற்காக அரும்பாடு பட்டிருக்கின்றார்கள் என்று பார்க்கும்பொழுது அவருடைய நாட்டுப்பற்றும், தேசப்பற்றும் எவ்வளவு மதிக்கத்தக்கவை என்பதை நாம் உணர்வோம். அத்தகைய பெரியோர்களெல்லாம் நம்மை விட்டு மறைந்து செல்கிறார்கள். அவர்கள் விட்டுச் சென்ற நற்பணியை நாம் தொடர்ந்து நடத்துவதற்குக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். அவர்களுடைய இழப்பு இந்தத் தேசத்திற்கு ஒரு பெரும் இழப்பாக இருக்கும் என்றே கருதுகிறேன். ஆதலால் அன்னாருடைய குடும்பத்திற்கும், அன்னாருடைய கட்சிக்கும், ஏன் இந்தத் தேசத்து மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதற்குக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம்.

அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தோடு நானும் எங்கள் கட்சியின் சார்பாக இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை மன்றாடி, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், கல்வி அமைச்சரவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பிலே முழுமனதாக ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

அகில இந்திய முஸ்லீம் லீக் தலைவராக 1948 முதற்கொண்டு இருந்துவந்த, மறைந்த காயிதே மில்லத் அவர்கள் இந்தியாவில் இருக்கும் முஸ்லீம் மக்களை ஒன்றுபடுத்தியது மட்டுமல்லாமல் இந்திய முஸ்லீம் மக்களைப்பற்றி வெளிநாட்டிலே இருக்கும் முஸ்லீம்கள் கவலைப்பட வேண்டியதில்லை, அதில் தலையிடுவது தவறாகும் என்ற முறையிலே கராச்சியில் நடந்த முஸ்லீம் லீக் மாநாட்டில் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்த நிலையில் அவர் கடைசி வரையிலே உறுதியாக இருந்தார் என்பது பாராட்டத் தக்கதாகும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஏப்ரல் 5

அண்மையில் நடந்த பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தின்பொழுது முஸ்லீம் மக்கள் மத்தியில் குழப்பம் இருந்தாலும்கூட, நாம் இந்தியாவின் பக்கம் உறுதியாக நிற்க வேண்டும், பங்களா தேஷ் மக்களின் விடுதலைப் போராட்டம் சிறந்த ஒரு போராட்டம் என்று வெளியிலேயும், நாடாளு மன்றத்திலேயும் தயக்கமில்லாமல் தெளிவாகச் சொன்னவர் காயிதே மில்லத் அவர்கள்.

அவர் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பல்லாண்டு காலம் பணி புரிந்ததைப்பற்றியெல்லாம் நாவலர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அவருடைய பெருமை, தமிழ் நாட்டில் பிறந்து கேரளத்தில் இருக்கக்கூடிய மஞ்சேரி தொகுதியிலே தேர்தலுக்கு நின்ற நேரத்திலே, எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல், அல்லது எதிர்த்தாலும் எதிர்ப்பு ரொம்பக் குறைவாக இருக்கும் முறையிலே வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமில்லாமல், நம் நாட்டிலே வந்த பல அரசியல் தலைவர்கள், மகாத்மா காந்தியின் இயக்கத்திலே ஈடுபட்டு வழிகாட்டிவந்த பெரியார்கள். இதே சட்டமன்றத்தில் பலமுறை அவரைப்பற்றியெல்லாம் பேசியிருக் கிறார்கள். நாடாளுமன்றத்திலே எங்களைப் போன்றவர்களெல்லாம் எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்களுடைய பிரசங்கத்தை ஆழ்ந்து படிப்பது உண்டு. தமிழ்நாட்டில் தேசிய இயக்கம் வளர்ந்த காலத்தில் எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்களுக்கு உறுதுணையாக காயிதே மில்லத் அவர்கள் இருந் திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே நடந்த அரசியல் மாநாட்டிலே சீனிவாச ஐயங்கார் அவர்களுக்கு வலது கரமாக இருந்து தமிழ் மக்களை ஒன்றுசேர்த்த பெருமை, அக்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்த அரசியல் தலைவர்கள் பெரியார் அவர்களையும், திரு. வி. க. அவர்களையும், நாயுடு அவர்களையும் தன்னோடு இணைத்த பெருமை காயிதே மில்லத் அவர்களுக்கு உண்டு.

இன்றைக்கு அவருடைய மறைவானது முஸ்லீம் மக்களுக்கு மட்டும் அல்லாமல், நாட்டில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும், நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்ற கருத்து உள்ளவர்களுக்கு உண்மையிலேயே பெரிய இழப்பாகும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தின் மீது என் கட்சி சார்பில் சில கருத்துக்களைச் சொல்லி, முழுமனதோடு அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசலாம் என்று கருதுகிறேன்.



1972 ஏப்ரல் 5] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

தலைவர் அவர்களே, நம்முடைய காய்தே மில்லத் அவர்களைப் பல்லாண்டு களாக நான் நேரடியாக அறிவேன். நான் அரசியலில் முதன்முதலில் ஈடுபட்ட நேரத்தில் பல தடவைகள் அவர்கள் என்னைத் தட்டிக் கொடுத்து, சரியான வகையில் தைரியமாக உன் பணியைச் செய் என்று 1964-லிருந்து எனக்குச் சொல்லி வந்திருக்கிறார்கள். பழகுவதில் ஒரு தகப்பன் மகனோடு பழகுவது மாதிரி நல்ல வகையில் பழகக்கூடிய நல்ல சுபாவத்தினைப் படைத்தவராக யிருந்தார்கள். அதேநேரத்தில் யார் மீதும் கசப்பு உணர்ச்சியில்லாமல், எதிரி என்று அரசியலில் சொல்லக்கூடிய நிலையிருந்தாலும் கூட, அவரைப் பார்த்தும் கூட அவரோடு அன்புடன் பேசுவாரே தவிர, வேறு எந்த வார்த்தையும் அவர் வாயிலிருந்து வராது.

அவருடைய வாழ்க்கையிலே ஒரு அதிசயக் காட்சி என்னவென்றால், சாதாரணமாக நாம் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்கும்போது வாக்காளர்களை நேரில் பார்த்து 'வோட்டு போடுங்கள்' என்று கேட்போம். ஜனநாயகம் என்றால், சரியான வகையில் பார்த்தால் பொதுமக்கள் விரும்பி ஒருவரை வேட்பாளராக நிறுத்திவைப்பார்கள். அந்த வகையில் நம் மதிப்பிற்குரிய காய்தே மில்லத் அவர்களை மஞ்சேரி தொகுதியில் உள்ள வாக்காளப் பெருமக்கள் விரும்பி, நீங்கள்தான் எங்கள் வேட்பாளராக நிற்கவேண்டுமென்று சொல்லி வற்புறுத்தி நிற்க வைத்து, மில்லத் அவர்கள் வோட்டு கூட கேட்கப் போகாமல் வெற்றி பெற்ற பிறகு நன்றி செலுத்தக்கூடிய ஒரு காட்சியைத்தான் நாம் பார்க்கிறோம். நம் நாட்டிலே இது ஒரு அதிசயக் காட்சியாகும். அதைப் பார்க்கும்போது பொதுமக்களின் உள்ளங்களில் அவர்கள் எந்த அளவிற்கு இடம் பெற்றுள்ளார்கள் என்பது தெரியவரும்.

அண்ணல் காந்தி அவர்கள் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் நீண்ட நாட்களாக அவர்களோடு சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு, அருமை நண்பர் தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல் திருநெல்வேலி போன்ற இடங்களில், ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்களைப் போன்றவர்களோடு பழகி, சுதந்திர இயக்கத்தை நம் நாட்டில் வளர்த்து வந்தார்கள். இன்னொரு விஷயம். காந்தி அடிகளின் நெருங்கிய நண்பகிர் என்பது மட்டுமல்லாமல் பல விஷயங் களில் காந்தி அடிகளின் வாழ்க்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள் க்ரோம்பேட்டையில் உள்ள அவரது இல்லம் ஒரு ஆசிரமம் போல் இருக்கும். அங்கு செல்லும்போது காந்தி அடிகளின் நினைவு தான் வரும்.

எந்த எதிர்க்கட்சியாக இருந்தாலும் அவர் தாக்கும்போது நல்ல வகையில் தாக்கி, எந்த எதிர்க்கட்சியானாலும் தன்னைத் தாக்கமுடியாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். பத்து பதினைந்தாண்டு அரசியல் வரலாற்றைப்

பார்க்கும்போது எந்த ஒரு எதிர்க்கட்சித் தலைவரும் அவர்களைத் தாக்கிப் பார்த்ததுமில்லை. காதால் கேட்டதுமில்லை. சமஸ்கிரதத்தில் சொல்வார்கள், அஜாத சத்ரு என்று. தனக்கு எதிரி இல்லாத வகையில் அவர்கள் தம்மை ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒழுக்கத்திற்கு அவர்கள் ஒரு சிகரமாக விளங்கினார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டிலுள்ள எல்லோரையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது—கட்சியை மறந்து பேசவேண்டுமென்றால்—அவர்கள் ஒழுக்கத்தின் சிகரமாக இருந்தார்கள். அவர்களிடம் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளும் அளவிற்கு அதை நிலைநிறுத்திக் காட்டியிருக்கிறார்கள். அரசியல்வாதிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கி வந்த காயிதே மில்லத் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. அவரது மறைவு முஸ்லீம் சமுதாய மக்களுக்கு ஒரு பேரிழப்பு என்பது மட்டுமல்ல, அவரது குடும்பத்திற்கு என்று மட்டுமல்ல, தமிழகத்திற்கு என்று மட்டுமல்ல, தம் நாட்டிற்கே ஒரு பேரிழப்பு என்பது மட்டுமல்ல, அரசியல் வாழ்க்கைக்கே அவர்களது இழப்பு ஒரு பேரிழப்பாகும். இந்தப் பேரிழப்பை எந்தவிதத்திலும் சரிக்கட்டமுடியாது. யாராலும் சரிக்கட்ட முடியாது. ஒரு சூன்ய நிலை, His death has created a void in the political arena, in the political firmament என்று சொல்லக்கூடிய அளவிற்கு பெரியதொரு சூன்யம் உருவாகியிருக்கிறது. அந்த சூன்யத்தை எப்படிச் சரிக்கட்டுவது என்று சொல்லக்கூட முடியாத அளவிற்கு நாம் வேதனையோடு இருக்கிறோம் சொல்லிக் கொண்டு என் கட்சி சார்பில், மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் முன் மொழிந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து, என் வார்த்தைகளை முடித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டசபைக் கூட்டம் இறுதி நாளாக முடிவுறும் என்றிருந்த நேரத்தில் இந்தியாவிலே மாபெரும் தலைவராக இருந்துவந்த பெருமதிப்பிற்குரிய காயிதே மில்லத் சாகிப் அவர்கள் மரணம் எய்தியிருக்கிறார்கள். அவர்களது மறைவு இன்று இந்தியாவிலுள்ள அத்தனை தேசபக்தர்கள் உள்ளங்களிலும் பெரியதொரு வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். சுதந்திரப் போராட்டத்தில், விடுதலைப் போராட்டத்தில் முன்னின்று தேசபக்தியோடும், தியாக உணர்வோடும் காந்தி அடிகளோடு சேர்ந்து போராடிய மாபெரும் தலைவராவர். இந்து-முஸ்லீம் பிரிவினை ஒருபுறத்தில் பிரசாரம் செய்யப்பட்டபோது, இந்துக்கள் வேறு, முஸ்லீம்கள் வேறு, இவர்கள் மதத்தாலும், பழக்க வழக்கங்களாலும், கலாசாரத்தினால், பண்பாட்டினாலும் வேறுபட்டவர்கள் என்று பிரசாரம் செய்யப்பட்டு தேசத்தைத் துண்டாட பல தேச விரோத





சக்திகள் இயங்கிவந்த காலத்தில் நாம் தேசபக்தியில் ஒன்றுபட்டவர்கள், நாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற ஒரு உணர்வை, ஒற்றுமை உணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தி, தியாகச் சின்னமாக விளங்கிய காயிதே மில்லத் சாகிப் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. அவர்களது தியாகத்திற்கும் தன்னலமற்ற ஒழுக்க நிலைக்கும், தேசபக்திக்கும், தெய்வத்தோடு உயர்ந்த நிலைக்கும் அவர்கள் நம் உள்ளங்களில் என்றென்றைக்கும் நிலைத்து நிற்பார்கள்.

தேசத்தின் ஒற்றுமையின்மை நிலையை மாற்றுவதற்காக அவர்கள் பாடுபட்டார்கள். வேறு மதத்தவன் தான், தனக்கென்று தனிக் கலாச்சாரம் உண்டு, தனிப் பண்பாடு உண்டு என்றாலும் தேசபக்தர் என்ற முறையில் வாழ்க்கையிலும், பேச்சின் மூலமும், நடத்தை மூலமும் எடுத்துக்காட்டி நம் உள்ளங்களில் மறையா விளக்காக இருக்கக்கூடிய மாபெரும் மனிதர் காயிதே மில்லத் சாகிப் அவர்கள். தேச ஒற்றுமைக்காகப் பாடுபட்டுவந்த அவர்கள் ஒரு சிறந்த சோஷலிசவாதியாகவும் வாழ்க்கையில் நடந்து காட்டியவர். ஒரு லட்சாதிபதி குடும்பத்தில் பிறந்தாலும் ஒரு சாதாரண ஏழை மகன், இந்தியாவிலுள்ள சாதாரண ஒரு ஏழை மகன் என்ன நிலையில் வாழ்வானோ அதே நிலையில் அவர்கள் தமது வாழ்க்கையை நடத்திக் காட்டி ஒரு சிறந்த சோசலிஷவாதியாக இயக்கி வந்தார்கள். அப்படி வாழ்ந்து நம்முடைய வாழ்க்கைக்கு ஒளிகாட்டியாக விளங்கியவர் காயிதே மில்லத் சாகிப் அவர்கள். ஆகவே பார்வேட் பிளாக் கட்சியின் சார்பாக அந்தப் பெரிய மகானின் இழப்பிற்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய சபை முன்னவர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த இரங்கற் தீர்மானத்தைத் தமிழரசுக் கழகச் சார்பில் நான் ஆமோதித்துப் பேச விழைகிறேன்.

காயிதே மில்லத் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. அவர்கள் இந்த நாட்டிற்கு அரும்பெரும் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகையதொரு பெருந்தகை இன்று நம்மிடையே இல்லாமலிருப்பது உண்மையிலேயே வேதனைக்குரிய ஒரு விஷயமாகும். காயிதே மில்லத் அவர்கள் தமிழக அரசியலில் நம்முடைய டாக்டர் கலைஞரோடு மிகவும் ஒத்துழைத்து இந்த நாட்டிலே ஒரு நல்ல ஸ்திரமான ஆட்சியை நிறுவப் பெரிதும் பாடுபட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுகொள்ள வேண்டியது நம் கடமையாகும். அந்தப் பெருந்தகை நம்மைவிட்டுப் பிரிந்திருந்தாலும்கூட அவருடைய ஆன்மா நம்மையெல்லாம் வாழ்த்திக்

கொண்டிருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நம் நாட்டில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட, இந்த நாடு நல்ல வகையில் நடைபெற ஒரு வாய்ப்பினையும் காய்தே மில்லத் அவர்களின் ஆன்மா நமக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த இரங்கற் தீர்மானத்தை ஆமோதித்து அமர்கிறேன். வணக்கம்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் நாற்பது ஆண்டுகளாக என்னுடைய அரசியல் குருவாக நான் ஏற்று மதித்து வந்த மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைவர், கண்ணியத்திற்குரிய காய்தே மில்லத் அவர்கள் நம்மையெல்லாம் விட்டு, பிரிந்துவிட்டார்கள். ஒரு சம்பவம் என் நெஞ்சின் அடித்தளத்திலிருந்து என்னை மகிழ்விக்கிறது, என் சமூகத்தைப் பெருமைப்படுத்துகிறது. நான்கு தினங்கள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் கடைசியாக அவர்களைப் பார்க்கவந்தபோது அவருக்கு திடீரென்று உணர்வு வந்தது. அந்தப் பெருந்தகை கலைஞரைப் பார்த்து, "ஐயா, எங்களோடு நீங்கள் ஒத்துழைத்ததற்கும், எங்கள் சமூகத்தினிடத்தில் நீங்கள் காட்டிய பரிவிற்கும், உங்களுக்கும், உங்களுடைய கட்சிக்கும் கடைசியாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டது அவர்களுக்கு இருந்த நன்றி உள்ளத்தைக் கடைசி நேரத்தில் நாங்கள் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த நேரத்தில் யாரிடத்தில் வெளிப்படுத்த வேண்டுமோ அவர்களிடத்தில் வெளிப்படுத்தி இந்த இனத்திற்குப் பெருமையளிப்பதாக, ஏற்றம் நிறைந்த நன்றி உள்ளம் படைத்ததாக, நாணயமுடையதாக அந்தத் தலைவர் ஆக்கிச் சென்று இருக்கிறார்கள் என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

ஒரு சம்பவத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு சமயம் பாராளுமன்றத்தில் ஒரு விவாதம் நடந்தது. அப்போது சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் சொன்னார்கள், "பாகிஸ்தான் போராட்டத்தில் பங்கு பெற்ற நீங்கள், இன்னும் அந்த உணர்ச்சியோடு பேசினால், பாகிஸ்தான் போகவேண்டி வரும்" என்று சொன்னபோது, மிக அமைதியாக, பதட்டப்படாமல், "சர்தார்ஜி அவர்களே, தாங்கள் நன்றாக அரசியல் சட்டத்தைப் படித்து உணர்ந்தவர்கள் என்பதை நான் அறிவேன். எங்களை அல்ல, எங்கள் சமூகத்தை அல்ல, இந்த மண்ணில் பிறந்த ஒரு கொசுவைக் கூட இந்த நாட்டு மண்ணிலிருந்து அப்புறப்படுத்த உங்களுக்கு அதிகாரம் இல்லை" என்று சொன்ன இரும்பு நெஞ்சம் கொண்ட ஒரு தலைவரை இன்று உலகம் இழந்து இருக்கிறது.





எத்தனையோ தமிழர்கள் அன்று மத்திய சட்டமன்றத்தில் இருந்தார்கள். ஆனால் மொழிப் பிரச்னை வந்தபோது மிக நெஞ்சழுத்தத்தோடு, இந்தியாவுக்கு ஒரு பொது மொழி, எல்லாச் சிறப்போடு கூடியதாக அமையவேண்டுமானால், அது தமிழ் மொழியாகத்தான் இருக்கவேண்டும், என் தாய்மொழியாகத்தான் இருக்கவேண்டுமென்று குறிப்பிட்ட, தாய்மொழிப் பற்று மிக்கத் தலைவனை இன்று நாடு இழந்து இருக்கிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்தியாவின் மீது சீனா படையெடுத்தபோது, எல்லா உதவிகளையும் பாராளுமன்ற மெம்பர்களிடத்திலும், மக்களிடத்திலும் கோரினார்கள். அப்போது சொன்னார்கள், "நான் சிறந்த வசதியோடு ஒரு காலத்தில் இருந்தவன். அந்த வசதியெல்லாம் நான் இப்போது இழந்து சாதாரணமாக இருக்கிறேன். நான் பெற்றது ஒரே குழந்தை. நேருஜி அவர்களே, இப்போது போராடுவதற்கு என் மகனை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று பாராளுமன்றத்தில் மிகத் துணிவோடு சொன்ன தேச பக்தி படைத்த ஒரு இரும்பு நெஞ்சம் படைத்த மனிதரை இன்று சமூகமும், நாடும் இழந்து இருக்கிறது.

நான் ஒன்றை மறைக்காமல் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தோடு முதல் தொடர்பாக முஸ்லீம் லீக் கட்சி கூட்டு ஆரம்பமாக இருந்த நேரம். முதன் முதலாக நான் காஞ்சீபுரம் சென்று பேரறிஞர் அண்ணா அவர்களை, காயிதே மில்லத் அவர்களின் சார்பில் காணச் சென்றேன். அவர்கள் சொன்ன விஷயத்தைப் போய் அண்ணா அவர்களிடம் சொன்னேன். அதுதான் ஒற்றுமைக்கு முதன் முதலில் வித்திட்ட நிகழ்ச்சி என்பது உங்களில் பலருக்குத் தெரியாது. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், முஸ்லீம் லீகிற்கும் தொடர்பு ஏற்படுத்த போடப்பட்ட அஸ்திவாரமாகும். அங்கேயிருந்து, அந்தப் பேச்சு முடிந்து நான் சென்னை வந்து, இப்படி அண்ணா அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னபோது, அவர்களிடம் நம்பிக்கை எனக்குண்டு. அவர் ஒரு நாணயமான தலைவர், அவர் சொன்னதை நாம் இப்போது ஒப்புக்கொள்வோம். பிரச்னைகளை வளர்க்கவேண்டாம், நாம் அவர்களோடு கூடுவோம் என்று சொன்னார்கள். எப்பொழுதுமே பிறருக்கு விட்டுகொடுக்கும் சுபாவம் அவர்களுக்கு அதிகமாக உண்டு. அரசியல் வாதிகளிடத்தில் இல்லாத ஒரு குணம் அது. முஸ்லீம் லீகிற்கும், திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும் அல்ல, அதிலே சிலருக்கும், இதிலே சிலருக்கும் இடையே ஒரு சிற்சில மாச்சர்யங்கள் வந்தபோது, கார்ப்பரேஷன் தேர்தல் வந்தது. அவர்களிடம் சென்று இந்த மாதிரி இருக்கிறது என்று சொன்னவுடனே, அபிப்ராய பேதம் வேறு, கொள்கை வேறு. இப்போதே சென்று

19-வது வார்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தால் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் வேட்பாளரை நீங்கள் சென்று, முஸ்லீம் லீக் உறுப்பினர்களையும் அழைத்துச் சென்று ஆதரவு தாருங்கள், மற்ற விஷயங்களைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்ன அந்தப் பெருந்தகையை நாங்கள் இழந்து இருக்கிறோம் என்று சொல்வதில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்.

தலைவரவர்களே, நான் கட்சியின் தலைவன் என்ற முறையில் ஸ்டான்லி ஹாஸ்பிடலில் உள்ள டாக்டர்களும், அங்கேயிருக்கக்கூடிய நர்ஸ்களும் அவர்கள் அங்கே படுத்திருந்த 10 நாட்களில் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி இருக்கிறதே, அது எல்லையற்றது, கொஞ்சமும் சோர்வு இல்லாது மிகவும் தன்னம்பிக்கையோடு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத்தக்க தாகும். அவர்களை இந்தப் பேரவையின் மூலம் பாராட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், நம்முடைய அன்புக்குரிய முதல்வருமான டாக்டர் கலைஞர் அவர்கள், அந்தத் தலைவரை நேரில் காண அடிக்கடி வந்ததோடு மாத்திரமல்லாமல், எல்லா வகையான ஒத்துழைப் பையும் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் அதிகாரபூர்வமாக உத்திரவிட்டது என்றென்றும் அந்தச் சமூகம் மறக்க இயலாததாகும். மற்ற அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேரும், மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், என்னுடைய அன்புக்குரிய சகோதரர் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள், என் அருமைத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் முதலானோர், கட்சிப் பாகுபாடு இல்லாமல் வந்தது, அவர்களுடைய சேவையின் உண்மையைப் பிரதிபலிக்கும் முறையில் வெளிப்படுத்துகிறது என்பதில் எங்களுக்குப் பெருமை அளிக்கிறது.

தலைவரவர்களே, ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முஸ்லீம் லீக் தங்களுடைய நாணயமான தலைவரை, நம்பிக்கையுள்ள தலைவரை, 10 கோடி மக்களின் ஒப்பற்றத் தலைவரை, இந்திய முஸ்லீம் லீக் கட்சியின் ஒப்பற்றத் தலைவரை, இந்த நாட்டின் தேச பக்தி மிகுந்த தேசியத் தலைவரை, அரசியல் பண்பாடு மிக்க ஒரு பெரும் தலைவரை இந்த நாடு இன்றைக்கு இழந்து இருக்கிறது என்பது மட்டுமல்ல, அதை ஈடுசெய்வதற்கு உள்ள நிலையில் இன்றைக்கு எங்கள் சமூகம் இல்லை, அதை ஈடு செய்வது எப்படி என்று எங்களுக்கு விளங்கவில்லை. எப்படி ஈடு செய்து அதை மீண்டும் செப்பனிடுவோம் என்று எனக்குப் புரியவில்லை. நீங்களெல்லாம் அந்த





ஒப்பற்றத் தலைவரிடத்தில் கொண்டுள்ள அன்பின் காரணமாக, காட்டிய அனுதாபத்திற்கு கட்சியின் சார்பில் எனது நன்றியைக் கூறி, அவை முன்னவர் கொண்டு வந்து இருக்கின்ற இந்த இரங்கல் தீர்மானத்தை நான் மனப் பூர்வமாக ஆதரிக்கிறேன் என் கட்சியின் சார்பில் என்று கூறி விடைபெறு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, புதுக் கல்லூரியில் மூச்சற்றுக் கிடக்கின்ற காயிதே மில்லத் அவர்களுடைய உடலை நாம் இப்போது கண்ணீரால் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய பேரவையின் முன்னவர் டாக்டர் நாவலர் அவர்கள் முன் மொழிந்த இரங்கல் தீர்மானத்தை அனைத்துக் கட்சியின் தலைவர்களும் வழி மொழிந்து, தமிழ்நாட்டு மக்கள் அனைவருடைய இரங்கலையும், ஆழ்ந்த துயரத்தையும் அவர்களுடைய உரைகளின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் இந்தியப் பெரு நாட்டினுடைய சரித்திரத்திலும், தமிழ்நாட்டின் வரலாற்றிலும் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டவர்களாவார்கள். இந்தச் சட்டமன்றத்திலும் சரி, நாடாளுமன்றத்திலும் சரி, அவர்கள் வாய்மை எள்ளளவும் குறையாமல் வடித்து வைத்த கருத்துக்களுக்கு இந்த நாடு என்றென்றும் மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உற்ற துணைவராக அவர்கள் விளங்கியது மாத்திரமல்ல, எங்களுக்கெல்லாம் கூட அவர்கள் மற்றொரு அண்ணா வாக விளங்கி, பல்வேறு நேரங்களில் எங்களுக்கு வாழ்த்துக்களைத் தந்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டிய உத்தமப் பெரியார் ஆவார்கள்.

முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திருப்பூர் மொய்தீன் அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு எடுத்துக் காட்டியதைப் போல், மரணத்தோடு அவர்கள் போராடிக் கொண்டிருந்த நேரத்திலும், எவ்வளவு எளிமையோடு, எவ்வளவு அடக்க உணர்ச்சியோடு, எவ்வளவு நன்றி மனப்பான்மையோடு நடந்து கொண்டார்கள் என்பதை நேரிலேயே காணுகின்ற வாய்ப்பு எங்களுக்கெல்லாம் ஏற்பட்டது. அசைவற்றுக் கிடந்த அந்த உடல் அருகே சென்று 'ஐயா' என்று அழைத்ததும் திடீரென்று அசைந்தது. கண்ணை விழித்து என்னைப் பார்த்ததும், 'நீங்கள் காட்டிய அன்புக்கெல்லாம் நன்றி' என்று கூறியதும் என்றென்றும் மறக்க முடியாத நிகழ்ச்சி மாத்திரமல்ல, அசைக்க முடியாமல்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 ஏப்ரல் 5

இருந்த கை எங்களைக் கண்டதும் திடீரென்று அசைந்து வழக்கமாக மரியாதை சொல்லுகின்ற வகையில் 'சலாம்'—இட்ட அந்தக் காட்சி இருக்கிறதே, இதெல்லாம் மிகுந்த பெருந்தன்மை வாய்ந்தவர்களுக்கும், மிகப் பெரும் உள்ளம் படைத்தவர்களுக்கும் மாத்திரமே உரிய பண்பாடுகள் ஆகும். அப்படிப் பட்ட ஒரு மாமனிதரை இன்றைக்கு நாம் இழந்து தவித்துக் கொண்டிருக் கிறோம்.

நாவலர் அவர்களும் மற்றக் கட்சித் தலைவர்களும் இங்கு 'எடுத்துக் காட்டியது போல், இந்தியாவுக்கு எது தேசிய மொழியாக இருக்க வேண்டு மென்ற வினா எழுந்த நேரத்தில், கம்பீரமாக எழுந்து நின்று, 'எல்லா வளமும் பொருந்திய என் தாய்த் தமிழ் மொழிதான் இந்தியாவின் தேசிய மொழியாக இருக்கட்டுமே' என்று கூறிய அந்த வீறு மிகுந்த உரையைத் தமிழகம் என்றென்றும் மறவாது.

அவர்கள் நிதானத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள், நட்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள், பெருந்தன்மைக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினார்கள். அடக்கம் என்றால் இதுதான் என்று அவரைப் பார்த்து நாம் புரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட ஒரு பெரிய மனிதரைத்தான் இன்றைக்கு நாம் இழந்து தவிக்கிறோம்.

அகில இந்தியாவில் இஸ்லாமிய சமுதாயத்தினுடைய மாபெரும் கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித் தலைவராக அவர்கள் இருந்தாலும், பாராளுமன்றத்திலே அவர்கள் வீற்றிருந்தாலும், ஏறத்தாழ 40 ஆண்டு காலப் பொதுவாழ்க்கையிலே அவர்கள் ஈடுபட்டிருந்தாலும், எவ்வளவு எளிய வாழ்க்கையை அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள் என்பதை, குரோம் பேட்டையில் அவர்கள் வாழ்ந்த இல்லத்தைப் பார்த்தாலே அனைவரும் நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களோடு பழகுகின்ற யாராக இருந்தாலும் சரி, அவர்களைச் சந்திக்க அவர்களுடைய வீட்டுக்குச் சென்று திரும்பினால், வீட்டிலிருந்து நாம் வெளியே நிறுத்தி வைத்திருக்கும் கார் வரை வந்து, காரில் ஏறி உட்கார்ந்து கார் நகருகின்ற வரையில் நின்று வணக்கம் தெரிவித்த பிறகு திரும்புகின்ற அந்தப் பெருந்தன்மையை, தள்ளாத வயதிலும், அதிகமாக நடமாட முடியாத பலகீனமான நிலைமையிலும் அவர்கள் பெற்றிருந்தார்கள். இவை எல்லாம் அரசியல்வாதிகளுக்குப் பெருந்தன்மையை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்கு உதாரணமாக விளங்கி அவர்கள் எடுத்துக் காட்டிய வழிமுறைகள் ஆகும்.



1972 ஏப்ரல் 5] [டாக்டர் மு. கருணாநிதி]

முன்னேற்றக் கழகத்தோடு அவர்கள் கொண்டிருந்த நட்பையும், முஸ்லிம் லீக் கட்சிக்கும் முன்னேற்றக் கழகத்திற்கும் இருந்த உறவையும் மாண்புமிகு முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே விளக்கிக் காட்டினார்கள். அவர்கள் கொண்டிருந்த உறவு—

'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்ல—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு'

என்பதற்கேற்ப ஒட்டிய உறவு.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்கின்ற அந்த நட்புக்கு அவர்கள் இலக்கணமாகத் திகழ்ந்தார்கள்.

ஒரு பெரியவரை இன்றைக்கு நாம் இழந்து தவிக்கிறோம், இஸ்லாமிய சமு தாயத்தின் ஏற்றமிக்க தலைவரை அந்தச் சமுதாயம் இழந்து தவிக்கிறது என்று கூறுவதோடு, இந்தியாவில் மிகச் சிறந்த தலைவரில் ஒருவரை இழந்திருக் கிறோம் என்று கூறுவதோடு, தமிழ்நாட்டு மக்களுடைய மன உணர்வு, தமிழ் நாட்டு மக்களுடைய உணர்ச்சிகள், தமிழ்நாட்டு மக்களுடைய மொழி ஆர்வம், தமிழ்நாட்டு மக்களுடைய சுதந்திரப் பற்று இவை அத்தனைக்கும் எடுத்துக் காட்டாக, அவற்றுக்காக வாதாடுகின்ற மிகச் சிறந்த ஏந்தலாக விளங்கிய ஒரு வரை இன்றைக்கு நாம் இழந்திருக்கிறோம் என்று கூறுவது மிகப் பொருத்த முடைய ஒன்றாகும்.

அவர்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லையென்றாலும், அவருடைய உணர்வுகள், அவர் வடித்து அளித்த கொள்கைகள், அவர் வாழ்ந்து காட்டிய நல்வழிப் பாதை இவை எல்லாம் நாம் நடந்து செல்ல வழிகாட்டக் கூடியவை களாக அமைந்திருக்கின்றன.

நான், ஆளுகின்ற கட்சியின் சார்பாக, இந்த அரசின் சார்பாக, அவரால் பரிபாலிக்கப்பட்ட முஸ்லீம் சமுதாய சகோதர, சகோதரிகளுக்கு உறுதி யளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்—அவர்கள் மறைந்து விட்டார்கள்; ஆனால் மறைந்த அந்தப் பெரியவர் மீது ஆணையாகச் சொல்லுகிறேன்— முஸ்லீம் சமுதாயப் பெருமக்களுக்கு இந்த அரசு என்றென்றும் கடமைப் பட்டிருக் கிறது; அவர்களுக்காக என்றென்றும் தன்னுடைய கடமையைச் செய்யும் என்ற உறுதியினை நான் அளிப்பதுதான் மறைந்த அந்த மாபெரும் மனிதருக்கு இந்த அரசின் சார்பில் செலுத்தும் மரியாதை என்று கருதுகிறேன்.

மிகப் பெரிய மனிதரை, ஒப்பற்ற ஒரு தலைவரை, தமிழ் நாட்டிலுள்ள ஒரு மாமணியை இழந்திருக்கும் இந்த நேரத்தில், இந்த அவையின் அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்து நாளையதினம் தொடருவது நலமாக இருக்குமென்ற எண்ணத்தை, பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கொண்டிருப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே, அந்த எண்ணத்தை என்னுடைய வேண்டுகோளாக இணைத்து, இந்த அவையின் சார்பில், மறைந்த பெரியவருக்கு இறுதி வணக்கத்தைத் தெரிவிப்பதோடு, அவரை இழந்து தவிக்கின்ற உற்றார், உறவினர், குடும்பத்தினர், நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்களும், அவையின் முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் இங்கே எடுத்துச் சொல்லிய உணர்வுகளோடு, பேரவைத் தலைவர் என்ற முறையிலும், என்னுடைய, சொந்த முறையிலும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், பெருமக்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காயிதே மில்லத் அவர்களுடைய அருங் குணங்களையும், அவர்கள் அரசியலில் ஆற்றிய அரிய சேவையையும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், அவையின் முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் மிக உருக்கமாக எடுத்துச்சொன்னார்கள். உண்மையிலேயே தமிழ் நாட்டிற்கு மட்டுமல்லாமல் இந்திய பூமியிலேயே ஒரு பெரிய தலைவரை இன்றைக்கு இழந்திருக்கிறோம், அது ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்பதைக் குறித்து யாவரும் உருக்கத்தோடு வருத்தப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் உறுதி அளித்தார்கள். இஸ்லாமிய சமுதாயம், 20 ஆண்டு காலமாக, அவர்கள் இந்த நாட்டின் இரண்டாம் பிரஜைகளாக ஆகிவிடுவார்களோ என்று கருதப்பட்ட நிலையில், 5 கோடி மக்களுக்கு, மற்றவர்களுக்கும் உரிமையை ஏற்படுத்திக்கொடுத்ததன் மூலமாகவும், தம்முடைய தாய் மொழிப்பற்றின் மூலமாகவும் காயிதே மில்லத் அவர்கள் நாட்டு மக்களுக்கு அரும்பெரும் சேவை செய்துள்ளார்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, மிகப் பெரிய உள்ளம், மிகப் பெருந்தன்மை, மிகுந்த அடக்கம் இவைகளுக்கு எடுத்துக்காட்டாக, மொத்த திருவுருவாக இருந்த காயிதே மில்லத் அவர்களின்





மறைவு உண்மையிலேயே மிகப்பெரிய இழப்பு என்ற வகையிலே, அவர்களுடைய குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும், நாட்டிலே இருக்கிற எல்லோருக்கும் இந்தப் பேரவையினுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய அறிகுறியாக எல்லோரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக தங்களுடைய இருக்கையில் எழுந்து நின்றார்கள்).

மறைந்த மாபெரும் தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, பேரவையின் முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துச் சொல்லியதற்கிணங்க, மறைந்த தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் ஒற்றிவைக்கப்பட்டு, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை பின்னர் ஒற்றிவைக்கப்பட்டது.

### (2) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

103. Notification issued with G.O.R. No. 36, Revenue, dated the 6th January 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Honorary Secretary, Shree Mahavir Jain Kalyan Sangh on 30th January 1972. [Laid on the Table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

104. Notification issued with G.O.R. No. 139, Revenue, dated the 21st January 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the

Secretary, Women's Association, Shastrinagar, Adayar on 8th January 1972 at Eros Theatre. [Laid on the Table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

*B. Reports, Notifications and Other Papers.*

174. Notification issued with G.O. Ms. No. 1220, Labour, dated the 23rd September 1971, in regard to an amendment to the Minimum Wages (Madras) Rules, 1953.

175. Notification issued with G.O. Ms. No. 439, Revenue, dated the 11th February 1972, in regard to remision of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deeds to be executed by the employees of Life Insurance Corporation of India under "Individual Employees Housing" Scheme.

@ 176. Report of the Committee on Estimates on Employment and Training.

@ 177. Report of the Committee on Estimates on Labour including Factories.

£ 178. Report of the Committee on Estimates on Animal Husbandry Department.

& 179. Report of the Committee on Public Accounts on the accounts of the State of Tamil Nadu for the year 1968–69.

@@ 180. The Tamil Nadu (Transferred Territory) Extension of Law Bill, 1972 (L.A. Bill No. 16 of 1972).

& 181. Annexure to Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 (L.A. Bill No. 16 of 1972).

* 182. The Tamil Nadu Land Reform (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972).

*183. The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972).



* 184. The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972).

% 185. Annexure to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972).

* 186. The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 26 of 1972)

---

@ Laid on the Table of the House on 1-4-1972.
@@ Despatched to Members on 3-4-1972.
£ Laid on the Table of the House on 3-4-1972.
& Laid on the Table of the House on 4-4-1972.
* Circulated to Members in the Chamber on 4-4-1972.
% Despatched to Members on 4-4-1972.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

**வியாழக்கிழமை, 1972 ஏப்ரல் 6.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Radio sets for Police quarters.*

* 888 *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that Radio receiving sets have been fixed at the Police men's quarters at Ice House lines in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ஐஸ் ஹவுஸ் காவலர் குடியிருப்புத் தொகுதியின் காவலர் குடும்ப நலப் பிரிவில் வானொலிப் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, ஐஸ் ஹவுஸ் காவலர் குடியிருப்பு இல்லத்தில் எத்தனை காவலர்கள் குடியிருக்கிறார்கள்? எல்லாக் காவலர்கள் வீடுகளுக்கும் வானொலிப் பெட்டி பொருத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு 16 வானொலிப் பெட்டிகள் குடியிருப்பவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. அங்கு 58 குடியிருப்பு இல்லங்கள் இருக்கின்றன. இதுபற்றி ஏதாவது வேண்டுகோள் வருமானால் அதை இப்பொழுது அங்கிருக்கும் அந்த அமைப்பினர் கவனித்து வருகின்றார்கள்.

திரு. கே. எ. வகாப்: பொதுவாக, காவலர்களுடைய இல்லங்கள் எல்லாம் மிகவும் வசதிக் குறைவாக இருக்கின்றன என்பதை அரசு அறியுமா? நகரத்தில் மட்டுமல்ல; மற்ற மாவட்டங்களில் இருக்கும் காவலர் இல்லங்களுக்கும் குறைந்தபட்சம் தண்ணீர் வசதியும் விளக்கு வசதியும் செய்வதற்கு அரசு முன் வருமா?

[1972 ஏப்ரல் 6

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'அரசு முன்வருமா?' என்று உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் பார்த்தால் எந்த வசதிகளுமே இல்லை என்று அர்த்தமாகி விடக்கூடும். ஏற்கெனவே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை மேலும் பெருக்குவதற்கு அரசு முயற்சிகள் எடுத்துக் கொள்ளும்.

## *Fake currency notes.*

* 889 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that fake notes were seized by the Police at Tiruttani on 21-9-1971 and persons connected arrested; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) 21—9—1971 அன்று திருத்தணியில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் கள்ள நோட்டு எதுவும் இல்லை. மேலே ஓர் உண்மையான ஐந்து ரூபாய் நோட்டும் கீழே ஓர் உண்மையான நோட்டும் இவையிரண்டுக்கும் இடையில் ஐந்து ரூபாய் அளவுள்ள ஐந்து ரூபாயைப் போன்ற தோற்றமளித்த 131 விளம்பரத்துண்டுகள் வைத்துக்கட்டப்பட்ட ஒரு கட்டு அவர்களிடம் காணப்பட்டது. அவர்கள் ரூபாய் இரட்டிப்பு மோசடி செய்து பொது மக்களை ஏமாற்றும் நோக்கத்துடன் அதை வைத்திருந்தனர். வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** *

Mr. SPEAKER : This is expunged.

**திரு. ஆ. பரந்தாமன் :** திருத்தணியில் கைது செய்யப்பட்டவர்களின் பெயர்களை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திருத்தணியில் கைது செய்யப்பட்டவர்கள் இருவர். திருத்தணி தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு குடிசையிலிருந்து, ஆவடியைச் சார்ந்த வேதாசலம், திருச்சியைச் சார்ந்த ரவி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

**திரு. எஸ். நல்லசாமி :** கள்ள நோட்டு சம்பந்தமாக இரட்டிப்புத் தொழில் செய்யக்கூடியவர்களில் எத்தனை பேர் தமிழ்நாட்டில் பிடிக்கப்பட்டிருக்கின்றனர்? எத்தனை பேர் பொதுமக்கள் அவர்களிடம் ஏமாந்திருப்பார்கள் என்ற கணக்கை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1972 ஏப்ரல் 6]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது கள்ள நோட்டு பற்றியதல்ல. நோட்டுக்களை இரட்டிப்பாக்குவதாகச் சொல்லி மோசடி செய்கின்ற வழக்கைப் பற்றியது. கள்ள நோட்டு வழக்குகளைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்க முடியும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** இப்படிப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதில் இதுவரை எத்தனைபேர்மீது எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதனால்தான் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பல பேர் ஏற்கெனவே கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம் :** இப்படிப்பட்ட வழக்குகள் குறைவதற்கு அரசு கடுமையான தண்டனை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், இப்படிப்பட்டவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்படும் என்ற சட்டத்தை அரசு கொண்டுவருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கொலை செய்தவர்களுக்கே தூக்குத் தண்டனை இருக்கலாமா கூடாதா என்பது இன்று உலக அரங்கில் விவாதிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதற்கெல்லாம் தூக்குத் தண்டனை கொடுப்பது இயலாத காரியம். அதுபற்றி கேள்விகள் கேட்பதேகூட அவ்வளவு பொருத்தமுடையதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** போலி தபால் தலைகள்கூட அச்சடித்து விநியோகம் செய்வதாகக் கூறப்படுகிறது. அது அரசாங்கத்தின் கவனத்தில் வந்துள்ளதா? அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும். அல்லது காவலர் துறையினரின் கவனத்திற்கு வந்தாலும் நடவடிக்கை நிச்சயமாக எடுப்பார்கள்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** திருத்தணியில் பிடிபட்டவர்கள் எந்த ஊர்க்காரர்கள் என்பதை நான் அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒருவர் ஆவடியைச் சேர்ந்தவர்; இன்னொருவர் திருச்சியைச் சேர்ந்தவர்.

Dr. H. V. HANDE : May I know whether the Government has been able to seize the block-making and other apparatus which is being used by several persons who prepare fake notes?

[1972 ஏப்ரல் 6

May I know whether Government have taken the assistance of Central Government to find out particularly inter-State gangsters involved in this; and if so, the action taken thereupon and details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதிலே 'இன்டர்-ஸ்டேட் காங்ஸ்டர்ஸ்' இருக்கிறார்களா என்பதற்கு இந்தக் குறிப்பிட்ட வழக்கைப் பொறுத்த வரை எதுவும் இல்லை. இதைப் பொறுத்த வரையில் இது மிகச் சாதாரணமான, சிறிய அளவிலே செய்யப்பட்ட ஒரு மோசடியாகும். அவர்கள் இரண்டு உண்மையான ஐந்து ரூபாய் நோட்டுக்களிடையே வைத்திருந்தது 131 போலிக் காகிதங்கள். ஐந்து ரூபாய் என்று அச்சடிக்கப்பட்ட போலிக் காகிதங்கள் தான் இருந்திருக்கின்றன. 'இன்டர்-ஸ்டேட்' அளவில் நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவைப்படுகிற நேரத்தில் கோரப்படும்.

* 890. வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் கோவை திருப்பூரில் கள்ள நூறு ரூபாய் நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) 25—1—1972 அன்று கோவை மாவட்டம், திருப்பூரில் உள்ள இந்திய ஸ்டேட் வங்கியில் ஒருவர் ரூ. 25,000 செலுத்தியபோது அந்த வங்கியின் காசாளர், அந்த நபர் செலுத்திய ரூபாய் நோட்டுக்களில் ஒரு நூறு ரூபாய் கள்ள நோட்டிருப்பதைக் கண்டு பிடித்தார். திருப்பூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பின்னர், இவ் வழக்கு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பொதுவாகவே நம்முடைய தமிழகத்தில் பல இடங்களில் இம்மாதிரியாக கவுன்டர்பீட் நோட்டுகள் ஆங்காங்கு செய்வதாக செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆகவே, இந்த விஷயமாக பல ஆண்டுகளாக ஒரு பெரிய பிரச்சினை இருந்து கொண்டிருப்பதால், இது பொது மக்களை மிகப் பயங்கரமாகப் பாதிக்கக்கூடிய அளவில் வளரக்கூடிய ஒரு நிலைமை இருப்பதால் அரசாங்கம் இதுபற்றி பொதுவாகக் கடுமையான நடவடிக்கை எந்த அளவிற்கு எடுத்திருக்கிறது என்கிற விவரங்களை முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?



1972 ஏப்ரல் 6]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதில் குற்றங்களெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இதில் முந்தைய ஆண்டுகளை விட இப்பொழுது அதிக அளவில்கூட இந்தக் கள்ளநோட்டு வழக்குகளில் பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பல வழக்குகள் நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன. இதிலே இன்னும் கடுமையாக சட்டத்தைத் திருத்துகிற அளவுக்குத் தண்டனை அவர்களுக்கு அளிப்பதற்கு என்ன செய்யலாம் என்பதை வேண்டுமானால் அரசு யோசிக்கலாம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இப்படி கள்ளநோட்டு ரூபாய் அச்சடிப்பதில் சாதாரணமானவர்கள் ஈடுபடவில்லை. பெரும் பணக்காரர்கள் தான் ஈடுபடுகிறார்கள். சமீபத்தில் இப்படிப்பட்ட வழக்குகளில் சேலம் மாவட்டத்தில் உள்ள முன்னாள் அமைச்சர் ஒருவரின் மாமனார் திரு. ரத்தின வேல் கவுண்டர் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் வந்தன. அரசாங்கம் அதில் என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைப்பற்றிய தகவல் எதும் இல்லை.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இந்த கள்ள நோட்டுகள் எல்லாம், காகிதத்தில் நோட்டுகள் அச்சிடப்படுவதால், எல்லோரும் சுலபமாக அடித்து விடுகிறார்கள். ஆகவே, 100 ரூபாய், 1,000 ரூபாய் நோட்டுகளை அச்சடிப்பதற்குப் பதிலாக உலோகங்களில் அதாவது தங்கத்தில் அச்சடித்தால் இந்தப் பிரச்சனைகள் இருக்காது. அதைப் பரிசீலனை செய்ய மத்திய அரசை நமது மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 100 ரூபாய்களை எல்லாம் தங்கத்தில் வெளியிட்டால் பிறகு 10 ரூபாய் 1 ரூபாய் நோட்டுகளில், கள்ளநோட்டு அச்சிடத் தொடங்கி விடுவார்கள். ஆகவே இந்த முறை பிரச்சனைகளைத் தீர்ப்பதாகாது.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, கள்ளநோட்டு அச்சடிப்பவர்களை அரஸ்டு செய்து, ஜெயிலில் பி-கிளாசில் வைத்து நல்ல சௌகரியங்கள் செய்து கொடுக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் அவர்களுக்கு ஜெயிலில் கடுமையான வேலை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு இதுபற்றி பதில் சொல்லியிருக்கிறேன் இதிலே கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்தைத் திருத்துவதைப்பற்றி யோசனைச் செய்யலாம்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, கள்ளநோட்டுகளை அச்சடிப்பவர்களுக்கு இயந்திரமும் காகிதமும் எங்கே இருந்து வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த விபரங்களை அறிய உறுப்பினர் அவர்கள் ஏன் ஆர்வம் காட்டுகிறார் என்று தெரியவில்லை. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

### *Employees transferred from Travancore-Cochin*

* 891 Q.—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether all the conditions of service applicable prior to 1-11-1956 to Travancore-Cochin transferred personnel in respect of G.O. Ms. No. 2865, dated 21-12-1970 have been implemented; and

(*b*) whether promotions were given on strict seniority irrespective of age restriction?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) நிபந்தனைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(இ) விதிகளின்கீழ் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டன.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து சுமார் 16 ஆண்டுகள் ஆகியும், இதுவரையிலும் அரசு அலுவலில் இருந்தவர்களுக்கு சர்வீஸ் இணைப்பு பல இலாக்காக்களில் நடைபெறவில்லை. ஆகவே, இதற்குத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்து சரியான முறையில் சர்வீஸ் இணைப்பு அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லாத் துறைகளிலும் சேர்ந்து தமிழ்நாடு முழுவதும் 7,430 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 30 பேர் தலைமைச் செயலகத்தில் இருக்கிறார்கள். எல்லோருக்கும் தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வுகள் முறைப்படி அளிக்கப்பட்டு வருகின்றன. ஒருசில துறைகளில் மட்டும் பதவி உயர்வு அளிப்பது இன்னும் முடிவுபெறவில்லை. வேறு பிரச்சினைகள் இதில் அதிகமாக இல்லை.



### *Koilpatti Water Supply Schemes*

*892 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Tamil Nadu Water Supply and Drainage Board has purchased large quantities of Hume steel specials for the Kovilpatti Water Supply Scheme, during 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) மதுரை, தமிழ்நாடு நீர் வழங்கல்-வடிகால் வாரியத்தின் செயலாக்கப் பிரிவின் மேற்பார்வைப் பொறியாளர், 1971 டிசம்பரில் கோவில்பட்டி நீர் வழங்கு திட்டத்திற்குத் தேவைப்படும் ஹியூம் சிறப்பு உருக்குகளை வழங்குவதற்காக சென்னை, திருவாளர்கள் இந்தியன் ஹியூம் குழாய்கள் கம்பெனிக்கு பணி ஆணைகளை அனுப்பியுள்ளார். இக் குழாய்களின் மொத்த மதிப்பு ரூ. 2,33,300.

### மாலைநேரக் கல்லூரிகளில் பயிலும் அரிசன மாணவர்கள்

* 893 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாலைநேரக் கல்லூரியில் படிக்கும் பின்தங்கிய வகுப்பினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியவர்களுக்கு Tuition Fees-ல் சலுகை காட்டப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

### ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்

*** 894 வினா— திரு. வீ. கார்த்தீசன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது சம்பள கமிஷன் சிபாரிசின் பேரில் ஓய்வு பெற்ற என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்பட்ட ஓய்வு ஊதிய உயர்வு, ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆம். 1-6-1970 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ ஓய்வு பெற்ற அந்தக் கல்வி ஆண்டு 1970-71 முழுவதும் வேலை செய்த ஆசிரியர்களுக்கு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி மற்ற என்.ஜி.ஓ.-க்களைப் போல எல்லா ஓய்வு ஊதிய உயர்வும் அளிக்கப்பட்டுள்ளன.

1-6-1970-க்கும் 1-10-1970-க்கும் இடையில் ஓய்வு பெற்றவர்கள் இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்துள்ள உயர்தர சம்பளம் தவிர மற்ற எல்லாவிதமான ஓய்வு ஊதிய உயர்வும், இதர சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளனர்.

DR. H. V. HANDE : Sir, may I know whether the minimum pension which was increased to Rs. 40 per month to other persons will be applicable to the teachers also? If so, whether that will be given retrospective effect? May I know all the details?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பென்ஷன் தொகையை ரூ. 30-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தியிருக்கிறோம். அது எல்லாப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.

### ஆசிரியரல்லாத இதர ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

* 895 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத இதர ஊழியர்களுக்கும் ஓய்வு கால ஊதியமளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடமுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

### *Ambattur Township Washermen Association.*

* 896 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether any representation has been made to the Government by Ambattur Township Washermen Association during the last year for allotment of place to erect a statue of Mr. M. Ethirajulu, Ex. M.L.C., and leader of that Community in Tamil Nadu; and

(b) if so, the action Government has taken in this regard?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

### இருத்திபட்—மங்கசால் சாலை

* 897 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா மூனநாடு பொதுமக்களிடமிருந்து, இருத்திபட்-மங்கசால் பாதையை பெட்டல் பாலி தார் போடும்படி கோரி 25-5-71-ஆம் நாளிட்ட முறையீடு ஒன்று வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

### சைக்கிள் வரி ரத்து

* 898 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1-4-1972 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போன்று மாநிலம் முழுவதும் சைக்கிள் வரியைப் பாக்கக் கூடாது என்ற சட்டத்தை அரசாங்கம் எல்லா லோக்கல் பாடிகளுக்கும் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் அரசாங்கம் சைக்கிள் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க அவசியம் இல்லை. ஆங்காங்கே சைக்கிள் வரியை வசூல் செய்வதில் பெரிய நகராட்சிகளுக்கு பல சிரமங்கள் இருக்கின்றன. வரியை விட வரியை வசூலிப்பதற்கு செலவு அதிகமாகக் கூடிய நிலை ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளில் சைக்கிள் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பினால் அரசு அதற்கு அனுமதி அளிக்கிறது. பேரூராட்சிகள் இந்த வருமானத்தை இழக்க விரும்பவில்லை. ஆகவே, எந்தெந்த நகராட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்புகின்றனவோ அவைகளுக்கு மட்டும் அரசாங்கம் அனுமதி அளிக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியில் சைக்கிள் வரியை ரத்து செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதனால் அங்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

DR. H. V. HANDE : Sir, we get a number of complaints that cycles which are taken to Thiruvottiyur are taxed, but they are not taxed in Madras City. Will the Government see that cycles that are taken from Madras City to Thiruvottiyur are not caught by the police at the border and trouble given to cyclists avoided? Will Government give clear instructions that these cycles going from the City should be given relief and no harassment should be given to these cyclists?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைச் செய்ய முடியாது. சென்னை நகரில் சைக்கிள் வரி இல்லை என்று வைத்திருக்கிறார்கள். திருவொற்றியூரில் சைக்கிள் வரி வைத்திருக்கிறார்கள். எனவே, அங்கு செல்லக்கூடிய சைக்கிள்களுக்கு வரி வசூலிக்கிறார்கள். சட்டப்படி அவர்கள் வசூல் செய்யலாம். அதைத் தடுக்க முடியாது. ஆகவே, சென்னை நகரைவிட்டு திருவொற்றியூருக்குள் சைக்கிளில் செல்லக்கூடியவர்கள் லைசென்ஸ் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அங்கு போகக் கூடாது.

* 899 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரூராட்சிகளில் சைக்கிள் வரியை ரத்து செய்ய அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சைக்கிள் ஏழைகள் வாகனம். மதுரை போன்ற பெரிய நகரங்களில் சைக்கிள் வரி விதிப்புக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சைக்கிள் வரி விதிக்காமலிருக்கத் தீர்மானம் போட்டு அனுப்பினால் அனுமதி அளிக்கப்படும் என்றும் சொன்னார்கள். வந்தவாசி பேரூராட்சியில் சைக்கிள் வரி விதிப்புக்கு விலக்களிக்க வேண்டுமென்று பலமுறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும்,



அதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. சைக்கிள் ஏழைகளின் வாகனமாக இருப்பதால், இனிமேலாவது வந்தவாசி பேரூராட்சிக்கு வரி விதிப்பில் விலக்களிக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெரிய நகராட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த வரியை ரத்து செய்து தீர்மானம் போட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தால் அதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் இதுவரை வரி விலக்கு அளிக்கப்படவில்லை. பேரூராட்சிகளுக்கு இந்த வருமானம் இல்லாமல் சமாளிக்கக்கூடிய நிலை ஏற்படுமானால், அதற்குப் பின்னால் இம்மாதிரி தீர்மானம் போட்டு அனுப்பினால், அதுபற்றி பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, may I know whether it is possible for the Government to have at least some rule passed for the belt areas like Ambattur and Thiruvotriyur where thousands of cyclists are going from Madras daily. A number of representations have been given to me and I have passed them on to the Government. A lot of harassment is being made by the police constables there. Therefore, may I know whether it is possible for the Government to view this serious problem on a different footing and do something in the matter?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது அரசாங்கமே முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தக்கூடிய ஒன்று அல்ல. திருவொற்றியூருக்கு தினந்தோறும் போகிற சைக்கிள்களாக இருந்தால் அங்கு விதிக்கப்படுகிற வரியைக் கட்டி லைசென்சு பெற்றுத்தான் ஆக வேண்டும். சென்னையில் இருந்து போகும் வண்டிகளுக்கு வாங்காதீர்கள் என்பது லோகல் பீப்பிளோடு பாரபட்சம் காட்டுவதாக ஆகும். ஆகவே அந்த முனிசிபாலிட்டியில் வற்புறுத்தி அங்கும் அதை ரத்து செய்யத்தான் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. அ. தேவேந்திரன் : அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது சென்னை நகராட்சியில் தீர்மானம் போட்டு அதை ரத்து செய்திருக்கிறார்கள் என்றார். மாயூரம் நகராட்சி மன்றத்திலும் சைக்கிள், மாட்டு வண்டிகள் மீது போடப்படுகிற வரியை ரத்து செய்யவேண்டும் என்று கடந்த பல வருஷங்களாகவே தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பி வருகிறார்கள். அங்கும் அப்படி ரத்து செய்வதற்கு அரசு அனுமதி கொடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த அந்த நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் வரியை ரத்து செய்ய வேண்டும் என்கிற போது அதனால் இழப்பு ஏற்படக் கூடியதை சமாளித்துக் கொள்ளும் அளவுக்கு அவற்றுக்கு வருமானம் இருக்கிறதா என்பது தனியாகப் பரிசீலிக்கப்பட்டே நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண் 900 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். கேள்வி எண் 901.

### வணிக வரி மூலம் வருவாய்.

***901 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1956-57-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுக்கு வணிக வரி இலாகா மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(இ) 1971-72- அந்தத் துறை மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) 1956-57-ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு வணிக வரி இலாகா மூலம் கிடைத்த வருமானம் ரூ. 1,261.33 லட்சமாகும்.

(இ) 1971-72-ல் பிப்ரவரி திங்கள் 29-ம் நாள் முடிய அந்தத் துறை மூலம் கிடைத்த வருமானம் ரூ. 9,601.04 லட்சமாகும்.

DR. H. V. HANDE : Sir, do the Government think that this is a fabulously huge amount that they have collected, eight times the amount they collected in 1956-57, and if so, whether it is possible for them to see that the sales tax does not go on increasing at geometrical progression in the years to come and also whether it is possible for them to fix some sort of ceiling so that this particular source of revenue is not unduly tapped and persons are put to a lot of harassment?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். வருமான வரி இலாகா மக்களைக் கசக்கிப் பிழிவதனாலும், அதிகமான அளவுக்கு வரியை உயர்த்திக் கொண்டு போவதனாலும் இந்த வருமானம் உயரவில்லை. நாட்டில் உற்பத்தி பெருகி பலவகையிலும் மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரித்து, வியாபாரம் பெருகி இருப்பதன் காரணத்தினால்தான் வருமானம் பெருகியிருக்கிறது என்பது



ஒன்று. இரண்டாவது பல ஆண்டுகளாக விற்பனை வரி கட்டாமல் ஏய்த்துக் கொண்டிருந்தவர்களைக் கண்டு பிடித்து வரி வசூல் செய்வதனாலும் பெருகி இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** வணிக வரி இலாக்காவினர் 56-57-இல் செயல்பட்டதை விட வேகமாக எல்லாத் துறைகளிலும் கடுமையாக வரி வசூல் செய்கிற காரணத்தினால்தான் வரி பெருகியிருக்கிறது என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கண்டிப்பாக என்பது கூடச் சரியில்லை. வசூலாகாமல் இருக்கிற பாக்கிகள் அதிகமாக இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் அவற்றையும் சேகரித்துக் கொடுப்பேன். வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்து வசூலிப்பதனால் பெருகியிருக்கிறது. மற்றொன்று எல்லாத் துறைகளிலும் வியாபாரம் பெருகி வந்திருக்கிறது என்பதுதான் தாத்பர்யம்.

**திரு. கே. எ. வகாப் :** இப்படி 96 கோடி ரூபாய் பலமுனை வரி விதிப்பின் மூலம் வசூலாகி யிருக்கிறது என்று நினைக்கிறேன். பலமுனை வரியினால் பல விதமான தொல்லைகள் மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால்—வர்த்தகச் சமூகத்தினர் 100 கோடிக்குத் தரத் தயாராக இருந்தால் ஒரு முனை வரியாக விதிக்க அரசு முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதன் மூலம் 106 கோடி ரூபாய் வரும் என்று ஏற்கனவே கணக்கு எடுத்திருக்கிறோம். இந்த 96 கோடி ரூபாய் விற்பனை வரி மூலம் மட்டும் வந்ததாக எண்ணக் கூடாது. தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் 6,390 லட்சம். சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் 1,606 லட்சம். தமிழ்நாடு மோட்டார் ஸ்பிரிட் டாக்சேஷன் ஆக்ட் மூலம் 796 லட்சம். தமிழ்நாடு எண்டர்டெயின்மென்ட் ஆக்ட் மூலம் 442 லட்சம். தமிழ்நாடு லோக்கல் அத்தாரிட்டி பினான்ஸ் ஆக்ட் மூலம் 416 கோடி. தமிழ்நாடு பெட்டிங் டாக்ஸ் ஆக்ட் மூலம் 149 லட்சம். இவை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் 96 கோடி சொச்சம் ஆகும்.

### அரிசன மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள்.

***900 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அரிசன நலப் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம், சிலேட்டு கொடுக்க அரசு 1967-68-ம் ஆண்டிலும், 1971-72-ம் ஆண்டிலும் முறையே செலவழித்த தொகை எவ்வளவு?

[1972 ஏப்ரல் 6

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** குறிப்பிட்ட ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகைகள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1967—68 | .. | ரூ. 34,193.00 |
| 1971—72 | .. | ரூ. 41,660.00 |

**திரு. கோ. இளங்கோவன் :** அரிசனப் பிள்ளைகள் என்கிறபோது உயர்நிலைப் பள்ளிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் அரிசனப் பிள்ளைகளுக்கு சிலேட், புத்தகம் கொடுப்பதற்கு இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சிலேட், புத்தகங்கள் கொடுப்பதற்காக இல்லாவாரியாக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அந்த விவரம் என்னிடம் இல்லை தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆண்டுவாரியாகப் பார்த்தால் 67-68-இல் ரூ. 34,193. 68-69-இல் ரூ. 34,629. 69-70-இல் ரூ. 52,684. 70-71-ல் ரூ. 40,541, 71-72-ல் ரூ. 41,660 ஆகும்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, அரிசன நலப் பள்ளிகளில் நமது மாநிலத்தில் மொத்த மாணவர்கள் எத்தனை பேர் படிக்கிறார்கள் ? எத்தனை பேர்களுக்கு இலவசமாகப் புத்தகம், சிலேட்டு வழங்கப்பட்டிருக்கிறது ? அவைகள் எல்லாம் உரிய காலத்தில் வழங்கப்படுகிறதா ? மாணவர்களுடைய எண்ணிக்கையைவிட ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறதே ? அதனால் எல்லா மாணவர்களுக்கும் கொடுக்க முடியுமா ? ஆகவே, எல்லா அரிசன மாணவர்களுக்கும் கொடுக்க அரசு தக்க வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது, எத்தனை மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது என்கிற தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. அவைகள் எல்லாம் உரிய காலத்தில்தான் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு தொகை செலவிடப்படுகிறது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, இப்பொழுது வழங்கப்படுகிற சிலேட்டுகள் தரம் குறைந்திருக்கின்றன. ஒரு தடவை எழுதிவிட்டு, அதை அழித்து மறுபடியும் எழுத முடியாத நிலைமையில் சிலேட்டுகள் இருக்கின்றன.



1972 ஏப்ரல் 6]

அரசாங்கம் இதை சாதாரண விஷயமாக நினைக்கக் கூடாது. நாம் எவ்வளவோ செலவு செய்து மாணவர்களுக்கு சிலேட்டுகள் வழங்குகிறோம். அப்படி வழங்குகிற சிலேட்டுகள் நல்ல தரமுள்ளவையாக வழங்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** க்வாலிட்டி கன்ட்ரோலா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைத் தவிர வேறு எந்தவிதமான புகாரும் இதைப்பற்றி வரவில்லை. குறைபாடு இருந்தால் அரசு ஆராய்ந்து நல்ல தரமுள்ளவையாக இருப்பதை வழங்கும்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, அரிசன மாணவர்கள் எம்.பி.எஸ்.சி. போன்ற பரிட்சைகளை எழுதுவதற்காக பயிற்சி அளிப்பதற்காக நன்னிலம் போன்ற பகுதிகளில் ஒரு சென்டரை திறந்தார்கள். அதில் இருக்கும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய்தான் தருகிறார்கள். அந்த 20 ரூபாயை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மகஜர் அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி அந்த அளவை உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பான கேள்வி அல்ல. இருந்தாலும், 20 ரூபாய் என்று தருவது அங்கே தங்கிப் படிக்க அல்ல. தாலுகாவின் பல பகுதிகளிலிருந்து வந்து படிக்கின்ற மாணவர்களின் பஸ் செலவுகளுக்காகத்தான் இந்தத் தொகை அளிக்கப்படுகிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்படுகின்ற சிலேட்டுகள் சரியாக இல்லையென்கிற குறை சொல்லப்படுகிறது. அண்மைக் காலத்தில் மாஜிக் சிலேட்டுகள் வந்திருக்கிறது. ஒரு தடவை எழுதிவிட்டு, அதிலுள்ள பேப்பரை எடுத்துவிட்டால், நாம் எழுதியது அழிந்துவிடுகிறது. ஆகவே, அதனுடைய விலை சற்றுக் கூடுதலாக இருந்தாலும், அவைகளை வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, சிலேட் இருப்பதைப் போன்று எழுதிய எழுத்தும் அந்தமாதிரி அழிந்து போய்விட்டால் என்ன செய்வது (சிரிப்பு) நாம் மாஜிக்கை நம்பக் கூடாது.

## Additional Law Chambers in High Court.

* 902 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to construct additional Law Chambers Block in the High Court compound at Madras in the current year; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) உயர்நீதி மன்றத்தின் வழக்குரைஞர்களுக்கென்று கூடுதல் அறைகளைக் கட்டும் திட்டத்துக்கு அரசு ஒப்பளித்துள்ளது. இக் கட்டிடம் மூன்று மாடிகளைக் கொண்டதாக இருக்கும். கீழ்தளக் கட்டிடப் பணி 1971-72-ம் ஆண்டிலும் முதலாவது இரண்டாவது மாடிக் கட்டிடப் பணி 1972-73-லும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று உயர்நீதிமன்றம் பரிவுரை செய்துள்ளது. அரசு இப் பரிவுரையை ஏற்றுக் கொண்டு, இப் பணியைப் படிப்படியாக நிறைவேற்றுமாறு தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

Dr. H. V. HANDE: This has been pending for quite a number of years. May I know when exactly it will be completed? I am forced to argue on behalf of Advocates because many of them had complained to me. Even six years before they complained to me and even now the complaint is there and they do not have enough room. May I know whether it is possible (1) to expedite the construction and (2) whether it will be possible to give room for all Advocates who want to practice in the High Court. May I know whether facilities will be given to all Advocates or some sort of restriction will be there. May I know all the details?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, டாக்டர் அவர்கள் வழக்குரைஞர்களுக்காக வாதாடியதற்கு நன்றி. வழக்குரைஞர்கள் எல்லோருக்கும் இடம் கொடுக்க வாய்ப்பு இல்லை. புதிய திட்டத்தில் 9 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்ட டெண்டர்கள் கோரப்பட்டு, 27—8—1971-லே டெண்டர்களை யெல்லாம் அப்ரூவ் செய்திருக்கிறார்கள். விரைவிலே கட்டிடம் கட்டப்படும்.

**திரு. சொ. காவேரிமணியம்:** தலைவர் அவர்களே, மதுரையைப் பொறுத்த வரையில் நீதிமன்றத்திற்கு 35 லட்சம் ரூபாயில் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். ஆனால் வழக்குரைஞர்களுக்காக எந்தவிதமான சேம்பரும் இல்லை





என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணருவார்கள். ஆகவே, வழக்குரைஞர்களுக்காக ஏதாவது கட்டிடம் கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்போதைக்கு இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் இருக்கின்ற பிரச்சினை, எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. மாவட்ட நீதிமன்றங்களில் ப்ராக்டிஸ் செய்கின்ற வழக்குரைஞர்களுக்கு வசதியாக ஏதாவது கட்டிடம் கட்டித் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, மாவட்ட நீதிமன்றங்களில் பிராக்டிஸ் செய்கின்ற வழக்குரைஞர்களுக்கு ஒரு பெரிய ஹால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உயர்நீதிமன்றத்தில் இருப்பதுபோல தனி அறைகள் கட்டத் திட்டம் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் கட்டப் போவது மூன்று மாடிக் கட்டிடம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மூன்று மாடிகளிலும் ஒவ்வொரு சேம்பரிலும் எத்தனை அட்வகேட்டுகள் இருப்பதற்கு வசதியாக இருக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

Dr. H. V. HANDE: I think it will be dangerous if we do not have one advocate for one room. Then it will be very difficult for them to get along. May I know whether it is possible to give one small room for each Advocate? May I know whether rent is going to be charged? If so what is the programme? What is the amount which the Government think they would be able to collect as rent? The Hon. Minister said it will be completed at the end of the year. May I know how many advocates had applied and what will be the rent that will be charged and other details?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, 1973-ல் முழுவதும் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. எல்லா வழக்குரைஞர்களுக்கும் இடம் கொடுக்க வாய்ப்பு இல்லையென்று சொன்னேன். ஒரு அறையில் எல்லோரும் தங்குவதால் கஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னால் அம்மையார் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள்.

[1972 ஏப்ரல் 6

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, கட்டப்படுகின்ற அறைகள் எந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன ? ஒவ்வொரு அறைக்கும் ஒரு டெலிபோன் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் உயர்நீதிமன்றத்தின் நிர்வாகத்திற்கு விட்டுவிடுகிறோம். அவர்கள் முடிவு செய்வார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, வாடகை அதிகமாகக் கேட்கிறார்கள். அதை ரீஸனபிள் ஆக கேட்க ரீஸனபிள் ரென்ட் ஃபிக்ஸ் பண்ண அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இப்போதே குறைவாகத்தான் வசூலித்துக் கொண்டு வருகிறோம். அதை மேலும் குறைத்துவிடக் கூடாது.

MR. SPEAKER : Is the hon. Member getting reasonable fees?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sometimes lawyers do not even get reasonable fees.

MR. SPEAKER : I am asking the Hon. Lady Member.

### வேலைவாய்ப்பு நிலையங்கள்

***903 வினா—திரு. க. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட அளவில் வேலை தேடித் தரும் அமைப்புகளுக்கு அரசாங்கம் குழுக்களை நியமித்து அவைகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேலைவாய்ப்பு நிலையங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக ஏற்கனவே இரண்டு குழுக்கள் உள்ளன.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இப்போது வேலைத் தேடித் தரும் நிறுவனங்களில் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டால் ஒருவர் ஐந்தாண்டுக் காலம் அல்லது ஏழு ஆண்டுக் காலம் வரையில் வேலைக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. பதிவு செய்து கொண்ட



1972 ஏப்ரல் 6]

இளைஞர்கள் ஐந்தாண்டு, ஏழு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு வேலை கிடைக்கும் தருவாயில் 'ஓவர் ஏஜ்' என்று சொல்லி நிராகரிக்கப்படுகிறார்கள். ஆகவே, வேலை தேடித் தரும் நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டவர்களுக்கு 'ஓவர் ஏஜ்' லிருந்து எக்ஸம்ப்ஷன்—விதிவிலக்கு—அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலே பதிவு செய்து கொண்டவர்கள் 3 லட்சம் பேர்கள் என்றும், அதில் 41 ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார். 41 ஆயிரம் பேர்கள் போக பாக்கி பேருக்கு வேலை கிடைக்காமல், அவர்கள் அடிக்கடி எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் தங்கள் பெயர்களை புதுப்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. பொதுவாக வேலை கிடைத்தவுடன் அவர்கள் திரும்பவும் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சு ஆபீஸுக்குப் போகமாட்டார்கள். ஆகவே, வேலை கிடைக்காதவர்கள் பெயரை ஒரு தடவை ரிஜிஸ்டர் செய்து விட்டால், அவர்களே திரும்பவும் புதிப்பித்துக் கொள்ள—ரெனியூ—தக்க முயற்சிகளை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் மறு பதிவு செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படி வேண்டாமென்று சொல்லிவிட்டால், எங்கெங்கு வேலைவாய்ப்பு இருக்கிறதோ, அங்கே அவர்களை அனுப்ப வசதியில்லாமல் போய்விடலாம். ஆகவேதான் மறு பதிவு செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மறுபதிவு செய்துகொள்வதில் ஏதாவது சிக்கல்கள் இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, வேலைத் தேடித் தரும் நிறுவனங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டால் அவர்களுக்கு வேலை கிடைப்பதற்குக் குறைந்தது நான்காண்டுக் காலம் ஆகின்றது. ஒருவர் 22-வது வயதில் பெயரைப் பதிவு செய்து கொண்டால், நான்காண்டுக் காலம் கழித்து, வேலை கிடைக்கும் தருவாயில் அவருக்கு 26 வயதாகி விடுகிறது. வேலை கொடுக்கத் தயாராக இருப்பவர்கள்கூட, 'உனக்கு வயதாகிவிட்டது, 25 வயதுக்குள் இல்லை' என்று சொல்கின்ற நிலைமை இருக்கிறது. அப்படியிருந்தால் அவர்களுடைய நிலைமை என்ன ஆவது ? ஆகவே, பதிவு செய்து கொண்ட தேதியை கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு பதிவு செய்து கொண்ட தேதிதான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நிர்ணயம் செய்ய முன்வருமா ?

[1972 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறதென்பது உண்மை. அதை யாரும் மறுக்க முடியாது. இளைஞர்கள் நிறைய இருக்கும்போது, 'வயதானவர்கள்' என்று விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

DR. H. V. HANDE : The Hon. Minister said they have to renew once a year. But my information is, in most of the employment exchanges, they have to renew once in 3 months. May I know whether it is possible to give a blanket order that everyone could renew once a year? Then at least to that extent, the inconvenience for persons to come and renew once in three months, that will be got over?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எல்லா வேலைகளுக்கும் ஆண்டுதோறும் மறுபதிவு செய்தால் போதும் என்பதைப்பற்றி பரிசீலிக்கலாம். சிக்கல் இல்லாமல் இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம்.

**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது இரண்டு குழுக்கள் முன்னே அமைந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குழுக்கள் எங்கே இருக்கின்றன, மாவட்டந்தோறும் செல்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்றுதான் சொன்னேன்.

Special Committees to examine the employments by employment Exchanges and district Co-ordination for vocational guidance and Employment Council.

**திரு. பூ. எட்டியப்பன் : பேரவைத் தலைவரவர்களே,** மாவட்ட வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்பவர்களிலே, குடும்பத்திலே 4, 5 எக்கர் நிலம் இருந்து குத்தகைக்கு விட்டுவிட்டு யாராவது ஒருவர்கூட அங்கேயிருந்து வேலை செய்யாமல் எல்லோரும் மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பதிவு செய்கிறார்கள். அப்படிச் செய்யக் கூடாது என்று விதிகளை ஏற்பாடு செய்தால் மற்றவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஒரு குடும்பத்திலே இருப்பவர்கள் எல்லோரும் உத்தியோகம் செய்கிறார்கள், மற்றவர்களெல்லாம் வேறு வேலை செய்கிறார்கள் என்றால், அதை அரசு பரிசீலனை செய்து ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1972 ஏப்ரல் 6]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** யார் யார் அதற்குப் பதிவு செய்து கொள்வதற்கு 'குவாலிஃபைட்' பொருத்தமுடையவர்களோ, அவர்கள் பதிவு செய்யலாம். குடும்பத்தில் சிலர் வேலைகள் அல்லது வேறு தொழிலில் இருக்கிறார்கள் என்பதற்காகத் தடை செய்ய முடியாது.

**காஞ்சிபுரத்தில் கைவினைப் பொருள்கள் கூட்டுறவு விற்பனைக் கிளைச்சங்கம்**

***904 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சிபுரத்தில் 1970-ம் ஆண்டு, தமிழ்நாடு கைவினைப்பொருள்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கச் சார்பில் ஒரு கிளை விற்பனை நிலையம் தொடங்கப் பட்டதா ?

(இ) ஆம் எனில், அது லாபத்தில் நடக்கிறதா ? நஷ்டத்தில் நடக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) காஞ்சிபுரத்தில் 9-9-1969 அன்று தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் ஒரு கிளை விற்பனை நிலையம் துவங்கப்பட்டது.

(இ) இக் கிளை விற்பனை நிலையம் நட்டத்தில் நடந்தால் 6-8-1971 அன்று மூடப்பட்டது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இப்படி கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் சரியாக நிர்வகிக்கப்படாத காரணத்தால் நஷ்டத்தில் நடக்கின்றன. ஆகவே, விற்பனைக்குத் தகுந்தமுறையில் சரியானமுறையில் விற்பனை செய்யும் நபர்களை ஏற்படுத்துவதோடு இப்படி நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணங்கள் என்ன என்பதற்கு வியாபார நிபுணர் குழு வைத்து ஆராய்ச்சி செய்து கைவினைப் பொருள்கள் நசித்துப் போகாமல் பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விற்பனை ஆகாமல் இருப்பதற்கு ஆராய்ச்சி தேவையில்லை. நாட்டிலே சந்தை இல்லை என்பதை நாம் தெளிவாகக் கண்டுவிடலாம். ஆனாலும் இந்தக் கைவினைத் தொழிலாளர்களுக்கு புதிய வேலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நம்முடைய அரசாங்கம் புதிய திட்டத்தை, மாவட்டந்தோறும் எம்போரியம் அமைத்து அதன்மூலம் வெளி மாநிலங்களுக்கும், வெளி நாட்டிற்கும் விற்பனை செய்து கொடுப்பதற்கான புதிய முயற்சி பற்றி சிந்தித்து வருகிறோம்.

[1972 ஏப்ரல் 6

## நாகப்பட்டினத்திலுள்ள தொழில் பயிற்சிப் பள்ளி

*** 905 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்காவில் உள்ள இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் (I.T.I.) எந்த ஆண்டில் அமைக்கப் பட்டது ?

(இ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் அதில் பயிற்சி பெறும் மாணவர் களின் எண்ணிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) 1958-ஆம் ஆண்டில்.

(இ) முறையே 363, 376.

**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த நாகப்பட்டினத்தில் அமைந்திருக்கும் இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டியூட் போன்ற தொழில் பயிற்சிக் கூடங்களை மிகவும் பின்தங்கிய நன்னிலம் தாலுக்கா போன்ற தாலுக்காக்களில் அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுதிருக்கும் இந்த ஐ.டி.ஐ. யிலேயே ஏராளமாகப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 906 மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படு கிறது.

## காணுங்காட்டைச் சார்ந்த நிலங்கள்

*** 907 வினா.—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், காணுங்காடு, என்ற காடு 3,500 ஏக்கர் அளவுள்ள நிலத்தில் அரசு பண்ணை ஏற்படுத்தலாம் என்று மாவட்ட ஆட்சி யாளர் அரசுக்கு தெரிவித்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



1972 ஏப்ரல் 6]

**திரு. ந. நாச்சியப்பன் :** பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், மாவட்ட வனத்துறை அலுவலரும் இந்தக் காட்டுப் பகுதியைச் சுற்றிப் பார்த்து, வேளாண்மைப் பண்ணை வைக்க அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்புவதாகக் கூறிச் சென்றார்கள். அப்படி அனுப்பாமல் இருந்தால் அந்தக் காடு நல்ல நீர்வளமும் நிலவளமும் கொண்டிருப்பதாலும், அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதாலும் அந்தப் பகுதியி லிருக்கின்ற விவசாயக் கூலிகளுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே இந்தப் பகுதியில் அரசு விவசாயப் பண்ணை ஏற்படுத்துவதற்கு மீண்டும் புனராலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களால் கொடுக்கப்பட்ட அந்தக் கோரிக்கையை வன இலாக்கா அது பற்றிய திட்டம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். வருகின்ற ஆண்டிலே வன இலாக்கா அதிலே காட்டுப் பயிரிட ஏற்பாடு செய்ய ஓராண்டுத் திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள்.

## ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஜீப் கார்கள்

*** 908 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு I.A.D.P மூலம் ஜீப் கார்கள் வழங்கப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஆம்.

**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் கோடைக் காலங்களில் சாகு படி செய்யலாம் தஞ்சை மாவட்டத்தில் என்று அண்மையில் அறிவித்திருக்கி றார்கள். எனவே அதற்கேற்ப ஜீப் கார்கள் அதிகமாக அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, கோடை காலத்திற்கு என்று ஜீப் தேவை இல்லை. அந்த ஜீப் ஆண்டுபூராவும் ஓடிக் கொண்டிருக்கும் ஜீப்தான். ஆகவே கோடை காலத்திற்கு என்றும், இரண்டாம் போகத்திற்கு என்றும், முதல் போகத்திற்கு என்றும் விகிதாச் சாரம் தேவையில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த ஜீப்புகளை யார் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவரா அல்லது அக்ரிகல்சர் எக்ஸ் டன்ஷன் ஆபீசர் பயன்படுத்துகிறாரா ? யார் பயன்படுத்துகிறார்கள் ?

[1972 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் கையில் இருக்கிறது. எப்பொழுதெப்பொழுது விவசாயத்திற்குத் தேவை இருக்கிறதோ, அந்தந்தக் காலங்களிலே அதைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கும் பிறகு நெல் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டுகின்ற வடார்க்காடு மாவட்டத்திலே இப்படிப்பட்ட ஜீப்புகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தான் அந்த ஐ.ஏ.டி.பி. திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் வெளிநாட்டால் புகுத்தப்பட்ட திட்டம், தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் கிடைத்திருக்கிறது. அந்தப் பணத்தை வைத்துச் செய்கிறார்கள். நம் மாநில அரசு அந்தத் திட்டத்தை ஆரம்பிக்காத காரணத்தால் மற்ற மாவட்டங்களுக்குச் செய்ய முடியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்தத் தீவிர சாகுபடித் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் எண்ணம் உண்டா ? மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மற்ற மாவட்டங்களில் தீவிர சாகுபடித் திட்டம் மாநில அரசால், நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொருத்தவரையில் இது ஐ.ஏ.டி.பி. திட்டம்.

## கிராமப்புறங்களில் வீட்டு வசதிகள்

*** 909 வினா.—திரு. ஜி. ராமசாமி:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் வீட்டு வசதியைப் பெருக்க அரசாங்கம் ஏதாவது புதிய திட்டங்கள் அமைக்கவிருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அவை யாவை ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) இந்திய அரசு, கிராமப் புறங்களில் வீட்டு மனை இல்லாத தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்க ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 100 சதவீதம் மானியமாக, மாநில திட்ட வரம்பிற்குப் புறம்பாக மாநிலங்களுக்குச் சில நிபந்தனைகளின் கீழ் வழங்கும். இத் திட்டத்தை முதலில் தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்த, அதற்கான செயற்குறிப்பு ஒன்றை மத்திய அரசின் ஒப்புதலைப் பெற அனுப்பப்பட்டிருக்கிறது.



1972 ஏப்ரல் 6]

**திரு. ஜி. ராமசாமி:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இம்மாதிரி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை முதலில் அமல் செய்வதாகக் கூறினார்கள். மற்ற மாவட்டங்களில் எப்பொழுது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நமது அரசு தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் உடைமை உரிமைகள் வழங்கப் பெறுதல் சட்டம் 1971-ல் இயற்றியுள்ளது. அதன் மூலம் தஞ்சை மாவட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு மற்ற மாவட்டங்களுக்கு வரக்கூடும்.

**திரு. சி. கணேசன்:** தலைவரவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்தை மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டத் தலைநகரங்களிலும் அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இது கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தது. மாவட்டத் தலைநகரங்களும், வட்டத் தலைநகரங்களும் இதிலே வருவது இல்லை.

**திரு. என். இராஜாங்கம்:** போலவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இந்திய அரசால் நிர்வகிக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். மாநில அரசு வீட்டு மனை இல்லாத 100-க்கு 70 பேர் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைத் திட்டத்தில் மனைகளை வழங்குவதற்கு அரசுக்குத் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நம்முடைய அரசு ஏராளமான மக்களுக்கு பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றவர்கள் என்கிற முறையிலே இல்லாமல் வீட்டு மனையே இல்லாதவர்களுக்கு நிறைய வீட்டு மனைகள் வழங்கி வருவதை உறுப்பினர் அறிவார்கள். அந்த வகையில் அதிலே பெரும் சிக்கல் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், வெறும் வீட்டு மனைகளை வழங்குவதால் மட்டும் இந்தப் பிரச்னை தீராது. அவர்கள் வீடு கட்டுவதற்குக் கடன் உதவி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது அரசாங்கமே வீடு கட்டித் தருகின்ற முறையை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்து குறைந்த அளவில் 'ஹையர் பர்சேஸ்' திட்டத்தில் வழங்குவதற்குத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இப்பொழுது கிராம வீட்டு வசதித் திட்டத்தின்படி 3,000 ரூபாய் வீட்டிற்குக் கடன் தரப்படுகிறது, அது 80 சதவிகிதமாகக் கருதப்படுகிறது. மீதி 20 சதவிகிதத்தை அந்தக் கிராமத்திலுள்ள அவர்கள் சொந்தப் பணத்தின் மூலமோ அல்லது சொந்தப்

பொருள்கள் மூலமோ 4,000 ரூபாய் வருமானமுள்ள வீடு கட்டிக்கொள் வதற்கு ஆதரவிருக்கிறது. இந்தத் திட்டம் ஏறத்தாழ 210 கிராமங்களில் செயல்பட்டு வருகிறது.

திரு. என். ராஜாங்கம் : மனைகள் எந்தவிதத் தடங்கலுமின்றி கொடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். புறம்போக்கு மனைகளைக் கொடுத்து வருகிறார்கள். நான் அதைச் சொல்லவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் நூற்றுக்கு முப்பது பேர் இன்னும் வீட்டுமனை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கின்ற பகுதிகளிலே புறம்போக்கு அல்லாத நிலத்தையும் விலைக்கு வாங்கிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் மத்திய அரசு பிற்பட்ட சமுதாயம் என்ற நிலைமையில் இருக்கக்கூடிய வர்கள் வீட்டு மனையோ, குடிசையோ இல்லாது இருக்கும் தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் சலுகை வழங்கும் முறையில் திட்டத்தை வகுத்திருக்கிறது. அந்தத் திட்டத்தை முதலில் தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்துவதாக இருக்கிறோம். அதற்காக மாவட்ட வீட்டு வசதி வாரியத்தின் மூலம் திட்டங்கள் வகுக்கப்பட்டு 3,47,53,000 ரூபாய் நிதி உதவி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் வீட்டு மனைகளைக் கையகப்படுத்தவும், சீர்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு வீட்டு மனைக்கு 150 ரூபாய் அளவுக்குச் செலவு செய்யலாம் என்ற அளவு திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம் : சில நாட்களுக்கு முன்னால், நபர் ஒருவர் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீட்டு வசதி வாரியத்திடம் செலுத்தினால் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வீடு கட்டித் தருவதாக அரசாங்க அறிவிப்பு பத்திரிகையில் வந்தது. அதற்கும் இந்தத் திட்டத்திற்கும் சம்பந்தம் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நாளைக்கு ஒரு ரூபாய் சேமிப்பு மூலம் வீடு கட்டும் திட்டமானது நடுத்தர வருமானமுள்ளவர்களுக்காக நாலைந்து நகரப் புறங்களில் உருவாகியிருக்கும் திட்டம். இந்தக் கேள்வியைப் பொறுத்த வரை கிராமப் புற வீட்டு வசதித் திட்டமாகும்.

திரு. சோ. அழகர்சாமி : கிராமங்களில் வீடு கட்டுவதற்கு 3,000 ரூபாய் வரை கடன் அளிப்பதாகக் கூறினார்கள். 200 கிராமங்களில் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சர்க்கார் அலாட்மெண்டில் இருந்து அதிகமாகக் கடன் கிடைப்பதில்லை. நகரங்களில் வீடு அடமானக் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பது மாதிரி கிராமப் புறங்களிலும் வீடு அடமான கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து எல்.ஐ.சி. மூலம் லோன் பெற்றுக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. அதை வீட்டு வசதி வாரியத்தின் மூலம் செய்ய அரசு முன் வருமா ?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது இதற்காக 14.61 லட்சம் ரூபாய் கடன் கொடுக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இந்தத் தொகை போதாது என்ற காரணத்தால், கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் கூட்டுறவு அடமான வங்கிகளோடு இணைக்க ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Backward Classes that when the Government wish to extend the scheme to other districts, first preference will be given to the Dharmapuri district?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது இந்தத் திட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொல்லியது போல் விரைவாக அடுத்தடுத்த மாவட்டங்களில் கொண்டு வரும் போது தர்மபுரி மாவட்டமும் கவனிக்கப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : கிராமங்களில் பல கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு நிதி ஒதுக்கப்படாமல் இருப்பதால் வேலை செய்யாமல் இருக்கிறது. நிதி ஒதுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இப்போது இப்படிப்பட்ட வீடுகள் கட்டுவதற்கான முறையில் 1,515 கிராமங்களில் கடன் உதவிகள் கேட்டு விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு இந்தத் திட்டம் உருவாகும் நேரத்திலே அப்பேர்ப்பட்டவர்களுக்குக் கடன் உதவி செய்ய அரசு ஏற்பாடு செய்யும்.

DR. H. V. HANDE : Sir, are the Government aware that this particular method of giving loan may not succeed to the extent that the Government want to succeed. Is it not a fact that sometime ago there was a conference of State Ministers in charge of Housing convened by the Central Government and also whether it is not a fact that the Central Government had given a directive to all the State Governments to undertake a crash programme for the construction of houses in rural areas so that the flow of population from the rural to urban areas could be stopped to a certain extent. So, may I know whether it is

not possible for the State Government to undertake this crash programme and build some houses, as is done under the auspices of the State Housing Board and whether the Central Government are prepared to provide funds for that purpose?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** கிராமங்களில் இருப்பவர்கள் நகரங்களுக்கு வந்துவிடுவதைத் தடுக்கும் முறையில் கிராமங்களில் நல்ல வீடுகள் கட்டக் கூடாதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இது சம்பந்தமாக மே மாதத்தில் ஒரு மாநாடு நடைபெற இருக்கிறது. மத்திய அரசு அமைச்சர்களும், பொருளாதார நிபுணர்களும், மற்றவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். இதற்கான திட்டத்தைத் தீட்டுவதற்காக மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து ஒரு மாநாட்டை மே மாதம் 4, 5, 6 தேதிகளில் உதகையில் கூட்டுவதாக இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கிராமப் புறங்களில் ஏழைகள் வீடு இல்லாமல் இருப்பவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் மானியமாகத் தருகிறது. அந்த நிலையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரு பகுதி என்று எடுத்துக் கொள்ளாமல் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அம்மாதிரி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை மாற்றி எல்லா மாவட்டத்திலும் பரவலாக இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மத்திய அரசு இப்போது ஒரு மாவட்டத்திற்குத்தான் உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள். ஆகவே, ஏதாவது ஒரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நிலையில் தஞ்சை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** பிற்பட்டோருக்கும் அரிசனங்களுக்கும் வீடு கட்டும் அடிப்படையில் மத்திய சர்க்கார் ரிவால்விங் பண்ட் என்று 200 கோடி ரூபாய்க்கு மேல் இருப்பதாகவும், கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் அதைப் பயன்படுத்தி நிதி பெற்று இருக்கிறார்கள் என்றும், சொல்லப்படுகிறது. அதேபோல் நம்முடைய சர்க்காரும் நிதி பெற முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ரிவால்விங் பண்டிலிருந்து வீட்டு வசதி வாரியம் நிதி பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, when the Central Government are giving in grants for the construction of houses in rural areas, where is the question of loans to the people who are constructing houses. It should be passed on to the concerned





as a grant and the question of 80 per cent loan and 20 per cent grant does not arise. May I ask the Hon. Minister to clarify the position?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மத்திய அரசு நிலத்தைக் கையகப்படுத்தவும், மேம்படுத்தவும், வடிக்கால் போன்றவற்றை அமைக்கவும் தான் பணம் தருகிறதே தவிர, வீடு கட்டப் பணம் தருவதில்லை. ஆகவேதான் வீடு கட்டக் கடன் தருகிறோம். அதை மாநில அரசு செய்கிறது. நான் ஏற்கனவே சொன்னது போல் ஒவ்வொரு மனைக்கும் 150 ரூபாய் வரை செலவு செய்து 100 சதுர கஜம் வரை இலவசமாக வீட்டு மனை வழங்கும் முறையில் திட்டம் செயல்படுகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** வீட்டு வசதி வாரியத்திற்காக மத்திய அரசு நிறுவி இருக்கிற ஹட்கோவில் இருந்து ஏதாவது தொகை கடந்த ஆண்டு வந்திருக்கிறதா? வீட்டு வசதி வாரியத்திற்கும், குடிசை மாற்று வாரியத்திற்கும் அப்படி ஏதாவது கடன் தொகை வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஒவ்வொரு ஆண்டும் ஹட்கோவில் இருந்து நிதி உதவி பெறப்படுகிறது. எந்த அளவு என்ற சரியான குறிப்புகள் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குடிசை மாற்று வாரியத்திற்கு மத்திய அரசிடமிருந்து எந்தவித உதவியும் வரவில்லை, ஏதோ உதவி அளித்திருப்பதாக மத்திய அரசு அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையில் வந்த செய்தி தவறானது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, are the Government aware that the sum of Rs. 3,000 for putting up a house would be very insufficient. Even to build up a small house it now costs Rs. 8,000. So, may I know whether the Government will increase the amount of loan to those who are likely to put up houses in the rural areas?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நாலாயிரம் ரூபாயில் லீப்ளஸ் அவுட், பாத் ரூமோடு அழகான வீடுகள் கிராமப் புறங்களில் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கிராமப் புறங்களுக்குப் போகும் போது பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். கிராமப் புறங்களுக்கு 8,000 ரூபாய் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**திரு. கு. அ. பொம்மன் :** நாலாயிரம் ரூபாயில் கிராமப் புறங்களில் வீடு கட்டலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மலைப் பிரதேசமாக இருக்கும் மாவட்டங்களில் நாலாயிரம் ரூபாயில் வீடு கட்ட முடியாது. ஆகவே, மலைப் பிரதேசமாக இருக்கும் மாவட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மலைப் பிரதேசங்களைப் பற்றிச் சரிவர ஆராய்ச்சி செய்யவில்லை. சமீபத்தில் அந்தப் பகுதிகளுக்குப் போக இருக்கிறேன். போய்ப் பார்த்துவிட்டு வந்த பிறகு அதைபற்றி முடிவை அறிவிக்கிறேன்.

### ஊராட்சிகளில் மின் கட்டண வசூல்

* 910 வினா.—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளில், மின் எரிச்செலவை Plate Rate முறைப்படி வசூலிப்பதை நிறுத்தி மீட்டர் முறையில் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அண்மையில் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

### ஜீப் பேருந்துகள்

* 911 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜீப் பஸ்கள் விடுவதில் அரசு மேற்கொள்ளும் நடைமுறைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சாலைகளின் சீர்கேடான நிலையினால் எந்தெந்த பகுதிகளில் முறையான பேருந்துகள் விட இயலவில்லையோ, அப் பகுதிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் அளிக்க பொதுமக்கள் கோரிக்கைகள் இருப்பின் அத்தகைய வழித்தடங்களில் ஜீப் பேருந்துகள் விட வட்டார போக்குவரத்து அதிகாரிகளால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** இதற்கு முன்னால் சில இடங்களில் இப்படி ஜீப் பஸ்கள் விடப்பட்டன. அவை சரியாக ஓடவில்லை என்று இப்போது பலவிடங்களில் அவற்றை நிறுத்தி விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே மீண்டும் அந்தத் திட்டத்தை அமல் படுத்துவதினால் ஏதாவது பிரச்னை தீருமா ? அல்லது ரோடுகளைச் செம்மைப்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கிட்டதட்ட 1961-ம் ஆண்டில் இருந்து இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டாலும்கூட 14 ஜீப் பேருந்துகள் இதுவரையில் ஓடுவதாக தகவல் இருக்கிறது. மேலும் 14 வந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை சரிவர ஓட்ட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக மோட்டார் வாகன வரியில் கூட பாதியைக் குறைத்துத் தருகிறோம்.

இருந்தும், அதிகச் செலவு காரணமாக அல்லது ஜீப் வைத்து 13 சீட்ஸ் உள்ள பேருந்துகளை ஓட்டுவதன் காரணமாகவோ இந்தத் திட்டம் அவ்வளவு மனநிறைவோடு நடைபெறவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அண்மையில்கூட மோட்டார் வாகன உபரி வரியாக 10 சதவிதம் அளவில் போட்டிருக்கிறோம். அதை வைத்து சாலைகள் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமானால் மினி பஸ்கள் விடுவதுபற்றி யோசிப்பதுதான் நல்லது.

**திரு. அ. தேவேந்திரன் :** அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது ஜீப் சர்விஸை ஊக்குவித்தாலும்கூட இதுவரை 14 வழிதடங்களில்தான் ஓடுவதாகக் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட ஜீப் பஸ்கள் விட வேண்டுமென்று மாவட்ட டி.டி.ஸி. கவுன்ஸில்களிலும், ஆர்.டி.ஓ. போன்ற அதிகாரிகளிடமும் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியுங்கூட அதுபற்றி நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்களே இப்படிப்பட்ட ஜீப் பஸ்களை ஓட்ட வேண்டுமென்று கோரிக்கைகள் வந்துள்ளனவா என்று கேட்டறிந்து அந்த வழித் தடங்களில் ஜீப் பஸ்களை ஓட்டவிடுவதற்கு உத்தரவிட ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலோ அல்லது சட்டசபை உறுப்பினர்களோ இப்படிப்பட்ட பஸ்களை ஓட்ட வேண்டும் என்று சொல்வதில் கஷ்டமில்லை. அந்தப் பஸ்களை வாங்கி ஓட்டுகிறவர்களுக்குத்தான் கஷ்டமிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Minister Mentioned that they have got a proposal to introduce mini-buses? What is its seating capacity, what is the width of the chassis? I think the width of the chassis is 8 feet 1 inch? How can it

be applied on roads whose width is narrower than 8 feet? What is the capacity of that mini bus? Have the Government got all the particulars?

THE HON. THIRU S. RAMACHANDRAN: I suggested mini bus as an alternative to the jeep bus because the operation of jeep buses for the last ten years has not been satisfactory. What type of mini bus can be attempted is yet to be considered in consultation with manufacturers as well as Highways Department.

**திரு. அ. தேவேந்திரன் :** அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது 'சொல்வதில் கஷ்டமில்லை, யாரும் வாங்கி அப்படி ஓட்டுவதற்குத்தான் முன்வரவில்லை' என்று சொன்னார்கள். பலவிடங்களில் நஷ்டம் வந்தாலும் பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டு அரசாங்கமே ஏற்று நடத்துகிறது. அதேபோல் அரசுத் துறையில் இந்த ஜீப் சர்வீஸ்களையும் நடத்துவதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கு ஆதாயம் தருகிற யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது இப்போது நல்லது.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்த ஜீப் பஸ்களுக்குப் பதில் மினி பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் ஜீப் பஸ்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கின்றனவோ—பாதி வரி என்ற சலுகை அளிப்பது பற்றிச் சொன்னார்கள்—அதே வசதிகளை அல்லது சலுகைகளை மினிபஸ்களுக்கும் அரசு அளிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா? அப்படி வரும்போது ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கார்ப்பரேஷன்கள் மினிபஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மினிபஸ்களுக்கும் என்னென்ன சலுகைகள் கொடுப்பது என்பதுபற்றி இப்போதே உறுப்பினர் அவர்கள் அறிவிக்குமாறு கேட்டிருக்கிறார்கள். இன்னும் அந்தத் திட்டம் நடைமுறையில் வரவில்லை. அப்படிச் செய்யலாமா என்ற யோசனை தான் இருக்கிறது. குழந்தை பிறப்பதற்கு முன்னாலே என்ன பெயர் வைப்பது என்பதைப்பற்றி இப்போது யோசிக்கத் தேவையில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த ரோடுகள் மிகக் குறுகலாக இருப்பதால் ஜீப் பஸ்கள் விடவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்ளிகேஷன்ஸ் கால் ஃபார் செய்யும்போது யார் ரோடு போட்டுக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு





பெர்மிட் கொடுக்கப்படும் என்றால் பஸ் ஆப்ரேட்டர்களே ரோடுகள் போட்டுக் கொள்ள முன்வருவார்கள். அந்தத் திட்டத்தையாவது, இந்த குறுகிய சாலைகளைப் பொறுத்தவரையிலாவது, அரசாங்கம் ஏற்பதற்கு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ரோடுகள் குறுகலாக இருப்பதால்தான் இந்த ஜீப் பஸ்களை அவர்களால் நடத்த முடியவில்லை என்று பொருள் அல்ல. ஜீப் பஸ்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. ஜீப் பஸ்களின் விலையும் அதிகமாக இருக்கிறது. அதிலே இருக்கிற இருக்கையில் எண்ணிக்கையும் 13 தான். ஆகவே இதை வைத்துக்கொண்டு அவர்களால் ஓட்ட முடியவில்லை. சாலைகளை மேம்பாடு அடையச் செய்து பெரிய பேருந்துகளை அனுப்பினாலும் அவர்களுக்கு நிறைவான அளவிற்கு பயணிகள் அதில் ஏறுவது இல்லை என்ற குறையும் இருந்துவருகிறது. ஆகவே இதற்கிடையில் ஏதாவது நாம் சிறிய பேருந்துகளை வைத்து இந்தக் கிராமப்புறங்களில் இருக்கிற பயணிகளுக்கு வசதிகள் ஏதாவது செய்வதுபற்றி யோசிக்கலாம் என்ற கருத்தை அடிப்படையாக வைத்திருக்கிறோம்.

## *Madurai Meenakshi temple.*

* 912 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether it is a fact that Meenakshi temple at Madurai was awarded a Silver Cup on 12-9-1971 having adjudged the cleanest temple in the four Southern Districts; and

(*b*) if so, the details thereof and the steps taken to improve the cleanliness of other temples in the State?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு துணை மற்றும் உதவி ஆணையர்கள் கோட்டத்திலிருந்து சுத்தமாக வைத்துக்கொள்ளப்படுகிற கோயில் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு சுழற்கோப்பை ஒன்றும் (பெரியது) நிரந்தர கோப்பை ஒன்றும் (சிறியது) பரிசளிக்கப்படுகிறது. மதுரை துணை ஆணையர் கோட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 1969-ம் ஆண்டில் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்ட கோவில் என தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான பரிசுக் கோப்பைகள் 12—9—1971 அன்று வழங்கப்பட்டன. கோயில்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு இதுபோன்ற பரிசுகள் ஊக்கமூட்டுபவைகளாக அமையும் என்ற நோக்கத்துடன்தான் அது செய்யப்படுகிறது.

DR. H. V. HANDE: This is a very important matter. The hygienic conditions prevalent in most of the temples, the cleanliness, is far from satisfactory. Especially the temple tanks have to be kept clean. May I know whether it is possible for Government to have an expert in hygiene to inspect all the temple tanks and see that there is perfect cleanliness. Here the example of many churches can be taken, how they go all out to make the surroundings so clean. Will it be possible for Government to effect such cleanliness in all our temples and tanks?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஒவ்வொரு துணை ஆணையாளருடைய கோட்டத்திற்கும் உட்பட்ட அந்தப் பகுதியிலுள்ள எல்லாக் கோவில்களையும் பரிசீலனை செய்துதான் இந்தப் பரிசு அளிக்கிறோம். பரிசு கொடுப்பது மட்டுமல்லாமல் தூய்மையாக வைத்திருக்கிற ஆலயங்களுக்கு நற்சான்றிதழ்களும் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அறநிலையத் துறை அதிகாரிகள் மூலம் பார்வையிட்டுச் செய்கிறோம். மேலும் ஆலயங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும் வகையில் அறநிலையத் துறை ஆணையாளர் அவர்கள் அவ்வப்போது அறிவுரைகள் நல்கியும் வருகிறார்கள். கோவில்களில் உள்ள கோபுரங்கள் அல்லது மண்டபச் சுவர்கள் இவற்றிலுள்ள செடி கொடிகளை எல்லாம் நீக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

**திரு. சொ. காவேரிமணியம்:** இவ்வாறு சுத்தமாக வைத்திருக்கக்கூடிய தனிக் கோவில்களுக்குப் பரிசு அளிப்பது என்பதைக் காட்டிலும் ஒரு தேவஸ்தானத்திற்குப் பரிசு அளிக்கப்படும் என்று வைத்தால், அதற்கு உட்பட்ட பல கோவில்கள் சுத்தமாக, தூய்மையாக வைக்கப்படலாம். தனிக் கோவில் என்றால் அந்தத் தேவஸ்தானத்தில் உள்ள மற்ற ஆலயங்களைவிட்டுவிட்டு ஒரு கோவிலை மட்டும் சுத்தமாக வைத்து வருகிறார்கள். ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** உறுப்பினர் அவர்கள் திருப்பரங்குன்றத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலோடு திருப்பரங்குன்றத்தையும் சேர்த்துத்தான் அவர்கள் தூய்மையாக வைத்திருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: I am glad the Hon. Minister replied that some steps are being taken to get these things clean. May I know whether it is possible for Government to include in that Committee an expert in hygiene. Many of these tanks, know, are source of infection. It is not at all hygienic. Even in Tirupathi temple, (though it is not Tamil Nadu), in the tank there, the issue of cleanliness was raised. May I know whether it is not possible for Government to take a serious view of the matter because in our temple tanks, number of people have to take bath and sa such they have got to be kept clean. Will the Hon. Minister give a categorical assurance that no shops will be ever run inside a temple disturbing the worshippers. Will the Hon. Minister answer these questions?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, தூய்மையாக வைத்துக்கொள்வதற்காக ஒரு நிபுணரை அமைத்தால் நலமாக இருக்கும் என்ற யோசனையை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே சென்ற ஆண்டில் நடைபெற்ற அட்வைசரி போர்டு கூட்டத்தில் இதுபற்றி நாம் முடிவு செய்து இருக்கிறோம். ஒவ்வொரு துணை ஆணையர் கோட்டத்திலும் ஒவ்வொரு ஆலோசனைக் குழு அமைக்கவேண்டுமென்று முடிவு எடுத்து இருக்கிறோம். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கடைகளைப்பற்றிச் சொன்னார்கள். மதுரைக் கோவிலை அவர்கள் பார்த்து இருப்பார்கள். உள்ளே கடை வைப்பதை விட வெளியே கடை வைப்பது தூய்மை என்பதை உணர்ந்து இருக்கிறோம். இராமேஸ்வரம் கோவிலில் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. நம்முடைய பழங்கால சிற்பங்கள் அழிக்கப்பட்டுவிட்டது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். வெளியில் கடை வைப்பது சாத்தியம் இல்லை, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது என்று வரும்போது அந்தக் கடைகளை வேறு இடத்திற்கு மாற்றுவது என்பதைப்பற்றி யோசனை செய்து கொண்டு வருகிறோம். கோவிலைச் சுற்றி கடைகட்டுவது என்ற நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. கோவிலுக்குள்ளேயே கடையை வைத்துக்கொண்டு அந்தக் கோவிலைப் பாழ்படுத்திக் கொண்டு இருப்பதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இப்படி கோவில்களைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு அதிகமாக சிப்பந்திகள் தேவைப்படுகிறார்கள். சிப்பந்திகளுக்குக் கோவிலில் கொடுக்கும் சம்பளம் குறைவு. ஒவ்வொரு கோவிலுக்கும் எவ்வளவு விசிட்டர்கள் வருவார்கள் என்பதை ஆராய்ந்து, நிர்ணயம் செய்து, அந்தந்தக் கோயில்களுக்குக் குறைந்தபட்சம் இவ்வளவு சிப்பந்திகள் இருக்கவேண்டுமென்று ஏற்படுத்தி, அதன்மூலம் அந்தக் கோவில்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

[1972 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு கோவிலுக்கும் தேவையான அளவுக்கு சிப்பந்திகள் வைத்து இருக்கிறோம். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் பிரச்சனை வேறு. தூய்மையாக வைத்துக்கொள்வதற்கும், சம்பளம் நிர்ணயம் செய்வதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, சுத்தமாக வைத்துக்கொள்ளும் கோவிலுக்குப் பரிசு கொடுப்பதாக அரசாங்கம் திட்டம் வைத்து இருக்கிறது. அப்படியானால் பெரும்பாலான கோவில்கள் அசுத்தமாக இருக்கின்றன என்ற அடிப்படையில் அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அந்த நோக்கத்தில் அந்தத் திட்டம் கொண்டு வரப்படவில்லை. எல்லாக் கோவில்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ள ஊக்கமளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அது கொண்டுவரப் பட்டது. ஒரு கோவில் தூய்மையாக இருக்கிறது என்று சொன்னால், மற்ற கோவில்கள் தூய்மையற்றவை என்று பொருள் அல்ல.

**திரு. என். கணபதி :** பேரவைத் தலைவரவர்களே, சாதாரணமாக சர்ச்சுகளிலே, மசூதிகளிலே அசுத்தம் அதிகமாக இருப்பது இல்லை என்பதற்குக் காரணம் அங்கே கற்பூரம் கொளுத்துவது இல்லை, வாழைப்பழத் தோல் போடுவது இல்லை, தேங்காய் ஓடுகள், தேங்காய் நார் இவற்றைப் போடுவது இல்லை. இவற்றை போடுவதால் தான் அசுத்தம் ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட வாழைப்பழம், கற்பூரம் கொளுத்துவது போன்றவற்றை ஒரு வரம்பு வரை தான் பயன்படுத்தலாம் என்று ஒரு வரைமுறை கொண்டு வர அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, தேங்காய் பழம் வைத்து பூஜை செய்வதால், அசுத்தம் ஏற்படும் என்று நாம் கருதவில்லை. இப்படிப்பட்ட யோசனைகளை கோவிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கு—கோவிலைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும்—அவர்களுக்குச் சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## (2) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/72).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்சவரம்பு வரையறுத்தல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவை பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/72.)

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker, Sir, I beg to move that the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 members (24 Members from the Assembly and 12 Members from the Council) to consider the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill 1972 * (L.A. Bill No. 19 of 1972) and that the following members of this House be selected to serve on such a Joint Select Committee. Names of Members will be furnished later.

Under Section 73 (ii) of the (Tamil Nadu Land Reforms Fixation of Ceiling on Land) Act, 1961, the ceiling limit will not apply to any land held by—

(a) any charitable or educational institution of a public nature;

(b) any trust;

(c) any University constituted by any law.

* published in the *Tamil Nadu Government Gazette* extraordinary, dated 3rd April 1972.

According to Section 3(49) "Trust" means trust for a public purpose of a religious or charitable or of an educational nature and any temple, math, moseque, church or other place, by whatever name known which is dedicated to or for the benefit of or used as of right by any community or section thereof as a place of public religious worship. Section 2 of the Act says that nothing contained in the Act shall apply to lands held by religious trusts of a public nature.

In the budget speech presented on the 1st March 1972, the Chief Minister announced that all exemptions in favour of trusts created after the 26th January 1950, the date on which our Constitution came into force would be withdrawn except for a limited extent to be allowed for trusts for educational purposes and medical facilities.

The Government have examined the matter further. They have decided that lands held by religious institutions as patta lands should be continued to be exempted from the Land Ceiling Act. They have also decided that 'trust' as such need not continue to be exempted whether such 'trust' is created before or after the 26th January 1950. However, the Government have examined the requirements of various colleges, High Schools and Hospitals in the State. After taking all relevant aspects into consideration, they have decided that in the case of Colleges, which are mentioned in Part I of Schedule I of the Bill, the ceiling area shall be 60 standard acres. In the case of High Schools which are mentioned in Part II of Schedule I of the Bill, the ceiling area shall be 20 standard acres. In the case of hospitals mentioned in part III of Schedule I of the Bill, the ceiling area shall be the extent of land held by such hospitals as on the 1st March 1972. These hospitals cannot acquire in future any land in excess of the land already held by them on the 1st March 1972.

The Bill seeks to achieve the above objects.

As this is an important measure relating to land reforms, the Government have decided to refer the Bill to a Joint Select Committee of Legislators of both the Houses for detailed scrutiny.

I commend the motion for referring the Bill to a Joint Select Committee for the acceptance of the House.





இக்குழுவின் அங்கத்தினர்களாக, கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் பணியாற்றுவர் :—

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. கே. எம்., சுப்பிரமணியம்.

திரு. மணலி சி. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி.

திரு. எம். ஏ. லத்தீப்.

திரு. கு. அ. பொம்மன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

திரு. டி. இராசரத்தினம்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்.

திரு. பொன் சொக்கலிங்கம்.

திரு. கோ. இளங்கோவன்.

திரு. எஸ். நல்லசாமி.

திரு. வி. பழனிவேலு.

டாக்டர் எஸ். ஏ. சின்னராசு.

திரு. ஆலடி அருணா.

திரு. ஆ. முனியாண்டி.

திரு. ஏ. ஆர். சுப்பையா.

திரு. எல். கணேசன்.

திரு. மு. இராமன்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்.

திரு. கு. காமாட்சி.

திரு. மு. பழனிவேலன்.

திரு. இரா. மாணிக்கவாசகம்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா கொண்டுவந்ததின் நோக்கம் எவ்வாறு இருந்தாலும் இந்த டிரஸ்டுகள் எடுப்பது என்பது மிகவும் ஆதரவு கொடுக்கக்கூடியது. ஏனென்றால் இந்தக் கட்சி,

திராவிடக் கழகம், ஆரம்பக் காலத்திலிருந்தே மடங்களைப்பற்றியும் ஜமீன்தார்களைப்பற்றியும் அவர்கள் செய்யும் ஊழல்களைப்பற்றியும், ஜனங்கள் மத்தியில் ஒரு பெரிய ஆகர்ஷனம் இருந்தது. இன்றைய தினம் அவர்கள் அரசாட்சிக்கு வந்த காரணத்தால் இந்த மசோதாவைக் கொண்டுவந்து இருக்கிருர்கள். இது ஒரு பகுதி தான். அது முழுமையாக இல்லை. மடங்களையும் கோவில்களையும் விதிவிலக்குச் செய்ததானது சரியல்ல. 1950-ம் வருஷத்திற்கு பின்னுல் ஏற்பட்ட டிரஸ்டுகள்மட்டும் பாதிக்குமே ஒழிய அதற்கு முன்னுல் ஏற்பட்ட டிரஸ்டுகள் பாதிக்காது என்று சொல்லியிருக்கிருர்கள். 1950-ம் வருஷத்திற்கு முன்பு ஏற்பட்ட டிரஸ்டுகளையும் எடுத்துக் கொள்வதற்கு அரசியல் சட்டத்தில் பண்டமெண்டல் ரைட்ஸ் பிரகாரம் . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் தந்த அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் அப்படி அறிவித்திருந்தாலும், அதற்கு முன்னுல் ஏற்பட்ட டிரஸ்டுகளையும் சேர்த்து இந்த சட்டம் கொண்டு வரப்படும் என்று நானே சொல்லியிருக்கிறேன். கொண்டு வந்ததைக் கொண்டுவரப்படவில்லை என்று அவர்கள் சொல்ல வேண்டாம்.

**திரு. என். கே. பழனிசாமி:** கோவில்கள், மடங்கள், இன்னும் இம்மாதிரி இருக்கக்கூடிய ஹெரிடிடரி டிரஸ்டுகள் ஆகியவற்றைப்பற்றியும் செலக்ட் கமிட்டி விவாதித்துப் பரிசீலனைசெய்து, தகுந்த மாதிரி மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே ஹிந்து ரிலிஜியஸ் எண்டௌமெண்டு ஆக்டின்படி மடங்களுக்கு ஒரு அதிகாரி போட்டு, அந்த மடங்களிலெல்லாம் சரியானபடி பூஜை நடக்கிறதா, அந்தப் பணத்தை எவ்வாறு செலவு செய்கிருர்கள் என்று பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஏற்கெனவே செய்துகொண்டிருந்தவர்கள், இம்மாதிரி எடுக்கப் போகிருேம் என்று சொன்னுல், அவர்கள் 'நாங்கள் தனியாக ஆட்கள் போட்டிருக்கிருேம், அதைப்பற்றிப் பரிசீலனை செய்கிருேம், ஏற்கனவே காங்கிரஸ் ஆண்ட காலத்தில் அதற்காக அதிகாரிகளைப் போட்டிருந்தார்கள், அந்த மடங்களில் சரியாக நிர்வாகம் நடக்கிறதா, இல்லையா என்று பார்ப்பதற்கு, அதே முறை கண்டினியூ ஆகிறது என்று' சொல்லலாம். மடங்களை எடுத்துக் கொண்டால் தர்மபுரம் ஆதீனம் தமிழ் வளர்ச்சிக்காக ஏற்பட்டது. அதற்கு 60,000 ஏக்கர்களுக்கு மேல் இருக்கிறது. அந்த மடம் தமிழுக்காக என்ன செய்திருக்கிறது? வருஷத்திற்கு ஒரு முறை ஒரு கூட்டம் நடத்தி, சில பேர்கள் கூடி ஏதோ முடிவு செய்கிருர்களேதவிர, தமிழ் வளர்ச்சிக்காக அந்த மடம் என்ன செய்கிறது? தர்மபுரி ஆதீனத்தைச் சேர்ந்த பூமிகளைத்தவிர, அவர்கள் பல கோவில்களை எடுத்திருக்கிருர்கள்.





அந்தக் கோவில்களுக்குச் சேர்ந்த பூமிகள் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அந்தக் கோவில்களிலெல்லாம் யாரும் போக முடியாத மிகவும் மோசமான நிலை. வருடத்திற்கு ஒரு தடவை ஏதோ திருவிழா நடைபெறுகிறபோதுதான் மக்கள் போகிருர்கள். பாக்கி சமயங்களில் யாரும் அங்கே போவதில்லை.

ஆகவே, இம்மாதிரி ஏராளமான பூமிகளைச் சில பேர்கள் கையில் வைத்துக் கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம் என்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல. சென்டிமெண்டல் அப்ஜெக்ஷன். சில பேர்கள் அப்படி மதத்தின் பெயராலும், சமயத்தின் பெயராலும் மக்களைச் சுரண்டுவதை எதிர்த்து வந்திருக்கக்கூடிய நமக்கு சென்டிமெண்டல் அப்ஜெக்ஷன் இருக்கிறது. அதிகப்படியான வருமானம் வராமல் போனுலும், சென்டிமெண்டல் அப்ஜெக்ஷன், அதாவது ராஜ மானியத்தை ரத்து செய்வதற்கு நமக்கு எல்லா ஜனங்களும் எப்படி ஆதரவு கொடுத்தார்களோ, அந்த முறையிலே மதத்தின் பெயராலும், சமயத்தின் பெயராலும் சுரண்டுவதை நாம் எதிர்க்கிருேம்.

அதுமட்டுமல்ல, திருவாடுதுறை ஆதினம் தமிழ் வளர்ச்சிக்காக என்ன செய்திருக்கிறது. முன்பெல்லாம் ரயில் வசதி கிடையாது. முன்பெல்லாம் அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் அடமானம் வைத்து விட்டு, காசிக்குப் போய் திரும்பி வந்து வாங்கிக்கொள்கிருேம் என்று இராமேசுவரத்திலிருந்து காசிக்குப் போய்விடுவார்கள். அம்மாதிரி அதிகமான பூமி ஒரு மடத்திற்கு சேர்ந்திருக்கிறது. சமயத்தை வளர்ப்பதற்கு என்று அந்த மடம் இருக்கிறது. என்ன சமயத்தை வளர்த்தார்கள்? அதேமாதிரி சங்கராச்சாரியார் மடம் இருக்கிறது. இந்து மதத்தை வளர்ப்பதற்காக அந்த மடம் இருக்கிறது. எந்த அடிப்படையில் இந்து மதத்தை வளர்த்திருக்கிருர்கள்? அது மாத்திரமல்ல. மைசூரில் இருக்கக்கூடிய மடங்களுக்கு இங்கே பூமிகள் இருக்கின்றன. இந்தியா பூராவும் எடுத்துக்கொண்டால், தமிழ் மாநிலத்தில்தான் கோவில்களைச் சேர்ந்த பூமிகள் ஏராளமாக இருக்கின்றன. 41½ லட்சம் ஏக்கரா இருக்கிறது. சரியாக ஒழுங்காக பூஜை நடக்கிறதா, பரம்பரையாக நடக்கிற பூஜையா? ஜனங்கள் அதில் அதிகம் பேர்கள் கலந்து கொள்கிருர்களா? என்ற விஷயங்கள் இருந்தாலும், இந்த பூமிகளைத் திருத்தி அதிகமான உணவு உற்பத்தி பண்ணக்கூடிய முயற்சிகளில் ஈடுபடுகிருர்களா என்ருல், இல்லை. சர்க்காரே கோவில்களுக்குச் சேர்ந்த பூமிகளை எடுத்துக்கொண்டு, பல கோவில்களுக்குக் கொடுக்கக்கூடிய தஸ்திக் ஈமவுண்டு போல் இந்தக் கோயில்களுக்கும் கொடுக்க முடியும்.

மேலும், பிரைவேட் டிரஸ்டுகள் என்று ஒரு குடும்பத்தினரே பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு டிரஸ்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது பரம்பரையாகக் கடைசி மட்டும் அவர்கள் கையிலேயே இருக்கிறது. தகப்பன், தகப்பனுக்குப் பின்னால் மகன், இப்படிப் பரம்பரையாகவே அந்தக் குடும்பத்தினர் கையிலேயேதான் அந்தச் சொத்துக்கள் இருக்கின்றன. பிரைவேட் டிரஸ்டு என்று சொல்லிவிட்டு, தங்கள் சொந்தக்காரர்களையே இரண்டு பேர்களைப் போட்டுக்கொண்டு அதே ஆட்கள் அந்தசொத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். ரூ. 10,000 20,000, 60,000 என்று வருமானம் வரக்கூடிய சொத்துக்களெல்லாம் ஹெரிடிடரி டிரஸ்டி என்ற பெயரால் வைத்துக்கொண்டு, இம்மாதிரிக் கோவில்கள் நடத்தப் படும் முறையைப் பரிசீலனை செய்து, அம்மாதிரி டிரஸ்டுகளையும் இந்த எக்ஸெம்ப்ஷனிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்குப் பாராட்டுகிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இம்மாதிரிச் சட்டத்தைக் கொண்டுவருகிறபொழுது, இந்த சட்டத்திலிருந்து தப்புவது என்றே பல பேர்கள் பல காரியங்களைச் செய்து தப்பிவிடுகிறார்கள். அம்மாதிரி நில சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டவர்களையெல்லாம், இன்றைக்கு அந்தச் சட்டத்திற்கு உட்படுத்திக் கொண்டுவரும் இந்த மசோதாவை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். அநேகம் பேர்கள் டிரஸ்டு என்ற பெயரால் தங்களுடைய சொத்துக்களையெல்லாம் மாற்றி வைத்துக்கொண்டு, அந்த டிரஸ்டு மூலமாக எந்தக் காரியங்களையும் செய்யாமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இம்மாதிரியான தவறான செய்கையை இவ்வளவு நாட்கள் நீடித்து வைத்து இருந்தாலும்கூட, இன்றையதினம் இந்த மசோதாவைக் கொண்டுவந்து, அந்தச் சொத்துக்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதற்கு எடுக்கப் பட்டிருக்கும் முயற்சி பாராட்டத்தக்கது.

நாட்டில் இருக்கிற மதசார்பிலுள்ள, கடவுள் நம்பிக்கையுள்ள மக்களுடைய எண்ணங்கள் நமக்கு எதிராக இருக்குமோ என்ற காரணத்தினால், மடங்கள், கோவில்கள், மாதாகோவில்கள், பள்ளிவாசல்கள் ஆகியவைகளுக்குச் சொந்தமான சொத்துக்களையெல்லாம் நாம் இன்றைக்கு விட்டுவைத்திருக் கிறோம். அந்தச் சொத்துக்களையெல்லாம் நாம் எடுத்து உழுகின்றவர்களுக்குச் சொந்தமாகச் செய்வோமானால், ஏழை விவசாயிகளுக்குப் பயனாக இருக்கும். ஜனநாயகப் பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு மக்கள் எப்படிக் கருதுகிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு சிந்திக்கவேண்டிய அவசியம்



ருக்கிறது. கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் நமக்கு எதிராகப் போய் டுவார்களோ என்று அரசாங்கம் எண்ணுவது ஒரு வகையில் சரிதான். ருந்தாலும் கோவில்கள் இருக்கக்கூடாது என்று நாம் கூறுவது கிடையாது, காவில்களில் பூஜை நடக்கக்கூடாது என்று நாம் கூறுவது கிடையாது. தற்கான திருவிழாக்களை நடத்தக்கூடாது என்று நாம் கூறுவது கிடையாது.

ஆனால், அதற்கெல்லாம் நிலச் சொத்து தேவையில்லை என்று நாம் கூறு றோமே தவிர, கடவுள் வழிபாட்டிற்குக் குறுக்காக நாம் இருப்பது கிடையாது. தை மக்களிடையே தெளிவுபடுத்திவிட்டால், கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள், டம், கோவில்கள் இவைகளுக்குச் சொந்தமான சொத்துக்களை எடுத்துக் காள்ளச் சட்டம் கொண்டுவருகிறபொழுது நிச்சயம் நமக்கு உறுதுணையாக ருப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. ஆகையினால், நம்முடைய ண்ணம் எல்லாம் நில உற்பத்திக்குத் தடங்கலாக எந்த உரிமையும், நில ரிமையும் இருக்கக்கூடாது என்பதேதவிர, கோவில்களுக்குச் சொத்து இருக்கக்கூடாது, வழிபாடுகள் இருக்கக்கூடாது என்பது அல்ல நமது றிக்கோள். அதை வைத்துப் பார்க்கிறபொழுது, கோவில்களுக்கு மடங் ளுக்குச் சொந்தமான நிலங்களை எடுக்கிறபொழுது, அதற்கு காம்பென் சேஷன் கொடுத்து, திருவிழாக்கள், பூஜைகள், வழிபாடுகள் இதெல்லாம் முறையாக நடைபெறுவதற்கு, இன்றைக்கு எப்படி நடைபெறுகிறதோ அம்மாதிரியாகவே தொடர்ந்து நடைபெறுவதற்கு எல்லா வழிவகைகளையும் ஏற்பாடு செய்துவிட்டு, அந்தச் சொத்துக்களை எடுத்துப் பிரித்து உழவர் களுக்குக் கொடுப்பதில் தவறு கிடையாது. அம்மாதிரி நாம் செய்கிறோம் என்று மக்களிடையே அறிவிப்புச் செய்து, மக்களிடையே சொல்லி, அந்த சொத்துக் களுக்கெல்லாம் உச்சவரம்பு கட்டி, உச்ச வரம்புச் சட்டத்திற்கு உட்படுத்தினால், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அது ரொம்ப அனுசரணையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், மூன்றில் ஒரு பகுதி மடங் களுக்கும், கோவில்களுக்கும் சொந்தமான நிலங்கள். அம்மாதிரி நிலங்களில் சாகுபடி செய்கிறவர்கள் புதிதாக முதலீடு செய்ய முடியாது. பம்பு செட்டுகள் போடவேண்டும், போர் வெல்கள் போடவேண்டும் என்றால் எப்படிக் கோவில் நிலங்களில் போடுவது? என்ன செய்வது? அதற்கு வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கோவில் உடைமை என்று இருப்பது நமக்குத் தடங்கலாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களை அபிவிருத்தி செய்வதில், ரொம்பச் சங்கடம் இருக்கிறது. நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி அபிவிருத்திக்காக இந்தக் காரியங்களை நாம் செய்தாகவேண்டும்.

ஆகவே, கடவுள் நம்பிக்கையுள்ளவர்களுக்கெல்லாம் அந்த நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கும்போது, கோவில் பூஜைகள் எல்லாம் நிச்சயமாக நிற்காது, இன்றைக்கு நடக்கும் எல்லா காரியங்களும் தொடர்ந்து நடக்கும் என்று உறுதிமொழி கொடுத்து, அதற்கான சட்டத்தைச் சீக்கிரமே கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, having known that the Bill is going to be referred to a Select Committee, I did not want to speak on this Bill. But after hearing the speeches of two hon. Members, I am compelled to speak a few words on this important subject. I am one with the hon. Member, Thiru Marimuthu, when he says that land reforms should cover all lands whether it belongs to temples or mosques or churches, irrespective of religious denominations. But based on that excuse, the purpose for which religious institutions are created should not suffer as they are suffering in some other States because of hasty reforms. I think there was even a fast by the members of the Dewasom Board in some State.

In this connection, I would suggest that the Government can constitute an autonomous body which can take over all the lands belonging to various religious institutions and pay cash or some form of compensation, which can be deposited in fixed deposits of banks. If that is done there would not be any mismanagement of temple lands or properties. To-day, we know many people are anxious to get into temple committees because of the properties that are there and there is a lot of corruption there and I am not going to prove it today. But I know a house which would fetch a rent of Rs. 300 is let out for Rs. 25 and such things are happening in the year of grace, 1972. I leave it at that.

Then, the hon. Member, Thiru Palaniswami has stated that there are huge properties of temples. Sir, there are also a large number of temples in Tamil Nadu and this is the only State where there are such a large number of temples. There is no comparison between our temples and those temples in U.P. and the Punjab. So naturally temple properties are very huge in our State. But no religious person will object to these properties being taken and compensation being paid for them. As the





amount will be under the Hindu Religious and Charitable Endowments Board, it cannot be misused. It has been stated that an institution that has been created for the improvement of Tamil is not being so but that the money is diverted for some other purpose. But it is the duty of the Board to see that it is not diverted for other purposes.

Then the hon. Member mentioned about Sankaracharya Mutt. I can tell him because, I am fairly connected with that Mutt, that although the income of the Mutt is Rs. 3,73,000..............

MR. SPEAKER: The hon. Member can discuss this matter in the Select Committee. . . . .

THIRU K. M. SUBRAMANIAM: Yes, I will discuss it there.

**திரு. இராம. அரங்கண்ணல்:** பொதுவாகவே நம்முடைய சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில் பொறுக்குக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் மன்றத்தில் இந்த விதமாகக் கருத்துக்களை வலியுறுத்திப் பேசுவதில்லை என்ற பழக்கம் இருந்து வருகிறது. ஆனால் நண்பர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பொறுக்குக் குழுவில் இருப்பதாகக் கருதுகிறேன். அவர் தொடர்ந்து பேசுவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, it is not a point of order. It is a point of convention.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** That is my job பொதுவாக அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள் அப்படி ஒரு பழக்கம் இருந்து வருகிறது என்று. பழக்கம் நாளுக்கு நாள் மாறக்கூடியது. பொதுவாக இங்கே இருந்து வருகிற பழக்கம், பொறுக்குக் குழுவில் இருப்பவர்கள் இந்த விவாதத்தில் பங்கு கொள்வதில்லை. அத்துடன் நிறைய மசோதாக்கள் இருக்கின்றன. அதை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைக்கவேண்டும். என்னைப் பொறுத்தவரை ஆட்சேபணையில்லை, நாளைய தினம் சட்ட மன்றம் வைத்துக்கொள்வதாக இருந்தாலும்; ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களின் உற்சாகம் அந்த அளவு அமையவேண்டும். அங்கு உங்களுக்கு வாய்ப்பிருக்கும் காரணத்தால் சுருக்கமாக முடித்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** பொறுக்குக் குழுவில் இருப்பவர்கள் விவாதிக்கக் கூடாது என்று சொல்வது, செலக்ட் கமிட்டியின் முடிவு வந்த பிறகு அதற்கு பின்னல் பொது விவாதத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று இருக்கிறதேதவிர, செலக்ட் கமிட்டிக்குப் போகும் முன்பு விவாதிக்க வேண்டாம் என்று எங்குமே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதிக்கவேண்டாம் என்று எங்கேயும் சொல்லவில்லை பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால், நீங்கள் சொன்னதும் 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' அல்ல; நண்பர் அரங்கநன்னால் சொன்னதும் 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' அல்ல.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, out of the income of Rs. 3,73,000, more than Rs. 2½ lakhs are personal gifts sent to Thiru Sankarachariyar and for his personality and not derived out of the estate holding. That point should also be borne in mind. This is only to clarify some doubt raised by the hon. Member. Thank you, Sir.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத் திருத்த மசோதாவில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய கனம் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். 'கடவுளுக்கு எதற்காகச் சொத்து, நிலம்? அதற்குச் சொத்து தேவை கிடையாது. அதைப் பிரித்துக் கொடுக்கலாம். சொத்துக்களைப் பிரித்துக் கொடுப்பதால் திருவிழா நடக்காதா? பூஜை நடக்காதா?'' என்று கேள்வி கேட்டார்கள். கோயிலுக்கு வருமானம் இருந்தால்தான் திருவிழா நடக்கும், பூஜை நடக்கும். வருவாய் இல்லையென்றால் எதுவுமே நடக்கப் போவதில்லை கடவுள் பேரால் பட்டா இருப்பதால் அங்கே இருப்பவர்களுக்கு என்ன சங்கடங்கள் இருக்கின்றன என்று புரியவில்லை. உற்பத்தி குறைகிறதா? கடவுளா உற்பத்தியைத் தடுக்கிறார்? அறங்காவலர்கள் சரியில்லை என்றால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அதற்கு நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமேதவிர, ஏதோ கடவுளே, உற்பத்தி செய்யாதே; நீ உற்பத்தி செய்தால் எனக்குப் பிடிக்காது; ஆகையினால் தடுப்பது நான்தான் என்ற பாணியில் கனம் மாரிமுத்து அவர்கள் பேசுவதைப் பார்த்தால் விந்தையாக இருக்கிறது.

அங்கே 'போர் வெல்' போடணுமா? கிணறு வெட்டவேண்டுமா? சட்டத்தைத் திருத்திக் கொள்ளுங்கள். கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்தி கடவுள், மட சொத்துக்களில் உழைத்துக் கொண்டிருப்பவர்கள் அதிக நாள் 'டெனன்ட்சாக' இருந்தால் விதிவிலக்குக் கொடுத்து கடன் கொடுப்போம் என்று சட்டத்தைத் திருத்திக் கொள்ளட்டுமே. நிர்வாகத்தில் சட்டத்தைத் திருத்தும்போது, சொத்துக்களை எதற்காகக் கொடுத்தார்களோ கடவுள் வழிபாடு நடத்துவார்கள் என்று சொத்தை ஆண்டவனுக்கு எழுதி வைத்தார்களோ அது நடைபெற வேண்டும். நீண்ட நாள் 'கல்டிவேட்டிங் டென்ண்ட்ஸ்' இடத்தில் ஒப்படையுங்கள். அறங்காவலர்களுக்கு உத்தரவு போடுங்கள்.



ஒழுங்காக குத்தகை அளந்தால் அவர்களை மாற்றக்கூடாது. பர்மனெண்ட் டெனண்ட்ஸாக இருப்பவர்கள் கோயிலில் இருப்பவர்களுக்கு ஒழுங்காகக் குத் தகை அளந்தால் அவர்களை மாற்றக் கூடாது என்று போடுங்கள். இப்போது கடவுள் சொத்து என்றால் எது செய்தாலும் கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது . . . . .

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அம்மையார் அவர்கள் இவ்வளவு பிற்போக் கான கருத்தை எப்படிக் கொண்டார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. காலம் வளர்ந்து கொண்டிருக்கிறது. குத்தகை. . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** Sir, I take strong objection to the word. 'பிற்போக்கு'. அவர்கள் எண்ணத்தில் எது முற்போக்கு என்று கருதுகிறாரோ அது எனக்கு பிற்போக்காத் தோன்றுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் பிற்போக்குமில்லை ஒன்றுமில்லை. நீங்கள் முற்போக்குக் கருத்து என்று சொல்கிறீர்கள், பழைய காங்கிரஸ் என்று பெயர் வைத்துக்கொண்டு. வார்த்தைகள் எப்படியானாலும் செயலில் தான் இருக்கவேண்டுமேதவிர, வார்த்தையில் ஒன்றுமில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நாங்கள் சொல்வது, யார் நிலத்தை உழு கின்றாரோ அவனுக்கு முழுப் பலனும் கிடைக்கவேண்டும். நிலம் தனிப் பட்டவர்களுக்கு இருந்தாலும்சரி, அல்லது கோவிலுக்கு இருந்தாலும்சரி, யார் உண்மையாகக் கஷ்டப்படுகிறார்களோ அவர்கள் அதன் பலனைப் பெற வேண்டும். இதுதான் எங்கள் கருத்து. நிலத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையே யாரும் இருக்கக்கூடாது. கோவில் நிலங்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு, அந்த நிலத்திலே உழைக்கின்றவர்களுக்கு, உழுபவர் களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும். ஆலயங்களுக்கு நிலம் தேவையில்லை. இதுதான் எங்கள் கருத்து; அதுதான் முற்போக்கான கருத்து என்று நிபுணர்கள் பலரும் சொல்கிறார்கள்.

MR. SPEAKER : I am afraid the hon. Member Thiru A. R. Marimuthu is making a second speech.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கடவுள் பெயரில் இருக்கக்கூடிய நிலங்களை எல்லாம் எடுத்துவிட்டால் பூஜை நடப்பது எப்படி என்று கேட்டார்கள். கோவில் பூஜை ஒழுங்காக நடைபெறுவதற்கும், மற்ற வழிபாட்டு முறைகளுக் கும் தேவைப்படுகின்ற அளவுக்கு, காம்பன்சேஷனைக் கொடுத்தால் போதும்.

அம்மையார் அவர்கள் அது கூடாது என்றும் குத்தகை கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள். அது பிற்போக்கான கருத்து.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தனி மனிதனுக்கு என்று குத்தகை செலுத்திக்கொண்டே இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. கோவில் நிலத்தைப் பயிர் செய்கின்றவர்கள், ஒழுங்காகக் கோவில் நிலத்திற்குக் குத்தகை செலுத்தி வந்தால் அவர்களை வெளியேற்றக்கூடாது; அந்த நிலத்தை அவர்களே பெர்மனெண்டாக வைத்துக்கொள்ளலாம் என்ற வகையில் சட்டத்தை வேண்டுமானால் திருத்திக்கொள்ளலாமே. தனி நபரிடம் இருக்கக்கூடிய நிலத்தை வேண்டுமானால் எடுத்துக்கொள்ளட்டும். அதை விட்டுவிட்டு, கோவில் நிலத்தை அரசாங்கம் எடுத்து, பகிர்ந்து கொடுத்துவிட்டு, கோவில் செலவுகளுக்கு காம்பன்சேஷன் கொடுப்பதற்குப் பதிலாக கோவில் பெயரிலேயே நிலத்தை வைத்துவிட்டு, பயிரிடுகின்றவர்களை பெர்மனென்ட் டெனன்ட்ஸ் என்று வைத்து, வருமானத்தில் ஒரு பகுதியைக் கோவிலுக்குக் கொடுப்பதில் தவறில்லை. அது பிற்போக்கான கருத்து' அல்ல. பல இடங்களில் கோவில் நிலங்களிலிருந்து ஒழுங்காகக் குத்தகை வசூலிக்க முடியாமல் இருக்கிறது; குத்தகை செலுத்தாமலேயே இருந்து வருகிறார்கள். கோவில் நிர்வாகம் சரியாக இருந்தால் ஏன் ஒழுங்காகக் குத்தகை கிடைக்காமல் இருக்கிறது? ஒழுங்காக வசூல் செய்வதற்குள்ள திறமை கோவில் நிர்வாகத்தினருக்கு இல்லாததுதான் இதற்குக் காரணம்.

கம்யூனிசவாதிகள் சொல்வதெல்லாம் முற்போக்கான கருத்து என்று சொல்லமுடியாது. இங்கே உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கம்யூனிச நாடாகிய ரஷியாவிலேகூட உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று இல்லையே; உழைப்பவன் பலனைத்தான் பெற முடிகிறது. அப்படி இருக்கும்போது இங்கேமட்டும் எப்படி உழுகின்றவனுக்கே நிலத்தை சொந்தமாக்கவேண்டுமென்று கூற முடியும்? (திரு. மணலி சி. கந்தசாமி அவர்கள் உள்ளே வருகிறார்கள். பலர் 'ஐயா வந்தாச்சு' என்று சொல்கிறார்கள்). ஐயா வந்தாலும் இப்போது மைக் கொடுக்க முடியாது. ஆகையால் இந்தச் சட்டத்தை நன்கு யோசித்துச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அம்மையார் அவர்கள் பேசுகின்ற போது அறநிலையத்துறை சரியாக இல்லாத காரணத்தால் குத்தகை வசூல் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். 1967-க்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு வசூல் பாக்கி இருந்தது? இப்போது பாக்கி எவ்



வளவு, வருமானம் எவ்வளவு என்ற புள்ளி விபரங்களை வைத்துக்கொண்டு அப்படிச் சொல்லுகிறார்களா அல்லது வேண்டுமென்றே அப்படிச் சொல்கிறார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் எல்லாம் சேர்த்துத்தான் சொல்கிறேன். அவர்கள் செய்தார்கள், இவர்கள் செய்யவில்லை என்று சொல்லவில்லை, அதே நேரத்தில் தனி நபர்களாக இருந்தால் பாக்கியில்லாமல் கூடுமானவரையிலும் வசூலித்துவிடுகிறார்கள். அறநிலையத் துறையிலும் இப்போது முன்னைவிட நல்லமுறையில் வசூல் செய்கிறார்கள். பல கோவில் நிலங்கள் எங்கே இருக்கின்றன என்றேகூடத் தெரியாமல் இருந்தன. ஆனால் இப்போது தனி அதிகாரிகளைப் போட்டு, அவைகளையெல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து வருவதையும் நான் அறிவேன். இன்னும் அதில் தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக அமைச்சரவர்களே சொல்லியிருக்கிறார்கள். இருப்பினும் கோவில் நிலங்களை எடுத்துவிட்டு, காம்பன்சேஷன் கொடுப்பது என்பது முற் போக்கான கருத்து என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அரசாங்கம் அதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதால்தான் இன்றைக்குப் பலர் தங்கள் நிலங்களைக் கோயில்களுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். இன்னும் கல்வி டிரஸ்ட், ஆஸ்பிட்டல் டிரஸ்ட் இவைகளுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். சமுதாய நன்மைக்காக அது பயன்படுகிறது. அதை அரசாங்கம் தடை செய் வதால் சமுதாயத்திற்குத்தான் பாதிப்பு ஏற்படும். அதற்குப் பதிலாக அவர் களிடம் சொத்துக்களை 'உங்கள் பெயரால் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு, ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்குக் கொடுங்கள்' என்று தட்டிக் கொடுத்து அந்த நிலங்களை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் அவர்களும் மனம் நோகாமல் தாராளமாகக் கொடுப்பார்கள்.

இப்போது சவுக்கு வைப்பதற்கு உச்சவரம்பிலிருந்து விதிவிலக்குக் கொடுக் கப்பட்டிருக்கிறது. அதைப்போலத் தோப்புகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்துவிடலாம்.

கோவில் டிரஸ்டுகள் ஒழுங்காக நடைபெறவில்லை என்றால், எங்காவது ஊழல் நடைபெறுகிறது என்றால், அதைக் கண்காணிக்க அரசாங்க அதிகாரி களைப் போட்டுக்கொள்ளலாம். சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து கொள்ளலாம். புதிய டிரஸ்டிகளை நியமிக்கலாம். அதைக் கண்காணிக்கின்ற வகையில் ஒவ்வொரு டிரஸ்டியும் நான்கு எம்.எல்.ஏ.-க்களைப் போடலாம்.

அப்படிச் செய்து நிர்வாகத்தை நடத்தினால் அது புரட்சிகரமானதாகும். கோவில் நிலங்களை எடுத்துவிட்டு, அதற்கு காம்பன்சேஷன் கொடுப்பது புரட்சிகரமானதாகாது.

அதேமாதிரியாக, தனி நபர்கள் தங்கள் நிலத்தைக் கல்வி நிறுவனங்களுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும் எழுதி வைப்பதைத் தடைசெய்யக்கூடாது. சமுதாய நன்மையைக் கருதி அதற்குத் தடை விதிக்கக்கூடாது. அதற்குப் பதிலாகத் தனி நபர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற சலுகைகளை எடுத்துவிடலாம். அக்ரோ-இண்டஸ்டிரீஸ் போன்ற பல நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற சலுகைகளை எடுத்துவிடலாம். கம்யூனிசவாதிகள் சொல்வதைமட்டும் நாம் நம்பிவிடக்கூடாது. அது முற்போக்குச் சமுதாயத்திற்கு நல்லதல்ல. ஆகவே, அரசாங்கம் இம்மாதிரியான சட்டங்களை யோசித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கனம் சபாநாயகர் அவர்களே, அறநிலைய அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பி ஆராயப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் அங்கு பல்வேறு விஷயங்களை நன்கு ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவை வரவேற்று நான் சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன்பாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசியா அந்தக் கூட்டத்தில் இந்த டிரஸ்டு விவகாரம்கூட ஒரு பெரிய விவகாரமாக இருந்தது. அதிலே முதலமைச்சரவர்கள் பல பயங்கரமான காட்சிகளைப் படம் பிடித்துக்காட்டினார்கள். அவைகளிலே ஒரு காட்சி என்னவென்றால், டிரஸ்டு என்ற பெயரால் பலர் இன்றைய தினம் பயங்கரமான வகையில் மோசடி செய்துகொண்டு இந்த நாட்டுமக்களை, ஏழை மக்களை ஏமாற்றுகின்ற வகையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற காட்சியை ஆதாரங்களோடு காட்டினார்கள். அதற்குப் பிறகு என் மனதில் ஏற்பட்டிருக்கிற எண்ணம் என்னவென்றால் அப்பேர்ப்பட்ட தவறான வகையில் டிரஸ்டு என்று எழுதி வைத்துக்கொண்டு, அந்த சட்டத்தின் ஓட்டைக்குள்ளே நுழைந்து தப்பித்துக்கொள்ள பெரிய பெரிய பிளாக் மார்க்கெட்டுகளை நடத்துகிறார்கள் என்று சொன்னாலும் அது மிகையாகாது. அப்பேர்ப்பட்டவர்களை நிச்சயமாக அரசாங்கம் கண்காணிக்கவேண்டும் என்றுதான் என்னுடைய மனதிலே பட்டது. அன்று அந்தக் கூட்டத்திலே முதலமைச்சர் அவர்களிடமும், நம்முடைய சட்டத்துறை அமைச்சரவர்களிடமும் இப்படிப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதற்குத் தேவைப்பட்டால்,



சட்டத்தைக்கூட, திருத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்தை இங்கு மீண்டும் வலியுறுத்திச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இன்று கல்வி நிறுவனங்கள் பேரிலோ, கோயில்கள் பேரிலோ டிரஸ்ட் என்ற பெயராலே பல ஏக்கரா நிலங்களை எழுதிவைத்து தனிப்பட்ட வகையில் ஒன்றிரண்டு பேர்கள் அனுபவித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். வீட்டில் உள்ள கிருஷ்ண விக்கிரகத்தின் பேரில் டிரஸ்ட் பண்ணியிருப்பதைக் கூடச் சொன்னார்கள். எல்லோரும் இவ்வளவுதான் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் கொண்டுவருகிற கருத்தில் வேறுபாடு இருக்கலாம். It is a question of policy. ஆனால் சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு அந்தச் சட்டத்தில் இருந்து தப்பிக்கொள்வதற்காக இதுபோன்ற ஓட்டைகளை எல்லாம் பயன்படுத்திக்கொள்வதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. பொறுக்குக் குழு இவற்றைப் பரிசீலிக்க வேண்டும். இல்லையென்றால் ஒரு சின்ன கமிஷனையே நியமித்து அது தமிழ்நாட்டில் எந்த எந்த வகையில் யார் யார் டிரஸ்டுகள் மூலமாக அரசாங்கத்தையும்சரி, பொதுமக்களையும்சரி மோசடி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு, தக்க விவரங்களைச் சேகரித்து இந்தப் பொறுக்குக் குழுவுக்குக் கொடுத்தால், பொறுக்குக் குழுவும் அதைப் பரிசீலித்து தக்கதொரு நல்ல முடிவுக்கு வருவதற்குச் சாத்தியமாகலாம். இதுபோல டிரஸ்டுகள் என்ற பெயரால் அரசாங்கத்தையும்—பொதுமக்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும்—உயர்ந்த மட்டத்தில் இருப்பவர்களாக இருந்தாலும்—அவர்கள் யார் என்று பார்க்காமல் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த எண்ணத்தோடுதான் இந்த மசோதா கொண்டுவரப்பெற்றிருக்கிறது என்கிற நம்பிக்கையோடு இதை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** Since my name has been mentioned, I want to make a personal explanation. தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது கூட—என்னைக் கைகாட்டிக் காட்டிப் பேசினார்கள். பழைய காங்கிரசைச் சேர்ந்தவர்களும் சரி, சுதந்திராக்கட்சியைச் சேர்ந்தவர்களும்சரி மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பி ஒரு தவறான கருத்தை வெளியிட்டு வருகிறார்கள். நான் ஏதோ பாம்பரை மிட்டா மிராசு போலவும், மில் அதிபர் போலவும் ஒரு சித்திரத்தைத் தீட்டிக் காட்டிக்கொண்டு வருகிறார்கள். திருச்செந்தூரில் உள்ள ஆதித்தனார் கல்லூரிக்கு டிரஸ்ட் நிலம் எழுதி வைத்திருப்பதுபற்றிப் பேசினார்கள்.

அவர் ஒரு பெரிய கட்சியாகிய சுதந்திராக்கட்சியைச் சேர்ந்தவர், அதன் தலைவர் அந்தக் கட்சியின் பெயரை மாற்றலாம் என்றாலும்கூட மாற்றக்கூடாது என்று சொல்லி வருகிறார்கள். சபாநாயகர் பேசுகின்றபோது உறுப்பினர் தம் இடத்தில் உட்கார்ந்துகொண்டுவிடவேண்டும். அதற்குக் கீழ்படியாவிட்டால் அது வெளியே போவதோ, உள்ளே இருப்பதோ அவர் உரிமை. அந்த உரிமை அவருக்கு இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** (உட்கார்ந்துகொண்டே) இந்தமாதிரி ரூலிங் நான் எங்கும் பார்க்கவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இப்படிப்பட்ட ஒரு தவறான கற்பனையைச் செய்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்திலே, அமைச்சராக இருக்கின்றவர் 'மிட்டா-மிராசுதார்' என்ற அளவிலே பேசுவதை விட்டுவிட வேண்டுமென்பதற்காகத்தான் இந்தப் பேரவையிலே இதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய உடன்பிறந்த தம்பி பத்து வருடம் சப்-இன்ஸ்பெக்டராக வண்ணாரப்பேட்டையில் இருந்தவர். அவர் ஒரு என்.ஜி.ஓ.. அவருக்கு சப்-இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்ததும் அதை ஒரு பெரிய விழாவாகவே எங்கள் வீட்டில் நடத்தினோம். ஏனென்றால் அப்போது அந்த வேலை அவருக்குக் கிடைத்தது என்றால் அதுவே பெரிய உத்தியோகம். அவ்வளவு மகிழ்ச்சி. பிறகு அவர் இன்ஸ்பெக்டராகி, பின்னர் ஓய்வு பெற்றார்.

நான் லண்டனில் போய்ப் படிக்க முடிந்தது எப்படி என்றால் அதையும் சொல்லிவிடுகிறேன். சுதேசமித்திரன் பத்திரிகை நிருபர் வேலையை ஏற்றுக் கொண்டு லண்டன் சென்றேன். பின்னர் 'கேசரி' என்ற பம்பாய் பத்திரிகை நிருபாகவும் இருந்து, என்னுடைய வேலையையும் பார்த்துக்கொண்டு, அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு என்னுடைய படிப்பையும் முடித்துக்கொண்டேன். நான், ஏதோ உழைக்காமல் வந்தவன், என்று யாராவது பேசினால் அது தவறாகும். ஏறக்குறைய 9 ஆண்டுகளுக்கு மேலாக சிங்கப்பூரில் இருந்து, பாரிஸ்டர் தொழில் நடத்தி, —'திரை கடல் ஓடியும் திரவியம்தேடு' என்று சொல்வார்களே அதுபோல—பணத்தைச் சேமித்துக் கொண்டு வந்தேன். அந்தப் பணத்தைத்தான் கல்லூரிக்குக் கொடுத்தேன். என்னுடைய தந்தையாரின் பூர்வீகச் சொத்தான நிலத்தைக் கொடுக்கவில்லை. அந்தக் கல்லூரியும் காங்கிரஸ் ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது. கல்லூரிக்கு 'எண்டோமெண்ட்' வேண்டுமென்று சொல்லப்பட்ட காரணத்தால் கல்லூரிக்குப் பணம் கொடுக்கப்பட்டது. நிலம் கொடுக்கவில்லை இந்தச் சட்டம் வந்தவுடனேயே, டிரஸ்டுக்கு நிலம்



எழுதி வைத்துவிட்டார் என்று சொல்வதெல்லாம் தவறு. ஆதித்தனார் கல்லூரிக்கு வாங்கப்பட்டதெல்லாம் பட்டா நிலம். கல்லூரி நிர்வாகம் பணம் கொடுத்து, பட்டா நிலங்களை வாங்கியிருக்கிறது. திருவாடுதுறையிலே, திருப்பரங்குன்றத்திலே உள்ள டிரஸ்டுகள் எழுதி வைத்திருக்கிறார்களே, அது போலத்தான் இதையும் எழுதி வைத்திருக்கிறார் என்று சொல்வது தவறான கருத்தாகும். அதைப் போக்கத்தான் இதைச் சொல்கிறேன். உழைப்பினால் கொண்டு வந்த பணத்தைக்கொண்டு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரி நிர்வாகத்தால் வாங்கப்பட்ட அதற்குரிய நிலம் எல்லாம் பட்டாவாக வாங்கப் பட்டது. அது 1963, 1964-ல் வாங்கப்பட்டது.

அன்றைய தினம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது நான் மூன்று மாதம் சிறையில் இருந்தபொழுது கல்லூரி நிர்வாகிகள் இதை வாங்கியிருக்கிறார்கள். இந்தச் சட்டம் வருவதை நான் வரவேற்றிருக்கிறேன். திருவாடுதுறையில் உள்ள பராசக்திக் கல்லூரிக்கு நிலம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பரக்குன்றத்தில் உள்ள குமரகுருபர சுவாமிகள் கல்விக்கூடத்திற்கு நிலம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி எழுதி வைக்கப்பட்டிருக்கிற நிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உச்சவரம்புச் சட்டம் வந்திருக்கிறது. அந்த டிரஸ்டுகளையும் இந்த டிரஸ்டையும்—போட்டு குழப்பிக்கொள்ளக் கூடாது. ஆகவே, இந்தச் சட்டமன்றத்தில் இருப்பவர்கள் அருள்கூர்ந்து, என்னுடைய முன்னாளைய வாழ்க்கையைப் பார்த்து, அதன்படி என்னைக் கருத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Dr. Hande, what is your point of order?

DR. H. V. HANDE: My point of order comes under two sections. The first is this. When a Member—any Member—is speaking, whether a Minister or a non-Minister whoever he is, if another member wants to raise a point of order, he should be given an opportunity to raise the point of order. For instance, when I am speaking. . . .

MR. SPEAKER: I understand your point of order. . . .

DR H. V. HANDE: Let me finish . . . . .

MR. SPEAKER: I understand the point. Why are you going on repeating and repeating?

DR. H. V. HANDE: I must make myself clear.

MR. SPEAKER: Your point is that at any time any Member should be allowed to raise a point of order. Is it not?

DR. H. V. HANDE : Then why was I not allowed to raise my point of order? When that Member was speaking, I rose to raise a point of order. Why was I not allowed? That is my first question.

The second question is this. Whether such and the same method will be followed in respect of other Members hereafterwards and whether the Hon. Speaker whenever I am speaking and whenever any other Member rises on point of order, whether I will be given the same protection?

MR. SPEAKER : That arises from your point of order?

DR. H. V. HANDE : That is point of order A. Number B is this. Here there is a Bill before the House. A number of colleges have been mentioned. But representatives of all colleges cannot come into this House. That being the position, the Hon. Minister for Co-operation has been talking on one item, Item 7. My point is this. When the Bill is going to the Select Committee and when the Select Committee can invite the Hon. Minister for Co-operation to give his explanation—whatever explanation he has given in this House could have been given before the Select Committee by way of personal explanation or a representation. When that is the position, is it not a fact that by virtue of his being a Minister, he has indirectly tried to take an extraordinary position, get a leverage over others and tried to highlight all that is in his mind and will this not be influencing the decision that might be taken by the Select Committee? Whether a member by virtue of his position in the House can take advantage of it? Whether such a Member could be allowed to take advantage of his position and he be given an opportunity to explain—practically he was making a speech—whether a Member of the Treasury Benches and a Member of this House be allowed? I want to know in what capacity he has done that? Whether it is proper? These are the two valid points which I respectfully submit to the Hon. Speaker to give his decision on.

THIRU S. KANDAPPAN : Sir, I want to raise a point of order. Mr. Hande, I think, has been saying that the Hon. Minister would dictate the actions of commission and omission of Members of the Select Committee (Dr. Hande : I said he is trying). Sir, that is an asperision on the Members of the Select Committee; to whichever party they belong, they are equally honourable, as Dr. Hande.



I think every Member of the Select Committee applies himself fully to the problem that he is seized of and no one is influenced by anyone. Minister or non-Minister. To cast aspersions and impute motives (Dr. Hande : No, I did not say so) that they are influenced by the Hon. Minister is unfair to the Select Committee Members (Dr. Hande . You are imputing motives). He must withdraw his words.

DR. H. V. HANDE : I did not say that Minister was influencing. You are now imputing motives. I never mentioned about Select Committee Members and I never said that. I said the Minister is trying to influence. I tell you, he is trying unsuccessfully and he will not succeed. Your point is that the moment our Minister for Co-operation says something, the members of the Select Committee will be influenced. Definitely not. Only I am saying that he is trying to influene, explot and utilise his position as Minister in this House. My words are very clear and they are on record. I request you to understand that.

MR. SPEAKER : How long are you going to speak, Dr. Hande?

THIRU M. A LATHEEF : Sir, Dr. Hande has taken exception to the observations and the personal explanations given by the Hon. Minister for Co-operation. As explained, when the other institutions that have been enumerated in the draft. Bill have no opportunity of giving any personal explanations, because of the position that he, the Hon. Minister for Co-operation holds in this House, he has given a personal explanation.

I submit, Sir, that the Hon. Minister for Co-operation has not given this explanation because of his connections with or as a representative of the Trust; he has given this explanation when the Hon. Member made an open charge against the Government (Interruption by DR. H. V. HANDE) wait, when the hon. Member made an aspersion upon the Government wherein he has stated that the Government is unduly siding the partiular trust, namely, the Adithanar Trust. (Dr. Hande : No. *no. You are* mistaken). Therefore, when some aspersions are cast upon the Government, it is the duty of a Member of the Treasury Benches to dispel that. (DR. HANDE : Did I mention about him? Therefore, I submit that this point of order raised by the hon. Member has helped only to cause obstruction to the proceedings of this House and therefore

as my learned friend said, he has cast aspersions on the members of the Select Committee. Also most probably, I may also be a member of the Committee and I strongly take exception to the observations made by the hon. Member, Dr. Hande.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I would like to submit a small point. The hon. Member, Dr. Hande, while speaking, did not make any remark about the Hon. Minister for Co-operation. If the Hon. Minister had volunteered himself to give an explanation, Dr. Hande is not to blame. That is one thing.

The hon. Member Dr. Hande raised a point of order. I would like, in this connection to refer to Rul 83, Clause 5, which clearly lays, down that—' No debate shall be allowed on a point of order, but the Speaker may, if he thinks fit, hear members before he gives his decision thereon '.

It is also stated that ' A point of order is not a point of privilege '. Further, it is said : ' A member shall not raise a point of order (a) to ask for information, or (b) to explain his position, or (c) when a question on any motion is being put to the House or (d) which may be hypothetical '. In the circumstances, I feel he was not right; as the Hon. Minister was not yielding, it is wrong for any hon. Member to be on his feet.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னதெல்லாம் ஹாண்டே அவர்களுக்குத்தானே தவிர, மினிஸ்டர் சொன்னதற்கு அல்லவே? டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா?

DR. H. V. HANDE : Sir, I only want to say that I did not even mention the name of Aditanar or Minister for Co-operation. I fully supported the Government and I was only expecting a compliment from the Hon. Minister for Industries. Sir, I did not even read out the list. It was only after the Hon. Minister read out the list, I took that paper from the hon. Member, Thiru Marimuthu and read it. Till then I have not read it. So my name has been unnecessarily dragged by the hon. Member. Sir, I did not even look at his side—I can even say I closed my eyes. So the hon. Member has unnecessarily cast aspersion on me. I respectfully say, why should he be angry and I know the Members of the



Select Committee can never be influenced and definitely I would be the last person to cast aspersion on a distinguished Member like Thiru Latheef.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I only want to refer to Rule 81 which relates to personal explanation. I may only add that anything that I speak will not be reported in the Opposition newspapers. I know all the newspapers keep, what is known as ' Obituary file '. They will not publish what I say now but a time will come when they will think it fit to publish in the newspaper what I told this House already . . . .

DR. H. V. HANDE : Your paper also does not publish what I say. . . .

THE HON. THIRU SI. PA. ADITANAR : Matters and facts which I mentioned may be looked into by them when they write in the ' Obituary column '. They will not publish them to-day and I know it very well.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையைப்பற்றி நான் இப்பொழுது ரூலிங் கொடுக்கப் போகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களிடம் எந்தப் பேரவையும் இவ்வளவு தாராளமாக நடந்துகொள்ளாது. அவருடைய ஒழுங்குப் பிரச்சினைக்கான எல்லாவிதக் கருத்துக்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைத் தொடர்ந்து யாரும் பேச வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு பாயிண்ட்ஸ் ஆஃப் ஆர்டருக்கும் நான் இப்பொழுது என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன்.

அவர்கள் எழுப்பிய இரண்டாவது பாயின்ட் ஆஃப் ஆர்டர் மாண்புமிகு அமைச்சரைப்பற்றிக்கூட அல்ல, சபாநாயகரைப் பொறுத்தது. இரண்டு பாயிண்ட்ஸ் ஆஃப் ஆர்டரும் சபாநாயகரைப் பொறுத்தவை. முதலில் என்னுடைய தீர்ப்பே, சபாநாயகரின் மீது பாயின்ட் ஆஃப் ஆர்டரே கூடாது. அதுதான் சட்டமன்றத்தின் தீர்ப்பு. எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன், சபாநாயகர் மீது ஏதாவது கொண்டு வர வேண்டுமென்றால் 'சப்ஸ்டேன்டிவ் மோஷன்' ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து சபாநாயகரை ஆசனத்திலிருந்து இறக்கலாம், அதுதான் இந்த மன்றத்தின் உரிமையே தவிர சபாநாயகர்மீது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கொண்டுவருவதற்கு இடமில்லை. இரண்டு பிரச்சினைகளும் மாண்புமிகு அமைச்சரைப் பற்றியோ

உறுப்பினர்களைப் பற்றியோ அல்ல, சபாநாயகரைப் பொறுத்தது. அது எப்படி அனுமதிக்கலாம் என்பது ஒன்று, எந்த அதிகாரத்தின்மீது அனுமதிக்கிறீர்கள் என்பது மற்றொன்று இது தவிர வேறு ஒன்றுமே அவர்கள் எழுப்பிய பிரச்னையில் விவகாரம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினரும் இதைப்பற்றி எவ்வளவு தடைபண்ணினார்கள், எவ்வளவு உறுப்பினர்களின் உரிமைகளை எடுத்துக்கொண்டார்கள் என்பதை நாட்டு மக்களும், மாமன்றத்தில் உள்ளவர்களும் பார்த்து வருகிறார்கள். எனக்குள்ள வருத்தமெல்லாம் அவர்கள் நியாயமாகச் செய்வது மாதிரியும், மற்றவர்கள் அதற்குக் குறுக்கீடாக இருப்பதைப்போலவும் கூறுகிறார்கள். அமைச்சர் உறுப்பினர்கள் பற்றிக் கூறினால்கூட தீர்ப்புக் கூற வேண்டியிருக்கிறது. அவர்கள் சொன்னது அமைச்சரைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே, எப்படி எழுந்து சொல்லலாம், நான் எங்கே சொன்னேன் என்பது ஒன்று. எப்படி அனுமதிக்கலாம் என்பது இரண்டாவது. அனுமதிக்கலாம் என்பதற்கு எந்த நேரத்திலும் சபாநாயகர் அனுமதிக்கலாம். விதி இருக்கிறது, 81-வது விதி என்று சொன்னார்கள்.

'A member may, with the permission of the Speaker make a personal explanation although there is no question before the House. . . '

It does not matter whether Dr. Hande spoke about the Hon. Ministers or not.

'no debatable matter may be brought forward, and no debate shall arise.'

அதைப்பற்றிப் பேசக்கூடாது என்பதுதான் விதி. எந்த நேரத்திலேயும் சபாநாயகருக்கு 81-வது விதியின்கீழ் உரிமை இருக்கிறது என்ற ஒரு காரணத்தாலே அவருடைய இரண்டு பாயின்ட் ஆஃப் ஆர்டரும், எப்படிப் பேசச்சொல்லலாம் என்பது எழவில்லை.

இன்னொன்றும் கூறுகிறேன். சபாநாயகருக்கு 84-வது விதியின்கீழ்

'The Speaker shall have all powers necessary for the purpose of enforcing the rules and preventing disorder.'

என்ற அதிகாரமும் இருக்கிறது. சபாநாயகர் மீது வேண்டுமானால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, கீழே இறக்கி வைத்துவிட்டுச் செய்யத்தான் ஒரு நிலைமை இருக்கிறதே தவிர, இல்லாவிட்டால் ஒன்றுமே நடக்காது, இப்பொழுதே ஒன்றும் நடக்கவில்லை, அரை மணி நேரமாக நடக்க



வில்லை. ராஜாஜி அவர்கள் இருந்திருக்கிறார்கள், ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள் இருந்திருக்கிறார்கள், அவர்களுடைய பாரம்பரியத்தில் வந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மன்றத்தில் இவ்வளவு நேரம் கூறினார்கள். ஓர் உறுப்பினர் சொல்கிறார் என்றால் அவருக்கும் நம்மைப் போல் உரிமை இருக்கிறது. எந்த நேரத்தில் வேண்டுமானாலும் விளக்குவதற்கு உரிமை இருக்கிறது. ஏன் உட்காரச் சொன்னேன் என்று கேட்டார்கள். நான் இந்த இடத்தை என் பதவியை உபயோகித்துக்கொண்டு செய்ததைப்போல் ஆஸ்பர்ஷனை ஸ்பீக்கர்மேல் சொன்னார்கள். 64-வது விதியின்கீழ்

'A member desiring to make any observations on any matter before the House. . . . '

என்றிருக்கிறது. நானும் ஒரு வருஷத்திற்கு மேலாக இந்தப் பேரவைத் தலைவராக இருக்கிற நேரத்தில் பார்த்தாகிவிட்டது, பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற பாணியில் சொல்கிறார்களே தவிர, பாயின்ட் ஆஃப் ஆர்டரை ரெய்ஸ் பண்ணுவதில்லை. 'ப்ரொட்டெஸ்ட்' செய்ய, சபாநாயகருக்குத் தெரிவிக்க, மார்க்கம் இருக்கிறது, பாயின்ட் ஆஃப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுவதற்கு ஒரு முறை இருக்கிறது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லும்பொழுது 64-வது விதியின்கீழ்

'A member desiring to make any observations on any matter before the House shall rise from his seat and being called by the Speaker, address his remarks to him from his place . . . . '

(This, Dr. Hande never does and he is never going to do.)

'At any time, if the Speaker rises, any member speaking shall resume his seat.' என்றிருக்கிறது. இந்த இரண்டையும் நான் பேரவைத் தலைவரான நாள் முதற்கொண்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் அனுசரித்தது இல்லை. எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரின்கீழ் வரும் என்பதையும் இந்த மாமன்றமே முடிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் நான் சொல்கிறேன். டாக்டர் கிருஷ்ணராவ் என்று கருதுகிறேன், அதே டாக்டர் தொழிலில் இருப்பதன் காரணமாகச் சொல்கிறேன், டாக்டர் கிருஷ்ணராவ் அவர்கள் சபாநாயகராக இருந்தபொழுது அளித்த தீர்ப்பை—டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நல்ல பதில் சொல்வதுமாதிரி, அமைந்திருக்கும் தீர்ப்பை—அவருடைய தொழிலில் இருந்தவர்கள், ஆதலால்

ரொம்பவும் அபிமானம் இருக்கும் என்பதால் சொல்கிறேன். ஏன் சொல்கிறேன் என்றால் பேரவைத் தலைவரைப்பற்றி இரண்டு ஒழுங்குப் பிரச்னைகளைக் கொண்டு வந்தார்கள், அதனால்தான் நான் இவ்வளவும் சொல்கிறேன்.

'Members must wait till the Member on whose speech they want to raise the point of order finishes his speech as then only the Chair can know what exactly the point of order is'.

மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள், அதைப்பற்றி பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு ஒரு தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்றாலும்கூட அவர் அந்த வார்த்தையையோ அல்லது கருத்தையோ முடித்த பிறகுதான் அமைகிறது என்ற வகையில் 1959-வது ஆண்டு டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் அவர்கள்

'Members must wait till the Member on whose speech they want to raise the point of order finishes his speech as then only the Chair can know what exactly the point of order is.'

என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையில் எழவில்லை என்று கூறி இந்தப் பிரச்சினையை இதோடு முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டமுன்வடிவு கூட்டுப் பொறுக்குக் குழுவுக்குப் போக வேண்டுமென்ற அரசினுடைய தீர்மானத்தை ஆதரித்து பல கட்சியின் தலைவர்களும் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்களே குறிப்பிட்டதுபோல் சுதந்திராக் கட்சியே புரட்சிகரமான கருத்துக்களைச் சொல்லக்கூடிய நல்ல காலம் எங்களுடைய ஆட்சிக்குக் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாமென்று தயாராக இருந்தேன். அதற்குள்ளாக அவர்கள் வேறு நிகழ்ச்சிகளுக்குச் சென்று விட்டார்கள்.

அவர்கள் பேசும்போது சில சந்தேகங்களைக் கிளப்புகின்ற முறையில் பேசினார்கள். அதற்கு விளக்கம் சொல்லுவதுதான் நியாயம் என்று அவர்களே கருதுவார்கள் என்று கருதுகிறேன்.

பொதுவாக மன்றத்திலுள்ள எல்லா உறுப்பினர்களும் உச்சவரம்புச் சட்டத்திலே சில விதி விலக்குகளைப் பயன்படுத்திக் கொண்டு சட்டத்தின் உண்மையான பயன் மக்களுக்குக் கிடைக்காத, சமுதாயத்திற்குக் கிடைக்காத நிலையை மாற்ற வேண்டுமென்று சொல்லியது மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கம் இப்படிப்பட்ட முடிவை எடுப்பதற்கு முன்னால் கூட எல்லாக் கட்சித்



தலைவர்களையும் அழைத்துப் பேசி அவர்களுடைய கருத்துக்களின் அடிப்படையில்தான் இந்த மசோதாவையே கொண்டு வந்தோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோயில் பிரச்னைதான் அதிகமாக இருந்தது. கோயில் நிலங்களை இப்போதைக்கு இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டாம் என்ற அரசாங்கத்தின் முடிவையும் தெரிவித்திருக்கிறோம். இதிலே கூட, கோயிலுக்கு நிலம் இருக்க வேண்டுமா, கோயிலுக்குச் சொத்து இருக்க வேண்டுமா, கோயிலுக்கு வருமானம் இருக்க வேண்டுமா என்பது அல்ல பிரச்சினை. நிலச் சீர்திருத்தம் ஒரு கொள்கை. அந்தக் கொள்கையை நிறைவேற்ற வேண்டும். மத்திய அரசாங்கத்தின் கருத்தும் இதே கருத்துத்தான்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் வேறு விதமான கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். நான் அறிந்தவரை அவர்களுடைய கட்சி அன்றைக்கு மத்திய அரசில் இருந்தபோதே நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி மிகுந்த அளவுக்கு மாநில அரசுகளை வற்புறுத்தி வந்தது என்பதை நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கோயிலுக்குச் சொத்து வேண்டாமா என்று கேட்பது கேள்வி அல்ல. நிலச் சீர்திருத்தம் என்றால் என்ன என்று கேட்பதுதான் உண்மையான கேள்வி. அப்போதுதான் உண்மையான பதிலைப் பெற வாய்ப்பு ஏற்படும்.

நிலத்தில் பாடுபடும் உழவன் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரனாக இருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையிலேயே உற்பத்தி பெருக வாய்ப்பு இருக்கும் என்பதுதான் நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையான கொள்கை. அந்தக் கொள்கையை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் ஏராளமான நிலங்கள் கோயிலுக்குச் சொந்தமாக இருப்பது தவறு என்ற கருத்து நாட்டில் இருக்கிறது. இன்றைக்கு இந்த அரசாங்கம் அதை ஏற்காமல் இருக்கலாம், பல கட்சிகள் அதை ஏற்காமல் இருக்கலாம். எதிர்காலத்தில் அதை ஏற்கக் கூடிய காலம் வரும் (ஆரவாரம்). அந்தக் கருத்து சமுதாயத்தில் இருக்கிறது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த முறையில் கோயில் பிரச்சினையைப் பற்றி அதிகமாகப் பேசாமல் விட்டு விடுகிறேன். கோயிலுக்கு நிலம் கொடுத்து விட்டு, அதைப் பரிபாலிக்கும் அதிகாரம் இருந்தால் போதும் என்ற வாதம் வைக்கப்பட்டது. அது மிகுந்த தவறான வாதம். நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையே, யாரோ ஒருவன் நிலத்திற்குச் சொந்தக்காரனாக இருக்கிறான், இன்னொருவன் உழுகிறான் என்ற

நிலை மாற்றப்பட வேண்டுமென்பதுதான். நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமா—கம்யூனிஸ்ட் நாட்டில் இருப்பது போல்—கோயிலில் இருக்கும் தர்மகர்த்தாவுக்குச் சொந்தமா என்ற பிரச்சினைகள் எழ வேண்டிய அவசியம் இல்லை.

இந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கங்களைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் நன்றாக விளக்கிப் பேசினார்கள். மோசடி நடைபெற்றிருக்கிறது என்றால், யாரை எண்ணிக்கொண்டு பேசினார் என்று தெரியாது. ஒருவரைப் பற்றியும் எண்ணவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் எண்ணி இருக்கமாட்டார்கள். அப்படி எல்லாம் எண்ணக்கூடியவர்கள் அல்ல. பொதுவாக இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி இருந்து பேசினோம். காங்கிரஸ் கட்சி உட்பட எல்லாக் கட்சித் தலைவர்களும் உடன் இருந்து பேசினோம். இந்த வாதம் அப்போதே வைக்கப்பட்டது.

கல்லூரிக்கு, உயர்நிலைப் பள்ளிக்கு, மருத்துவ விடுதிக்கு என்று நல்ல உள்ளத்தோடு நிலம் கொடுத்திருக்கின்ற நிலையில் அதை இந்த அரசாங்கம், தடுக்கும் முறையில் 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சீலிங் போடலாமா என்று கேட்டார்கள். அந்த நல்ல உள்ளம் எப்போது இருந்திருக்க வேண்டும்? 6—4—60-ல் சட்டம்; அதற்கு முதல் மாதந்தான் அந்தப் பரந்த உள்ளம் வருமா? டிரஸ்டை உருவாக்குவது, கோயிலுக்கு எழுதி வைப்பது, கல்லூரிக்கு எழுதி வைப்பது, உயர்நிலைப் பள்ளிக்கு எழுதி வைப்பது என்று சட்டம் வருகின்ற நேரத்தில் செய்வது மோசடியே தவிர, பரந்த உள்ளத்தால் செய்யப்பட்டது அல்ல.

கல்லூரிக்குக் கூட, நிலம் இருந்துதான் கல்லூரி நடைபெற வேண்டுமா? நிலம் இருந்துதான் உயர்நிலைப் பள்ளி நடைபெற வேண்டுமா? நிலம் இருந்துதான் மருத்துவ விடுதி நடைபெற வேண்டுமா? அந்தக் கருத்து முழுக்க முழுக்க தவறான கருத்தாகும். அப்படிப்பட்ட நிலை ஏற்படாதபடி உடனடியாக நாம் எடுத்துவிட வேண்டாமா? கல்லூரிக்கு உள்ள நிலத்திற்கு உச்ச வரம்பு, உயர்நிலைப் பள்ளிக்கு உள்ள நிலத்திற்கு உச்ச வரம்பு, மருத்துவ விடுதி தனியார் மருத்துவ விடுதியாக இருந்தால் எப்படி என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலிப்பதற்காகத்தான் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புகிறோம்.

முக்கியமான கருத்தை ஒருவரும் சொல்லவில்லை. ஏன் இதைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புகிறோம் என்று விளக்கியிருக்கிறோம். பொதுவாக, டெபனிஷன் போடப்பட்டிருக்கிறது. டிரஸ்ட் என்று வைத்துக்கொண்டு இதிலிருந்து தப்பித்துக் கொண்டிருப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் பலரும் டிரஸ்டுகளை விதம் விதமான வார்த்தைகளைச் சேர்த்து எழுதி



வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றி எல்லாம் நல்ல முறையில் தெரிந்து முடிவு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், பொறுக்குக் குழு மாவட்டந்தோறும் சென்று, அந்தந்த மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் பிரதிநிதிகளை அழைத்து எங்கெங்கு தவறான முறையில் டிரஸ்டுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன, யார் யார் பொய்யான முறையில் டிரஸ்டுகளை எல்லாம் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து அவற்றை எல்லாம் இந்தச் சட்டத்தின்கீழ்க் கொண்டு வரவேண்டும். உண்மையாக, மக்களுக்கு நன்மை செய்வது எப்படி என்று கண்டுபிடிக்க இதைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புகிறோம்.

பொதுவாக, இந்த மசோதாவைப் பொறுத்தவரை எல்லாக் கட்சியினரும் ஆதரிக்கிறார்கள். ஆகவே, இதை ஏகமனதாக நிறைவேற்றி, பொறுக்குக் குழு மிக உன்னதமான முறையில் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பரிசீலித்து திருத்த மசோதா சபைக்கு வந்து சட்டமாக்கித் தரவேண்டுமென்ற முயற்சிக்கு ஆதரவு தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி இந்த மசோதாவை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1972) ஆய்வு செய்வதற்காக 36 உறுப்பினர்கள் அடங்கிய (24 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 12 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்—

மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர்

திரு. ஜே. ஜேம்ஸ்

திரு. கே. எம். சுப்பிரமணியம்

திரு. மணலி சி. கந்தசாமி

திரு. கே. கந்தசாமி

திரு. எம். ஏ. லத்தீப்

திரு. கு. அ. பொம்மன்

திரு. ஏ. ஆர். மாரிமுத்து

திரு. டி. இராசரத்தினம்

திரு. தோப்பூர் திருவேங்கடம

திரு. பொன் சொக்கலிங்கம்

திரு. கோ. இளங்கோவன்

திரு. எஸ். நல்லசாமி

திரு. வி. பழனிவேலு

டாக்டர் எஸ். ஏ. சின்னராசு

திரு. ஆலடி அருணா

திரு. ஆ. முனியாண்டி

திரு. ஏ. ஆர். சுப்பையா

திரு. எல். கணேசன்

திரு. மு. இராமன்

திரு. மா. மீனாட்சிசுந்தரம்

திரு. கு. காமாட்சி

திரு. மு. பழனிவேலன்

திரு.இரா. மாணிக்கவாசகம்

என்ற அமைச்சர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

MR. SPEAKER : The Bill is referred to Joint Select Committee. Under Rule 139 I nominate Hon. Thiru P. U. Shanmugam. Minister in-charge of the Bill as Member of the Joint Select Committee.

## (2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/72.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.



## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/72.)

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Non-Trading Companies Bill *, 1972 (L.A. Bill No. 10 of 1972) be taken into consideration."

Consequent on the enactment of the Companies Act, 1956 (Central Act I of 1956) and the repeal of the Indian Companies Act, 1913 (Central Act VII of 1913) with effect from 1st April 1956, section 289-A of the Indian Companies Act, 1913 (Central Act VII of 1913) which enables the State Governments to exercise the powers of the Central Government under that Act with respect to non-trading corporations with objects confined to one State must be said to continue in force. The Government of India, therefore, suggested that separate legislation might be undertaken by the State Governments for the incorporation, regulation and winding up of the said corporations, as the making of laws in respect of these corporations was within the exclusive competence of the State Legislature.

(Thiru S. Kandappan in the Chair)

According to entry 32 of the State List (List II) in the Seventh Schedule to the Constitution of India, the incorporation and regulation of non-trading corporations with objects confined to a single State is the responsibility of the State Government. The Indian Companies Act, 1913 (Central Act VII of 1913) in so far as it relates to matters specified in entry 32 of the State List, remained unaffected, until it is repealed or amended by a competent legislature, namely, by the State Legislature.

It is therefore considered necessary to enact an uniform law relating to the incorporation, regulation and winding up of non-trading corporations with objects confined to the State of Tamil Nadu which would apply throughout the State. Instead of enacting a comprehensive legislation for the purpose, it is proposed

* Published in the *Tamil Nadu Government Gazette* extraordinary, dated 28th March 1972.

[Thiru S. Madhavan] *1972 ஏப்ரல் 6*

to make the provisions of the Companies Act, 1956, applicable to non-trading corporations with objects confined to the State of Tamil Nadu by means of a referential piece of Legislation.

The Bill seeks to achieve the above object. Sir, I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN (Thiru S. Kandappan): The question is—

"That the Tamil Nadu Non-Trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. CHAIRMAN (Thiru S. Kandappan): The Bill will now be taken clause by clause. There are no amendments.

Clauses 2, 3, 4, 5 and 6 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

'That the Tamil Nadu Non-Trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972) be passed.'

The motion was put and carried and the Bill was passed into law.

*(இ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு அடக்கு கடைக்காரர்கள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 8/1972).*

THE HON. THIRU O. P. RAMAN: Mr. Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill,* 1972 (L.A. Bill No. 8 of 1972) be taken into consideration.

Under the Tamil Nadu Pawnbrokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943) no person shall carry on business as a pawnbroker in any area without obtaining a licence under that Act. The licence obtained by a Pawnbroker should be renewed every year. Sub-section (4) of section 4 of the said Act empowers the

* Published in the *Tamil Nadu Government Gazette* extraordinary, dated 28th March 1972.



*1972 ஏப்ரல் 6]* [Thiru O. P. Raman]

State Government to prescribe a fee not exceeding twenty-five rupees for the grant of a licence under the said Act. The fee payable for a licence at present is rupees twenty-five.

The expenditure for administering the said Act has increased consequent on the revision of the scales of pay of the Government servants employed in administering the said Act. In Kerala, a licence fee of rupees one hundred is being collected from pawnbrokers. It is therefore considered necessary to enhance the limit of licence fee or renewal of licence from Rs. 25 to Rs. 100.

The Bill seeks to achieve the above object. Sir, I commend the motion for acceptance of the House.

** திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இந்த பான் ப்ரோக்கர்ஸ் ஆக்ட் சம்பந்தமாக லைசென்ஸ் தொகையை அதிகப்படுத்துவதற்காக இந்த மசோதாவை அரசு கொண்டுவந்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த வட்டிக்கடைகள் சம்பந்தமாக என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வட்டிக்கடை சம்பந்தமான சட்டத்தில் 9% வட்டித்தான் வாங்கவேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தச் சபையிலுள்ள அனைவருக்கும் தெரியும். 36%-க்குக் குறைந்து யாரும் வட்டிக்கடையில் வட்டிக்குக் கொடுப்பதில்லை. இதை எப்படித் தடுப்பது என்பதைப்பற்றி அரசு யோசிக்க வேண்டும்.**

*நூறு ரூபாய் லைசென்ஸ் பீஸ் என்று வைக்கிறோம். இதைச் சுலபமாகக் கொடுத்துவிடுவார்கள். அதை எதிர்த்து கூட பத்திரிகையில் எழுதியிருப்பதைப் பார்த்தேன். 100 ரூபாய் என்று கூட்டுவதால் அவர்கள் சங்கடப்படப்போவதில்லை. சட்டபூர்வமாக அரசு அங்கீகரித்துள்ள வட்டியைவிட அதிகமாக 36% அளவிற்கு வாங்குகிறார்கள். வட்டியை எடுத்துக்கொண்டுதான் பணத்தைக் கொடுக்கிறார்கள். சங்கடமான நிலைமையில்தான் விவசாயிகளும், விவசாயிகள் அல்லாதாரும், சிறிய தொழில்கள் செய்கிறவர்களும், உத்தியோகம் பார்க்கிறவர்களும் தேவைப்படுகிறபோது பணம் வாங்கும்போது 36% வட்டி கொடுக்கிறார்கள். நகைகளை அடகு வைக்கிறார்கள். இதை எப்படித் தடுப்பது என்பதைப்பற்றி அரசாங்கம் யோசித்ததா? பணம் தேவைப்படுவதால் மூச்சுப் பேச்சின்றி வாங்கிச் செல்கிறார்கள். நகைகளை வாங்கிக்கொண்டுதான் பணம் கடன் கொடுக்கிறார்கள். வட்டியை முதலிலேயே எடுத்துக்கொண்டுவிடுகிறார்கள். ஆகவே இது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.*

people are the pawnbrokers and industrialists and that is the state of affairs now. I hope and trust that the Government will look into this matter seriously as it is a serious matter. I request the Hon. Minister to do the needful in the matter. **Thank you, Sir.**

**திரு. மணலி சி. கந்தசாமி:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த பான் புரோக்கர் சட்டம் சீராக ஒரு ஆலோசனை நடத்தி ஒரு நல்ல திருத்தச் சட்டமாக கொண்டுவந்து இருந்தால் மகிழ்ச்சியாக இருந்து இருக்கும். இன்று இந்த பான் புரோக்கர்கள் ஒரு சிலந்தி வலை மாதிரி ஆயிரக்கணக்கில் தோன்றியிருக்கிறார்கள். ரூபாய் 25 கொடுத்து லைசென்சு வாங்கிக் கொண்டு விட்டு ரூ. 1,000 அல்லது ரூ. 2,000 வைத்துக்கொண்டு மாதத்திற்கு ரூ. 500, ரூ. 1,000 என்று சம்பாதித்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்று அது ஒரு மோசமான தொழிலாக நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு இலக்கானவர் யார் என்று சொன்னால் சாதாரண மக்கள் தான். அவர்கள் தான் ஒரு குடத்தை வைத்துக்கொண்டு ரூ. 5, ஒரு மூக்குத்தியை வைத்து ரூ. 10 என்று பான் புரோக்கரிடத்தில் வாங்கிக்கொண்டு போகிறார்கள். அவர்கள் தான் இந்த அடகுக் கடைக்காரர்களிடத்தில் சிக்கி சந்தியில் நிற்கிறார்கள். பான் புரோக்கர்கள் கோர்ட்டுக்குப் போகாமலேயே எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு விடுகிறார்கள். அரசின் சட்டங்கள் அவர்களை ஒன்றும் செய்யாது. அவர்களே எல்லா பாரங்களையும் அடித்து வைத்துக்கொண்டு, முன்கூட்டியே திட்டம் போட்டு, கோர்ட்டுக்குப் போகாமலேயே அந்தக் கடன்களை வசூல் செய்து விடுகிறார்கள்.

இந்தச் சட்டத்தை சரியான முறையில் திருத்தவேண்டிய அவசியம் இருக்கிறது. இல்லையென்றால் சமுதாயத்தில் இருக்கும் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு லைசென்சு கட்டணம் ரூ. 25-ஐ, ரூ. 50 என்று ஆக்கியது மட்டும் போதாது, அந்தப் பான் புரோக்கர்கள் சட்டப்படி நடக்கவில்லையென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் ஏதாவது டிபாசிட் ரூ. 1,000 அல்லது ரூ. 2,000 கட்டவேண்டுமென்று சொல்லவேண்டும். இப்படி குறைந்தபட்ச முறையிலாவது அவர்களுக்கு ஒரு விதிமுறை வைத்தால்தான் நல்லது. ரூ. 25-ஐ ரூ. 50 என்று உயர்த்தினால் மட்டும் போதாது. அது சரியாக இருக்காது. நான் இதை எதிர்க்கிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். டிபாசிட் கட்டவேண்டுமென்று சொல்லவேண்டும். இதை விசாரணை நடத்தி நல்ல திருத்தச் சட்டமாக கொண்டுவருவது நல்லது என்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.





**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த மசோதாவை என்னுடைய சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய பெரியார் மணலி கந்தசாமி அவர்கள் சொன்னது போல் இந்த பான் புரோக்கர் என்கிற சிலர் இந்த நாட்டிலே இருக்கத்தான் வேண்டுமா என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். பல முறைகேடுகளை இங்கே சொன்னார்கள். அன்றாடச் சாமான்கள், மூக்குத்தி போன்ற சாதாரண பொருள்களைக் கூட, வீட்டிலே பெண்கள் அணியக் கூடிய நகைகள் ஆகியவற்றைக் கொண்டு போய் அங்கே வைத்து விடுகிறார்கள்.

ஆகையினால் இந்த ஹவுஸ் ஹோல்டு யுடின்சில்ஸ் என்று சொல்கிறார்களே, பெண்கள் அணியும் நகைகள் இருக்கிறதே, சாதாரண நகைகள் இவைகளையெல்லாம் அந்த வட்டிக்கடைக்காரர்கள் வாங்கி வைத்துக்கொண்டு, பணம் கொடுத்தால், செல்லாது என்று முறை கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். ரொம்ப டென்ஸ் பாபுலேஷன் இருக்கிற இடத்தில் போய் பார்த்தால் தெரியும். அங்கே குடியிருப்பவர்கள் நன்கு அறிவார்கள். அமைச்சர் அவர்கள் கூட அப்படிப்பட்ட பகுதியில் இருந்தவர் தான், அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

சாதாரணமாக சாயங்காலம் ஆகிவிட்டால், திடீரென்று ஒரு வீட்டில் இருந்து சத்தம் வரும். பலவிதமான கூப்பாடுகள் வரும், என்னென்ன வார்த்தைகள் அங்கே கேட்கும் என்பதை இங்கே சொல்லத் தேவையில்லை. காரணம் அந்த வீட்டில் உள்ளவன் மனைவியிடத்தில் உள்ளவற்றை கேட்பான். அங்கே அடிதடி நடக்கும். இந்தமாதிரி மூக்குத்தி என்று சொல்லக்கூடிய சாதாரண பொருள்களைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு பணம் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். ரூ. 25 பெறுமானமுள்ள மூக்குத்தி என்றால் ரூ. 5 தான் அதற்கு கொடுக்கிறான், அல்லது ரூ. 10 தான் கொடுக்கிறான். அதற்கும் வட்டியைப் பிடித்துக்கொண்டு ரூ. 1 அல்லது ரூ. 2 பிடித்துக்கொண்டு தான் கொடுப்பான். அந்த மூக்குத்தி திரும்பவும் வீட்டிற்கு வராது. காரணம் அதைத் திருப்பி வாங்கிக்கொள்ளும் நிலையில் அவன் இருக்க மாட்டான். ஆகவே சாதாரணமாக இருக்கும் உடுப்புகள், பெண்களின் நகைகள் முதலியவற்றை வைத்தால் அதற்கு பணம் கொடுக்கக் கூடாது என்ற விதிமுறையை அரசாங்கம் கொண்டு வரவேண்டும். இந்தச் சட்டத்தை அப்படி சரியான முறையில் திருத்தியமைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று இந்த சட்டத்தின் கோட்பாடுகளை ஆராய்ந்து அதை நல்ல முறையில் ரிகரஸ்ஸாக, ஸ்டிரின்ஜன்ட்டாக திருத்தியமைக்கவேண்டும். அவர்கள் சொன்னது போல் ரூ. 50 லைசென்சு பீ என்று வைத்தால் மாத்திரம் போதாது. ரூ. 500 லைசென்சு பீ என்று வைக்கவேண்டும். அல்லது ரூ. 1,000 என்று வைக்கவேண்டும். காஷன் டிபாசிட் என்றும் வைக்கலாம்.

இன்னும் இந்த வட்டிக் கடைக்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், இந்தப் பணத்திற்காக பிராமிசரி நோட் எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். Negotiable Instrument must be supported by consideration. இது சரியான டாகுமெண்ட் இல்லை என்று வக்கீல்கள் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். வட்டிக் கடைக்காரர்கள் செய்கிற அநியாயம் தான் இப்படி இருக்கிறது.

"This document is not supported by consideration". Document must be supported by consideration. இப்போது ஸ்மால் காஸ் கோர்ட், சிவில் கோர்ட்டிலே எல்லாம் ஒரு பிரசம்ஷன் வந்திருக்கிறது.

There is a presumption in the court that always this document brought out by the gabuliwallah should be under-valued or half-valued. ஆகவே, ரூ. 500, பிராமசரி நோட்டு என்று போட்டால் ரூ. 250 என்று தான் மதிப்புப் போடுகிறார்கள். இப்போது அந்த டாகுமெண்ட்க்கு மதிப்பு இல்லாமல் போய் விட்டது. மனிதனுக்கு மதிப்பே இல்லாமல் போய் விட்டது. நான் வட்டி வாங்கக்கூடாது என்று சொல்பவன். யாரும் வட்டியும் வாங்கக் கூடாது, வட்டியும் கொடுக்கக்கூடாது என்ற கொள்கையுடையவன். வட்டிக்கு ஆதரவு தெரிவித்துப் பேசுகிறேன் என்று நினைக்கக் கூடாது. சமுதாயமே அப்படியிருக்கிறபோது நாம் அதைப்பற்றி பேசவேண்டியிருக்கிறது. இப்போது தெருவுக்குத் தெரு வட்டிக்கடை வந்திருக்கிறது. ஒவ்வொரு ஏரியாவிலும், சின்ன ஏரியாவாக இருந்தாலும் கூட அங்கேயிருக்கிறது. என்னுடைய பேரியமேட்டுப் பகுதியில் எந்த இடத்தில் பார்த்தாலும் ஒரு வட்டிக் கடையிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். இப்படி தெருவுக்குத் தெரு வட்டிக்கடை இருப்பதற்குக் காரணம், கள்ளுக்கடை திறந்ததற்குப் பிறகுதான் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா?

MR. CHAIRMAN (Thiru S. Kandappan): The hon. Member is supplying information and not seeking information.





திரு. எம். ஏ. லத்தீப்: அதைப்பற்றி அம்மையார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது வேறு பிரச்னை. இந்தப் பிரச்னை வேறு. தே ஆர் காம்பிளிமெண்டரி டு ஈச் அதர். நான் கள்ளுக்கடையையும் எதிர்ப்பவன், வட்டிக்கடையையும் எதிர்ப்பவன். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று காம்பிளிமெண்டரியாக இருக்கலாம். வட்டிக் கடைகள் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த லைசென்சு பீஸ் வைத்திருப்பது மிகவும் குறைவு. அதை அதிகப்படுத்தவேண்டும். ரூ. 1000, 2000 என்று வைத்தால் நன்றாக இருக்கும்.

அதே நேரத்தில் நமது மணலி கந்தசாமி அவர்கள் சொல்லியதை நானும் ஆதரிக்கிறேன். அதைச் சொல்வதற்காகத் தான் நான் பேசுவதற்கே எழுந்தேன். இல்லாவிட்டால் நான் பேசுவதாகவே ஐடியா இல்லை. அரசாங்கம் அவர்கள் சொன்னதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதற்கு ஒரு முறையைக் கொண்டு வந்து ஏற்பாடு செய்யவேண்டும். டாகுமெண்டு சப்போர்டெட் பை கன்சிடரேஷன் இல்லாவிட்டால் செல்லாது என்பதைப்பற்றி விரிவான நல்ல விளக்கம் பெறுவதற்கு, ஒரு நல்ல சட்டம் கொண்டு வருவதற்கு ஒரு கமிட்டி போட்டு, அதிலே இதைப்பற்றி டிஸ்கஸ் பண்ணினால் அது நலமாக இருக்கும். இருந்தாலும், இந்த அளவுக்கு ஃபீஸை ஏற்றியிருக்கிறார்களே, அதற்காக ஆதரவு தெரிவித்து, நான் அமர்கிறேன்.

திரு. மா. வெ. கரிவேங்கடம்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அடகுக் கடைக்காரர்கள் திருத்த மசோதாவின் பேரில் ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்களெல்லாம், குறிப்பாக கனம் லத்தீப் அவர்கள் "நாட் சப்போர்டெட் பை கன்ஸிடரேஷன்" என்ற தஸ்தாவேஜுகள் ஏராளமாக வந்துவிடுகின்றன. ஒரு சில வழக்குகளில் தொகை ரூ. 500 என்றிருந்தால், ரூ. 250-க்குத்தான் டிகிரி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். எனக்கு அந்த வாதமே விசித்திரமாக இருக்கிறது. காரணம் என்னவென்றால், புரோ நோட் அல்லது மார்ட்கேஜ் டீட் நீதிமன்றங்களில் வரும்பொழுது ரூ. 1,000-க்கு எழுதப்பட்டது, கொடுக்கப்பட்டது ரூ. 500 என்று சொல்லப்பட்டாலும்கூட, அது எழுத்தளவிலே இருக்கிற காரணத்தினால் டாகுமெண்டரி எவிடென்சாக இருப்பதின் காரணத்தினாலே, தஸ்தாவேஜு சாட்சியமாக இருக்கிற காரணத்தினால், வாய்மொழி சாட்சியத்தை வைத்துக் கொண்டு, அதைத் தள்ளி வைத்து ரூ. 500 என்று ஆக்க முடிவதில்லை. 1000 வழக்குகள் இருந்தால், ஒன்றிரண்டு வழக்குகளில் வேண்டுமானால் அம்மாதிரி டிக்ரி பெறமுடியுமே தவிர, எல்லா வழக்குகளிலும் அம்மாதிரி நிலை இல்லை. நல்ல முறையில் வழக்கறிஞர் தொழில் நடத்துபவர்கள் இதை அறிவார்கள்.

1000-க்கு ஒரு வழக்கில்தான் இம்மாதிரி குறைத்து டிக்ரி பெற முடியும். அது
மிகவும் அபூர்வயாக இருக்கும். ஆகவே, இதுபோன்ற வட்டிக் கடைக்காரர்கள்
மிக அதிகமாக வட்டியைப் பெறுகிறார்கள், எழுத்திலே இருக்கிற வட்டி சத
விகிதம் ஒன்று, உண்மையிலே வாங்குகிற வட்டியின் சதவிகிதம் 20, 30, 36
என்ற அளவில் இருக்கிறது என்று சொன்னால், உண்மை நிலையை எடுத்துச்
சொல்வதாக அது இருக்கும். நடுத்தர மக்களுக்கு அன்றாடம் சில பிரச்னைகள்
எழுகின்ற நேரத்தில், உடனடியாக தேவைப்படுகின்ற அளவுக்கு, தேவைப்படு
கின்ற நேரத்தில் சிறு தொகைகள் கடனாகப் பெறுவதற்குரிய நிலையங்கள்
நிச்சயம் தேவை. வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டும், அரசாங்கத்தினால்
நிர்ணயிக்கப்பட்ட வட்டி 6.3 சதவிகிதம் என்று சொன்னாலும் அல்லது 9 சத
விகிதம் என்று சொன்னாலும், அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகி
தத்திற்கு மக்கள் கடன் பெறவேண்டும் என்று சொன்னாலும், இந்த அடகுக்
கடைக்காரர்கள் என்றாவது சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்
திற்கு கொடுக்க முடியுமா என்று கேட்டால், கொடுக்க மாட்டார்கள். அப்படிக்
கொடுக்காதவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமா என்று
கேட்டால், அதுவும் முடியாது. காரணம் எழுத்தில் ஒன்று, வாய்மொழியின்
மூலம் ஒன்று என்று வட்டிவிகிதம் இருக்கிறது. உண்மையிலேயே 6.3 சத
விகிதம் வட்டிக்குக் கொடுத்திருக்கலாம். அல்லது 36 சதவிகிதம் வட்டிக்கு
வாங்கியிருக்கலாம். அந்தமாதிரி வட்டியையும் பெற்றிருக்கலாம். ஆனால்,
எழுத்தில் இருப்பது மட்டும் 6.3 சதவிகிதம் தான். நாம் சட்டத்தில் எந்த சத
விகிதம் நிர்ணயிக்கிறோமோ அந்த சதவிகித அளவிற்குத்தான் தஸ்தா
வேஜூ இருக்கும். ஆகவே, அடகுக்கடைக்காரர்கள் மீதும் வழக்கு தொடர
முடியாது. அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதற்கு
என்ன வழி என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

திரு. லத்தீப் அவர்களே சொன்னார்கள். சர்க்கார் ஒவ்வொரு கடையிலும்
ஒரு அதிகாரியை வைத்து, மேற்பார்வையிட்டு, உரிய வட்டி விகிதத்திற்கு
பணம் கிடைக்க வழி செய்ய முடியுமா என்றால், அதுவும் முடியாது. அப்படி
யிருந்தாலும் கூட, சில கோளாறுகள் நடைபெறலாம். சில அதிகாரிகள் தவறு
செய்யலாம். அதிலும் தவறுகள் இருக்கத்தான் செய்யும். ஆகவே, இதற்கு
ஒரே வழிதான் இருக்கிறது. விவசாயிகளுக்குப் பலவிதமான கடன் வசதிகளைச்
செய்து தந்திருக்கிறோம். ஆகவே, அரசு பெரிய நகரங்களாக இருக்கும் இடங்
களிலெல்லாம் சிறு தொகை அளவுக்கு ரூபாய் ஒரு லட்சம், இரண்டு லட்சம்
என்ற அளவுக்கு, அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, உடனுக்குடன்
ஏற்படுகிற எதிர்பாராதவிதத்தில் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையை சமாளிப்
பதற்கு, இதைப்போல அல்லது உரிய பந்தோபஸ்தின் (செக்யூரிடி) பேரில் சிறு



தொகை வழங்குவதற்கு, கடன் கிடைப்பதற்கு வசதிகளைச் செய்துதர,
நல்லமுறையில் சிந்தித்து, அந்த முறையில் செயல்பட்டால், அது மிகவும்
நன்றாக இருக்கும். பான்-புரோக்கர் என்ற முறையே இருக்கவேண்டியதில்லை.
அது இல்லாமலேயே அரசாங்கமே பான்-புரோக்காராக ஆகவேண்டும்.
அன்றாடத் தேவைக்குக் குறைந்த வட்டிக்கு, தேவைப்படுகிறபொழுது குறைந்த
தொகையைக் கடனாகக் கொடுக்க வசதி செய்யவேண்டும். அந்த முறையில்
அரசாங்கம் சிந்தித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து, என்னுடைய உரையை
முடித்துக் கொள்கிறேன். வணக்கம், நன்றி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்
டுவரப்பட்டிருக்கிற மசோதா ஃபீஸ் 25 ஆக இருப்பதை உயர்த்துவதற்கான
அடிப்படையில்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப்
பயன்படுத்திக்கொண்டு பல்வேறு கருத்துக்களையும் உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். சமுதாயத்தில் இருக்கிற கேடுபாடுகள், கொடுமைகள், அடகுக்
கடைகளினால் சாதாரண மக்கள் அடைகின்ற துயரங்கள் இவைகளைப்பற்றி
யெல்லாம் விவரங்கள் தரப்பட்டன.

நம்முடைய அரசாங்கம் இதிலே மிகுந்த கவனம் செலுத்தி சாதாரண
மக்கள் இப்படிப்பட்டக் கொடுமையான வட்டியாலோ அல்லது பின்பற்றப்
படுகிற முறைகேடான செயல்களினாலோ பாதிக்கப்படாத வகையிலே பல நட
வடிக்கைகளை எடுத்து வருகிறது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, ஈட்டிக் கடைக்காரர்களைப்பற்றித்தான் அதிகமாக இங்கே
பேசினார்கள் என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றியெல்லாம் அப்போ
தைக்கப்போது அரசாங்கத்திற்குத் தகவல் வருகிறபொழுது நம்முடைய அதி
காரிகள் கண்காணித்து ஒருவர் தொழில் செய்கின்ற இடத்திற்கு அந்தப்
பணத்தை வசூல் செய்வதற்குச் செல்லக் கூடாது என்று தடுக்கின்ற முயற்சி
களில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இதெல்லாம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை
எனக்கு இருக்கிறது.

இந்த பீஸைப்பற்றிச் சொல்லும்பொழுது கொஞ்சம் கடுமையாக 500 ரூபா
யாகக் கூட உயர்த்தலாம் என்றெல்லாம் யோசனை சொன்னார்கள். திரு. மணலி
கந்தசாமி அவர்களும் அதைப்பற்றிச் சொன்னார்கள். அதுவும் நல்ல யோசனை
தான். ஏற்கனவே அதை நம்முடைய அரசு பரிசீலித்து வருகிறது. பீஸை
அதிகமாகப் போட்டால் உயர்நீதி மன்றம் ஒத்துக்கொள்ளாது. இருக்கிற
தீர்ப்பின்படி 'பீஸ்' என்றால், என்ன சர்வீஸ் என்று கேட்பார்கள். ஆகவே,
பீஸை ரொம்பவும் உயர்த்தினால் சட்டப்படி நிரூபிப்பதில் தகராறு ஏற்பட்டு

1000-க்கு ஒரு வழக்கில்தான் இம்மாதிரி குறைத்து டிக்ரி பெற முடியும். அது மிகவும் அபூர்வமாக இருக்கும். ஆகவே, இதுபோன்ற வட்டிக் கடைக்காரர்கள் மிக அதிகமாக வட்டியைப் பெறுகிறார்கள், எழுத்திலே இருக்கிற வட்டி சதவிகிதம் ஒன்று, உண்மையிலே வாங்குகிற வட்டியின் சதவிகிதம் 20, 30, 36 என்ற அளவில் இருக்கிறது என்று சொன்னால், உண்மை நிலையை எடுத்துச் சொல்வதாக அது இருக்கும். நடுத்தர மக்களுக்கு அன்றாடம் பல பிரச்னைகள் எழுகின்ற நேரத்தில், உடனடியாக தேவைப்படுகின்ற அளவுக்கு, தேவைப்படுகின்ற நேரத்தில் சிறு தொகைகள் கடனாகப் பெறுவதற்குரிய நிலையங்கள் நிச்சயம் தேவை. வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டும், அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி 6.3 சதவிகிதம் என்று சொன்னாலும் அல்லது 9 சதவிகிதம் என்று சொன்னாலும், அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்திற்கு மக்கள் கடன் பெறவேண்டும் என்று சொன்னாலும், இந்த அடகுக் கடைக்காரர்கள் என்றாவது சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்திற்கு கொடுக்க முடியுமா என்று கேட்டால், கொடுக்க மாட்டார்கள். அப்படிக் கொடுக்காதவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமா என்று கேட்டால், அதுவும் முடியாது. காரணம் எழுத்தில் ஒன்று, வாய்மொழியின் மூலம் ஒன்று என்று வட்டிவிகிதம் இருக்கிறது. உண்மையிலேயே 6.3 சதவிகிதம் வட்டிக்குக் கொடுத்திருக்கலாம். அல்லது 36 சதவிகிதம் வட்டிக்கு வாங்கியிருக்கலாம். அந்தமாதிரி வட்டியையும் பெற்றிருக்கலாம். ஆனால், எழுத்தில் இருப்பது மட்டும் 6.3 சதவிகிதம் தான். நாம் சட்டத்தில் எந்த சதவிகிதம் நிர்ணயிக்கிறோமோ அந்த சதவிகித அளவிற்குத்தான் தஸ்தாவேஜு இருக்கும். ஆகவே, அடகுக்கடைக்காரர்கள் மீதும் வழக்கு தொடர முடியாது. அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதற்கு என்ன வழி என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. லத்தீப் அவர்களே சொன்னார்கள். சர்க்கார் ஒவ்வொரு கடையிலும் ஒரு அதிகாரியை வைத்து, மேற்பார்வையிட்டு, உரிய வட்டி விகிதத்திற்கு பணம் கிடைக்க வழி செய்ய முடியுமா என்றால், அதுவும் முடியாது. அப்படியிருந்தாலும் கூட, சில கோளாறுகள் நடைபெறலாம். சில அதிகாரிகள் தவறு செய்யலாம். அதிலும் தவறுகள் இருக்கத்தான் செய்யும். ஆகவே, இதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. விவசாயிகளுக்குப் பலவிதமான கடன் வசதிகளைச் செய்து தந்திருக்கிறோம். ஆகவே, அரசு பெரிய நகரங்களாக இருக்கும் இடங்களிலெல்லாம் சிறு தொகை அளவுக்கு ரூபாய் ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்ற அளவுக்கு, அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, உடனுக்குடன் ஏற்படுகிற எதிர்பாராதவிதத்தில் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையை சமாளிப்பதற்கு, இதைப்போல அல்லது உரிய பந்தோபஸ்தின் (செக்யூரிடி) பேரில் சிறு



சிறு தொகை வழங்குவதற்கு, கடன் கிடைப்பதற்கு வசதிகளைச் செய்துதர, நல்லமுறையில் சிந்தித்து, அந்த முறையில் செயல்பட்டால், அது மிகவும் நன்றாக இருக்கும். பான்-புரோக்கர் என்ற முறையே இருக்கவேண்டியதில்லை. அது இல்லாமலேயே அரசாங்கமே பான்-புரோக்கராக ஆகவேண்டும். அன்றாடத் தேவைக்குக் குறைந்த வட்டிக்கு, தேவைப்படுகிறபொழுது குறைந்த தொகையைக் கடனாகக் கொடுக்க வசதி செய்யவேண்டும். அந்த முறையில் அரசாங்கம் சிந்தித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம், நன்றி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா ஃபீஸ் 25 ஆக இருப்பதை உயர்த்துவதற்கான அடிப்படையில்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பல்வேறு கருத்துக்களையும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். சமுதாயத்தில் இருக்கிற கேடுபாடுகள், கொடுமைகள், அடகுக் கடைகளினால் சாதாரண மக்கள் அடைகின்ற துயரங்கள் இவைகளைப்பற்றியெல்லாம் விவரங்கள் தரப்பட்டன.

நம்முடைய அரசாங்கம் இதிலே மிகுந்த கவனம் செலுத்தி சாதாரண மக்கள் இப்படிப்பட்டக் கொடுமையான வட்டியாலோ அல்லது பின்பற்றப் படுகிற முறைகேடான செயல்களினாலோ பாதிக்கப்படாத வகையிலே பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, ஈட்டிக் கடைக்காரர்களைப்பற்றித்தான் அதிகமாக இங்கே பேசினார்கள் என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றியெல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கத்திற்குத் தகவல் வருகிறபொழுது நம்முடைய அதிகாரிகள் கண்காணித்து ஒருவர் தொழில் செய்கின்ற இடத்திற்கு அந்தப் பணத்தை வசூல் செய்வதற்குச் செல்லக் கூடாது என்று தடுக்கின்ற முயற்சிகளில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இதெல்லாம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த ஃபீஸைப்பற்றிச் சொல்லும்பொழுது கொஞ்சம் கடுமையாக 500 ரூபாயாகக் கூட உயர்த்தலாம் என்றெல்லாம் யோசனை சொன்னார்கள். திரு. மணலி கந்தசாமி அவர்களும் அதைப்பற்றிச் சொன்னார்கள். அதுவும் நல்ல யோசனை தான். ஏற்கனவே அதை நம்முடைய அரசு பரிசீலித்து வருகிறது. ஃபீஸை அதிகமாகப் போட்டால் உயர்நீதி மன்றம் ஒத்துக்கொள்ளாது. இருக்கிற தீர்ப்பின்படி 'ஃபீஸ்' என்றால், என்ன சர்வீஸ் என்று கேட்பார்கள். ஆகவே, ஃபீஸை ரொம்பவும் உயர்த்தினால் சட்டப்படி நிரூபிப்பதில் தகராறு ஏற்பட்டு

விடும். அதற்குப் பதிலாக, பாதுகாப்பாக நாம் டெபாசிட் வாங்குகின்ற முயற்சியில் ஈடுபட்டால், அது பயனுள்ளதாக இருக்கும் என்பதைப்பற்றி நாம் ஏற்கனவே பரிசீலித்து வருகிறோம்.

கூடுதலான வட்டியை வசூலிப்பதற்கு பல முறைகள் பின்பற்றப்படுகின்றன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இன்றிருக்கக்கூடிய நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்டின் கீழ் புரோ நோட்டு கையழுத்துப்போட்டு எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு தொகை கொடுத்திருந்தாலும், யார் குறைத்து வாங்கினேன் என்று சொல்கிறார்களோ அவர்களின் பொறுப்பில் தான் ஓனஸ் ஆஃ ப்ரூப் இருக்கிறது. அதை மாற்றலாமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். யார் வட்டிக்குக் கடன் கொடுக்கிறார் களோ அவர்கள்தான் நிரூபிக்க வேண்டும் என்ற முறையில் சட்டத்தை மாற்றி அமைக்கலாமா என்பதைப் பற்றி பரிசீலனையில் இருக்கிறது. அதனால் ஓரளவுக்கு பயன் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மேலும் மணி லெண்டர்ஸ் ஆக்ட் ஒரு சில இடங்களில்தான் அமுலில் இருக்கிறது. தமிழ் நாடு முழுவதற்கும், கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, மணி லெண்டர்ஸ் ஆக்டை அமுல் நடத்தவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை நமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதைச் சட்டமாகக் கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

இப்படி பல முயற்சிகள் எடுத்தாலும் சாதாரண மக்களை இப்படிப்பட்ட கொடுமைகளிலிருந்து தவிர்ப்பது என்பது மிக எளிதான காரியம் என்று நான் கூறிவிடத் தயாராக இல்லை. அப்படிச் செய்ய முடியும் என்று ஒத்துக்கொள் வதற்கும் தயாராக இல்லை.

விவசாயிகளுக்கு, சாதாரண மக்களுக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு தேவைப்படுகின்ற நேரத்தில் கடன் கொடுக்கின்ற முயற்சியில் நாம் வெற்றி பெற்றால்தான், இப்படிப்பட்ட கொடுமைகளிலிருந்து ஏழைகளைக் காப்பாற்ற முடியும். கூட்டுறவுத் துறை மூலம் ஓரளவுக்கு நல்ல வெற்றியை நாம் இப்பொழுது பெற்றிருக்கிறோம். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கக் கூடிய முயற்சியில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். அதிகமான அளவுக்கு இந்த முறை களிலெல்லாம் நாம் வெற்றி பெறவேண்டும் என்பதில் நாம் இப்பொழுது ஆர்வம் காட்டுகிறோம். நம்முடைய வங்கிகளெல்லாம் தேசியமயமாக்கப்பட்டவுடன் இப்படிப்பட்ட ஒரு பிரச்னை வந்தது. பூக்கடைக்காரர்கள், கல்வண்டிக் காரர்கள், காய்கறி கடைக்காரர்கள் இப்படி பல பேர்களுக்கும் கடன் வழங்கப் பட்டது.



ஒரு வங்கி சார்பில் இப்படி கடன் வழங்குகின்ற விழாவில் நான் கூடத்தான் பங்கு கொண்டேன். ஆனால், கடன் கொடுத்த தொகை என்ன ஆனது என்று யாருக்குமே தெரியவில்லை. பின்னால் நான் விசாரித்ததில் அப்படிக் கடன் கொடுப்பதற்கே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தயக்கம் காட்டுகிறார்கள். காரணம், ரிஸ்க் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும், ஏழைகளைப் பொறுத்த வரையில் ஓரளவுக்கு ரிஸ்க் அதிகமாக இருந்தாலும், ஏழைகளுக்கு என்று ஒரு தனி முறை, கூட்டுறவுத் துறையின் மூலமாகவோ, அல்லது தேசியமயமாக் கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ கொண்டுவந்தால் தான், நிச்சயம் இப்படிப் பட்ட சோஷியோ எகனமிக் ப்ராப்லம்மை நிவர்த்திக்க முடியும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டத்தை கடுமையாக ஆக்குவதினால் மட்டும், இதைத் தவிர்க்க முடியாது. இருந்தாலும், இந்தச் சட்டத்தை எந்த அளவுக்கு ஏழைகள் பாதிக்கப்பட முடியாத அளவுக்கு அமுல் நடத்தவேண்டுமோ அந்த முறையில் அமுல் நடத்து வோம் என்ற உறுதியை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

பின்னாலே நம் அமைச்சரவர்க்கள் மசோதா கொண்டு வருகிறார்கள். நகரத் திலுள்ள சாதாரண மக்களுக்கு கடும் வட்டியால் தொல்லைகள் ஏற்படக் கூடாது என்ற 'ரீலீஃப்' மசோதா இப்போது கொண்டுவர இருக்கிறார்கள். சாதாரண விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் கூட்டுறவுத்துறை மூலமும் ஏராளமாகக் கடன் கொடுத்தால் இந்த முறைகேடுகள் நீக்கப்படும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போது 25 ரூபாய் லைசென்ஸ் பீஸ் என்பதால் அரசாங்கத்துக்கு எவ்வளவு வருமானம் வருகிறது? இந்த 25 என்பது ரூ. 100 ஆக்கப்பட்டால் எவ்வளவு வருமானம் வரும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த விவரங்கள் இப்போது கையில் இல்லை. இது நிர்வாகச் செலவைப் பொறுத்தவரை, ரொம்ப நாளைக்கு முன்பு 25 ரூபாய் என்று போட்டது. அதை இன்னும் அதிகமாக்கினால் பரவாயில்லை என்று கருதினோம். இதன் மூலம் வருமானம் சம்பாதிக்கிறோம் என்று நாங்கள் வாதாட ஆரம்பித்தால் சட்டமே செல்லாது. ஆகவே, அப்படிப் போடாமல், ஓரளவு 'அட்மினிஸ்டிரேடிவ் சார்ஜஸ்" ஈடுகட்டும் முறையில் அப்படிக் கொண்டு வந்திருக்கிறோம்.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): The question is—

"That the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 8 of 1972) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU O. P. RAMAN: Sir, I move—

"That the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill 1972 (L.A. Bill No. 8 of 1972) be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

### (ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/72).

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமுன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/72) ஆய்வு செய்வதற்காக 36 உறுப்பினர்கள் அடங்கிய (24 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 12 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்

திரு. மு. சத்தியமூர்த்தி

திரு. சோ. அழகர்சாமி

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி

* 3—4—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்

திரு. எம். சுரேந்திரன்

திரு. மு. சுருளிவேல்

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்

திரு. சித. சிதம்பரம்

திரு. கே. பி. கந்தசாமி

திரு. மு. வேதாசலம்

திரு. சி. வி. எம். அண்ணாமலை

திரு. சி. பாண்டுரங்கன்

திரு. ந. தருமலிங்கம்

திரு. டி. வி. சம்பத்

திரு. இ. எஸ். தியாகராசன்

திரு. மு. மாரிமுத்து

திரு. என். மாணிக்கம்

திரு. இ. ராமசாமி

திரு. க. நாகராஜன்

திரு. பெரி. சண்முகம்

திரு. வீ. கார்த்தீசன்

திரு. எம். கோபால்

ப்

இம்மாநிலத்தில் தொழிலாளர்கள், ஊதியம் பெறுவோர், அரசு ஊழியர்கள், குறைந்த வருவாயுள்ள ஏழை மக்கள் ஆகியோரின் கடன் சுமை, குடியானவர்களின் கடன் சுமையைப் போலவே பெரும் சுமையாக உள்ளது. வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களுக்கு இவர்கள் கடுவட்டி செலுத்துகின்றனர். நேர்மைக்குப் புறம்பான அவர்களுடைய நடவடிக்கைகளில் இவர்கள் சிக்கித் தவிக்கின்றனர். இதனால் இவர்களுடைய கடன் சுமை பெருகிக் கொண்டே போவதுடன் இவர்களுடைய திறமையும் பாதிக்கப்படுகிறது. குறைந்த வருவாயுள்ள இம் மக்களுக்கு கடன் நிவாரணம் அளிக்க சட்டம் கொண்டு வந்து வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் பிடியிலிருந்து இவர்களை விடுவித்து பாதுகாப்பது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1938-ம் ஆண்டு

விவசாயிகளின் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பாதுகாப்பளித்துள்ள வகையிலேயே இவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக் கருதபட்டுள்ளது.

31—3—72 உடன் முடிவடைகின்ற இரண்டு நிதி ஆண்டுகளில் வருமான வரியோ, வேளாண்மை வருமான வரியோ ரூ. 7,200-க்கு மேற்பட்ட ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்பட்டவர்களுக்கு இப்போது கொண்டு வரப்படும் சட்டம் பொருந்தாது. 1—10—71-க்கு முன்னர் வாங்கிய கடன் குறித்தும், 1—10—1971-ல் அல்லது அதற்குப் பிறகு வாங்கிய கடன் குறித்தும் செலுத்தப்படத் தக்க தொகையினை சட்டம் வெளியிடப்பட்டதும் குறைப்பதற்கு சட்டமுன்வடிவில் விதித்துறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. கொதுவைகள் குறித்தும் விதித் துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சட்டமுன்வடிவின் முக்கியம் கருதியும் பொது மக்களின் நலனைக் கருதியும் இந்த சட்டமுன்வடிவை இணைத் தேர்வுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பக் கருதியுள்ளது. ஆகவே இதனை பேரவை ஏற்க வேண்டுமென கோருகிறேன்.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): There is an amendment given notice of by Thiru N. K. Palaniswami for circulation of the Bill. Since the hon. Member is not in his seat, it is deemed to have not been moved.

DR. H. V. HANDE: What about the general discussion on the motion?

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): I thought none of you were interested. You did not raise your hands. All right. Dr. H. V. Hande may now speak.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்புக்குரிய மாற்றுத் தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று ஒன்றிரண்டு கருத்துக்களை சுருக்கமாகச் சொல்லி விடை பெறலாம் என்று கருதுகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக தற்போதைய ஆளும் கட்சி, எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் மதிப்புக்குரிய முன்னாள் மேயர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கூட்டத்தை திருவல்லிக்கேணியில் ஏற்படுத்தி, மதிப்புக்குரிய தற்போதைய கல்வியமைச்சர் அவர்களும் நானும் பல நண்பர்களும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றுக்கொண்டு இம்மாதிரியான ஒரு மசோதாவை அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என்கிற அந்தத் தோரணையில் பல கருத்துக்களை எடுத்துச்





சொன்னோம். அப்படிச் சொல்லக்கூடிய அளவிற்கு அப்போதிருந்த நிலைமை அவ்வளவு பயங்கரமாக இருந்தது. இங்கே நம்முடைய கோட்டையிலே, செக்ரடேரியட்டில் பணியாற்றக் கூடிய ஆயிரக்கணக்கான தோழர்கள், அவர்கள் ஒன்றும் தேதி சம்பளம் எடுத்துக் கொண்டு வரும் நேரத்தில், அருகாமையிலே அவர்களை மடக்கி, சில பட்டாணியர்கள் அவர்களை மிரட்டி அந்தப் பணத்தில் வட்டி வாங்கிக் கொள்ளக்கூடிய பயங்கரக் காட்சியை எல்லாம் நாங்கள் பார்த்து, பல நண்பர்கள், அதனால் "விக்டிம்ஸ்" ஆக இருப்பவர்கள், அதனால் பாதிக்கப்படுவதை வெளிப்படையாக சொல்லிக் கொள்வதற்கு கூட அஞ்சக் கூடிய ஒரு நிலைமை பல்லாண்டுகளாக வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும்.

இந்தமாதிரி பட்டாணியர்கள் செக்ரடேரியட்டில் வந்து சம்பளம் வாங்கிக் கொண்டு போகிறவர்கள் கொடுக்கவில்லையென்றால், அவர்கள் இல்லத்திற்கு வந்து அங்கே மிரட்டும் காட்சி நடக்கிறது. பக்கத்தில் இருப்பவர்களுக்கு தெரிந்து விடக்கூடாதே என்ற கவலையுடன் அங்கே உள்ள நண்பர்கள் எப்படியாவது பணம் கொடுத்து அனுப்பும் அகோரக் காட்சியை பல நேரத்தில் பார்க்கிறோம். இதுபற்றி ஏதாவது செய்யுங்கள் என்று ஆயிரக்கணக்கான 'லெட்டர்ஸ் டு தி எடிட்டர்' வந்தது நமக்கெல்லோருக்கும் தெரியும்.

அதில்லாமல் எந்த அளவு வட்டி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால்— சொல்கிறார்கள்—ஒரு ரூபாய்க்கு ஓரணா, இரண்டணா மாதத்திற்கு என்று; ஓராண்டுக்கு எடுத்துக் கொண்டால் 100%, 125%-க்கு மேலே போகிறது. ரூபாய்க்கு ஓரணா, இரண்டணா என்று சொல்லி வட்டியை முதலில் கழித்துக் கொண்டு முதலைக் கொடுக்கிறார்கள். இப்படியெல்லாம் பயங்கரமான நிலைமை இருப்பதால், குறிப்பாக, என்.ஜி.ஓ.-க்கள் இதனால் நிச்சயம் நன்மையடைவார்கள்.

அது மட்டுமல்ல. "ஃபிக்செட் இன்கம் க்ரூப்" சிப்பந்திகள் இதனால நன்மையடைவார்கள். இந்தமாதிரியாக வெளிப்படையாக சொல்லிக் கொள்ள முடியாத கஷ்டத்தில் இருந்தது.

அடுத்து, பணம் கொடுக்கும்போது கூட எழுதுகிறார்கள். 100 ரூபாய் என்று எழுதுகிறார்கள்; ஆனால் கொடுப்பது ரூ. 75 தான். 75 ரூபாய் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருதால்தான் கடன் ரூ. 100 கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

இப்படி கோடிக்கணக்கான ரூபாய்கள் நம்முடைய தமிழகத்திலிருந்து எங்கோ போகக் கூடிய பயங்கரக் காட்சியை நாங்கள் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறோம். இது பற்றி பல பேர் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு

மடங்கும் அதற்கு மேலே வட்டி கொடுத்திருந்தால் தள்ளுபடி செய்யவேண்டும். அது நியாயம்தான். எனக்குத் தெரிந்தவரை ஒரு ஆண்டு, ஒன்றரை ஆண்டுக்குள் இரண்டு மடங்குக்கு மேல் கொடுத்திருப்பார்கள். இரண்டு விஷயங்களைக் கேட்கலாம். அதிலே பேப்பரில் அவர்கள் எழுதுவதை நாம் உண்மை என்று நம்ப முடியாது. பேப்பரில் எழுதுவது பொய்தான். பணம் கொடுப்பது, வட்டி ரேட் எழுதுவது எல்லாம் உண்மையல்ல. அதற்கு மேலே வட்டி வாங்குகிறார்கள். குறைவாக அசல் கொடுக்கிறார்கள். பேப்பரில், பத்திரத்தில் இருக்கும் அளவிற்கு பணம் கொடுத்திருக்கிறார்களா, அது எந்த அளவிற்கு உண்மை என்று சி.ஐ.டி இலாகா மூலம் ஒரு சின்னப் பிரிவு ஏற்படுத்தி அதைக் கண்காணிக்கவேண்டும்.

இரண்டாவது பயங்கரம், 6 அடி, ஆறரை அடி உயரமுள்ள பட்டாணியர்கள் வந்து மிரட்டுவது. இந்த அளவிற்கு நன்மை செய்யும் அரசாங்கம் அதை சற்று கண்காணித்து அதற்குத் தக்க பாதுகாப்பு ஏதோ ஒரு 'செல்' மாதிரி அமைத்து, அல்லது போலீஸ் இலாகாவில் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு குறிப்பு கொடுத்து, இதுமாதிரி யாராவது மிரட்டினால், அப்படி உடனடியாகத் தெரிவித்தால், இந்தச் சட்டத்தின்கீழ் கடுமையான நடவடிக்கை அவர்கள் மீது எடுக்க முடியும் என்று சொல்லி அதற்கான ஏற்பாட்டை, அரசாங்கம் அதற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் முழு மனதுடன் வரவேற்று, வார்த்தைகளை முடித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவாவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில், எனக்கு முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பழைய நினைவை இங்கே ஏற்படுத்தி விட்டார்கள். 1964-ம் ஆண்டில் என்று கருதுகிறேன். திருவல்லிக்கேணியில் என்னை கௌரவத் தலைவராகவும், முன்னாள் மேயர் கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தலைவராகவும் கொண்டு, அந்த வட்டாரத்தில் இருக்கிற தொழிலாளர்கள், சர்க்கார் சிப்பந்திகள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோர் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். அந்தச் சங்கத்தின் பெயர் 'கடன்பட்டு அவதியுறுவோர் சங்கம்' என்பது. அதன் தலைவர் என்ற முறையில், அவர்கள் படும் கஷ்ட நிலைகளைப் போக்கவேண்டுமென்று இதே மன்றத்தில் பேசினேன். அப்போது இங்கே ஆளும் கட்சியாக இருந்தவர்கள் என்னுடைய பேச்சை கேலி செய்தார்கள். சமுதாயத்திலே இருக்கின்ற பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் தரவேண்டுமென்று அப்போதிருந் அரசுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எண்ணமில்லை. அதைப் போக்குகின் வகையில், சமுதாயத்தை நல்லமுறையில் ஆக்கவேண்டுமென்ற ஆர்வத்தோ அமைக்கப்பட்ட முன்னேற்றக் கழக அரசு, சாமானியர்கள் நலனுக்கா





அமைக்கப்பட்ட அரசு என்பதற்கேற்ப, அந்தச் சாமானியர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற கருத்துடன் இன்றைய தினம் பல நல்ல சட்டங்களை இங்கே கொண்டுவந்திருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நில உச்சவரம்பு, அடகு சுமைக் குறைப்பு, கடன் நிவாரணச் சட்டம், அடுத்து விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் என்று சமுதாயத்திலே சாமானிய மக்களின் சுமைகளைக் குறைக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் ராஜாஜி அவர்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. நல்லது இருந்தால் பாராட்ட வேண்டும். எதைச் செய்தாலும் எதிர்த்துக்கொண்டே இருந்தால் நாட்டில் எந்த அரசியல் கட்சியும் உறுதி பெற முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற சித்தாந்தத்தை அறிந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். இதை மற்ற அரசியல் கட்சிகளும் உணர்ந்துகொள்ள வேண்டும். ராஜாஜி அவர்கள் 1932-ம் ஆண்டில் விவசாயக் கடன் நிவாரணச் சட்டத்தை அகில இந்தியாவுக்கே வழிகாட்டி என்ற முறையில் தமிழ்நாட்டில் கொண்டு வந்தார்கள். அதனால் தப்பிப் பிழைத்த குடும்பங்கள் ஏராளம். அதிலே என்னுடைய குடும்பமும் ஒன்று.

அந்தச் சட்டத்திற்குப் பிறகு, அதிலே இருக்கின்ற குறைகளை களைகின்ற வகையில் இப்படிப்பட்ட ஒரு சட்டம் வர இருக்கிறது என்றாலும், இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில் நல்ல பலன் ஏற்படப்போகிறது என்பதில் ஐயமில்லை. முதல் கட்டமாக, வாங்கிய தொகையை விட அதிகமாக வட்டி கொடுத்துவிட்டு, மேற்கொண்டும் கொடுக்க முடியாத நிலையில், ஈட்டிக்காரன் தொல்லை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த குடும்பங்கள் பலப் பல. அந்த ஈட்டிக்காரன் தொல்லையினால் மனைவி மக்களை விட்டுவிட்டு, ஊரை விட்டு ஓடிய கணவன்மார்கள் ஏராளம்.

மேல்போக்காகப் பல பிரச்சனைகளை, மேல்போக்காகப் பல கருத்துக்களைச் சொல்வது ஒன்று. அதைச் செயல்படுத்துவது என்பது வேறு. அந்த முறையிலேதான் நாட்டிலே நடைபெற்று வருகின்றன. ஆனால் எந்தக் கருத்துக்களை ஒரு அரசியல் கட்சி தன்னுடைய தேர்தல் பிரகடனமாக வைத்ததோ, அந்தக் கருத்துக்களை இன்று சட்டமாகக் கொண்டுவந்திருக்கிறது அந்தக் கட்சி. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் எல்லா அரசியல் கட்சிகளும் சோஷலிஸம் பேசினாலும், தங்கள் தேர்தல் பிரகடனத்திலே பற்பல சோஷலிஸக் கருத்துக்களைச் சொன்னாலும், அகில இந்தியாவிலே எந்த மாநிலமும் செய்யாத அளவில் சாமானிய மக்களுக்கு, சாதாரண மக்களுக்கு, தொழிலாளர் வர்க்கத்தினருக்கு நல்ல உருப்படியான சட்டங்களை எங்களுடைய முன்னேற்றக் கழக அரசு

கொண்டு வந்திருக்கிறது என்பதை சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் நன்கு உணருவார்கள். மற்ற மாநிலங்களும் பாராட்டுகின்ற வகையிலே முன்னோடியாகச் செல்கிறது முன்னேற்றக் கழக அரசு என்பதைப் பார்க்கின்ற போது நான் பூரிப்படைகிறேன்; பெருமையடைகிறேன்; பாராட்டுகிறேன்.

இன்னொரு கருத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை எல்லோருக்கும் ஏற்படுகிறது. ஏழைகளானாலும், வசதி படைத்தவர்களானாலும், ஏராளமான சொத்துக்கு உரிமை படைத்தவர்களானாலும் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை எல்லோருக்கும் ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகின்ற நேரத்தில்—உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், திடீரென்று வீட்டிலே இருக்கின்ற மனைவிக்கு பிரசவ வேதனை வந்துவிடுகிறது. அதற்கு 200 ரூபாய் தேவைப்படுகிறது என்றால் நண்பர்களிடத்தில் கேட்டு வாங்கலாம். நண்பர்களிடத்தில் பணம் இல்லை என்றால் ஏதாவது கொண்டுவந்து அடமானம் வைத்துதான் கடன் வாங்கவேண்டும். அதுவும் இல்லை என்றால், 200 ரூபாய் கிடைக்காததால் தன்னுடைய அருமை மனைவியை இழந்து, குழந்தை குட்டி-களோடு தெருவிலே நிற்கின்ற காட்சியைத்தான் காணவேண்டும். அதற்கு என்னென்ன பரிகாரம் காண்பது என்பதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த மசோதாவைப் பொறுத்த அளவில் இன்றைய தினம் யாராவது ஒழுங்காக பணத்தைத் திருப்பிக் கட்டுகிற நிலைமை இருந்தால், அவர்களுக்கு திடீரென்று ஏதாவது கடன் தேவைப்பட்டால், அந்தக் கடனுக்காக உத்தரவாதம் அளிப்பதற்கு, அந்த வட்டார எம்.எல்.ஏ. அல்லது பஞ்சாயத்துப் போர்டு உறுப்பினர் அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவர் அல்லது சொத்து வைத்திருக்கின்றவர்கள் உடனடியாக நாங்கள் இதற்குக் காரண்டி தருகிறோம் என்று சொன்னால் ஒரு மணி நேரத்திற்குள்ளாக ஆங்காங்கே இருக்கின்ற நாஷனலைஸ் செய்யப்பட்ட எல்லா பாங்குகளிலும், கூட்டுறவு பாங்குகளிலும் தனி நபர் உத்தரவாதத்தின் பேரில் கடன் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநகரிலே காய்கறி விற்று காலம் தள்ளும் ஏழை மக்கள், வசதி இழந்து அல்லல்பட்டு பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் திடீரென்று பணம் வேண்டுமென்று கேட்டால் அவர்களுக்கு சாதாரணமாக பணம் கிடைப்பது இல்லை. அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் ஆங்காங்கே இருக்கின்ற கூட்டுறவு பாங்குகளில் 'புவர்மேன் பாங்கு' என்ற இவைகளைத் திறக்கவேண்டுமென்ற கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாக நான் அறிகிறேன். அந்தத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் ஆங்காங்கே வாழ்கின்ற ஏழை மக்களுக்கு கடன் உதவி செய்வதற்கு நாம் தனியாக, ஒவ்வொரு தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகள் மூலமாக ஆங்காங்கே 'புவர்மேன் பாங்கு' திறக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். ஆனால் அதற்கான உத்தரவு வடக்கே இருக்கின்ற அரசிலும்—நமக்கு மேலே இருக்கின்ற அரசிலும், ரிசர்வ் பாங்கி யிலும் பிறப்பிக்கப்பட்டப் பின்னால்தான் ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம், ஏழை எளிய மக்களுக் காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம், பல்வேறு மாநிலங்களும் பின்பற்ற கூடியச் சட்டமாக, ஏன் இந்தியாவுக்கே வழி காட்டுகின்ற சட்டமாக விளங்க கூடிய இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்ற என்னுடைய திராவிட முன்னேற்றக் கழக அரசை பாராட்டி, என் உரையை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, மசோதா கடன் நிவாரண வழிவகைக் காண்பதற்காக இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. கடன் தொல்லை களினால் தொழிலாளர்கள், சாதாரணத் தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்ற வர்கள், சர்க்கார் துறைகளிலே வேலைசெய்கின்ற என்.ஜி.ஓ.-க்கள் இவர்க எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்பது நாம் எல்லாம் அறிந்த ஒன்று. ஆன கடன் தொல்லைகள் இந்தமாதிரி நாட்டிலே இருக்கின்றது என்று எண்ணு போது கடன் கொடுத்தவர்கள் மட்டுமல்ல, கடன் வாங்கியவர்கள் கூட அதற்கு பொறுப்பாளர்களாக இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்திட முடியாது இந்தக் கடன் தொல்லை சமுதாயத்தினுடைய ஒரு குறையாக, சமுதாயத்தி னுடைய ஒரு பலவீனமாக இன்று இருக்கிறது என்று சொன்னால், அதற்கு கடன் கொடுத்தவர்கள் மட்டுமல்ல, கடன் வாங்கியவர்களும் பொறுப்போ நடந்துகொள்ள வேண்டும். அதற்குக் கடன்பட்டவர்கள் மட்டுமல்லாமல் கட வாங்கியவர்களும் கூட பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும். என்.ஜி.ஓ பிரச்சினையைப்பற்றியும் சொன்னார்கள். சர்க்கார் துறையில் வேலைசெய்கி என்.ஜி.ஓ.-க்கள் குறைந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள். கடன் வாங்கிவிட்டா கடன்காரன் கோட்டை வாசலில் வந்து நின்றுவிடுகிறான், எமன் போல. எமனை ஏமாற்றலாம். ஆனால் இவனை ஏமாற்ற முடியாது. அவர்கள் நெஞ்ச கலக்கத்தை எப்படிச் சொல்வது? "கடன் பட்டார் நெஞ்சம்போல கலங்கினா இலங்கை வேந்தன்" என்பதாக கம்பர் பாடியதுபோல, 'கடன்பட்டவர்களி கலக்கம் போல இலங்கை வேந்தன் கலக்கம் இருந்திருக்கிறது' என்பது கம்ப கூற்றில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

**திரு. துரைமுருகன் :** கடன்பட்டார் நெஞ்சம்போல என்கிற வரிகள் கம்பர் பாடல்கள் எதிலும் வரவில்லை. அந்தப் பாட்டை எங்கே கம்பர் பாடினூர் என்று விளக்க வேண்டுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அந்தப் பாட்டைக் கேட்டு நம் துரைமுருகன் ஏன் கலங்குகிருர் என்று தெரியவில்லை.

**திரு. துரைமுருகன் :** கம்பர் பாடல்கள் எதிலுமே வராத பாடலைச் சொல்லி, கம்பர் பாடினூர் என்பதாக தமிழ் இலக்கியத்திலேயே இல்லாத புரட்சியை ஏற்படுத்தப் பார்ப்பது கண்டுதான் கலங்கினேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :** அது கம்பர் பாடிய பாடல் அல்ல. அந்தக் கருத்து ஒரு தனிப் பாடலாக இருக்கிறது. இலக்கியங்களில் இருந்து மேற்கோள்காட்ட விரும்புகிற உறுப்பினர்கள் அதை நன்கு தெரிந்து மேற்கோள் காட்டுவதுதான் இலக்கியத்திற்கு நாம் கொடுக்கிற மரியாதையாக இருக்கும். இன்னும் இதுபோன்ற மசோதாக்கள் வருகிறபோது இதற்குச் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதே முக்கியம். திரு. லத்தீப் அவர்கள் இன்னும் ஒரு நிமிடத்திற்குள் தம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். மேலும் மூன்று நான்கு மசோதாக்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவேண்டுமே என்பதுதான் என் கலக்கம் எல்லாம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அதை கம்பர் சொன்னூரோ, யார் சொன்னூரோ—சொன்னவர் நன்ருகச் சொல்லியிருக்கிருர். கடன்படுகிறவர்களுடைய கலக்கத்தைப் போக்க அலுவலகங்களில் வேலை செய்கிறவர்களுக்கு ஹெட் ஆப் டிபார்ட்மெண்ட்ஸ்—அவர் இன்ன காரணத்திற்காக கடன் கோரியிருக்கிருர், அது நியாயமானது, கடன் வழங்கலாம் என்பதாகச் சிபார்சு செய்தால் கடன் கொடுக்கலாம், அப்படி சிபார்சு செய்யப்படாதபோது கடன் கொடுக்கக்கூடாது என்று செய்யலாம். (மணி அடிக்கப்பட்டது) இன்னெரு விஷயம்—மிகவும் முக்கியமானது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :** முக்கியமானதை முதலில் சொல்லிக்கொள்ள வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** டிகிரி ஆனபிறகு எக்சிக்யூஷன் ப்ரொசீடிங்ஸ் போதும்—ஒருவனுக்கு சம்பளமே 300 ரூபாய் இருக்கும்—500 ரூபாய்க்கு டிகிரியை எடுத்துக்கொண்டுவந்துவிட்டால் அந்த 300 ரூபாயையும் அப்படியே பிடித்து விடுவது கூடச் சரியில்லை. அந்த மாதம் சாப்பாட்டுக்கே அவர்கள் நிலை அம்போ என்று ஆகிவிடும். இதுபோன்ற நிலையிலும் கூட பத்து ரூபாய் இருபது ரூபாய் அல்லது மாக்ஸிமம் 25 ரூபாய்க்கு மேல் ஒரு மாதச் சம்ப



ளத்தில் பிடிக்காது இன்ஸ்டால்மெண்டாக டிகிரியாகிய அந்தக் கடனைப் பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :** இனி பேச இருக்கிற உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இதுவரை சொல்லப்பட்ட கருத்தை திரும்பச் சொல்ல வேண்டாம். மசோதாவுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும் குறுகிய காலத்திற்குள் சொல்லி முடிக்கவேண்டும் என்று காலநெருக்கடி குறித்து வேண்டுகோள் விடுக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, கடன்பட்டோர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை முழுமனதுடன் வரவேற்கிறேன்.

1938-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மசோதா நடைமுறையில் இருந்தாலும் கடன் கொடுக்கக்கூடியவர்கள் அந்தச் சட்டத்திலிருந்து பலவழிகளின் மூலமாக தப்பிவிடுகிருர்கள். கொடுக்கின்ற தொகைக்கு எழுதி வாங்கும்போது மட்டும் அல்ல, வட்டிகள் கட்டும்போதும் பலவிதமான உத்திகளைக் கையாள்கிருர்கள். ஒத்தி வைக்கிறபோது கூட நிலத்தை நம்பிக்கைக் கிரயமாக எழுதி வாங்கிக் கொண்டுதான் கடன் கொடுக்கிருர்கள். நூறு ரூபாய் கொடுத்தால் அதைப் போல மூன்று நான்கு மடங்கு எழுதி வாங்குவது, வட்டி கொடுத்தால் வரவு வைப்பதில்லை—இதன் காரணமாக இன்றைய தினம் உண்மையான கடன் என்ன, எவ்வளவு திருப்பித் தரப்பட்டுவிட்டது என்பதுபோன்ற விவரங்களை தஸ்தாவேஜி கொண்டுமட்டும் பார்த்துப் பயன் இல்லை. கடன் வாங்கியவர்கள் மட்டும் அல்ல—கடன் கொடுத்தவர்கள் ரெக்கார்டில் ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்திருப்பதற்கான ஆதாரம் இருக்கிறதா, அதற்கான இன்கம்டாக்ஸ் கட்டியிருக்கிருர்களா என்பதைப்பற்றி எல்லாம் ஆராய வேண்டும். இப்படி உண்மையாக கொடுக்கப்பட்ட கடன்—பாக்கி இவைபற்றி எல்லாம் கிராம அளவில் ஒரு கமிட்டி—பஞ்சாயத்து கோர்ட் போல அமைத்து பரிசீலிப்பதுதான் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

செலக்ட் கமிட்டிக்குப் போய் இது சட்டமாக வருவதற்குள் பலபேர் கோர்ட்டுகளுக்குப் போய், டிகிரிகள் எடுத்து ஆடுமாடுகள், சொத்து சுதந்திரங்களை ஜப்தி செய்துவிடுகிற நிலைமை கூட ஏற்படலாம். ஆகவே இடைக்காலத்தில் இதுபோல கோர்ட் நடவடிக்கைகள் எதுவும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யவேண்டும். சட்டப்படி 6% தான் வட்டி என்கிருர்களே தவிர நடைமுறையில் 36%-க்குக் குறைந்த வட்டி கிடையாது. அதன் காரணமாக கடன் கொடுக்கும்போதே இந்த அதிக வட்டித் தொகைகளையும் சேர்த்து நோட்டாக—கொடுக்கப்பட்ட பணமாக எழுதி வாங்கிவிடுகிருர்கள்,

இதை எல்லாம் கண்டுபிடிக்கத்தான் கிராம அளவில்—பஞ்சாயத்து கோர்ட் போல அமைக்க வேண்டும் என்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்றைக்கு மாண்புமிகு ராஜாஜி அவர்களால் விவசாயிகளுக்குக்கான கடன் நிவாரண மசோதா கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதோ அதற்குப் பிறகு இன்று வரையிலும்—நாளைக்கு என்ன வருமோ தெரியாது—கடன் கொடுப்பவர்கள் யாரும் கடன் கொடுக்கிற தொகையை அப்படியே போட்டு எழுதி வாங்கினது கிடையாது. 100 ரூபாய் கொடுத்தால் 300-க்குக் குறைந்து எழுதி வாங்குவது கிடையாது. இதைக் கருத்தில் கொண்டும் இந்தச் சட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். நான் தெளிவாகக் கூறுகிறேன். இதிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. கற்பனையும் இல்லை. அதிக வட்டி வாங்குவது என்பது சர்வசாதாரணமாகி விட்டது. வார வட்டிகூட வாங்குகிறார்கள். 100-க்கு ஒரு வாரத்திற்கு ஒரு ரூபாய் என்று வட்டி வாங்குகிறார்கள். இப்போது அந்த வட்டி விகிதம் கூடுதலாகி, 2 ரூபாய் என்ற அளவிற்குக்கூட வட்டி வாங்குகிறார்கள். சிலர் ஒரு மாதத்திற்கு 4 வாரங்கள், ஒரு வருஷத்திற்கு பன்னிரண்டு மாதங்கள் ஆகவே, பன்னிரண்டு இன்டு நான்கு, அதாவது 48 வாரங்கள் எனக் கணக்கிட்டு 48 ரூபாய் வட்டியாக வாங்குகிறார்கள். இன்னும் சிலர் புத்திசாலித்தனமாக ஒரு வருஷத்திற்கு 52 வாரங்கள்தானே என்று சொல்லி, 52 வாரத்திற்கு 52 ரூபாய் வட்டியாக வாங்குகிறார்கள். இப்பொழுது 100-க்கு வாரத்திற்கு 1 ரூபாய் என்பது மாறி, 100-க்கு ஒரு வாரத்திற்கு 2 ரூபாய் என்கிற நிலையில் 100-க்கு ஒரு வருஷத்திற்கு வட்டி மட்டும் 104 ரூபாய் ஆகிவிடுகிறது. இன்னும் சிலர் நியாய உணர்வோடு 18 பர்சென்ட் என்று வட்டி வாங்குகிறார்கள். கடன் கொடுக்கும்போது, கடன் கொடுத்த தொகைக்கும் மேலாக 'நோட்டு' எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். இப்படி 100 ரூபாய் கடன் கொடுத்தால் அதற்கு 300 ரூபாய், 400 ரூபாய் என்று நோட்டு எழுதி வாங்கிக்கொள்கிறார்கள். கொடுத்தத் தொகைக்கு மேலே நோட்டில் எழுதுகிறார்கள். கடன் கொடுத்த 'தொகையைவிட இரண்டு மடங்கு செலுத்தப்பட்டிருந்தால் பூராத் தொகையும் கழிந்துவிட்டதாகக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு தொகை நோட்டிலே இருக்கிறதோ அவ்வளவு தொகை உண்மையில் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) தனிப்பட்டவர்கள் கடன் கொடுத்தது செல்லாது என்று சொல்லி விடுவதிலும் சங்கடம் இருக்கிறது. தேவையான பணத்தை அரசாங்கத்தால் கொடுக்க முடியாது.



மற்றும் நாம் மட்டும் இம்மாதிரியான சட்டத்தைச் செய்துவிடுவதில் பயனில்லை. அண்டை மாநிலங்களிலும் தனிப்பட்டவர்கள் கொடுத்த கடன் செல்லாது என்கிற முறையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். பொதுவாக நாடு முழுவதற்கும் மத்திய சர்க்கார் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் நல்ல முறையில் இதைச் செய்ய முடியும். ஆகவே, எந்தப் பணத்தையும் வங்கியில் வாங்கி, திருப்பிக் கட்டுவதற்கான வழிவகை செய்ய வேண்டும். செலக்ட் கமிட்டியிலே இருப்பவர்கள் இதை ஆழ்ந்து பரிசீலிக்கவேண்டும். நோட்டிலே கண்ட அளவு பணம் செலுத்தப்பட்டிருந்தால் கடன் தொகை தீர்ந்ததாகக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிலே ஆரம்பத்திலே முதலில் பணம் கொடுத்தார்கள். இப்போது பணம் கொடுப்பது குறைவாக இருக்கிறது. நேஷனலைஸ்டு வங்கியோ, ஷெட்யூல் வங்கியோ கடன் வாங்கியவர்களிடம் கோர்ட்டுக்குப் போய்தான் பணம் திரும்ப வாங்க வேண்டியிருக்கிறது. அக்ரோ-இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனும் முதலில் கோர்ட்டுக்குப் போய்த்தான் பணம் வசூலித்தார்கள். பின்னர் ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் வசூலிக்க அதற்கு அதிகாரம் கொடுத்ததால் சுலபமாக வசூலிக்க முடிகிறது. ஆகவே, நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளுக்கும்; ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் கடனைத் திரும்ப வசூலிக்கும் அதிகாரம் கொடுத்தால் கடன் வசூல் சுலபமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெண்களின் பெயரால் சீதனமாகக் கொடுக்கப்பட்டவைகளுக்கு, பெண்களின் பெயரால் நோட்டு எழுதியிருந்தால் அதற்கு எவ்வளவு வட்டி போட்டாலும் செல்லுபடியாகும் என்று இருக்கிறது. எல்லோரும் பெண்களின் பெயரில் நோட்டு எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். சீதனப் பணமாக இருந்தாலும் குறைந்த வட்டி 6¼ பர்சென்ட்டுக்கு மேல் வட்டி வாங்கக் கூடாது என்று திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, one minute please. I want a clarification.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : You can ask that in the next Bill ; I will allow you.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் நல்ல குறிக்கோளின் அடிப்படையில் கொண்டுவந்திருப்பதைக் கண்டு எல்லா உறுப்பினர்களும் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். அதனுடைய நன்மை—தீமைகளை ஆராய்ந்து, தங்களுடைய மேலான ஆலோசனை

களைக் கூற வேண்டுமென்பதற்காகத்தான் பொறுக்குக் குழுவுக்கு இன்றைக்கு அனுப்பப்பட இருக்கிறது. 1938-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் அடிப்படைக் கருத்தையொட்டி, இன்றைக்கு விவசாயிகள் மட்டுமல்லாமல், குறைந்த வருமானமுள்ளவர்கள், தொழிலாளர்கள், அரசுத் துறையில் பணியாற்றுபவர்கள், வருமானவரி செலுத்தாதவர்கள் ஆகியோர்களுக்குப் பலன் அளிக்கிற வகையிலே திருத்தச் சட்டமாகக் கொண்டுவர இருக்கிறோம். ஆகவே, பொறுக்குக் குழு உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருந்து எந்தெந்த வகையில் செயல்படுத்தினால் நல்லதாக இருக்கும் என்கிற கருத்தைச் சொல்லி, மீண்டும் விவாதத்திற்கு வரும்போது, ஏழை மக்கள் வட்டிக்காரர்களுடைய தொந்தரவுகளிலிருந்து விடுபடுவதற்கு நல்ல முறையில் வழிவகை காணவேண்டும் என்கிற வகையில் கொண்டுவரும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(Thiru K. M. Subramaniam stood in his seat).

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): There are occasions for it. I am quite aware of that. I will permit you later.

The Government motion was put and carried and the Bill was referred to a Joint Select Committee.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): Under Rule 139 (1) of the Assembly Rules, I nominate the Hon. Thiru O. P. Raman, Minister for Electricity and Minister in-charge of the Bill as a member of the Joint Select Committee.

### (உ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாயிகள் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1972).

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு விவசாயிகள் நிவாரண (திருத்தச்) சட்டமுன்வடிவை * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1972) ஆய்வு செய்வதற்காக 36 பேர்கள் அடங்கிய (24 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 12 சட்ட மேலவை

* 3—4—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்:—

திரு. ஆர். பொன்னப்ப நாடார்
திரு. மு. சத்தியமூர்த்தி
திரு. சோ. அழகர்சாமி
திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
திரு. வா. மை. அப்துல் ஜப்பார்
திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்
திரு. எம். சுரேந்திரன்
திரு. மு. சுருளிவேல்
திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்
திரு. சித. சிதம்பரம்
திரு. கே. பி. கந்தசாமி
திரு. மு. வேதாசலம்
திரு. சி. வி. எம். அண்ணாமலை
திரு. சி. பாண்டுரங்கன்
திரு. ந. தருமலிங்கம்
திரு. டி. வி. சம்பத்
திரு. இ. எஸ். தியாகராசன்
திரு. மு. மாரிமுத்து
திரு. என். மாணிக்கம்
திரு. இ. ராமசாமி
திரு. க. நாகராஜன்
திரு. பெரி. சண்முகம்
திரு. வீ. கார்த்திகேயன்
திரு. எம். கோபால்

இம் மாநிலத்திலுள்ள கடன் பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன் தமிழ் நாடு 1938-ம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 4/1938) இயற்றப்பட்டது. மேற்படி சட்டத்தின்

விதித் துறைகள் பல செல்திறனற்றவை; தற்போதைய காலத்திற்கு ஒவ்வாதவை; இம் மாநில விவசாயிகள் பெரும் கடன் சுமையினால் இன்னமும் இன்னலுறுகின்றனர். கடன் சுமை காரணமாக, இம் மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. பெரும் கடன் சுமை காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னலை நீக்க, இச் சட்டத்தைத் தக்க வகையில் திருத்துவது அவசியம் எனக் கருதப்படுகிறது. இச் சட்டத்தை மாற்றலாகியுள்ள பகுதியிலும் நீட்டிக்கக் கருதப்படுகிறது.

உத்தேசத் திருத்தச் சட்டம் வெளியிடப்படும் நாளன்று விவசாயிகள் செலுத்தத்தக்கக் கடன்களைக் குறைக்க கருதப்பட்டுள்ளது.

திருத்தச் சட்ட முன்வடிவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும், பொது மக்களின் நலனைக் கருதியும், திருத்தச் சட்ட முன்வடிவை இணைத் தேர்வுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பலாம் என்று கருதப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இப் பேரவையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: What I wanted to say was this. In the City of Madras, there are no agriculturists. There is a Law saying that "attachment before Judgment" can be resorted to. It is a very very old Law in this country, when without giving any notice to the man who has borrowed money, the Court gives an order one fine day and the Sindhi or somebody from whom he had borrowed money goes and attaches his salary, property, etc. Is there any protection against that. That is only I wanted to ask of the Hon. Minister.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அட்டாச்மெண்ட் பிஃபோர் ஜட்ஜ்மெண்ட் கூடவே கூடாது என்று வாதிடுவது தவறு. அதற்குக் காரணம், நீதிபதி டிஸ்கிரஷனிலே மிகவும் கவனமாகப் பரிசீலித்து, அட்டாச்மெண்ட் பிஃபோர் ஜட்ஜ்மெண்ட் கொடுக்காவிட்டால் ஒரு பேரிழப்பு அந்தக் கடன்காரர்களுக்கு வரும் என்று உணர்ந்தால்தான் கொடுக்க வேண்டும். தவறாகக் கொடுத்திருந்தால் நீதிமன்றத்திற்குச் சென்றுதான் வாதாட வேண்டும். ஆனால் எல்லாவற்றையும் அட்டாச்மெண்ட் செய்ய முடியுமென்று சொல்வது தவறு. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களின் அல்லது ஊழியர்களின் சம்பளங்களை முழுவதும் அட்டாச்மெண்ட் பண்ணலாம் என்று சொன்னார்கள். ஆனால் சி.பி.சி. யில் 60-வது பிரிவில் எதை எதை ஜப்தி செய்யக்கூடாது என்பதற்கு விதிவிலக்கு



இருக்கிறது. அதிலும் குறிப்பாக அரசாங்க ஊழியர்களுக்கு விதிவிலக்கு இருக்கிறது. உழைப்பாளிகளுக்கும் அவர்களுடைய வேஜஸிற்கும் அதில் விதிவிலக்கு இருக்கிறது. அட்டாச்மெண்ட் பிஃபோர் ஜட்ஜ்மெண்டினால் தவறுகள் நடைபெறலாம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும் அட்டாச்மெண்ட் பிஃபோர் ஜட்ஜ்மெண்ட் கூடவே கூடாது என்று சொன்னால் அது ஆபத்தை விளைவிப்பதற்குக் காரணமாக இருக்கும்.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் ஒரு தொகை ஒருவரிடத்திலே தேங்கி நிற்கிறது. அந்தத் தொகை இன்னொருவருக்குச் சேர்க்கப்பட வேண்டிய தொகை. அதைச் சேர்ப்பதற்குள்ளாக கடன்காரர்கள் அதைப் பெற விரும்புகிறார்கள், நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். இந்தத் தொகையை மூன்றாம் நபருக்கு இரண்டாவது நபர் செலுத்த வேண்டும். அதற்குப் பதிலாக கோர்ட்டுக்குக் கொண்டு வாருங்கள் என்று சொல்லும்பொழுது எனக்கும் மூன்றாவது நபருக்கும் உள்ள பிரச்னையைத் தீர்த்தபிறகுதான் விடுவிக்க வேண்டுமென்று கேட்பதற்கு உரிமை இருக்கிறது. சில சமயங்களில் அது நல்லதாக இருக்கும். ஆனால் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல் கவனத்தோடு இந்த உத்தரவைப் போடாவிட்டால், காரணங்கள் இல்லாமல் போடப்பட்டால், அவசியமில்லாத காரணங்களுக்காகப் போடப்பட்டால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப்போல அது ஆபத்தைத் தரும்.

ஆனால் நிச்சயமாக நம்முடைய நீதிமன்றம் அதைக் கவனத்திற்கொண்டு பெரிய பாதகம் இன்னொருவருக்கு ஏற்படும் விதத்தில் ஜட்ஜ்மெண்ட் கொடுக்காது, அப்படிப்பட்ட ஆணையைப் பிறப்பிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அப்படிப்பட்ட தவறுகள் எங்கேயாவது வந்தால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம், நான் உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவேன். ஏற்கனவே சில செய்திகள் எனக்கு வந்து நாம் உயர் நீதி மன்றத்திலே தெரிவித்திருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Is it applicable only to the City of Madras or for the whole State?

THE HON. THIRU S. MADHAVAN: 'Attachement before Judgment' is a right given under the Act and it is applicable to all people, not only in the City.

**அரசின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.**

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): Under Rule 139 (1) of the Assembly Rules, I nominate the Hon. Thiru O. P. Raman, Minister for Electricity and Minister in-charge of the Bill as a member of the Joint Select Committee.

**(ஊ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை) சட்ட முன்வடிவு 20/1972.**

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, * 1972 (L.A. Bill No. 20 of 1972), be taken into consideration.

While presenting the Budget for 1972–73, the Chief Minister announced the decision of the Government to levy a surcharge of ten per cent on the tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931, and the proceeds of this measure will be credited to a fund called ' The Tamil Nadu Rural Road Development Fund '. This fund will be utilised solely for the development and maintenance of public roads in rural areas.

The representatives of the Tamil Nadu Lorry Owners' Federation represented to the Chief Minister that the surcharge of ten per cent imposed on lorries should be cancelled. The Chief Minister considered their request sympathetically and announced in the Assembly on the 30th March 1972, the decision of the Government to reduce the surcharge from ten per cent to five per cent in respect of lorries.

The levy of surcharge will be at the rate of five per cent of the tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931, on every goods vehicle and ten percent of the tax on every other vehicle except motor cycles and scooters. This measure will take effect from 1st April 1972.

With these words, Sir, I commend the Bill for consideration and acceptance by the House.

(Mr. Speaker in the Chair)

* Published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated 3, 4.





**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்த மோட்டார் வாகனங்கள் வரி திப்பு மசோதாவின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். னம் அமைச்சரவர்கள் சொல்லியதுமாதிரி வரவு-செலவுத் திட்டத்திலே மோட்டார் வாகனங்களுக்கு 10% சர்சார்ஜ் போடுவது என்று முடிவு கட்டி ட்டார்கள். அன்றைக்கே நான் சொன்னேன், உங்களுக்கும் மோட்டார் ரார்களுக்கும் ஏதோ பிடிக்கவில்லை போலிருக்கிறது, எப்பொழுதும் அவர்கள் லைமேல் விழுவது எப்படி பரிதாபத்திற்குரியது என்பதை யோசிக்க வேண்டு மென்று முன்பே சொன்னேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வரிபோடும் கொள்கையில்கூட அதனால் தமிழக வியாபாரிகள் பாதிக்கப்படுவார்களா, பாதிக்கப்பட மாட்டார்களா என்பதை யோசனை செய்து போட வேண்டும். அண்டை மாநிலங்களிலே என்ன வரி விதிக்கிறார்கள், நாம் என்ன வரி விதிக் கிறோம், இதனால் நம்முடைய மாநிலத்தில் தொழில் பாதிக்கப்படுமா என்பதை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து அதற்குப் பிறகு வரிகளைப் போடவேண்டுமே யொழிய ஏதோ வரிபோடுகிறோம், வரிபோடுகிறோம் என்று போட்டுக்கொண்டே போனால் என்ன விளைவுகள் ஏற்படும்? 1–4–1972 ஆம் தேதியிலிருந்து லாரிகள் அத்தனையும் நிறுத்தப்பட்டன. இரண்டு மூன்று நாட்கள் எல்லா வியாபாரங் களும் ஸ்தம்பித்துப் போய்விட்டன. காய்கறிகளின் விலைகளெல்லாம் எக்கச் சக்கமாக ஏறிவிட்டன. காரணம் என்னவென்றால் 10% என்றால் தாங்க முடியாது என்று கருதி அத்தனை லாரி ஓனர்ஸும் ஒன்றாகச் சேர்ந்து—சாதா ரணமாக அவர்களை ஒன்று சேர்ப்பதே கஷ்டம், எல்லாம் நெல்லிக்காய் மூட்டை களைப்போல் சிதறியிருப்பார்கள்—அவர்கள் இந்தக் கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல் ஒன்று சேர்ந்தார்கள். முதலமைச்சரைப் பார்த்து இந்த வரி கடுமையானது, தாங்க முடியாது என்று சொன்னார்கள். ஏதோ அவர்களின் சாமர்த்தியத்தால் 5% என்று குறைக்கவைத்து பிறகு சமாளித்துக் கொள் ளலாம் என்று எப்படியோ லாரிகளை ஓடவிட்டார்கள்.

ஆனால் நிலைமை என்னவென்று பார்க்க வேண்டும். ஆந்திராவிலே 7 டன் லாரிக்கு 760 ரூபாய் குவார்ட்டருக்கு. அதேபோல் பென்ஸ் 10 டன் லாரிக்கு 860 ரூபாய் ஒரு குவார்ட்டருக்கு. 760 ரூபாய் ஆந்திராவிலே இருக்கும் லாரிக்கு தமிழ்நாட்டிலே 937 ரூபாய் 50 காசு. எவ்வளவு வித்தியாசம் இருக் கிறது பார்த்தீர்களா? 50 மைல் தாண்டினால் ஆந்திரா எல்லை வந்துவிடுகிறது. ஆந்திராவிற்கும் தமிழ்நாட்டிற்கும் உள்ள டாக்ஸ் 760 per quarter and 920 per quarter என்றால் கிட்டத்தட்ட 150, 160 ரூபாய் அதிகமாக ஆகிறது. 150 ரூபாய் ஒரு குவார்ட்டருக்கு என்றால் அதை நான்கால் பெருக்க வேண்டும், வருஷத்திற்கு 1,000 ரூபாய், 1,500 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டு மென்றால், தொழில் நடத்துபவர்கள் தொழிலை நடத்த வேண்டுமென்றால், தமிழ் நாட்டில் தொழில் வளர வேண்டுமென்பதற்கு எடுக்கிற கொள்கையா இது

என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரொம்ப யோசனையுள்ளவர்களெல்லாம் சித்தூருக்குச் சென்று ரெஜிஸ்தர் செய்துவிட்டு வந்து விடுவார்கள். இப்பொழுது தமிழ்நாட்டில் கார் சேல்ஸ் டாக்ஸ் வைத்தால் ஏபிஎன் நெல்லூர் என்று ரெஜிஸ்தர் செய்துவிட்டு வந்துவிடுகிறார்கள். ஆகவே வரிக் கொள்கையில் புத்திசாலித்தனத்தோடு போட வேண்டும். இருப்பதை இழப்பது மாதிரி வரி போட்டால் அதை எப்படி ஏற்றுக் கொள்வது?

10 டன் ஃபர்கோ, லேலண்ட்டுக்கு 850 ரூபாய் இருக்கிற காலத்தில் இங்கே 1,177 ரூபாய் 50 காசு. ஏற்கனவே கிட்டத்தட்ட 300 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. எனவே 5 ஸ்டேட்டிலே ஓட்டுவதற்கு ரூட் வாங்கிக்கொண்டு, ஆந்திராவிலே ரூட் வாங்கிக்கொண்டு எல்லாம் தமிழ்நாட்டிலே ஓட்ட ஆரம்பித்தால் நமக்கு வருமானத்திற்கு வருமானமும் போகும், தொழிலுக்கும் பாதகம் ஏற்பட்டு, தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என்றால் இது என்ன புத்தி சாலித்தனமான கொள்கை என்று கேட்க விரும்புகிறேன்.

பேட்டரிக்கு நாம் சேல்ஸ் டாக்ஸ் 15 சதவீதம் ஆகப் போட்டிருக்கிறோம். இதே பேட்டரிக்கு ஆந்திராவில் 10½ சதவீதம் சேல்ஸ் டாக்ஸ், மைசூரில் 12 சதவீதம், ஆனால் தமிழகத்தில் மட்டும் 15 சதவீதம். இப்படி எல்லா வகையிலேயும் அண்டை மாநிலங்களையாவது பார்க்க வேண்டும். டெல்லி, யு.பி.-க்குப் போக வேண்டாம். பக்கத்திலிருக்கின்ற கேரளா, மைசூர், ஆந்திரா, தமிழகம் இவைகளிலே இருக்கும் டாக்ஸ்களாவது ஏறக்குறைய ஒரே மாதிரியிருந்தால் நல்லது. அதை விட்டுவிட்டு இன்றைக்கு பாவம், தமிழ் நாட்டிலுள்ள லாரிக்காரர்கள்தான் பாவம் செய்தவர்கள் மாதிரி எல்லாத் துறை களிலேயும் அவர்களை வாட்டிவதைப்பது மாதிரி வரிக் கொடுமை அதிகரித்தால் அது நியாயம் அல்ல. கனம் முதலமைச்சரவர்கள் 5 சதவீதம் அல்லது மு வதையும் 10 சதவிகிதத்தையுமே எடுத்திருக்க வேண்டும். பஸ்ஸுக்காவது ஒரு சீட்டுக்கு 10 ரூபாய் என்று ஏற்றுவதால் நஷ்டமில்லை என்று ஒத்து கொண்டாலும்கூட, இந்த லாரிக்காரர்களைப் பொறுத்தவரையில் இப்பொழுது 300, 400 ரூபாய் அளவிற்கு வித்தியாசம் இருக்கும்பொழுது மேலும் 5 சத விகிதம் போடுவது புத்திசாலித்தனம் அல்ல. டயர்களெல்லாம் விலை ஏறி யிருக்கின்றன. லாபம் கிடைப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. இந்த நிலையிலே மொபைல் கோர்ட் வேறு வைத்திருக்கிறார்கள். மூலைக்கு மூலை நின்று, லாரியைக் கண்டால் போதும், உடனே நிறுத்தி 150, 200 ரூபாய் தீட்டிவிடுகிறார்கள். இந்த மாதிரி எல்லாம் அவர்கள் தீராத கஷ்டத்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து இந்த ஐந்து பர்சன்ட் வரியால் எத்தனை லட்சம் வந்துவிடப்போகிறது என் பதைக் கணக்கில் கொண்டு இந்த லாரித் தொழில் தமிழ்நாட்டை விட்டு





பறக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ரோடு போடுவதற்காக இதைப் போடுவதாகக் கூறுகிறார்கள். 397 கோடி ரூபாய்க்கு வருமானம் வருகிறதே, அதிலிருந்து ரோடு போடக்கூடாதா? பிச்சைக்காரர்களுக்குச் செலவழிக்க குதிரைப் பந்தயத்திற்கு வரி போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். 397 கோடி ரூபாய் வருமானத்திலே பிச்சைக்காரர்களுக்கு இந்த அரசு செல வழிக்கக் கூடாதா? இந்த 397 கோடி ரூபாய் வருமானம் எதற்காக? ரோடு போட, பள்ளிக்கூடம் கட்ட, ஆஸ்பத்திரி கட்ட ஆகியவற்றுக்காகத்தானே இந்த வருவாயைப் பயன்படுத்த வேண்டும். ஆகவே அரசாங்கம் இந்த லாரிக் காரர்களுக்குப் போடப்பட்ட வரியைப் பற்றி மீண்டும் மறுபரிசீலனை செய்து கைவிட முடியுமா என்று யோசித்துப் பார்ப்பது வரவேற்கத்தக்கதாக இருப்பதோடு புத்திசாலித்தனமாகவும் இருக்கும்.

ஸ்கூட்டருக்கு வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். கார்களுக்கும் கொடுக்க வேண்டும். வருஷா வருஷம் வரி ஏறிக் கொண்டே போகிறது. Car is not a luxury. It is a necessity. நம்முடைய வேலைகளைத் துரிதமாகக் கவனிக்க ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போக அது அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது.

ஆம்னி பஸ்ஸுக்கு 35 ரூபாய் சீட்டுக்கு இருந்ததை சீட்டுக்கு 100 ரூபாய் என்று உயர்த்தினார்கள். அவர்கள் யாத்திரைக்கு வருகின்றவர்களை அழைத்துப் போவதற்காக வைத்திருந்த அந்த பஸ்களை பிறகு எக்ஸ்பிரஸ் பஸ்களாக மாற்றி மதுரை போன்ற இடங்களுக்குச் செல்லுவதற்காக ரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலே நின்று கொண்டு ரயிலில் போக முடியாதவர்களை ஏற்றிக் கொண்டு சென்றார்கள். அதையும் ஓட்டக்கூடாது என்று தடுத்து விட்டார்கள். 100 ரூபாய் வரி கட்டிக் கொண்டு எப்படி அவர்களுக்குக் கட்டுப்படியாகும் யாத்திரை பஸ்ஸாக விடுவதற்கு. மறுபடியும் அவர்களுக்கு சீட்டுக்கு 35 ரூபாய் வரி என்று ஆக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் யாத்திரை கூட்டத்தை அழைத்துக்கொண்டு போவார்கள்.

நீங்கள் கடைப்பிடிக்கிற வரிக் கொள்கை சிறு தொழில்களைப் பாதிக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. நீங்கள் கடைப்பிடிக்கும் வரிக் கொள்கையால் தொழில் வளராது. ஏற்கனவே இருக்கும் தொழில்களும் மந்த நிலைக்குப் போய்விடும். இருக்கின்றவர்களும் ஆந்திராவுக்குப் போய்விடுவார்கள், கேரளவுக்குப் போய்விடுவார்கள், மைசூருக்குப் போய்விடுவார்கள். அந்தத் தொழில் வளர மோட்டார் வாகன வரியைக் குறைப்பது பற்றி அமைச்சர் அவர்கள் மீண்டும் யோசித்து இப்போது அதிகப்படியாகப் போடப்பட்ட வரியைக் கைவிட வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I have only to add to the suggestions already made by our Deputy Leader. Sir, the Government should have thought about the enhancement of surcharge on foreign luxury cars. As this is a Socialistic Government, a distinction should be drawn between necessities and luxuries. To-day I know that almost every upper middle class person is using his car for his work and that is the usual Indian car. But there are hundreds of people who are using luxury cars. Why not the Government increase the surcharge or levy additional surcharge on luxury cars and give up the taxation on lorries.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஏகமனதாக நிறைவேற்றித் தருவார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால் இதிலும் பேச இடம் இருக்கிறது என்ற முறையில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் பேசுகிறபோது எனக்கு உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது.

வரி விதிப்பதிலே புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். பஸ் முதலாளிகளுக்கும், ஆம்னி பஸ்காரர்களுக்கும், லாரிச் சொந்தக்காரர்களுக்கும் வரி விதிக்காமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம் என்றால் அந்த புத்திசாலித்தனம் இந்தச் சர்க்காருக்குத் தேவையில்லை என்பதை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வரி விதிக்காமல் இருப்பது புத்திசாலித்தனமாக இருக்கும் என்று நான் சொல்லவில்லை. அண்டை மாநிலங்களில் இருக்கும் வரிக்கும் நம்முடைய வரிக்கும் அதிக வித்தியாசம் இல்லாதபடி வரி போடுவதுதான் புத்திசாலித்தனம் என்று சொன்னேன். அந்த புத்திசாலித்தனம் இவர்களுக்குத் தேவையில்லை என்றால் தாராளமாகக் கைவிட்டு விடட்டும். நாங்கள் யோசனை சொல்ல முடியுமே தவிர, அதைப் புத்திசாலித்தனமாக ஏற்பதோ, ஏற்காமல் இருப்பதோ உங்கள் உரிமை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** புத்திசாலித்தனத்திலிருந்து இப்போது யோசனை சொல்ல முன் வந்திருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** புத்திசாலித்தனம் இருந்தால்தான் யோசனை சொல்ல முடியும்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** புத்திசாலித்தனம் இப்போது அவர்களிடத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் பேசுகின்றபோது பேருந்து உரிமையாளர்களுக்கு விதிக்கப்பட்ட உபரி வரியைப்பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஆம்னி பஸ் பற்றிச் சொன்னார்கள். இப்போது வந்திருக்கும் சட்ட முன்வடிவில் ஆம்னி பஸ்களைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை அதிகம் இல்லையென்று கருதுகிறேன். பொதுவாக, லாரிகள், ஆம்னி பஸ்கள் பற்றி எடுத்துச் சொல்லும்போது அண்டை மாநிலங்களில் உள்ள வரி விதிப்பு முறை பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அகில இந்திய மட்டத்திலிருந்து அண்டை மாநிலங்கள் மட்டத்திற்கு வந்ததற்காக. குறிப்பாக தென்னாட்டைச் சேர்ந்த மாநிலங்களுக்கு வந்திருப்பதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது—நமக்கு அண்டை மாநிலம் என்றால் ஆந்திர மாநிலம் மட்டும்தான் என்று பாதியாகப் பூகோளத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அண்டை மாநிலமாக மைசூர் மாநிலம் இருக்கிறது, கேரள மாநிலம் இருக்கிறது. இந்த மாநிலங்கள் அனைத்தையும் எடுத்துப் பார்க்கின்றபோது ஃபார்கோவுக்கு விதிக்கப்பட்ட வரியை எடுத்துச் சொன்னார்கள்.

நான் தெரிவிக்க விரும்புகிறேன், ஃபார்கோவுக்கு வரி—தமிழ்நாட்டில் 865 ரூபாய், மைசூரில் 825 ரூபாய், கேரளத்தில் 810 ரூபாய், ஆந்திராவில் 760 ரூபாய், மற்றபடி பென்ஸ், லேலண்ட் வண்டிகளுக்கு வரி—தமிழ்நாட்டில் 1,090 ரூபாய் ; மைசூரில் 1,125 ரூபாய் ; ஆந்திராவில் 880 ரூபாய் ; கேரளாவில் 930 ரூபாய். ஆந்திராவில் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். மைசூர் மாநிலத்தைப்பற்றிச் சொல்லவில்லை. மைசூர் மாநிலத்தில் நம்மைவிட அதிகமாக இருக்கிறது.

தனக்குச் சாதகமான புள்ளி விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு அவர் இலக்காகக் கூடாது.

கர்நாடக மாநிலத்திலும், ஆந்திரா மாநிலத்திலும் விட்டு விட்டார்கள் என்று கூடச் சொல்ல முடியாது. குறிப்பாக, தென்னக மாநிலங்களில் கேரளத்திலும், தமிழகத்திலுந்தான் முழு வடிவான வரவு செலவுத் திட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவிலும், மைசூரிலும் அந்தச் சர்க்கார் என்னென்ன வரி விதிப்புக் கொள்கைகளை எப்படி நிர்ணயிக்கப் போகிறார்கள் என்பதை வருகின்ற காலந்தான் சொல்லவேண்டும். இப்போது அவர்கள் அளித்திருப்பது இண்டரிம் பட்ஜட்தான். ஆகவே, அதை எடுத்துக்கொண்டு வாதிடுவதில் பயன் இல்லை என்றுதான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரி விதிப்புகளைப் பொறுத்தவரை தாங்குபவர்கள் மீது வரி விதித்து தாங்க முடியாதவர்களுக்கு நன்மை செய்வதை லட்சியமாக, கொள்கையாகக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில்தான் இந்த வரி விதிப்பு இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. எந்தவித வசதியும் இல்லாமல் பின்தங்கிய பல்வேறு தமிழகத்தின் கிராமங்கள் சாலை வசதி கூட இல்லாமல், சொல்லப் போனால் மருத்துவத்திற்காக நகருக்குச் செல்ல வேண்டுமென்றால் கூட செல்ல முடியாத நிலைமையில் லட்சக் கணக்கான, கோடிக் கணக்கான மக்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து இந்த வரவு-செலவுத் திட்ட உரையிலேயே, இந்த நிதி கிராமப்புற சாலைகளின் மேம்பாட்டுக்காக ஒதுக்குவதற்கான நிதியாக உருவாகும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். யாருக்கு வரி போடுகிறோம் என்பதைப் பார்ப்பதைவிட, இதனால் யாருக்கு நன்மை கிடைக்கப் போகிறது என்பதைப் பார்த்தாலே, இந்த வரி போடப்பட்டதன் பலனை யார் யார் அனுபவிக்கப் போகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை அறிவித்த உடனேயே அண்டை மாநிலத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல; வட இந்திய மாநிலத்தில் இருந்துகூட இதைப் பாராட்டினார்கள். வரவு செலவுத் திட்டத்தை இந்த அவையில் வைத்தபோது,

Mr. Karunanidhi's budget speech was noteworthy for a number of ameliorative measures he announced and the further radicalisation of land reform legislation. The new levies announced have sensibly been related to specific programmes of expenditure. The additional receipts from the motor vehicles tax are being earmarked for the rural road development.'

என்று "இந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையில் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். "நேஷனல் எரால்டு" பத்திரிகையின் தலையங்கத்தில்,

'Taxation measures in Tamil Nadu are mild'

என்று கூறியிருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

They are not wild.

Taxation measures of Tamil Nadu are mild and they are related to specific programmes of expansion; for instance the additional receipts from the Motor Vehicles Tax will be set apart





for Rural Road Development Fund and the additional receipts from enhanced Betting Tax will be added to the Beggar Rehabilitation Fund.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It cannot but be mild because we cannot bear any more taxation.

THE HON. THIRU S. RAMACHANDRAN: This is the information of an Economist not in our State, but in other State.

பத்திரிகையின் பெயர் நாஷனல் ஹெரால்ட்.

இதன் மூலம் வருகிற நிதியை ஒரு ஃபண்டாகப் போட்டு கிராமங்களில், ரோடுகளுக்காக மட்டும் செலவழிக்க இருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் பேசும்போது இந்தப் பணத்தைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரிகள் கட்டுவீர்கள், பள்ளிக்கூடங்கள் கட்டுவீர்கள், அந்த வசதிகளைச் செய்வீர்கள் என்று அடுக்கடுக்காக சொன்னார்கள். சாலைகள் வசதிக்காக மட்டும் செலவழிக்கப்படும்.

எந்த லாரி உரிமையாளர்கள், எந்த பேருந்து உரிமையாளர்கள், எந்த கார் ஓனர்ஸ் இவர்களுக்கெல்லாம் சாலைகள் மிகவும் பயன்படுகின்றனவோ அவர்களுக்குப் பயன்படுகிற வகையில்தான் இந்தச் சாலைகளின் மேம்பாட்டை உருவாக்குவதற்காக அவர்களிடமிருந்து நிதி சேர்க்கிறோம்.

லாரிச் சொந்தக்காரர்கள் கஷ்டப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். லாரிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டதா என்று கணக்குப் பார்த்தேன். பஸ்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதா என்று கணக்குப் பார்த்தேன். அப்படிப் பார்க்கும்போது அடிதடிகள், போட்டி குறைந்தபாடில்லை. அதிலிருந்து அந்தத் தொழில் நசிந்துவிட்டதாக நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதில் எந்த விதமான பலனுமில்லை என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது வெளிநாடுகளிலிருந்து, இறக்குமதி செய்யப்படுகிற கார்களுக்கு இன்னும் அதிக வரி விதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கார் சாதாரண தேவைக்குப் பயன்படுகிற ஒரு பொருள், ஆகவே காருக்கு வரி விதிப்பது பொருத்தம்தானா என்று அவர்கள் கேட்டார்கள். ஒருவேளை திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களது சோஷலிஸக் கொள்கை வெளிநாட்டுக் கார்களோடு நின்று விடுகிறது என்று நான் கருதுகிறேன்.

இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் ஸ்கூட்டர் வைத்திருப்பவர்கள், மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்துகிறவர்கள் இவர்களை நடுத்தர மக்களாகக் கருதுகிறோம். கார் வைத்திருப்பவர்கள், ஆயிரம் ரூபாய் போட்டு யானை வாங்குகிறவன் ஆறு காசு போட்டு அங்குசம் வாங்கமுடியாதா என்று சொல்வார்களே அதேபோல், இந்த வரியைத் தாங்கிக் கொள்வார்கள். உள்நாட்டுக் காரானாலும்சரி, வெளிநாட்டுக் காரானாலும்சரி ஒரே விதமான வரி விதிப்புக் கொள்கையை இந்த சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த சர்சார்ஜுக்கு மேல் எக்ஸ்ட்ரா சர்சார்ஜ் போடமுடியுமா என்று திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் கேட்டார்கள். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிற கார்களுக்கு இதுபற்றி மறுபடியும் யோசித்தால்கூட நன்றாகயிருக்கும் என்று நானும் கருதுகிறேன்.

இன்றைய சூழ்நிலையில் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் தவிர எல்லா வாகனங்களுக்கும் 10 சதவீதம் என்றும், லாரிகளுக்கு இருக்கிற சூழ்நிலையைப் பொறுத்து அவர்கள் 5 சதவீதம் வரியும் தரவேண்டும் என்று தெளிவாக அரசு தெரிவித்திருக்கிறது. இதன் மூலம் கிட்டத்தட்ட இந்த ஆண்டு ரூ. 1,35,00,000 உபரி நிதியாக சர்சார்ஜ் மூலம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். இது அனைத்தும் கிராமப்புறங்களில் உள்ள சாலை மேம்பாட்டு வசதிக்காகப் பயன்படுத்தப்படுமே தவிர வேறு எதற்கும் பயன்படுத்தப்படாது. கிராம மக்களின் தன்மையை, வசதியை மனதில் கொண்டு எல்லா உறுப்பினர்களும் இதை ஆதரித்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is:

"That the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 20 of 1972) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. RAMACHANDAN: Sir, I move:

"That the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 20 of 1972) be passed.

The Motion was put and carried and the Bill was passed into law.





## (5) அரசினர் தீர்மானம்.

### மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் அதிகக் கடனாக இருக்கும் தொகையை முடிவு செய்யும் செயற்குறிப்பு குறித்து.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, "1948-ம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1) உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக நூற்று ஐம்பது கோடி ரூபாய் இருக்கலாம் என்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) வரவு-செலவுக் கூட்டத் தொடரில் பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடந்த மார்ச் மாதம் 1-ம் தேதி துவங்கி நடைபெற்றுவரும் இந்தப் பேரவையின் கூட்டத் தொடர் இன்றோடு முடிவடைகிறது. பலமுறை காரசாரமான விவாதங்களும், குற்றச்சாட்டுகளும், எதிர் குற்றச்சாட்டுகளும் இருந்தாலும் விவாதங்கள் மிக அமைதியான சூழ்நிலையில் மிகவும் ஆக்கபூர்வமாக நடைபெற்றன. வெப்ப நிலைமை வெளியே இருக்கிறது. இது கோடை காலம். இருந்தாலும் வெப்பத்திற்கு பதிலாக இங்கே ஒளி ஊட்டுகிற விவாதங்களாகத்தான் அமைந்தன—கொஞ்ச நேரம் வெப்பம் சிறிது தலைகாட்டினாலும்—என்பதற்காக உண்மையிலே இந்த மாமன்றமும், இம் மாமன்றத்தின் பேரவைத் தலைவன் என்ற முறையில் நானும் ரொம்பவும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

தமிழ் நாடு சட்டப் பேரவை எப்போதும் கண்ணியத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும், சட்டப் பேரவையின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் பெயர்பெற்றதாகும். எந்தச் சூழ்நிலையிலும் அதற்கு ஊறு நேரிடாமல் இன்னமும் நல்ல வகையில் பாராளுமன்ற ஜனநாயகத்தை உயர்த்துகிற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நடந்து கொண்டது பாராட்டுக்குரியதாகும். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களையும் எதிர்வரிசையில் உள்ளவர்களையும் இதற்காக நான் மனமாற பாராட்டுகிறேன்.

[பேரவைத் தலைவர்] [1972 எப்ரல் 6

இன்னும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் ரொம்ப முக்கியமான குறிப்பிடத் தகுந்த வெற்றிகளையும் பெற்றிருக்கிறது என்பதைக் குறித்து நாம் பெருமைப்படலாம்.

இந்தத் தொடரில் 656 கேள்விகள் கேட்கப்பட்டு விடைகள் அளிக்கப்பட்டன. அவற்றிற்கு ஏராளமான உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்டார்கள். 2,152 துணைக் கேள்விகளுக்குப் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆக, மூலக் கேள்விகள் 656-க்கும், 2,152 துணைக் கேள்விகளுக்கும் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இதைவிட எந்த நாட்டு சட்டமன்றத்திலும் நடக்காத ஒரு பெரிய நிகழ்ச்சி இந்தச் சட்டமன்றத் தொடரில் 157 அட்ஜோர்ண்மென்ட் மோஷன்ஸ், ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் வரப்பெற்றன. இவற்றில் 74 ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் பேரவையில் கொண்டுவரப்பட்டு இங்குதான் அனுமதி மறுக்கப்பட்டது.

41-வது விதியின்கீழ் 11 அறிக்கைகள் அளிக்கப்பட்டன.

மொத்தம் 866 வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் கொடுத்தார்கள். அவற்றில் 126 வெட்டுத் தீர்மானங்கள் இந்த மன்றத்தில் முன்மொழியப்பட்டன.

இது நிதிநிலை அறிக்கை விவாத சம்பந்தமான கூட்டமாக இருந்தாலும் இந்தக் கூட்டத் தொடரில் 22 மசோதாக்கள் இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டு 16 மசோதாக்கள் இங்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. நான்கு மசோதாக்கள் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. இரண்டு அறிமுகம் செய்யப்பட்ட நிலையில் உள்ளன.

இந்த சட்டமன்றத் தொடர் மொத்தம் 29 நாட்கள் கூடியுள்ளது. இன்னும் கொஞ்சம் கூட்டினால் ஆறு நாட்கள் மாலை வேளையிலும் கூடியிருக்கிறது. 29 நாட்களோடு ஆறு நாட்கள் மாலை வேளையிலும் மன்றம் கூடியிருக்கிறது.

இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால், மிகப் பெரிய சிறப்பான அம்சம் என்னவென்றால், ஒரு நாள் சட்டமன்றம் காலை ஒன்பது மணி அளவில் துவங்கி இரண்டு மணி நேர இடைவெளியோடு 12 மணி நேரம், இரவு 9 மணி வரையில் நடைபெற்றிருக்கிறது. மொத்தத்தில் சொல்லப்போனால் இதுவரையில் 155 மணி நேரம் இந்தச் சட்டமன்றம் தன் நிகழ்ச்சிகளை இந்தத் தடவை நடத்தியிருக்கிறது.



1972 எப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

இவற்றிற்கெல்லாம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு சட்டப்பேரவை முன்னவர் அவர்களுக்கும், மற்றைய அமைச்சர்களுக்கும், எதிர்வரிசையில் இருக்கிற தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் என் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றுடன் இந்தப் பேரவைக் கூட்டம் நடப்பதற்கு உதவியாக இருந்து சிறந்த முறையில் பணியாற்றிய சட்டப் பேரவைத் துறைச் செயலாளர் திரு. சி. டி. நடராஜன் அவர்களுக்கும், மற்றும் அவர்களுடன் பணியாற்றும் துணைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், பேரவைத் துறை அலுவலர்களுக்கும், தலைமைச் செயலக அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், எல்லோருக்கும் இப்பேரவையின் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பேரவை இத்துடன் காலவரையறையின்றி ஒற்றிவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை காலவரையறையின்றி ஒற்றிவைக்கப்பட்டது.

## (6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

105. Notification issued with G.O. R. No. 402, Revenue, dated the 25th February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by Thirumathi G. Savithri in aid of National Defence Fund. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

106. Notification issued with G.O. R. No. 338, Revenue, dated the 10th February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Honorary Secretary, Bharat Scouts and Guides, Madurai District Association Madurai. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

107. Notification issued with G.O. R. No. 2161, Revenue, dated the 30th November 1971, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Chair-

man, Project Committee, Lions Club, Madras East on 5th December 1971 at Safire Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

B. *Reports, notifications and other papers.*

@ 187. Return of Assets of Thiru G. Parangusam, M.L.C., as on 31st March 1970 and Return of Assets of Thiru C. V. Rajagopal and Thiru G. Parangusam, M.L.Cs. as on 31st March 1971.

@ Laid on the Table of the House on 5th April 1972.



***How to use the Index.***

**The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.**

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion. (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations etc., are consolidate under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences Ports, temples and similar other board subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M.\|Ad. Motion .. .. | Adjournment Motion. |
| C.A.St. .. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. .. | Businees of the House. |
| C.A. .. .. .. .. | Calling Attention a matter of urgent public importance. |
| | Ceiling Attention Statement. |
| Consid .. .. .. .. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select\|Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select\|Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select\|Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select\|Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. .. | Demands for Excess Expenditure. |

| | |
|---|---|
| Dis. S.D. or D.S.D. .. .. | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. .. .. .. .. | Demands for Supplementary Grants |
| G.A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D. .. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. | Introduction stage of a Bill. |
| L.A. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. .. | Motion. |
| P.M. .. .. .. .. | Privilege Motion. |
| R\|Res. .. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. | Statement. |

# Tamil Nadu Legislative Assembly Debates.

*INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.*

1st, 3rd, 4th, 5th and 6th April 1972.

VOLUME XXII (Nos. 1 to 5.)

## A


PAGES.

ABDUL JABBAR, Thiru V. M.—
- Noyyalaru, construction of dams across ... ... ... ... 125–127
- Protection of Handloom Sector (R) ... ... ... ... 96–100
- Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 248–253

ACTS.
- Agricultural Produce Markets Act, amendments ... ... 300
- Beedi-Cigar Industries Act, implementation ... ... ... 142–144

ADITANAR, Thiru Si. Pa.
- Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 453–454, 456–457, 461

AGRICULTURE.
- Prizes to agriculturists ... ... ... ... ... ... 290–291

ALAGARSWAMY, Thiru S.—
- Debt Relief Bill, 1972 ... ... ... ... ... ... 491–492

ANANDANAYAKI, Thirumathi T. N.—
- Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 218–225, 234, 235, 241
- Drainage and water-supply schemes, loans from L.I.C. ... 127–130
- Elections to dissolved panchayat unions ... ... ... ... 302–303
- Labour Welfare Fund Bill, 1972 ... ... ... ... ... 188
- Land Reforms (Fixation of Celing on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 326, 327–331

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—cont.

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... 448–452
Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 ... ... 499–501, 502
Panchayats (Amendment) Bill 1972 ... ... ... ... 175–177
Persons registered with Employment Exchange ... ... 300–302
Protection of Handloom Sector (R) ... ... ... ... 103–106
Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions (C.A.) ... ... ... 306, 309–310
Statue of Thiru M. Ethirajulu, allotment of place, representation ... ... ... ... ... ... ... ... 410–411
Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 360

ANBAZHAGAN, THIRU K.—
Business of the House, change in order (M) ... ... ... 245

ARANGANNAL, THIRU RAMA.—
Debt Relief Bill, 1972 ... ... ... ... ... ... 486–489

B

BACKWARD CLASSES AND SCHEDULED CASTES.
Students in Evening Colleges, concession in tuition fees, ... 409

BILL(S).
Agriculturists Relief (Amendment) Bill, 1972: Int., ... ... 165, 494–498
Appropriation Bill, 1972—
Message from Legislative Council agreeing without recommendation ... ... ... ... ... ... ... 311
Appropriation (No. 2) Bill, 1972—
Message from Legislative Council agreeing without recommendation ... ... ... ... ... ... 311
Betting Tax (Amendment) Bill, 1972—
Consid., ... ... ... ... ... ... ... ... 192–193
Consid. Cl., Motion to pass, passed ... ... ... ... 193
Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972—
Consid., ... ... ... ... ... ... ... ... 200–233
Consid. Cl., ... ... ... ... ... ... ... 233–245
Motion to pass, passed ... ... ... ... ... 245
Debt Relief Bill, 1972: Int., ... ... ... ... 16[illegible], 482–4[illegible]
General Sales Tax (Amendment) Bill, 1972—
Consid., ... ... ... ... ... ... ... ... 194–2[illegible]
Consid. Cl. Motion to pass, Passed ... ... ... ... 2[illegible]



BILLS—cont.
Labour Welfare Fund Bill, 1972— 187
Message from Governor ... ... ... ... ... ... 187–192
Consid., ... ... ... ... ... ... ... ...
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972— ... ... 318–321
Consid. ... ... ... ... ... ... ... ... 321
Consid. Cl. ... ... ... ... ... ... ... ... 321
Motion to Pass ... ... ... ... ... ... ... 321
Passed ... ... ... ... ... ... ... ...
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972— ... ... 322
Message from Governor ... ... ... ... ... ... 322–357
Consid. ... ... ... ... ... ... ... ... 357–358
Consid. Cl. ... ... ... ... ... ... ... ... 358
Motion to Pass ... ... ... ... ... ... ... 358
Passed ... ... ... ... ... ... ...
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972— ... ... 163–164
Int., ... ... ... ... ... ... ... ... 439
Message from Governor ... ... ... ... ... ... 439–468
Referred to Joint Select Committee ... ... ...
Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972— ... ... 164
Message from Governor ... ... ... ... ... ... 164–165
Int., ... ... ... ... ... ... ... ... 498–506
Consid., ... ... ... ... ... ... ... ... 506
Consid. Cl. ... ... ... ... ... ... ... ... 506
Motion to pass ... ... ... ... ... ... ... 506
Passed ... ... ... ... ...
Non-Trading Companies, 1972— ... ... 366, 468
Message from Governor ... ... ... ... ... ... 469–470
Consid., ... ... ... ... ... ... ... ... 470
Consid. Cl. ... ... ... ... ... ... ... ... 470
Motion to pass ... ... ... ... ... ... ... 470
Passed ... ... ... ... ... ... ...
Panchayats (Amendment) Bill, 1972— ... ... 166–186
Consid., ... ... ... ... ... ... ... ... 186
Consid. Cl., ... ... ... ... ... ... ... ... 186
Motion to pass ... ... ... ... ... ... ... 186
Passed ... ... ... ... ... ... ...

PAGE

BILLS—cont.

Pawnbrokers (Amendment) Bill, 1972—
Consid., ... 470–48
Consid. Cl., ... 48
Motion to pass ... 48
Passed ... 48

Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972—
Consid., ... 247–25
Consid. Cl., ... 25
Motion to pass ... 25
Passed ... 25

Revenue Recovery (Amendment) Bill, 1972—
Consid. Cl., ... 246–24
Consid. Cl., ... 24
Motion to pass ... 24
Passed ... 24

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972—
Consid., ... 193–194
Motion to pass, ... 194
Passed ... 194

(Transferred Territory) Extension of Laws Bill, 1972—
Message from Governor ... 43, 36
Int. ... 44
Consid ... 362–36
Consid. Cl. ... 366
Motion to pass ... 366
Passed ... 366

Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972—
Consid. ... 358–362
Consid. Cl. ... 362
Motion to Pass ... 362
Passed ... 362

BILLS (NON-OFFICIAL)—

Christian Succession (Repeal) Bill, 1971—
Withdrawn ... 90

Inam Estates and Minor Inam (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1972—Introduced ... 90
Consid. ... 81–90

Land Reforms (Fixation of Ceiling on Land Amendment Bill), 1972—Int. ... 90



PAGES

BILL(S)—cont.

Madras University (Amendment) Bill, 1971—
Consid. .. 44–81
Withdrawn .. 81

BOMMAN, THIRU K. H.—
Iruthipet-Mangasal Road, Nilgiris district, metalling and black topping, representation .. 411

BRIDGES AND CULVERTS—
Bridge in Wandiwash-Sethanakuppam road .. 19–20
Suganadhi, construction of weir across .. 153
Business of the House (Amendment) .. 507–509

C

CALL ATTENTION—
Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions .. 306–314

CANALS—
Veppamkulam canal, repairs .. 283

CHAIR—

*Announcements*—
Business of the House .. 507–509
Call Attention Notices non-taking up due to Members' absence 103
Obituary reference Quaid-e-Millat Mohammed Ismail, Thiru B. 381, 398–399

*Rulings and Observations*—

*Bills*:

*Discussion on Bills referred to Select Committee*—
While Members had a right to take part in the discussion on a Bill referred to a Select Committee, the usual convention followed in the House was that the Members on the Select Committee did not take part in the discussion as they would have an opportunity to give their views in the Select Committee .. 139

Budget Session .. 447–448

*Complimentary remarks*—
On the concluding day of the budget session, 6th April 1972, furnishing statistics to the House about the business transacted in the session, the Speaker made the following observations:

"The House and himself as its Speaker, have every reason to be proud of the fact that despite allegations and counter-allegations mare in the course of the discussions, there were constructive criticism and more light than heat

PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observ tions*—cont.

*Budget Session*—cont.

*Complimentary remarks*—cont.

was exhibited in all debates. Tamil Nadu Legislative Assembly was always noted for its rich tradition in conducting its proceedings with dignity and decorum. It was a matter for gratification that all the Members had so conducted themselves as to firmly establish parliamentary democracy on sound lines". The Chair thanked the Chief Minister, leaders of parties and the Secretary, Legislative Assembly Department, and his staff for their Co-operation in the successful conduct of the business of the House .. .. .. .. .. .. 507-50

*Debate:*

*Relevancy*—

Members should confine their remarks to the subject under discussion. The plea of lack of opportunity to speak on a matter not relevant to the subject under discussion could not hold good as so many other opportunities to raise a subject, such as questions, non-official Bill, or Resolution, had been provided in the rules of procedure .. .. 255-25

*Decorum*—

A Member persistently interrupted a Minister who held the floor and did not resume his seat when the Chair rose to call him to order. The Chair pointed out to the Member the convention that a Member should resume his seat when the Chair was on its legs and if the Member did not respect this convention and resume his seat as directed by him other consequences might follow.

When the Member stated that he was prepared to be thrown out of the House, the Chair remarked that it was the previllage of the Member either to remain in the House or go out. He was only interested in seeing that the proceedings of the House were not obstructed .. .. 455-45

*Expression used in the House*—

*'Kilpack' locality where the Mental Hospital is situated*—

When some Members referred to certain personages residing in 'Kilpauk' which was taken exception to, and there was derisive laughter, the Chair observed that no one should take the reference to Kilpauk amiss. Mention of 'Kilpauk' should not be associated with the Mental Hospital there. Great learned men were residing there. The word 'Kilpauk' should not become a derisive term and the public should not feel that the word was looked upon derisively in the House .. .. .. .. .. .. .. .. 297-29

*Newspapers*—

There was a limit to refer to the news and views of newspapers. Attribution of motives should be avoided .. 29



PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Points of Order*—

*Refusal of consent to raise a point of order and a Minister's participation in a discussion on a motion to refer a Bill to Select Committee*—

A Member raised a point of order on the following grounds—

(1) The Chair did not allow him to raise a point of order when a Minister held the floor but the same protection was not afforded to him when the Minister interrupted his speech.

(2) When a Bill was to be referred to a Select Committee when representatives of institutions concerned could not appear before the House and give their views but have to appear before the Select Committee the Minister for Co-operation, taking advantage of his porition as Minister had a leverage over others and by highlighing certain aspects tried to influence the decisions of the Select Committee, which was not in order.

Cutting short the discussion that followed, the Chair ruled as under—

"The point of order was against the Speaker. No point of order could be raised against the Speaker's decision. If they wanted, they could only bring a substantive no-confidence motion against him and unseat him, if possible. In no other way his action could be questioned by a point of order.

As per the rules, the Speaker might permit a Minister to make personal explanation at any time and no debatable matter might be brought forward and no debate shall arise.

The Speaker shall have all powers necessary for the purpose of enforcing the rules and preventing disorder.

While Members desiring to make any observations on any matter should rise from their seats and should speak from their places when called by the Chair, the Member never followed that practice.

The Chair also quoted earlier rulings namely that Members must wait till the Member, on whose speech they wanted to raise the point of order, finished his speech as then only the Chair could know what exactly the point of order was .. .. .. 451-464

PAGES

CHAIR—cont.

*Rulings and Observations*—cont.

*Points of Order*—cont.

*Ruling*—

It was the job of the Chair to determine whether a particular point raised by a Member was a point of order or not .. .. 447

*Questions and answers*—

*Supplementary questions*—

*Relevancy*—

A supplementary should pertain to the main question. Simply because a Member committed a mistake in putting a supplementary which did not pertain to the main question, it did not justify another committing the same error. A Minister was entitled to either answer or refuse to answer such a question and an answer could not be demanded from him .. .. .. .. .. 280–281

A supplementary which did not pertain to the main question was disallowed by the Chair .. .. .. .. 282

COLLEGES—

Run by Wakf Board, Madurai, non-payment of salary to teachers .. .. .. .. .. .. .. .. 279–282

COMMITTEE(S)—

Estimates election .. .. .. . .. .. 316, 317

*Presentation of reports*:

Animal Husbandry Department, last report .. .. 166

Employment and Training .. .. .. .. .. 44

Labour including Factories .. .. .. .. 44

House, election .. .. .. .. .. .. .. .. 42–43

Privileges, election .. .. .. .. .. .. .. 41–42

Public Accounts, election .. .. .. .. .. .. 315, 317

Report on accounts of Tamil Nadu State, 1968–69, presentation .. .. .. .. .. .. .. .. .. 315

Rules, nomination .. .. .. .. .. .. .. 317

CO-OPERATIVES—

Handicrafts Co-operative Marketing Societies .. .. .. 25

Kangeyam Cattle Development Co-operative Marketing Society, Tiruppur, loan and grant to .. .. .. .. .. 135–137

Match factories run by Industrial Co-operative Societies .. 25–27

Super-Market in Coimbatore .. .. .. .. .. 28–30

CORPORATION—

Agro Industries Corporation, sales .. .. .. .. 287

CORPORATION (MADRAS)—

Names of Streets, change .. .. .. .. .. .. 14–19



COURTS—

Munsif's Court for Thovala .. .. .. .. .. .. 277–279

CURRENCY—

Fake currency notes, seizure at Tiruttani .. .. .. 404–406

Hundred rupees counterfeit notes detection at Tiruppur .. 406–408

D

DAMS—

Dam across Naganadu .. .. .. .. .. .. 28

DENNIS, Thiru N.—

Automatic signal lights in Madras .. .. .. .. 37–39

First Aid boxes in Taxis .. .. .. .. .. .. 37

Panchayats (Amendment) Bill, 1972 .. .. .. .. 171–173

Paraffin Factory, establishment .. .. .. .. .. 23–25

Police Officers cash awards .. .. .. .. .. 1–3

Public Service Commission, advertisements .. .. .. 303

Public Service Commission, income .. .. .. .. 133–135

Slum areas, supply of milk powder .. .. .. .. 147–148

Water Supply Scheme, Kovilpatti, purchase of Hume Steel Specials .. .. .. .. .. .. .. .. 409

DRAINAGE—

Underground drainage, Tiruppur Town .. .. .. .. 5–6

DURAISAMY, Thiru S.—

Employment Exchanges, District Level Committees, Supervision .. .. .. .. .. .. .. .. .. 420–423

Kangayam Cattle Development Co-operative Marketing Society, Tiruppur, loan and grant to .. .. .. .. .. 135–137

Underground drainage, Tiruppur Town .. .. .. .. 5–6

E

ELECTIONS—

Dissolved panchayat unions .. .. .. .. .. .. 302–303

ELECTRICITY—

Concession in power tariff .. .. .. .. .. .. 294

Electricity (Supply) Act, 1948 [Central Act LIV of 1948 (M) .. .. .. .. .. .. .. .. .. 507

Panchayats, collection of power tariff, meter reading system .. 432

EMPLOYEES—

Transferred from Travancore-Cochin .. .. .. .. 408

PAGES

EMPLOYMENT—
Persons registered with Employment Exchange .. .. .. 300-302

EMPLOYMENT EXCHANGES—
District Level Committees, supervision ... ... ... 420-423

EXPORT—
Mango juice .. .. .. .. .. .. .. .. 284-285

F

FACTORIES—
Alangulam Cement Factory, water for ... ... ... 133

FERTILISERS—
Bonemeal Production Centres .. .. .. .. .. 288

FOWLER, THIRUMATHI ALDA M.—
Christian Succession (Repeal) Bill, 1971 ... ... ... ... 83

FREEDOM FIGHTERS.
Pension ... ... ... ... ... ... ... ... 265-267

G.

GANESAN, THIRU S.—
Panchayats, collection of power tariff, meter reading system... 432

GURUSWAMI, THIRU N. V.—
Forestry Training School (Vaigai Dam), allowance to trainees. 394

H.

HANDE, DR. H. V.—
Additional Law Chambers, High Court Compound ... ... 418-420
Agricultural Produce Markets Act, amendments ... ... 300
Agro-Industries Corporation, sales ... ... ... ... 287
Alangulam Cement Factory, water for ... ... ... ... 133
Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 208-211
Debt Relief Bill, 1972 ... ... ... ... ... ... 484-486
Fake currency notes, seizure at Tiruttani ... ... ... 404-406
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 333-336
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 .. .. .. .. .. .. .. .. 452-453, 456, 457, 458, 459, 460-461
Madras University (Amendment) Bill, 1971 .. ... ... 46-53
Meenakshi temple, Madurai, Silver Cup award ... ... 435-438



PAGES

HANDE, DR. H. V.—cont.
Obituary reference, Quaid-e-Millat Mohammed Ismail, Thiru (R) ... ... ... ... ... ... ... ... 388-390
Pension for deceased freedom fighters' wives ... .. ... 265-267
Protection of Handloom Sector (R) ... ... ... ... 91-95
Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions (C.A.) .. ... ... 306, 308-309, 311-312
Urban Land Act, assessees ... ... ... ... ... ... 299-300

HANDICRAFTS—
Co-operative Sales Society Branch Emporium, Kancheepuram. 423

HANDLOOM—
Weavers' Co-operative Societies ... ... ... ... ... 273-276
Weavers of Paramakudi, hunger strike ... ... ... 140-142

HARIJAN WELFARE—
Harijan Hostels, supply of nutritious food for students ... 145-147

HARIJAN WELFARE SCHOOLS—
Harijan students, Thanjavur district, books and slates, free supply ... ... ... ... ... ... ... ... 415-417

HIGH COURT—
Additional Law Chambers ... ... ... ... ... ... 418-420

HIGHWAYS—
Development, Centre's grants ... ... ... ... ... 304-305

HOSPITALS AND DISPENSARIES—
Maternity ward in Government Hospital, Hosur, bed strength. 139
Mayuram Constituency, new hospitals for .. ... ... 139
Mid-wives and Ayahs working in Panchayat Unions, administrative control ... ... ... ... ... ... ... 140
Mobile Hospital for Hosur taluk ... ... ... ... ... 140
Thanjavur Medical College Hospital, opening of Out-patient Department ... ... ... ... ... ... ... 137-138
Women and Children Hospital, Egmore, expansion ... ... 138-139

HOTELS—
Five-Star Hotel in Madras ... ... ... ... ... 34-36
Revolving Hotel in Madras ... ... ... ... ... ... 31-33

HOUSING—
House Building Society, Kallakurichi ... .. ... ... 30-31
Housing facilities in rural areas, new schemes . ... ... 426-432
Retired Government Servants in Foreshore Estate, quarters for 154-155

## I

PAGES

ILANGOVAN, THIRU G.—
Non-teaching staff, pension ... ... ... ... ... ... 410

INDUSTRIES—
Paraffin Factory, establishment ... ... ... ... ... 23-26
Wool Weaving Industry for Walajapet ... ... ... ... 277

INSTITUTES—
Industrial Training Institute, Nagapattinam ... ... ... 424

IRRIGATION—
Noyyalaru, construction of dams across ... ... ... ... 125-127

## J

JAMES, THIRU J.—
Christian Succession (Repeal) Bill, 1971 ... ... ... 81-83, 89
(Transferred Territory) Extension of Laws Bill, 1972 .. 364-365
Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 ... 360

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 460
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 337-339
Pawn Broker (Amendment) Bill, 1972 ... ... ... ... 474

## K

KANDASAMY, THIRU K.—
Assembly meeting time, information ... ... ... ... 306
Madras University (Amendment) Bill, 1971 ... ... ... 73-75
Obituary reference, Quaid-e-Millat Mohammed Ismail, Thiru (R.) ... ... ... ... ... ... ... ... 390-391

KARIVENGADAM, THIRU M. V.—
Pawn Brokers (Amendment) Bill, 1972 ... ... ... ... 477-479

KARTHEESAN, THIRU V.—
Pension for teachers, increase ... ... ... ... ... 409-410



## K—cont.

PAGES

KARUNANIDHI, DR. M.—
Obituary reference, Quaid-e-Milla Mohammed Ismail, Thiru (R.) ... ... ... ... ... ... ... ... 395-398
Press statement of Thiru M. Bhaktavatsalam, regarding alleged sale of land by the Chief Minister ... ... ... 160-163

KITTAPPA, THIRU N.—
Bonemeal Production Centres ... ... ... ... ... ... 283
Christian Religious Endowments, management ... ... ... 41
Commercial Taxes Department, income ... ... ... ... ... 414-415
Corporation of Madurai, Cycle tax abolition ... ... ... 411-412
Five-Star Hotel in Madras ... .. ... ... ... 34-38
Harijan students of Harijan Welfare Schools, Thanjavur district, free supply of books and slates ... ... ... 415-417
Hundred-rupee counterfeit notes, detection at Tiruppur in Coimbatore District ... ... .. ... ... ... 406-408
Industrial Training Institute, Nagapattinam ... ... ... 424
Jeep buses, procedure ... ... ... ... ... ... ... 432-435
Link road from Ashok Nagar ... ... ... ... ... ... 152-153
Lower Anicut-Coleroon Road, widening ... ... ... ... 27-28
Mayuram Constituency, new hospitals for ... ... ... 139
Municipalities under Special Officers ... ... ... ... 305
Nagapattinam Harbour, expansion ... ... ... ... ... 286
Names of streets in Madras, change ... ... ... ... 14-19
Panchayat Unions, jeeps allotted under I.A.D.P. ... ... 425-426
Thanjavur Medical College Hospital, opening of out-patient department ... ... ... ... ... ... ... ... 137-138
Town Panchayats, Thanjavur district ... ... ... ... 19
Women and Children Hospital, Egmore, expansion ... ... 138-139

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Maternity Ward in Government Hospital, Hosur, bed strength ... ... ... ... ... ... ... ... 139
Mobile Hospital for Hosur Taluk ... ... ... ... ... 140

KUMARASAMI, THIRU K. N.—
Drainage and Water Supply Schemes, loan from L.I.C. ... 127-130
Panchayats (Amendment) Bill, 1972 ... ... ... ... 173-175
Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions (C.A.) ... ... ... 307-310

L

PAGES

LABOUR.

Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions (C.A.) ... ... ... 306-314

LANDS—

Forest—in Gingee taluk, distribution ... ... ... ... 155
Government Farm, Kanangadu, South Arcot district ... ... 424-425
Rent arrears from tenants to land owners .. ... ... 117-119
Sirumalai Forests, encroachment ... ... ... ... ... 148-151
Waste—in Kallakurichi taluk, assignment ... ... ... 152

LATHEEF, THIRU M.A.—

Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972. 215-218
Debt Relief Bill, 1972 ... ... ... ... ... ... ... 489-491
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 459-460
Madras University (Amendment) Bill, 1971 ... ... ... 53-60
Pawnbrokers (Amendment) Bill, 1972 ... ... ... ... 475-477
Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 253-255

LIQUOR—

Arrack shop at Jalakandapuram, shifting ... ... ... 269-270
Toddy and arrack, income ... ... ... ... ... ... 267-269

LOCAL BODIES—

Municipalities under Special Officers ... ... ... ... 305

M

MADHAVAN, THIRU S.—

Agriculturists Relief (Amendment) Bill, 1972 ... ... ... 496-497
Christian Succession (Repeal) Bill, 1971 ... ... ... ... 87-89
Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 241-244
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 341-342, 343, 349-350
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... ... 439-441, 464-467
Non-trading Companies Bill, 1972 ... ... ... ... ... 469-470
Pawnbrokers (Amendment) Bill, 1972 ... ... ... ... 479-481
Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions (C.A.) ... ... ... 312-314
Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972. 358-359, 360-362



M—*cont.*

PAGES

MANGO JUICE—

Export ... ... ... ... ... ... ... ... ... 284-285

MANIAN, THIRU P. S.—

City Buses in Madurai, run by Government ... ... ... 294-298
Police stations, telephones ... ... ... ... ... ... 3-5
Prizes to agriculturists ... ... ... ... ... ... 290-291
Special Police Force for Co-operative Department ... ... 263-265
Tourist buses run by Government ... ... ... ... 293
Tourist Centres ... ... ... ... ... ... ... 36-37
Tractor workshops ... ... ... ... ... ... 287-290

MANICKAVASAGAM, THIRU R.—

Winch, Palani Hills ... ... ... ... ... ... ... 298-299

MARIMUTHU, THIRU A. R.—

Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 206-208, 239-240
Debt Relief Bill, 1972 ... ... ... ... ... ... ... 492-493
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... ... 318-319
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 331-333
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 444-446, 449-450
Pawnbrokers (Amendment) Bill, 1972 ... ... ... ... 471
Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 ... 359

MARUDACHALAM, THIRU N.—

Beedi-Cigar Industries Act, implementation ... ... ... 142-144
Super Market in Coimbatore ... ... ... ... ... ... 28-30

MOHIDEEN, TIRUPPUR, THIRU A. M.—

Obituary reference, Quaid-e-Millat Mohammed Ismail, Thiru (R) ... ... ... ... ... ... ... ... 392-395

MOTION(S).

Business of the House, change in order ... ... ... ... 245
B.O.H., change in order ... ... ... ... ... ... 321
Proposal of the State Government to fix the maximum amount of loan that could be held by the Electricity Board at any one time ... ... ... ... ... ... ... ... 507

M—*cont.*

PAGES

**MUNUSWAMI, THIRU R. R.—**
- Forest lands in Gingee taluk, distribution ... ... ... 155
- Mutts of Kanchi Sankaracharya, Government control ... ... 39–40
- Police quarters at Ice House Lines, Radio sets ... ... ... 403–404
- Retired Government servants in Foreshore Estate, quarters for ... ... ... ... ... ... ... ... ... 154–155

**MUTHIAH, THIRU M.—**
- Panchayat unions in Tirunelveli district, transfer of teachers. 8–14
- Veppamkulam Canal, repairs ... ... ... ... ... 283

**MUTTS—**
- Sankaracharya of Kanchi, Government control ... ... 39–40

N.

**NACHIAPPAN, THIRU N.—**
- Government Farm, Kanangadu, South Arcot district ... ... 424–425
- House Building Society, Kallakurichi ... ... ... ... 30–31
- Waste lands in Kallakurichi taluk, assignment ... ... ... 152

**NAGARAJAN, THIRU K.—**
- Lands in Sirumalai Forests, encroachment ... ... ... 148–151

**NALLASAMY, THIRU S.—**
- Noyyalaru, construction of dams across ... ... ... ... 125–127

**NATARAJAN, THIRU N. V.—**
- Labour Welfare Fund Bill, 1972 ... ... ... ... ... 187–188
- Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation in Trade Unions (O.A.St.) ... ... ... 307–308, 310–311

**NEDUNCHEZHIAN, DR. V. R.—**
- Madras University (Amendment) Bill, 1971 ... ... ... 76–81
- Obituary reference, Quaid-e-Millat Mohammed Ismail, Thiru (R) ... ... ... ... ... ... ... ... 381–386
- Panchayats (Amendment) Bill, 1972 ... ... ... ... 166–167, 178–182, 184–185, 186

O.

**OBITUARY REFERENCE—**
- Quaid-e-Millat Mohammed Ismail, Thiru (R) ... ... ... 381–386

**OFFICES—**
- Commercial Taxes Department, income ... ... ... ... 414–41[illegible]



PAGES.

P.

**PALANICHAMY, PULAVAR C.—**
- Christian Religious Endowments, Management ... ... ... 41

**PALANISAMY THIRU N. K.—**
- Artificial rain, experiment ... ... ... ... ... ... ... 291–293
- Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 202–203, 204, 234, 239
- Handloom Weavers' Co-operative Societies ... ... ... 273–276
- Land Reforms (Fixation of Ceiling on Lands) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... 323–325, 358
- Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 441–444
- Panchayats (Amendment) Bill, 1972 ... ... ... ... 167–169, 185
- Paper production, raw materials ... ... ... ... ... 293
- Toddy and arrack, income ... ... ... ... ... ... 267–269

**PANCHAYATS—**
- Town, Thanjavur district ... ... ... ... ... ... 19

**PANCHAYAT UNIONS—**
- Jeeps, allotted under I.A.D.P. ... ......... ... 425–426

**PAPER—**
- Production, raw materials ... ... ... ... ... ... 293

**PAPERS LAID ON THE TABLE.**
- Agricultural Produce Markets Act, 1959 notifications ... 107, 260, 367
- Agriculturists Relief (Amendment) Bill, 1972 ... ... 401
- Co-operative Societies Act, 1961, notification ... ... 367
- Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 with Annexure ... ... ... ... ... ... 261, 369
- Debt Relief Bill, 1972 ... ... ... ... ... ... 400
- District Municipalities Act, 1920, notification ... ... 367
- Electricity (Taxation on Consumption) Act, 1962, notifications ... ... ... ... ... ... ... ... 260
- Entertainment Tax Act, 1939, notifications ... ... ... 259, 260, 366–367, 399–400
- Estimates Committee, Animal Husbandry, Report ... ... 400
- Estimates Committee, Employment and Training, Report. 400
- Estimates Committee, Labour including Factories, Report. 400
- Fleet Operators Stage Carriage (Acquisition) Act, 1971, notification ... ... ... ... ... ... ... 107
- Indian Stamp Act, 1899, notification ... ... ... ... 261, 400
- Irrigation Works (Construction of Field Bothies) Act, 1995, notification ... ... ... ... ... ... ... ... 260

PAGES.

PAPERS LAID ON THE TABLE—cont.
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972, with annexure ... ... ... ... ... ... 261
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972, annexure ... ... ... ... ... ... 369
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... ... 400
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972, annexure ... ... ... ... ... 401
Minimum Wages (Madras) Rules, 1953, notification ... ... 400
Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 ... ... 401
Non-trading Companies Bill, 1972 ... ... ... ... 261
Official Language Act, 1956, notification ... ... ... ... 367
Panchayats Act, 1958, notification ... ... ... ... ... 107
Panchayats (Amendment) Bill, 1972, with annexure ... ... 261
Pawnbrokers (Amendment) Bill, 1972 with annexure ... ... 261
Public Accounts Committee, Accounts for the year 1968–69, Report ... ... ... ... ... ... ... ... 400
Remission of Stamp duty on two sale deeds, notification ... 197
Return of Assets of Members ... ... ... ... ... ... 367–368
Return of Assets of Members of the Legislative Council as on 31st March 1971 ... ... ... ... ... ... 510
Revenue Recovery (Amendment) Bill, 1972 ... ... ... 261
Table of fees, amending notification ... ... ... ... 107
(Transferred Territory) Extension of Laws Bill, 1972 ... ... 400
(Transferred Territory) Extension of Laws Bill, 1972, annexure ... ... ... ... ... ... ... ... 400
Unstarred Questions and Answers, list ... ... ... ... 369
Water-supply and Drainage Board (Amendment) Bill, 1972 ... 369

PENSIONS—
Deceased freedom fighters' wives ... ... ... ... ... 265–267

POLICE—
Police Officers, cash awards ... ... ... ... ... ... 1–3
Police stations, telephones ... ... ... ... ... ... 3–5
Quarters at Ice House lines, Radio sets, ... ... ... 403–404
Special Force for Co-operative Department .. ... ... 263–265

PONNAPPA NADAR, THIRU R.—
Christian Succession (Repeal) Bill, 1971 ... ... ... ... 85–87
Employees transferred from Travancore-Cochin ... ... 408
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... 340–341, 342, 343–344
Madras University (Amendment) Bill, 1971 ... ... ... 71–73



PONNAPPA NADAR, THIRU R.—cont.

PAGES.

Obituary reference, Quaid-e-Millat Mohammed Ismail, Thiru (R) ... ... ... ... ... ... ... ... 386–387
Public Accounts Committee, Report on accounts for 1968–69, presentation ... ... ... ... ... ... ... 315
(Transferred Territory) Extension of Laws Bill, 1972 ... ... 363–365
Water-supply and Drainage Board (Amendment) Bill, 1972 ... 359

PORTS—
Nagapattinam, expansion ... ... ... ... ... ... 286
Prosperity Brigade activities ... ... ... ... ... 270–272

PUBLIC HEALTH—
Drainage and Water-supply schemes, loans from L.I.C. ... 127–130

PUBLIC SERVICE COMMISSION—
Advertisement ... ... ... ... ... ... ... 303
Income ... ... ... ... ... ... ... ... 133–135

R

RAIN—
Artificial rain, experiments ... ... ... ... ... 291–293

RAJA, THIRU A. M.—
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... 325–327

RAJAH PILLAY, THIRU V. K.—
Drinking Water, Thovala taluk ... ... ... ... 6–8
Munsif's Court for Thovala ... ... ... ... ... ... 277–279
Tourist resorts, conversion of certain places in Kanyakumari district as ... ... ... ... ... ... ... 153

RAMACHANDRAN, THIRU S.—
Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 ... ... 164, 498, 502–506

RAMAN, THIRU O. P.—
Agriculturists Relief (Amendment) Bill, 1972 ... ... ... 165

PAGES.

RAMAN, THIRU O. P.—cont.
Debt Relief Bill, 1972 ... ... ... ... ... ... 165, 482–484, 493–494
Proposal of the State Government to fix the maximum amount of loan that could be held by the Electricity Board at any one time ... ... ... ... ... ... 507
Pawnbrokers (Amendment) Bill, 1972 ... ... ... ... 470–471, 482

RAMASAMY, THIRU G.—
Housing facilities in rural areas, new schemes, ... ... ... 426–432

RELIGIOUS ENDOWMENTS—
Christian, management ... ... ... ... ... ... 41

RESOLUTIONS—
Protection of Handloom sector ... ... ... ... 90–106

ROADS—
Iruthipet–Mangasal road, Nilgiris district, metalling and black topping, representation, ... ... ... ... ... 411
Link road from Ashok Nagar ... ... ... ... ... 152–153
Lower Anicut—Coleroon road widening ... ... ... ... 27–28

S

SADIQ PASHA, THIRU S. J.—
Public Works (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 247–248, 251, 252, 258–259

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Private trusts, number ... ... ... ... ... ... 304

SCHOOLS—
Forestry Training School (Vaigai Dam), allowance to trainees 294
Non-teaching Staff, pension, ... ... ... ... ... 410

SHANMUGAM, THIRU P. U.—
Betting Tax (Amendment) Bill, 1972 ... ... ... ... 192–193
B.O.H., change in order ... ... ... ... ... 621
Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 200–202, 220–221, 222–223, 227–233, 233–234, 235–236, 236–237, 238, 245
General Sales Tax (Amendment) Bill, 1972 ... ... ... 194–196, 198–199, 200



PAGES.

SHANMUGAM, THIRU P. U.—cont.
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... ...... 315, 320–321
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 322–323, 329, 330, 350–357, 358
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 163, 164
Revenue Recovery (Amendment) Bill, 1972 ... ... ... 246, 247
Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 ... 193–194
(Transferred Territory) Extension of Laws Bill, 1972 ... 44, 362–363, 365, 366

SLUMS—
Milk powder, supply in ... ... ... .. ... ... 147–148

SOMASUNDARAM, THIRU N.—
Mariamman Koil Samudram water, lift irrigation ... 282–283

SOUNDARA PANDIAN, THIRU P.—
Backward Classes and Scheduled Castes students in Evening Colleges, concession in tuition fees ... ... ... ... 409
Harijan Hostels, supply of nutritions food for students ... 145–147
Mango juice, export ... ... ... ... ... ... 284–285
Water supply to Harijans, Kavutharasanallur ... ... 21–23
Water supply to Harijans, Vayalur village ... ... ... 20–21

STATUE—
Statue of Thiru M. Ethirajulu, allotment of place, representation ... ... ... ... ... ... ... ... 410–411

SUBBIAH, THIRU A. K.—
Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 204–206, 237–238, 238, 239–240
Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1972 ... ... ... 90
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... 336–337
Noyyalaru, construction of dam across ... ... ... ... 125–127
Panchayats (Amendment) Bill, 1972 ... ... ... ... 170–171

SUBBIAH, THIRU A. R.—
Panchayats (Amendment) Bill, 1972 ... ... ... ... 169–170, 185
Rent arrears from tenants to land owners ... ... ... 117–119

S—*cont.*

PAGES

SUBRAMANIAM, Thiru K. M.—
Agriculturists Relief (Amendment) Bill, 1972 ... ... 496, 497
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... ... 319–320
Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 ... ... ... ... ... ... 446–448
Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 ... ... 502
Pawnbrokers (Amendment) Bill, 1972 ... ... ... ... 472–474
Protection of Handloom Sector (R) ... ... ... ... 95–96
Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 ... 360, 361, 362

SUGAR—
Seizure ... ... ... ... ... ... ... ... 119–125

SUNDARA BHARATHI, Thiru SOWDI S.—
Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 ... 211–214, 221–222, 240–241
Madras University (Amendment) Bill, 1971 ... ... ... 60–67, 67–71
Panchayats (Amendment) Bill, 1972 ... ... ... ... 178
Protection of Handloom Sector (R) ... ... ... ... 100–103

SUPPU, Thiru K.—
Madras University (Amendment) Bill, 1971 ... ...... 44–46, 81

SURENDRAN, Thiru M.—
Arrack shop at Jalakandapuram, shifting ... ... ... 269–270

T

TAXES—
Cycle tax in Corporation of Madurai, abolition ... ... 411–412
Cycle tax in Town panchayats, abolition, proposal ... ... 412–414
Urban Land Tax, assessees ... ... ... ... ... 299–300

TAXIS.
First aid boxes ... ... ... ... ... ... ... 37

TEACHERS—
Pension, increase .. .. .. .. .. .. .. 409–410
Transfer, Panchayat Unions in Tirunelveli District .. .. 8–14

TEMPLE (S)—
Bhavani Amman Temple at Periapalayam-opening of Home for destitute Children from the income of .. .. .. .. 158–160
Meenakshi temple, Madurai, Silver Cup award .. .. .. 435–436



T—*cont.*

PAGES

THANGAMANI, Thiru K. T. K.— 83–85
Christian Succession (Repeal) Bill, 1971 .. .. .. 196–198
General Sales Tax (Amendment) Bill, 1972 .. .. .. 140–142
Handloom Weavers of Paramakudi, hunger strike .. .. .. 187,
Labour Welfare Fund Bill, 1972 .. .. .. .. .. 189–192
Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... ... 344–349
Obituary reference, Quaid-e-Millat Mohammed Ismail, Thiru, (R) ... ... ... ... ... ... ... ... 344–349
Reduction in dearness allowance due to fall in cost of living index, agitation by Trade Unions (C.A.) .. .. .. 307–309, 312

THIRUVENGADAM, Thiru THOPPUR— 28
Dam across Naganadhi .. .. .. .. .. .. 270–272
Prosperity Brigade, activities .. .. .. .. .. 155–157
Vanamahothsavam, celebration .. .. .. .. ..

THIYAGARAJAN, Thiru E. S.—
Obituary reference, Quaid-e-Millet Mohammed Ismail, Thiru (R). 391–392

THOOYAMANI, Thiru M. C.— 132–133
Sirumugai Drinking Water Scheme, execution .. .. ..

TOURISM— 36–37
Tourist Centres .. .. .. .. .. .. ..
Tourist resorts, conversion of certain places in Kanyakumari District .. .. .. .. .. .. .. 153

TRACTORS— 287–290
Workshops .. .. .. .. .. .. .. ..

TRAFFIC— 37–39
Automatic Signal Lights in Madras .. .. .. .. ..

TRANSPORT— 294–296
City Buses in Madurai, run by Government .. .. .. 432–435
Jeep buses, Procedure, .. .. .. .. .. .. .. 293
Tourist buses, run by Government .. .. .. .. .. 298–299
Winch, Palani Hills .. .. .. .. .. ..

TRUSTS— 304
Private trusts, number ... ... ... ... ... ...

V

PAGES

VADIVELU, THIRU S. K.—
Drinking Water Scheme, Thottiyam ... ... ... ... 270

VANAMAHOTHSAVAM—
Celebrations ... ... ... ... ... ... ... 155–157

VEERASAMI, THIRU N.—
Sugar seizure ... ... ... ... ... ... ... 119–126

VEZHAVENDAN, THIRU K.—
Bhavani Amman Temple at Periapalayam, opening of Home for destitute children from the income of ... ... ... 158–160
Committee on Estimates, presentation of Reports on "Employment and Training" and "Labour including Factories" ... ... ... ... ... ... ... 44
Presentation of report (last) on Animal Husbandry Department ... ... ... ... ... ... ... 160

W

WAHAB, THIRU K. A.—
Bridge in Wandiwash-Sethanakuppam Road ... ... 19–20
Concession in power tariff ... ... ... ... ... 294
Cycle tax in Town panchayats, abolition, proposal ... 412–414
Handicrafts Co-operative Marketing Societies ... ... ... 25
Handicrafts Co-operative Sales Society, Branch Emporium, Kancheepuram ... ... ... ... ... ... ... 428
Highways Development, Centre's grants ... ... ... 304–305
Machines for mat—weaving ... ... ... ... ... 97
Match factories run by Industrial Co-operative Societies ... 25–27
Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 ... ... ... ... ... ... ... 256–258
Revolving Hotel in Madras ... ... ... ... ... 31–33
School run by Wakf Board, Madurai, non-payment of salary to teachers ... ... ... ... ... ... ... 279–282
Suganadhi, construction of weir across ... ... ... 153
Wandiwash Town Panchayat, installation of water meters ... 130–132
Wool Weaving Industry for Walajapet ... ... ... ... 277

WATER SUPPLY—
Drinking Water Scheme, Thottiyam ... ... ... ... ... 270
Drinking water, Thovala taluk ... ... ... ... ... 6–8
Harijans of Kavutharasanallur ... ... ... ... ... 21–23



W—cont.

PAGES

WATER-SUPPLY—cont.
Harijans of Vayalur village ... ... ... ... ... 20–21
Mariamman Koil Samudram water, lift irrigation ... 282–283
Sirumugai Drinking Water Scheme, execution ... ... 132–133
Wandiwash Town Panchayat, installation of water meters ... 130–132
Water Supply Scheme, Kovilpatti, purchase of Hume steel specials ... ... ... ... ... ... ... ... 409

WEAVERS—
Machines for mat-weaving ... ... ... ... ... 31

D
V211,31 N72
31N72.22
61564